வெளியீடு : 17-8-2023 Issued: 17-8-2023

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு
(பதினாறாவது பேரவை)

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT
(SIXTEENTH ASSEMBLY)

செவ்வாய்க்கிழமை, அக்டோபர் 18, 2022—தொகுதி 49—எண் 2

Tuesday the 18th October 2022—Volume 49—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
Legislative Assembly Secretariat, Chennai-600 009.

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

18–10–2022

உள்ளடக்கம்

		பக்கங்கள்
1.	**வினாக்கள்—விடைகள்—**	
	(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்	9, 32-72
	(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 6 முதல் 10 வரை)	72
	(இ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் (பட்டியல்கள் 11 முதல் 16 வரை)	72
2.	**தகவல் கோரல்—**	
	எதிர்க்கட்சித் துணைத் தலைவராக திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களை நியமிப்பது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அளித்துள்ள கடிதங்கள்	10-32
	மாண்புமிகு திரு. துரைமுருகன்	10-12, 14-17, 19, 22-24, 31-32
3.	**அறிவிப்பு—**	
	மாற்றுத் தலைவர்கள் பட்டியல்	73
4.	**அறிக்கைகள் அளித்தல்—**	73-75
	(அ) மதிப்பீட்டுக் குழு	73
	(ஆ) பொதுக் கணக்குக் குழு	73-74
	(இ) பொது நிறுவனங்கள் குழு	74
	(ஈ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு	74
	(உ) அரசு உறுதிமொழிக் குழு	74
	(ஊ) மனுக்கள் குழு	75

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— 75-79

(அ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022 75-76

**மாண்புமிகு திரு. கே.என். நேரு* 75-76

(ஆ) தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022 76

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி 76

(இ) தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022 76-77

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி 77

(ஈ) தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2022 77-78

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி 77-78

(உ) தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022 78-79

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு 78-79

(ஊ) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022 79

**மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்* 79

6. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2022–2023, அளித்தல்— 80-87

**மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்* 80-87

பக்கங்கள்

7. அரசினர் தனித் தீர்மானம்—

ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களில் இந்தி மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்பன உள்ளிட்ட அலுவல் மொழி தொடர்பான பாராளுமன்ற குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக் கூடாது என ஒன்றிய அரசினை வலியுறுத்துதல்	88-122
*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்	88-95
திரு. தி. வேல்முருகன்	95-97
திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்	97-99
*முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா	99-102
டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்	102
திரு. ட்டி. இராமச்சந்திரன்	103-104
திரு. வி.பி. நாகைமாலி	104-105
திரு. ம. சிந்தனை செல்வன்	105-107
திரு. நயினார் நாகேந்திரன்	107-108
மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு	108-109
திரு. ஜி.கே. மணி	109-112
திரு. கு. செல்வபெருந்தகை	112-115
திரு. ஓ. பன்னீர்செல்வம்	116-119
மாண்புமிகு திரு. துரைமுருகன்	119-122

		பக்கங்கள்
8.	**ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களில் இந்தி மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்பன உள்ளிட்ட அலுவல் மொழி தொடர்பான பாராளுமன்ற குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக் கூடாது என ஒன்றிய அரசினை வலியுறுத்தும் அரசினர் தனித் தீர்மானம்—பேரவைத் தலைவர் கருத்துரை**	123-125
9.	**பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**	125-135
10.	**இணைப்புகள்**	137-968

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஐப்பசி 1, திருவள்ளுவர் ஆண்டு—2053

2022 அக்டோபர் 18, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்."

யான், எனது என்கின்ற ஆணவத்தை அறவே விலக்கி விட்டவன், வான்புகழையும் மிஞ்சுகின்ற உலகப் புகழுக்கு உரியவனாவான்.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். (குறுக்கீடுகள்)*

(மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. பி. அய்யப்பன், திரு. பால் மனோஜ் பாண்டியன் மற்றும் திரு. ஆர். வைத்திலிங்கம் தவிர ஏனைய அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், உட்காருங்கள். வினாக்கள்–விடைகள் நேரம் முடிந்தவுடன் உங்களுக்குப் பேசுவதற்கு முழு வாய்ப்பு தருகிறேன். கேள்வி-பதில் முடித்துவிட்டு தருகிறேன். (குறுக்கீடுகள்) வினாக்கள்–விடைகள். (குறுக்கீடுகள்)

வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) இருங்கள், வாய்ப்பு தருகிறேன். (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** *ஓர் உரையில் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

எதிர்க்கட்சித் துணைத் தலைவராக திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களை நியமிப்பது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அளித்துள்ள கடிதங்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்பு தருகிறேன். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அனைவரையும் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர், உங்கள் கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குப் பேசுவதற்கு உரிமை உண்டு. இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், கேள்வி நேரம் என்பது, மிக முக்கியமான ஒன்று என்று அவர்களுக்கே தெரியும். ஆகையினால், (குறுக்கீடுகள்) கேள்வி நேரத்தில் அவர்கள் கோரிக்கை எழுப்புவதற்கு (குறுக்கீடுகள்) நீங்கள் கேள்வி நேரத்தை அனுமதித்த பிறகு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் என்ன முடிவு எடுக்கிறீர்களோ, அதனை. . . தயவுசெய்து கேள்வி நேரத்திற்கு அனுமதி அளித்த பிறகு எடுக்கலாம். (கூச்சல்-குழப்பம்)*

(மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. பி. அய்யப்பன், திரு. பால் மனோஜ் பாண்டியன் மற்றும் திரு. ஆர். வைத்திலிங்கம் தவிர, ஏனைய அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் தொடர்ந்து எழுந்து நின்று கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் அனுமதித்துவிட்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் நான் சொல்வதைக் கேளுங்கள் என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உட்காருங்கள் என்று சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் எழுந்து நிற்கிறேன், (குறுக்கீடுகள்) நீங்கள் அனைவரும் உட்காருங்கள், உட்காருங்கள். எந்தப் பிரச்சினை குறித்து பேசுவதற்கும் வாய்ப்பு வழங்குவதற்கு சட்டமன்றப் பேரவைத் தலைவராகிய நான் தயாராக இருக்கிறேன். உங்களது எந்த உரிமை குறித்தும் இந்த அவையில் பேசுவதற்கு நான் அனுமதிக்கிறேன். கேள்வி நேரம்*

2022 அக்டோபர் 18] [பேரவைத் தலைவர்]

என்பதில் no compromise. *இதுவரை இதுபோன்று நடந்ததும் இல்லை. இப்போது நடக்கப்போவதும் இல்லை, தயவுசெய்து நீங்கள் அமர்ந்தால், கேள்வி நேரம் முடிந்தவுடன், அலுவல் நேரத்தில் நான் உங்களுக்குக் கண்டிப்பாக வாய்ப்பு தருகிறேன் என்று சொல்கிறேன். அப்போது உங்கள் பிரச்சினை குறித்துக் கேளுங்கள், நான் பதில் சொல்கிறேன். வினாக்கள்–விடைகள், (குறுக்கீடுகள்) இதை நான் அனுமதிக்கப்போவதில்லை, உங்களுக்குத் தெரியும், நீங்கள் முதலமைச்சராக இருந்தவர்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்குத் தெரியாதது இல்லை, (குறுக்கீடுகள்) நான் அதற்குப் பதில் சொல்கிறேன் என்று சொல்லிவிட்டேனே! (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவராகிய நான் பதில் சொல்கிறேன் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) நான் மறுக்கவில்லையே? இன்று காலையிலேயே (குறுக்கீடுகள்) வினாக்கள்–விடைகள் நேரத்தில்தான் நான் இந்தப் பிரச்சினை குறித்துப் பேச அனுமதிக்கவில்லை. (குறுக்கீடு) நீங்கள் பேசுகின்ற எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. தயவுசெய்து அமருங்கள், கேள்வி நேரம் முடிந்தவுடன் அலுவல் நேரத்தில் நான் பதில் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் அனைவரும் உட்காருங்கள், (கூச்சல்) நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள், (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுகின்ற எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) உங்களுக்குப் பேசுவதற்கு நேரம் தருகிறேன், பதில் சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். நீங்கள் நினைக்கின்ற தீர்ப்பும் வரலாம் அல்லது வேறு தீர்ப்பும் வரலாம். விதி என்ன சொல்கிறதோ, அதைத்தான் நான் குறிப்பிடுவேன். நீங்கள் உட்கார்ந்துகொண்டு கேளுங்கள் என்று சொல்கிறேன், நீங்கள் அவைக்கு வந்தவுடன் பிரச்சினையை எழுப்பினால், எனக்கு என்ன தோன்றும்? அவையை நடத்தவிடாமல் ஏதோ கலகம் செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்களா? (குறுக்கீடுகள்) அப்படியானால், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அப்படியானால் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்) வினாக்கள்–விடைகள். (குறுக்கீடுகள்) நீங்கள் கலகம் செய்யக்கூடிய நோக்கத்தோடு வந்திருந்தால், (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவது*

[பேரவைத் தலைவர்] [*2022 அக்டோபர் 18*

எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) நான் பதில் சொல்கிறேன் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) நான் உங்களுக்குப் பேசுவதற்கு நேரம் தருகிறேன், பதில் சொல்கிறேன், முடிவு தருகிறேன் என்று சொன்ன பிறகும் நீங்கள் இவ்வாறு செய்தால், கலகம் செய்யத்தானே வந்திருக்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) நான் அவ்வாறுதான் நினைப்பேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரு நிமிடம். ஒன்று கேட்டுக்கொள்ளுங்கள். ஏற்கெனவே, 1988 ஆம் ஆண்டில் அம்மையார் திருமதி ஜானகி அம்மாள் அவர்கள் பதவி பிரமாணத்தின்போது இதுபோல்தான் பிரச்சினை செய்தீர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. அதுபோல செய்யக்கூடாது. (குறுக்கீடுகள்) வினாக்கள்–விடைகள் நேரத்தில் விவகாரம் செய்யக்கூடாது. (குறுக்கீடுகள்) விவகாரம் செய்யக்கூடாது, செய்யக்கூடாது. நீங்கள் வினாக்கள்–விடைகள் நேரம் முடிந்த பிறகுதான் பேச வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நான் சொல்வதை நீங்கள் கவனமாகக் கேளுங்கள். நான் உங்களுக்கு நேரம் தருகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவதற்கு நேரம் தருகிறேன். கேள்வி நேரத்தில் இந்த அவையின் மாண்பைக் கெடுக்காதீர்கள், அவையின் மாண்பைக் கெடுக்காதீர்கள். (குறுக்கீடுகள்) கலகம் செய்ய நினைக்காதீர்கள். நான் அனுமதிக்க மாட்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் தயவுசெய்து இருக்கையில் அமருங்கள். கேள்வி நேரத்தை அனுமதியுங்கள். கேள்வி நேரம், மக்கள் பிரச்சினை. . . (குறுக்கீடுகள்) மக்கள் பிரச்சினையைப் பேசுவதற்கு நீங்கள் தடை செய்கிறீர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நேரம் தருகிறேன் என்று சொல்லியாகிவிட்டதே.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் பேச்சில் நான் குறுக்கிடவில்லை. ஆனால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். தாங்கள், அவர்கள் பேசுவதற்கு, அவர்களுடைய*

2022 அக்டோபர் 18] [திரு. துரைமுருகன்]

கோரிக்கையைத் தெரிவிப்பதற்கு 'நான் நேரம் தருகிறேன்' என்று வாக்குறுதி அளித்திருக்கிறீர்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய வாக்குறுதியை நம்பி, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அமர்ந்திருந்து, அது என்னவென்று கேட்டுவிட்டுப் போகலாம். அதுவரை கேள்வி நேரத்தை. . . (குறுக்கீடு) எல்லாம் முடியும். 1–30 மணிக்கு. (குறுக்கீடு) Right, right. *எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. (குறுக்கீடு) நீங்கள் இருந்தீர்கள் என்றால், இரட்டிப்பு மகிழ்ச்சி. ஆகையினால், அருள்கூர்ந்து கேள்வி நேரத்தை அனுமதிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர், (குறுக்கீடு) மைக் எல்லாம் தர முடியாது. பேச முடியாது. (குறுக்கீடுகள்)*

(திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி. அய்யப்பன் மற்றும் திரு. ஆர். வைத்திலிங்கம் ஆகியோரைத் தவிர அவைக்கு வந்திருந்த மற்ற அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து நின்று 'ஐயா', 'ஐயா' என்று கோஷமிட்டனர்.)

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். இந்த* Rule*–ஐ வாசித்த பிறகு நீங்கள் முடிவு செய்யுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், சொல்கிறேன்.*

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் பேசுவதைக் கேட்டுக்கொள்ளுங்கள். உட்காருங்கள். ஒரு நிமிடம்.*

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள், (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)*

பேரவை விதி 32–ல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், 'பேரவை வேறுவிதமாக, ஒருமனதாக, முடிவு செய்தாலன்றி,

ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு, விடை அளிப்பதற்கென்று, ஒதுக்கப்பெற வேண்டும். மேலும், பேரவைத் தலைவர் தம். . . (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள் அல்லவா! நீங்கள்தானே சட்டத்தை வகுத்துத் தந்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்களும்தானே என்னைக் கூட்டிக்கொண்டு வந்து இந்த இருக்கையில் உட்கார வைத்தீர்கள், நீங்களே விதியை மீறலாமா? விதியை மீறாதீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. எதிர்க்கட்சித் தலைவரை, நான் எதிர்க்கட்சித் தலைவராக மதித்து, அன்போடு (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்). இந்த ஒன்றைக் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) இந்த ஒன்றைக் கேட்டுக்கொள்ளுங்கள். எதிர்க்கட்சித் தலைவரை நான் பெரிதும் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

நீங்கள் தயவுசெய்து இந்தக் கேள்வி நேரத்தை நடத்துவதற்கு அனுமதியுங்கள். மக்கள் பிரச்சினை இது. மக்கள் பிரச்சினைக்கு முதலிடம் இங்கு உண்டு. ஒரு மணி நேரம் இதுதான் நடைபெறும். இதில் இடையூறு செய்யாதீர்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) நீங்கள் இடையூறு செய்யாதீர்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடுகள்) இது முடிந்ததற்குப் பிறகு நேரம் தருகிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (கூச்சல்–குழப்பம்)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சபையின் மாண்பு அறிந்தவர்கள்தான் அவர்கள். தாங்களும் நின்றுகொண்டு பேசிக்கொண்டிருக்கிறீர்கள்; அவர்கள் அத்தனை பேரும் நின்றுகொண்டு பேசிக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எழுந்து நிற்கும்பொழுது அவர்கள் உட்கார வேண்டும். . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். தயவுசெய்து நான் எழுந்து நிற்கும்போது நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *அவர்களுக்குப் பேசுவதற்கு உரிமை உண்டு. ஆனால், தாங்கள் எழுந்து நிற்கிறபொழுது, அவர்கள் உட்கார்ந்து, அதன் பிறகு அவர்களுடைய கோரிக்கையை எழுப்பலாமே தவிர, இரண்டு பேரும் பேசிக்கொண்டிருந்தால், இது அவையினுடைய நடவடிக்கைக்கு உகந்தது அல்ல. (குறுக்கீடுகள்)*

2022 அக்டோபர் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர், உட்காருங்கள் (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) யார், என்ன பேசினாலும், அது அவைக் குறிப்பில் இடம்பெறாது. (குறுக்கீடுகள்) வெளிநடப்பு செய்வதென்றால், செய்யுங்கள். (கூச்சல்)*

நீங்கள் சட்டத்திற்கு. . . (குறுக்கீடுகள்) இந்த ஒன்றைச் சொல்கிறேன். (கூச்சல்–குழப்பம்) நான் நினைப்பது சரிதான். (குறுக்கீடுகள்) நீங்கள் ஏதோ ஒரு குறிக்கோளுடன் வந்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) கலகம் செய்ய வேண்டுமென்று நினைத்து வந்திருக்கிறீர்கள். அவை நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அவை நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்கிறீர்கள். மக்கள் பிரச்சினையைப் பேச மறுக்கிறீர்கள்.

முற்பகல் 10–10

மக்கள் பிரச்சினையைப் பேச மறுக்கிறீர்கள், அனுமதிக்க மாட்டேன் என்கிறீர்கள். கலகம் செய்வதுபோல் எனக்குத் தெரிகிறது. இன்னும் நான் சொல்லப்போனால், 1989 ஆம் ஆண்டில் தலைவர் கலைஞர் அவர்கள் budget *வாசிக்கும்போது அந்த உரையைப் பிடுங்கி கிழித்துப் போட்டு தகராறு செய்ததைப்போல் செய்கிறீர்கள்.* It is not good. *(குறுக்கீடுகள்) இது நல்ல பழக்கமில்லை. நான் அனுமதிக்கவே மாட்டேன். நான் அனுமதிக்கவே மாட்டேன், சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் ஏதோ ஒரு நோக்கத்தோடு வந்திருக்கிறீர்கள். தகராறு செய்ய வேண்டுமென்று வந்திருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் இருக்கைக்குப் போங்கள் அல்லது வெளிநடப்பு செய்யுங்கள். அது உங்கள் விருப்பம். (குறுக்கீடுகள்) இந்த அவையில் வந்து, . . (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. இந்த அவையில் வந்து கலகம் செய்ய வேண்டுமென்று, வேண்டுமென்றே திட்டம் போட்டு, . . . (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

(திரு. கடம்பூர் ராஜூ, திரு. கே.பி. முனுசாமி, திரு. சு. ரவி, திரு. பி. தங்கமணி, திரு. சேவூர் S. *ராமச்சந்திரன், திரு.* A.K. *செல்வராஜ், திரு. ந. தளவாய் சுந்தரம், திரு. எஸ். பி. வேலுமணி உள்ளிட்ட சில அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் இருக்கைக்கு முன்பு வந்து உட்கார்ந்தனர்.)*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள்*

இந்த well பகுதிக்கு வந்துவிட்டார்கள். (குறுக்கீடுகள்) இனிமேலும் தாங்கள் பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை. எனவே, தாங்கள் நடவடிக்கையை எடுக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையை விட்டு வெளியே வந்துவிட்டீர்கள். நான் நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடுகள்) நீங்கள் இருக்கையைவிட்டு என் முன் வந்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நீங்கள் அவையை விட்டு வெளியே போக வேண்டுமென்றால், வெளியே போங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை.

(திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி. அய்யப்பன் மற்றும் திரு. ஆர். வைத்திலிங்கம் ஆகியோரைத் தவிர, அவைக்கு வந்திருந்த அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள், 'காப்பாற்று, காப்பாற்று பேரவையின் மாண்பைக் காப்பாற்று' என்று கோஷமிட்டனர்.)

மாண்புமிகு உறுப்பினர்கள், உங்கள் இருக்கையில் போய் அமருங்கள். நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடுகள்) நீங்கள் கலகம் செய்ய வேண்டுமென்ற திட்டத்தோடு வந்திருக்கிறீர்கள். நான் நடவடிக்கை எடுப்பேன்.

(திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி. அய்யப்பன் மற்றும் திரு. ஆர். வைத்திலிங்கம் ஆகியோரைத் தவிர, அவைக்கு வந்திருந்த அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் 'காப்பாற்று, காப்பாற்று பேரவையின் மாண்பைக் காப்பாற்று' என்று கோஷமிட்டனர்.)

நீங்கள் இருக்கைக்குப் போகவில்லையென்றால், நான் நடவடிக்கை எடுப்பேன்.

(திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி. அய்யப்பன் மற்றும் திரு. ஆர். வைத்திலிங்கம் ஆகியோரைத் தவிர, அவைக்கு வந்திருந்த அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் 'செயல்படுங்கள், செயல்படுங்கள், நடுநிலையோடு செயல்படுங்கள்' என்று கோஷமிட்டனர்.)

நீங்கள் இருக்கைக்குப் போகவில்லையென்றால், நான் நடவடிக்கை எடுப்பேன். இருக்கைக்குப் போகவில்லையென்றால், நான் மிகக் கடுமையான நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

2022 அக்டோபர் 18]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் உத்தரவையும் மீறி,* well *பகுதிக்கு வந்து உட்கார்ந்திருக்கிறார்கள். சமீபத்தில், பாராளுமன்றத்தில் இப்படி* well *பகுதிக்கு வந்தவர்கள்மீது சபாநாயகர், லோக் சபாவில், ராஜ்ய சபாவில் அவர்களுக்கு என்ன தண்டனை விதித்தார்கள் என்பது பற்றி உங்களுக்குத் தெரியும். எனவே, கடுமையான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

(திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி. அய்யப்பன் மற்றும் திரு. ஆர். வைத்திலிங்கம் ஆகியோரைத் தவிர, அவைக்கு வந்திருந்த அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் 'செயல்படுங்கள், செயல்படுங்கள், நடுநிலையோடு செயல்படுங்கள்' என்று கோஷமிட்டனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதாவது, நீங்கள் முன்னேற்பாட்டுடன் வந்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) கலகம் செய்வதற்கென்றே வந்திருக்கிறீர்கள் என்பது உண்மையாகப் போய்விட்டது. (குறுக்கீடுகள்) நீங்கள்* print *செய்து வைத்துள்ளீர்கள். நீங்கள் கலகம் செய்வதற்கென்றே வந்துள்ளீர்கள். நீங்கள், உங்கள் இருக்கையில் போய் அமருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இருக்கையில் போய் உட்காருங்கள். உங்கள் இருக்கையில் போய் அமருங்கள். இந்த அரசு, (குறுக்கீடுகள்) இல்லை. இல்லை, . . .*

(திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி. அய்யப்பன் மற்றும் திரு. ஆர். வைத்திலிங்கம் ஆகியோரைத் தவிர, அவைக்கு வந்திருந்த அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் 'நீதி வேண்டும், நீதி வேண்டும், சட்டமன்றத்தில் நீதி வேண்டும்' என்று கோஷமிட்டனர்.)

நீங்கள் இன்றைக்கு 'இந்தி எதிர்ப்பு' தீர்மானம் வருகின்றது, அப்போது நீங்கள் இருக்கக் கூடாது என்பதற்காக, நீங்கள் ஒன்றிய அரசிற்கு ஆதரவாக இருக்க வேண்டுமென்பதற்காக, நீங்கள் வெளியில் போக திட்டமிட்டு இப்படிச் செய்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இன்றைக்கு இந்தி எதிர்ப்பு குறித்து தீர்மானம் வருகிறது என்று நேற்றே சொல்லியிருக்கிறோம். (குறுக்கீடுகள்) இதுமட்டுமல்லாமல் நீதிபதி அருணா ஜெகதீசன் அவர்களின் அறிக்கையும் மற்றும் ஆறுமுகசாமி Commission Reports*-ம் இன்றைக்கு பேரவையில் வைக்கப்பட இருக்கின்றன. நீங்கள் திட்டமிட்டு வெளிநடப்பு செய்ய வேண்டுமென்று முடிவு செய்து விட்டீர்கள். (குறுக்கீடுகள்)*

நீங்களும் அவையில் இருந்து, இந்தி எதிர்ப்பு குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். (குறுக்கீடுகள்) இருக்கக் கூடாது என்று வந்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

(திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி. அய்யப்பன் மற்றும் திரு. ஆர். வைத்திலிங்கம் ஆகியோரைத் தவிர, அவைக்கு வந்திருந்த அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் 'நீதி வேண்டும், நீதி வேண்டும், சட்டமன்றத்தில் நீதி வேண்டும்' என்று கோஷமிட்டனர்.)

நான் கடைசியாக சொல்கிறேன். நீங்கள் இருக்கையில் அமர்கிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) உட்காருகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) நீங்கள் கலகம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு வந்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அவைக் காவலர்கள் அவர்களை வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) அவைக் காவலர்கள் அனைவரையும் வெளியேற்றுங்கள்.

(திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி. அய்யப்பன் மற்றும் திரு. ஆர். வைத்திலிங்கம் ஆகியோரைத் தவிர, அவைக்கு வந்திருந்த அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் 'நீதி வேண்டும், நீதி வேண்டும், சட்டமன்றத்தில் நீதி வேண்டும்' என்று தொடர்ந்து கோஷமிட்டனர்.)

நீங்கள் அரசியல் செய்ய வந்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கலகம் செய்ய வந்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கோஷம் போடாதீர்கள். அவைக் காவலர்கள் அவர்களை வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் வெளியேறுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் ஒரு நோக்கத்தோடு வந்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அவைக் காவலர்கள் அவர்களை வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) போதும், புறப்படுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் வெளியேறுங்கள். (குறுக்கீடுகள்) வெளியேறுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் திட்டமிட்டு கலகம் செய்வதற்கென்றே இன்று இங்கு வந்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (கூச்சல்–குழப்பம்)

முற்பகல் 10–15

(மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. பி. அய்யப்பன், திரு. பால் மனோஜ் பாண்டியன் மற்றும் திரு. ஆர். வைத்திலிங்கம் ஆகியோரைத் தவிர, அவைக்கு வந்திருந்த

2022 அக்டோபர் 18] [பேரவைத் தலைவர்]

ஏனைய அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து நின்று, 'நீதி வேண்டும், நீதி வேண்டும், சட்டமன்றத்தில் நீதி வேண்டும்' என்று தொடர்ந்து கோஷமிட்டனர்.)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: இன்றைக்கு ஏன் இவ்வளவு அமர்க்களம் செய்கிறார்கள் என்று கேட்டால், திருமதி அருணா ஜெகதீசன் அவர்களது அறிக்கையையும், அம்மையார் ஜெயலலிதாவின் மரணம் குறித்த அறிக்கையையும் வெளியிடவிருக்கிறார்கள். இன்றையதினம் இதன்மீது இந்த அவையில் விவாதம் வந்தால், இவர்கள் செய்த அட்டூழியங்கள், அவர்களுடைய தலைவருக்கு அவர்கள் இழைத்த கொடுமைகள் எல்லாம் வெளியே வரும். அதற்குப் பதில் சொல்ல முடியாது என்ற காரணத்திற்காகவே இன்றைக்கு இந்த நாடகத்தை ஆடி வெளியே செல்கிறார்கள். வேறு ஒன்றும் இல்லை. *(குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)*

(மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. பி. அய்யப்பன், திரு. பால் மனோஜ் பாண்டியன் மற்றும் திரு. ஆர். வைத்திலிங்கம் ஆகியோரைத் தவிர, அவைக்கு வந்திருந்த ஏனைய அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து நின்று, 'நீதி வேண்டும், நீதி வேண்டும், சட்டமன்றத்தில் நீதி வேண்டும்' என்று தொடர்ந்து கோஷமிட்டனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துவிட்டீர்கள். *(குறுக்கீடுகள்)* அவைக் காவலர்கள் அவர்களை வெளியேற்றுங்கள். *(குறுக்கீடுகள்)* அனைவரையும் வெளியேற்றுங்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)* அதாவது, சட்டமன்றத்தில் வரவிருக்கின்ற தீர்மானத்தைக் கருத்தில்கொண்டு, அதற்கு எதிராக இந்த அவையில் இருக்கக் கூடாது என்பதற்காகவே நீங்கள் அவையைவிட்டு வெளியில் செல்கிறீர்கள். *(குறுக்கீடுகள்)* இன்று இந்தி திணிப்பிற்கு எதிரான தீர்மானம் அவையில் எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றது. *(குறுக்கீடுகள்)* நீங்கள் கலகம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடனேயே இங்கே இதுபோன்று நடந்துகொண்டிருக்கிறீர்கள். *(குறுக்கீடுகள்)* உங்களால் சட்டமன்றத்தில் செயல்பட முடியாத நிலையில் நீங்கள் அவையைவிட்டு வெளியே செல்கிறீர்கள். *(குறுக்கீடுகள்)*

சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிக்குரிய மாண்பைக் குலைக்கின்ற வகையில் நீங்கள் நடந்துகொள்கிறீர்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள்

எதிர்க்கட்சியினுடைய மாண்பைக் குலைக்கின்ற வகையில் நடந்துகொள்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் வினாக்கள்–விடைகள் நேரத்தில் மக்கள் பிரச்சினைகளைப் பற்றி இந்தச் சட்டமன்றத்தில் பேசக் கூடாது என்று சொல்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) It is not good. *(குறுக்கீடுகள்) ஜனநாயகத்திற்கு விரோதமான செயல்களில் நீங்கள் ஈடுபடுகிறீர்கள். (குறுக்கீடுகள்) கலகம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு இதுபோன்று நடந்துகொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் செய்வது அனைத்தும் கலகம். (குறுக்கீடுகள்) நீங்கள் கலகம் செய்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் யார், என்ன பேசினாலும் அது அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) நீங்கள் போராட்டம் செய்வதாக இருந்தாலும் அமைதியாகச் செய்யுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் வெளிநடப்புச் செய்வதாக இருந்தால், செய்துகொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) தேவையில்லாமல் இதுபோன்று செய்யக் கூடாது. (குறுக்கீடுகள்) நீங்கள் ஏற்கெனவே* plan *செய்துவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அவையை நடத்தவிடாமல் கலகம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு இப்படிச் செய்கிறீர்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து வெளிநடப்புச் செய்ய வேண்டுமென்றால், செய்யுங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சி உறுப்பினர்கள் திட்டமிட்டுவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) சட்டமன்றத்தில் பேசுவதற்கு உங்களுக்கு ஏதோ ஒரு கஷ்டம் இருக்கிறது. (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவை நாகரிகத்தோடு நடந்துகொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) கலகம் செய்யாதீர்கள். (குறுக்கீடுகள்) பிரச்சினை செய்யாதீர்கள். (குறுக்கீடுகள்) யார், என்ன பேசினாலும் அது அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) சட்டமன்றத்தில் கலகம் செய்வதற்காக இன்று வந்திருக்கிறீர்கள் என்பது எனக்கு முன்னமேயே தெரியும். (குறுக்கீடுகள்) நீங்கள் கலகம் செய்வதற்காக வந்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) திட்டமிட்டு வந்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) 1988–1989–ல் நடந்ததுபோன்று இன்றும் நடத்தலாம் என்று எண்ணி வந்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அதற்கு நான் அனுமதிக்க மாட்டேன். (குறுக்கீடுகள்) அவர்களை வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) அவர்களை வெளியே அனுப்புங்கள். (குறுக்கீடுகள்) இந்தி திணிப்பிற்கு எதிராக வரவுள்ள தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்துகொள்ள வேண்டும். (குறுக்கீடுகள்) திட்டமிட்டு வந்துள்ளீர்கள்.*

2022 அக்டோபர் 18] [பேரவைத் தலைவர்]

முற்பகல் 10–20

அவர்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. திட்டமிட்டு, வேண்டுமென்றே, திருமதி ஜானகி அம்மாள் பதவிப் பிரமாணம் எடுத்தபோது எப்படி கலகம் செய்தீர்களோ, அதேபோல, இப்போது செய்கிறீர்கள். அதேபோல, 1989–ல் கலைஞர் அவர்கள் பட்ஜெட் வாசிக்கும்போது அந்த உரையைப் பிடுங்கி, எப்படி நீங்கள் தகராறு செய்தீர்களோ, கலகம் செய்தீர்களோ, அதே எண்ணத்தோடு இன்றைக்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள். 'கேள்வி பதில் முடிந்ததற்குப் பிறகு, நான் நேரம் தருகிறேன்' என்று சொல்லியிருக்கிறேன். அந்த நேரத்தை நீங்கள் பயன்படுத்தவில்லையே! நீங்கள் தயவுசெய்து . . . (குறுக்கீடுகள்) அது யார் என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும். உங்களை நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டேயிருக்கிறார்கள். நீங்கள் செய்வதையெல்லாம் நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டேயிருக்கிறார்கள். இது live ஆக போய்க்கொண்டிருக்கிறது. நீங்கள் செய்கிற கூத்துகளையெல்லாம் பார்த்துக் கொண்டேதான் இருக்கிறார்கள். நீங்கள் மக்கள் பிரச்சினைகளைப் பேச மறுக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இந்தித் திணிப்பிற்கு எதிராக தீர்மானம் வருவதைத் தெரிந்துகொண்டு, நீங்கள் யாருக்கோ கட்டுப்பட்டு, அந்தத் தீர்மானத்தை ஆதரிக்கக் கூடாது என்ற நோக்கத்தோடு செயல்படுகிறீர்கள். ஆறுமுகசாமி ஆணையத்தின் அறிக்கை இன்று பேரவையில் வைக்கப்பட்டுள்ளது. அதைக் கண்டு நீங்கள் அஞ்சிவிட்டீர்கள். தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்த திருமதி அருணா ஜெகதீசன் அவர்களின் ஆணைய அறிக்கை இன்றைக்கு அவையில் வைக்கப்பட்டுள்ளது. அதைக் கண்டு நீங்கள் அஞ்சுகிறீர்கள். ஆகவே, அந்த அடிப்படையில் நீங்கள் சபையில் மக்கள் பிரச்சினைகளைப் பேச மறுக்கிறீர்கள். இது மக்கள் மன்றம், மக்களுக்கான மன்றம். மக்கள் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகின்ற மன்றத்தில் வேண்டுமென்றே திட்டமிட்டு, நீங்கள் கலகம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு வந்ததை நான் தெரிந்துகொண்டேன். ஆகவே, சபைக் காவலர்கள் அவர்களை வெளியேற்றுங்கள்.

[அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் (மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. பி. அய்யப்பன், திரு. பால் மனோஜ் பாண்டியன் மற்றும் திரு. ஆர். வைத்திலிங்கம் தவிர) அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்.]

[பேரவைத் தலைவர்] [*2022 அக்டோபர் 18*

வெளியேற்றுவது மட்டுமல்ல; lobby*–யில் இருந்து ஏதோ சத்தம் கேட்கின்றது. முழுமையாக இந்த வளாகத்தைவிட்டும் வெளியே அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன். அங்கே* lobby*–யில் யாரும் கோஷம் போட வேண்டாம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விரும்பத்தகாத நிகழ்வை இன்றைக்கு எதிர்க்கட்சிக்காரர்கள், அ.தி.மு.க.–வினர் இந்தச் சபையிலே அரங்கேற்றியிருக்கிறார்கள். அவர்களின் கோரிக்கை குறித்து தங்களுடைய அறையிலே வந்து பேசியிருக்கிறார்கள். தாங்களும் அவர்களுக்குத் தகுந்த பதிலைச் சொல்லி, அதைப் பற்றி கவனிப்பதாகத் தெரிவித்திருக்கிறீர்கள். அதற்குப் பிறகு, சபையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுந்து பேசியவுடன், தாங்கள் பேசுவதற்கு அனுமதியில்லை என்று சொல்லாமல், கேள்வி நேரம் முடிந்த பிறகு, உங்களுக்குப் பேசுவதற்கு நான் நேரம் தருகிறேன் என்று பலமுறை வாக்குறுதி அளித்தீர்கள். ஆனால், அந்த வாக்குறுதிகளைப் புறக்கணித்துவிட்டு, அவர்கள் கோஷமிடுவதற்கு முற்பட்டார்கள். ஆகவே, தாங்கள் இந்த அவையிலே சொன்னதைப்போல, திட்டமிட்டு சபைக்கு வந்து, இப்படிப்பட்ட ஒரு குந்தகத்தை உருவாக்கிவிட்டுப் போக வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் இங்கு வந்ததாகத் தெரிகிறது.*

அதுமட்டுமல்ல, இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தி திணிப்பை எதிர்த்து ஒரு தீர்மானத்தை இங்கே படிக்கவிருக்கிறார்கள். இந்தி திணிப்பை எதிர்க்கும் தீர்மானம் என்பது மிகவும் முக்கியமான ஒன்று. இந்தியை எதிர்ப்பது என்பது நம்முடைய ஊனோடும், உயிரோடும் கலந்துவிட்ட ஒன்று. அந்தப் பிரச்சினையை, உணர்ச்சி உள்ளவன், தமிழனாக இருப்பவன், தமிழனுடைய உடலிலே ஓடுவது தன்மான இரத்தமென்றால், அவர்களெல்லாம் இந்த அவையிலே உட்கார்ந்து அதற்கு ஆதரவு அளித்திருக்க வேண்டும். அதையும் புறக்கணித்துவிட்டு, இந்தி வந்தால் என்ன, வராவிட்டால் என்ன என்ற மனோபாவத்தோடு, இன்றைக்கு இப்படி நடந்து கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இன்றைக்கு இரண்டு விசாரணை Commissions*–னுடைய* Reports *பேரவைமுன் வைக்கப்பட்டிருக்கின்றன.*

2022 அக்டோபர் 18] [திரு. துரைமுருகன்]

முற்பகல் 10–25

ஒன்று, நம்முடைய நீதியரசர் ஆறுமுகசாமி அவர்கள் நடத்திய விசாரணை அறிக்கை வந்திருக்கிறது. அது என்னவென்றால், தமிழ்நாட்டின் மறைந்த மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் 22–9–2016 அன்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதற்கான சூழ்நிலைகள் மற்றும் சந்தர்ப்பங்கள் குறித்தும், அதனைத் தொடர்ந்து 5–12–2016 அன்று அவரின் எதிர்பாராத மரணம் வரையிலும், அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகள் குறித்தும் விசாரணை செய்யப்பட்டிருக்கிறது. இதன்மீது விவாதம் நடத்தலாம். அவ்வாறு விவாதம் நடத்தியிருந்தால், அவர்களுடைய தலைவிக்கு அவர்கள் காட்டிய பரிவு, அவர் உயிரைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்தார்கள் அல்லது எப்படி, ஏனோதானோ என்று இருந்தார்கள் என்ற விவரங்களெல்லாம் நாட்டு மக்களுக்கு, வெளிச்சத்திற்கு வரும். எனவே, அப்படி வந்துவிடக் கூடாது என்ற பயம்.

இரண்டாவது, சட்டம்—ஒழுங்கை நிலைநாட்டிட, உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டியது ஓர் ஆட்சியினுடைய கடமை. ஆனால், அந்த உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு அளிக்கப்படாமல் கொக்கு சுடுவதைப்போல், குருவி சுடுவதைப்போல், அன்றைக்கு தூத்துக்குடி மண்ணில் பலரைச் சுட்டனர். அதைப் பற்றி விசாரணை மேற்கொள்ள விசாரணை கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டது. நீதியரசர் திருமதி அருணா ஜெகதீசன் அவர்கள் விசாரணை நடத்தியிருக்கிறார்கள். இதன்மீதும் இன்றைக்கு விவாதம் நடத்துவதற்கு ஆளுங்கட்சி தயாராக இருக்கிறது. இதைப் பார்த்தால், அவர்கள் எப்படி, எப்படி நடந்து கொண்டார்கள், எப்படி அத்துமீறியிருக்கிறார்கள். அதாவது, சுடுவதற்குக்கூட சில நியாய திட்டங்கள் உண்டு. எதிர்க்கட்சித் தலைவர் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில், அவற்றையெல்லாம் மீறி, காட்டுத்தனமாக மனித வேட்டை நடத்தியிருக்கிறார்கள். இவற்றிற்கெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பதில் சொல்லியாக வேண்டும். அதற்கெல்லாம் பயந்துதான், இந்த மூன்று காரணங்களுக்குப் பயந்துதான், எதைச் சொல்கிறார்கள் என்றுகூடத் தெரியாமல், அவர்கள் இன்றைக்கு வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். வெளிநடப்புச் செய்வதிலேகூட முறைகள் உண்டு. இல்லையென்று

[திரு. துரைமுருகன்] [2022 அக்டோபர் 18

சொல்லவில்லை. ஆனால், மீண்டும் இங்கே வரிசையாக well of the House-லே உட்கார்ந்துகொண்டு, வெளியே போவதற்குக் காவலர்களோடு முரண்டுபிடித்தது, அநாகரிகமான செயலாகும். எனவே, இவற்றையெல்லாம் தாங்கள் மனதிலே கொண்டு, என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, தாங்கள் அதை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அவையில் விரும்பத்தகாத செயல் ஒன்று நடந்ததை, நீங்கள் எல்லோரும் பார்த்துக் கொண்டுதான் இருந்தீர்கள். சட்டமன்றத்தில் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் நேரம். மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்வார்கள். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் துணைக் கேள்விகள் கேட்பார்கள். ஒரு மணி நேரம் என்பதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், கூட அரை மணி நேரம் நீட்டித்தால், எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் பயன்பெறுகின்றார்கள் என்ற அடிப்படையில், அந்த வாய்ப்பை வழங்குவதைக்கூட, அவர்கள் ஒருபோதும் குறையாக என்னிடம் சொல்லியது இல்லை.

இன்று, சட்டமன்றத்திற்கு வருவதற்கு முன்னால் அவர்கள் என்னுடைய அறைக்கு வந்தார்கள். என்னுடைய அறையிலே வந்து, ஏற்கெனவே கொடுத்த 4 கோரிக்கைகளை என்னிடம் இன்றும் கொடுத்தார்கள். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும், எதிர்க்கட்சி அ.இ.அ.தி.மு. கழகம் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள் வந்து கொடுத்தார்கள். அப்போது, அவர்களிடம் நான் தெளிவாகச் சொன்னேன். ஏற்கெனவே, நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் என்ற letter pad-லே எழுதி, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுடைய ஒப்புதலோடு, ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் கையொப்பமுடன், எதிர்க்கட்சித் தலைவராக மாண்புமிகு இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களும், அதேபோன்று, இன்னொரு கடிதத்தில் துணைத் தலைவர் மற்றும் கொறடா, துணைக் கொறடா, செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் என்று பல பதவிகளை வைத்து, அதுவும் ஒரு தபாலாக, அவர்களுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுடைய பட்டியலை என்னுடைய கவனத்திற்குத் தந்தார்கள். அந்த அடிப்படையில்தான், தேர்ந்தெடுக்கப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர், துணைத் தலைவர் மற்றும்

2022 அக்டோபர் 18] [பேரவைத் தலைவர்]

அப்படிப்பட்ட உறுப்பினர்களெல்லாம் இங்கே இருக்கிறதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லமாட்டேன், அமர்ந்திருக்கின்றார்கள். உதாரணமாக ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், சட்டமன்ற விதி 2(ஓ)-ன்படி, எதிர்க்கட்சித் தலைவர் என்பதுதான் அங்கீகரிக்கப்பட்ட பதவியாகும். எதிர்க்கட்சித் தலைவர் அங்கீகரிக்கப்பட்டது குறித்து அந்த விதியில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மற்ற பதவிகளெல்லாம், அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களைத் திருப்திப்படுத்துவதற்குக் கொடுக்கின்ற பதவிகள். அவர்கள் யாரை விரும்புகின்றார்களோ, முன் வரிசையில் எப்படிக் கொடுக்க வேண்டுமோ, ஓர் உறுப்பினர் இருந்தால்கூட, அவர்களுக்கும் மரியாதை கொடுக்கின்ற வண்ணமாக, சபை மரபுப்படி, இருக்கைகள் ஒதுக்கப்படுகின்றன. அது முழுவதுமே, பேரவைத் தலைவரினுடைய முழு விருப்பம்தான். அதில் வேறு யாரும் தலையிட முடியாது, ஒன்று.

முற்பகல் 10-30

இன்னொன்று, அவர் ஏற்கெனவே கடந்த 19-7-2022 அன்று இன்னொரு தபால் கொடுத்திருக்கின்றார். அதில், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. பால் மனோஜ் பாண்டியன், திரு. ஆர். வைத்திலிங்கம் ஆகிய மூன்று பேரையும் 11-7-2022 அன்று நடைபெற்ற பொதுக் குழுக் கூட்டத்தில் நாங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கிவிட்டோம் என்ற தகவலைத் தந்திருக்கின்றார்கள்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களுக்குப் பதிலாக திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களை நியமனம் செய்திருக்கின்றோம் என்றும், திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்களுக்குப் பதிலாக திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களை நியமனம் செய்திருக்கின்றோம் என்றும் ஒரு தபாலைத் தந்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையில், அலுவல் ஆய்வுக் குழுவில் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குப் பதிலாக திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களை நியமனம் செய்ய வேண்டும் என்று என்னிடம் கடிதம் தந்திருக்கின்றார்கள். இது என்னுடைய ஆய்வில் இருந்துகொண்டுதான் இருக்கின்றது. 'சட்டமன்றத்திற்கு வாருங்கள். நான் பதில் சொல்கிறேன்' என்று நேற்று சொன்னேன். அந்த

அடிப்படையில் இன்றைக்கு காலையில் அனைவரும் என்னுடைய அறைக்கு வந்தார்கள். அவர்களிடம் நான் தெளிவான விளக்கத்தைச் சொன்னேன். விதிப்படி, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்ற பதவி இல்லை. ஆகவே, அந்த அடிப்படையில் அவர்களை அங்கீகரிக்க வேண்டும் என்பது பேரவைத் தலைவருக்குக் கட்டாயம் அல்ல. அது அவருடைய முழு உரிமை. ஆகவே, அது தேவையில்லை. அதேபோன்று, அலுவல் ஆய்வுக் குழுவின் உறுப்பினராக திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களைச் சேர்க்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றீர்கள். 15 உறுப்பினர்களில், யாரையெல்லாம் சேர்க்க வேண்டும் என்பது சட்டமன்றப் பேரவைத் தலைவரின் முழு உரிமை. அந்த அடிப்படையில்தான் சேர்க்க வேண்டுமே தவிர, இவரைச் சேருங்கள், இவரை நீக்குங்கள் என்று சொல்வதற்கு எந்த அதிகாரமும், எந்த உறுப்பினருக்கும் கிடையாது. அது சட்டமன்றப் பேரவைத் தலைவருடைய முழு உரிமை. ஆகவே, அதிலும் தலையிட முடியாது.

இன்னொரு விஷயத்தையும் சொல்லியிருக்கின்றீர்கள். அவர்களை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்தும் நாங்கள் முழுமையாக நீக்கிவிட்டோம் என்று சொல்லியிருக்கின்றீர்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கின்றது என்று கூறினேன். இதிலே இந்த அவை மட்டுமல்ல, நாட்டு மக்களும் தெரிந்துகொள்ள வேண்டிய மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், இந்த அவையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் உட்பட அந்தப் பதவிகளுக்கு கையெழுத்திட்டுத் தந்தவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஒருங்கிணைப்பாளரும், இணை ஒருங்கிணைப்பாளரும் ஆவர். இப்போது இருக்கின்ற ஒருங்கிணைப்பாளர், அவர்கள் கொடுத்த கடிதத்திற்கு ஏற்கெனவே அவர்களுக்கு முன்னரே 12-7-2022 அன்று ஒரு பதில் கடிதம் தந்திருக்கின்றார்கள். நான் பத்திரிகைகளிலே, ஊடகங்களிலே பார்த்தேன். ‘எங்கள்மீது நடவடிக்கை எடுத்ததாகச் சொல்கின்றார்கள். அவ்வாறு தபால் வந்தால், அதை நீங்கள் தள்ளுபடி செய்யுங்கள்’ என்று கூறி அவரும் ஒரு கோரிக்கை தந்திருக்கிறார்கள். அதற்கு, ஏற்கெனவே இருவரும் இணைந்து கையொப்பமிட்ட தபால்—தலைவர், துணைத் தலைவர் என்று தந்தது; அதற்குப் பிறகு அவர்கள் இடைக்கால, தற்காலிக பொதுச் செயலாளர் என்று ஒரு letter pad-ல் எழுதி, இந்த 4 தபால்களைத் தந்திருக்கிறார்கள்.

2022 அக்டோபர் 18] [பேரவைத் தலைவர்]

அதேபோன்று, ஒருங்கிணைப்பாளர் அவர்களும், 'நான் கட்சியினுடைய ஒருங்கிணைப்பாளர்; அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டதிட்ட விதிகளின்படி, நான்தான் ஒருங்கிணைப்பாளர். இப்போதும் தேர்தல் ஆணைய பதிவேட்டில், நான் ஒருங்கிணைப்பாளராகவும், திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இணை ஒருங்கிணைப்பாளராகவும் இருக்கிறோம்' என்று சொல்லியிருக்கின்றார்கள். இதை நான் சொல்லவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், இதை written ஆக எழுதித் தந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, உச்ச நீதிமன்றத்தில் ஏற்கெனவே பொதுச் செயலாளர் தேர்தல் வைக்க வேண்டுமென்று வந்தபோது, இந்த வழக்கு முடியும் வரை நாங்கள் தேர்தல் வைக்க மாட்டோம் என்று மாண்புமிகு திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தொடுத்த வழக்கில் எழுதிக் கொடுத்துத்தான் அந்த வழக்கு இப்போது நிலுவையில் இருக்கிறது. ஆகவே, என்னுடைய கருத்தைக் கேட்காமல் நீங்கள் எந்த முடிவும் எடுக்கக் கூடாது என்று அவர்களும் எழுதித் தந்திருக்கின்றார்கள். அவர்கள் எழுதித் தந்ததும் சரி, ஏற்கெனவே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுதித் தந்ததும் சரி, அவர்கள் இருவரும் என்ன நினைக்கின்றார்களோ, அதை அவர்கள் எழுதித் தந்திருக்கலாம். முடிவெடுக்க வேண்டியது பேரவைத் தலைவருடைய முழு உரிமை.

நான் இந்த அவைக்கு பலமுறை சொல்லியிருக்கின்றேன்; 38 ஆண்டுகளுக்குப் பிறகு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான், இந்த சபை ஜனநாயகத்தோடு, நாகரிகத்தோடு, எல்லோரையும் அரவணைத்துச் செல்கின்ற அளவில் நடைபெறுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) பல உறுப்பினர்கள், நீங்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு மிக அதிகமான நேரம் தருகிறீர்கள் என்று சொன்னார்கள். அது வினாக்கள்–விடைகளாக இருந்தாலும் சரி, விதி 55–ன்கீழ் வழங்கப்படும் கவன ஈர்ப்பு அறிவிப்பாக இருந்தாலும் சரி, எந்த நிகழ்வாக இருந்தாலும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு நீங்கள் அதிகமான வாய்ப்பைக் கொடுக்கின்றீர்கள் என்று பல உறுப்பினர்கள் குறை சொன்னாலும், நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடர்களிலே மிக அதிகமான நேரம் பேச எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குத்தான் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்கள், மக்கள் பிரச்சினை பற்றிப் பேச வேண்டுமென்றால், அவர்களை தாராளமாக அனுமதியுங்கள்

என்ற ஒரு கருத்தை மட்டும் சொல்லியிருக்கின்றார்களேதவிர, ஒருபோதும் இவரை பேசவிடுங்கள், இவரை பேசவிடாதீர்கள் என்று சொன்னது கிடையாது. ஆகவே, அந்த அடிப்படையில்தான் இது ஜனநாயக ரீதியில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

முற்பகல் 10–35

இன்று காலையில்கூட அந்த அடிப்படையில்தான், வந்தவர்களிடம் விவரமாக, தெளிவாகச் சொன்னேன். விதியில் இப்படித்தான் இருக்கின்றது; விதிப்படிதான் நாங்கள் நடவடிக்கை எடுக்க முடியும். நீங்கள் வந்து சொன்னதனால், உடனடியாக அவரை மாற்றுங்கள், இவரை மாற்றுங்கள் என்று சொல்ல முடியாது. ஓர் உறுப்பினர், எனக்கு இந்த இருப்பிடம் அசௌகரியமாக இருக்கின்றது; எனக்கு மாற்றித் தாருங்கள் என்று கேட்கலாம்; அது அவர்களுடைய முழு உரிமை. இந்த இடத்தில் இவரை அமர வைக்கக் கூடாது என்று சொல்வதற்கு யாருக்கும் எந்த உரிமையும் கிடையாது. நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன். திரு. அர. சக்கரபாணி அவர்கள், மாண்புமிகு மறைந்த தலைவர் கலைஞர் அவர்கள் வந்து செல்வதற்கு வசதியான ஓர் இருக்கையைத் தாருங்கள் என்றுதான் கேட்டார்கள்; வேறொன்றும் அவர்கள் கேட்கவில்லை. அப்போது எடுத்த முடிவை நான் குறிப்பிலே படித்துப் பார்த்தேன். 'ஏற்கெனவே இப்போது இருக்கின்ற இடமே போதுமானது' என்று சொல்லியிருக்கின்றார்கள். இந்த இடத்தில், இரண்டாவது வரிசையில், தம்பி பால் மனோஜ் பாண்டியன் இருக்கின்ற இருக்கையில் இருந்தால், மாண்புமிகு மறைந்த தலைவர் கலைஞர் அவர்கள் எப்படி வந்து செல்வார்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். எந்தளவுக்கு மனசாட்சியில்லாமல் நடந்தது என்பதெல்லாம் வரலாறு. அதற்காக நான் இதைச் செய்கிறேன் என்று சொல்லவில்லை. அதற்கும் இதற்கும் நான் சரி என்று சொல்ல மாட்டேன்.

எதற்காக இதைச் சொல்கின்றேன் என்று சொன்னால், நம்முடைய மாண்புமிகு முன்னாள் பேரவைத் தலைவர் அவர்கள் என்னுடைய அறைக்கு வந்தபோதுகூட, சில நிகழ்வுகளைச் சொன்னார்கள். அப்போதுதான் நான் அவர்களிடம் சொன்னேன். 10th Schedule of the Indian Constitution-ல், இந்திய அரசமைப்புச் சட்டம் 10-வது அட்டவணையில் மிகவும் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு சின்னத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், அந்தச் சின்னத்திற்கு

2022 அக்டோபர் 18] [பேரவைத் தலைவர்]

எதிராக வாக்களித்தால், அவர்கள் தகுதி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்று அரசமைப்புச் சட்டம் 10-வது அட்டவணையில் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் உட்பட 11 பேர்கள் இரட்டை இலை சின்னத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு, இரட்டை இலை சின்னத்தில் உள்ள நம்முடைய முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி அவர்களுக்கு எதிராகத்தான் வாக்களித்தார்கள். இன்னும் இதுவரை அதற்கு தீர்ப்பே சொல்லாதவர்கள், பழைய உதாரணங்களை நீங்கள் சொன்னீர்களென்றால், இப்படி பல உதாரணங்கள் என்னிடமும் இருக்கின்றன. அவற்றை நானும் சொல்ல வேண்டியதிருக்கும். ஆகவே, அதனை மறந்துவிடுங்கள். தற்போது விஷயத்திற்கு வாருங்கள். என்ன கோரிக்கை தந்திருக்கிறீர்கள்; நான் என்ன நடவடிக்கை எடுக்கிறேன்; என்ன நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லுங்கள். நான் தவறாக எதையும் பேச மாட்டேன். என்னை தவறாக நடத்தச் சொல்லி யாரும் அறிவுறுத்தவில்லை. விதி என்ன சொல்கிறது என்பது உங்களுக்குத் தெரியும்.

ஆகவே, அந்த அடிப்படையில்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் காலை 9-25 மணிக்கு வந்து 9-37 மணிக்குள் உடனடியாக இருக்கையை மாற்றுங்கள் என்று சொன்னால், எவ்வாறு செய்ய முடியும்? சொல்லுங்கள். இதுவரை தபால் தந்திருக்கின்றார்கள். அது ஓர் ஆய்வுக்கு உட்பட்டிருக்கிறது என்றுதான் சொல்லியிருக்கின்றேனே தவிர, எடுத்தேன், கவிழ்த்தேன் என்று சொல்லி, இந்தச் சபை கடந்த காலங்களைப்போன்று ஒருபோதும் இருக்காது.

எப்படியென்றால், உங்களுக்கு நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுதான். 1988-ல் ஜானகி அம்மையார் பொறுப்பேற்கும்போது இந்த அவை என்ன பாடுபட்டது; எவ்வளவு பெரிய கரும்புள்ளியானது? அதேபோல்தான் 1989-ல் மறைந்த தலைவர் கலைஞர் அவர்களின் கையிலிருந்த பட்ஜெட் உரையை பிடுங்கி, இந்தச் சபையையே அல்லோலகல்லோலப்படுத்தி மிகப் பெரிய கரும்புள்ளிகள் ஏற்பட்டன. இவற்றை மாற்றவே முடியாது. அதே அடிப்படையில்தான் இன்றும் அவர்கள் இந்த அவையிலே கலகம் ஏற்படுத்த வருகின்றார்கள் என்பதை, நீங்கள் வந்தவுடனேயே பார்த்திருப்பீர்கள். அது தெளிவாகத் தெரிகிறது. எப்படித் தெளிவாகத் தெரிகிறது என்றால், சட்டமன்றம் காலையில்

[பேரவைத் தலைவர்] [*2022 அக்டோபர் 18 10–00* மணிக்கு கூடியிருக்கிறது; திருக்குறளை வாசித்துவிட்டு, கேள்வி நேரத்தை நாம் ஆரம்பிக்கிறோம். கேள்வி நேரத்தை நடத்தக் கூடாது என்று அவர்கள் சொல்கிறார்கள். அவர்கள் முதல்வராக இருந்தவர்கள். முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் நேரம். *10* ஆண்டுக் காலத்தில் எப்போதாவது அப்படியொரு மரபுமீறல் நடந்திருக்கிறதா? எதிர்க்கட்சி வரிசையில் இப்போது ஆளுங்கட்சி இருந்திருக்கிறார்கள் என்றால், அந்த கேள்வி நேரத்தை நடத்த விடாமல் இப்படி தகராறு செய்திருக்கிறார்களா? படித்துப் பார்த்ததில் அப்படியொரு குறிப்பினை நான் பார்க்கவில்லை. அதுமட்டுமல்ல, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுந்து நின்றவுடன், 'அமருங்கள், கேள்வி நேரம் முடிந்தவுடன் நீங்கள் பேசுவதற்கு உரிய நேரம் தருகிறேன்' என்று ஒரு முறையல்ல, பல முறை நான் சொல்லியிருக்கின்றேன்.

ஒட்டுமொத்தமாக அவர்கள் எழுந்துநின்று, இந்தச் சபையை நடத்தக் கூடாது என்ற நோக்கத்தோடும், கலகம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடும் காலையில் நடந்து கொண்டதை, இந்தச் சபையில் உள்ள நீங்கள் அனைவரும் பார்த்திருக்கிறீர்கள். அதற்குப் பிறகுதான் இவர்கள் கலகம் செய்த பிறகுதான், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னது எனக்கு நினைவுக்கு வந்தது. இந்தி திணிப்பை எதிர்த்து இன்று இந்தச் சட்டமன்றத்திலே தீர்மானம் கொண்டு வரவிருக்கின்றார்கள். ஆகவே, இந்தி திணிப்பிற்கு எதிராக அவர்கள் ஆதரித்தால், அவர்களுக்கு ஏதேனும் சங்கடம் ஏற்படுமோ என்ற அடிப்படையில் இந்தக் கலகத்தைச் செய்தார்களோ என்றுகூட எனக்கு ஐயம் தோன்றுகிறது.

முற்பகல் 10–40

அதுமட்டுமல்ல, அவர் முதல்வராக இருந்த ஆட்சிக் காலத்தில்தான் மறைந்த முதல்வர் அம்மையார் ஜெயலலிதா அவர்களுடைய மரணம் குறித்து ஆராய்வதற்காக நீதியரசர் திரு. ஆறுமுகசாமி அவர்களுடைய தலைமையில் விசாரணை கமிஷன் அமைத்தார்கள். அதனுடைய அறிக்கை இன்று சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்படுகிறது.

அதுமட்டுமல்ல, உலகத்திலேயே இப்படியொரு கண்மூடித்தனமான நிகழ்வு ஏற்பட்டிருக்காது. அதாவது, தூத்துக்குடி கடற்கரையிலிருந்து 7 கிலோ மீட்டர் தூரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் வரை அமைதியான வழியில்

2022 அக்டோபர் 18] [பேரவைத் தலைவர்]

நடைபெற்றுவந்த ஊர்வலத்தை, வாகனத்திலிருந்து குறிபார்த்து, 13 பேரை காகம், குருவியைச் சுடுவதுபோல் சுட்டுக் கொன்றது தொடர்பாக, விசாரணை செய்வதற்காக நீதியரசர் திருமதி அருணா ஜெகதீசன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு நபர் ஆணையம் அளித்த அறிக்கையும் இன்று சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்படுகிறது. அதுவும் அவர்கள் காலத்தில் அமைக்கப்பட்ட ஆணையம்தான். இதைக் கண்டு அவர்கள் அஞ்சிவிட்டார்களா என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே, மிக முக்கியமான ஆணையங்களினுடைய அறிக்கைகள் வந்திருக்கின்றன.

மேலும், முக்கியமாக, 'இந்தி மொழி திணிப்புக்கு' எதிரான தீர்மானமும் இன்று சட்டமன்றப் பேரவையில் இயற்றப்படவிருக்கிறது. ஆக, எதிர்க்கட்சி என்ற முறையில், தமிழ்நாட்டு மக்களுடைய பிரதிநிதிகள் என்ற முறையில், இவற்றுக்கெல்லாம் அவர்கள் கண்டிப்பாக அவையில் இருந்து தங்களுடைய கருத்தைச் சொல்லியிருக்க வேண்டும். 'இந்தி மொழி திணிப்புக்கு' எதிராகக் கொண்டுவரப்படுகின்ற தீர்மானத்தை அவர்கள் ஆதரிக்க வேண்டும். அவற்றையெல்லாம் அவர்கள் மறந்துவிட்டு, இப்படிப்பட்ட அமளியில் ஈடுபட்டது ஏற்புடையதல்ல. ஆகவே, அவர்கள் பேசுவதற்கு நான் வாய்ப்புத் தருகிறேன் என்று பலமுறை சொன்னேன். அதுபற்றி உங்கள் எல்லோருக்கும் தெரியும். அவர்கள் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன் என்று நான் பலமுறை சொன்னதற்குப் பிறகும், வேண்டுமென்றே இந்த அவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்துகின்றவண்ணம், கலகம் ஏற்படுத்துகின்றவண்ணம் செயல்பட்டதால், இப்போது அவர்களை நான் அவையிலிருந்து வெளியேற்றம் செய்திருக்கிறேன். இதுதான் இன்று நடந்த நிகழ்வுகள். இந்த நிகழ்வுகள் எல்லாவற்றையும் நீங்கள் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, இன்றும், நாளையும் நடைபெறும் சபை நடவடிக்கைகளில் அவர்கள் கலந்துகொள்ள வேண்டாமென்று நான் தீர்ப்பளிக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியைச் சார்ந்த அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களில் (திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. ஆர். வைத்திலிங்கம், திரு. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி. அய்யப்பன் ஆகியோரைத்*

[திரு. துரைமுருகன்] [2022 அக்டோபர் 18

தவிர) வெளியேற்றம் செய்யப்பட்டவர்கள் இன்றும், நாளையும் நடைபெறும் அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளக் கூடாது என்று தாங்கள் தீர்ப்பு வழங்கியிருக்கிறீர்கள். உங்களுடைய தீர்ப்பில் நான் தலையிட விரும்பவில்லை. ஆனால், 'நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்; இனி நடப்பவையும் நல்லவையாக இருக்கட்டும்' என்று தாங்கள் அவர்களை மன்னித்து, இன்று விட்டுவிட்டு, நாளை நடைபெறும் அவை நடவடிக்கைகளில் பங்கேற்கலாம் என்று தாங்கள் தீர்ப்பளிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுடைய கோரிக்கை ஏற்கப்படுகிறது. ஆக, இன்று மட்டும் அவர்கள் அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளக் கூடாது என்று தீர்ப்பளிக்கிறேன். நாளை நடைபெறும் அவை நடவடிக்கைகளில் அவர்கள் கலந்துகொள்ளலாம்.*

1. வினாக்கள்—விடைகள்—*தொடர்ச்சி*

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

1—

தடுப்பணை

***15171—திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்:**

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, அய்யனார் நகர்ப் பகுதியின் அருகில் கௌசிகா ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2022 அக்டோபர் 18]

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, கௌசிகா ஆற்றின் குறுக்கே அய்யனார் நகர்ப் பகுதி சுற்றளவிற்குள் ஏற்கெனவே ஒரு தடுப்பணையும் மற்றும் கண்மாயும் உள்ளன. இத்தடுப்பணை கோரும் பகுதியைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலத்தடிநீர் செறிவு நடைபெற வாய்ப்புள்ளது. எனவே, புதிய தடுப்பணை கட்ட தொழில்நுட்ப ரீதியில் சாத்தியமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவர்கள்.*

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். விருதுநகர் நகராட்சியையொட்டி செல்லக்கூடிய கௌசிகா ஆற்றின் குறுக்கே குடிநீர் ஆதாரத்தைப் பெருக்கக்கூடிய வகையில், அய்யனார் நகர்ப் பகுதியில் இரண்டு தடுப்பணைகள் கட்டுவதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஏற்கெனவே கோரிக்கை வைத்திருக்கின்றோம். அந்தத் தடுப்பணைகள் இரண்டையும் கட்டிக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.*

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தடுப்பணை கேட்டிருக்கிற கௌசிகா நதியில், ஏற்கெனவே, வடமலைக்குறிச்சி கண்மாயிலிருந்து* LS *2,110 மீட்டர் தூரத்திலும், அதேபோன்று* LS *6,500 மீட்டர் தூரத்திலும், அதேபோன்று* LS *6,000 மீட்டர் தூரத்திலும் மூன்று தடுப்பணைகள் கட்டுவதற்கான செயற்குறிப்புகளிலும் சாத்தியக்கூறுகள் உள்ளதால், அதன்மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவர்கள்.*

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் நகராட்சியிலே மக்கள்தொகை அதிகரித்துக்கொண்டே செல்கிறது. தற்போது, நகராட்சியில்*

1,25,000 மக்கள் வசித்து வருகின்றார்கள். நகராட்சியையொட்டி இருக்கக்கூடிய பாவாளை ஊராட்சி, சிவஞானம் ஊராட்சி ஆகிய இரண்டு ஊராட்சிகளிலும் 30,000 மக்கள் வசித்துக்கொண்டிருக்கிறார்கள். கௌசிகா ஆற்றில் மழைக் காலங்களில் அதிகமாக வெள்ளநீர் செல்கின்ற காலத்தில், நான்கு வழிச் சாலைக்கு மேல்புறம் ஒரு தடுப்பணையும், அய்யனார் நகர்ப் பகுதியின் கீழ்ப்புறம் ஒரு தடுப்பணையும் கட்டி, நீரைத் தேக்கி வைத்தால், நிலத்தடி நீர் செறிவூட்டல் அதிகமாகி குடிநீர் ஆதாரத்தைப் பெருக்குவதற்கு வசதியாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வில் இருப்பதாக சொல்லியிருக்கின்றார்கள். நீங்கள் மனமுவந்து, அந்த இரண்டு தடுப்பணைகளையும் கட்டிக் கொடுத்தால் விருதுநகர் பகுதியின் நீராதாரத்தைச் சமாளிப்பதற்கு வசதியாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

விருதுநகரில் மீண்டும் ஒரு முக்கியமான பிரச்சினை. விருதுநகரை ஒட்டி, ஆணைக்குட்டம் நீர்த்தேக்கம் என்று ஒரு நீர்த்தேக்கம் இருக்கிறது. அந்த நீர்த்தேக்கம் கட்டிய காலத்திலிருந்து அது குடிநீருக்கும் பயன்படாமல், விவசாயத்திற்கும் பயன்படாமல் இருக்கிறது. மழைக்காலங்களில் நீர் வந்து நிரம்பும். இரண்டு நாட்களில் அந்த நீர் அனைத்தும் வெளியேறிவிடுகிறது. அந்த அணையிலே இருக்கக்கூடிய கதவணைகள் பழுதடைந்திருக்கின்றன. அந்த அணையை அமைக்கக்கூடிய காலக்கட்டத்திலே, அணையின் vertical *சிஸ்டத்தில் கதவணைகளை அமைத்துவிட்டார்கள். அதன்காரணமாக தண்ணீர் அனைத்தும் வெளியே சென்றுவிடுகின்றது. அதிகாரிகள் சொல்வது* radial *சிஸ்டத்தில் அமைத்தால். . . (மணியடிக்கப்பெற்றது) அது முக்கியமான பிரச்சினை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Demand–ல் பேசுவதுபோன்று பேசுகிறீர்கள். என்ன வேண்டுமென்று கேளுங்கள். அணையைக் கட்ட வேண்டும் அவ்வளவுதானே?

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: *அணையைக் கட்ட வேண்டாம். கதவணையை மாற்ற வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கதவணைகள் மாற்றப்படுமா என்று கேட்கிறீர்கள்.*

2022 அக்டோபர் 18]

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: *இது 30, 35 வருடங்களாக இருக்கின்ற பிரச்சினை. ஒவ்வோர் ஆண்டும் மழைக் காலங்களில் நீரைத் தேக்குவதற்கு முடியாமல் தண்ணீர் வெளியேறிவிடுகிறது. பல முறை கோரிக்கைகள் வைத்தும், நிறைவேறாமல் இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது வேண்டாம். இப்போது என்ன கோரிக்கை, அதை மட்டும் சொல்லுங்கள்.*

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: *கதவணை கட்ட வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கதவணை கட்டப்படுமா என்று கேட்கிறீர்கள்.*

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: *ஒரே நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு மக்கள் முதல்வர் அவர்கள், நமது அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கேட்காமலேயே கொடுக்கக்கூடிய திட்டத்தில், 10 கோரிக்கைகளை கொடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளில் முதல் கோரிக்கையாக இந்தக் கதவணை கட்டுகின்ற கோரிக்கையையும், 9-வது கோரிக்கையாக தடுப்பணை கட்டுகின்ற கோரிக்கையையும் கொடுத்திருக்கின்றோம். அது நீண்ட நாள் கோரிக்கை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் நாம் கேட்காமலேயே அனைவருக்கும் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதையும் நிறைவேற்றிக் கொடுப்பார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கௌசிகா நதியில் இரண்டு அணைகள் கட்டப்படும். ஒன்று பாவாளையில், இன்னொன்று சின்னமுட்டம்பட்டியில் கட்டப்படும் என்று தெரிவித்திருக்கிறேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அய்யனார் நகர்ப் பகுதியில் தடுப்பணை கட்டித் தர வேண்டும்; கட்டுங்கள் என்று கேட்கிறார். அங்கு கட்டமுடியாத காரணம், அங்கிருந்து 300 மீட்டர் தூரத்தில் ஏற்கெனவே ஓர் அணை இருக்கிறது. ஓர் அணைக்கும் இன்னோர் அணைக்கும் இடைப்பட்ட தூரம் குறைந்தது ஒரு கிலோ மீட்டர் இருக்க வேண்டும். இல்லையெனில், அணை கட்டக்கூடாது. இது*

300 மீட்டர் தூரத்தில்தான் இருக்கிறது. இதற்கிடையில் அணை கட்ட வேண்டுமென்று கேட்கிறார். இருக்கின்ற அணைகளிலேயே செறிவு ஏற்படும். அந்தத் தண்ணீரே போதும். ஆகையால்தான், அய்யனார் நகர்ப் பகுதியில் அணை கட்ட முடியாது. ஏற்கெனவே இரண்டு அணைகளைக் கட்டித் தருகிறோம் என்று சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி அவர்கள்.*

முற்பகல் 10–50

திருமதி S. விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட நெய்யாறு இடதுகரை கால்வாய் சிதிலமடைந்து நிலச்சரிவு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அதுசம்பந்தமான வழக்கும் இப்போது உச்ச நீதிமன்றத்தில் நடந்துகொண்டிருக்கிறது. அது முடிவடைய சிறிது தாமதம் ஏற்படலாம். எனவே, அந்தக் கால்வாயைப் பாதுகாக்கும் விதமாகவும், நிலத்தடி நீர் செறிவூட்டப்படவும், குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்படவும் அந்தக் கால்வாயைப் பயன்படுத்தி, எனது தொகுதியில் உள்ள பள்ளிக்கூட்டம் என்ற பகுதியில் ஒரு தடுப்பணை அமைத்து,* reverse engineering process *வழியாக அந்த நீரைக் கால்வாயில் கொண்டுவரும்போது . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தடுப்பணை கட்டப்படுமா என்று கேட்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுங்கள். தடுப்பணையைத்தானே கேட்டிருக்கிறீர்கள்.*

திருமதி S. விஜயதரணி: *நான் கேட்டுவிடுகிறேன். பள்ளிக்கூட்டம் பகுதியில் தடுப்பணை கட்டி,* reverse engineering process*–ஐ ஆய்வு செய்து, நீரைக் கொண்டு வந்து, சீரமைக்க முடியுமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்யாற்றிலே, கேரள மாநிலத்தவர்கள் தண்ணீர் விடமாட்டோம் என்கிறார்கள். தண்ணீர் வராத கால்வாயைச் சீர்படுத்த வேண்டுமென்று கேட்கிறார்கள். (குறுக்கீடு)*

2022 அக்டோபர் 18]

வழக்கு இருக்கிறது, அது முடிவிற்கு வரட்டும். சும்மா இருக்கின்ற கால்வாயை ஏன் தூர் வாரவேண்டும்? தண்ணீர் வந்தால் பரவாயில்லை. தண்ணீர் வரவில்லை என்றால், அதைத் தூர் வார முடியாது. (குறுக்கீடு)

திருமதி S. விஜயதரணி: *இன்னொரு பகுதியில் தடுப்பணை கட்டி . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள்.*

திருமதி S. விஜயதரணி: *முடித்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். (குறுக்கீடு) இதுகுறித்து தனியாக எழுதிக்கொடுங்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *உங்களைவிட நெய்யாற்றங்கரை குறித்த அனைத்து விவரங்களும் எனக்கு நன்றாகத் தெரியும், ஆகையினால் அதில் தண்ணீர் வந்தால் ஏதாவது செய்யலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், தனியாக எழுதிக்கொடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பெரும்பான்மையான அணைகள் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டிருக்கின்றன. அவை 60 ஆண்டுகளைக் கடந்த காரணத்தினால், அதனுடைய* shutters *உடைந்து பல்வேறு அணைகளிலிருந்து தண்ணீர் வீணாகக் கடலில் கலக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, பரம்பிக்குளம் அணையிலுள்ள* shutter. *தண்ணீர் திறந்துவிடக்கூடிய அந்த* chain *காலதாமதமான காரணத்தினால், உடைப்பு ஏற்பட்டு 14* T.M.C. *தண்ணீர் வீணாகியிருக்கிறது. அதனால், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து அணைகளுடைய* shutters*–ஐ பாதுகாக்கின்றவகையில், அவற்றைச் செப்பனிட வேண்டும். அதற்கு 40 ஆண்டுகள்தான்* guarantee *என்று பொறியாளர்கள் சொல்கிறார்கள். இதுபோன்று நீர் வீணாவதற்கு முன்பாகவே நாம் ஒரு திட்டம் தயாரித்து,*

40 ஆண்டுகள் கடந்த shutters *அனைத்தையும் சரி செய்வதற்கும், அவற்றை மாற்றியமைப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கிருஷ்ணகிரி அணை, சாத்தனூர் அணை, வைகை அணை, பொருந்தலாறு அணை என 6, 7 அணைகளைக் கட்டினார்கள். அந்த அணைகளையெல்லாம் நாங்கள் பாதுகாக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ஆலோசனையின் அடிப்படையில் நாங்கள் வேலை செய்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் வற்றாத ஜீவநதி தாமிரபரணி நதி. வெள்ளக்காலங்களில் அதிகமான நீர் வீணாகக் கடலில் சென்று சேருகிறது. அதில் தடுப்பணைகள் கட்டுவதற்கு, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? எத்தனை அணைகள் கட்டப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமானது. மருதூர் கால்வாய்க்குக் கீழே தண்ணீர் வீணாகக் கடலில் போய் கலக்கிறது. சென்ற முறை நாம் ஆட்சியில் இருக்கின்றபொழுது அதற்குக் கீழே எப்படியாவது அணைகளைக் கட்ட வேண்டுமென்பதற்கான முயற்சிகளை எடுத்தோம். திரு. மோகனகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் ஒரு குழுவை அமைத்து, எங்கே அதற்கு சாத்தியம் இருக்கிறது என்பதை ஆய்வு செய்தோம். ஆனால், அப்போது சரிப்பட்டு வரவில்லை. அதற்காக*

2022 அக்டோபர் 18]

அதை விட்டுவிடவும் முடியாது. காரணம், அதிகமான அளவில் தண்ணீர் கடலில் போய் கலக்கிறது. எனவே, மாண்புமிகு எங்கள் தளபதியார் அவர்களுடைய தலைமையிலான இந்த அரசு, அதுகுறித்து, serious *ஆக முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. நிச்சயமாக, தாமிரபரணி தண்ணீர், கடலுக்குப் போகாமல் தடுப்பணை கட்டித் தரப்படும் என்ற உறுதியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு இணைப்புத் திட்டம் அதற்காகத்தான் கொண்டு வரப்பட்டது.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *அதைக் கேட்டீர்களா? அது தொடங்கி இன்னும் நடந்துகொண்டிருக்கிறது. சமீபத்தில்கூட நான் சென்று பார்வையிட்டு வந்தேன். நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கனடாவில் இருந்தபோது, அவர்களிடம் இந்த அணையை நான் பார்வையிட வருகிறேன் என்று சொன்னவுடனே, அவர் ஒரு நாள் முன்னதாகவே வந்து என்னோடு கலந்துகொண்டார். அதை இன்னும் ஒன்றிரண்டு மாதத்திற்குள் முடித்துத் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை நிச்சயமாக, சீக்கிரமாக முடித்துக் கொடுத்துவிடுவோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.*

திரு. ம. சிந்தனை செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குமராட்சி பகுதியில் நிலத்தடி நீர் உவர்ப்பாக மாறிக்கொண்டிருக்கிறது. கடல்நீர் உள்ளே புகுவதால் கொள்ளிடம் ஆற்றிலே ஆதனூர் அருகே ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது. கரிப்பூர்–மாதிரிவேலூரை இணைத்து ஒரு பாலம் கட்டவேண்டுமென்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு, அது தொடர்பான முன்னெடுப்புகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆய்வும் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தத் திட்டத்தையும் விரைவாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கொள்ளிடம் வடக்குக் கரை மிகவும் பலவீனமாகியிருக்கிறது. ஆகவே, கொள்ளிடம் வடக்குக் கரையைப் பலப்படுத்தி, பொதுப் பணித் துறையின் வாகனங்கள் இயல்பாகச் சென்று வருகிற

வகையில், அதனைச் சீர்படுத்தவும் அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகப் பணிவோடு கேட்டு, அமர்கிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இரண்டு கோரிக்கைகளை வைத்திருக்கிறார். முதலாவது கோரிக்கை ஆய்வில் இருக்கிறது; இரண்டாவது கோரிக்கை பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

2—

பாதாள சாக்கடைத் திட்டம்

***25350—திரு. நா. இராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கம்பம் தொகுதியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கம்பம் நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் 2018–2019–ன்கீழ் ரூ.4.10 கோடி மதிப்பீட்டில் கசடுக் கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி முடிக்கப்பட்டு, சோதனை ஓட்டம் நடத்தி பொதுமக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.*

2022 அக்டோபர் 18]

திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம் நகராட்சி, கிட்டத்தட்ட 77,230 மக்கள் வாழ்கிற நகராட்சியாகும். நாளொன்றுக்கு 10 M.L.D. குடிநீர் கம்பம் நகர மக்களுக்கு வழங்கப்படுகிறது. அதிலிருந்து 8 M.L.D. கழிவுநீர் வெளியேற்றப்படுகிறது. நகரின் மத்தியில் சேனை ஓடை ஒன்று இருக்கிறது. அதிலிருந்து தினமும் 2 M.L.D. கழிவுநீர் வெளியேற்றப்படுகிறது. மேலும், வருடம் முழுவதும் பெய்கின்ற மழையின் காரணமாக, கிட்டத்தட்ட 2 T.M.C. தண்ணீர் அந்த ஓடையின் வழியாகச் செல்கிறது. ஆக மொத்தம், வருடம் முழுவதும் 2 T.M.C. மழைத் தண்ணீர் 12 M.L.D. கழிவுநீரோடு சேர்ந்து, பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான வீரப்ப நாயக்கன் குளம், கொடும்புடி குளம் மற்றும் வேம்பன் குளம் ஆகிய மூன்று குளங்களில் வந்து சேர்கின்ற காரணத்தினால், அந்தக் குளங்களில் கசடுகள் மென்மேலும் படிந்து 2,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுவது குறைகின்றது. அந்தக் கசடுகளில் இரசாயனக் கலவை இருக்கின்ற காரணத்தினால், விளைகின்ற நெல்லில் toxicity residue ஏற்படுகிறது. ஆகவே, பாதாள சாக்கடைத் திட்டம், தேனி மாவட்டத்தில், கம்பம் தொகுதியில் மட்டும்தான் நிறைவேற்றப்படவில்லை. மற்ற அனைத்து நகர்ப்புரங்களிலும் இருக்கின்றது. எனவே, அருள்கூர்ந்து, கம்பம் தொகுதியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு தங்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நகரப் பகுதிகளில், எந்தெந்தப் பகுதிகளில் அதிக மக்கள் வசிக்கிறார்களோ, அவர்களுக்கு அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித்தர வேண்டுமென்று இந்தத் துறைக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள்.

கடந்த ஆட்சியில் பேரவை விதி 110–ன்கீழ் 1 இலட்சத்திற்கும்கீழ் மக்கள் வசிக்கின்ற பகுதிகளில் கசடுக் கழிவு மேலாண்மைத் திட்டத்தைக் கொண்டுவரலாம் என்றும், 1 இலட்சத்திற்கும்மேல் மக்கள் வசிக்கின்ற பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தைக் கொண்டுவரலாம் என்றும் ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டதன் அடிப்படையில்தான், கசடுக் கழிவு மேலாண்மைத் திட்டத்தை கம்பம் நகராட்சியில் முடித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்

அவர்கள் குறிப்பிட்டதைப்போல, 2011 ஆம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, கம்பம் நகரத்தின் மொத்த மக்கள்தொகை 77,230 ஆகும். இங்கு 19,541 குடியிருப்புகள் இருக்கின்றன. தற்போது இவற்றின் எண்ணிக்கை கூடுதலாக இருக்கும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் இந்த ஆண்டு கம்பம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கும் பணி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவைப் பெற்று நிச்சயம் தொடங்கப்படும்.

அதேபோல, மற்ற நகரங்களிலும் விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, கம்பம் நகராட்சிக்கு முன்னுரிமை தந்து, பணிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.

திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு கம்பம் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல, கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையத்திற்கு (Faecal Sludge Treatment Plant) 19,786 வீடுகளில் உள்ள கிட்டத்தட்ட 19,273 septic tanks–லிருந்து தினமும் 40 K.L.D. கசடு கழிவு நீர் கொண்டு செல்லப்பட்டு, சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. ஆனால், அது தற்போது சோதனை ஓட்டத்தில்தான் இருக்கிறது. அதனை முழுமையாகச் செயல்படுத்தி, அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருமாறும் தங்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோதனை ஓட்டம் முடிந்து, விரைவாக அந்தத் திட்டம் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். தினந்தோறும் கிட்டத்தட்ட 10.4 M.L.D. தண்ணீரை கம்பம்

2022 அக்டோபர் 18]

நகரத்திற்கு வழங்கிக்கொண்டிருக்கிறோம். தற்போது 40 K.L.D. *அளவிற்குத்தான் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *எனவே, அதையும் கருத்திற்கொண்டு விரிவுபடுத்தி, விரைவில் பாதாள சாக்கடைத் திட்டத்தின்மூலம் அதனை எடுத்துச் செல்லும் முயற்சியை மேற்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S.S. *பாலாஜி அவர்கள்.*

திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூர் பேரூராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டம் 2018 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டு, 2020 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டிருக்க வேண்டும். அது தொய்வடைந்திருந்த நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக அண்ணன் தளபதி அவர்கள் பொறுப்பேற்று, நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. நேரு அவர்களும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. அன்பரசன் அவர்களும் இந்தத் திட்டத்தில் முனைப்பைக் காட்டி, தற்போது நிறைவடைகிற நிலையில் இருக்கிறது. ஆனால், கடந்த காலத்தில் அந்தத் திட்டத்தைத் தீட்டுகின்றபோது பல்வேறு பகுதிகள் அதில் விடுபட்டிருந்தன. அவற்றையெல்லாம் சேர்த்திட வேண்டுமென்று ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கோரிக்கை வைத்திருக்கிறோம். தற்போது அதற்கான ஒப்புதல் அளிக்கப்படாமல் இருக்கிறது. அதற்கு ஒப்புதலளித்து, விடுபட்ட பகுதிகளையும் திருப்போரூர் பேரூராட்சி பாதாள சாக்கடைத் திட்டத்தில் சேர்த்திடுமாறு தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்*

சொன்னதைப்போல நானும், மாண்புமிகு அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களும் அந்த இடத்திற்கு நேரில் சென்று பார்த்தோம். அப்போது, பாதாள சாக்கடைத் திட்டத்திற்காக தோண்டுகின்றபோது, கீழே பாறைகள் இருக்கின்ற காரணத்தால்தான் அந்தப் பணி தாமதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று சொல்லப்பட்டது. எனவே, விரைவில் அத்திட்டத்தை முடித்து, அதனைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. நான், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். கட்டடம் கட்டுவதுபோல், சாலைகள் அமைப்பதுபோல், இந்தப் பணிகள் அவ்வளவு எளிதில் நடைபெறுவதில்லை. ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு மாதிரியான கருங்கற்கள் இருக்கின்றன. இல்லையென்றால், வேறு மாதிரியான மண் அமைப்பு இருக்கின்றபோது, பணிகள் தாமதப்படுகின்றன. அப்பணியை எடுக்கின்ற பெரிய contract நிறுவனங்களின் தலைமையிடங்கள் பூனா, தில்லி போன்ற நகரங்களில் இருக்கின்றன. அவர்களது மேலாளர்களை மட்டும்தான் நேரில் பார்த்து பணிகளை விரைந்து முடிக்குமாறு சொல்லும் நிலை உள்ளது. எனவே, அதனை ஆய்வு செய்து விரைந்து திருப்போரூர் பகுதியில் முழுமையாக இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்பது ஒன்று.

இரண்டாவது, ஒவ்வோர் ஊரிலும் நாள்தோறும் நகரங்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. நகரத்தைவிட்டு 1 கி.மீ. அல்லது 2 கி.மீ. தள்ளி வீடுகள் கட்டுகின்றபோது, சாலை அமைக்க வேண்டியிருக்கிறது, விளக்கு வெளிச்சம் தரவேண்டியிருக்கிறது, தண்ணீர் தரவேண்டியிருக்கிறது, பாதாள சாக்கடைத் திட்டத்தை நீட்டித்துத் தர வேண்டியிருக்கிறது. இதைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தோம். ஏற்கெனவே, நகர்ப்புறத்தில் அனைத்துப் பகுதிகளிலும் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. அவற்றுடன் கூடுதலாக, சாலைகளைச் செப்பனிடுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பு நிதி அளித்திருக்கிறார்கள். இதற்காக ஆய்வுக் கூட்டங்கள் நடைபெற்று, எந்தப் பணியை முதலில் எடுக்கலாம் என்று முடிவு செய்து, திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, சாலைகளையும் செப்பனிட்டுத் தருவோம், இத்திட்டத்தையும் விரிவுபடுத்தித் தருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2022 அக்டோபர் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. தளபதி அவர்கள்.*

திரு. கோ. தளபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளுக்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுமார் 500 கோடி ரூபாய் அறிவித்திருக்கிறார்கள். பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மிக மெதுவாக நடைபெற்று வருகின்றன. குறிப்பாக மேகமடை, கோமதிபுரம் போன்ற பகுதிகளில் திட்டப் பணிகள் மெதுவாக நடைபெறுவதால் மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, இத்திட்டத்தினை விரைந்து முடித்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட அந்தப் பணி தொடங்கப்பட்டிருக்கிறது. எனவே, அதனை விரைந்து முடிக்கவும், மேலும் மதுரை மாநகருக்கு மட்டும் தற்போது சாலைகளைச் செப்பனிடுவதற்காக 39 கோடி ரூபாய் நிதியையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பு நிதியாக ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். இதில் எந்தெந்தச் சாலைகள் பழுதுபட்டிருக்கின்றனவோ, அவற்றை உடனடியாக அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதுபோல, பாதாள சாக்கடைத் திட்டத்தையும் விரைந்து முடிக்கலாம். அதேபோன்று மதுரையிலும், கோவையிலும் சாலைகளை அமைப்பதற்கு சிறப்பு நிதியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். எனவே, அப்பணியையும் மேற்கொள்ளலாம். அதோடு மதுரை மாநகருக்கு சிறப்புத் திட்டமாக பெரிய ஏரியைச் சீரமைப்பதற்காக கிட்டத்தட்ட 100 கோடி ரூபாயை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள் என்ற சிறப்பு செய்தியைச் சொல்லி, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி அவர்கள்.*

திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மானாமதுரை தொகுதி, இளையான்குடி பேரூராட்சி, திருப்புவனம் பேரூராட்சி, மானாமதுரை நகராட்சி ஆகியவற்றை உள்ளடக்கியது. 2 பேரூராட்சிகளிலும், ஒரு நகராட்சியிலும் கழிவுநீர் செல்வதற்கான பாதையோ அல்லது கழிவுநீரைச் சுத்திகரிக்கின்ற வசதியோ ஏதும் இல்லாமல், சுகாதாரமற்ற ஒரு சூழ்நிலை நிலவுகின்றது. இளையான்குடி பேரூராட்சி என்பது, சிறுபான்மையின மக்கள் அதிகம் வசிக்கின்ற பகுதி. இளையான்குடி எப்போதுமே முத்தமிழறிஞர் கலைஞர் அய்யா அவர்களுக்கும், மாண்புமிகு தளபதியார் அவர்களுக்கும் உறுதுணையாக இருக்கின்ற பகுதியாக உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், முன்னுரிமை அடிப்படையில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், என்ன வேண்டும் என்று கேளுங்கள்.

திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளையான்குடி மற்றும் திருப்புவனம் பேரூராட்சிகளிலும், மானாமதுரை நகராட்சியிலும், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்துத்தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எந்தெந்த இடங்களில் எல்லாம் மக்கள்தொகை அதிகமாக இருக்கிறதோ, அந்த இடங்களிலே முழுமையாக, எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் பாதாள சாக்கடைத் திட்டமும், குடிநீரும் வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிற கருத்தினைக் கருத்திலேகொள்வோம். அதனை உரிய முறைப்படி, விரைவாகச் செய்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2022 அக்டோபர் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள். சுருக்கமாகப் பேசுங்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் திருப்பெரும்புதூர் பேரூராட்சிக்கும், மாங்காடு நகராட்சிக்கும் பாதாள சாக்கடைத் திட்டம் அறிவிக்கப்பட்டது. கடந்த 10 ஆண்டுகளாக இத்திட்டம் இன்னும் நடைபெறாமல் இருக்கிறது. குன்றத்தூர் நகராட்சிக்கும் நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். பாதாள சாக்கடைத் திட்டப் பணி நடைபெறும்பொழுது, குடிதண்ணீர்க் குழாய் இணைப்புப் பணியையும் சேர்த்து செய்தால், அரசினுடைய பணம் மிச்சமாகும். இப்போது, பாதாள சாக்கடைத் திட்டப் பணி தனியாகவும், அதற்குப் பிறகு சாலைகளிலெல்லாம் பள்ளம் தோண்டி, குடிநீர்க் குழாய்கள் பதிக்கும் பணி தனியாகவும் நடைபெறுவதால், அரசினுடைய பணம் விரயமாகிறது. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதாள சாக்கடைத் திட்டத்தின்கீழ் செல்கின்ற குழாய் என்பது கழிவுநீர் செல்கின்ற குழாய். குடிநீர் குழாய் என்பது மக்கள் பயன்பாட்டிற்கு வருகிற குழாய். இரண்டு பணிகளையும் இணைத்து செய்கின்றபோது எங்காவது ஓரிடத்தில் தவறு ஏற்பட்டு விடுமானால், இரண்டு தண்ணீரும் ஒன்றாகக் கலக்கும். ஏற்கெனவே, (குறுக்கீடு) நான் சொல்கிறேன், பிறகு நீங்கள் கேள்வி கேளுங்கள். ஏற்கெனவே, அப்படி ஒரு திட்டத்தை அதிகாரிகள் மத்தியில் ஆய்வு செய்தபொழுது, இரண்டு குழாய்களையும் ஓர் இடத்தில் இணையாக கொண்டு செல்கிற திட்டம் இதுவரை தீட்டப்படவில்லை. ஓர் இடத்தில் இரண்டு குழாய்களையும் இணையாகக் கொண்டு செல்ல இயலாது. எங்கு தண்ணீர் கிடைக்கிறதோ, அந்த இடத்திலிருந்து கொண்டு வரக்கூடிய திட்டம் குடிநீர்த் திட்டம். எங்கு கழிவுநீர் உற்பத்தியாகிறதோ, அங்கிருந்து அதைக் கொண்டுபோய் சேர்ப்பது கழிவுநீர்க் குழாய் திட்டம். இரண்டு பணிகளையும் இணைத்துச் செய்வது என்பது ஏதுவாக இருக்காது என்று அதிகாரிகள் மத்தியில் பேசியிருக்கிறார்கள். இரண்டு பணிகளையும் ஒரே நேரத்தில்*

செய்தால் செலவு குறைவாகத்தான் வரும். அப்படித்தான் பேசப்பட்டது. ஆனால், அதில் இருக்கின்ற சங்கடங்கள். Water source இருக்கிற இடத்திலிருந்துதான் தண்ணீர் எடுத்துக்கொண்டு வர முடியும். வீடுகளிலிருந்து கழிவுநீர் இலகுவாக வெளியில் வரும். எனவே, இரண்டு பணிகளையும் இணைத்துச் செய்வதற்கு சாத்தியமில்லை. எனவே, செலவு அதிகமானாலும், தனித்தனியாகச் செய்து தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா அவர்கள்.

திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் வணக்கம். தற்போது மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, மிகவும் வேகமாக, மிகவும் சீரிய முறையில் சென்னை முழுவதும் நடைபெற்று வருகிறது. என்னுடைய வேளச்சேரி தொகுதியிலும் இப்பணி நடைபெற்று வருகிறது. ஆனால், சாதாரண மழை பெய்தால்கூட, கழிவுநீர்க் கால்வாய் நிரம்பி, சாலைகளில் தண்ணீர் வந்துவிடுகிறது. மழைநீர் வடிகாலை எப்படி அமைத்தீர்களோ, அதேபோல், கழிவுநீர்க் கால்வாயையும் மறு சீரமைப்பு செய்து, புதிதாக அமைத்துத் தர வேண்டும் என்பது என்னுடைய முதல் கேள்வி. அதேபோல. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு கேள்விதானே உண்டு.

திரு. JMH. அசன் மௌலானா: மற்றொரு சிறிய விஷயத்தையும் சொல்லிவிடுகிறேன். மழைநீர் வடிகால் அமைக்கும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கும் நேரத்தில் கழிவுநீர் செல்லும் குழாயை உடைத்து விடுகிறார்கள். அதன் பிறகு அதனைச் சீர் செய்யாமல், Corporation Staff இதனை Metro Water Office-லும் சொல்லாமல் இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர், நீங்கள் பொத்தாம்பொதுவாகச் சொல்ல வேண்டாம். குறிப்பிட்டு சொல்லி, எழுதிக் கொடுங்கள். அதற்கு நடவடிக்கை எடுப்பார்கள். மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள், முதல் கேள்விக்கு பதில் சொல்லிவிடுங்கள்.

2022 அக்டோபர் 18]

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது நல்ல கேள்விதான். தமிழ்நாட்டில், சென்னை மாநகரம் தோன்றி 334 ஆண்டுகளில் 1,000 கிலோ மீட்டர் நீளத்திற்குத்தான் மழைநீர் வடிகால்கள் அமைக்கப்பட்டன. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற ஓராண்டு காலத்திலே, 1,000 கிலோ மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால்களை இப்போது அமைத்துக்கொண்டிருக்கிறோம். பல இடங்களில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவ்வாறு கால்வாய்களை அமைக்கின்றபொழுது, Metro Water line செல்கிறது. கழிவுநீர்க் குழாய்கள் போடுகின்றபோது, சில இடங்களில் உடைந்துவிடுகின்றன. சில இடங்களிலே மின்சார wires அறுந்துவிடுகின்றன. சில இடங்களிலே மரங்கள் தடுத்துவிடுகின்றன. இதையெல்லாம் தாண்டிதான் மழைநீர் வடிகால்களை அமைத்துக்கொண்டிருக்கிறோம். சென்னையிலே, மழைநீர் வடிகால்கள் மட்டுமல்ல, கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டு 50, 60 ஆண்டுக் காலங்கள் ஆகிவிட்டன. சில இடங்களிலே பழுதடைந்திருக்கின்றன. அவற்றை மாற்றுவதற்குரிய விரிவான திட்ட அறிக்கையைத் தயாரித்துக்கொண்டிருக்கிறோம். விரைவிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவினைப் பெற்று நிறைவேற்றுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கொஞ்சம் காலதாமதம் ஆகும். உடனடியாகச் செய்ய இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

3—

நியாய விலைக் கடை

***11833—திரு. க. கார்த்திகேயன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ரிஷிவந்தியம் ஒன்றியம், மையனூர் ஊராட்சி, ஆதி திராவிடர் பகுதிக்கு புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, மையனூர் ஊராட்சி, ஏந்தல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் மையனூர் நியாய விலைக் கடையானது 989 குடும்ப அட்டைகளுடன் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

முற்பகல் 11–10

இதில் மையனூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க ஆதி திராவிடர் பகுதியைச் சார்ந்த 155 குடும்ப அட்டைகள் அடங்கும். மேற்படி மையனூர் தாய் நியாய விலைக் கடைக்கும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோருகின்ற ஆதி திராவிடர் காலனிப் பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் ஒரு கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால், அந்தக் கிராமப் பகுதியில் தாய் கடைக்கும் புதிய பகுதி நேர கடை கோரும் பகுதிக்கும் இடையே 1.5 கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும் என்னும் அரசின் நிபந்தனை பூர்த்தியாகவில்லை. எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, 150 அட்டைகள் உடைய ஆதி திராவிடர் காலனிப் பகுதிக்கு பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.*

திரு. தா. உதயசூரியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் பகுதியில் பகுதி நேர நியாய விலைக் கடைமூலம் உணவுப் பொருட்கள் வழங்குவதற்கு குறிப்பிட்ட தூரமும், குறிப்பிட்ட எண்ணிக்கையில் குடும்ப அட்டைகளும் இருக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். உண்மைதான். ஆனால், நம்முடைய 'திராவிட மாடல்' ஆட்சியில் ஆதி திராவிடர் பகுதி மக்களுக்கு, பகுதி நேர நியாய விலைக் கடை தேவைப்படுகின்ற இடங்களில் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்*

2022 அக்டோபர் 18]

சுட்டிக்காட்டியதைப்போல, அந்த மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் அறிவுறுத்தலின்படி, தேவைப்படுகின்ற இடத்தில், கட்டாயம் நியாய விலைக் கடை வேண்டுமென்கிறபட்சத்தில், நிச்சயமாக துறை ஆய்வு செய்து, அதற்குரிய நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தளி சட்டமன்றத் தொகுதி, வேவுநத்தம் ஊராட்சி, காடலகஜேந்திர மலைக் கிராமத்தில், 150 குடும்ப அட்டைகள் உள்ளன. அந்த மலைக் கிராம மக்கள் ரேஷன் பொருட்களைப் பெற வேண்டுமென்றால், 3 கிலோ மீட்டர் தூரம் அடர்ந்த வனப் பகுதியில் யானைகள் மற்றும் வன விலங்குகள் உள்ள பகுதியில் நடந்து சென்று பெற வேண்டியிருக்கிறது. சில சமயங்களில், யானைகள் தாக்கி, உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. ஆகவே, மலைப் பகுதி என்பதால், அந்தப் பகுதியில் புதியதாக ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கிராமத்தில் 150 குடும்ப அட்டைகள் இருப்பதாக சுட்டிக்காட்டியிருக்கிறார். 100 அட்டைகள் இருந்தாலே போதுமானது. மிகத் தொலைவில் உள்ள மலைப் பகுதிகளில் 100 குடும்ப அட்டைகளும், கடையைத் திறப்பதற்கு வேண்டிய கட்டடமும் அங்கே இருந்தால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை சபாநாயகர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில்*

நடமாடும் நியாய விலைக் கடைகளை வேன் மூலமாக பல குக்கிராமங்களுக்கு அனுப்பினார்கள். ஆனால், அவை இன்றைக்கு சரிவர செயல்படவில்லை. ஆகவே, அந்தக் கிராமங்களிலெல்லாம் தனியாக பகுதி நேர கடைகள் அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ச்சியாக 57 மலைப் பகுதிகள் இருக்கின்றன. ஏறத்தாழ அந்தப் பகுதிகளில் 300-க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. அவர்களுக்குக் கடை எங்கே தேவைப்படுகின்றதோ, அங்கே கட்டடம் இருக்கின்ற இடங்களில் பகுதி நேர கடைகள் அமைக்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆட்சிப் பொறுப்புக்கு வந்த ஒரே ஆண்டில், மாண்புமிகு தளபதியார் அவர்களின் உத்தரவின்பேரில் கிட்டத்தட்ட 324 பகுதி நேர நியாய விலைக் கடைகளும், 109 முழுநேர நியாய விலைக் கடைகளும் திறக்கப்பட்டுள்ளன. ஆக, 420 கடைகளுக்கு மேல் இப்பொழுது திறக்கப்பட்டிருப்பது, இதுதான் முதல்முறை. அந்த அளவிற்கு நியாய விலைக் கடைகள் நமக்கு எங்கெங்கு தேவைப்படுகின்றனவோ, அதேபோல, கட்டடம் கட்டுவதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை நாம் துரிதமாக மேற்கொண்டிருக்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி அவர்கள்.*

டாக்டர் சி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி வட்டம், சிவகிரி பேரூராட்சிக்குட்பட்ட மாரப்பம்பாளையத்திலுள்ள பொதுமக்கள் அனைவரும் சேர்ந்து, பொது இடத்தில் புதியதாக நியாய விலைக் கடை அமைப்பதற்காகக் கட்டடம் கட்டியுள்ளார்கள். இந்த ஊரில் சுமார் 850 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். எனவே, இந்தக் கட்டடத்திற்கு உரிமை சான்று, பட்டா, கதவு எண் மற்றும் மின் இணைப்பு ஆகியவற்றைப் பெற நீண்ட காலமாக முயற்சித்து வருகிறோம். எனவே, அந்தக் கட்டடத்தில் நியாய விலைக் கடை அமையத் தேவையான நடவடிக்கைகளை விரைந்து செய்ய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். இதுகுறித்து ஏற்கெனவே

2022 அக்டோபர் 18]

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் நிறைய தடவைகள் பேசிவிட்டோம். ஒன்றும் நடக்கவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு பதில் சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் இதுகுறித்து ஒரு மனுவாக எழுதிக் கொடுத்துவிடுங்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

டாக்டர் சி. சரஸ்வதி: *மனுவாக எழுதிக் கொடுத்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை நான் உடனே தொடர்புகொண்டு, நம்முடைய இணைப் பதிவாளர் அவர்களையும் அனுப்பி, அங்கு என்ன பிரச்சினை இருக்கிறது என்பதை முழுமையாக ஆய்வு செய்து, மொடக்குறிச்சி தொகுதியில் கடையைத் திறக்க கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.*

(வினா வரிசை எண் 4 எடுத்துக்கொள்ளப்பெறவில்லை.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

5—

புதிய வருவாய் வட்டம்

***1552—திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், திருமருகல் ஒன்றியத்தை புதிய வருவாய் வட்டமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் திருமருகல் ஒன்றியத்தை புதிய வருவாய் வட்டமாக உருவாக்குவது தொடர்பாக, அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ன்படி, நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களில், கிராம எண்ணிக்கையைத் தவிர, மற்ற அளவுகோல்கள் பூர்த்தியாகாததால், திருமருகல் புதிய வருவாய் வட்டம் உருவாக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமருகல் ஊராட்சி ஒன்றியத்தை, தனி வருவாய் வட்டமாக அறிவிக்க வேண்டுமென்பது, அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாகும். கடந்த சட்டமன்றத் தேர்தலின்போது, திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிட்டிருக்கிற நாகப்பட்டினத்திற்கான தேர்தல் அறிக்கையில் பிரதானமாக சொல்லப்பட்டிருக்கிற வாக்குறுதிகளில் இதுவும் ஒன்றாகும்.

இப்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற ஒரு புரட்சிகரத் திட்டமான, ‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’ என்ற திட்டத்தின்கீழ் நிறைவேற்றுவதற்காக நாங்கள் பத்து கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறோம். அவற்றில் இரண்டாவது கோரிக்கையாக இதைத்தான் கொடுத்திருக்கிறோம். எனவே, அதனை விரைந்து நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

2022 அக்டோபர் 18]

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்ற திட்டத்தின்கீழ் சமர்ப்பித்த கோரிக்கையின்படி, திருமருகல் ஒன்றியத்தைத் தனி வட்டமாக உருவாக்க வேண்டுமென்ற முன்மொழிவை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அனுப்பியிருக்கிறார். அது தொடர்பான கோப்பும் என்னிடம் வந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்துகொண்டு, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.*

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: *மிக்க நன்றி. விரைந்து அதனை நிறைவேற்ற வேண்டும். ஏனென்றால், அது விவசாயப் பெருங்குடி மக்கள், தொழிலாளர்கள் நிறைந்திருக்கிற பகுதியாகும். மேலும், கிராமங்கள் நிறைந்த பகுதியாகும். நாகப்பட்டினம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அடிக்கடி பேரிடரால் பாதிக்கப்படுகின்ற ஒரு மாவட்டமாக இருக்கிறது. எனவே, மக்கள் எளிதில் அணுகத்தக்க வகையில் அரசு அமைப்புகள், நிர்வாக அமைப்புகள் இருக்க வேண்டும். அந்த வகையில் திருமருகல் ஒன்றியத்தை தனி வட்டமாக அறிவிக்க வேண்டும். வருவாய்த் துறை வகுத்துள்ள விதிகளின்படி, பரப்பளவு மட்டும்தான் பிரச்சினையாக இருக்கின்றது. மக்கட்தொகையும் ஏறத்தாழ ஒரு இலட்சத்தை எட்டியிருக்கிறது. எனவே, திருமருகல் ஒன்றியத்தைத் தனி வட்டமாக அறிவிக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையும் வந்திருக்கிறது. அதன்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்ற திட்டத்தின்கீழ் இது வருவதால், இந்த ஆண்டே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, நிச்சயமாக உறுப்பினருடைய கோரிக்கையை நிறைவேற்ற தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திற்குட்பட்ட பெண்ணாகரம் வட்டம் என்பது பரந்த நிலப்பரப்பையும், அதிகமான மக்கட்தொகையையும் கொண்ட பரந்து விரிந்த பகுதியாகும். அந்த வட்டத்தினுடைய செயல்பாட்டுக்காகவும், ஏரியூர், காடு, மலைகள், மேடுகள் நிறைந்த பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலும், ஏரியூர் ஒன்றியம் தனியாகச் செயல்படுவதாலும், புதிய வருவாய் வட்டம் அறிவிக்க வேண்டுமென்று கடந்த ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அறிவிப்பைச் செய்தார்கள். இன்றுவரை அது நிறைவேறவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடப்பு ஆண்டிலாவது ஏரியூரை புதிய வருவாய் வட்டமாக அறிவிக்க ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. மணி அவர்களுடைய கோரிக்கை அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. இதுதொடர்பான கோப்பை நாங்கள் தயார் நிலையில் வைத்திருக்கிறோம். இந்த ஆண்டின் நிதிநிலைமைக்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முற்பகல் 11–20

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியத்தில் 44 ஊராட்சிகளும், 1 பேரூராட்சியும், திருவிடைமருதூர் ஒன்றியத்தில் 48 ஊராட்சிகளும் 5 பேரூராட்சிகளும், கும்பகோணம் ஒன்றியத்தில் 6 ஊராட்சிகளும் இணைந்து, கும்பகோணம், திருவிடைமருதூர் ஆகிய இரண்டு வட்டங்களாகச் செயல்பட்டு வருகின்றன. நாச்சியார்கோவிலைத்

2022 அக்டோபர் 18]

தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைத்துத் தருவதற்கான கருத்துரு ஏற்கெனவே அரசிடம் இருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவினைப் பெற்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாச்சியார்கோவிலைத் தனி வட்டமாக அறிவிக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இந்த ஆண்டு நிதிநிலைக்கேற்றாற்போல நாங்கள் அதன்மீது நடவடிக்கை எடுக்கிறோம். பொதுவாக, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் 37 இடங்களில் தாலுகா அலுவலகம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதேபோன்று, 11 இடங்களில் RDO அலுவலகம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இவை அரசின் பரிசீலனையில் இருக்கின்றன. நிதிநிலைக்கேற்றாற்போல மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, எது, எது முக்கியம் என்று நினைக்கிறோமோ, எது, எது தேவை என்ற வரிசையில், நிச்சயமாக அவையெல்லாம் பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.R.R. ரகுராமன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

6—

ஷைலோக்களைப் புதுப்பித்தல்

***58805—திரு. A.R.R. ரகுராமன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் உள்ள கிரைண்டிங் மில் மற்றும் ஷைலோக்களைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆம். ஆலங்குளம் அரசு சிமெண்ட் ஆலையில் உள்ள கிரைண்டிங் மில் மற்றும் ஷைலோக்களைப் புதுப்பிக்க அரசு தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.R.R. ரகுராமன் அவர்கள்.*

திரு. A.R.R. ரகுராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளத்தில் ஷைலோக்களைப் புதுப்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்தமைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதை விரைவுபடுத்தும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆலங்குளம் சிமெண்ட் ஆலையை நவீனப்படுத்துவதற்காக ஏறத்தாழ 40 கோடி ரூபாய் செலவில் 80 மெட்ரிக் டன் திறன் கொண்டிருக்கக்கூடிய புதிய அரவை மில்லுக்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். அதற்கான தொழில்நுட்ப அறிக்கை தற்போது தயார் செய்யப்பட்டு, இயக்குநர் குழுமத்தினுடைய ஒப்புதலுக்காக அளிக்கப்பட்டிருக்கிறது. மிக விரைவில் அந்தப் பணி மேற்கொள்ளப்பட்டு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் மகிழத்தக்க வகையில், அந்தப் பகுதியில் மக்கள் பயன்பெறத்தக்க அளவில், விரைவில் அந்த ஆலையை நவீனப்படுத்துவதற்கான பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.R.R. ரகுராமன் அவர்கள்.*

திரு. A.R.R. ரகுராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.*

(வினா வரிசை எண் 7 எடுத்துக்கொள்ளப்பெறவில்லை.)

2022 அக்டோபர் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

8—

குடியிருப்புகள்

***51687—டாக்டர் நா. எழிலன்:**

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆயிரம் விளக்கு தொகுதி, எண் 29, கிரீம்ஸ் சாலைப் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னை மாவட்டம், ஆயிரம் விளக்கு தொகுதி, எண் 29, கிரீம்ஸ் சாலைப் பகுதியில் 0.15 ஏக்கர் பரப்பில் மாநகராட்சி பொது வகைப்பாடு கொண்ட நிலத்தில் சுமார் 250 வீடுகளில் மக்கள் குடிசை கட்டி வாழ்ந்து வருகிறார்கள். இந்நிலத்தில் 'அனைவருக்கும் வீடு' திட்டத்தின்கீழ், அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட நிலத்தினை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியிடம் முதற்கட்டமாக முன்நுழைவு அனுமதி கேட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, கிரீம்ஸ் சாலைப் பகுதியில் அமைந்துள்ள நிலத்திற்கு முன்நுழைவு அனுமதி கிடைத்தவுடன், விதிமுறைகளைப் பின்பற்றி, நடைமுறை சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, குடியிருப்புகள் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் அவர்கள்.

டாக்டர் நா. எழிலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் விளக்கு தொகுதி மக்கள் சார்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆயிரம் விளக்கு தொகுதி என்பது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வலம் வந்த தொகுதி. தமிழ்நாட்டிலேயே குடிசை மாற்று வாரியக் கட்டடங்கள் அதிகமாக இருக்கின்ற தொகுதி. ஆயிரம் விளக்கு தொகுதியில் கிட்டத்தட்ட 34 தொகுப்புகள் இங்கு உள்ளன. தீ விபத்து காரணமாக பலர் மாண்ட நேரத்தில், நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, எண் 29, கிரீம்ஸ் சாலையில் கிட்டத்தட்ட 400 குடும்பங்களுக்கு கல்நார் வீடுகள் கொடுத்து அவர்களின் உயிர்களைப் பாதுகாத்தவர். அதேபோன்று, கார்ப்பரேஷன் காலனியில் 150 குடும்பங்களுக்கும், சுதந்திரா நகர் extension-ல் இருக்கும் 400 குடும்பங்களுக்கும், அதேபோன்று வெவ்வேறு அரசாங்கத் துறைகளின் நிலங்களுக்கு, No Objection Certificate அல்லது Enter upon permission போன்ற அனுமதிகளை விரைவுபடுத்துவதற்கான நிலையினை விளக்கி, இந்தப் பகுதிகளிலும் புதியதாக குடியிருப்புகள் கட்டப்படுமா என்ற கேள்வியைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாவட்டம், ஆயிரம் விளக்கு தொகுதி, சுதந்திரா நகர் விரிவாக்கப் பகுதியில் அரசுக்குச் சொந்தமான, காவல் துறையின் பயன்பாட்டில் உள்ள நிலத்தில் சுமார் 200 குடிசை வீடுகள் தனித்தனியாக அமைத்து, அங்கு மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அதேபோல, கார்ப்பரேஷன் குடியிருப்பு திட்டப் பகுதியிலும்கூட, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் பயன்பாட்டில் உள்ள நிலத்தில், சுமார் 120 குடிசை வீடுகள் தனித்தனியாக அமைத்து மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த இரு குடிசைப் பகுதிகளுக்கும், சென்னை மாவட்ட ஆட்சியரிடம் முதற்கட்டமாக முன்நுழைவு அனுமதி கேட்டு 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. எனவே,

2022 அக்டோபர் 18]

முன்நுழைவு அனுமதி கிடைத்தவுடன், விதிமுறைகளைப் பின்பற்றி, நடைமுறை சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து குடியிருப்புகளைக் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் அவர்கள்.*

டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், குடியிருப்புப் பகுதிகளில் சமூக நீதியை நிலைநாட்டியவர். 1976 ஆம் ஆண்டு அவருடைய ஆட்சிக் காலத்தில் புஷ்பா நகர் திட்டப் பகுதியில், கிட்டத்தட்ட 1,024 குடியிருப்புகள் கட்டப்பட்டு, 46 ஆண்டுகள் கடந்துவிட்டன. அந்த வீடுகள் அனைத்தையும் சீரமைப்பு செய்கின்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றோம். இருப்பினும், முழுமையாக புஷ்பா நகர் தொகுப்பில், புதிதாக குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்படுமா என்ற கேள்வியைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புஷ்பா நகர் திட்டப் பகுதியில், 1976 ஆம் ஆண்டு 30 தொகுப்புகளுடன் 1,024 குடியிருப்புகள் கட்டப்பட்டன. நீண்ட நாள் பயன்பாட்டினாலும், தட்பவெப்ப சூழ்நிலையின் காரணமாகவும் சிதிலமடைந்த இக்குடியிருப்புகளை மறுகட்டுமானம் செய்வதற்கு வல்லுநர் குழுவும் பரிந்துரை செய்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அவருடைய ஒப்புதலைப் பெற்று, வருகின்ற ஆண்டுகளில் அந்தத் திட்டப் பகுதியில் உள்ள மக்களுக்கு புதிய வீடுகள் கட்டித்தரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. அண்ணாதுரை, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

9—

துணை மின்நிலையம்

***3101—திரு. கா. அண்ணாதுரை:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டினம் பேரூராட்சியில் 110 K.V. துணை மின்நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டினம் பேரூராட்சியில் 110 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின்நிலையம் அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டு, 26-7-2022 அன்று டெண்டர் முடிக்கப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் பணிகள் முடிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரங்களால் பொதுப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு தயாராக இருக்கின்றது. நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. அண்ணாதுரை அவர்கள்.*

திரு. கா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவானது கடந்த ஓராண்டிற்கு முன்பாக எழுப்பப்பட்டது. அன்றைக்கு அதிராம்பட்டினம் பேரூராட்சியாக இருந்த சூழ்நிலை மாறி, நம்முடைய கழக ஆட்சியில் இன்றைக்கு நகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. சிறுபான்மையின மக்கள் அதிகம் வாழ்கின்ற அந்தப் பகுதியில், குறைந்த மின்னழுத்தம் காரணமாக, கடந்த 10 ஆண்டுக்கால ஆட்சியில் எழுப்பப்பட்ட அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படாமலே இருந்தது. 'தட்டுங்கள்*

2022 அக்டோபர் 18]

திறக்கப்படும், கேளுங்கள் தரப்படும்' என்பதற்கேற்ப, நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்களின் சார்பாக, இதயமார்ந்த நன்றியை தங்கள் மூலமாக நம்முடைய அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

(வினா வரிசை எண் 10 எடுத்துக்கொள்ளப்பெறவில்லை.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

11—

சார்–பதிவாளர் அலுவலகம்

***10189—திரு. S. சதாசிவம்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, மேட்டூர் சார்–பதிவாளர் அலுவலகத்தை பொதுப் பணித் துறைக் கட்டடத்திற்கு மாற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சேலம் மேற்கு பதிவு மாவட்டத்திலுள்ள மேட்டூர் சார்–பதிவாளர் அலுவலகம் 1980 ஆம் ஆண்டு முதல் தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேட்டூர் சார்–பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்காக பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான 607 சதுர மீட்டர் நிலத்தை நிலமாற்றம் செய்வதற்கு, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரால் நில நிர்வாக ஆணையருக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. நிலமாற்றம் செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மேட்டூர் சார்–பதிவாளர் அலுவலகத்திற்கு விரைவில் புதிய கட்டடம் கட்டப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், மேட்டூரில் 1981 ஆம் ஆண்டு வாடகைக் கட்டடத்தில் பத்திரப் பதிவு அலுவலகம் செயல்பட்டு வந்தது. இதுவரையில் அந்த அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேட்டூரில் PWD-க்குச் சொந்தமான இடம் ஒதுக்கப்பட்டு, எழிலகத்தில் உள்ள நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் கோப்பு நிலுவையில் இருக்கின்றது. அந்த நிலத்தை நிலமாற்றம் செய்வதற்கான அனுமதியைப் பெற்று, நம்முடைய மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் புதிய கட்டடம் கட்ட வேண்டும். ஏனென்றால், மேட்டூரில் 100-க்கும் மேற்பட்ட. . .

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வரலாறு வேண்டாம். புதிய கட்டடம் அங்கு கட்ட வேண்டும். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) இன்னொரு கேள்வி இருக்கிறது.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுமதி வந்தவுடன் கட்டடம் கட்டித் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள். இன்னொரு கேள்வி சுருக்கமாகக் கேளுங்கள் அல்லது நன்றி சொல்லுங்கள்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமான கேள்வி. இந்தியாவிலேயே நீங்கள் நடுநிலையோடு செயல்படுகிறீர்கள். நல்ல பேரவைத் தலைவராக இருக்கிறீர்கள். எனக்குப் பேசுவதற்கு 2 நிமிடங்கள் தாருங்கள். இது முக்கியமான துறை குறித்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களைப் பேசவிட்டு, எனக்கு அந்த certificate வேண்டாம். கேள்வியைக் கேளுங்கள்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அதிகமான வருமானத்தை ஈட்டக்கூடிய துறை. நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல அமைச்சர்.

2022 அக்டோபர் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2010 ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சியின்போது,* plot *போடும்போது* Panchayat Board approval *இருந்தால் போதும் என்று. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் தம்பி சதாசிவம், கட்டடம் கட்ட வேண்டுமென்று கேட்டீர்கள். கட்டித் தருகிறேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார். அதற்கு நீங்கள் நன்றி சொல்ல வேண்டும். அதற்கு* related *ஆக ஒரு கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதி, கொளத்தூரில் ஒரு இலட்சம் பேர் வசித்து வருகிறார்கள். அங்கிருந்து மேட்டூரில் உள்ள பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு வர வேண்டுமென்றால், 25 கி.மீ. தொலைவு பயணம் செய்ய வேண்டியுள்ளது. எனவே, கொளத்தூர் ஒன்றியத்திலும் புதிதாக பத்திரப் பதிவு அலுவலகம் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே, கோடிக்கணக்கில் இருக்கின்ற* plots, approval *செய்யப்படாமல் நிலுவையில் இருக்கின்றன. இதன்மூலம் செய்யப்படும் பத்திரப் பதிவுகளால் அரசுக்கு வருமானமும் வரும். பல கோடிக்கணக்கான துண்டு நிலங்கள் விற்க முடியாமல் இருக்கின்றன.* Directorate of Town and Country Planning approval *பெறப்பட வேண்டுமென்று 2018 ஆம் ஆண்டு ஆணையிடப்பட்டதால் கோடிக்கணக்கான துண்டு நிலங்கள் தமிழ்நாட்டில் விற்க முடியாத நிலையில் உள்ளன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்களது கேள்வி பத்திரப் பதிவு அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட வேண்டுமென்பது. மாண்புமிகு அமைச்சர் சரியென்று சொல்லிவிட்டார். எனவே, நன்றி சொல்லுங்கள்.*

திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம். எங்களுடைய தலைவர் பெண்ணாகரம் சட்டமன்ற உறுப்பினர், பாலக்கோட்டில் கட்டடம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்னும் அதைக் கட்டிக் கொடுக்காமல் இருக்கிறார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அதையெல்லாம் நகராட்சி நிர்வாகத் துறையில் கொடுங்கள் அல்லது உள்ளாட்சித் துறையில் கொடுங்கள். இதற்கு தனிக் கேள்வி கேளுங்கள்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வணிக வரித் துறைக்கு நல்ல மாண்புமிகு அமைச்சரைக் கொடுத்திருக்கிறார்கள். எங்களுக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றாகக் கேட்டுக்கொள்ளுங்கள். மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார். நீங்கள் real estate குறித்து பேசுகிறீர்கள். உட்காருங்கள். மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினரின் கேள்விக்கு பதில் இருந்தால் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கேள்வியை DTCP–ல் கேட்க வேண்டும். ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னது மாதிரி, மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத கேள்வி. அதை தனிக் கேள்வியாகப் போடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அதை தனிக் கேள்வியாகப் போடவும்.

வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

12—

பேருந்து நிறுத்தம்

***43331—திரு. ஜெ. கருணாநிதி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்பேட்டிலிருந்து அசோக் நகர் வழியாக 100 அடி சாலையில் செல்லும் பேருந்துகள் முதலாவது மற்றும் மூன்றாவது அவென்யூ சந்திப்பில் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

2022 அக்டோபர் 18]

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கோயம்பேட்டிலிருந்து 100 அடி சாலை வழியாக அசோக் நகர் வழியாகச் செல்கின்ற சாலை, போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி, அந்தப் பேருந்துகளை, அந்த இடங்களில் நிறுத்தி பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்ல இயலாத நிலையில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி அவர்கள்.*

திரு. ஜெ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்பேடு, அசோக் நகர் வழியாக 100 அடி சாலைப் பகுதியில் மக்கள்தொகை அதிகம் உள்ள காரணத்தினால், பேருந்துகள் எதிர்காலத்தில் அங்கு நின்று செல்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலித்து, நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்பேடு 100 அடி சாலை வழியாக அசோக் நகர் வழியாகச் செல்லும் பேருந்துகள் 3-வது அவென்யூ மற்றும் முதல் அவென்யூ சந்திப்பு வரை தொடர்ந்து 3 போக்குவரத்து சிக்னல்களைக் கடக்க வேண்டும். இந்த 3 சிக்னல்களைக் கடந்து பேருந்துகள் நிறுத்தப்படும்பொழுது, கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படக்கூடிய சூழ்நிலை உள்ளது. எனவே, அந்தப் பகுதியில் பேருந்துகளை நிறுத்தி, பயணிகளை ஏற்றி, இறக்குவது என்பது மிகவும் சிரமமான விஷயம். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அப்பகுதி மக்களுடைய கோரிக்கையை இங்கே வலியுறுத்தியிருக்கின்றார். எனவே, உரிய அதிகாரிகளோடு கலந்துபேசி, பரீட்சார்த்தமான முறையில் முயற்சி செய்து பார்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி அவர்கள்.*

திரு. ஜெ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் அப்பகுதியில், கே.கே. நகரிலிருந்து சாமியார் மடம் வழியாக வள்ளலார் நகர் வரை சென்றுகொண்டிருந்த 37D பேருந்து சேவை நிறுத்தப்பட்டிருக்கிறது. அதேபோன்று, mini bus. தி. நகர் பேருந்து நிலையத்திலிருந்து மேற்கு மாம்பலம், சாமியார் மடம், வடபழனி பஜனை கோயில் தெரு வழியாக கோயம்பேடு செல்வதற்கு மினி பேருந்துகளை இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 25E, 25B, 27C ஆகிய பேருந்துகளை சாமியார் மடம் பேருந்து நிறுத்தத்தில் நின்று செல்ல ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவற்றையெல்லாம் மனுவாக எழுதிக் கொடுங்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தேவையான அளவிற்கு ஓட்டுநர், நடத்துநர்களை பணி நியமனம் செய்யாத காரணத்தால், பல பேருந்து சேவைகளை நிறுத்திவிட்டார்கள். தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நம்முடைய துறையில் ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களை பணியமர்த்துவதற்கான அறிவுரையை வழங்கியிருக்கிறார்கள். எனவே, அத்தகைய சூழ்நிலை ஏற்படுகின்றபொழுது, அந்தப் பகுதிகளில் நிறுத்தப்பட்ட பேருந்து சேவைகள் மீண்டும் இயக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(வினா வரிசை எண்கள் 13 மற்றும் 14 எடுத்துக்கொள்ளப்பெறவில்லை.)

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன், மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

2022 அக்டோபர் 18]

15—

ESI மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***15486—திரு. G. அசோகன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி தொகுதி, சிவகாசி இரயில் நிலையம் அருகில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையைத் தரம் உயர்த்தி, தீக்காயம் மற்றும் உடலுறுப்பு சீரமைப்பு அறுவை சிகிச்சைப் பிரிவினை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வணங்கி மகிழ்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. அசோகன் அவர்கள் சிவகாசியில் அமைந்துள்ள E.S.I. *மருத்துவமனையைத் தரமுயர்த்த* வேண்டுமெனக் கேட்டுள்ளார்கள். *சிவகாசியில் அமைந்துள்ள 50* படுக்கைகள் கொண்ட E.S.I. *மருத்துவமனையை 100* படுக்கைகள் கொண்ட *மருத்துவமனையாகத் தரமுயர்த்த அரசாணை வழங்கப்பட்டுள்ளது.* சிவகாசி ESI *மருத்துவமனையில் 6* படுக்கைகள் கொண்ட *சிறப்பு தீக்காய சிகிச்சைப் பிரிவு ஒன்றும் செயல்பட்டு வருகிறது.* மேலும், plastic surgery போன்ற *அதிநவீன சிறப்பு சிகிச்சை* பெற வேண்டியவர்கள் *அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து* கொண்ட *மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* G. *அசோகன் அவர்கள்.*

திரு. G. அசோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் கேட்க வேண்டிய கேள்விகள்*

எல்லாவற்றுக்கும் பதில் சொல்லிவிட்டார்கள். இருந்தாலும், அதை விரைவில் செய்து கொடுக்க வேண்டும். ஏனென்றால், சிவகாசியில் பட்டாசு ஆலைகளும், தீப்பெட்டி தொழிற்சாலைகளும் நிறைய இருக்கின்றன. அது fire zone ஆக இருப்பதனால் plastic surgery and skin bank இருந்தால், தொழிலாளர்களை அந்தத் தீப்புண் காயத்திலிருந்து காப்பாற்றுவதற்கு உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்து, நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி இரயில் நிலையம் அருகில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையைத் தரம் உயர்த்தி, தீக்காயம் மற்றும் உடலுறுப்பு சீரமைப்பு அறுவை சிகிச்சை செய்யக்கூடிய வகையில், மருத்துவமனையைத் தரமுயர்த்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்தகைய சூழ்நிலைகளில், தொழிலாளர்கள் இதுபோன்ற பெரிய விபத்துகளால் பாதிக்கப்பட்டு, அந்த ரணங்களால் வலிகள் ஏற்பட்டு பாதிக்கப்படுகிறார்கள் என்பதை உணர்ந்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், தொழிலாளர்களுக்கு ஏற்படக்கூடிய அந்த வலிகள் தனக்கு ஏற்படுவதாகக் கருதியதால், உடனடியாக இங்கே இருக்கின்ற நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், தொழிலாளர் நலத் துறை அமைச்சராக இருக்கக்கூடிய நானும், சேர்ந்து அதுபோன்று இங்கே இருக்கக்கூடிய அரசுத் துறையைச் சார்ந்த பல்வேறு அதிகாரிகளையும் அழைத்து, இதுகுறித்த ஓர் ஆய்வுக் கூட்டத்தை நடத்தி, எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்துகள் நடைபெறாமல் இருப்பதற்குரிய வழிவகைகளைக் காண்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக, இதுபோன்ற 832 தொழிற்சாலைகளில் இதுவரை விபத்தே ஏற்படாமல் இருந்திருக்கிறது. எனவே, அவர்களையெல்லாம் அழைத்துப்பேசி, எதிர்காலத்தில் விபத்தில்லாத ஒரு சூழ்நிலையை நிச்சயமாக உருவாக்குவோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எத்தகைய மனநிலையில் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார் என்பதை

2022 அக்டோபர் 18]

நான் புரிந்துகொண்டேன். திருப்பூரிலே ரூ.95 கோடி மதிப்பீட்டில் உயர் தொழில்நுட்பம் கொண்ட E.S.I. *மருத்துவமனை விரைவிலே அமைக்கப்படவிருக்கிறது என்பதையும், ஸ்ரீபெரும்புதூரிலே 146 கோடி ரூபாய் மதிப்பீட்டில்* E.S.I. *மருத்துவமனை அமைக்கும் பணிகள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன என்பதையும், தூத்துக்குடியிலே 178 கோடி ரூபாய் மதிப்பீட்டில்* E.S.I. *மருத்துவமனை அமைப்பதற்கான பணிகள் நடைபெறுகின்றன என்பதையும், திண்டுக்கல் மாவட்டத்தில் 100 படுக்கைகள் கொண்ட* E.S.I. *மருத்துவமனை அமைப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும், ராணிப்பேட்டை மற்றும் வாணியம்பாடியில் 100 படுக்கைகள் கொண்ட* E.S.I. *மருத்துவமனை அமையவிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* G. *அசோகன் அவர்கள். உங்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லா பதிலையும் சொல்லிவிட்டார்கள். அழகாக நன்றி சொல்லிவிட்டு உட்காருங்கள்.*

திரு. G. அசோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசியில் கிட்டத்தட்ட 4.75 இலட்சம்* E.S.I. cardholders *இருக்கிறார்கள். தீப்பெட்டி, பட்டாசு மற்றும் அச்சுத் தொழில்கள் இருக்கின்றன. ஏற்கெனவே, சென்னையிலும், கோயம்புத்தூரிலும் ஒரு* Medical College E.S.I.*-மூலம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதேபோன்று, சிவகாசியிலும் ஒரு* E.S.I. Medical College *நிறுவுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசியில் 1,050 தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன; 56,000 தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக் கொண்டு இவர்களுக்கெல்லாம் உதவி செய்கின்ற வகையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி, விரைவிலே சிவகாசியில் மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[*2022 அக்டோபர் 18*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* Lorry *தொழில்,* borewell *தொழில், ஜவுளித் தொழில் என்று தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி, திருச்செங்கோடு. தொழிலாளர்கள் நிறைய இருக்கிறார்கள்.* E.S.I. *மருத்துவமனை வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதற்கு நிரந்தரமாக ஒரு புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

முற்பகல் 11–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, விரைவில் அரசு சார்பிலே* E.S.I. *மருத்துவமனைக்குக் கட்டடம் கட்டுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 6 முதல் 10 வரை)@

(இ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் (பட்டியல்கள் 11 முதல் 16 வரை)@@

[**குறிப்பு**: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

@ *137 முதல் 557 வரையிலான பக்கங்களில் இணைப்பு* I *ஆக அச்சிடப்பட்டுள்ளது*

@@ *558 முதல் 968 வரையிலான பக்கங்களில் இணைப்பு* II *ஆக அச்சிடப்பட்டுள்ளது.*

3. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) ஒரு நிமிடம் உட்காருங்கள். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)–ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் நான்காவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக (*Panel of Chairmen*) நியமிக்கிறேன்:*

1. *திரு. க. அன்பழகன்*
2. *திரு. நா. இராமகிருஷ்ணன்*
3. *திரு.* S.R. *இராஜா*
4. *திரு. தா. உதயசூரியன்*
5. *திரு. துரை. சந்திரசேகரன்*
6. *முனைவர்* T.R.B. *ராஜா*

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் முனைவர்* T.R.B. *ராஜா, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள்.*

முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2023 ஆம் ஆண்டுகளுக்கான மதிப்பீட்டுக் குழுவின் ஐந்தாவது அறிக்கையைக் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(ஆ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, பொது கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2023 ஆம் ஆண்டுகளுக்கான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்து ஒன்பதாவது முதல் ஐம்பத்து எட்டாவது வரையிலான 30 அறிக்கைகளை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. S.R. இராஜா, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. S.R. இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2023 ஆம் ஆண்டுகளுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் இருபதாவது முதல் முப்பத்து மூன்றாவது வரையிலான 14 அறிக்கைகளை பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஈ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2023 ஆம் ஆண்டுகளுக்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் மூன்றாவது மற்றும் நான்காவது அறிக்கைகளை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(உ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2023 ஆம் ஆண்டுகளுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் நான்காவது முதல் எட்டாவது வரையிலான 5 அறிக்கைகளை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

2022 அக்டோபர் 18]

(ஊ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், அரசு தலைமைக் கொறடா, மனுக்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, 2021–2023 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மனுக்கள் குழுவின் ஐந்தாவது முதல் பன்னிரெண்டாவது வரையிலான 8 அறிக்கைகளை மனுக்கள் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(ஆ) தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(இ) தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

2022 அக்டோபர் 18]

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

முற்பகல் 11–45

(ஈ) தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(உ) தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

2022 அக்டோபர் 18]

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(ஊ) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

6. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2022–2023, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2022–2023 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை பேரவைக்கு அளித்தல். மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2022–2023 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை@ இம்மாமன்றத்தின் முன்வைக்க விழைகிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக்கூறும் விரிவான ஓர் அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத்துணை மதிப்பீடுகள் மொத்தம் 3,795.72 கோடி ரூபாய் நிதியை ஒதுக்குவதற்கு வழிவகை செய்கின்றன.*

2022–2023 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்பட்ட பிறகு, 'புதுப் பணிகள்' மற்றும் 'புது துணைப் பணிகள்' குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட இனங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள தொகையினை அந்நிதிக்கு ஈடு செய்வதும் இத்துணை மானியக் கோரிக்கையின் நோக்கமாகும்.

போக்குவரத்துத் துறையில் சொத்துகளை உருவாக்குவதற்காக மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு பங்கு மூலதன உதவியாக 500 கோடி ரூபாயை அரசு அனுமதிக்க உள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

நகர்ப்புரப் பகுதிகளில் சாலைகளை மேம்படுத்துவதற்கு தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்திற்கு, அதாவது, TUFIDCO, *மானியத்தின் முதல் தவணையாக 550 கோடி ரூபாயை அரசு அனுமதிக்க உத்தேசித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.*

@ *83 முதல் 87 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன.*

2022 அக்டோபர் 18] [முனைவர் பழனிவேல் தியாக ராஜன்]

சென்னை பெருநகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளில் வெள்ளத் தணிப்புப் பணிகளுக்காக பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் நகராட்சி நிருவாக இயக்குநரகம் ஆகியவற்றிற்கு மாநிலப் பேரிடர் தணிப்பு நிதியின்கீழ், அதாவது SDMF–ன்கீழ் 373.50 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் வெள்ளத்தால் அதிக பாதிப்புக்குள்ளான பகுதிகளில் தணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்குக் கூடுதலாக 134.22 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 40–நீர்வளத் துறை” என்பதன்கீழ் 1,000 ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. மீதத் தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறுநிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

முற்பகல் 11–50

கோவை, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 7 பாசனக் கட்டமைப்புகளைச் சீரமைக்க 104.13 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. துணை மதிப்பீடுகளில் 29.76 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. மீதத் தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறுநிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும். துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 40–நீர்வளத் துறை” என்பதன்கீழ் மொத்தமாக 336.38 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

சென்னை வெளிவட்டச்சாலைத்திட்டம் பகுதி–I திட்டத்திற்காக நிலம் கையகப்படுத்தப்பட்ட நில உரிமையாளர்களுக்கு இறுதி இழப்பீடு வழங்குவதற்குக் கூடுதலாக 227.16 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது மற்றும் இத்தொகை துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 21–நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை” என்பதன்கீழ் மொத்தமாக 369.74 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

2022–2023 ஆம் கல்வியாண்டில் 28 சிறப்புப் பள்ளிகளை நிறுவுவதற்கு 169.42 கோடி ரூபாய்க்கு இந்த அரசு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை” என்பதன்கீழ் 100.82 கோடி

ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. மீதத் தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறுநிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

கரும்பு விவசாயிகளுக்கு நியாயமான மற்றும் ஆதாய விலை நிலுவைத் தொகையை வழங்குவதற்காக, கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு வழிவகை முன்பணமாக 252.29 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், திருமழிசை அருகிலுள்ள குத்தம்பாக்கம் கிராமத்தில் புதிய புறநகர் பேருந்து நிலையத்தைக் கட்டுவதற்கு உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியிலிருந்து 168 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

அரசு தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு அனைத்துப் பள்ளி நாட்களிலும் காலை உணவு வழங்கும் முன்னோடித் திட்டமான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்கு 33.56 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 45–சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்காக 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைகளுக்கு 97.05 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 19–மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை" என்பதன்கீழ் 1,000 ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. மீதத் தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறுநிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2022–2023 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன். வணக்கம்.

2022-2023 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
1	*மாநில சட்டமன்றம்*	*3*	–	–
3	*நீதி நிருவாகம்*	*2,00,26*	–	–
4	*ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை*	*20*	*2*	–
5	*வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை*	*14,02,12*	–	*252,28,89*
6	*கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம், மீன் வளம் மற்றும் மீனவர் நலத் துறை)*	*14,50,30*	*2*	*1*
7	*மீன் வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால் வளம், மீன் வளம் மற்றும் மீனவர் நலத் துறை)*	*33,28,56*	*1*	–
8	*பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம், மீன் வளம் மற்றும் மீனவர் நலத் துறை)*	*15,00,00*	–	–
9	*பிற்படுத்தப்பட்டோர்,மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை*	*1,76,22*	*315,57,17*	–
10	*வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)*	*37,95,41*	–	–

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
11	முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	24,21	–	–
12	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	3	–	–
13	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	7	–	–
14	எரிசக்தித் துறை	1	–	–
15	சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)	1	–	40,00
16	நிதித் துறை	1,22,52	2,35,01	–
17	கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	5	–	–
18	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	54,11	–	–
19	மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை	2,94,92	19,05,89	–

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
20	உயர் கல்வித் துறை	9,16,07	3,00,00	–
21	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை	8	351,26,13	–
22	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	19,02,37	1	–
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	4	–	–
24	சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	5	–	–
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	168,00,05	1	–
27	தொழில் துறை	6	3,00,01	1
28	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	6,15,99	–	–
29	சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	7,39,09	49,41,16	–
30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	37,86	1	–

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
31	தகவல் தொழில்நுட்பவியல் துறை	7	–	–
32	தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை	3,85,98	6,00,01	–
33	சட்டத் துறை	40,86	–	–
34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	599,02,06	28,66,00	–
35	மனிதவள மேலாண்மைத் துறை	63,68	3,50,00	–
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	17,05	–	–
37	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	2,99,73	–	–
38	பொதுத் துறை	1,64,29	–	1,28,74
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	6	94,79,33	–
40	நீர்வளத் துறை	15	203,92,06	–
41	வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை	27	–	–
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	7	–	–
43	பள்ளிக் கல்வித் துறை	101,14,84	1	–
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	18,75,07	–	2

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
45	சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை	34,08,09	3	–
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	5,46,04	–	–
47	இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	3,00,02	5,00,00	–
48	போக்குவரத்துத் துறை	3	500,00,00	23,63
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	36,66,84	–	20,00
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	3	–	–
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	472,64,87	–	–
52	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	14	–	–
53	சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை	1	–	–
54	வனம் (சுற்றுச் சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)	1,64,40	12	29,38,75
பெருமொத்தம்		1,615,75,34	1,585,53,01	283,80,05

[2022 அக்டோபர் 18

7. அரசினர் தனித் தீர்மானம்

ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களில் இந்தி மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்பன உள்ளிட்ட அலுவல் மொழி தொடர்பான பாராளுமன்றக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக் கூடாது என ஒன்றிய அரசினை வலியுறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்" (மேசையைத் தட்டும் ஒலி) என்ற கொள்கைக்குச் சொந்தக்காரர்களாகிய நாம், அன்னைத் தமிழைக் காப்பதற்காக மட்டுமல்ல; ஆதிக்க மொழித் திணிப்புக்கு எதிராக என்றும் குரல் கொடுப்பவர்கள் என்ற அடிப்படையில், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் முன்மொழிவதற்கு முன்பாக ஒரு முன்னுரையை வழங்க விரும்புகிறேன்.*

தமிழ் காக்க சிறை சென்று மரணம் அடைந்த நடராசன்–தாளமுத்து தொடங்கி, தீக்குளித்த கீழப்பழுவூர் சின்னச்சாமி, துப்பாக்கிக் குண்டுக்குப் பலியான சிதம்பரம் ராசேந்திரன் வரையிலான தியாகிகளை இந்த நேரத்தில் நினைவுகூர்வது பொருத்தமாக இருக்கும் என நான் நினைக்கிறேன்.

மொழி என்பது, நமது உயிராய், உணர்வாய், விழியாய், நம் அனைவரின் எதிர்காலமாய் இருக்கிறது. அத்தகைய நம் தாய் மொழியை வளர்க்கவும், பிறமொழி ஆதிக்கத்தில் இருந்து காக்கவுமே திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றியது. தோன்றிய காலம் முதல், இன்றுவரை தமிழ் மொழிக்கான ஒரு தனிப்பெரும் பாதுகாப்பு இயக்கமாகவே செயல்பட்டு வருகிறது.

முற்பகல் 11–55

1938 ஆம் ஆண்டு முதல் இந்தி மொழித் திணிப்பு தொடர்ந்து கொண்டே இருக்கிறது. நாமும் எதிர்த்துக் கொண்டே இருக்கிறோம். ஆதிக்கச் சக்திகளும் விடுவதாக இல்லை; நாமும் விடுவதாக இல்லை. இது வெறும் மொழிப் போராட்டம் மட்டுமல்ல; தமிழினத்தை, தமிழர் பண்பாட்டைக் காக்கும் போராட்டமாக

2022 அக்டோபர் 18] [திரு. மு.க. ஸ்டாலின்]

நாம் தொடர்ந்து கொண்டு இருக்கிறோம்; தொடரவே செய்வோம் என்று இந்தப் பேரவையின் வாயிலாகத் தமிழ்நாட்டு மக்களுக்கு நான் உறுதி அளிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்திய ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க. அரசானது, இந்தி மொழியைத் திணிப்பதை தனது வழக்கமாகவே வைத்துள்ளது. ஆட்சி நிர்வாகத்தில் இந்தியைத் திணிப்பது தொடங்கி, கல்வி மூலமாகத் திணிப்பது வரை, தாங்கள் ஆட்சிக்கு வந்ததன் நோக்கமே இந்தியைத் திணிப்பதுதான் என்று நினைக்கிறார்கள்.

"ஒரே நாடு-ஒரே மதம்-ஒரே தேர்தல்-ஒரே தேர்வு-ஒரே உணர்வு-ஒரே பண்பாடு" என்ற வரிசையில் ஒரே மொழியை வைத்து, மற்ற தேசிய இன மக்களின் மொழிகளை அழிக்கப் பார்க்கிறார்கள். இந்தியா என்பது, பன்முகத் தன்மை கொண்ட நாடு. பல்வேறு இனங்கள், மொழிகள், மதங்கள், பண்பாடுகள் கொண்ட மக்கள் வாழும் நாடு இந்தியா. வேற்றுமையிலும் ஒற்றுமை கண்டு, சகோதரத்துவத்துடன் வாழ்ந்து வருகிறோம். விடுதலை பெற்ற இந்தியா, ஓராண்டுகூட ஒற்றுமையாக இருக்காது என்று வெளிநாட்டுப் பத்திரிகைகள் எழுதிய நிலையில், நமது பன்முகத் தன்மையை காப்பதன் மூலமாக இந்தியா எழுபத்தைந்து ஆண்டுகளாகக் காப்பாற்றப்பட்டு வருகிறது.

பல்வேறு மொழியினர் வாழும் நாடு இது. ஆனாலும் மொழிவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்பட்டதால், அனைத்து மொழியினரும் மனநிறைவோடு வாழ்ந்து வருகிறார்கள். பல்வேறு மத நம்பிக்கையாளர்கள் இருந்தாலும், இந்தியா மதச்சார்பற்ற நாடாகவே அரசியல் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பல்வேறு மொழி பேசுபவர்களின் நாடாக இருந்தாலும், ஒரு மொழியின் ஆதிக்கம் இருக்காது என்பதை இந்தியாவை ஆட்சி செய்த பிரதமர்கள் உறுதிப்படுத்தி வந்திருக்கிறார்கள். 'இந்தி பேசாத மக்கள்மீது இந்தி மொழி திணிக்கப்படாது. அவர்கள் விரும்பும்வரை, ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்கும்' என்று பிரதமர் நேரு அவர்கள் அளித்த உறுதிமொழிதான் இன்றுவரை இந்தி பேசாத பெரும்பான்மை மக்களைக் காக்கும் அரணாக இருக்கிறது.

அனைத்து மாநிலங்களையும் உள்ளடக்கியதாக ஐந்தாண்டுத் திட்டங்களும், பொதுத் துறை நிறுவனங்களும் அமைக்கப்பட்டன. இப்படி நடந்ததால்தான், எல்லையால் மட்டுமல்ல;

எண்ணங்களாலும் ஒற்றுமை கொண்ட நாடாக இந்திய நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்குக் குந்தகம் ஏற்படுத்தும் வகையிலான செயல்கள் அண்மைக் காலமாக நடந்து வருகின்றன. இதில் மிக மிக முக்கியமானது, இந்தி மொழித் திணிப்பு. இந்தி மொழித் திணிப்பை பட்டவர்த்தனமாக ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்கிறது. இந்தி மொழி தினம் கொண்டாடும் ஒன்றிய அரசு, மற்ற மாநில மொழிகளின் தினம் கொண்டாடுவது இல்லை. இந்தி மொழிக்குத் தரப்படும் முக்கியத்துவம் என்பது, மற்ற மொழிகளைப் புறக்கணிப்பதாக மட்டுமில்லை; அழிப்பதாகவும் அமைந்திருக்கிறது.

இந்தியை ஆட்சி மொழியாக, அலுவல் மொழியாக மட்டுமல்ல; அதிகாரம் செலுத்தும் மொழியாகவும் பா.ஜ.க. அரசு உயர்த்திக் கொண்டு இருக்கிறது. மேலாதிக்கம் செலுத்தும் மொழியாக அதனை மாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். இந்தியும், ஆங்கிலமும்தான் அலுவல் மொழியாக இத்தனை காலம் இருந்துவரும் நிலையில், ஆங்கிலத்தை மொத்தமாக அகற்றப் பார்க்கிறது பா.ஜ.க. அரசு.

இந்த வரிசையில் கடந்த 13 ஆம் நாளன்று, ஆங்கில ஊடகங்களில் சில செய்திகள் வெளியாகி உள்ளன. அவை நமக்குப் பெரும் கவலை அளிப்பதாக உள்ளன. மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட அலுவல் மொழிக்கான நாடாளுமன்றக் குழுவின் அறிக்கையானது, மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு இருப்பதாக அச்செய்தி கூறுகிறது.

நாட்டில் உள்ள இந்தி பேசும் மாநிலங்களில், இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் (ஐ.ஐ.டி.), மத்திய பல்கலைக்கழகங்களில், கேந்திரிய வித்யாலயா கல்வி நிறுவனங்களில் பயிற்று மொழியாக இந்தி இருக்க வேண்டும் என்றும், போட்டித் தேர்வுகளில் கட்டாயம் ஆங்கில மொழி வினாத்தாள் நிறுத்தப்பட வேண்டும் என்றும், இந்தியில் பணிபுரியாத அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் எச்சரிக்கப்பட வேண்டும் என்றும், ஒன்றிய அரசின் பணியாளர் தேர்வில் தேர்வாளர்களின் இந்தி மொழி அறிவை உறுதி செய்ய வேண்டும் என்றும், ஒன்றிய அரசின் அலுவலகங்கள், அமைச்சகங்கள், கடிதங்கள் போன்றவை இந்தி மொழியில் இருக்க வேண்டும் என்றும் பரிந்துரை செய்துள்ளார்கள் என்று செய்திகள் மூலமாக தெரிய வருகிறது. முழுக்க முழுக்க இந்தியின் ஆதிக்கத்தை வலுப்படுத்தும் அறிக்கையாக இது அமைந்துள்ளது.

2022 அக்டோபர் 18] [திரு. மு.க. ஸ்டாலின்]

நண்பகல் 12-00

இந்தி பேசும் மாநிலங்களில் இந்தியை வலுப்படுத்தும் போர்வையில் இந்தியா முழுவதும் இந்தியை வலுப்படுத்தவே துடிக்கிறார்கள். கேந்திரிய வித்யாலயா பள்ளி முதல் ஐ.ஐ.டி. வரை இந்தி மட்டும்தான் என்றால், மற்ற மொழி மக்களுக்கும் இந்தக் கல்வி நிறுவனங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று தடுக்க நினைக்கிறார்கள். ஆங்கிலத்தை முற்றிலுமாக தடுப்பதன் மூலமாக, ஆங்கில அறிவையே முற்றிலுமாகத் தடுக்கிறார்கள். மாநில மொழி என்று ஒப்புக்காகச் சொல்கிறார்களே தவிர, முழுக்க முழுக்க இந்திக்காகவே துடிக்கிறது அவர்களது இதயம்.

மாநில மொழிகள்மீது இவர்கள் இவ்வளவு பற்று வைத்திருப்பது உண்மையானால், அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள தமிழ் உள்ளிட்ட அனைத்து மொழிகளையும், இந்திக்கு இணையான ஒன்றிய அரசின் அலுவல் மொழிகளாக அறிவிக்கத் தயாரா என்று நான் இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்துத் தேர்வுகளிலும் கட்டாய ஆங்கில மொழி வினாத்தாள் இருப்பதைக் கைவிடச் சொல்வதன் மூலமாக, அனைத்து இந்தியத் தேர்வுகளையும் இந்திமயமாக்கத் துடிக்கிறார்கள் என்பதே தெரிகிறது. இந்தி தெரியாதவர்கள் ஒன்றிய அரசுப் பணி பெறமுடியாத வகையில் இந்தப் பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன என்று கருதவேண்டி உள்ளது. இனி நடக்கும் அனைத்துத் தேர்வுகளும் இந்தியில்தான் என்று சொல்வதன் மூலமாக, இந்தி பேசும் மாநில மக்களுக்கு மட்டும்தான் இனி அனைத்திந்திய பணி இடங்கள் என்பதை வெளிப்படையாக அறிவித்துவிட்டார்கள்.

“பணியாளர் தேர்வுகளுக்கு நடைபெறும் போட்டித் தேர்வுகளின் வினாத்தாள்களில் ஆங்கில மொழியை அறவே நீக்கிவிட்டு, இந்தி மொழியில்தான் வினாத்தாள் இருக்க வேண்டும் என்பதை சட்டபூர்வமாக்க வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளோம்” என்று இக்குழுவின் துணைத் தலைவரான திரு. பர்த்ருஹரி அவர்கள் கூறியிருக்கிறார். இது எங்கே போய் முடியும் என்றால், இந்தி பேசாத மாநில மக்களை மொத்தமாக தேசிய நீரோட்டத்திலிருந்து அந்நியமாக்குவதில் போய்தான் முடியும். ஆங்கிலத்தை அகற்றுவதே இந்தியை அந்த இடத்தில் அமர்த்துவதற்காகத்தான்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2022 அக்டோபர் 18

முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் தன்னிடம் சொன்னதாக தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடுவார். "சட்டமன்றத்தில் ஆங்கிலத்துக்கு எதிராக சிலர் பேசியபோது, முதலமைச்சர் காமராசர் அவர்கள் எங்களிடம் காதில் இரகசியம்போலச் சொன்னார். 'ஆங்கிலத்தை எதிர்த்தீங்கன்னா, அந்த இடத்துல இந்தி வந்து குந்திக்கும்னேன்' என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வளவு பெரிய அரசியல் பாடத்தை அவ்வளவு எளிமையாக காமராசர் அவர்கள் சொன்னார்கள் பார்த்தீர்களா?" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இன்றைக்கு ஆங்கிலத்தை அகற்றுவதற்குப் பின்னால் இந்தியைக் கொண்டு வந்து உட்கார வைக்கும் மறைமுகத் திட்டம்தான் இருக்கிறது என்பதை இம்மாமன்றத்தில் அழுத்தம் திருத்தமாக நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

1968, 1976 ஆம் ஆண்டுகளில் அலுவல் மொழி தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், அதனடிப்படையிலான விதிகளின்படி ஒன்றிய அரசுப் பணிகளில் ஆங்கிலத்தைப் பயன்படுத்துவது உறுதி செய்யப்பட்டுள்ளது. அத்தகைய ஆங்கிலத்தை அகற்றுவது எப்படிச் சரியாக இருக்க முடியும்? தற்போதைய நிலையில், அறிவியல் வளர்ச்சியையும் தொழில்நுட்ப வசதிகளையும் கவனத்தில்கொண்டு, எட்டாவது அட்டவணையில் உள்ள தமிழ் உள்ளிட்ட அனைத்து மொழிகளையும் இந்திக்கு இணையான அலுவல் மொழியாக்குவதே ஒன்றிய அரசின் நோக்கமாக இருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு, ஆங்கிலத்தையும் நீக்கிவிட்டு, இந்தியை மட்டும் வைப்பது அரசியல் சட்டத்தை மதிக்காத தன்மையாகும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் உள்ள தமிழ் உள்ளிட்ட 22 மொழிகளுக்கும் சம வாய்ப்பு, சம உரிமை வழங்கி, அந்த மொழிகளை இந்திய நாட்டின் ஆட்சி மொழி மற்றும் அலுவல் மொழிகள் ஆக்கிட முயற்சிகள் எடுக்க வேண்டும். அதை விட்டுவிட்டு முழுக்க முழுக்க இந்திமயமாக்குவது சரியா என்பதுதான் நாம் எழுப்பும் கேள்வி.

பிற்பகல் 12-05

தமிழ்நாட்டின் மொழிக் கொள்கை என்பது, தமிழும், ஆங்கிலமும் என்ற இருமொழிக் கொள்கை. தமிழ் மொழி இந்திய

2022 அக்டோபர் 18] [திரு. மு.க. ஸ்டாலின்]

அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஏற்கப்பட வேண்டும். மாநில ஆட்சி மொழிகள் அனைத்தும் இந்திய அரசின் ஆட்சி மொழியாக ஆக வேண்டும். இந்தி பேசாத மாநில மக்கள்மீது இந்தி மொழி எந்த வகையிலும் திணிக்கப்படக் கூடாது. இந்தி பேசாத மாநில மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் தொடர வேண்டும். கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றில் இந்தி தெரிந்தவர்களுக்கு மட்டுமே சாதகமான வழிவகைகள் செய்யப்படக் கூடாது. அது நம் அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானதாக அமைந்துவிடும்.

தமிழகத்தில் இயங்கும் ஒன்றிய அரசின் அலுவலகங்களில் இணை அலுவல் மொழியாக தமிழை அங்கீகரித்து, அனைத்து அலுவலகச் செயல்பாடுகளும் தமிழிலேயே இயங்க உரிய சட்டத் திருத்தம் செய்ய வேண்டும். சென்னை உயர் நீதிமன்ற வழக்காடு மொழியாக தமிழை ஆக்க வேண்டும். இவைதான் நமது மொழிக் கொள்கை. இந்தித் திணிப்பை எதிர்ப்பதும், நீட் தேர்வு, புதிய கல்விக் கொள்கையை நிராகரிப்பதும் இதனால்தான் என்பதை இந்த மாமன்றமும், தமிழ்நாட்டு மக்களும் நன்கு அறிவார்கள்.

இந்தி மொழி பயன்பாடு அடிப்படையில் இந்தியாவை இவர்கள் மூன்றாகப் பிரிக்கப் பார்க்கிறார்கள். இந்தி மொழி பயன்பாடு அதிகம் உள்ள மாநிலங்கள், இந்தி மொழி பயன்பாடு குறைவான மாநிலங்கள், இந்தி பேசாத மாநிலங்கள் என்று மூன்றாக இந்தியாவைப் பிரிக்கிறார்கள். நாம் மூன்றாவதாக இருக்கிறோம். ஆனால், பெரும் மொழி மற்றும் பண்பாட்டிற்குச் சொந்தக்காரர்களாகிய நம்மை மூன்றாம்தர குடிமக்களாக ஆக்கிவிடப் பார்க்கும் முயற்சிகளுக்கு நாம் எதிர்க்குரல் எழுப்பிட வேண்டும்.

இந்திக்குத் தாய்ப்பாலும், இந்தியாவின் மற்ற மொழிகளுக்குக் கள்ளிப் பாலும் புகட்ட நினைப்பது, இந்திய அரசியல் சட்டத்திற்கு எதிரானது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்குப் பேராபத்தை விளைவிக்கக்கூடியது என்பதால் பின்வரும் தீர்மானத்தை நான் மொழிகிறேன்:

"ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சராகவும், அலுவல் மொழி தொடர்பான பாராளுமன்றக் குழுத் தலைவராகவும் உள்ள மாண்புமிகு திரு. அமித்ஷா அவர்கள் தலைமையிலான குழு சமீபத்தில் மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களிடம் அளித்துள்ள அறிக்கை இன்று நாடு முழுவதும் விவாதத்திற்கு உள்ளாகியிருக்கிறது.

குறிப்பாக, தமிழ்நாடு உள்ளிட்ட இந்தி பேசாத மாநில மக்களுக்கு பெரும் பாதிப்பினை ஏற்படுத்தும் வகையிலும், இந்த நாட்டின் பிரதமராக இருந்த திரு. நேரு அவர்கள் அளித்த வாக்குறுதிக்கு முரணாகவும் பல பரிந்துரைகளை அளித்துள்ளது.

அந்தப் பரிந்துரைகளில்,

- ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களான ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம்., எய்ம்ஸ் மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களில் ஆங்கிலத்திற்கு பதில் இந்தி மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும்;
- இந்தியை பொது மொழியாக்கிடும் வகையில், தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம் சாராத கல்வி நிறுவனங்கள், கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் உள்ளிட்ட ஒன்றிய அரசின் அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் இந்தி மொழியே பயிற்று மொழியாக ஆக்கப்பட வேண்டும்;
- இளைஞர்களின் வேலைவாய்ப்பில், கட்டாயத் தாள்களில் ஆங்கிலத்தை நீக்கி விட்டு, இந்தியை மட்டுமே முதன்மைப்படுத்த வேண்டும்;

என்பன உள்ளிட்டவையும் அடங்கும்.

இப்படி ஆங்கிலத்தைப் புறந்தள்ளி, அரசமைப்புச் சட்டத்தின் 8-வது அட்டவணையில் உள்ள இந்தி பேசாத மாநில மக்களின் 22 மாநில மொழிகளையும் அடியோடு ஒதுக்கி வைத்து, எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கும் வகையில், அரசமைப்புச் சட்டத்தின் கூட்டாட்சிக் கொள்கைகளுக்கு எதிரான, நம் நாட்டின் பன்மொழிக் கட்டமைப்பிற்கு தீங்கு விளைவிக்கும் வகையில் அளிக்கப்பட்டுள்ள இந்தப் பரிந்துரைகளை ஏற்கக் கூடாது, நடைமுறைப்படுத்தக் கூடாது என மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு 16-10-2022 அன்று தமிழக அரசால் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

இந்த மாபெரும் அவையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் கொண்டு வந்து நிறைவேற்றிய இரு மொழிக் கொள்கை தீர்மானத்திற்கு எதிராக, பிரதமராக இருந்த திரு. நேரு அவர்கள் இந்தி பேசாத மாநிலங்களுக்கு அளித்த வாக்குறுதிக்கு மாறாக, 1968 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் அலுவல் மொழி தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மற்றும் அதன் அடிப்படையில்,

ஆங்கில மொழி பயன்படுத்துவது உறுதி செய்யப்பட்டுள்ளதற்கும் எதிராக, இப்போது அளிக்கப்பட்டுள்ள பாராளுமன்றக் குழுவின் பரிந்துரைகள் அமைந்திருப்பது கவலைக்குரியதாக இப்பேரவை கருதுகிறது.

பிற்பகல் 12–10

அன்னைத் தமிழ்மொழியைக் காத்திட, ஆங்கிலம் அலுவல் மொழியாக தொடர்ந்திட, ஏன் அரசமைப்புச் சட்டத்தின் 8–வது அட்டவணையில் உள்ள 22 மொழிகளையும் அழியாது காத்திட, இந்தி பேசாத மாநில மக்களின் உரிமைகளை நிலைநாட்டிட தமிழ்நாடு மீண்டும் முன்னோடி மாநிலமாக நின்றிடும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

அலுவல் மொழி தொடர்பான பாராளுமன்றக் குழுத் தலைவர் அவர்களால் கடந்த 9–9–2022 அன்று மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களிடம் அளிக்கப்பட்டுள்ள அறிக்கையில், தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளுக்கும், அம்மொழிகளைப் பேசும் மக்களின் நலனுக்கு எதிராகவும் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக் கூடாது என ஒன்றிய அரசினை இந்தப் பேரவை வலியுறுத்துகிறது.” (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையில் இருமொழிக் கொள்கையை நிறைவேற்றிய பேரறிஞர் அண்ணா அவர்களின் அதே உணர்வுடன், இந்தத் தீர்மானத்தைத் தற்போது முன்மொழிந்துள்ளேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு கேட்டு, அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்கள் தலைமையிலான குழு, இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியைக் கட்டாயமாகத் திணிக்கின்ற நடவடிக்கை, உயர் கல்வி நிறுவனங்களில் இந்தியைப் புகுத்துகின்ற நிலைமை, கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் இந்தியை முழுமையாகக் கட்டாயப்படுத்துகின்ற நிலைமை ஆகிய அனைத்தும் பல்வேறு மொழிவழி தேசிய இனங்களின் வாழ்வுரிமையை முற்றும் முதலுமாக பறிக்கின்ற ஒரு செயல்.

இந்திய ஒன்றியம் என்பது, பல்வேறு தேசிய இனங்களைக்கொண்ட, பல்வேறு மொழிவழி மாநிலங்களின் பண்பாடு, கலை, கலாச்சாரம், நாகரிகம், தொன்மை, வாழ்வியல், வரலாறு ஆகியவை அடங்கிய ஒன்று. ஆனால், இந்தித் திணிப்பு இவற்றையெல்லாம் அழித்தொழித்து, ஒற்றை இந்தியா, ஒற்றை உணர்வு. ஒற்றைப் பண்பாடு, ஒற்றைக் கலாச்சாரம், ஒற்றைத் தேர்வு, ஒற்றை மொழி, இந்தி மொழி என்கிற வகையில் அமைந்திருக்கிற இந்தத் திணிப்பை முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் வழிநின்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தீர்மானத்தை இந்திய ஒன்றியத்திற்கு எதிராக, ஏனைய மாநிலங்களின் மொழி வழி மாநில உரிமைகளைக் காக்கின்ற ஓர் அரணாக, முன்னத்தி ஏராக, தமிழக சட்டமன்றத்தில் தமிழக அரசின் சார்பாக அரசினர் தனித் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த அரசினர் தனித் தீர்மானத்தை தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பாகவும், உலகம் முழுவதும் வாழ்கின்ற தமிழர்களின் சார்பாகவும் நான் மனதார வரவேற்கிறேன்.

இந்தித் திணிப்புக்கு குழுவின் பரிந்துரையை அளித்ததோடு மட்டுமல்லாமல், ஒன்றிய தலைமை அமைச்சர் அவர்கள் மருத்துவக் கல்வி பயிலகத்திற்கான பாடத் திட்டங்களை, நூல்களை இந்தியில் அறிமுகப்படுத்தியிருக்கிறார். அப்படி அறிமுகப்படுத்துகின்றபோது, அகில இந்திய ஒதுக்கீட்டில் இருக்கிற 5,000-க்கும் மேற்பட்ட மருத்துவக் கல்வி இடங்களிலும், பல் மருத்துவக் கல்வி மற்றும் உயர் மருத்துவக் கல்லூரிகளிலும் இந்தியா முழுவதிலும் இருக்கிற ஏனைய மொழிவழி மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள் இந்தியைப் படிப்பதற்கு வாய்ப்புகள் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அதனை அறிவிக்கின்ற அதே நேரத்தில், அகில இந்திய இட ஒதுக்கீட்டில் மொழிவழி மாநில மக்களின், மாணவர்களின் உரிமைகளை நசுக்குகின்றவகையில், இந்தி படிக்கத் தெரியாதவர்கள், மருத்துவக் கல்லூரியில் பயில முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனை ஒன்றிய அரசு கருத்தில்கொள்ளாமல் அந்தப் பாடத் திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அந்தப் பாடத் திட்டத்திற்கு ஒன்றிய அரசு மாநில மொழிகளில் பாடத் திட்டத்தை உருவாக்கிவிட்டு, இதனைச் செய்திருந்தால்கூட, அனைத்து மாநில மக்களுக்கும், அவரவர் தாய் மொழியில் மருத்துவக் கல்வி பயில்கின்ற உரிமையைத் தந்துவிட்டு செய்திருந்தாலும்கூட, நாம்

2022 அக்டோபர் 18] [திரு. தி. வேல்முருகன்]

ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், அதனைச் செய்யாமல், கட்டாயமாக இந்தியைப் புகுத்துவதற்கும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் ஒன்றிய அரசு முனைந்திருக்கிறது. எல்லா விதத்திலும், இந்தியாவில் இந்தி படிக்கத் தெரிந்தால், இந்தி பேசத் தெரிந்தால் மட்டுமே வாழ முடியும்; இந்தியாவில் இருக்க முடியும் என்கிற ஒரு நிலையை ஒன்றிய தலைமை அமைச்சர் அவர்களின் தலைமையிலான குழு அறிவித்திருப்பது ஏற்கத்தக்கதல்ல. இந்தியா பன்முகத் தன்மைகொண்ட ஒரு தேசம். பல்வேறு மக்கள் வாழ்கிற ஒரு நாடு.

இந்தியாவின் இறையாண்மைக்கும், இந்தியாவின் ஒற்றுமைக்கும், ஊறு விளைவிக்கக்கூடிய ஒன்றிய உள் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கிற பரிந்துரைகளை தமிழக அரசும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும், இந்தச் சட்டமன்றப் பேரவையும் எதிர்த்திருப்பதை நான் வரவேற்கிறேன். அட்டவணை 8-ல் உள்ள 22 மொழிகளையும் தேசிய மொழியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கிற இந்த அரசினர் தீர்மானத்தை மனதார வரவேற்று வாய்ப்பிற்கு நன்றி கூறி முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தனை ஆண்டுகள் கழித்தும்கூட, இந்தித் திணிப்பிற்கு எதிராக நாம் போராட வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறோம். இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லையென்றால், இந்தச் சட்டமன்றப் பேரவையிலும்கூட இந்தியில் பேச வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு நாம் தள்ளப்பட்டிருப்போம் என்ற ஐயம்தான் எழுகின்றது. இந்தி படிக்க வேண்டுமென்பதோ அல்லது எந்த மொழியில் படிக்க வேண்டும் என்பதோ பெற்றோர்–மாணவர்களுடைய உரிமை. அதில் தலையிடுவதற்கு யாருக்குமே உரிமை கிடையாது. கல்வியைப் பொதுப் பட்டியலுக்குக் கொண்டு சென்றதே, இந்தித் திணிப்பிற்காக செய்யப்பட்டதுதான் என்பதை ஒன்றிய அரசு நிரூபித்துக்கொண்டிருக்கிறது.

[திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்] [2022 அக்டோபர் 18

இன்றைக்கு மத்தியப் பிரதேச மாநிலத்தில் மருத்துவப் படிப்பினை இந்தியில் படிக்க வேண்டுமென்று அறிமுகப்படுத்தியிருப்பது, நாட்டைப் பிரிக்கின்ற பிரிவினைவாதத்திற்கு முன்னெடுத்திருக்கின்ற முயற்சி. தமிழக மாணவர்கள் தேசிய quota-ல் மத்தியப் பிரதேசத்தில் இருக்கின்ற மருத்துவக் கல்லூரியை எடுக்க முடியுமா? அங்கு சென்றால் இந்தியில் படிக்க வேண்டும். அப்படியென்றால் தமிழகத்தில் இருக்கின்ற மாணவர்கள், இந்தி பேசுகின்ற மாநிலத்தில் NEET-ல் மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும்கூட, அங்கு படிக்க முடியாது என்று சொன்னால், தமிழகத்தில் இத்தனை கட்டமைப்புகளை ஏற்படுத்தி, இவ்வளவு மருத்துவக் கல்லூரிகளை ஏற்படுத்தியிருக்கிறோம். நாம் ஏன் அந்த 15 சதவிகிதத்தை பிற மாநிலங்களுக்குத் தர வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. எனவே, அதைத் தடுக்க வேண்டிய கட்டாயமும் இன்றைக்கு நம்மிடம் இருக்கிறது.

தமிழகத்தின் இருமொழிக் கொள்கைதான் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்குக் காரணம் என்பதை ஏன் ஏற்க மறுக்கிறார்கள்? இவ்வளவு வளர்ச்சிக்குப் பிறகும், இந்த மொழிக் கொள்கைதான் மற்ற மாநிலங்களைவிட தமிழகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கிறதென்பதை ஏற்க மறுக்கின்றார்கள். அதேபோன்று இன்றைக்கு ஒன்றிய அரசு, தொடர்ந்து முயற்சிகளை செய்துகொண்டிருக்கும்பொழுது, அந்த அரசை நடத்துகின்ற கட்சிகளினுடைய பிரதிநிதிகள், இந்த அவையில் இருப்பவர்கள், ஒன்றிய அரசு இந்தித் திணிப்பை முன்னெடுக்கிறதென்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அங்கே இரட்டை நிலைப்பாட்டை எடுக்கக்கூடாது. ஒன்றிய அரசின் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள், இந்த அவையில் இருக்கும்பொழுது, இங்கு நாங்கள் எதிர்க்கிறோம், அங்கு ஆதரிக்கிறோம் என்று திணிப்புக்குத் துணை போகக் கூடாது. அப்படிப்பட்ட ஒரு நிலையை அவர்கள் எடுக்க வேண்டும்.

இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிற இந்த முன்னெடுப்பு, இதோடு நிற்கக் கூடாது. இந்தி பேசாத அனைத்து மாநிலங்களையும், ஒற்றுமைப்படுத்த வேண்டிய அவசியம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. அதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னெடுக்க வேண்டும். இந்தி பேசாத அனைத்து மாநிலங்களும் ஒற்றுமைப்பட்டாக வேண்டும்; அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையேற்று முன்னெடுக்க வேண்டுமென்று இந்த

நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதனால் தமிழகத்தில் இந்தித் திணிப்பை எதிர்ப்பது மட்டுமல்ல; இந்திய தேசம் பிரிந்துவிடக் கூடாது; அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை வலியுறுத்தி, ஒன்றிய உள் துறை அமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசிற்குக் கொடுத்திருக்கிற அந்தப் பரிந்துரைகளை ஏற்கக் கூடாதென்று இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை, முழு மனதோடு கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் சார்பாக நான் வரவேற்கின்றேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

பிற்பகல் 12–20

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இன்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களினுடைய உணர்வுகளை மட்டுமல்ல, இந்தி பேசாத கன்னடர்கள், தெலுங்கர்கள், வங்காளர்கள் என்று பல்வேறு மாநில மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கக்கூடியவகையில், ஒன்றிய உள் துறை அமைச்சர் அவர்கள் மேதகு குடியரசுத் தலைவர் அவர்களிடம் சமர்ப்பித்திருக்கின்ற மொழி தொடர்பான 11–வது அறிக்கையை மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் நிராகரிக்க வேண்டும் என்ற அந்தத் தீர்மானத்தை மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக நான் வரவேற்கின்றேன். என்றென்றும் மாநில மொழிகளைக் காப்பதில், நிலைநாட்டுவதில், தமிழ்நாடு முன்னிலையில் இருந்திருக்கின்றது. எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமென்றால், தமிழைச் செம்மொழியாக்கக்கூடிய அந்தக் கோரிக்கை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் முன்வைக்கப்பட்டு, டாக்டர் மன்மோகன்சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில், 2004 ஆம் ஆண்டிலே தமிழ்* Classical Language*–செம்மொழியாக அறிவிக்கப்பட்டது. இதற்குப் பிறகுதான் தெலுங்கும், கன்னடமும் 2008 ஆம் ஆண்டிலும், மலையாளம் 2013 ஆம் ஆண்டிலும், அதேபோல ஒடியா மொழி 2014 ஆம் ஆண்டிலும்* Classical Language *என்ற அந்தஸ்தைப் பெற்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து, முன்னுரையாகப் பேசும்பொழுது, மிக முக்கியமான ஒரு குறிப்பைச் சொன்னார்கள். பெருந்தலைவர்*

காமராசர் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் சொன்ன கருத்து, ‘ஆங்கிலத்தை எதிர்த்தால், இந்தி அங்கே வந்து அமர்ந்துவிடும்’ என்பது. அதுதான் ஒன்றிய அரசாங்கத்தினுடைய திட்டம். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். இன்றைக்கு ஒன்றியத்தை ஆட்சி செய்துகொண்டிருக்கின்ற அந்த அரசு, அந்த அரசிற்கு பின்னால் இருக்கக்கூடிய கொள்கைகள், இயக்கங்கள் அனைத்தும் ஒரே நாடு, ஒரே மதம், ஒரே மொழி, ஒரே கலாச்சாரம், ஒரே தேர்தல் என்ற அடிப்படையில் பேசக்கூடிய இந்தச் சூழ்நிலையில் இந்தி மட்டும்தான் ஒரே மொழி என்றால், இந்தியா வளர்ச்சியின் பாதைக்குச் செல்லாது என்பதுதான், யதார்த்தமான உண்மையாக இருக்கின்றது.

இன்றைக்கு இந்தியர்கள், மேலை நாடுகளுக்கும் கொரியா, ஜப்பான், தாய்லாந்து, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கும் பணிக்குச் செல்கின்றார்கள், அங்கு வர்த்தகம் செய்கின்றார்கள் என்றால், அதற்கு ஆங்கிலம் காரணம் மட்டுமல்ல, பல்வேறு தேர்வுகள் TOEFL, IELTS, TOEIC, GRE போன்ற தேர்வுகள் அனைத்தும் ஆங்கிலத்தில்தான் இருக்கின்றன. இந்தி மட்டும்தான் என்றால், எப்படி நாம் சர்வதேச அளவில் தொடர்புகொள்ள முடியும். எனக்கு முன்னர் உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியினுடைய தலைவர் அன்பு சகோதரர் திரு. ஈஸ்வரன் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினைக்கு மற்ற மாநிலங்களையும் ஒருங்கிணைக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இன்றைக்கு அந்த நிலைதான் இந்தியாவில் இருக்கின்றது.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், ஒன்றிய உள் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு குடியரசுத் தலைவரிடம் இந்த அறிக்கைளை அளித்த பிறகு, அதற்கு எதிராக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவான ஓர் அறிக்கையை வெளியிட்ட பிறகு, கர்நாடகத்தில், ஆந்திராவில் மட்டுமல்ல, வங்காளத்தில் Bangla Pokkho என்ற ஓர் அமைப்பு கொல்கத்தாவில் பேரறிஞர் அண்ணாவின் படத்தையும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய படத்தையும் சுமந்துகொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) ‘இந்தியை எதிர்ப்போம், இந்தியை ஒழிப்போம்’ என்று இந்திக்கு எதிராக, இந்தி ஆதிக்கம் தவறு என்று அவர்கள் மிகப்

2022 அக்டோபர் 18] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

பெரிய ஒரு போராட்டத்தை நடத்தியிருக்கிறார்கள். Bangla Pokkho என்ற அமைப்பினுடைய பொதுச் செயலாளர், அவருடைய பெயர் Garga Chatterjee. அவர்களிடம் நிருபர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்த பேரறிஞர் அண்ணா, கலைஞர் இவர்களுடைய படங்களை வைத்து நீங்கள் ஏன் போராட்டத்தை நடத்துகின்றீர்கள் என்று கேட்டபோது அவர் "In *1965*, Tamil Nadu, under Anna and Muthamizharignar Kalaignar showed that Hindi imperialism can be defeated. *(*Thumping of desks*)* This served as an inspiration even for us. So, it is natural we would carry the pictures of our great non-Hindi statesmen" என்று சொல்லியிருக்கின்றார். "பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் இந்தி ஆதிக்கத்தை ஒழிக்க முடியும், அதை தோற்கடிக்க முடியும் என்பதற்கு எங்களுக்கு வழிகாட்டிகளாக இருக்கின்றார்கள். எனவேதான், இந்தி பேசாத அந்த மிகப் பெரிய statesmen, மிகப் பெரிய அறிஞர்களுடைய படங்களை நாங்கள் சுமந்திருக்கிறோம்" என்று சொன்னார்கள்.

பிற்பகல் 12–25

இன்னொன்றையும் நான் குறிப்பிட வேண்டும். ஒரு பதாகையை Bangla Pokkho அமைப்பினர் ஏந்தியிருந்தார்கள். அந்தப் பதாகையில் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய படம் இருந்தது. அந்தப் பதாகையிலிருந்த வாசகம், 'உலகத்தோடு உரையாட ஆங்கிலம் இருக்கிறது. அப்படியானால் இந்தியாவிற்குள் உரையாட தமிழர்கள் இந்தியை ஏன் கற்க வேண்டும்? பெரிய நாய் செல்ல பெரிய கதவும், சிறிய நாய் செல்ல சிறிய கதவும் தேவையா? நான் சொல்கின்றேன், பெரிய கதவின் வழியே சிறிய நாயும் செல்லட்டும்' என்ற பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வாசகத்தை தாங்கி அந்தப் போராட்டம் நடைபெற்றது. மிகச் சிறப்பான தீர்மானம். அரசமைப்புச் சட்டத்தை மதிப்பதாக சொல்லக்கூடிய ஒன்றிய அரசு, அரசமைப்புச் சட்டத்தினுடைய பல்வேறு விழுமியங்களையெல்லாம் ஒவ்வொன்றாக நசுக்கக்கூடிய காரியத்தைச் செய்து வருகிறது. அதில் இதுவும் ஒன்று. இதை எதிர்க்க வேண்டும். ஆங்கிலமும், தமிழும், ஆங்கிலமும், பிராந்திய மொழிகளும்தான் இணைப்பு மொழிகளாக இருக்க வேண்டுமென்பதை உறுதியாக நாம் நிலைநாட்ட வேண்டும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே, நிச்சயமாக தமிழ்நாடு இந்தியாவிற்கே சிறந்த வழிகாட்டியாக விளங்கும். பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழஞர் கலைஞரும் இந்தி

imperialism-ஐ, இந்தி ஏகாதிபத்தியத்தை, இந்தி சர்வாதிகாரத்தை ஒழித்ததுபோல, முத்தமிழறிஞர் கலைஞர் காட்டிய வழியில், நம்முடைய தளபதியார் அவர்கள் தலைமையிலே, 'இந்தி சர்வாதிகாரத்தை, இந்தி ஏகாதிபத்தியத்தை ஒழிப்போம்' என்று உறுதி எடுத்துக்கொள்வோம் என்று சொல்லி, தீர்மானத்தை ஆதரித்து விடைபெறுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தி மொழி பேசாதவர்கள் அனுமதிக்கும்வரை இந்தியை ஒருபோதும் ஆட்சி மொழி ஆக்கமாட்டோம் என்ற உறுதிமொழியையும் மீறி, இன்று இந்தித் திணிப்பை கொஞ்சம் கொஞ்சமாக உள்ளே கொண்டுவரத் துடிக்கின்றார்கள், ஒன்றிய அரசினுடைய தலைமைப் பொறுப்பில் இருக்கிறவர்கள். அதை எதிர்த்து, நம்முடைய சட்டமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானம், வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம் ஆகும். அந்தத் தீர்மானத்தை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சார்பில் நான் வரவேற்கின்றேன். நம்முடைய பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், நம்முடைய முதல்வர் போன்றவர்கள் இந்தியை நுழையவிடக் கூடாது. இந்தியால் நம் தமிழ், தமிழர் உணர்வு, தமிழ் மக்களினுடைய வாழ்வு பாதிக்கப்படக் கூடாது என்பதில் அக்கறை செலுத்திக் கொண்டிருக்கின்றார்கள். நம் நாட்டிற்கே ஒரு முன்மாதிரி உணர்வுகளை ஊட்டிக் கொண்டிருக்கின்றது தமிழகம். அந்த வகையிலே, Unity in diversity என்று சொல்லப்படுகின்ற இந்த நாட்டில், பல்வேறு மாநிலங்கள், பல்வேறு மொழிகள், பல்வேறு இனங்கள், பல்வேறு கலாச்சாரங்கள் இவை அனைத்தும் இருக்கின்ற இந்த நாட்டில் ஒரு குறிப்பிட்ட மொழி, இந்தி மொழிதான் எல்லாமுமாக, ஆட்சியிலும், அதிகாரத்திலும், இருக்க வேண்டுமென்று கொண்டுவருவதை நாம் ஒருக்காலும் அனுமதிக்கக் கூடாது என்பதற்காக நம்முடைய மன்றத்தில், மரியாதைக்குரிய நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பதை நான் மீண்டும் ஒருமுறை வரவேற்று, வணங்கி அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

2022 அக்டோபர் 18]

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள் துறை அமைச்சகத்தின் அலுவல் மொழி தொடர்பான பாராளுமன்றக் குழுத் தலைவராகவும் உள்ள மாண்புமிகு அமித்ஷா அவர்களின் தலைமையிலான குழு சமீபத்தில் மாண்புமிகு குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை அளித்திருப்பது நாடு முழுவதும், இன்றைக்கு பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. ஏற்கெனவே ஒன்றிய அரசு ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே வரி என்று மாநில உரிமைகளைப் பறித்து வருகின்ற இந்த வேளையில், இன்றைக்கு* RSS, Vishwa Hindu Parishad, Sangh Parivar *அமைப்பினுடைய கொள்கைகளை நிறைவேற்றும் வகையில் ஒன்றிய அரசினுடைய கல்வி நிறுவனங்களான* I.I.T, I.I.M, AIIMS, Kendriya Vidyalaya *பள்ளிகளில் பயிற்று மொழியாக இந்தி மொழியைத் திணிப்பதற்கான பரிந்துரைகளை அந்தக் குழு அளித்திருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல், இன்றைக்கு இந்திய நாட்டினுடைய இளைஞர்களின் வேலைவாய்ப்புக்கான போட்டித் தேர்வுகளிலும், நேர்முகத் தேர்வுகளிலும் ஆங்கிலத்திற்குப் பதிலாக, இந்தியை அந்தக் குழு பரிந்துரைத்திருக்கிறது.*

பிற்பகல் 12–30

இந்தியா என்பது பன்முகத் தன்மை கொண்ட ஒரு நாடு; மாநில உரிமைகள் மட்டுமல்ல; கூட்டாட்சித் தத்துவத்திற்கும்; இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கும் எதிராக ஒன்றிய அரசு தொடர்ந்து இன்றைக்கு இந்தி மொழியைத் திணித்து வருகின்ற இந்த வேளையில், இந்தியா என்பது பன்மொழி கூட்டமைப்பு என்ற தேசத்தின் ஒரு தேன்கூடு; அந்தத் தேன்கூட்டின்மீது இந்தி என்ற கல்லை ஒன்றிய அரசு எறிந்து கொண்டிருக்கின்றது. அதற்கான விளைவுகளை நிச்சயமாக ஒன்றிய அரசு சந்திக்க நேரிடுமென்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதன் ஒரு பகுதியாகத்தான் இன்றைக்கு நாடு முழுவதும், இந்தி எதிர்ப்பிற்கு எதிராக தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரம் மற்றும் வங்காளத்திலும் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

இந்த அறிவிப்பு வந்தவுடனேயே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டம் அட்டவணை 8–ல் உள்ள தமிழ் மொழி உள்ளிட்ட 22 பிராந்திய மொழிகளுக்கு சமமாக கல்வி மற்றும் வேலைவாய்ப்பிலே உரிமை வழங்க வேண்டுமென்று கடிதம் எழுதியுள்ளார். மொழியானாலும் சரி, மாநில உரிமைகளானாலும்

சரி, அதனை நிலைநாட்டுவதில், இந்தியாவிலேயே தலைசிறந்த முதல்வராக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளங்குகிறார் என்பதற்கு எடுத்துக்காட்டாக இன்றைக்கு இந்தித் திணிப்புக்கு எதிராகவும், தமிழ் மொழி உள்ளிட்ட 22 பிராந்திய மொழிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த அரசினர் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தி மற்றும் சமஸ்கிருதம் திணிப்பிற்கு வகைசெய்யும் முறையில் உருவாக்கப்பட்டுள்ள புதிய கல்விக் கொள்கையின் அடிப்படையில் அனைத்துப் படிப்புகளுக்கும் பொது நுழைவுத் தேர்வு நடத்தப்படும் என ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. மத்திய அரசின் கல்வி நிறுவனங்கள் அனைத்திலும் இந்தி மட்டுமே பயிற்று மொழியாக இருக்குமென்றும், ஆங்கிலம் விருப்ப மொழியாக மட்டுமே இருக்குமென்றும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்தி மொழி பேசாத மாநில மாணவர்களை, மத்திய கல்வி நிலையங்களிலிருந்து வெளியே தள்ளும் முயற்சியாகவே இது உள்ளது. ஒன்றிய அரசின் இதுபோன்ற நடவடிக்கைகளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. மேலும், அரசியல் சாசனத்தின் 8-வது அட்டவணையில் இடம்பெற்றுள்ள நமது தமிழ் மொழி உள்ளிட்ட 22 இந்திய மொழிகளையும் ஒன்றிய அரசின் அலுவல் மொழியாக அறிவிக்க வேண்டுமென்றும், மருத்துவக் கல்வி உள்ளிட்ட அனைத்துப் படிப்புகளுக்கும் பொது நுழைவுத் தேர்வை இரத்து செய்திட வேண்டுமெனவும், ஒன்றிய அரசின் தேர்வாணையத்தின் கேள்வித் தாள்களில் மாநில மொழிகளும் இடம் பெற வேண்டுமெனவும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கோருகிறோம்.

இந்த நிலையில் அலுவல் மொழி தொடர்பான பாராளுமன்றக் குழுத் தலைவர் அவர்களால் கடந்த 9-9-2022 அன்று மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களிடம் அளிக்கப்பட்டுள்ள அறிக்கையில் தமிழ் மொழி உள்ளிட்ட மாநில மொழிகளுக்கும், அம்மொழிகளைப் பேசும் மக்களின் நலனிற்கு எதிராகவும் வழங்கப்பட்டிருக்கும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக்

2022 அக்டோபர் 18] [திரு. வி.பி. நாகைமாலி]

கூடாது என ஒன்றிய அரசினைக் கோரும் வகையில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிற இந்தித் திணிப்பிற்கு எதிரான தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மனதார ஆதரிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.*

பிற்பகல் 12–35

திரு. ம. சிந்தனை செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாடு மாபெரும் இராணுவத்தைக் கொண்டிருக்கிறது. உலகத்தின் மிகப் பெரிய 7–வது இராணுவத்தை கொண்டுள்ளது எனச் சொல்லப்படுகிறது. அந்த இராணுவத்தால், இந்தியாவின் ஒற்றுமை பாதுகாக்கப்படுகிறது என்பதைவிட அரசியல் சாசனம் உறுதிப்படுத்தியிருக்கிற, பன்மைத் தன்மை பாதுகாக்கப்படும் என்கிற நம்பிக்கையால்தான் இந்திய நாட்டின் ஒற்றுமை பாதுகாக்கப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இந்தியாவின் ஆகப்பெரும் கருத்தியல் போக்கில் சமரசம் இல்லாத ஒரு மகத்தான இயக்கமாக இயங்கிக்கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைப் பொறுப்பினை நம்முடைய தளபதி அவர்கள் ஏற்ற ஒரு வார காலத்திற்குள்ளாக உள் துறை அமைச்சருடைய இந்த அறிவிப்பு, இந்தியாவில் மிகப் பெரிய தாக்கத்தை உருவாக்கியிருக்கிறது. ஏனென்றால் இது வெறும் மொழி தொடர்பான ஒரு நடவடிக்கை அல்ல; அதிகாரம் தொடர்பானது; நம்முடைய வாழ்வியல் தொடர்பானது; நம்முடைய இனத்தின் அடையாளம் தொடர்பானது; இந்தியாவின் பன்மைத் தன்மை தொடர்பானது; மாண்புமிகு முதல்வர் அவர்கள் அழகாக குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, இந்திய ஒற்றுமை என்கிற அந்தச் சுடர் அணைந்துவிடக் கூடாது என்கிற ஆதங்கம் தொடர்பானது. அறிவிப்பு தகவல்கள் 13 ஆம் தேதி வந்தபொழுது யார் நம்மைக் காப்பாற்றுவார்கள் என்று எல்லோரும் கலங்கி நிற்கின்ற நேரத்தில், 24 மணிநேர இடைவெளியிலே தமிழ்நாடு முழுவதிலும் இளைஞரணிக்கு உத்தரவிட்டு, இந்தித் திணிப்பிற்கு எதிராக ஒரு மாபெரும் எதிர்ப்பை பதிவு செய்யக்கூடிய கடமையை திராவிட முன்னேற்றக் கழகம் செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தருணத்தில், கட்சிகளைத் தாண்டி அது தமிழகத்தின் தாகத்தைத் தணித்திருக்கிறது. அறிஞர் அண்ணா இல்லையே! முத்தமிழறிஞர் கலைஞர் இல்லையே! என்கிற அந்தத்*

[திரு. ம. சிந்தனை செல்வன்] [2022 அக்டோபர் 18

தவிப்பையெல்லாம் தாண்டி, அந்த இரு பெரும் ஆளுமைகளின் அடையாளமாக, 'இதோ நான் இருக்கிறேன்' என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் நமக்கு ஊட்டிய நம்பிக்கையை அது வெளிப்படுத்தியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்த அடிப்படையில் இந்திய நாட்டின் இறையாண்மை பாதுகாக்கப்பட வேண்டும், அந்த ஒற்றுமைச் சுடர் பாதுகாக்கப்பட வேண்டும்.

எனக்கு முன்னால் உரையாற்றிய அனைத்து சான்றோர் பெருமக்களும் பல்வேறு தன்மைகளில் அதை விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள். நானும் ஒன்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். மதத்தின் அடிப்படையிலே சிறுபான்மை, பெரும்பான்மை என்று ஓர் உரையாடலைக் கட்டமைத்து, அது மதத்தைச் சார்ந்தவர்களுடைய நன்மைக்காகவோ, மதத்தில் இருக்கக்கூடிய மதிப்பீடுகளை, விழுமியங்களைக் கொண்டு செல்வதற்கான அந்த முயற்சியிலோ அல்ல; மதத்தின் மூலமாக ஓர் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஓர் உரையாடலாக, மத வழி பெரும்பான்மை, மத வழி சிறுபான்மை என்கிற அரசியலைக் கட்டமைத்ததுபோலவே, இவர்கள் மொழி வழி பெரும்பான்மை, மொழி வழி சிறுபான்மை என்கிற அரசியலையும் கட்டமைக்க முயற்சிக்கிறார்கள். எல்லாவிதமான மதிப்பீடுகளுக்கும் எதிராக இவர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள்.

மதுரையில் AIIMS மருத்துவமனை வருகிறது என்று நாம் மகிழ்ச்சியடைகிறோம். தமிழ்ச் சங்கம் உருவானதாகச் சொல்லப்படுகின்ற மதுரையில், AIIMS மூலமாக இந்திதான் வரும் என்று சொன்னால், நாம் எங்கே போய் நிற்பது? தமிழ்நாட்டை யார் பாதுகாப்பது என்கிற கேள்விக்கு பதிலளிக்கக்கூடிய வகையிலே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் குரலை இன்று நான் எண்ணிப் பார்க்கிறேன். மொழிப் போருக்கான அந்தக் களம் இன்னும் உலர்ந்து போகவில்லை என்கிற ஒரு வார்த்தையை அவர் பயன்படுத்தியதை நான் எண்ணிப் பார்க்கிறேன். குருதி தோய்ந்த அந்தக் களம் இன்னும் உலர்ந்து போகவில்லை; இன்னும் அது ஈரமாகவே இருக்கிறது என்று அவர்கள் சொன்னதைப்போல, அதற்கான தேவை இருக்கிறது. ஆனால், தமிழக அரசின் இந்தத் தீர்மானத்தை ஏற்று ஒன்றிய அரசு தன்னுடைய முடிவை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பிலும், நாடாளுமன்றத்திலும் இதைத் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருக்கின்ற எழுச்சித் தமிழர் மரியாதைக்குரிய

2022 அக்டோபர் 18] [*திரு. ம. சிந்தனை செல்வன்*]

தலைவர், முனைவர் திருமாவளவன் அவர்கள் சார்பிலும் கேட்டுக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசை கொள்கை வழியிலே நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்தைப் பாதுகாக்க, இந்தியாவின் பன்மைத் தன்மையைப் பாதுகாக்க, அரசமைப்பு சாசனத்தைப் பாதுகாக்க எடுக்கின்ற எல்லா முயற்சிகளிலும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் 100 விழுக்காடு உடனிருக்கிற ஒத்துழைப்பு இருக்கும் என்பதைப் பதிவு செய்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் தமிழிலேயே பேசுங்கள். (சிரிப்பு) வார்த்தை வர வேண்டுமல்லவா!*

திரு. நயினார் நாகேந்திரன்: *'தாய்க்கொரு பழி நேர்ந்தால் மகற்கில்லையோ? அன்னைத் தமிழுக்கு ஒரு பழி நேர்ந்தால் நம் அனைவருக்கும்தான்.' (மேசையைத் தட்டும் ஒலி) இதில் யாருக்கும் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. நிச்சயமாக இந்தித் திணிப்பு இருக்கும் என்று சொன்னால், தமிழகத்தில் பாரதிய ஜனதா கட்சி உண்மையாக அதைக் கண்டிக்கும். இதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. மாண்புமிகு பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் ஐ.நா. சபைக்குச் சென்றாலும் சரி, அயோத்திக்குச் சென்றாலும் சரி, அங்கே திருக்குறளையும் பேசுவார்; தமிழ் வளர்த்த நமது புலவர்களைப் பற்றியும் பேசுவார்.* Banaras Hindu University*–ல் தமிழுக்காக ஒரு தனி இருக்கையையே வாங்கித் தந்தவர் நம்முடைய மாண்புமிகு பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள். அதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை.*

பிற்பகல் 12–40

அதேநேரத்தில் நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தின்மீது பேசுகின்றபோது, 'C' பிரிவு மாநிலங்களில் அதாவது, இந்தி பேசாத மாநிலங்களில் இந்தி திணிக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கும் அந்தச் செய்தி உண்மையிலேயே எந்த விதம் என்பது எனக்குத்

[திரு. நயினார் நாகேந்திரன்] [2022 அக்டோபர் 18

தெரியவில்லை. ஆக, 9–9–2022 அன்று கொடுக்கப்பட்ட இந்தப் பரிந்துரையில், 'C' பிரிவு மாநிலங்களில் நிச்சயமாக தாய்மொழி கட்டாயம் இருக்க வேண்டுமென்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. தாய்மொழிக் கல்வி—அனைத்திலும், தமிழகத்தில்—நிச்சயமாக அந்தந்த மாநிலங்களில், இந்தி பேசாத மாநிலங்களில் நிச்சயமாக, கட்டாயமாக தாய்மொழி கல்வி இருக்க வேண்டுமென்று அதில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல, பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள், 2 தினங்களுக்கு முன்பாக, எல்லா மாநில சட்டங்களும் அந்தந்த தாய்மொழியில் இருக்க வேண்டும். எல்லா நீதிமன்றத் தீர்ப்புகளும் தாய்மொழியில் இருக்க வேண்டுமென்று பேசியிருக்கிறார். இந்த வகையில் நமது தாய்மொழி தமிழுக்கு எந்தவிதத்தில் இழுக்கு வருமென்று என்னால் நம்ப முடியுமென்று தெரியவில்லை. இருந்தாலும், அதில் நிச்சயமாக தாய்மொழி கட்டாயம் இருக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நம்பிக்கையின் அடிப்படையில், அதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. இன்றைக்கு மாண்புமிகு உள் துறை அமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார். அதுகுறித்து பல்வேறு கருத்துகள் இங்கே சொல்லப்பட்டன. இங்கே படிக்கின்ற மருத்துவக் கல்லூரி மாணவர் உத்தரப் பிரதேச மாநிலத்திற்குச் சென்று, அங்கே மருத்துவக் கல்லூரியில் இந்தியில் படிப்பதா என்ற கேள்வி எழுந்திருக்கிறது. நிச்சயமாக, ஆங்கிலம் படிப்பதற்கு அதில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதாவது இந்தியைத் தவிர, இந்தி தெரியாதவர்கள், அங்கே ஆங்கிலம் படித்துக்கொள்ளலாம் என்கின்ற ஓர் உறுதிமொழியும் இருக்கிறது. ஆக, அந்த வகையில் இதையெல்லாம் வைத்து பார்க்கும்போது நிச்சயமாக, தாய்மொழி தமிழுக்கு எந்தவிதமான பாதிப்பும் வராது என்று மத்திய அரசின் சார்பில் நான் சொல்லிக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தை என்னால் ஏற்க இயலாது என்று சொல்லி, நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்பு செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதையும் கேட்டுவிட்டு போங்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், கேட்டுவிட்டுப் போங்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார்

2022 அக்டோபர் 18] [திரு. தங்கம் தென்னரசு]

நாகேந்திரன் அவர்கள் பேசுகிறபோது, தாய்மொழியில்தான் தொடரும் என்று சொல்கிறார். நான் அவரிடத்தில் கேட்கிறேன், அவர் சார்ந்திருக்கக்கூடிய இயக்கத்தைக் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Lobby-*ல் இருந்தாலும், கேட்டுவிட்டுப் போங்கள். அவர் என்ன பேசுகிறார் என்பதை உட்கார்ந்து கேட்டுவிட்டுப் போங்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *தாய்மொழியில் நடைபெறும் என்று சொன்னால்,* Kendriya Vidyalaya *பள்ளிகள் இருக்கின்றன,* I.I.T. *இருக்கிறது. எல்லா இடங்களிலும் நாங்கள் இன்றிலிருந்தே தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு வருவோம் என்கிற சட்டத்தைக் கொண்டு வருவதற்கு பா.ஜ.க. அரசு தயாராக இருக்கிறதா என்பதை நான் அவர்களுக்குக் கேள்வியாக வைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களிடத்தில் அது இருக்கிறது. அதைச் செய்வதற்கு அவர்கள் முன்வரவில்லை. எனவே, இந்தக் கேள்வி வருமென்றுதான் அவர்கள் இன்றைக்கு கிளம்பி வெளியே போயிருக்கிறார்கள். எனவே, இங்கே தாய்மொழியைக் கொண்டு வருவதை விட்டுவிட்டு, இங்கே தமிழ்மொழிக்கு பாதுகாப்பை செய்வதை விட்டுவிட்டு, நீங்கள் ஐ.நா.-ல், திருக்குறளைச் சொல்கிறோம். ஐ.நா.-ல் தமிழ் பேசுகிறோம் என்று சொல்வது, படிக்கிறது இராமாயணமாக இருக்கிறது; இடிக்கிறது பெருமாள் கோயிலாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அழகாகச் சொன்னீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த அரசினர் தனித் தீர்மானத்தின்மீது பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். மொழிதான் மனிதனின் அடையாளம். ஓர் இனம் என்பது மொழியின் அடிப்படையில் அமைந்திருக்கிறது. இந்தியத் திருநாடு, பல்வேறு மொழிகளின் அடிப்படையில், இனங்களின் அடிப்படையில், கலாச்சாரத்தின் அடிப்படையில் பல்வேறு கோணங்களில் பிரிக்கப்பட்டு, வேற்றுமையில் ஒற்றுமை என்ற பன்முகத் தன்மை கொண்டது. அந்த பன்முகத் தன்மை கொண்ட இந்தியத் திருநாடுதான், உலக அரங்கில் சிறந்த ஜனநாயக நாடாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் தமிழ்நாட்டிற்கு, தமிழ்மொழிக்கு என்று தனிச் சிறப்பு உண்டு.*

[திரு. ஜி.கே. மணி] [2022 அக்டோபர் 18

'தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே'

என்றெல்லாம் தமிழ்மொழிக்கு தனிச் சிறப்பு உண்டு. தமிழுக்கு ஓர் இன்னல் என்று சொன்னால், உயிர் கொடுப்பேன் என்ற வரலாறு தமிழ்நாட்டிற்கும், தமிழ் இனத்திற்கும் உண்டு என்பதை நாம் மறந்துவிட முடியாது. இந்தச் சூழ்நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனித் தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கிற பல காரணங்கள், எதிர்காலத்தில் தமிழர்களுக்கும், தமிழ்நாட்டிற்கும், இந்தியத் திருநாட்டில் இருக்கிற எல்லா மாநில மொழிகளுக்கும் ஏற்படக்கூடிய சோதனையாகவே நாம் பார்க்க முடிகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இன்று தமிழ் வேண்டாம் என்று சொல்கிற நிலை உருவாகும் என்று சொன்னால், குறிப்பாக தமிழ்நாடு மட்டுமல்ல; இந்தியாவில் இருக்கிற பல மாநில மொழிகளுக்கு மிகப் பெரிய சோதனையும், பாதிப்பும் ஏற்படும் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

பிற்பகல் 12–45

குறிப்பாக, அரசமைப்புச் சட்டத்தின் 8-வது அட்டவணையில் தற்போது 22 மொழிகள் இருக்கின்றன. 8-வது அட்டவணையில் இருக்கிற 22 மொழிகளுக்கும், அலுவல் மொழி அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்; ஆட்சி மொழி அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமென்பதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதேபோன்று, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் குறிப்பிட்டதைப்போல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசினர் தனித் தீர்மானத்தில் சொல்லியிருப்பதைப்போல, மத்திய அரசின் கல்வி நிறுவனங்களான IIT, IIM, AIIMS மற்றும் Kendriya Vidyalaya போன்ற கல்வி நிறுவனங்களில் தமிழ்மொழி புறக்கணிக்கப்படும். அவ்வாறு அந்தந்த மாநில மொழிகள் புறக்கணிக்கப்படுமானால், ஒவ்வொரு மாநிலத்திலும் வாழக்கூடியவர்களின் நிலை, தமிழ்நாட்டில் வாழக்கூடியவர்களின் நிலை எதிர்காலத்தில் என்னவாகும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

கடந்த காலங்களில், அதிலும் குறிப்பாக சமீப காலங்களில் மத்திய அரசால் நடத்தப்பெறும் போட்டித் தேர்வுகளில் தேர்ச்சி

2022 அக்டோபர் 18] [திரு. ஜி.கே. மணி]

பெற்ற இந்தி பேசக்கூடியவர்கள், குறிப்பாக, தொடர்வண்டி நிலையங்கள், சின்னச் சின்ன இரயில்வே நிலையங்களில் எல்லா பணிகளிலும் பணியாற்றுகிறார்கள். கிராமப்புறத்தில் இருக்கக்கூடியவர்கள் அந்த இரயில் நிலையங்களுக்குச் சென்றால், அவர்கள் பேசுவது ஒன்றும் இவர்களுக்குப் புரிவதில்லை. தமிழ்நாட்டிலிருக்கும் சாதாரண ஏழை, எளிய, படிக்காத மக்கள் எங்கே செல்வது, எந்த ஊருக்குச் செல்வது என்று அவர்களிடம் சென்று கேட்டால் அவர்கள் பேசுவதை இவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இன்றைக்கே இந்த நிலைமை என்றால், எதிர்காலத்தில் என்ன நிலைமை உருவாகும் என்பதை நாம் எண்ணிப் பார்க்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறோம்.

மொழி என்பது ஊனோடு, உயிரோடு கலந்திருக்கிற ஒன்று. ஒன்றைச் சொல்கிறேன், இன்று ஒரு மனிதன் பல்வேறு மொழிகளில் புலமை பெற்றவனாக இருக்கலாம். அதாவது, 10 மொழிகளில் புலமை பெற்றவனாக இருந்தாலும்கூட, இரவில் தூங்கிக் கொண்டிருக்கும்போது, நடுநிசியில் ஒருவன் ** திடீரென்று அவன் அலறுவதுகூட தாய்மொழியிலேதான். ஆகவே, தாய்மொழிக்கென்று ஒரு தனிச் சிறப்பு இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த இரண்டு வார்த்தைகளும் வேண்டாமே. ** அவைக் குறிப்பில் வேண்டாமே.

திரு. ஜி.கே. மணி: இல்லை, ஊசியால் குத்துகிறான் அல்லது கனவு காண்கிறான். கனவு காணுகிற நேரத்தில், அவன் உளறுவதுகூட தாய்மொழியிலேதான். ஆகவே, தாய்மொழிக்கென்று ஒரு தனிச் சிறப்பு உண்டு. தாய்மொழிக்கு ஒரு சோதனை என்று வந்தால், எக்காரணம் கொண்டும் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டிய கடமை நமக்கு உண்டு என்பதை நாம் மறந்துவிடவும் முடியாது. அதேநேரத்தில், தமிழ், கட்டாய மொழி. இந்தி, இணைப்பு மொழி–தொடர்பு மொழியாக இருக்கிறது. தேவையானால், விருப்பப்படக்கூடியவர்கள் மூன்றாவது மொழியாக இந்தி மொழியையோ, பிரெஞ்சு மொழியையோ, உருது மொழியையோ, விருப்பப்பட்டதைப் படித்துக்கொள்ளலாம். அதற்கு அரசு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தடையாக இல்லை. அதைவிடுத்துவிட்டு, இந்தித் திணிப்பு கூடாது என்பதுதான் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய ஆணித்தரமான கருத்து என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட அரசினர் தனித் தீர்மானத்தை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நெஞ்சார வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த அரசினர் தனித் தீர்மானத்தை எங்கள் காங்கிரஸ் பேரியக்கம் உளமார ஆதரிக்கிறது, வரவேற்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தத் தீர்மானத்தை படிக்கும்போது, அரை நூற்றாண்டிற்கு முன்பு, நான் மாணவனாக இருந்தபோது படித்தது நினைவுக்கு வந்தது.

ஓடிவந்த இந்திப் பெண்ணே கேள்!
நீ தேடி வந்த கோழையுள்ள நாடு இதுவல்லவே!

என்ற வாசகம். அதனுடைய மறு வாசிப்பாக, மறு பதிப்பாக இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தாய்மொழியை, தமிழ் மொழியைக் காப்பதற்காக இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மத்திய உள் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு பிரதமர் அவர்களும் பாரதியாரைப் பற்றிப் பேசுகிறார்கள், திருக்குறளைப் பற்றிப் பேசுகிறார்கள். வெளிநாடுகளில் போய் பேசுகிறார்கள். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதையெல்லாம் புரிந்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், தமிழினத்தை ஒழிப்பதற்கும், அழிப்பதற்கும் ஒரு கட்சி இந்த நாட்டிலே இருக்கிறதென்றால், அது பாரதிய ஜனதா கட்சிதான். அவர்களோடு ஒத்துப்போவதற்கும் சில கட்சிகள் இங்கே இருக்கின்றன. அவர்கள் என்ன விரும்புகிறார்கள் என்றால், தமிழினத்தை காவு கொடுக்க வேண்டும், தமிழினத்திற்கு எதிரான செயல்களில் யார் ஈடுபட்டாலும், நாங்கள் அவர்களுக்குத் துணை நிற்போம் என்று சில கட்சிகளும், இயக்கங்களும் இங்கு இருக்கின்றன.

2022 அக்டோபர் 18] [திரு. கு. செல்வபெருந்தகை]

பிற்பகல் 12–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த பாராளுமன்றத் தேர்தலிலே தேனியில் ஒரு பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ளும்போது சொன்னார். தமிழ் மொழியை எப்படியெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் பாதுகாத்தது; எப்படியெல்லாம் இந்த மொழியைப் பாதுகாப்பதில் சிரமப்பட்டது என்பதைப் பற்றிப் பேசினார்கள். எங்களுடைய மேனாள் காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய தலைவர் திரு. ஈ.வி.கே.எஸ். இளங்கோவனுடைய தந்தை திரு. ஈ.வி.கே.எஸ். சம்பத் அவர்களைப் பற்றி நினைவு கூர்ந்தார். ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு அப்போதிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு. தர்மலிங்கம் அவர்களும், திரு. ஈ.வி.கே.எஸ். சம்பத் அவர்களும் 'எங்களுடைய தலைவர் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை அறிவித்திருக்கிறார். நீங்கள் உடனே இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டும்' என்று ஒரு கடிதம் எழுதுகிறார்கள். நேரு அவர்கள், ஒருவாரம் காலதாமதமாக அந்தக் கடிதத்திற்கு பதில் எழுதுகிறார். அந்தக் கடித நகல் தேதி உட்பட என்னுடைய கையில் இருக்கிறது. "அன்புள்ள ஸ்ரீசம்பத் அவர்களே, உங்களுடைய கடிதமும், தந்தியும் கிடைக்கப் பெற்றேன். உங்கள் தலைவரிடம் சொல்லுங்கள். உங்கள் கடிதத்திற்குப் பதில் எழுத ஏற்பட்ட காலதாமதத்திற்கு வருந்துகிறேன்" என்று எழுதுகிறார். இதுதான் ஜவஹர்லால் நேரு அவர்களுடைய பாரம்பரியம், தலைமைப் பண்பு. தான் கடிதம் தாமதமாக எழுதுவதற்கே வருத்தம் தெரிவிக்கிறார் முன்னாள் பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசுக்கு எத்தனை கடிதங்கள் எழுதியிருப்பார். ஏதாவது பதில் வந்திருக்கிறதா இதுவரைக்கும். அதுதான் அந்தப் பாரம்பரியத்திற்கும், இந்தப் பாரம்பரியத்திற்கும் உள்ள இடைவெளி என்பதை நாட்டு மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல; "நீங்கள் எழுதிய கடிதத்தை நான் உன்னிப்பாகப் படித்தேன். ஆங்கிலத்தைப் பற்றியும், இந்தியைப் பற்றியும் நான் கொடுத்துள்ள உறுதிமொழிகளை எந்தவிதத்திலும் பின்வாங்க மாட்டேன். ஆட்சி மொழியாக, பயிற்று மொழியாக நீங்கள் விரும்புகின்ற மொழி இருக்கும். அந்தந்த மாநிலங்கள் எந்தெந்த மொழிகளை விரும்புகிறார்களோ, அந்த அடிப்படையிலே, அந்த மொழிகளை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். மத்திய அரசுடன் எந்த ஒரு மாநில அரசும் கடிதப் போக்குவரத்தில் ஆங்கிலத்தைப்

[திரு. கு. செல்வபெருந்தகை] [2022 அக்டோபர் 18
பயன்படுத்தலாம் அல்லது மாநிலங்களுக்கிடையே கடிதப் போக்குவரத்தை ஆங்கிலம் அல்லது தங்களுடைய தாய்மொழியில் பயன்படுத்திக்கொள்ளலாம்" என்று ஜவஹர்லால் நேரு அவர்கள் உத்தரவாதம் கொடுக்கிறார். ஜவஹர்லால் நேருவுக்குப் பிறகு, லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் பாரதப் பிரதமராக வருகிறார். அவர் 11–2–1965 அன்று பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது இதே திராவிட முன்னேற்றக் கழக பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களுக்குச் சொல்கிறார்; "இது பண்டிட் நேருவின் உறுதிமொழி வாசகங்கள். இவற்றையே இந்த அரசும் பின்பற்றும். லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் சொன்ன வார்த்தைகள், பண்டித நேருவின் கருத்தை அவருடைய மறைவிற்குப் பிறகு, பிரதமராக இருக்கும் நான் இதை வலியுறுத்துவேன்; கடைபிடிப்பேன்" என்று சொல்கிறார். "பண்டிட் ஜியால் கொடுக்கப்பட்ட உறுதிமொழிகளை எந்தவித வரையறைகளும், வாசக மறைப்புகளுமின்றி பரிபூரணமாக நாங்கள் நடைமுறைப்படுத்துவோம் என்று சொல்கிறார். அதற்குப் பிறகு, இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பிரதமராக இருந்தபோது, பண்டிட்ஜியாலும், சாஸ்திரிஜியாலும் கொண்டு வரப்பட்ட உறுதிமொழிகளுக்கு சட்ட வடிவு கொடுக்க உள் நாட்டு அமைச்சர் திரு. ஒய்.பி. சவான் அவர்கள் 16–12–1967–ல் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்துகிறார்; "திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வந்த தீர்மானம், கடிதப் போக்குவரத்து இன்னும் நீர்த்துப் போகவில்லை. இது தொடரும்; காங்கிரஸ் பேரியக்க ஆட்சி அதற்கு உறுதுணையாக இருக்கும்" என்று சொல்கிறார். ஆனால், இப்போது என்ன சொல்லிவிட்டுப் போகிறார், பா.ஜ.க. சட்டமன்றக் கட்சித் தலைவர் நாங்கள் எல்லாம் உறுதுணையாக இருப்போம். ஆனால், மத்தியப் பிரதேசத்தில் மருத்துவம் படிப்பதற்கு இந்தியில்தான் படிப்போம் என்று அவர்கள் தலைவர் சொல்கிறார். அவர்கள் தலைவர் சொல்கிற ஒரு கருத்து, இவர் சொல்கிற ஒரு கருத்து. இரண்டிற்கும் எவ்வளவு பெரிய முரண்பாடு? இதுதான் பா.ஜ.க.–வினுடைய ஒட்டுமொத்த முரண்பாடு. மக்களை ஏமாற்றும் முரண்பாடு. அங்கே சொல்கிறார்; மத்தியப் பிரதேசத்தில் பேசும்போது இந்தி மொழியில்தான் மருத்துவப் படிப்பு படிக்க வேண்டுமென்று சொல்கிறார். அப்போது 15% reservation நாம் கொடுக்கிறோம். அதில் 15 விழுக்காடு இருக்கிறது. 12 விழுக்காடுதான் தமிழ்நாட்டு மாணவன் மத்தியப் பிரதேசத்திலோ, இராஜஸ்தானிலோ, குஜராத்திலோ, பஞ்சாபிலோ படிக்கும்பொழுது, அவன் எப்படி இந்தி படிப்பான்? மருத்துவம் என்பது ஆரம்பக் கல்வி கிடையாது. இது ஆதாரக் கல்வி. உயிர்களைக் காப்பாற்றும் கல்வி.

2022 அக்டோபர் 18] [திரு. கு. செல்வபெருந்தகை]

UNICEF-லிருந்து ஒரு letter வருகிறது. UNICEF-லிருந்து letter இந்தியிலா வருகிறது? ஆங்கிலத்தில் வருகிறது. அதை எப்படிப் படிக்க முடியும்? குறைந்தபட்சம் இந்த மக்கள்மீது அக்கறை இல்லாமல் இப்படி இந்தியைத் திணிக்க வேண்டும்; இந்து ஆள வேண்டும்; இந்துஸ்தான் ஆள வேண்டும் என்ற ஒரே முழக்கம்.

பிற்பகல் 12-55

நாக்பூரிலே இயற்றப்படுகின்ற திட்டங்களை இவர் நடைமுறைப்படுத்தி வருகிறார். இது, இந்தக் காலத்திற்குச் சாத்தியமா என்று பார்க்க வேண்டும். மொழி என்பது ஒரு தேன்கூடு. இந்தத் தேன்கூட்டில் பார்த்தீர்களென்றால், அழகான, இனிப்பான தேனும் கிடைக்கும்; ஆயிரக்கணக்கான குளவிகளும் இருக்கும்; அவை கொட்டினால் அது என்ன வலி என்பது, உங்களுக்குத் தெரியும். ஆகவே, எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்தத் தீர்மானத்தை ஒன்றிய அரசு உடனே நிறைவேற்ற வேண்டும். இந்தித் திணிப்பை திரும்பப் பெற வேண்டும். எங்களது தாய்மொழிக்கு வயது 3,000 ஆண்டுகளுக்குமேல். நீங்கள் சொல்லும் மொழிக்கு வயது 100, 200 ஆண்டுகள்தான். இன்னும் சொல்லப்போனால், சுமார் 700, 800 ஆண்டுகள்தான், உங்களுடைய வரலாறு. உங்களுடைய வரலாறு எங்களுடைய வரலாற்றை ஒருபோதும் மறைக்கவும் முடியாது; மாற்றவும் முடியாது. தமிழ்மொழி உலகத்திலே மூத்த மொழி; இன்றைக்கு கீழடி நாகரிகம் பல உதாரணங்களை, வரலாற்றுச் சிறப்புமிக்க காரணிகளைச் சொல்லிக்கொண்டிருக்கின்றது. ஆகவே, நாங்கள் தமிழக மக்களுக்காகப் பேசுகிறோம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானம், தமிழுக்காக மட்டுமல்ல; 22 மாநில மொழிகளையும் பாதுகாப்பதற்கான தீர்மானம் இது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிற்கு வழிகாட்டுகின்ற தீர்மானம். அவர்கள் வேண்டுமானால் அக்கறை இல்லாமல் இருக்கலாம். இந்த மொழியைப் பாதுகாக்க வேண்டுமென்று நம்முடைய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அக்கறையோடு இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, காங்கிரஸ் பேரியக்கம் இதை ஆதரிக்கிறது. உடனே ஒன்றிய அரசு இதைத் திருத்திக்கொள்ள வேண்டும் அல்லது திரும்பப் பெற வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்தத் தீர்மானத்திற்குச் செவிசாய்க்க வேண்டுமென்று கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: தமிழ் மொழியை, தமிழ்நாட்டை, தமிழக மக்களை தமது இதயத்தில் வைத்து, தங்களது உயிரினும் மேலாக நேசித்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழுக்கும் அமுதென்று பேர்–அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்"
என்று பாடினார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.
'வீழ்வது நம் உயிராயினும் கவலையில்லை,
வாழ்வது அன்னைத் தமிழாய் இருந்திடல் வேண்டும்'

என்பான் உண்மைத் தமிழன். இந்த வீர முழக்கத்தை உயிர் மூச்சாகக் கொண்டு உருவான போராட்டம்தான் இந்தித் திணிப்பிற்கு எதிரான போராட்டம். இந்திக்கு எதிரான போராட்டம் என்பது 1930 ஆம் ஆண்டிலேயே ஆரம்பித்துவிட்டது. அனைத்துப் பள்ளிகளிலும் இந்தி கட்டாயப் பாடமாக்கப்பட்டுள்ளதாக 21–4–1938 அன்று உயர்திரு இராஜாஜி அவர்கள் தலைமையிலான சென்னை மாகாண அரசு அரசாணையை வெளியிட்டது. இதை எதிர்த்து தந்தை பெரியார், மறைமலை அடிகளார், சோமசுந்தர பாரதியார் உள்ளிட்டோரின் வழிகாட்டுதலில் போராட்டம் வெடித்தது. போராட்டத்தில் ஈடுபட்ட பெரியவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். சென்னையில் போராட்டத்தில் பங்கேற்று சிறைக்குச் சென்ற திரு. நடராஜன் அவர்களின் உடல்நலம் குன்றியது. மன்னிப்புக் கோரி கடிதம் எழுதித் தந்தால், விடுதலை செய்வதாக அரசு கூறியது. மன்னிப்புக் கேட்க மறுத்த திரு. நடராஜன் அவர்கள் 15–1–1939 அன்று உயிரிழந்தார். தாழ்த்தப்பட்ட குடும்பத்தில் பிறந்து, தமிழ் மொழி உணர்வால் உந்தப்பட்டு, போராட்டக் களத்திற்குச் சென்ற திரு. நடராஜன் அவர்கள்தான் மொழிப் போராட்டத்தின் முதல் களப் பலி. அவரைத் தொடர்ந்து, அதே ஆண்டு மார்ச் 12 ஆம் தேதி, கும்பகோணத்தைச் சேர்ந்த திரு. தாளமுத்து அவர்கள் சென்னை சிறையில் உயிர் நீத்தார்கள்.

2022 அக்டோபர் 18] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

இந்த இரண்டு உயிர்ப் பலிகளால் இந்திக்கு எதிரான போராட்டம் மிகவும் தீவிரமடைந்தது. இந்த எதிர்ப்பின் காரணமாக, இந்தி பயிற்று மொழி தொடர்பான அரசாணையை 1940 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் அரசு திரும்பப் பெற்றது.

அடுத்து, 1948 ஆம் ஆண்டில் ஓமந்தூரார் முதல்வராக இருந்தபோது, இந்தி கட்டாய பாடமாக்கப்படும் என ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதை எதிர்த்து மீண்டும் கிளர்ச்சி ஏற்பட்டதால் அரசு பின்வாங்கியது. மேலும், இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலமும் ஆட்சி மொழியாகத் தொடரும் என்று அன்றைய மாண்புமிகு பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேருவின் உறுதிமொழியால் போராட்டம் சற்று ஓய்ந்தது. இந்நிலையில்தான், 26-1-1965 முதல் இந்திய ஆட்சி மொழியாக இந்தி மட்டுமே இருக்குமென்ற 1963 ஆம் ஆண்டின் ஆட்சி மொழி சட்ட மசோதாவால் மீண்டும் போராட்டம் உருவானது.

பிற்பகல் 1-00

பேரறிஞர் அண்ணா அவர்களது இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகம் இதனை முழு வீச்சுடன் எதிர்க்க, போராட்டக்களம் தீவிரமானது. அரியலூர் மாவட்டம், கீழப்பளுவூரைச் சேர்ந்த தி.மு.க. தொண்டர் சின்னச்சாமி, இந்தி மட்டும் ஆட்சி மொழியாக அரியணையில் அமர்வதைத் தடுத்தாக வேண்டும் என்று திருச்சி இரயில் நிலையம் எதிரே 25-1-1964 அன்று தீக்குளித்து தன்னுயிரை மாய்த்துக் கொண்டார். சின்னச்சாமியின் மரணம் அரசியல் எல்லையைக் கடந்து தமிழகத்திலே இருக்கின்ற எல்லா தரப்பினரையும் எழுச்சியூட்டியது. 25-1-1965 ஆம் தேதி நெருங்க நெருங்க போராட்டத்தின் எழுச்சி அதிகமாகிக் கொண்டே சென்றது.

1965 ஜனவரி 25 ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் மாணவர் இயக்கங்கள் கிளர்ச்சியில் இறங்கின. சென்னை மாநகராட்சி ஊழியராகப் பணியாற்றி வந்த கோடம்பாக்கம் சிவலிங்கம் அன்றைய தினம் தீக்குளித்து மாண்டார். மறுநாள் விருகம்பாக்கம் அரங்கநாதன் தீக்குளித்து இறந்தார். அதேநாளில், புதுக்கோட்டை மாவட்டம், கீரனூரில் முத்து என்பவர் விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார். 27 ஆம் தேதி ஆயிரக்கணக்கான

மாணவர்கள் அண்ணாமலை பல்கலைக்கழகத்திற்கு ஊர்வலமாகச் சென்றபோது சிவகங்கை மாணவர் ராசேந்திரன் சென்னை துப்பாக்கிச்சூட்டில் பலியானார். அதன்பிறகு, போராட்டம் மேலும் மேலும் வேகமெடுத்தது. போலீஸ் துப்பாக்கிச்சூடு அதிகரிக்க உயிர்பலிகளும் அதிகரித்துக்கொண்டே சென்றன.

போராட்டத்தை ஒடுக்க இராணுவமும் வந்தது. பொள்ளாச்சியில் பிப்ரவரி 12 ஆம் தேதி இராணுவம் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 100–க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டார்கள். இதனிடையே இந்தித் திணிப்பிற்கு எதிராக காங்கிரஸ் கட்சிக்குள் சற்று எதிர்ப்பு கிளம்பியது. வேறு வழியின்றி, இந்தியுடன் ஆங்கிலமும் ஆட்சி மொழியாகத் தொடரும் என்ற முடிவுக்கு ஆட்சியாளர்கள் வந்தனர். இதனால், மாணவர்களின் 50 நாட்கள் போராட்டம் மார்ச் மாதம் 15 ஆம் தேதியன்று முடிவுக்கும் வந்தது. பேரறிஞர் அண்ணா அவர்களின் முன்முனைப்பின் காரணத்தால், மாணவச் செல்வங்களின் தீவிர போராட்டத்தால், மொழிப்போரில் தங்களின் எதிர்ப்பைக் காட்டி, செந்தணலில் வெந்து, சிறையில் வாடி, தன்னுயிரை நெருப்பிலே பொசுக்கிக் கொண்ட வீரத் தமிழர்களின் தீரமிகு தியாகத்தால் இந்தித் திணிப்பிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தது தமிழகம்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும் தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக செயல்படுத்திய திட்டங்களை நான் எடுத்துச் சொன்னால், அந்தப் பட்டியல் நீண்டுகொண்டே போகும் என்பதனை நினைவுகூர்ந்து, தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களும் தமிழ் மண்ணில் விதைத்துச் சென்ற தமிழ்மொழி உணர்வினை மக்கள் திலகம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும் வளர்த்துவிட்ட தமிழ்மொழியின் பெருமையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தனது உயிர்க் கொள்கையாக என்றும் கட்டிக்காக்கும் என்பதனை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 8–வது அட்டவணையில் உள்ள தமிழ்மொழி உட்பட அனைத்து மொழிகளையும் அலுவல் மொழியாக்க வேண்டும் என்பதே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையாகும். பேரறிஞர்

2022 அக்டோபர் 18] *[திரு. ஓ. பன்னீர்செல்வம்]*

அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து கடைப்பிடிக்கும். எந்தக் காலத்திலும் நமது அன்னைத் தமிழ்மொழியை மீறி இந்தித் திணிப்பு தமிழகத்திலே உள்ளே வர அனுமதிக்க மாட்டோம் என்பதனை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த அரசினர் தனித் தீர்மானத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முழுமனதுடன், ஏகமனதாக ஆதரிக்கிறது என்பதனையும் எடுத்துச் சொல்லி, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் இம்மாமன்றத்திலே கொண்டுவரப்பட்டுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க, உணர்ச்சிமிக்க, எச்சரிக்கை விடுகின்ற ஒரு தீர்மானத்தை இந்த அவையிலுள்ள கட்சித் தலைவர்களெல்லாம் வரவேற்றிருக்கிறார்கள். நானும், எங்களது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அந்தத் தீர்மானத்தை மனதார வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

பிற்பகல் 1-05

இந்த அவை பல நேரங்களில் சில ஆண்டுகளில் உணர்ச்சிப் பிழம்பாக மாறியிருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், 3 அறிவிப்புகளைச் செய்தார்கள். இந்த மண்ணுக்கு, தாய் மண்ணுக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டினார்கள். பொதுவாக, தாய்தான் மகனுக்குப் பெயர் சூட்டுவாள்; ஆனால் அதிசயம், மகன் தாய்க்குப் பெயர் சூட்டினார், இது 'தமிழ்நாடு' என்று. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, அவர் இரு மொழிக் கொள்கைதான் தமிழ்நாட்டில் இருக்கும்; தமிழ்+ஆங்கிலம் என்ற இரண்டாவது அறிவிப்பை அறிவித்தார்கள். மூன்றாவதாக, சுய மரியாதை திருமணங்கள் அரசியல் அங்கீகாரத்தைப் பெறும் என அறிவித்தார்கள். அன்றைக்கு நான் அவையின் மேற்புறம் உட்கார்ந்து அதைப் பார்த்தவன். இந்த அவை உணர்ச்சிப் பிழம்பாகி, அறிஞர் அண்ணா

அவர்கள், அவருடைய வயதையும் மறந்து, 'தமிழ்நாடு', 'தமிழ்நாடு' என்று சொல்ல, 'வாழ்க', 'வாழ்க' என்று மாமன்றத்திலிருக்கிற உறுப்பினர்களெல்லாம் குரல் கொடுத்தார்கள். அன்றைக்கு தமிழ்நாட்டின் சட்டமன்றம் உணர்ச்சியினுடைய வடிவாக நின்றது.

அதற்குப் பிறகு தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலக்கட்டத்தில், பல்வேறு நேரங்களிலே அது நடந்திருக்கிறது. மாநில சுயாட்சி வேண்டுமென்கின்ற ஒரு தீர்மானம், சூடு பறக்க இந்த அவையிலே நடந்து, கடைசியில் சூடும், சுவையும் நிறைந்த ஓர் உரையை தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றியபோது, இந்த அவை அன்றைக்கு உணர்ச்சிப் பிழம்பாக நின்றது. இதேபோல் இந்தியைத் திணிக்கின்ற ஒரு நிலைமை வந்த காலத்தில், அப்போதும் இதுபோன்ற உணர்ச்சிபூர்வமாக தலைவர் கலைஞர் அவர்கள் பேசினார்கள். ஆக, சில நேரங்களில் அத்தகைய சூழ்நிலை வருகின்ற சந்தர்ப்பத்தைப் பொறுத்திருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில், அதே உணர்வை, அதே உணர்ச்சியை நான் இன்றைக்குப் பெற்றிருக்கிறேன்; இந்த மன்றம் பெற்றிருக்கிறது.

தலைவர் அவர்கள் இந்தித் திணிப்பை எதிர்த்து, தீர்மானம் கொண்டு வருகிறார் என்று சொன்னபோதே, எங்களைப் போன்றவர்களுக்கெல்லாம் ஏதோ ஒன்று வரப் போகிறது என்ற உணர்ச்சியோடுதான் உட்கார்ந்திருந்தோம். காரணம், 1965–ல் தமிழ்நாட்டில் போராட்டத்தை முன்நின்று நடத்தியவர்களில் நானும் ஒருவன். முதன்முதலாக பச்சையப்பன் கல்லூரியில் 5 மாணவர்கள் கைது செய்யப்பட்டு மத்திய சிறையில் கொண்டுவந்து அடைத்தார்கள். அதில் நான், தி.க.–விலிருக்கிற துரைசாமி, அன்றைக்கு ஊட்டியிலிருந்து வந்த இராமன் என்கிற Presidency College-ஐ சேர்ந்த ஒரு மாணவன் ஆகியோர் அடங்குவர். மற்றவர்களோடு உட்கார்ந்திருந்த அறிஞர் அண்ணா அவர்கள் மதியழகனையும், என்னையும் அனுப்பினார்கள். ஏனென்றால், எங்களுடைய சட்டையை கழற்றி, ஜட்டியுடன் உட்கார வைத்திருந்தார்கள். தூரத்திலிருந்து பார்த்த அவர், நம்முடைய பையன்கள் போன்று தெரிகிறதே என்று எங்களை அழைத்துக்கொண்டார்கள். அன்றைக்கு அவரோடு இருக்கின்ற வாய்ப்பைப் பெற்றோம். அந்த உணர்வு, இந்தியை எதிர்ப்பது என்று சொன்னவுடன் இன்றைக்கு என் உள்ளத்தில் ஒரு பரபரப்பு, ஓர்

2022 அக்டோபர் 18] [திரு. துரைமுருகன்]

உணர்ச்சி, மீண்டும் தமிழகம் இந்தியை எதிர்ப்பதற்குத் தயாராகிறது என்கிற நிலை ஏற்படுகிறது. சுமார் 50, 60 ஆண்டுக் காலத்திற்கு முன்னால் நடந்தது. ஆனால், இன்றைக்கும் நடக்கிறது என்று சொல்கிறபோது, ஓர் உணர்ச்சிபூர்வமாக இருந்தது.

எங்கள் தலைவர் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் தீர்மானத்தில் அனல் இருந்தது; ஆனால், அவர் வகிக்கின்ற பதவியின் காரணமாக ஜுவாலை எழாமல் மிகத் தந்திரமான வார்த்தைகளால் அதை அடக்கி வாசித்தார்கள். அவருடைய உடலிலும், இரத்தத்திலும் அந்த உணர்வு ஓடிக்கொண்டிருக்கிறது. 14 வயதில் சொன்னார்கள். "ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள்! நீ தேடி வந்த கோழையுள்ள நாடு இதுவல்லவே" என்று 14 வயதில் இந்த வார்த்தைகளை எழுதி, திருவாரூர் வீதிகளில் கோஷமிட்டு சென்றவர். (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்து, மாப்பிள்ளையாக மாலை போட்டு உட்கார்ந்திருக்கிறார்; இந்தி எதிர்ப்பு போராட்ட ஊர்வலம் போகிறது; அதிலே சேர்ந்துகொண்டு சென்றவரை police station-ல் கொண்டு சென்று உட்கார வைத்தார்கள். கலைஞரினுடைய உணர்ச்சி குரலால், உள்ளமெல்லாம் உணர்ச்சிமயமாக்கிவிட்டு சென்றவர்.

பிற்பகல் 1–10

அவருடைய இரத்தத்திலே உதித்தவர். ஆகையினால்தான் முதலில், இந்தத் தீர்மானத்தின் ஒரு வரியை அவர் படித்தபோது, அப்படியே அவருடைய கையைப் பிடித்துக்கொண்டு அழுதுவிடலாமா என்று நினைத்தேன். என்ன கூறினார் என்றால், 'இந்த தி.மு.க. தோன்றியதே இந்தியை எதிர்ப்பதற்காகத்தான்; (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய இலட்சியமே அதுதான்'. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த quote-ஐ, இந்த வைராக்கியத்தைச் சொல்வதற்கு கலைஞர் அவர்களுடைய மகனால் மட்டும்தான் முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

தீர்மானத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் நான் படித்துப் பார்த்தேன். அவர் மிக அமைதியாகச் சொல்லிக்கொண்டே வந்தார். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே

[திரு. துரைமுருகன்] [2022 அக்டோபர் 18

சொன்னதைப்போல், 1938-ல் தொடங்கி, இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. ஒன்று தெரிகிறது, மத்தியில் யார் ஆட்சிக்கு வந்தாலும் சரி, எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சரி, ஆட்சிக்கு வருகின்ற வரை நம்மிடத்தில் சமாதானமாகப் பேசுவார்கள். வந்ததற்குப் பிறகு இந்தியைத் திணிப்பார்கள். இதில் யாருக்கும் மாறுபட்ட கருத்தே கிடையாது. ஆனால், நாம் என்ன சொல்கிறோம் என்றால், யாரோடு நாங்கள் தோழமையாக இருந்தாலும் சரி, இந்தியை எதிர்த்தே தீருவோம். (மேசையைத் தட்டும் ஒலி) அது எங்களுடைய கொள்கை. (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் இங்கே சொன்னார். இந்தியை எதிர்ப்பதற்காகத்தான் நாங்கள் பிறந்தோம் என்று சொல்கின்ற ஒரு தைரியத்தை இந்த மாமன்றத்தில் முழங்கியிருக்கிறாரே, அது பெரிதுதான். இதுவொரு Magna Carta. இன்றைக்கு அவருடைய பேச்சு ஒரு Magna Carta போல் அமைந்தது.

அதுமட்டுமல்லாமல், நாங்கள் Medical College-ல் மட்டும்தான் இந்தியைக் கொண்டுவந்துள்ளோம் என்று இன்றைக்குச் சொல்கிறார்கள். ஆனால், நாளைக்கு Engineering College-ல் இந்தியில் படிக்க வேண்டுமென்று சொல்வார்கள். அடுத்த நாள் S.S.L.C.-க்கு கொண்டுவருவார்கள். இந்தியை மட்டும் நாம் நுழைய விட்டுவிட்டால், முதலில் காலை பிடிப்பார்கள், கடைசியில் சிண்டை பிடிப்பார்கள். ஆகையினால், எந்த ரூபத்திலும் தமிழ்நாட்டில் இந்தி நுழைவதற்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, கட்சி இருக்கின்றவரையில் முடியாது. 'எந்தக் கொம்பனாலும்' இந்த நாட்டில் இந்தியை திணித்துவிட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, ஒருமுறை சொன்னதைப்போல், நாங்கள் எல்லோரும் செத்துவிட்டாலும்கூட, தமிழ்நாட்டில் பறக்கின்ற காகம்கூட இந்தியை எதிர்க்கும் என்று பேசுவார்கள் அந்தக் காலத்தில். ஆகையினால், அந்த உணர்வு நிலையிலே இருந்து, பொறுப்பின் காரணமாக, சொல்ல வேண்டியதை மிக நாகரிகமாக எடுத்து விளக்கியிருக்கிறார். எனவே, உணர்ச்சிமிக்க இந்தத் தீர்மானத்தை, நம்முடைய பாரம்பரியமான கொள்கையை உணர்வோடு படித்த, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மனமார பாராட்டுகிறேன்; போற்றுகிறேன்; புகழுகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்று கூறி, இந்தத் தீர்மானத்தை வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

8. ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களில் இந்தி மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்பன உள்ளிட்ட அலுவல் மொழி தொடர்பான பாராளுமன்ற குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக் கூடாது என ஒன்றிய அரசினை வலியுறுத்தும் அரசினர் தனித் தீர்மானம்—பேரவைத் தலைவர் கருத்துரை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒன்றிய அரசால், தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியாவில் உள்ள இந்தி பேசாத அனைத்து மாநிலங்களிலும் இந்தி மொழியைத் திணிக்க இருப்பதைக் கண்டித்து, நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின்மீது அவை முன்னவர் உட்பட, பேசியிருக்கின்ற மாமன்ற உறுப்பினர்களோடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் என்ற முறையில் ஒரிரு வார்த்தைகளைக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.*

இந்தி படித்தால் அல்லது இந்தியில்தான் மருத்துவம் படிக்க வேண்டுமென்று இப்போது அவர்கள் சொல்லியிருப்பது, நூறாண்டுகளுக்கு முன்னால் நடந்ததை நினைவுபடுத்துகிறது. சமஸ்கிருதம் படித்தவர்கள், தெரிந்தவர்கள் மட்டும்தான் மருத்துவம் படிக்க முடியும் என்ற நிலை இருந்தது. 1920–ல் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், கேரளா, தமிழ்நாடு, தெலுங்கானா, ஆந்திரா, கர்நாடகா மற்றும் ஒடிசாவின் ஒரு பகுதியை உள்ளடக்கிய மதராஸ் பிரசிடென்சிக்கு முதன்முதலாக சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றபோது, 1920 டிசம்பரில் நீதிக் கட்சி அத்தேர்தலில் வெற்றி பெற்றது. அதற்குப்பின் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் காரணமாக, 1921 ஆம் ஆண்டு, நீதிக் கட்சிதான் தமிழ்நாட்டில் வட்டார மொழிகளிலும், ஆங்கிலத்திலும் கல்வி கட்டாயம் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் கொண்டுவந்தது; சட்டமாக்கியது. ஆனால், 1941 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சியில் அது உறுதிப்படுத்தப்பட்டு, மீண்டும் ஆங்கிலத்திலும், தமிழிலும் படிக்கின்ற வாய்ப்புக் கிடைத்தது. அதற்குப்பின் மொழிவாரி மாநிலத்தில் தமிழில் படித்தோம். முதல் மொழி தாய் மொழி என்றுதான் இருந்தது. மாண்புமிகு மறைந்த தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோதுதான் முதல் மொழி தமிழ் மொழி, இணைப்பு மொழி ஆங்கிலம் என்று கொண்டுவந்தார். அந்தப் பெருமை நம்முடைய மாண்புமிகு மறைந்த தலைவர் கலைஞர் அவர்களைத்தான் சாரும்.

[பேரவைத் தலைவர்] [2022 அக்டோபர் 18 பிற்பகல் 1–15

அவர் வழியில் இன்றும், 100 ஆண்டுகளுக்குப் பிறகும், தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள அனைத்து இந்தி பேசாத மாநிலங்களுக்கும் இப்படிப்பட்ட சோதனை ஏற்படுகின்றபோது, அதில் முதல் குரலாக தமிழ்நாட்டில் பெரியார், அண்ணா, கலைஞர் வழியில் வந்த நம்முடைய மாண்புமிகு இன்றைய முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தித் திணிப்புக்கு எதிரான இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதுமட்டுமல்ல; தமிழ்நாட்டில் மட்டுமல்ல; இந்தியாவில் உள்ள அனைத்து இந்தி பேசாத மாநிலங்களில் உள்ள இளைஞர்கள், இளம்பெண்கள் உலகம் முழுவதும் சென்று இப்போது படிப்பதற்கும், வேலை செய்வதற்கும் வாய்ப்புகளையெல்லாம் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்றால், அதற்கு முட்டுக்கட்டை போடுவதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உணர்ந்துதான், வருங்கால சந்ததி, இளைஞர், இளம்பெண்களுக்காகத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்களே தவிர, இது தமிழகம் மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள அனைத்து இந்தி பேசாத மாநில இளைஞர்களும் இதைப் பாராட்டுவார்கள், இதற்குத் துணை நிற்பார்கள், இதை எதிர்த்து நிற்பார்கள். இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பார்கள்.

ஆகவேதான், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் முனைவர் ஜவாஹிருல்லா அவர்கள், மேற்கு வங்கத்தில் உள்ள ஒருவரை குறிப்பிட்டுச் சொன்னதுமாதிரி, ‘தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அண்ணா, கலைஞர் போன்றோர் இல்லையென்று சொன்னால், எங்களுக்கு மொழிப் பற்று வந்திருக்காது, நாங்கள் ஆங்கிலப் புலமைப் பெற்று உலகம் முழுவதும் சென்றிருக்கமாட்டோம்’ என்று எனக்கு அவர்தான் சொன்னார் என்று அவரை குறிப்பிட்டு சொன்னார்கள். அந்த அடிப்படையில் இந்தியாவிற்கே ஓர் எடுத்துக்காட்டாக, உலகம் முழுவதும் சென்று, நம்முடைய இளைஞர்கள் படிக்கவும், வேலை செய்யவும் வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கின்ற இந்த அருமையான தீர்மானத்தை நானும் ஆதரிக்கின்றேன்.

தொடர்ந்து, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும்முகமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2022 அக்டோபர் 18] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் நாளை (19–10–2022) புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–17 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. (i) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம்–II, பிரிவு–2 இல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d–14)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 15-6-2021 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 96 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; மற்றும் (ii) அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு 1975 ஆம் ஆண்டு சுங்கவரிச் சட்டத்தின் (Customs Tariff Act) (மத்தியச் சட்டம் 51/1975) முதல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பொருட்களுக்கு விதிக்கத்தக்க பெருமளவிலான மாநில வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் 15-6-2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 97 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கபெற்றன.]

2. 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (ஆறாவது திருத்தம்) விதிகளை இயற்றியது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் 31-8-2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 109 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கபெற்றது.]

3. 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (ஒன்பதாவது திருத்தம்) விதிகளை இயற்றியது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் 2-12-2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 168 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கபெற்றது.]

4. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் மதுக்கூடங்களில்) விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (6) துறையின் 13-2-2022 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 17–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

5. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி விதிகளின் 16A(1) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2020–2021 ஆம் நிதியாண்டிற்கான தணிக்கை அறிக்கையை மின்னணு படிவம் WW-இல் வழங்குவதற்கான காலக்கெடுவை 31-3-2022 வரை நீட்டித்தது குறித்து 31-12-2021 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 185 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

6. 13-4-2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2 இல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/232 (h–5)/2020 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தம் செய்தது குறித்து 25-2-2022 ஆம் நாளிட்ட வணிகவரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 31 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கபெற்றது.]

7. (i) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2 இல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d–14)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 4-10-2021 ஆம்

நாளிட்ட வணிகவரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 119 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (ii) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2 இல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d–15)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 4-10-2021 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 120 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (iii) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2 இல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d–4)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 4-10-2021 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 121 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (iv) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2 இல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532 (d–5)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 4-10-2021 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 122 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (v) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2 இல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d–7)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 4-10-2021 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 123 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (vi) 18-10-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2 இல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/868(f–1)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 4-10-2021 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 124 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (vii) அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு 1975 ஆம் ஆண்டு சுங்கவரிச் சட்டத்தின் (Customs Tariff Act) (மத்தியச் சட்டம் 51/1975) முதல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருட்களுக்கு விதிக்கத்தக்க பெருமளவிலான மாநில வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் 4-10-2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 125 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (viii) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II,

பிரிவு–2 இல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/CTR/532(d–4)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 28-10-2021 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 146 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கபெற்றன.]

8. (i) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2 இல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d–4)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 1-4-2022 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 50 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (ii) அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, குறிப்பிடப்பட்டுள்ள வீதத்தில் கணக்கிடப்பட்ட தொகைக்கு அதிகமாக இருப்பின் 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017)9 ஆம் பிரிவின்கீழ் மாநிலத்திற்குள்ளே வழங்கப்படும் சரக்குகளுக்கு விதிக்கத்தக்க மிக அதிக மாநில வரி விதிப்பிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் 1-4-2022 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 51 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (iii) 7-3-2019 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2 இல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/212 (g–2)/2019 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 1-4-2022 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 52 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (iv) 7-3-2019 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2 இல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/212(g–4)/2019 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 1-4-2022 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 53-இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கபெற்றன.]

2022 அக்டோபர் 18]

9. 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/2019) இணைப்புப் பட்டியலில் திருத்தம் செய்தது குறித்து உயர் கல்வித் (கே2) துறையின் 27-5-2022 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 77–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/2019) 57(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

10. 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (எட்டாவது திருத்தம்) விதிகளை இயற்றியது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் 25-10-2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 141 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கபெற்றது.]

11. (i) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2 இல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d–15)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 17–2–2022 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 20 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (ii) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2 இல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d–20)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 17-2-2022 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 21 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (iii) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2 இல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/CTR/532(d–4)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 17-2-2022 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 22 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (iv) 29-6-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2 இல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/CTR/532(d–14)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 17-2-2022 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 23 இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

[2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கபெற்றன.]

12. மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 22-9-2016 அன்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதற்கான சூழ்நிலைகள் மற்றும் சந்தர்ப்பங்கள் குறித்தும் அதைத் தொடர்ந்து 5-12-2016 அன்று அவரது எதிர்பாராத மரணம் வரையில் அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை தொடர்பாக விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட நீதியரசர் திரு. அ. ஆறுமுகசுவாமி அவர்களின் விசாரணை ஆணைய அறிக்கை. [1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

13. தூத்துக்குடியில் 22-5-2018 ஆம் நாள் நடந்த துப்பாக்கிச் சூட்டின் விளைவாக இறப்பு, காயங்கள் ஏற்பட்டதற்கான காரணங்கள், சூழ்நிலைகள் குறித்தும், சட்டம் மற்றும் ஒழுங்கு சீர்குலைவுகள் காரணமாக பொதுச் சொத்துகள், தனியார் சொத்துகள் ஆகியவற்றிற்கு ஏற்படுத்தப்பட்ட சேதம் உள்ளிட்ட பிந்தைய நிகழ்வுகள் குறித்தும் விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட நீதிபதி திருமதி அருணா ஜெகதீசன் அவர்களின் விசாரணை ஆணைய அறிக்கை. [1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/2022). (ஆங்கிலம்)

2. 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2022) (ஆங்கிலம்)

3. 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தை தடை செய்தல் மற்றும் இணையவழி விளையாட்டை ஒழுங்குமுறைப்படுத்துதல் அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2022) (ஆங்கிலம்)

2022 அக்டோபர் 18]

4. தமிழ்நாடு பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள் நிறுவனம் அமைக்கப்பட்டது குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி *212*–ன்கீழ் தகவல் தெரிவித்தல்.

5. தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண்மை ஏற்றுமதி ஊக்குவிப்பு கழகம் அமைக்கப்பட்டது குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி *212*–ன்கீழ் தகவல் தெரிவித்தல்.

6. மதிப்பீட்டுக் குழுவின் ஐந்தாவது அறிக்கை. *(2021–2023)*

7. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்து ஒன்பதாவது அறிக்கை. *(2021–2023)*

8. பொதுக் கணக்குக் குழுவின் முப்பதாவது அறிக்கை. *(2021–2023)*

9. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்து ஒன்றாவது அறிக்கை. *(2021–2023)*

10. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்து இரண்டாவது அறிக்கை. *(2021–2023)*

11. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்து மூன்றாவது அறிக்கை. *(2021–2023)*

12. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்து நான்காவது அறிக்கை. *(2021–2023)*

13. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்து ஐந்தாவது அறிக்கை. *(2021–2023)*

14. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்து ஆறாவது அறிக்கை. *(2021–2023)*

15. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்து ஏழாவது அறிக்கை. *(2021–2023)*

16. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்து எட்டாவது அறிக்கை. *(2021–2023)*

17. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்து ஒன்பதாவது அறிக்கை. *(2021–2023)*

18. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பதாவது அறிக்கை. *(2021–2023)*

19. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்து ஒன்றாவது அறிக்கை. (2021–2023)

20. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்து இரண்டாவது அறிக்கை. (2021–2023)

21. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்து மூன்றாவது அறிக்கை. (2021–2023)

22. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்து நான்காவது அறிக்கை. (2021–2023)

23. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்து ஐந்தாவது அறிக்கை. (2021–2023)

24. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்து ஆறாவது அறிக்கை. (2021–2023)

25. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்து ஏழாவது அறிக்கை. (2021–2023)

26. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்து எட்டாவது அறிக்கை. (2021–2023)

27. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்து ஒன்பதாவது அறிக்கை. (2021–2023)

28. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பதாவது அறிக்கை. (2021–2023)

29. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்து ஒன்றாவது அறிக்கை. (2021–2023)

30. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்து இரண்டாவது அறிக்கை. (2021–2023)

31. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்து மூன்றாவது அறிக்கை. (2021–2023)

32. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்து நான்காவது அறிக்கை. (2021–2023)

33. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்து ஐந்தாவது அறிக்கை. (2021–2023)

34. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்து ஆறாவது அறிக்கை. (2021–2023)

2022 அக்டோபர் 18]

35. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்து ஏழாவது அறிக்கை. *(2021–2023)*

36. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்து எட்டாவது அறிக்கை. *(2021–2023)*

37. பொது நிறுவனங்கள் குழுவின் இருபதாவது அறிக்கை. *(2021–2023)*

38. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்து ஒன்றாவது அறிக்கை. *(2021–2023)*

39. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்து இரண்டாவது அறிக்கை. *(2021–2023)*

40. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்து மூன்றாவது அறிக்கை. *(2021–2023)*

41. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்து நான்காவது அறிக்கை. *(2021–2023)*

42. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்து ஐந்தாவது அறிக்கை. *(2021–2023)*

43. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்து ஆறாவது அறிக்கை. *(2021–2023)*

44. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்து ஏழாவது அறிக்கை. *(2021–2023)*

45. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்து எட்டாவது அறிக்கை. *(2021–2023)*

46. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்து ஒன்பதாவது அறிக்கை. *(2021–2023)*

47. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பதாவது அறிக்கை. *(2021–2023)*

48. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்து ஒன்றாவது அறிக்கை. *(2021–2023)*

49. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்து இரண்டாவது அறிக்கை. *(2021–2023)*

[2022 அக்டோபர் 18

50. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்து மூன்றாவது அறிக்கை. (2021–2023)

51. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் மூன்றாவது அறிக்கை. (2021–2023)

52. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் நான்காவது அறிக்கை. (2021–2023)

53. அரசு உறுதிமொழிக் குழுவின் நான்காவது அறிக்கை. (2021–2023)

54. அரசு உறுதிமொழிக் குழுவின் ஐந்தாவது அறிக்கை. (2021–2023)

55. அரசு உறுதிமொழிக் குழுவின் ஆறாவது அறிக்கை. (2021–2023)

56. அரசு உறுதிமொழிக் குழுவின் ஏழாவது அறிக்கை. (2021–2023)

57. அரசு உறுதிமொழிக் குழுவின் எட்டாவது அறிக்கை. (2021–2023)

58. மனுக்கள் *குழுவின் ஐந்தாவது அறிக்கை. (2021–2023)*

59. மனுக்கள் *குழுவின் ஆறாவது அறிக்கை. (2021–2023)*

60. மனுக்கள் *குழுவின் ஏழாவது அறிக்கை. (2021–2023)*

61. மனுக்கள் *குழுவின் எட்டாவது அறிக்கை. (2021–2023)*

62. மனுக்கள் *குழுவின் ஒன்பதாவது அறிக்கை. (2021–2023)*

63. மனுக்கள் *குழுவின் பத்தாவது அறிக்கை. (2021–2023)*

64. மனுக்கள் *குழுவின் பதினொன்றாவது அறிக்கை. (2021–2023)*

65. மனுக்கள் *குழுவின் பன்னிரெண்டாவது அறிக்கை. (2021–2023)*

66. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (ஆறாவது பட்டியல்) (2022) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

67. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (ஏழாவது பட்டியல்) (2022) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

2022 அக்டோபர் 18]

68. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (எட்டாவது பட்டியல்) (2022) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

69. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (ஒன்பதாவது பட்டியல்) (2022) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

70. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (பத்தாவது பட்டியல்) (2022) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

71. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (பதினொன்றாவது பட்டியல்) (2022) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

72. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (பன்னிரெண்டாவது பட்டியல்) (2022) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

73. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (பதின்மூன்றாவது பட்டியல்) (2022) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

74. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (பதினான்காவது பட்டியல்) (2022) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

75. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (பதினைந்தாவது பட்டியல்) (2022) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

76. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (பதினாறாவது பட்டியல்) (2022) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

—

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

10. இணைப்புகள்

இணைப்பு-I

(*72 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.*)

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(*பட்டியல்கள்* 6 *முதல்* 10 *வரை*)@

பட்டியல்-6

1—

வாய்க்கால் நவீனப்படுத்துதல்

வினா எண் 566—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, வெண்ணாறு பிரிவு நம்பர் 2 பிள்ளை வாய்க்காலை கான்கிரீட் லைனிங் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, வெண்ணாறு பிரிவு எண் 2 பிள்ளை வாய்க்காலை கான்கிரீட் லைனிங் செய்யும் பணி ரூ.6.00 கோடி மதிப்பில் வெண்ணாறு ஆற்றுப்படுகையில் செயல்திறன்மிக்க பாசன மேலாண்மைக்காக பாசன அமைப்புகளை விரிவுப்படுத்துதல், புனரமைத்தல் மற்றும் நவீனப்படுத்துதல் (Extension, Renovation & Modernization) *திட்டத்தின்கீழ் மேற்கொள்ள கருத்துரு தயாரிக்கப்பட உள்ளது.*

@ *இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.*

[2022 அக்டோபர் 18

2—

ஏரி ஆக்கிரமிப்புகள் அகற்றுதல்

வினா எண் 1307—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதியில் உள்ள பொதுப் பணித் துறை ஏரிகளின் ஆக்கிரமிப்பை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி தொகுதியில் நீர்வளத் துறை கட்டுப்பாட்டில் 80 ஏரிகள் உள்ளன. அவற்றில் 40 ஏரிகளில் ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டு, ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன. 3 ஏரிகளிலுள்ள ஆக்கிரமிப்பாளர்களுக்கு படிவம் III வழங்கி, அவற்றிலும் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டதால், மொத்தம் 43 ஏரிகளில் ஆக்கிரமிப்புகள் முழுமையாக அகற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள 37 ஏரிகளிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3—

செம்மண் எடுக்க அனுமதி

வினா எண் 1858—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, வேகாக்கொல்லை நாற்றங்கால் நர்சரி விவசாயிகளுக்கு செம்மண் மற்றும் மணல் எடுக்க அனுமதி வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

பண்ருட்டி வட்டம், வேகாக்கொல்லை கிராமத்தில் நாற்றங்கால் நர்சரி வைத்துள்ள விவசாயிகள் செம்மண் எடுக்க, அனுமதி கோரி மாவட்ட ஆட்சியர், கடலூர் அவர்களுக்கு உரிய

ஆவணங்களுடன் விண்ணப்பிக்கும்பட்சத்தில் தகுதிவாய்ந்த விண்ணப்பங்களுக்கு தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகள் 1959-ன்படி அனுமதி வழங்கப்படும்.

4—

NLCIL **சுரங்க உபரிநீரை ஏரிக்கு திருப்பிவிடுதல்**

வினா எண் 1863—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, NLCIL *சுரங்க உபரிநீரை கீழூர் சோழன் ஏரிக்கு திருப்பி விட அரசு முன்வருமா?*

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி, NLCIL *சுரங்கம் 1A-ல் வெளியேறும் உபரி நீர் செங்கால் ஓடையின் மூலமாக பரவனாற்றிற்கு நாளொன்றிற்கு 30 முதல் 50 கன அடி செல்கிறது. செங்கால் ஓடையில் உள்ள அணைக்கட்டுமூலம் குறிஞ்சிப்பாடி பெரிய ஏரி, விருப்பாட்சி கனக்கன் ஏரி மற்றும் ஆடூர் அகரம் ஏரி ஆகியவற்றிற்கு இவ்வுபரி நீர் சென்று சுமார் 429.60 ஹெக்டேர் பாசன நிலங்கள் பயன்பெற்று வருகின்றன. இப்பாசனத்திற்கே போதுமான தண்ணீர் கிடைக்கப் பெறுவதில்லை. மேலும், செங்கால் ஓடையில் உள்ள அணைக்கட்டின் மட்ட அளவு 16.150 மீ. ஆகும். கீழூர் சோழன் ஏரியின் மட்ட அளவு 32.260 மீ. உள்ளதால் மேடான பகுதிக்கு தண்ணீர் கொண்டு செல்வதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.*

5—

கால்வாய் தூர்வாருதல்

வினா எண் 2390—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், நெய்குப்பை ஊராட்சி, சோழிய விளாகம் கால்வாயை தூர்வாரி, செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், நெய்குப்பை ஊராட்சி, சோழிய விளாகம் வாய்க்கால், 2020-2021 ஆம் ஆண்டு திட்டப் பணிக்கான தூர்வாரும் திட்டத்தின்கீழ் ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

6—

தாது மணல் விற்பனை

வினா எண் 10357—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக தென் மாவட்ட கடற்கரைப் பகுதிகளில் கிடைக்கும் தாது மணலை தமிழ்நாடு கனிம நிறுவனம்மூலம் விற்பனை செய்யவும், தாது மணலை தனியார் நிறுவனங்கள் எடுக்க தடைவிதிக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒன்றிய அரசினால் உருவாக்கப்பட்ட அணுசக்தி கனிம சலுகை விதிகள் 2016, 11-7-2016 அன்று அமலுக்கு வந்தன. அணுசக்தி கனிமங்களுக்கான வரம்பு மதிப்பு (Threshold value) 0.75% (மோனசைட்) ஆக நிர்ணயிக்கப்பட்டது. ஒன்றிய அரசு 20-9-2019 அன்று அணுசக்தி கனிம சலுகை விதிகளில் மேற்கொண்ட விதி திருத்தத்தின்படி அணுசக்தி கனிமங்களுக்கான வரம்பு மதிப்பு 0.00% (மோனசைட்) ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2. மேற்படி விதி திருத்தத்தினை தொடர்ந்து ஒன்றிய அரசின் சுரங்கத் துறை அமைச்சகம் தனது 1-3-2019 தேதியிட்ட ஆணை எண் 1/1/2019-M-VI-ல் மாநிலத்தில் தனியாருக்கு வழங்கப்பட்டுள்ள தாது மணல் குத்தகை உரிமங்களை முன்கூட்டியே ரத்து

2022 அக்டோபர் 18]

செய்யுமாறு மாநில அரசை கேட்டுக்கொண்டது. அதனைத் தொடர்ந்து சுரங்கங்களும், கனிமங்களும் மேம்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் சட்டம் 1957 பிரிவு 4A (1) மற்றும் 4A (3)-ன்படி குத்தகைதாரர்களுக்கு நேரடி விசாரணைக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டு, 45 குத்தகை உரிமங்கள் இரத்து செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

3. அணுசக்தி கனிம சலுகை விதிகள், 2016-ல் 20-2-2019 அன்று ஒன்றிய அரசின் சுரங்கத் துறை அமைச்சகம் மேற்கொண்ட விதி திருத்தத்தின்படி அரசு துறை நிறுவனங்களுக்கு மட்டுமே பட்டா மற்றும் அரசு புறம்போக்கு நிலங்களிலிருந்து தாது மணல் கனிமங்கள் எடுப்பதற்கு சுரங்க குத்தகை உரிமங்கள் வழங்க முடியும்.

4. தாது மணல் கனிம உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பாக தமிழ்நாடு கனிம நிறுவனம் ஒன்றிய அரசின் இந்திய அருமணல் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்வது தொடர்பான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

7—

வீடு கட்டுதல்

வினா எண் 4017—திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி நகராட்சியில் நகர்ப்புற வீடற்றோர் 24 பேர் தங்கியுள்ளனர். அவர்களுக்கு வீடு கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி நகராட்சியில் வீடற்றோர் தங்குவதற்கு தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின்கீழ் இரண்டு தங்குமிடம் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது. வார்டு எண் 16-ல் இயங்கி வரும் வீடற்றோர் தங்குமிடம் ரூ.25.00 இலட்சத்தில் கட்டப்பட்டு

'லைப்லைன்' தொண்டு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு, இந்நிறுவனத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இங்கு ஆதரவற்ற ஒன்பது ஆண்கள் மற்றும் பதினாறு பெண்கள் ஆக மொத்தம் 25 பேர் தங்கி பயன்பெற்று வருகிறார்கள்.

கிருஷ்ணகிரியில் அமைந்துள்ள அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் 40 பேர் தங்குவதற்கு ஏதுவாக தங்குமிடம் ரூ.25.00 இலட்சத்தில் கட்டப்பட்டு 'நியூ லைப் இந்தியா டிரஸ்ட்' தொண்டு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு அந்நிறுவனத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

8—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 4803—திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், வெங்கடேஷ்வரபுரம் கிராமத்திற்கு தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் கூடுதலாக இலட்சம் லிட்டர் தண்ணீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், கடங்கனேரி ஊராட்சியைச் சார்ந்த ரெட்டியார்பட்டி என்ற வெங்கடேஷ்வரபுரம் கிராமத்தில் உள்ள மொத்த மக்கள் தொகை 3,564 ஆகும். ஊரகக் குடியிருப்புகளில் உள்ள மக்களுக்கு நாளொன்றிற்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் என, மொத்த குடிநீர்த் தேவை நாளொன்றிற்கு 0.20 மில்லியன் லிட்டர் ஆகும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் பராமரிக்கப்படும் சங்கரன்கோவில்-ஆலங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம்

2022 அக்டோபர் 18]

வெங்கடேஷ்வரபுரம் குடியிருப்புக்கு 0.1 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், வெங்கடேஷ்வரபுரம் கிராமத்திற்கு தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் சோதனை ஓட்டத்திலிருக்கும் சங்கரன்கோவில்-ஆலங்குளம் கூட்டுக் குடிநீர் விரிவாக்கத் திட்டத்தின்கீழ் 147 குடியிருப்புகளுக்கான குடிநீர்த் திட்டத்தின்மூலம் நாளொன்றிற்கு 0.142 மில்லியன் லிட்டர் தாமிரபரணி ஆற்றுக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. சோதனை ஓட்டம் முடிவுறும்போது மேற்காணும் குடியிருப்புகளுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் குடிநீர் தொடர்ச்சியாக வழங்க இயலும்.

மேலும், இக்குடியிருப்புக்கு உள்ளூர் நீராதாரம்மூலம் 0.10 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

9—

குடிநீர் இணைப்பு

வினா எண் 4947—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியம், முதலியார்பட்டி ஊராட்சி, இந்திரா நகர் பகுதிக்கு தாமிரபரணி கூட்டுக் குடிநீர் இணைப்பு கிடைக்க வழிவகை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என் நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியம், முதலியார்பட்டி ஊராட்சிக்கு செங்கோட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் வடிவமைக்கப்பட்ட அளவான 30,000 லிட்டர் குடிநீர் தினசரி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், முதலியார்பட்டி ஊராட்சியிலுள்ள இந்திரா நகர் குடியிருப்பின் மக்கள் தொகை 550 ஆகும். தற்போது நடப்பிலுள்ள கீழப்பாவூர்

TRUTH ALONE TRIUMPHS

பேரூராட்சி மற்றும் 163 குடியிருப்புகளுக்கான தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தில் இக்குடியிருப்புக்கு வடிவமைக்கப்பட்ட குடிநீரான, நாளொன்றுக்கு 22,000 லிட்டர் குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை விரைவில் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

10—

வார்டு எண்ணிக்கை உயர்த்துதல்

வினா எண் 9024—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகராட்சியை 100 கோட்டமாக உயர்த்தி மக்கள் நலப் பணிகளை விரைந்து செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சியின் வார்டு எண்ணிக்கையை தற்போது 100 ஆக உயர்த்துவதற்கான அவசியம் எழவில்லை.

11—

உதவியாளர் பதவியை பணி மூப்பு பட்டியலில் சேர்த்தல்

வினா எண் 10852—திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நகராட்சியில் பணியாற்றும் உதவியாளர் பதவியை ஸ்டேட் லெவல் (State Level) பணி மூப்பு பட்டியலில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நகராட்சிகளில் உள்ள உதவியாளர் பணியிடம் 1970 ஆம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சி பொதுப் பணி விதிகளின்கீழ் உள்ளது. வகுப்பு-V (உதவியாளர்) மற்றும் வகுப்பு-IV (மேலாளர்) பணியிடங்களை பொறுத்தவரை, நிர்வாக நலனுக்காக ஐந்து அலகுகளாக (திருநெல்வேலி, மதுரை, தஞ்சாவூர், சேலம் மற்றும் வேலூர்) பிரித்து அதற்குள் அடங்கிய நகராட்சிகளில் பணிபுரியும் உதவியாளர்களுக்கு பணிமூப்பு பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

உதவியாளர் பணியிடத்திற்கு மாநில அளவில் (State Level) பணி முதுநிலை பட்டியல் தயாரிக்கக் கோரி நகராட்சி பணியாளரால், சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எண் W.P.No.35083/2019-ல் எதிர்வாதுரை தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது.

மேற்குறிப்பிட்ட வழக்கின் நீதிமன்றத் தீர்ப்பினைப் பொறுத்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12—

நகராட்சி எல்லையை விரிவுபடுத்துதல்

வினா எண் 15018—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரி நகராட்சி, தருமபுரி நகரம் விரிவடைந்து வருவதால் தருமபுரி நகராட்சி எல்லையை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி நகராட்சியின் எல்லைகளை விரிவாக்கம் செய்வதற்கான செயற்குறிப்பேதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

13—

நஷ்ட ஈடு தொகை வழங்குதல்

வினா எண் 3123—திரு. அம்மன் K. அர்ச்சுணன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு இடம் கொடுத்தவர்களுக்கு வழங்கப்படாமல் உள்ள நஷ்ட ஈடு தொகையை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக அரசால் பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு நிலம் கையகப்படுத்தப்பட்டபோது, அந்நிலத்தின் மொத்த மதிப்பீடு ரூ.92,71,201.93 ஆகும். 29-10-2007 நாளிட்ட மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்ற ஆணைப்படி கூடுதல் இழப்பீட்டுத் தொகை ரூ.120 கோடி என தீர்ப்பு வழங்கப்பட்டது.

பின்னர், மேல்முறையீட்டு வழக்குகளில் சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி, அப்பல்கலைக்கழகத்திற்கு நிலம் வழங்கியோருக்கு கூடுதல் இழப்பீட்டுத் தொகை ரூ.202 கோடி என நிர்ணயம் செய்யப்பட்டு அதில் ரூ.40,20,47,754/- கோவை கோட்ட வருவாய்த் துறை அலுவலரால் நீதிமன்றத்தில் வைப்புத் தொகையாக செலுத்தப்பட்டுள்ளது. மீதத் தொகையினை கணக்கிட்டு நில உடைமைதாரர்களுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

14—

சென்னை பல்கலைக்கழகம் தரம் உயர்த்துதல்

வினா எண் 7008—திரு. இரா. அருள்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை பல்கலைக்கழகத்தை உயர் சிறப்பு கல்வி நிறுவனமாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் ஆகிய நான்கு மாவட்டங்களை வரம்பெல்லையாகக் கொண்டுள்ள சென்னைப் பல்கலைக்கழகமானது, 87 கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி துறைகள்/ஆராய்ச்சி மையங்கள் மற்றும் 128 இணைப்புக் கல்லூரிகளை பெற்றுள்ளது. இப்பல்கலைக்கழகத்தை பல்கலைக்கழக நிதி நல்கை குழுவானது (UGC) "ஆற்றல்சால் பல்கலைக்கழகம்" என்று அங்கீகரித்துள்ளது. அதன் முதல் மற்றும் இரண்டாம் நிலைகளை இப்பல்கலைக்கழகம் நிறைவு செய்துள்ளது.

2. மேலும், தேசிய நிறுவனங்களின் தரவரிசைக் கட்டமைப்பு 2020 (National Institutional Ranking Framework 2020 – NIRF) இல் நாட்டின் சிறந்த பல்கலைக்கழகங்களில் இந்த பல்கலைக்கழகம் 22-வது இடத்திலும் மற்றும் மாநிலத்தின் முதல் மூன்று பல்கலைக்கழகங்களில் ஒன்றாகவும் உள்ளது.

3. இப்பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி நிறுவனம் (Institute of Distance Education-IDE) தற்போது, 15 இளங்கலைப் படிப்புகள், 20 முதுகலைப் படிப்புகள், 19 பட்டய/முதுகலைப் பட்டயப் படிப்புகள் மற்றும் ஏழு சான்றிதழ் படிப்புகளை வழங்குகிறது. மேலும், தொலைதூரக் கல்வி நிறுவனத்தில் எம்.எஸ்.சி. (தகவல் தொழில்நுட்பம்) மற்றும் பி.பி.ஏ. இணைய வழியிலான படிப்புகளை ஆப்பிரிக்காவில் உள்ள மாணவர்களுக்கு "பான் ஆப்பிரிக்கன் இ-நெட்வொர்க்" திட்டத்தின்மூலம் வழங்கி வருகிறது.

4. மேற்கண்ட சிறப்புகளுடன் சென்னை பல்கலைக்கழகம் மிகச் சிறந்த கல்வி நிறுவனமாகவே செயல்பட்டு வருகிறது. எனவே, இப்பல்கலைக்கழகத்தை உயர் சிறப்பு கல்வி நிறுவனமாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

15—

பணி நிரந்தரம் செய்தல்

வினா எண் 3076—திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, பொன்னேரி வட்டம், காட்டுப்பள்ளி கிராமத்தில் கப்பல் கட்டும் தளம் மற்றும் துறைமுகத்தில் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டவர்களை பணி நிரந்தரம் செய்திடவும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காட்டுப்பள்ளி துறைமுகம் ஒரு தனியார் முதலீட்டுத் துறைமுகமாகும். எனவே, இங்கு அத்தனியார் துறைமுக நிறுவனத்தின்மூலம் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டவர்களை பணி நிரந்தரம் செய்தல் மற்றும் வேலைவாய்ப்பு வழங்குதல் ஆகிய பணிகளை அரசால் மேற்கொள்ள வழிவகை இல்லை.

16—

சாதி, இருப்பிட, வருவாய் சான்றுகள் வழங்குதல்

வினா எண் 9042—திரு. இரா. அருள்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக மாணவர்கள் பள்ளி, கல்லூரிகளில் சேர்வதற்கு ஏதுவாக சாதிச் சான்று மற்றும் இருப்பிட, வருவாய் சான்றுகள் விரைந்து கிடைத்திட உரிய வழிகாட்டுதலை வருவாய்த் துறையினருக்கு வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் சாதிச் சான்றிதழ்கள், இருப்பிட சான்றிதழ்கள் மற்றும் வருவாய் சான்றிதழ்கள் உட்பட அனைத்து வருவாய்த் துறை சான்றிதழ்களும் இ-சேவை மையம் இணையதளம் வாயிலாக நாளது தேதியில் வழங்கப்படுகிறது. இ-சேவை முறையில் இணையதளத்தில் வருவாய்த் துறை சேவைகள் வாரியாக

2022 அக்டோபர் 18]

மற்றும் மாவட்டங்கள் வாரியாக வழங்கப்பட்ட சான்றிதழ்கள், நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் நிலுவை விவரங்கள் உள்ளன. மேற்படி நிலுவைகளில் மிக முக்கியமான இனமான மாணவர்கள் பள்ளி, கல்லூரிகளில் சேர்வதற்கு ஏதுவாக சாதிச் சான்று, இருப்பிடச் சான்று மற்றும் வருவாய் சான்றுகள் நிலுவைகள் இருப்பின் தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களால் கண்காணிக்கப்பட்டு, தாமதமின்றி உடனுக்குடன் வழங்க அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

17—

சிப்காட் தொழிற்பேட்டை அமைத்தல்

வினா எண் 3193—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி அருகில் சிப்காட் தொழிற்பேட்டை துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் சிப்காட் நிறுவனம்மூலம் ஒரு புதிய தொழிற்பூங்கா அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

18—

கனரக உதிரி பாகங்கள் தயாரிக்கும் நிறுவனம்

வினா எண் 12239—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடியில் கனரக உதிரி பாகங்கள் தயாரிக்கும் நிறுவனம் துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு, மாநிலத்திற்கு தொழிற்சாலைகளை ஈர்க்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள தொழிற்பூங்காக்களில் உள்ள உட்கட்டமைப்பு வசதி, துறைமுக வசதி, பன்னாட்டு விமான நிலைய வசதி, தொழிலாளர் திறன், கல்வி மற்றும் தொழிற்கல்வி வசதி, மருத்துவம், அரசின் தொழிற்கொள்கைகள், சலுகைகள், ஒற்றைச் சாளர அடிப்படையில் குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் அனுமதிகள் வழங்குதல் போன்றவற்றை, தொழில் தொடங்க முன்வரும் முதலீட்டாளர்களிடம் எடுத்து கூறி வருகிறது. பெரும்பாலான முதலீட்டாளர்கள், தொழில் தொடங்குவதற்கு சுற்றுப்புறச் சூழல் அமைப்பு, உதிரி பாகங்கள் வழங்குவோர் மற்றும் நுகர்வோர் அமைப்பு, பன்னாட்டு விமான நிலைய வசதி, பன்னாட்டுக் கல்வி நிலையங்கள் ஆகியவற்றினை இன்றியமையாததாக கருதுகின்றனர். அரசு முதலீட்டாளர்களை, அவர்கள் விரும்பும் இடத்தில் தொழில் துவங்க ஆவன செய்து வருகிறது. தாராளமயமாக்கப்பட்ட பொருளாதார சூழ்நிலையில் புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடியில் கனரக உதிரி பாகங்கள் உற்பத்தித் தொழிற்சாலை துவங்கிட முதலீட்டாளர்கள் முன்வருவார்களேயானால், அவர்களுக்கு அத்தொழிற்சாலையை அமைக்கத் தேவையான அனுமதிகள் பெற்றிட உதவிகள் செய்து, அவற்றை உருவாக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

19—

வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் வசதிகள் செய்தல்

வினா எண் 9673—திரு. க. கணபதி: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரவாயல் தொகுதி, வார்டு 155, இராமாபுரம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புப் பகுதியில் குடிநீர்த் தொட்டிகள் அமைத்து குடிநீர் வசதி செய்யவும், போதுமான குப்பைத் தொட்டிகள் வைத்து, தினசரி குப்பைகளை அகற்றவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் மதுரவாயல் தொகுதி, வார்டு 155, இராமாபுரம் கிராமம், பாரதி சாலை பகுதியில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டன. இத்திட்டத்திற்கான பராமரிப்புப் பணிகள் மற்றும் குடிநீர்த் தொட்டிகள் அமைத்து குடிநீர் வசதிகள் மற்றும் குப்பைத் தொட்டிகள் ஏற்கெனவே இத்திட்டத்தில் அமைக்கப்பட்டு 1-9-2020 அன்று இராமாபுரம் குடியிருப்பில் உள்ள ஒதுக்கீடுதாரர்களுக்கான இராமாபுரம் குடியிருப்பு நலச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. தற்சமயம் பொது பராமரிப்பு பணி அந்த சங்கத்தின் மூலமாகவே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

20—

நாளிதழ்கள் நிரந்தரமாக வழங்குதல்

வினா எண் 2677—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கு ஏதேனும் இரண்டு நாளிதழ்கள் நிரந்தரமாக வழங்குவதற்கு அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் (மேற்கு) தொகுதி, சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கு ஏதேனும் இரண்டு நாளிதழ்கள் நிரந்தரமாக வழங்கிட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி வழிவகை இல்லை.

[2022 அக்டோபர் 18

21—

சிட்கோ பகுதியில் சிறு தொழில்கள் துவங்குதல்

வினா எண் 3699—திரு. வே. சம்பத்குமார்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கம்பைநல்லூர் சிட்கோ பகுதியில் சிறு தொழில்கள் துவங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதியில் கம்பைநல்லூர் (ஈச்சம்பாடி) கிராமத்தில் 50.46 ஏக்கர் பரப்பளவில் 112 தொழில் மனைகளுடன் புதிய தொழிற்பேட்டை உருவாக்கப்பட்டு அதில் 93 தொழில் மனைகள் தொழில்முனைவோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 19 தொழில் மனைகளும் தொழில்முனைவோருக்கு ஒதுக்கீடு செய்ய தயாராக உள்ளது.

22—

நீர்த்தேக்கத் தொட்டிகள், மோட்டார் பம்புகள் சீரமைத்தல்

வினா எண் 6763—திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் உள்ள நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் நீரேற்றும் மோட்டார் பம்புகளை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

2022 அக்டோபர் 18]

சென்னை, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் அமைக்கப்பட்டுள்ள நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் நீரேற்றும் மோட்டார் பம்புகளை சீரமைப்பது சம்பந்தமாக தற்போதைய நிலை குறித்த விரிவான அறிக்கை பின்வருமாறு:

சென்னை, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தொகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் 13 திட்டப் பகுதிகளில் 7,530 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

வ. எண்	வார்டு எண்	திட்டப் பகுதியின் பெயர்	குடியிருப்புகளின் எண்ணிக்கை
1	38	காரனேஷன் நகர்	240
2	38	நாவல் நகர்	480
3	39	மீனவர் காலனி	160
4	39	நாகூரான் தோட்டம்	872
5	40	கீரைத்தோட்டம்	272
6	40	HLL லேண்ட் திட்டப் பகுதி	960
7	40	வ.உ.சி. நகர்	1620
8	42	திலகர் நகர் பகுதி—I & II	720
9	42	சேனியம்மன் கோயில் நகர்	464
10	43	சிங்காரவேலன் நகர் பகுதி—III	210
11	43	பவர்குப்பம்	620
12	47	பாரதி நகர்	432
13	48	ரங்கநாதன் நகர்	480
		மொத்தம்	**7530**

இவற்றுள் சேனியம்மன் நகர் மற்றும் ரங்கநாதன் நகர் ஆகிய இரண்டு திட்டப் பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்கு போதிய குடிநீர் இவ்வாரியத்தால் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகிறது.

தற்போது தமிழக அரசின் பழைய குடியிருப்புகள் புதுப்பிக்கும் (Refurbishment) திட்டத்தின்கீழ் பல்வேறு பழுது பார்ப்புப் பணிகள்/குடிநீர் மற்றும் கழிவு நீர் அமைப்புகளை மேம்படுத்தவும்,

குடியிருப்புகளுக்கு தேவையான குடிநீர் தங்குதடையின்றி விநியோகம் செய்யவும், மொத்தம் ரூ.68.72 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக மற்றும் நிதி ஒப்புதல் வழங்கப்பட்டு அரசாணை 4(D) எண் 12, வீவ (ம) நவ (நவாமே 1(2)) துறை, நாள் 25-3-2022 வெளியிடப்பட்டுள்ளது. இதில் கீழ்க்காணும் திட்டப் பகுதிகளுக்கு மட்டும் ரூ.752.95 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

வ. எண்	வார்டு எண்	திட்டப் பகுதியின் பெயர்	குடியிருப்புகளின் எண்ணிக்கை	திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)
1	38	காரனேஷன் நகர்	240	95.47
2	38	நாவல் நகர்	480	96.00
3	40	HLL லேண்ட் திட்டப் பகுதி	480	191.63
4	42	திலகர் நகர் பகுதி-I & II	504	200.30
5	43	சிங்காரவேலன் நகர்	210	83.17
6	47	பாரதி நகர்	432	86.38
		மொத்தம்	**2346**	**752.95**

மீதமுள்ள இதர 7 திட்டப் பகுதிகளில் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் திட்டப் பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு நேரிடையாக டேங்கர் லாரிகள்/நீர்த்தேக்கத் தொட்டிகள்/பொதுக் குடிநீர் குழாய்கள் வாயிலாக தற்போது போதிய குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டப் பகுதிகளில் கூடுதல் குடிநீர் இவ்வாரியத்தால் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

23—

கிரயப் பத்திரம் வழங்குதல்

வினா எண் 9783—திரு. ச. அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2022 அக்டோபர் 18]

சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-14, வார்டு எண் 168, உள்ளகரம் சர்வே எண் 90-ல் உள்ள இடத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் கிரயப் பத்திரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

சென்னை மாவட்டம், சைதாப்பேட்டை வட்டம், உள்ளகரம் கிராமம், சர்வே எண் 90 பகுதி, 23.31.0 ஹெக்டேர் பரப்பளவு உடைய கலைஞர் கருணாநிதி நகர் திட்டப் பகுதியில் 815 மனைகள் சென்னை நகர்ப்புர வளர்ச்சி திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்டுள்ளன. இம்மனைகள் அமைந்துள்ள நிலம், வருவாய் பதிவேடுகளில் அரசு புறம்போக்கு (உள்ளகரம் பெரிய ஏரி) என உள்ளது. நில உரிமை மாற்றம் குறித்து Empowered Committee *பரிந்துரைக்கும்பட்சத்தில் உரிய அரசாணை பெற்ற பின்னர், இத்திட்டப் பகுதியில் வாழும் தகுதிவாய்ந்த ஒதுக்கீடுதாரர்களுக்கு கிரயப் பத்திரம் வாரியத்தால் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

24—

பனம்பழக் கூழ் தயாரித்தல்

வினா எண் 9971—திரு. இரா. அருள்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பனம்பழத்திலிருந்து பழக்கூழ் தயாரிக்கும் தொழில்நுட்பங்களை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில் ஏறத்தாழ 125.6 ஹெக்டேர் பரப்பளவில், சுமார் 1884 மெட்ரிக் டன் அளவுக்கு பனம்பழ விளைச்சல் பெறப்படுகிறது. பனம்பழத்திலிருந்து கூழ், சாறு,

ஸ்குவாஷ், சிரப், கான்சென்ட்ரேட், கிரஷ் மற்றும் வைன் போன்ற பழரச பானங்கள் தயாரிக்கலாம். இத்தகைய பானங்களை அதிக வெப்பநிலைக்கு உட்படுத்தி (Thermal Processing) மற்றும் வெப்ப நிலைக்கு உட்படுத்தாத (Non-Thermal Processing) தொழில்நுட்ப முறைகளில் உற்பத்தி செய்ய முடியும்.

இத்தகைய உற்பத்திக்கான இயந்திரங்கள் மற்றும் அது தொடர்பான தொழில்நுட்ப வசதிகள் தஞ்சாவூரில் இயங்கி வரும் தேசிய உணவுத் தொழில்நுட்பம் தொழில் மேம்பாடு மற்றும் மேலாண்மை (NIFTEM-T) நிறுவனத்தில் உள்ளது. மேலும், பழரச பானம் உற்பத்தி செய்வதற்கான ஆலை (Pilot Scale Juice production Line) வசதிகளும் உள்ளன. ஆகையால் பனம்பழ பானங்கள் சார்ந்த தொழில்நுட்பங்கள் பெறுவதற்கு ஆர்வமாக உள்ளவர்கள் மேற்கண்ட நிறுவனத்தை அணுகலாம்.

மேலும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் பனம்பழத்திலிருந்து பழக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க முன்வரும்பட்சத்தில், தகுதியின் அடிப்படையில் மானியத்துடன்கூடிய கடன் உதவி பெற, வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP), பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) மற்றும் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) ஆகிய திட்டங்களின்கீழ் கடன் விண்ணப்பம் வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்படும். இதை தவிர சொந்த முதலீடு அல்லது நேரடி வங்கி கடன் வசதியுடன் தொழில் தொடங்கும் தொழில்முனைவோர்களுக்கு தகுதியின் அடிப்படையில் முதலீடு மானியம், மின் மானியம், வட்டி மானியம், மின்னாக்கி மானியம், ஆற்றல் சேமிப்பு மானியம், தரச் சான்றிதழ் மானியம் ஆகியவை அரசாணை (நிலை) எண் 37, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (பி) துறை, நாள் 6-7-2021-ன்கீழ் பரிசீலனை செய்யப்பட்டு விதிகளுக்கு உட்பட்டு மானியம் வழங்க பரிசீலனை செய்யப்படும்.

25—

வீடுகள் வழங்குதல்

வினா எண் 10164—திரு. இ. பரந்தாமன்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2022 அக்டோபர் 18]

எழும்பூர் தொகுதியில் உள்ள ஸ்ட்ரிங்கர்ஸ் சாலை குடிசைப் பகுதி, நேவல் ஆஸ்பிடல் சாலை 2-வது தெரு குடிசைப் பகுதி, வீ.வீ. கோவில் தெரு குடிசைப் பகுதி, பட்நூல் சந்துஜா தெரு, முத்துக்கிராமின் தெரு, கற்பூர முதலி தெரு, அல்லிகுளம் மூர்மார்க்கெட் குடிசைப் பகுதி, சைடனம்ஸ் சாலை (ராஜா முத்தையா சாலை), Home for Homeless குடியிருப்பு பேக்கர் தெரு, ஜெ.ஜெ. நகர் (கண்ணப்பர் திடல்), குருசாமி நகர், கனகராயத் தோட்டம், ராஜா தோட்டம் (ஆத்தூரம்), சிவராஜபுரம் 3-வது தெரு, கே.பி. பார்க் குடிசைப் பகுதி, காத்தூர் நல்லமுத்து தெரு, சூளை மார்க்கெட், சச்சிதானந்தன் தெரு (குடிசைப் பகுதி), வீராசாமி தெரு, திடீர் நகர் (கண்ணப்பர் திடல்), பேரக்ஸ் ரோடு ஆகிய பகுதிகளில் உள்ள தெருக்களில் சாலையோரம் வசிக்கும் மக்களுக்கு கே.பி. பார்க் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட குடியிருப்பில் வீடு ஒதுக்கித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

சென்னை மாநகரில் சாலையோரங்களில் உள்ள குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை. இருப்பினும், சென்னை மாநகராட்சி/நிலவுடைமைத் துறையினரால் கண்டறியப்படும் தகுதியான பயனாளிகளுக்கு தற்போது நடைமுறையில் உள்ள திட்டத்தின்படி, திட்ட மதிப்பீட்டுத் தொகையில் மத்திய, மாநில அரசுகளின் மானியத் தொகை ரூ.8.50 இலட்சம் போக மீதமுள்ள தொகையினை பயனாளிகள் செலுத்த சம்மதம் தெரிவிக்கும்பட்சத்தில், மாற்றிடங்களில் நிலங்கள் கண்டறியப்பட்டு, அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டி ஒதுக்கீடு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

26—

தக்காளி பதப்படுத்தும் நிலையம்

வினா எண் 10354—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2022 அக்டோபர் 18

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரியில் தக்காளி பதப்படுத்தும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் 3498 ஹெக்டேர் பரப்பளவில் தக்காளி பயிரிடப்பட்டு மொத்த விளைச்சல் 70661 மெட்ரிக் டன் பெறப்படுகிறது. இந்த விளைச்சல் ஆண்டு முழுவதுமாக அல்லாமல் குறிப்பிட்ட பருவ காலம் சார்ந்தே உள்ளது.

மேலும், இம்மாவட்டத்தில் விளைவிக்கப்படும் தக்காளி, சேலம் மற்றும் அதனை சுற்றி உள்ள மாவட்ட பகுதிகள் மற்றும் கோயம்பேடு காய்கறி சந்தை மூலமாக நேரடி உணவுத் தேவைகளுக்கே அன்றாடம் சந்தைப்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறாக குறுகிய கால உணவுத் தேவைகளுக்கே அவ்வப்போது தட்டுப்பாடு நிலவி வரும் வேளையில், நீண்டகால பயன்பாட்டு அடிப்படையில் தக்காளி பதப்படுத்தும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் குறைவு.

இருப்பினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் தக்காளி பதப்படுத்தும் நிலையம் தொடங்க முன்வரும்பட்சத்தில் தகுதியின் அடிப்படையில் மானியத்துடன்கூடிய கடன் உதவி பெற படித்த வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP), பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) மற்றும் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) ஆகிய திட்டங்களின்கீழ் வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்படும். இதைத் தவிர, சொந்த முதலீடு அல்லது நேரடி வங்கி கடன் வசதியுடன் தொழில் தொடங்கும் தொழில்முனைவோர்களுக்கு தகுதியின் அடிப்படையில் முதலீட்டு மானியம், மின் மானியம், வட்டி

2022 அக்டோபர் 18]

மானியம், மின்னாக்கி மானியம், ஆற்றல் சேமிப்பு மானியம், தரச்சான்றிதழ் மானியம் ஆகியவை அரசாணை (நிலை) எண் 37, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (பி) துறை, நாள் 6-7-2021-ன்கீழ் பரிசீலனை செய்யப்பட்டு விதிகளுக்கு உட்பட்டு மானியம் வழங்க பரிந்துரை செய்யப்படும்.

27—

வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 4065—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பத்திரிகை மற்றும் ஊடகத் துறையில் பணிபுரிபவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பத்திரிகை மற்றும் ஊடகத் துறையில் பணிபுரிபவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

28—

தியாகிகள் நினைவு சின்னம் புதுப்பித்தல்

வினா எண் 10037—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் 5 ரோடு பகுதியில் மேம்பால பணியினால் துண்டிக்கப்பட்ட சுதந்திர போராட்ட தியாகிகள் நினைவு சின்னத்தை மீண்டும் புதுப்பிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

சேலம் 5 ரோடு பகுதியில் மேம்பால பணியினால் துண்டிக்கப்பட்ட சுதந்திர போராட்ட தியாகிகள் நினைவு சின்னத்தை மீண்டும் புதுப்பிப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

29—

சிலை அமைத்தல்

வினா எண் 10038—திரு. இரா. அருள்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மறைந்த திரைப்பட பாடலாசிரியர் வாலி அவர்களுக்கு திருவரங்கத்தில் சிலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

மறைந்த திரைப்பட பாடலாசிரியர் வாலி அவர்களுக்கு திருவரங்கத்தில் சிலை அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

30—

பத்திரிகையாளர்களுக்குக் குடியிருப்பு மனைகள்

வினா எண் 10308—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் முக்கிய நகரங்களில் பத்திரிகையாளர்களுக்குக் குடியிருப்பு மனைகள் வழங்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் முக்கிய நகரங்களில் பத்திரிகையாளர்களுக்குக் குடியிருப்பு மனைகள் வழங்குவது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

31—

புதிய சமையல் கூடம் கட்டுதல்

வினா எண் 7945—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, பொன்னேரி வடக்கு ஊராட்சி ஒன்றியம் நடுநிலைப் பள்ளிக்கு புதிய சத்துணவு சமையல் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மீஞ்சூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியானது (பொன்னேரி வடக்கு) 1 முதல் 5 ஆம் வகுப்பு வரையில் பயிலும் 138 மாணவர்களுக்கு தனி பள்ளிக் கட்டடமாகவும் மற்றும் அதற்கு அருகில் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் 128 மாணவர்களுக்கு தனிப் பள்ளிக் கட்டடமாகவும் இயங்கி வருகிறது. இப்பள்ளியில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் 266 மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். தற்போது பழுதடைந்துள்ள இம்மையத்திற்கு அரசாணை (2ப) எண் 14, சமூக நலன் (ம) மகளிர் உரிமைத் துறை, நாள் 15-10-2021-ன்படி புதிய வைப்பறையுடன்கூடிய சமையலறைக் கட்டடம் கட்ட ரூ.5.32 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு கட்டடம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

32—

சத்துணவுக் கூடம் அமைத்தல்

வினா எண் 10112—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், நாகர்கூடல் ஊராட்சி, கூலிக்கொட்டாய் கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், நாகர்கூடல் ஊராட்சி, கூலிக்கொட்டாய் கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளி 110 மாணவர்களுடன் செயல்பட்டு வருகிறது. அரசாணை (2ப) எண் 14, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை (சந4-1), நாள் 5-10-2021-ன்படி இப்பள்ளி சத்துணவு மையத்திற்கு புதியதாக சமையலறையுடன்கூடிய வைப்பறை கட்டுவதற்கு ரூ.5.32 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு கட்டடம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

33—

உயர் ரக மீன் சந்தை அமைத்தல்

வினா எண் 3214—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உயர் ரக மீன் வகைகளை உள்ளூரில் சந்தைப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2020-2021 ஆம் ஆண்டில் மாநிலத்தில் 7.23 இலட்சம் டன் மீன்கள் உற்பத்தி செய்யப்பட்ட நிலையில், 15 விழுக்காடு கடல்சார் பொருட்கள் (1.10 இலட்சம் டன்) மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 85 விழுக்காடு மீன்கள் உள்ளூரில் சந்தைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், உயர் ரக மீன்களின் உள்நாட்டு நுகர்வை அதிகரிக்க அரசால் மீன் உணவு திருவிழா நடத்தப்பட்டு பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

34—

கால்நடை தீவன மையம் அமைத்தல்

வினா எண் 3236—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாவட்டந்தோறும் கால்நடை தீவன மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக அரசால் வருடம் முழுவதும் கால்நடைகளுக்கு பசுந்தீவனம் கிடைப்பதை உறுதி செய்திடும்பொருட்டு மாவட்டத்திற்கு ஒன்று என்ற வீதத்தில் முதற்கட்டமாக 18 மாவட்டங்களில் பொது தீவன வங்கிகள் ரூ.4.82 கோடி மதிப்பீட்டில் நிறுவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, மாவட்டந்தோறும் கால்நடை தீவன மையம் என்று தனியே அமைத்திடும் அவசியம் எழவில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[*2022 அக்டோபர் 18*

35—

கால்நடை பராமரிப்பு பயிற்சி அளித்தல்

வினா எண் 3292—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு, இட்டாமொழி, மூலக்கரைப்பட்டி ஆகிய ஊர்களில் நவீன கால்நடை பராமரிப்பு முறைகள் பற்றி பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, களக்காடு, இட்டாமொழி, மூலக்கரைப்பட்டி ஆகிய ஊர்களில் வாழும் கிராம மக்கள் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மற்றும் நாகர்கோவிலில் பல்கலைக்கழகத்தின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தினை அணுகி நவீன கால்நடை பராமரிப்பு முறைகள் பற்றிய பயிற்சிகளை பெற்று பயனடையலாம்.

36—

மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்

வினா எண் 10390—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தூத்துக்குடி மாவட்டம், உவரியில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முந்தைய தூத்துக்குடி மாவட்டம் தற்போது திருநெல்வேலி மாவட்டம், உவரியில் புதிய மீன்பிடி துறைமுகம் அமைப்பது தொடர்பான பல்வேறு ஆய்வு பணிகள் மேற்கொண்டு அதற்கான விரிவான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆலோசனை பணிகளுக்கு மாநில அரசின் நிதியின்கீழ் 2021-2022 ஆம் நிதியாண்டில் நிருவாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிட்டுள்ளது.

37—

மாட்டினங்களைப் பாதுகாத்தல்

வினா எண் 10438—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புலிக்குளம், ஆலம்பாடி, காங்கேயம் இன மாடுகளை அதிகப்படியாக இனப்பெருக்கம் செய்யவும், தருமபுரி, சேலம், கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ஆலம்பாடி நாட்டு மாடுகளின் இனப் பெருக்கத்தை அதிகப்படுத்தவும், பர்கூர் மலை மாடுகளை பாதுகாக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தின் நாட்டின மாடுகளான பர்கூர், புலிக்குளம், காங்கேயம் மற்றும் ஆலம்பாடி மாட்டினங்களை அதன் வாழ்விடங்களில் பாதுகாத்திட பர்கூரில், பர்கூர் மாட்டின ஆராய்ச்சி நிலையம், மானாமதுரையில் புலிக்குளம் மாட்டின ஆராய்ச்சி நிலையம், ஈரோட்டில் காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையம் மற்றும் தருமபுரியில் ஆலம்பாடி மாட்டின

ஆராய்ச்சி நிலையம் ஆகியவை தமிழக அரசின் நிதியுதவியுடன் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன. மேலும், மரபுரீதியில் அவற்றின் திறனுயர்த்தப்பட்டு உயர் ரக மாடுகளை இனப்பெருக்கம் செய்து கால்நடை விவசாயிகளுக்கு வழங்கும் பணியினை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மேற்கொள்ளும்.

38—

இட ஒதுக்கீடை பின்பற்றுதல்

வினா எண் 21401—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மத்திய அரசுப் பணியிடங்கள், கல்வி நிறுவனங்களில், இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீட்டை முழுமையாக பின்பற்ற ஒன்றிய அரசை தமிழக அரசு வலியுறுத்த முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒன்றிய அரசின் உயர் கல்வி நிறுவனங்களில், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள 27 சதவீத இட ஒதுக்கீடு, முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, IIT, IIM, AIIMS ஆகிய ஒன்றிய அரசின் அனைத்து உயர் கல்வி நிறுவனங்களிலும் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவீத இட ஒதுக்கீட்டினை முழுமையாக நடைமுறைப்படுத்திட வேண்டுமென்று ஒன்றிய அரசை இவ்வரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

39—

நிலுவைத் தொகை வழங்குதல்

வினா எண் 3687—திரு. பொன். ஜெயசீலன்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 அக்டோபர் 18]

தமிழ்நாடு தேயிலை தோட்ட கழகத் (TANTEA) தொழிலாளர்களுக்கு வழங்கப்படாமல் நிலுவையில் இருக்கும் பணப்பலன்களை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்:

தேயிலை தொழிலில் ஏற்பட்ட சரிவின் காரணமாக, கடந்த 10 ஆண்டுகளாக தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருவதால் கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்பட வேண்டிய ஊதியமே உரிய நேரத்தில் வழங்க இயலாத நிலை உள்ளது. அதன்படி தற்போது பணியில் இருக்கும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் மற்றும் ஓய்வுபெற்ற தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய மொத்த தொகை ரூ.2604.48 இலட்சம் ஆகும். கடந்த கொரோனா காலத்தில் கழகத்தின் தேயிலைத்தூள் 100 சதவிகிதம் இணையவழி மூலமாக விற்பனை செய்யப்பட்டதால் தேயிலைத்தூள் ரூ.117.03-க்கு விற்பனை செய்யப்பட்டது. மேற்படி விற்பனையின் காரணமாக கிடைக்கப்பெற்ற லாபத்தில் தொழிலாளர்களுக்கு கடந்த ஏப்ரல் 2018 முதல் மார்ச் 2019 வரை வழங்கப்படாமல் இருந்த விடுப்பு ஊதியம் ரூ.1.22 கோடி வழங்கப்பட்டுள்ளது. வங்கியில் ரூ.10 கோடி ரொக்க கடன் பெற்று தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு மாதச் சம்பளம் நவம்பர் 2021 வரை தவறாமல் வழங்கப்பட்டுள்ளது. தேயிலைத்தூளின் விலைவீழ்ச்சி காரணமாகவும், தேயிலைத் தரகர்களின் ஒருங்கிணைப்பை தடுப்பதற்காகவும் வரும் ஜனவரி 2022 முதல் ஜப்பானிய ஏலமுறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. வடமாநிலங்களிலிருந்து குறைந்த விலையில் தரமற்ற தேயிலைத்தூளை வாங்கக்கூடாது என்று தேயிலைத்தூள் வாடிக்கையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், தேயிலைத்தூளின் தரத்தை உயர்த்துவதற்கு தொழிற்சாலைகள் நவீனமயமாக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட நடவடிக்கையின்மூலம் விற்பனை செய்யப்படாமல் இருப்பில் உள்ள தரமாக தயாரிக்கப்பட்ட தேயிலைத்தூளை வரும் வாரங்களில் நல்ல விலையில் முழுவதுமாக ஏல சந்தையில் விற்பனை செய்து நிதிநிலை சீர்படும்பட்சத்தில் கழகத்தில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற மற்றும் தற்போது பணியிலுள்ள பணியாளர்களுக்கு நிலுவை தொகைகள் உடனடியாக வழங்கப்படும்.

40—

சாலை அமைத்தல்

வினா எண் 10142—திரு. ஆ. கோவிந்தசாமி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி ஒன்றியம், திப்பிரெட்டி அள்ளியிலிருந்து காளிகரம்பு வழியாக கோம்பை வழியில் தருமபுரி செல்ல சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி ஒன்றியம், திப்பிரெட்டி அள்ளியிலிருந்து காளிகரம்பு வழியாக கோம்பை வழியில் தருமபுரி செல்ல சாலை அமைக்க கோரியுள்ள வழித்தடம் நூலஅள்ளி, ரெட்டிஅள்ளி காப்புக் காட்டில் அமைந்துள்ளது. இவ்வழித்தடம், நூலஅள்ளி, ரெட்டிஅள்ளி காப்புக் காட்டின் தமிழ்நாடு வனச் சட்டம், 1882 பிரிவு 16-ன்கீழான அறிவிக்கையில் 1.50 மீட்டர் அகலத்திற்கு வழித்தட உரிமம் வழங்கப்பட்டுள்ள பகுதியாகும். இந்த 1.50 மீட்டர் அகலம் சாலை அமைக்க போதுமானதாக இருக்காது. எனவே, சாலை அமைக்க குறைந்தபட்சம் 7.50 மீட்டர் அகலம் வன நிலம் தேவைப்படும். நடப்பில் உள்ள 1980 ஆம் வருட வனப் பாதுகாப்பு சட்டத்தின்படி வனமற்ற பிற பயன்பாட்டிற்கு வன நிலம் ஒதுக்க மத்திய அரசின் அனுமதி பெறப்பட வேண்டும். எனவே, 6.41 கி.மீ. நீளத்திற்கு 7.50 மீட்டர் அகலம் கொண்ட சாலையாக அமைக்க தேவைப்படும் 4.607 எக்டர் வன நிலம் ஒதுக்கக் கோரி வனப் பாதுகாப்பு சட்டம், 1980 பிரிவு 2-ன்கீழ் மத்திய அரசின் அனுமதி பெற (பிரேரணை எண் FB/TN/Road/5209/2012, நாள் 10-8-2012-ல்) நல்லம்பள்ளி வட்டார வளர்ச்சி அலுவலரால் Forest Clearance இணையதளத்தில் ஏற்கெனவே பதிவேற்றம் செய்யப்பட்டு, சில கூடுதல் விவரங்கள் கேட்கப்பட்டு, நல்லம்பள்ளி வட்டார வளர்ச்சி அலுவலரிடம் நிலுவையில் உள்ளது.

2022 அக்டோபர் 18]

மேலும், இச்சாலை அமைக்கப்பட உள்ள வன நிலத்தில் இயற்கையாக வளர்ந்துள்ள 70 மரங்களை அகற்றுவதற்கு ஞமேன்மைமிகு உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் அனுமதி கோரி நல்லம்பள்ளி வட்டார வளர்ச்சி அலுவலரால் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றத்தின் அனுமதி பெற்று இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட பின் 1980 ஆம் வருட வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி பரிசீலனை செய்து, சாலை அமைக்க தேவையான வன நிலம் மத்திய அரசால் ஆணை வழங்கப்பட்ட பின்பு சம்பந்தப்பட்ட ஊரக வளர்ச்சித் துறைக்கு ஒதுக்கி நடவடிக்கை எடுக்கப்படும்.

41—

மண்ணெண்ணெய் பாக்கெட் விநியோகம்

வினா எண் 2484—திரு. இரா. அருள்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நியாய விலைக் கடைகளில் மண்ணெண்ணெயை பாக்கெட் செய்து விநியோகிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி, சர்க்கரை, கோதுமை மற்றும் துவரம் பருப்பு போன்ற இன்றியமையாப் பொருள்கள் நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு மின்னணு தராசுமூலம் எடையிட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. இதேபோன்று மண்ணெண்ணெய் நியாய விலைக் கடைகளில் கூம்பு வடிவ கொள்ளளவு (Conical Measure) மூலம் சரியான முறையில் அளவிடப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மண்ணெண்ணெயை பாக்கெட்டுகளில் விற்பனை செய்ய சாத்தியக்கூறுகள் இல்லை.

[*2022 அக்டோபர் 18*

42—

PHH குறியீடு குடும்ப அட்டை வழங்குதல்

வினா எண் 3911—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொது விநியோக திட்டத்தின்கீழ் பயன்பெறும் தகுதியுடைய ஏழைகளின் குடும்ப அட்டைகளில் பதிக்கப்பட்டுள்ள NPHH என்ற குறியீட்டை மாற்றி PHH என்ற குறியீடு கொண்ட குடும்ப அட்டையாக வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேசிய உணவு பாதுகாப்பு சட்டம் 2013-ன்கீழ் பொது விநியோகத் திட்டத்தின் பயன்பெற முன்னுரிமை குடும்ப அட்டைகள் (PHH) வழங்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் 31-3-2022 நிலவரப்படி 92,04,532 முன்னுரிமை குடும்ப அட்டைகள் நடைமுறையில் உள்ளன. முன்னுரிமையற்ற குடும்ப அட்டை (NPHH) பெற்ற குடும்ப அட்டைதாரர்களது கோரிக்கையின் அடிப்படையில் கள ஆய்வுக்குட்படுத்தப்பட்டு, தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு விதிகள், 2017 விதி 3-ல் உள்ள வழிமுறைகளின்படி தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்கள் முன்னுரிமை குடும்ப அட்டைதாரர்களாக (PHH) வகை மாற்றம் செய்யப்படுவர்.

43—

சமூக வலைதளங்களை கண்காணித்தல்

வினா எண் 2209—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளச்சாராயம் காய்ச்சுவது சம்பந்தமாக யூடியூப் போன்ற சமூக வலைதளங்களை கண்காணித்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

யூடியூப் போன்ற இணையதளங்களில் கள்ளச்சாராயம் காய்ச்சுவது போன்ற வீடியோக்களை வெளியிடுவது தொடர்பாக பொதுமக்கள் எவரேனும் மாநகர காவல் ஆணையரகத்திலுள்ள Cyber Cell/Central Crime Branch, Cyber Cell/Crime Branch CID *அல்லது ஒவ்வொரு மாவட்டத்தில் புதியதாக தொடங்கப்பட்டுள்ள* Cyber Cell/Cyber Crime Wing *ஆகிய சிறப்பு பிரிவுகளில் புகார் அளிக்கும்பட்சத்தில் மேற்கண்ட புகாரின் அடிப்படையின்கீழ் நடவடிக்கை எடுத்து குறிப்பிட்ட யூடியூப் சேனலை தடை செய்யும்படி யூடியூப் தலைமை அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டு குறிப்பிட்ட வீடியோவானது அந்த நிறுவனத்தின் விதிகள் மற்றும் கட்டுப்பாட்டினை மீறும்பட்சத்தில் யூடியூப் நிறுவனம் உரிய நடவடிக்கையினை மேற்கொள்கிறது.*

44—

மதுபானக் கடைகள் கணினிமயமாக்குதல்

வினா எண் 2971—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதுபானக் கடைகளை கணினிமயமாக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் அனைத்து மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் மற்றும் அனைத்து மதுபானக் கிடங்குகளின் அனைத்து செயல்களையும் கணினிமயமாக்குதல் தொடர்பாக, தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், 1998-ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளியினை இறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

[*2022 அக்டோபர் 18*

45—

சூரிய சக்தி மின்விளக்குகள் வழங்குதல்

வினா எண் 10338—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, ஊட்டமலையில் உள்ள மலைவாழ் மக்களுக்கு சூரிய சக்தி மின்விளக்குகள் மற்றும் தமிழக மலைவாழ் மக்களுக்கு விலையில்லா சூரிய சக்தி அவசர மின்விளக்குகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, ஊட்டமலையில் உள்ள மலைவாழ் மக்களுக்கு சூரிய சக்தி மின்விளக்குகள் மற்றும் தமிழக மலைவாழ் மக்களுக்கு விலையில்லா சூரிய சக்தி அவசர மின்விளக்குகள் வழங்கும் திட்டம் ஏதும் தற்சமயம் செயல்படுத்தப்படவில்லை.

46—

சூரிய சக்தி கொதிகலன்கள் மானிய விலையில் வழங்குதல்

வினா எண் 10340—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிராமப்புற மக்களுக்கு சூரிய சக்தி சமையல் அடுப்பு, தமிழக மக்களுக்கு சமையலறைக் கழிவுமூலம் பயோகேஸ் தயாரிக்கும் கொள்கலன்கள் (Biogas Plant), *சூரிய சக்திமூலம் இயங்கும் நீர் கொதிகலன்களை மானிய விலையில் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிராமப்புற மக்களுக்கு சூரிய சக்தி சமையல் அடுப்பு, தமிழக மக்களுக்கு சமையலறைக் கழிவுமூலம் பயோகேஸ் தயாரிக்கும் கொள்கலன்கள் (Biogas Plant), சூரிய சக்திமூலம் இயங்கும் நீர் கொதிகலன்கள் மானிய விலையில் வழங்கும் திட்டம் தற்போது ஏதும் செயல்படுத்தப்படவில்லை.

47—

ஆயத்த ஆடை பூங்கா அமைத்தல்

வினா எண் 3112—திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேதாரண்யம், ஆயக்காரன்புலம், 4-ம் சேத்தியில் ஆயத்த ஆடை பூங்கா அமைக்கும் பணிகளை தொடங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், ஆயக்காரன்புலம், 4-ம் சேத்தி கிராமத்தில் ஆயத்த ஆடை பூங்கா அமைப்பதற்கான முன்மொழிவுகள் "வேதா அப்பாரல் பார்க்" நிர்வாகத்திடமிருந்து பெறப்பட்டு, தமிழ்நாடு அரசால் ஒன்றிய அரசுக்கு ஏற்கெனவே 11-1-2021 அன்று பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசின் ஒப்புதல் ஆணை எதிர்நோக்கப்படுகிறது. "வேதா அப்பாரல் பார்க்" திட்டத்திற்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்த உடன் இதில் மேற்கொண்டு பணிகள் நடைபெறும்.

[2022 அக்டோபர் 18

48—

ஜவுளிப் பூங்கா அமைத்தல்

வினா எண் 4414—திரு. இரா. அருள்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், வீரபாண்டி ஒன்றியம், இளம்பிள்ளை பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், வீரபாண்டி ஒன்றியம், இளம்பிள்ளை பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க தொழில்முனைவோர்கள் முன்வருவார்களேயானால் அவர்களிடமிருந்து பிரேரணை பெறப்பட்டு அதனை பரிசீலித்து ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அல்லது சிறிய அளவிலான ஜவுளிப் பூங்கா மற்றும் புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை 2019-ன் வகைகளுக்குட்பட்டு சலுகைகளை வழங்கி ஜவுளிப் பூங்கா அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

49—

நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்

வினா எண் 8067—திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பள்ளியாடி நெசவாளர் கூட்டுறவு சங்கம் சார்பில் பாலூர் பகுதியில் புதியதாக நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பள்ளியாடி கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் எண் 2489, பள்ளியாடி பகுதியில் 683 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. பாலூர் பகுதி, பள்ளியாடி பகுதியிலிருந்து 10 கிலோ மீட்டர் (தோராயமாக) தொலைவில் உள்ளது. பாலூர் பகுதியில் பாலூர், கண்ணன்விளை, ஆத்திவிளை, தேவிக்கோடு, பூட்டேற்றி, இராஜாஜி மற்றும் கல்லடை ஆகிய 7 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. மேற்படி சங்கங்கள் 756 உறுப்பினர்களுடன் வேட்டி உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றன. மேலும், தமிழ்நாடு அரசின் வேட்டி-சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் வேட்டி உற்பத்தி செய்து, தமிழக அரசிற்கு வழங்கி வருகின்றன. மேற்படி சங்கங்களின் வருடாந்திர உற்பத்தி ரூ.370.66 இலட்சம் அளவிலும் மற்றும் விற்பனை ரூ.433.90 இலட்சம் அளவிலும் உள்ளது. பாலூர் பகுதி 7 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுடன் தன்னிறைவு அடைந்த பகுதியாக உள்ளது. எனவே, பள்ளியாடி கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் சார்பில் பாலூர் பகுதியில் புதியதாக நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

50—

நூற்பாலையை தரம் உயர்த்துதல்

வினா எண் 8068—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், ஆரல்வாய்மொழியில் செயல்பட்டுவரும் கூட்டுறவு நூற்பாலையைச் சீரமைத்து தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், ஆரல்வாய்மொழியில் அமைந்துள்ள கூட்டுறவு நூற்பாலையானது 24960 கதிர்களுடன் 1963 ஆம் ஆண்டு 30.00 ஏக்கர் பரப்பளவில் ஆரம்பிக்கப்பட்டது.

ஆலையானது 2015-2016 ஆம் ஆண்டில் ரூ.31.97 கோடி செலவில் நவீனமயமாக்கப்பட்டது. மேலும், அவ்வப்போது பழுதடையும் உதிரி பாகங்கள் மாற்றப்பட்டு, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான சிட்டா நூல் இரகங்கள் மற்றும் அரசு திட்டங்களுக்குத் தேவையான நூல் இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வாலை இப்பகுதியில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சிட்டா நூல் தேவையினை போதுமான அளவு நியாயமான விலையில் தடையின்றி தொடர்ந்து பூர்த்தி செய்து வருவதால், ஆரல்வாய்மொழியில் உள்ள கூட்டுறவு நூற்பாலையை விரிவாக்கம் செய்வதற்கான அவசியம் தற்சமயம் எழவில்லை.

51—

கூட்டுறவு நூற்பாலை விரிவாக்கம்

வினா எண் 9859—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரல்வாய்மொழியில் உள்ள கூட்டுறவு நூற்பாலையை விரிவாக்கம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

2022 அக்டோபர் 18]

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், ஆரல்வாய்மொழியில் அமைந்துள்ள கூட்டுறவு நூற்பாலையானது 24,960 கதிர்களுடன் 1963 ஆம் ஆண்டு 30.00 ஏக்கர் பரப்பளவில் ஆரம்பிக்கப்பட்டது.

ஆலையானது 2015-16 ஆம் ஆண்டில் ரூ.31.97 கோடி செலவில் நவீனமயமாக்கப்பட்டது. மேலும், அவ்வப்போது பழுதடையும் உதிரி பாகங்கள் மாற்றப்பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவையான சிட்டா நூல் இரகங்கள் மற்றும் அரசு திட்டங்களுக்குத் தேவையான நூல் இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வாலை, இப்பகுதியில் உள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் சிட்டா நூல் தேவையினை போதுமான அளவு நியாயமான விலையில் தடையின்றி தொடர்ந்து பூர்த்தி செய்து வருவதால், ஆரல்வாய்மொழியில் உள்ள கூட்டுறவு நூற்பாலையை விரிவாக்கம் செய்வதற்கான அவசியம் தற்சமயம் எழவில்லை.

52—

பனை வளர்ச்சி வாரியம்

வினா எண் 9967—திரு. இரா. அருள்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பனை வளர்ச்சி வாரியம் என்ற அமைப்பை உருவாக்கி பனை மரத்தினை காக்கவும், பனைவெல்லம், பனங்கற்கண்டு போன்ற பனை உற்பத்தி பொருட்களை ஊக்குவிக்க உரிய செயல்திட்டம் உருவாக்கவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் 6-1-1995-ல் தோற்றுவிக்கப்பட்டு சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

பனை வெல்லம் மற்றும் பனங்கற்கண்டு போன்ற பனை பொருட்களை ஊக்குவிக்க உரிய செயல்திட்டம் உருவாக்கப்பட்டு, இதற்குரிய மூலப் பொருளான பதநீரை, பனைத் தொழிலாளர்களிடமிருந்து ஓர் ஆண்டில் (பதநீர் பருவ காலத்தில்) சுமார் 2 இலட்சம் முதல் 3 இலட்சம் லிட்டர் வரை கொள்முதல் செய்யப்பட்டு, பனை வெல்லம் மற்றும் பனங்கற்கண்டு போன்ற பனை பொருட்களை உற்பத்தி செய்து, மாநில இணையம் மற்றும் மாவட்ட சம்மேளனங்களின் விற்பனை நிலையங்கள்மூலம் தமிழகம் முழுவதும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின்மூலம் தூத்துக்குடி மாவட்டம், வீரபாண்டியபட்டினத்தில் பனைத் தொழிலாளர்களுக்கு உதவிடும் வகையில் தரமான பனை வெல்லம் உற்பத்தி செய்திட ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது பயன்பாட்டு மையம் அமைத்திடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

250 பனை விவசாயிகளுக்கு தரமான பனை வெல்லம் தயாரிப்பதற்கான பயிற்சியும், பயிற்சி பெற்றவர்களுக்கு பனை வெல்லம் காய்ச்ச தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்திடவும் மானியமாக ரூ.50.00 இலட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு திருச்செந்தூர், கடலூர், மதுரை, சாயல்குடி மற்றும் குன்னத்தூர் ஆகிய இடங்களில் தலா 50 நபர்களுக்கு விரைவில் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

பனை வெல்லத்தின் விற்பனையை அதிகரிக்கும் வகையில் அரசினால் உரிய திட்டம் வகுக்கப்பட்டு, நவம்பர் 2021 முதல் 14-3-2022 வரையில் பனை விவசாயிகளிடமிருந்து 28.5 டன் தரமான பனை வெல்லம் கொள்முதல் செய்து நியாய நிலைக் கடைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

53—

மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு நிவாரணம்

வினா எண் 10326—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 அக்டோபர் 18]

(அ) மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு மழைக் காலத்தில் நிவாரணம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு மழைக்கால பராமரிப்பு உதவித் தொகையாக 2017-2018 ஆம் ஆண்டு முதல் தேர்வு செய்யப்பட்ட மண்பாண்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.5,000/- மழைக்கால பராமரிப்பு தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதனை தொடர்ந்து 2021-2022-ல் இத்திட்டத்தினை செயல்படுத்திடும்பொருட்டு 11,822 மண்பாண்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு தொகை ரூ.5,000/- வீதம் வழங்கப்பட்டுள்ளது.

54—

மருத்துவ காப்பீட்டுத் தொகை

வினா எண் 12123—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதியில் நெசவாளர் குடும்பங்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மருத்துவ காப்பீட்டுத் தொகையை மீண்டும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு, 2005 முதல் (2012-2013 நீங்கலாக) 2014 வரையில் ICICI Lombard *என்ற நிறுவனத்தின் மூலமும் மற்றும்*

1-10-2014 முதல் 31-3-2017 வரையில் யுனைடெட் இந்தியா ஆயுள் காப்பீட்டு கழகத்தின் மூலமும், ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்திய மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் நெசவாளர்களுக்கான மருத்துவ செலவினத் தொகை வழங்கப்பட்டு வந்தது.

மேற்கூறிய மருத்துவ காப்பீட்டுத் திட்டத்திற்கு மாற்றாக தற்போது முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு அனைத்து கைத்தறி நெசவாளர்களும் இலவசமாக மருத்துவ சிகிச்சைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், அரசால் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு மற்றும் கூட்டுறவு அமைப்பு சாரா கைத்தறி நெசவாளர்கள் அனைவரையும் சேர்த்திட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, 2018 ஆம் ஆண்டு முதல் 31-3-2022 வரையில் கும்பகோணம் தொகுதி உட்பட, 57,181 கைத்தறி நெசவாளர்கள் சேர்க்கப்பட்டு பயன்பெற்றுள்ளனர்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்ட வழிமுறையின்படி, மருத்துவ செலவினத் தொகை வழங்கப்படுவதில்லை. நாளது தேதியில் மேற்படி திட்டத்தின்கீழ் கும்பகோணம் தொகுதியில் விடுவிக்கப்பட வேண்டிய தொகை எதுவும் நிலுவையில் இல்லை.

55—

ஆப்-கோவுடன் புரிந்துணர்வு

வினா எண் 13161—திரு. க.சொ.க. கண்ணன்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதியில் நெசவுத் தொழில் மேற்கொள்ளும் நெசவாளர்கள் பயன்பெறும் வகையில், நெசவாளர்கள் தயாரிக்கும் சேலைகளை கோ-ஆப்டெக்ஸ்மூலம் கொள்முதல் செய்து, ஆந்திராவில் விற்பனை செய்திட ஆப்-கோவிடம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜெயங்கொண்டம் தொகுதியில் நெசவுத் தொழில் மேற்கொள்ளும் நெசவாளர்கள் பயன்பெறும் வகையில், நெசவாளர்கள் தயாரிக்கும் சேலைகளை கோ-ஆப்டெக்ஸ்மூலம் கொள்முதல் செய்து, ஆந்திராவில் விற்பனை செய்திட, ஆப்-கோவிடம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யும் செயல்திட்டம் ஏதும் இல்லை.

மேலும், நடப்பாண்டில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தால், ஜெயங்கொண்டம் தொகுதியிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்ட 6,117 சேலைகள் கொள்முதல் செய்யப்பட்டு நாடு முழுவதும் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

56—

காலிப் பணியிடம் நிரப்புதல்

வினா எண் 625—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, திருவையாறு வட்ட மருத்துவமனையில் பிணவறை ஊழியர் பணியிடத்தை நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, திருவையாறு அரசு மருத்துவமனை 44 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 277 வெளிநோயாளிகளும், 18 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இம்மருத்துவமனையில் மாதமொன்றுக்கு சராசரியாக 5 பிரேதங்கள் பிரேத பரிசோதனை செய்யப்படுகின்றன.

திருவையாறு, அரசு மருத்துவமனைக்கு பிணவறை ஊழியர் பணியிடம் ஒப்பளிக்கப்படவில்லை. இருப்பினும், அம்மருத்துவமனையில் பணிபுரியும் ஒரு துப்புரவு பணியாளர் மற்றும் ஒரு மருத்துவமனை பணியாளரைக் கொண்டு பிணவறை பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

57—

வரியைக் குறைத்தல்

வினா எண் 7296—திரு. இரா. அருள்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மேற்கு தொகுதி, வெள்ளி கால் கொலுசு தொழிலாளர்கள் மிகவும் நலிந்த நிலையில் உள்ளதால், G.S.T. வரியைக் குறைக்க ஒன்றிய அரசை மாநில அரசு வலியுறுத்த முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

வெள்ளி கால் கொலுசின்மீது தற்போது 3 (1.5 + 1.5) சதவிகித சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிக்கப்பட்டு வருகிறது. இதனை மேலும் குறைப்பது என்பது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தில் விவாதிக்கப்பட்டு அனைத்து மாநில அரசுகள் மற்றும் ஒன்றிய அரசின் ஒப்புதலின் பேரிலேயே முடிவுகள் மேற்கொள்ள இயலும்.

58—

வரியைக் குறைத்தல்

வினா எண் 7315—திரு. S.R. இராஜா: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 அக்டோபர் 18]

(அ) தமிழ்நாட்டில் கட்டட கட்டுமானத் துறைக்கு 18% G.S.T. வரி உள்ளதை குறைத்திட ஒன்றிய அரசிடம் தமிழக அரசு வலியுறுத்த முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சாதாரண பொதுமக்களுக்கு பயன் அளிக்கும் வகையில் குறைந்த விலையில் கட்டப்படும் வீடுகளுக்கு உள்ளீட்டு வரி வரவின்றி 1 சதவிகிதம் மற்றும் குறைந்த விலை அல்லாமல் கட்டப்படும் வீடுகளுக்கு உள்ளீட்டு வரி வரவின்றி 5 சதவிகிதம் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி 1-4-2019 முதல் விதிக்கப்பட்டு வருகிறது. மேலும், கட்டுமானப் பணி சேவை மீதான 18 சதவிகித வரி குறைக்கப்பட்டால், உள்ளீட்டு வரி வரவு மிகைப்படும் சூழலில், அதனை திருப்புத் தொகையாக பெறுவதற்கு வழிவகை சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படவில்லை. அத்துடன், கட்டுமானத் துறைக்கு சலுகைகள் வழங்குவது குறித்து சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தில் விவாதிக்கப்பட்டு அனைத்து மாநில அரசுகள் மற்றும் ஒன்றிய அரசின் ஒப்புதலின் பேரிலேயே முடிவுகள் மேற்கொள்ள இயலும்.

59—

பேருந்து நிறுத்தம் அமைத்தல்

வினா எண் 1325—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, தரமணி இணைப்புச் சாலையில் உள்ள சீத்தாபதி நகர் இந்தியன் வங்கி அருகில் பேருந்துகள் நின்று செல்ல பேருந்து நிறுத்தம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி-தரமணி இணைப்புச் சாலையில், தரமணி திசையில் உள்ள டான்சி நகர் பேருந்து நிறுத்தத்திலிருந்து சுமார் 250 மீட்டர் தொலைவில் சீத்தாபதி நகர் இந்தியன் வங்கி அமைந்துள்ளது. அதேபோல், சீத்தாபதி நகர் இந்தியன் வங்கி பகுதியிலிருந்து சுமார் 400 மீட்டர் இடைவெளி தூரத்தில் பேபி நகர் பேருந்து நிறுத்தம் அமைந்துள்ளது. எஸ்.ஆர்.பி. டூல்ஸ்-வேளச்சேரி திசையில் பேபி நகர் பேருந்து நிறுத்தம் பகுதியிலிருந்து சுமார் 100 மீட்டர் இடைவெளி தூரத்தில் சீத்தாபதி நகர் இந்தியன் வங்கி அமைந்துள்ளது. இந்தியன் வங்கி பகுதியிலிருந்து சுமார் 250 மீட்டர் இடைவெளி தூரத்தில் டான்சி நகர் பேருந்து நிறுத்தம் அமைந்துள்ளது. எனவே, இந்தியன் வங்கி பகுதிக்கு முன்னும், பின்னும் குறுகிய தூரத்தில் பேருந்து நிறுத்தம் ஏற்கெனவே அமைந்துள்ளதால் சீத்தாபதி நகர்-இந்தியன் வங்கி அருகில் பேருந்து நிறுத்தம் அமைத்திட அவசியம் எழவில்லை.

60—

ஓய்வுக்கால பணப் பலன்கள் வழங்குதல்

வினா எண் 2165—திரு. இரா. அருள்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற பணியாளர்களின் ஓய்வுக்கால பணப் பலன்கள் அனைத்தும் விரைவாக வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியப் பணப் பலன்களான வருங்கால வைப்பு நிதி தொகை, பணிக்கொடை தொகை, ஈட்டிய விடுப்பு தொகை மற்றும் சமூக

2022 அக்டோபர் 18]

பாதுகாப்புத் தொகை ஆகிய ஓய்வூதியக் காலப் பணப் பலன்களை வழங்குவது யாவும் போக்குவரத்துக் கழகங்களைச் சார்ந்ததாகும். எனினும், ரூபாய் 80.54 கோடி வழங்க அரசு ஒப்புதல் அளித்து, ஜனவரி 2020 முதல் ஏப்ரல் 2020 வரையில் ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதிய ஒப்படைப்பு தொகை மற்றும் இதர பணப் பலன்களும் 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வழங்கப்பட்டுவிட்டது. மேலும், மே 2022 முதல் மார்ச் 2022 வரையில் ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியப் பணப் பலன்கள் வழங்க அனைத்து போக்குவரத்துக் கழகங்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

61—

பேருந்து டிக்கெட் கொடுப்பதில் மாற்றம்

வினா எண் 2166—திரு. இரா. அருள்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

போக்குவரத்துக் கழகங்களில் நடத்துனர்கள் எச்சிலை பயன்படுத்தி டிக்கெட் கிழிப்பதை தடுத்து கொரோனா பரவலை கட்டுப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரசுப் பேருந்துகளில் பணிபுரியும் நடத்துனர்கள் எச்சிலை பயன்படுத்தி டிக்கெட் கிழிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக பயணிகளிடம் இருந்து பெறப்படும் புகார்களின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட நடத்துனர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

62—

ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தை

வினா எண் 2170—திரு. இரா. அருள்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 1-10-2019 அன்று நிர்ணயம் செய்யப்பட வேண்டிய ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தை தொழிற்சங்கங்களுடன் பேசி இறுதி செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(i) 14-வது ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தை தொடங்க ஏதுவாக நிர்வாகத் தரப்பில் அனைத்து போக்குவரத்து நிர்வாக தரப்பு சார்பாக ஒரு குழு அமைத்து அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. (அரசாணை (ப) எண் 83, போக்குவரத்து (சி1) துறை, நாள் 4-10-2019). ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தைக் குழுவின் பரிந்துரைகளை ஆய்வு செய்ய துணைக் குழு (Sub Committee) ஒன்றினை அமைத்து அரசாணை வெளியிடப்பட்டது. (அரசாணை எண் 29, போக்குவரத்து (சி1) துறை, நாள் 2-6-2020 மற்றும் அரசாணை எண் 51, போக்குவரத்து (சி1) துறை, நாள் 22-9-2021.

(ii) அரசு போக்குவரத்து கழக தொழிலாளர்களுக்கான 14-வது ஊதிய ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தையானது இரண்டு கட்டங்களாக நடைபெற்றதன் அடிப்படையில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 14-வது ஊதிய ஒப்பந்தத்தின்கீழ் பிப்ரவரி 2021 முதல் இடைக்கால நிவாரணமாக ரூ.1,000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) வழங்க அனுமதி அளித்து கடித (நிலை) எண் 43, போக்குவரத்து (சி1) துறை, நாள் 26-2-2021-ல் ஆணை வெளியிடப்பட்டது.

(iii) மேலும், 3-வது கட்ட பேச்சுவார்த்தை 29-12-2021 அன்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் 65 தொழிற்சங்க தலைவர்/பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

(iv) 14-வது ஊதிய ஒப்பந்த குழுவின் நான்காவது கட்ட பேச்சுவார்த்தை விரைவில் நடைபெறும்.

2022 அக்டோபர் 18]

63—

திருக்கோயிலுக்கு குடமுழுக்கு

வினா எண் 3104—திரு. எம்.ஆர். காந்தி: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பத்மநாபபுரம் தொகுதி, திருவட்டாறு அருள்மிகு ஆதிகேசவ பெருமாள் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *சுசீந்திரம், கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்கள் நிர்வாகத்திற்குட்பட்ட திருவட்டாறு அருள்மிகு ஆதிகேசவ பெருமாள் திருக்கோயில் 108 வைணவத் தலங்களுள் ஒன்றாகும். 8 ஆம் நூற்றாண்டில் நம்மாழ்வாரால் பாடப் பெற்ற தலமும் ஆகும். ஆகவே, இத்திருக்கோயில் 8 ஆம் நூற்றாண்டிற்கு முந்தைய பழமையுடையது என அறியப்படுகிறது. இத்திருத்தலத்தினைச் சுற்றி கோதையாறும், பரளியாறும் வட்டமிடுவதால் திருவட்டாறு என அழைக்கப்படுகிறது. இத்திருக்கோயில் 3.23 ஏக்கர் பரப்பளவு கொண்டது. மூலவர் அருள்மிகு ஆதிகேசவ பெருமாள் 22 அடி நீளத்தில் அனந்த சயனத்தில் பள்ளி கொண்டுள்ளார். இந்த திருவுருவம் 16008 சாளக்கிராமங்கள் மற்றும் கடுசக்கரையால் ஆன திருப்படிமம் ஆகும்.*

திருப்பணி தொடர்பாக ரூ.6.70 கோடி செலவில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டதில் 85 சதவீதப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. குடமுழுக்கு தேதி நிர்ணயம் செய்து திருக்கோயில் தந்திரியிடம் முகூர்த்தச் சார்த்து பெறப்பட்டபின் மகா குடமுழுக்கு நடத்தப்படும்.

64—

கோயில் நிலம் மீட்டெடுத்தல்

வினா எண் 3258—திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-3, வார்டு 22, பிள்ளையார் கோயில் தெருவில் உள்ள அருள்மிகு சித்தி விநாயகர் கோயிலுக்கு சொந்தமான 25 சென்ட் நிலத்தை, குரு சாந்தி நகர் தனியார் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை மீட்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, புழல், காவாங்கரை, பிள்ளையார் கோயில் தெருவில் உள்ள அருள்மிகு சித்தி விநாயகர் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறையின் நேரடி ஆளுகையின்கீழ் இல்லாத ஒரு பொது திருக்கோயிலாகும்.

இத்திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துகள் ஏதும் உள்ளதா என்றும், அவை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறியவும், திருக்கோயிலின் நலன் கருதியும், மேற்காணும் திருக்கோயிலை இந்து சமய அறநிலையத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் விரைவில் கொண்டு வந்து, பின்னர் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.

65—

அன்னதானத் திட்டம்

வினா எண் 5363—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2022 அக்டோபர் 18]

நெய்வேலி தொகுதி, வெங்கடாம்பேட்டை, அருள்மிகு ஸ்ரீவேணுகோபாலசுவாமி திருக்கோயிலில் பழுதடைந்துள்ள 16 கால் ஊஞ்சல் மண்டபத்தைச் சீரமைக்க நிதி ஒதுக்கவும் அக்கோயிலுக்கு திருத்தேர் வழங்கவும் மற்றும் அன்னதானத் திட்டத்தை செயல்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், வெங்கடாம்பேட்டை, அருள்மிகு ஸ்ரீவேணுகோபாலசுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். 13-வது நிதி ஆணைய நிதியுதவிமூலம் புனரமைக்கப்பட்ட இத்திருக்கோயிலின் மிகவும் பழமையான ஊஞ்சல் மண்டபம் கடந்த 29-9-2018 அன்று விழுந்துவிட்ட நிலையில், இம்மண்டபத்தினை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் பங்களிப்புடன் துறை நிதியுதவியும் அளித்து பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

இத்திருக்கோயிலில் ஏற்கெனவே திருத்தேர் ஏதுமில்லை. புதியதாக திருத்தேர் செய்திட திருக்கோயிலில் நிதி வசதியும் இல்லை. எனவே, பொதுமக்கள் நன்கொடை கிடைக்கப்பெறும் நிலையில் துறை நிதியுதவியும் அளித்து திருத்தேர் செய்திட வாய்ப்புள்ளது.

இத்திருக்கோயிலில் ஒருகால பூஜை மட்டுமே நடைபெற்று வரும் நிலையில் தினமும் 10 முதல் 15 நபர்கள் மட்டுமே தரிசனத்திற்கு வருகிறார்கள். அன்னதானம் வழங்குவதற்கு திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லை.

திருக்கோயிலில் அன்னதான திட்டம் துவங்க போதிய நிதி வசதி இல்லாத காரணத்தினாலும், பக்தர்களின் வருகையும் குறைவு என்ற காரணத்தினாலும் அன்னதானத் திட்டத்தினை இத்திருக்கோயிலில் செயல்படுத்திட வாய்ப்பு இல்லை.

66—

கோயில் நிலத்திற்கு வேலியிட்டு பாதுகாத்தல்

வினா எண் 6974—திரு. இரா. அருள்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2022 அக்டோபர் 18

சேலம் மேற்கு தொகுதி, அருள்மிகு ஸ்வர்ணபுரி விநாயகர் திருக்கோயில் எதிரில் உள்ள இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலத்தை இரும்பு வேலியிட்டு பாதுகாக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், மேற்கு வட்டம், ஸ்வர்ணபுரி அருள்மிகு ஸ்வர்ணபுரி விநாயகர் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறை உதவி ஆணையர் ஆளுகைக்குட்பட்ட பட்டியலில் சேராத திருக்கோயிலாகும். மேற்படி திருக்கோயிலுக்கு எதிர்புறத்தில் ச.எ.90/1-ல் உள்ள 3,800 சதுரடி கிராம நத்தம் நிலம் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டு, திருக்கோயில் நிருவாகத்தின்மூலம் கம்பி வேலி அமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது.

67—

கலைக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 9832—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் புதிய கலைக் கல்லூரி துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாக ஏற்கெனவே குழித்துறையில் ஸ்ரீதேவி குமரி மகளிர் கல்லூரி இயங்கி வருகிறது. எனவே, புதிய கலைக் கல்லூரி தொடங்க வழிவகை இல்லை.

2022 அக்டோபர் 18]

68—

திருமண மண்டபம் கட்டுதல்

வினா எண் 9833—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மண்டைக்காடு அருள்மிகு பகவதி அம்மன் ஆலயத்திற்குச் சொந்தமான இடத்தில் ஆக்கிரமிப்புகளை அகற்றி, இந்து சமய அறநிலையத் துறை சார்பாக திருமண மண்டபம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்கள் சுசீந்திரம் நிர்வாகத்திற்குட்பட்ட மண்டைக்காடு அருள்மிகு பகவதி அம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான, மண்டைக்காடு கிராமம் OS No.4419/1-47 சென்ட் புஞ்சை நிலம், தற்போது புதிய புல எண் 77/1-0.67.0 ஹெக்டேர் நிலத்தின் ஒரு பகுதியாக தனியார் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது. தனியார் பெயரில் வழங்கப்பட்டுள்ள பட்டாவை ரத்து செய்து ஆக்கிரமிப்பு அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டவுடன் திருமண மண்டபம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

69—

கல்வியியல் பாடப் பிரிவு தொடங்குதல்

வினா எண் 9837—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறையில் இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் செயல்பட்டு வரும் ஸ்ரீதேவி குமரி கலைக் கல்லூரியில் கல்வியியல் பட்டப் படிப்புக்கான பாடப் பிரிவுகள் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறையில் இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் செயல்பட்டுவரும் ஸ்ரீதேவி குமரி கலைக் கல்லூரியில் போதிய இட வசதி இல்லாத காரணத்தினால் தற்போது கல்வியியல் பட்டப் படிப்பு தொடங்குவதற்கான வாய்ப்பு இல்லை.

70—

கோயில் நிலங்களை மீட்டெடுத்தல்

வினா எண் 9944—திரு. இரா. அருள்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மேற்கு தொகுதி, அருள்மிகு சென்றாயப் பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை மீட்டு கோயிலுக்குப் பட்டா மாறுதல் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பாகல்பட்டி அருள்மிகு சென்றாயப் பெருமாள் திருக்கோயிலின் நிருவாகம், சேலம் அருள்மிகு சுகவனேசுவரர் திருக்கோயில் உதவி ஆணையர்/ செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வரப்பெறுகிறது. மேற்படி திருக்கோயிலின் தக்காராக சேலம் உதவி ஆணையர் அவர்களால் நிருவாகம் கவனிக்கப்பட்டு வரப்பெறுகிறது. மேற்படி திருக்கோயிலுக்குச் சொந்தமான தற்போது தனியார் பெயர்களில் பட்டாவாகியுள்ளதுமான 81.89 ஏக்கர் நிலங்களை விரைவில் மீட்டெடுத்து, திருக்கோயில் பெயரில் பட்டா மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2022 அக்டோபர் 18]

71—

கோயில் நிலங்களை மீட்டெடுத்தல்

வினா எண் 9946—திரு. இரா. அருள்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், தேவியாகுறிச்சியில் உள்ள அருள்மிகு சிதம்பரேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான விவசாய நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கவும் பொது ஏலத்தில் குத்தகை விடவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டம், தேவியாக்குறிச்சி கிராமம் அருள்மிகு சிதம்பரேஸ்வரர் திருக்கோயிலின் நிருவாகம் நிலை-3 செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வரப்பெறுகிறது. மேற்படி திருக்கோயிலின் தக்காராக சேலம் மாவட்டம், வடசென்னிமலை அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் நிலை-2 செயல் அலுவலர் செயல்பட்டு வருகிறார். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான மேற்படி கிராமத்தில் நன்செய் 6 ஏக்கர் நிலங்களும், புன்செய் 30 ஏக்கர் நிலங்களும் உள்ளன. மேற்படி நிலங்கள் வருடந்தோறும் விவசாய பயன்பாட்டிற்காகக் குத்தகைக்கு விடப்பட்டு வருகின்றன. இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான புல எண் 100/10-ல் உள்ள 5.03 ஏக்கர் புன்செய் நிலமும், புல எண் 95/1-ல் உள்ள 2.06 ஏக்கர் புன்செய் நிலமும், புல எண் 217/1பி-ல் உள்ள 0.77 சென்ட் புன்செய் நிலமும் ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கப்பட்டு வருடந்தோறும் குத்தகைக்கு விடப்பட்டு வருகிறது.

72—

கோயில் நிலத்தை மீட்டெடுத்தல்

வினா எண் 9948—திரு. இரா. அருள்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2022 அக்டோபர் 18

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், தேவியாகுறிச்சி அருள்மிகு சிதம்பரேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் தனியார் கல்லூரி கட்டியிருப்பதை மீட்டு, திருக்கோயிலுக்கு வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், தேவியாக்குறிச்சி அருள்மிகு சிதம்பரேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான மேற்படி கிராமத்தில், நன்செய் 6 ஏக்கர் நிலங்களும், புன்செய் 30 ஏக்கர் நிலங்களும் உள்ளன. மேற்படி நிலங்கள் வருடந்தோறும் விவசாய பயன்பாட்டிற்காகக் குத்தகைக்கு விடப்பட்டு வருகின்றன. அருள்மிகு அய்யனார் திருக்கோயிலுக்குச் சொந்தமான புல எண்100/11-ல் உள்ள 1.13 ஏக்கர் புன்செய் நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்து சுற்றுச்சுவர் கட்டி தாகூர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி நிருவாகத்தினரால் பயன்படுத்தி வருவது தெரிய வந்துள்ளதை தொடர்ந்து, மேற்படி நிலத்தில் உள்ள ஆக்கிரமிப்புகள் 24-2-2022 தேதியில் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டு திருக்கோயில் சுவாதீனத்தில் கொண்டு வரப்பட்டது.

73—

கொரோனா சிகிச்சைக்கு நிதியுதவி

வினா எண் 1826—திரு. இரா. அருள்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசு ஊழியர்களின் கொரோனா தொற்றை உறுதி செய்ய C.T. Scan அறிக்கையையும் ஏற்று காப்பீடு உதவி வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்:

அரசால் பட்டியலிடப்பட்டு கோவிட் சிகிச்சைக்கென அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் RT-PCR சோதனை மேற்கொள்ளாமல் C.T. Scan பரிசோதனை அடிப்படையில்

2022 அக்டோபர் 18]

மேற்கொண்ட அபாயகரமற்ற (Non-critical) *கொரோனா-19 சிகிச்சைக்கு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் மேற்கொண்டால் பரிசீலிக்கப்படும் என அரசுக் கடித எண் 36962/நிதி (சம்பளங்கள்)/2020, நாள் 11-11-2020 வழியாக தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது.*

74—

டிப்ளமோ படித்தவர்களுக்கு தேர்வு எழுத அனுமதி

வினா எண் 2217—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

டிப்ளமோ (பட்டயப் பொறியாளர்) படித்தவர்களை குரூப்-2 தேர்வு எழுத அனுமதிக்க TNPSC *தேர்வாணையம் முன்வருமா?*

விடை—

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்:

இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் (JEO), *சார்-பதிவாளர்* (SR), *உதவிப் பிரிவு அலுவலர், நகராட்சி ஆணையர், வருவாய் உதவியாளர் உள்ளிட்ட பதவிகளுக்கு நடத்தப்படும் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தொகுதி*-II (II & IIA) *தேர்வுக்கு கல்வித் தகுதியாக ஏதேனும் ஒரு பட்டப் படிப்பில் (கலை, அறிவியல், வணிகவியல்) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது.*

ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தொகுதி II (II & IIA) *தேர்வுகளில், தொகுதி*-IIA-*ல் அடங்கிய நேர்முகத் தேர்வு அல்லாத பதவிகளில், கைத்தறி ஆய்வாளர் பதவிக்கு மட்டும் கல்வித் தகுதியானது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஏதேனும் ஒரு பட்டம் அல்லது கைத்தறி தொழில்நுட்பம் அல்லது துணிநூல் தொழில்நுட்பம் அல்லது துணிநூல் செயலாக்கம் அல்லது செயற்கை இழை தொழில்நுட்பம் பிரிவுகளில் தமிழ்நாடு மாநில தொழிற்கல்வி மற்றும் பயிற்சி குழுவால் வழங்கப்பட்ட பட்டயப் படிப்பு (டிப்ளமோ) பெற்றிருக்க வேண்டும் என சிறப்பு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

தொகுதி IIA-ல் அடங்கிய, நேர்முகத் தேர்வு அல்லாத பதவிகளில் உள்ளடங்கிய, கைத்தறி ஆய்வாளர் பதவிக்கு மட்டும் வரையறை செய்யப்பட்டுள்ள பட்டயப் படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்ற கல்வித் தகுதியைக் கொண்டு தேர்வாணையத்தால் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது.

75—

போட்டித் தேர்வு மையம்

வினா எண் 12082—திருமதி கு. மரகதம் குமரவேல்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுராந்தகம் தொகுதியில் பட்டியல் இன மக்கள் பயன்பெறும் வகையில் போட்டித் தேர்வு மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொருளாதாரத்தில் பின்தங்கிய படித்த இளைஞர்கள் அரசு வேலை வாய்ப்பை பெறுவதற்கு ஏற்ப, வட சென்னையில், பழைய வண்ணாரப்பேட்டை, சர் தியாகராயா கல்லூரியில் பல்வேறு முகமைகள் நடத்தும் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையம் 4-1-2018 அன்று தொடங்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. மேலும், தமிழகத்தில் உள்ள அனைத்து இளைஞர்களும் பயன்பெறும் வகையில், மதுரை, கோவை, சேலம் மற்றும் சென்னையில் மற்றொரு பயிற்சி மையம் தொடங்க பணிகள் நடைபெற்று வந்த நிலையில், கொரோனா பெருந்தொற்று காரணமாக பயிற்சி மையங்கள் நிறுத்தி வைக்கப்பட்டன. பயிற்சி மையங்கள் புதிய உத்திகளுடன் மீள தொடர்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மதுராந்தகம் தொகுதியில் பட்டியல் இன மக்களுக்காக போட்டித் தேர்வுக்கான இலவச பயிற்சி மையம் அமைப்பது அரசின் ஆய்வில் தற்போது இல்லை.

2022 அக்டோபர் 18]

76—

ஆவின் பால் ஏற்றுமதி

வினா எண் 135—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆவின் பால் பொருட்களை வெளி மாநிலங்களுக்கும், கிழக்காசிய மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கும் அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

ஆவின் பால் பொருட்களை வெளி மாநிலங்களுக்கும், கிழக்காசிய மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கும் அனுப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

77—

மானிய விலையில் ஆவின் பொருட்கள்

வினா எண் 5314—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரசு மற்றும் தனியார் பள்ளி வளாகங்களில் ஆவின் பாலகங்கள் அமைத்து மாணவர்களுக்கு ஆவின் பொருட்களை மானிய விலையில் விற்பனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு மற்றும் தனியார் பள்ளி வளாகங்களில் ஆவின் பாலகங்கள் அமைக்க, பள்ளி நிர்வாகம் சார்பில் இடம் ஒதுக்கி, அனுமதி வழங்கும்பட்சத்தில் அங்கு ஆவின் பாலகம் அமைத்து மாணவர்களுக்கு மானிய விலையில் பால் உபபொருட்கள் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[*2022 அக்டோபர் 18*

78—

ஒருங்கிணைந்த பால் நிலையம் அமைத்தல்

வினா எண் 7993—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், ஆலாடு ஊராட்சி, புலிக்குளம் கிராமத்தில் ஒருங்கிணைந்த பால் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மீஞ்சூர் பகுதியில் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் ஏதும் இல்லை. பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், ஆலாடு ஊராட்சி, புலிக்குளம் கிராமத்தில் தேவையான களப்பணி மேற்கொண்டு, சாத்தியக்கூறுகள் இருப்பின் ஒருங்கிணைந்த பால் கொள்முதல் நிலையம் (பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம்) அமைக்கப்படும்.

79—

பள்ளியைச் சீரமைத்தல்

வினா எண் 3670—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், நெற்குன்றம் ஊராட்சி அரசு தொடக்கப் பள்ளியில் பழுதடைந்துள்ள கதவு மற்றும் சன்னல்களை புதியதாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், நெற்குன்றம் அரசு தொடக்கப் பள்ளியில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை 26 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். மேலும், சோழவரம் வட்டாரக் கல்வி அலுவலர்மூலம், நெற்குன்றம் ஊராட்சி அரசு தொடக்கப் பள்ளியில் கதவு மற்றும் சன்னல்களை சரிசெய்து தரக்கோரி சோழவரம் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு கடிதம் அனுப்பப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

80—

கழிப்பறை வசதி ஏற்படுத்துதல்

வினா எண் 4454—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மேற்கு தொகுதி, சாமிநாயக்கன்பட்டி ஊராட்சி, ஆதி திராவிடர் குடியிருப்பு அரசு தொடக்கப் பள்ளிக்கு கழிப்பறை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

சேலம் மேற்கு தொகுதி, சாமிநாயக்கன்பட்டி ஊராட்சி, ஆதி திராவிடர் குடியிருப்பு அரசு தொடக்கப் பள்ளியில், 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை 33 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். 1 தலைமையாசிரியர் மற்றும் 1 இடைநிலை ஆசிரியர் பணிபுரிந்து வருகின்றனர்.

மேலும், மாணவர்களுக்கு 1 கழிப்பறையும், மாணவிகளுக்கு 1 கழிப்பறையும் என மொத்தம் 2 கழிப்பறைகள் உள்ளன. மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கழிப்பறை வசதிகள் உள்ளதால், சேலம் மேற்கு தொகுதி, சாமிநாயக்கன்பட்டி ஊராட்சி, ஆதி திராவிடர் குடியிருப்பு அரசு தொடக்கப் பள்ளிக்குக் கழிப்பறை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

[2022 அக்டோபர் 18

81—

நூலகம் அமைத்தல்

வினா எண் 7463—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, வடக்குத்து ஊராட்சி, மேல ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதி நேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். பொதுமக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் பகுதி நேர நூலகமானது, ஊர்ப்புற நூலகம்/கிளை நூலகம்/ முழுநேர கிளை நூலகமாக தரம் உயர்த்தப்படும். எனவே, கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, வடக்குத்து ஊராட்சி, மேல ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் தற்போது நூலகம் அமைக்க வழிவகையில்லை.

82—

மாற்று சான்றிதழ் வழங்குதல்

வினா எண் 9818—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 8 ஆம் வகுப்புக்கு மேல் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் அரசு பள்ளிகளில் சேர மாற்று சான்றிதழ் தர மறுக்கப்படுவதை தடுத்து, அரசு பள்ளிகளில் சேர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் அரசு பள்ளிகளில் சேர மாற்றுச் சான்றிதழ் வழங்குவது சார்பாக வழக்கு எண் 16376/2021-ல் சென்னை உயர் நீதிமன்றம் 6-8-2021 அன்று வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் பள்ளிக் கல்வி ஆணையரகத்தால் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் ந.க. எண் 042193/ஜி2/இ3/2021, நாள் 16-8-2021-ல் சுற்றறிக்கை அனுப்பப்பட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

83—

பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைத்தல்

வினா எண் 10082—திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லாவரம் தொகுதி, அனகாபுத்தூரில் உள்ள மேல்நிலைப் பள்ளியிலிருந்து பிரித்து தனியாக பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது உள்ள நெறிமுறைகளின்படி, இருபாலர் மேல்நிலைப் பள்ளியிலிருந்து முதலில் மகளிர் உயர்நிலைப் பள்ளியாக மட்டுமே பிரிப்பதற்கு வழிவகை உள்ளது. அரசினர் இருபாலர் மேல்நிலைப் பள்ளியைப் பிரித்து நேரடியாக தனியாக பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைக்க வழிவகை இல்லை. எனவே, பல்லாவரம் தொகுதி, அனகாபுத்தூரில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியைப் பிரித்து தனியாக பெண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்க இயலாத நிலை உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

84—

உடற்கல்வி ஆசிரியர்களுக்கு விளையாட்டுப் பயிற்சி

வினா எண் 28074—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *உடற்கல்வி ஆசிரியர்களுக்கு மாவட்ட நிர்வாகம் சார்பில் விளையாட்டு பயிற்சி அளித்து மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *உடற்கல்வி ஆசிரியர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் பள்ளிக் கல்வித் துறை சார்பில் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அவ்வகையில் கடந்த அக்டோபர், நவம்பர், டிசம்பர்* 2021 *ஆகிய* 3 *மாதங்களில் இந்தியப் பள்ளிகளுக்கான விளையாட்டுக் குழுமத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வகையான விளையாட்டுகளுக்கு மாவட்ட அளவில் உடற்கல்வி இயக்குநர்கள் / உடற்கல்வி ஆசிரியர்களுக்கு புத்தாக்கப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் வரும் கல்வியாண்டில் மாணவர்கள் முழுமையாகப் பயனடைய உள்ளனர்.*

85—

விளையாட்டு மைதானம் அமைத்தல்

வினா எண் 4406—திரு. இரா. அருள்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகராட்சி, 3-வது கோட்டம், தெய்வானை நகர் பகுதியில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, 3-வது கோட்டம், தெய்வானை நகர் பகுதியில் விளையாட்டு மைதானம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

86—

சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்

வினா எண் 4463—திரு. இரா. அருள்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகரில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க சட்டத்திற்குப் புறம்பாகச் செயல்படும் சாயப் பட்டறைகளை கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில், சேலம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் மொத்தம் 77 சாயத் தொழிற்சாலைகளும், 13 சலவைத் தொழிற்சாலைகளும் அமைந்துள்ளன. இதில் ஒரு சாயத் தொழிற்சாலை மட்டும் பெரிய வகையினை சேர்ந்தது ஆகும். மற்றவை சிறிய வகை தொழிற்சாலைகள் ஆகும். இவை அனைத்துமே பூஜ்ய கழிவுநீர் வெளியேற்றும் அமைப்பினை கொண்டுள்ளது. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் எதிர்மறை சவ்வூடு பரவல் அமைப்பானது அனைத்து தொழிற்சாலைகளிலும் அமைந்துள்ளது. எதிர்மறை சவ்வூடு பரவல் அமைப்பில் இருந்து வெளியேறும் கசடை வெளியேற்ற ஆவியாக்கி அமைப்பினை அல்லது சோலார்

ஆவியாக்கும் களம்/ செயலூட்டப்பட்ட மெல்லிய படல உலர்த்தி என்னும் அமைப்பினை நிறுவியுள்ளன. மேற்குறிப்பிட்ட பூஜ்ய நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பினை சரிவர இயக்காத தொழிற்சாலைகளின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு மூடுதல் உத்தரவு அளிக்கப்படுகிறது எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

87—

உடற்பயிற்சி கூடம் கட்டுதல்

வினா எண் 4493—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, மாடம்பாக்கம் பேரூராட்சி, 11-வது வார்டு பகுதியில் உடற்பயிற்சி கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, மாடம்பாக்கம் பேரூராட்சி, 11-வது வார்டு பகுதியில் உடற்பயிற்சி கூடம் கட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

88—

உடற்பயிற்சி கூடம் அமைத்தல்

வினா எண் 10030—திரு. இரா. அருள்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மேற்கு தொகுதி, கோட்டகவுண்டம்பட்டியில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

சேலம் மேற்கு தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், கோட்டகவுண்டம்பட்டி கிராம பஞ்சாயத்தில் திறந்தவெளி உடற்பயிற்சி மையம் அமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

89—

விளையாட்டு வீரர்களுக்கு சிறப்புப் பயிற்சி

வினா எண் 10031—திரு. இரா. அருள்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஒலிம்பிக் போட்டிக்காக தமிழக விளையாட்டு வீரர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் விளையாட்டினை மேம்படுத்தும் நோக்கத்தில், முதல் கட்டமாக, அனைத்து பள்ளிகளிலும் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவிகளுக்கு உடற்திறன் தேர்வு போட்டிகள் நடத்தப்படுகின்றன. 67 கல்வி மாவட்டங்களில் விளையாட்டுத் திறமை உடையவர்களை கண்டறிவதற்கான போட்டிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நடத்தப்படுகிறது. கல்வி மாவட்டங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து 9 மண்டலங்களாகப் பிரித்து கல்வி மண்டல அளவில் முதல் 2 இடங்களில் வெற்றி பெற்ற சிறுவர்/சிறுமியருக்கு போட்டிகள் நடத்தப்படுகின்றன. மண்டல அளவிலான போட்டிகளில் கலந்து கொண்ட முன்னதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

சிறுவர்/சிறுமியருக்கு அனைத்துக் கல்வி மாவட்டங்களிலும் 5 நாட்கள் உறைவிடம் சாரா பயிற்சி முகாம் நடத்தப்படுகிறது.

மண்டல அளவில் கண்டறியப்பட்ட திறனாளர்களுக்கு 15 நாட்கள் உண்டி, உறைவிட பயிற்சி முகாமில் சேர்த்து முனைப்பான பயிற்சி அளிக்கப்பட்டு திறன் வாய்ந்த விளையாட்டு வீரர் / வீராங்கனைகள் சிறப்பு அகாடமியில் சேர்க்கப்பட்டு பயிற்சி முகாம் வாயிலாக விளையாட்டு வீரர்கள் பன்னாட்டு அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்துகொள்வதற்கு ஏற்ப சிறந்த வல்லுநர்களை கொண்டு தொடர் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மேலும், 2021-2022 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பினைத் தொடர்ந்து, உயர்திறன்மிக்க விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் பதக்க மேடையை அடைவதற்குத் தேவையான பயிற்சிகள் மேற்கொள்ள ஏதுவாக அனைத்து வசதிகளும் கொண்ட ஒலிம்பிக் அகாடமிகள் மாநிலத்தின் நான்கு மண்டலங்களில் அதாவது சென்னை, மதுரை, திருச்சி மற்றும் நீலகிரி ஆகிய இடங்களில் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

90—

பொது சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்

வினா எண் 10344—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில் சாயப்பட்டறைக் கழிவுகளால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதால் அப்பகுதியில் பொது சுத்திகரிப்பு நிலையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்ட அலுவலக நிர்வாக எல்லைக்குள் சிறிய வகை 355 சாய மற்றும் சலவைத் தொழிற்சாலைகள், 22 தோல் தொழிற்சாலைகள் தற்சமயம் இயங்கி வருகின்றன. இத்தொழிற்சாலைகள் தங்கள் வளாகத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் எதிர்மறை சவ்வூடு பரவல் முறைகளை நிறுவி இயக்கி வருகின்றன. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை தொழிற்சாலைகள் மீண்டும் மறு உபயோகம் செய்து வருகின்றன. பெரும்பாலான இத்தொழிற்சாலைகள் சிறிய அளவில் இயங்கி வருகின்றன. அத்தொழிற்சாலைகள் தனித்தனியாகக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் எதிர்மறை சவ்வூடு பரவல் முறைகளை நிறுவி இயக்கி வருகின்றன என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

91—

நதியைத் தூய்மைப்படுத்துதல்

வினா எண் 10345—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம், வாழப்பாடி அருகே உற்பத்தியாகும் வசிஷ்ட நதியைத் தூய்மைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் வாழப்பாடி மற்றும் பெத்தநாயக்கன்பாளையம் வட்டங்களில் அமைந்துள்ள

புழுதிக்குட்டை மற்றும் பாப்பநாயக்கன்பட்டி அணைகளிலிருந்து வசிஷ்ட நதி உற்பத்தியாகிறது. இந்நதி பெத்தநாயக்கன்பாளையம், ஆத்தூர், தேவியாக்குறிச்சி, மணிவிழுந்தான், தலைவாசல் மற்றும் ஆரகளூர் வழியாக கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்குச் சென்றடைகிறது. பின்பு, இந்த நதி ஸ்வேதா நதியுடன் இணைந்து வெள்ளாறு என்றாகி கடலூர் மாவட்டம் வழியாக வங்கக்கடலில் கலக்கிறது.

சேலம் மாவட்டத்தில் உள்ள ஜவ்வரிசி தொழிற்சாலைகள் வாரிய இசைவாணை பெறாமலும், சுத்திகரிப்பு நிலையம் அமைக்காமல் அல்லது இயக்காமல் கழிவுநீரினை வசிஷ்ட நதியில் கலந்த காரணத்தினால் வாரிய தலைமை அலுவலகத்தால் மூடுதல் மற்றும் மின் இணைப்பு துண்டிப்பு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் வசிஷ்ட நதியில் தொழிற்சாலையில் இருந்து நேரடியாகவோ, மறைமுகமாகவோ கழிவுநீர் கலப்பது ஆய்வில் கண்டறியப்பட்டால் உடனடியாக அந்நிறுவனத்திற்கு மூடுதல் மற்றும் மின் இணைப்பு துண்டிப்பு ஆணைகள் வாரியத்தால் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. மேலும், வசிஷ்ட நதியில் கழிவுநீர் கலப்பதைத் தவிர்க்க மாவட்ட கண்காணிப்புக் குழு மாவட்ட ஆட்சியர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இதைத்தவிர, சேலத்தில் புதிதாக தற்போது பறக்கும் படை (Flying Squad) அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் வசிஷ்ட நதி மாசுபடுவது தடுக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

92—

விளையாட்டுப் பயிற்சிக் கூடம்

வினா எண் 10446—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, அஞ்சேஅள்ளி ஊராட்சி, B-அக்ரகாரம் கிராமத்தில் விளையாட்டு பயிற்சிக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, அஞ்சேஅள்ளி ஊராட்சி B-அக்ரகாரம் கிராமத்தில் விளையாட்டு பயிற்சிக் கூடம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

93—

விளையாட்டு மைதானம் அமைத்தல்

வினா எண் 14232—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், இண்டூர் ஊராட்சி, பச்சேரியன்கொட்டாய் கிராமத்திற்கு விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பச்சேரியன்கொட்டாய் கிராமத்தில் விளையாட்டு மைதானம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், பச்சேரியன்கொட்டாய் கிராமத்திற்கு அருகில் உள்ள இண்டூர் கிராம ஊராட்சியில் கபாடி, வாலிபால், பூப்பந்து மற்றும் திறந்தவெளி உடற்பயிற்சி மையம் ஆகிய விளையாட்டுகளுக்கான விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டு, அதற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளன.

[2022 அக்டோபர் 18

94—

புலம்பெயரும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு

வினா எண் 11155—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பிழைப்பு தேடி புலம்பெயரும் இளைஞர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திட. அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பணியில் உள்ள தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நலச் சட்டங்களின்படி கிடைக்க வேண்டிய உரிமைகளை பாதுகாக்க தொழிலாளர் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பிழைப்பு தேடி புலம்பெயரும் இளைஞர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவது தொழிலாளர் துறையின் வரம்பிற்குள் வராது.

95—

சுகாதார ஆய்வாளரை நியமித்தல்

வினா எண் 14563—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) 200 நபர்களுக்கு மேல் பணிபுரியும் நிறுவனங்களில் சுகாதார ஆய்வாளரை நியமிக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எந்தவொரு நிறுவனத்திலும் சுகாதார ஆய்வாளரை நியமிக்க தொழிற்சாலைகள் சட்டம், 1948-ன்கீழ் வழிவகை செய்யப்படவில்லை.

96—

வேலைவாய்ப்பு பதிவுகளை தானியங்கியாகப் புதுப்பித்தல்

வினா எண் 14567—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கந்தர்வகோட்டை தொகுதிக்குட்பட்ட படித்த பட்டதாரிகள் தங்களின் வேலை வாய்ப்பு பதிவுகளை மூன்றாண்டுக்கு ஒருமுறை புதுப்பிக்கும் நடைமுறைகளை மாற்றிவிட்டு வேலை கிடைக்கும் வரை அவரவர்களின் கல்வித்தகுதியை இணையதளத்தில் ஒருமுறை மட்டுமே பதியும் வாய்ப்பையும், வேலைவாய்ப்புத் துறையை தானியங்கியாகப் புதுப்பித்துக்கொள்ளும் வசதிகளை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) வேலைநாடுநர்கள், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் வாயிலாகவும் மற்றும் தேர்வாணையத்தால் நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகள் வாயிலாகவும் பணிவாய்ப்பு பெற்று வருகின்றனர். இவ்வாறாக வேலைவாய்ப்பு பெறுபவர்களின் பதிவுகள் வேலைவாய்ப்பு உயிர்பதிவேட்டிலிருந்து இரத்து செய்யப்படுகிறது. மேலும், தனியார் துறையில் பணியில் இருப்பவர்களும் சுய வேலைவாய்ப்பில் ஈடுபடுபவர்களும் தங்களது பதிவுகளைப் புதுப்பிப்பதில்லை. இந்நிலையில் வேலைவாய்ப்பு பதிவுகளை மூன்றாண்டுக்கு

சட்டமன்ற TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஒருமுறை புதுப்பிக்கும் நடைமுறைகளை மாற்றிவிட்டு வேலை கிடைக்கும் வரை அவரவர்களின் கல்வித் தகுதியை இணைய தளத்தில் ஒருமுறை மட்டுமே பதியும் நிலையில் பணி வாய்ப்பு பெற்றவர்கள் மட்டுமே மீண்டும் மீண்டும் பரிந்துரைக்கப்படும் சூழ்நிலை உருவாகும். இதன்காரணமாக வேலையளிப்போருக்கு தேவையான தகுதிகளுடன் பணியாளர்கள் கிடைப்பதில் காலவிரயம் ஏற்படும். மேலும், பணி வாய்ப்பு வேண்டி பதிவு செய்பவர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாவர். பதிவு புதுப்பிக்காமல் இருக்கும் நிலையில் எந்தெந்த பதிவுதாரர்களுக்கு வேலைவாய்ப்பு தேவை என அறிந்திட இயலாத நிலை எழும்; ஒரே பதிவுதாரரே பலமுறை பரிந்துரைக்கும் சூழல் எழும் என்பதால் பதிவு புதுப்பித்தல் அவசியமாகிறது. பதிவு புதுப்பித்தல் செய்யாமல் இருக்கும் நிலையில் உயிர் பதிவேட்டின் அளவும் கூடுவதால் அதனை சேமித்து வைக்கும் சேவையகங்களின் எண்ணிக்கை கூடுதலாகி, அரசுக்கு கூடுதல் பராமரிப்பு செலவினம் ஏற்படும். அதனால் பட்டியல் தயாரிப்பதிலும் காலதாமதம் ஏற்படும். மேலும், வேலையில்லாதவர்களின் எண்ணிக்கையும் உயிர் பதிவேட்டில் அதிகமாகி கொண்டே வரும். இதனால் பதிவு புதுப்பித்தல் அவசியம் ஆகும்.

எனவே, படித்த பட்டதாரிகள் வேலை வாய்ப்பு பதிவுகளை மூன்றாண்டுக்கு ஒருமுறை புதுப்பிக்கும் நடைமுறைகளை மாற்றிவிட்டு வேலை கிடைக்கும்வரை அவரவர்களின் கல்வித் தகுதியை இணையதளத்தில் ஒருமுறை மட்டுமே பதியும் வாய்ப்பினை வழங்க வழிவகை இல்லை.

(ஆ) எழாது.

97—

தொழிலாளர் நல உரிமைகள் பாதுகாப்பு

வினா எண் 14574—திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீபெரும்புதூர் பாக்ஸ்கான் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் இயங்குகிறதா எனவும் அங்குள்ள தொழிலாளர் நல உரிமைகள் பாதுகாக்கப்படுகிறதா என்பதையும் தெரிவிக்க அரசு முன்வருமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

பாக்ஸ்கான் இந்தியா பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் நோக்கியா டெலிகாம் செஸ், திருப்பெரும்புதூர், சென்னை-பெங்களூரு நெடுஞ்சாலை என்ற முகவரியிலும், பாக்ஸ்கான் Hon Hai டெக்னாலஜி இந்தியா மெகா டெவலப்மெண்ட் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் சிப்காட் தொழில் பூங்கா, பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை, சுங்குவார்சத்திரம், என்ற முகவரியிலும் இயங்கி வருகிறது.

இதில் திருப்பெரும்புதூரில் இயங்கி வந்த பாக்ஸ்கான் இந்தியா பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு வேலை அளித்து வந்த நோக்கியா கைபேசி நிறுவனம் மூடப்பட்டுவிட்டதால், பாக்ஸ்கான் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் விற்பனை செய்ய இயலாத நிலையில், 23-12-2014 தேதியிட்ட கடிதம் வழியாக உற்பத்தி நிறுத்தம் செய்து, இருதரப்பு ஒப்பந்தம்மூலம் 1-2-2015 தேதி அன்று பணியில் இருந்த 1,306 ஆப்பரேட்டர்களுக்கு இழப்பீட்டுத் தொகை அளிக்கப்பட்டது. தற்போது மேற்படி தொழிற்சாலை இயங்கவில்லை.

மேலும், சிப்காட் தொழிற்பூங்கா, சுங்குவார்சத்திரத்தில் இயங்கி வரும் பாக்ஸ்கான் Hon Hai டெக்னாலஜி இந்தியா மெகா டெவலப்மெண்ட் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தில் 9-2-2022 அன்றைய தேதியில், 3,931 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேற்படி பாக்ஸ்கான் Hon Hai டெக்னாலஜி இந்தியா மெகா டெவலப்மெண்ட் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தில், தற்போது தொழிற்சங்கம் ஏதும் இயங்கவில்லை. இருப்பினும், திருப்பெரும்புதூர் மற்றும் சுற்றுப் பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பிரச்சினைகளை உடனுக்குடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டு தொழில் அமைதி நிலவ ஏதுவாக தொழிலாளர் துறையைச் சார்ந்த தொழிலாளர் துணை ஆணையர் (சமரசம்)-1 அலுவலகம், இருங்காட்டுக்கோட்டை, சிப்காட்டிலேயே அமைக்கப்பட்டு தொழிலாளர்களின் பிரச்சினைகள் குறித்து உடனுக்குடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டு தொழிலாளர்களின் தாவாக்களுக்கு சுமூகத் தீர்வு கண்டும் ஊதிய உயர்வு ஒப்பந்தங்கள்

[2022 அக்டோபர் 18

ஏற்படுத்தப்பட்டும் வருகின்றன. மேலும், அவ்வப்போது தொழில் அமைதியை பாதிக்கும் வேலை நிறுத்தம், கதவடைப்பு உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்தும் சமரச பேச்சுவார்த்தைகள் உடனுக்குடன் மேற்கொள்ளப்பட்டு தொழிலாளர் துறையால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தொழிலாளர் நல உரிமைகள் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இதுதவிர, தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன்கள், பாதுகாப்பு, சுகாதாரம் தொடர்பாக அவ்வப்போது எழும் பிரச்சினைகள் தொடர்பாகவும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறையினரால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

98—

தொழில்நுட்பங்களின் பயன்பாடு மற்றும் ஏற்றுமதி சேவையை மேம்படுத்துதல்

வினா எண் 6991—திரு. இரா. அருள்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நான்காம் தொழில் புரட்சியை வாய்ப்பாகப் பயன்படுத்தி தமிழகத்தில் Internet of things, Virtual Augmented Reality, Artificial Intelligence தொழில்நுட்பங்களின் பயன்பாடும் ஏற்றுமதி சேவையும் மேம்பட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:

சுகாதாரம், விவசாயம் போன்ற துறைகளில் செயற்கை நுண்ணறிவு போன்ற வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களை ஏற்றுச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு அரசு எப்போதும் முன்னோடியாக இருந்து வருகிறது. இது தொடர்பாக

2022 அக்டோபர் 18]

சுகாதாரத் துறையில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி ஆண்டிராய்டு கைபேசிமூலம் கண்புரையைக் கண்டறியும் செயலி ஈ-பார்வை. வேளாண்மைத் துறையில் நெல் மற்றும் மக்காச்சோளம் பயிர்களைத் தாக்கும் பூச்சிகளை அடையாளம் காண்பதற்கும் நோய்களைக் கண்டறிவதற்குமான செயலி மற்றும் அரசுத் துறைகளில் பணியாளர்களின் வருகையினை முக அடையாளம்மூலம் பதிவு செய்யும் செயலி ஆகியவை தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளின் வளர்ச்சியைக் கண்காணிக்கவும், செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கைபேசி செயலியை வழங்கவும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை முன்மொழிந்துள்ளது. பொருட்களின் இணையம் (Internet of Things)*-ஐப் பொறுத்தவரை, பல்வேறு துறைகளுடன் வெவ்வேறு பயன்பாட்டு முறைகள் அடையாளம் காணப்பட்டு வருகின்றன. தமிழ் இணையக் கல்விக் கழகம், மெய்நிகர், செறிவூட்டப்பட்ட உண்மை* (Virtual Augmented Reality) *தொழில்நுட்பப் பயன்பாடு குறித்து ஆய்ந்து வருகிறது.*

99—

விழிகண் கூட்டத்தை நடத்துதல்

வினா எண் 2385—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழக முதல்வர் தலைமையில் நடைபெறும் விழிகண் கூட்டத்தை நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) விதிகள், 1995, விதி 16-ன்படி, மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம் ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் வருடத்திற்கு இரண்டு முறை நடத்தப்பட வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் மேற்காணும் உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுவின் முதல் கூட்டம் கடந்த ஆண்டு 19-8-2021 அன்று நடைபெற்றது. அதன் அடுத்த கூட்டம் விரைவில் நடத்தப்படும்.

100—

தங்கும் விடுதி அமைத்தல்

வினா எண் 7501—திரு. A.P. ஜெயசங்கரன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், வைத்தியகவுண்டன்புதூர் அஞ்சல், அபிநவத்தில் உள்ள ஏகலைவா உண்டி, உறைவிடப் பள்ளியில் மலைவாழ் மாணவிகளுக்கு தங்கும் விடுதி மற்றும் உணவருந்தும் இடம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், அபிநவம், ஏகலைவா மாதிரி உண்டி, உறைவிடப் பள்ளியானது 1-6-2006 அன்று அயோத்தியாப்பட்டினத்தில் வாடகைக் கட்டடத்தில் தொடங்கப்பட்டது. சேலம் மாவட்டம், வைத்தியகவுண்டன்புதூர் அஞ்சல், அபிநவத்தில் 30-6-2009 முதல் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேற்படி பள்ளியின் பரப்பளவு 21,808.25 ச.மீ. ஆகும். பள்ளியில் 480 மாணவிகள் தங்கி கல்வி

2022 அக்டோபர் 18]

பயின்று வருகின்றனர். அனைவரும் தங்கும் வகையில் இரண்டு விடுதிக் கட்டடங்கள் 955 ச.மீ. பரப்பளவில் கட்டப்பட்டுள்ளன. மேலும், மாணவிகள் உணவருந்தும் இடமானது 2017-2018 ஆம் ஆண்டு கட்டப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

பட்டியல்-7

1—

மெட்ரோ இரயில் திட்டம் அமைத்தல்

வினா எண் 11516—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலத்தில் மெட்ரோ இரயில் திட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியில் பெருந்திரள் துரித போக்குவரத்து அமைப்பினை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறு ஆய்வினை மேற்கொள்ளலாம் என்று அரசு முடிவு செய்து, அரசாணை எண் 156, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 9-8-2021-ல் ஆணை வழங்கப்பட்டது. ஒன்றிய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் நடைமுறைகளின்படி, சாத்தியக்கூறு ஆய்விற்கு முன்னரே இந்த மாநகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, இந்த மாநகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம் தயாரிக்கும் பணி, தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்கிடையில், சாத்தியக்கூறு அறிக்கை தயாரிப்பதற்கான ஆலோசகர் நிறுவனத்தை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி நடைமுறையின் வழியாக தேர்வு செய்யும் பணியை துவக்கியுள்ளது. ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம் மற்றும் விரிவான

சாத்தியக்கூறு அறிக்கை ஆகியவை தயாரிக்கப்பட்ட பின்னர், இந்த மாநகராட்சியில் உகந்த துரித இரயில் போக்குவரத்து அமைப்பினை தேர்வு செய்து முன்னுரிமை அடிப்படையிலான வழித்தடத்தை கண்டறிந்து விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி துவக்கப்படும். விரிவான திட்ட அறிக்கைமீது மாநில அரசு முடிவு எடுத்த பின்னர், ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவிக்காக பரிந்துரை செய்யப்படும்.

2—

மெட்ரோ இரயில் திட்டம் செயல்படுத்துதல்

வினா எண் 11517—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி நகரங்களில் பெருந்திரள் துரித போக்குவரத்து அமைப்பினை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறு ஆய்வினை மேற்கொள்ளலாம் என்று அரசு முடிவு செய்து 9-8-2021 ஆம் நாளிட்ட திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் அரசாணை எண் 156-ல் ஆணைகள் வழங்கப்பட்டன. மதுரை நகருக்கான ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுவிட்டதால், அதனடிப்படையில் பெருந்திரள் துரித போக்குவரத்து அமைப்பினை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறு ஆய்வினை தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சாத்தியக்கூறு ஆய்வறிக்கை தயாரிப்பதற்கான பணியை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின்மூலம் திருவாளர்கள் பாலாஜி இரயில் ரோடு சிஸ்டம் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. இந்த ஆய்வறிக்கை தயாரிப்பதற்கான கால அவகாசம் 4 மாதங்கள் ஆகும். சாத்தியக்கூறு ஆய்வறிக்கை மே 2022-க்குள் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2022 அக்டோபர் 18]

விரிவான சாத்தியக்கூறு அறிக்கை பெறப்பட்ட பின்னர், முன்னுரிமை அடிப்படையிலான வழித்தடங்களை கண்டறிந்து, மதுரை நகருக்கு உகந்த துரித இரயில் போக்குவரத்து அமைப்பினை தேர்வு செய்து, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி துவக்கப்படும். விரிவான திட்ட அறிக்கைமீது மாநில அரசு முடிவு எடுத்த பின்னர், ஒன்றிய அரசின் ஒப்புதல், நிதியுதவி மற்றும் வெளிநாட்டு கடனுதவி ஆகியவற்றிற்காக ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

3—

மெட்ரோ இரயில் திட்டம் செயல்படுத்துதல்

வினா எண் 11518—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூரில் மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருகிவரும் போக்குவரத்து நெரிசலைக் கருத்தில்கொண்டு கோயம்புத்தூர் நகருக்கு ஒரு பெருந்திரள் துரித போக்குவரத்து அமைப்பினை ஏற்படுத்துவது குறித்து, ஜூலை 2017-ல் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதற்கான சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான பணி, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின்மூலம் திருவாளர்கள் சிஸ்ட்ரா மற்றும் ரைட்ஸ் கூட்டமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த அறிக்கைகள் தயாரிப்பதற்கான நிதியுதவியை ஜெர்மன் நிதி நிறுவனமான கேஎப்டபிள்யூ வழங்குகிறது.

ஆலோசகர் நிறுவனம் சமர்ப்பித்த விரிவான சாத்தியக்கூறு அறிக்கையை பரிசீலனை செய்த பின்னர், விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான ஆணை அரசாணை நிலை எண் 143, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 16-7-2021-ல் வழங்கப்பட்டது. 2021-2022 ஆம் ஆண்டுக்கான திருத்திய வரவு-செலவுத் திட்ட உரையிலும், கோயம்புத்தூர் நகரில்

[2022 அக்டோபர் 18

மெட்ரோ இரயில் திட்டம் ஒன்றிய அரசுடன் கலந்தாலோசித்து செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. தற்போது விரிவான திட்ட அறிக்கை மாநில அரசால் பெறப்பட்டு, பரிசீலனையில் உள்ளது. விரிவான திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் வழங்கப்பட்ட பின்னர், ஒன்றிய அரசின் ஒப்புதல், நிதியுதவி மற்றும் பன்னாட்டு நிதி நிறுவனங்களின் கடனுதவி ஆகியவற்றிற்காக ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

4—

மெட்ரோ இரயில் திட்டம் செயல்படுத்துதல்

வினா எண் 18091—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாநகராட்சியில் மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்த ஒன்றிய அரசை தமிழக அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒரு நகருக்கு பெருந்திரள் துரிதப் போக்குவரத்து திட்டத்தை (Mass Rapid Transit System) ஏற்படுத்துவது குறித்து கீழ்க்கண்ட நடைமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன:-

1) நகரத்தின் போக்குவரத்து தேவை உள்ளிட்ட ஒட்டுமொத்த வளர்ச்சியை ஆவணப்படுத்தும் வகையில் நகர மேம்பாட்டுத் திட்டம் (City Development Plan) தயாரித்தல்.

2) நகர மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம் (Comprehensive Mobility Plan) தயாரித்து தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின்கீழ் அறிவிக்கை வெளியிடுதல்.

3) எந்த வகையான துரிதப் போக்குவரத்து அமைப்பு தேவை என்பதைக் கண்டறிய மாற்று போக்குவரத்து ஆய்வறிக்கை தயாரித்தல். பொதுவாக அனைத்து இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களுக்கு மிக அதிக

முதலீட்டுடன்கூடிய மெட்ரோ இரயில் திட்டம் உகந்ததாக அமைவதில்லை.

4) மேற்கண்ட ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம் மற்றும் மாற்று போக்குவரத்து ஆய்வறிக்கை பரிந்துரைக்கும் அதிகப் போக்குவரத்து வழித்தடங்களுக்கான விரிவான சாத்தியக்கூறு மற்றும் திட்ட அறிக்கைகள் தயாரித்தல்.

5) இதற்கிடையில் ஆரம்ப கட்ட திட்ட அறிக்கை தயாரித்து வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறுவதற்காக ஒன்றிய அரசிற்கு விண்ணப்பித்தல்.

6) விரிவான திட்ட அறிக்கையை மாநில அரசு ஆய்வு செய்து துரிதப் போக்குவரத்து தேவையின் அவசர அவசியம், ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டுவரும் போக்குவரத்து திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் புதிய திட்டத்தினை செயல்படுத்துவதற்கான அப்போதைய நிதி நிலைமை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு மாநில அரசின் ஒப்புதல் வழங்குதல்.

7) மாநில அரசு ஒப்புதல் வழங்கிய பின்னர் ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவிக்காக பரிந்துரை செய்தல்.

மேலே குறிப்பிட்டுள்ள நடைமுறைகளின்படி ஓசூர், தூத்துக்குடி, ஈரோடு, திருப்பூர், வேலூர், திண்டுக்கல், தஞ்சாவூர் மற்றும் நாகர்கோவில் நகரங்களுக்கான பெருந்திரள் துரிதப் போக்குவரத்து அமைப்புகள் ஏற்படுத்துவது குறித்து உரிய நேரத்தில் அரசு முடிவெடுக்கும்.

5—

மெட்ரோ இரயில் திட்டம் செயல்படுத்துதல்

வினா எண் 18144—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜவுளிகள் அதிகம் உற்பத்தியாகும் ஈரோடு மாநகராட்சியில் மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்த ஒன்றிய அரசை தமிழக அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒரு நகருக்கு பெருந்திரள் துரிதப் போக்குவரத்து திட்டத்தை (Mass Rapid Transit System) ஏற்படுத்துவது குறித்து கீழ்க்கண்ட நடைமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன:-

1) நகரத்தின் போக்குவரத்து தேவை உள்ளிட்ட ஒட்டுமொத்த வளர்ச்சியை ஆவணப்படுத்தும் வகையில் நகர மேம்பாட்டுத் திட்டம் (City Development Plan) தயாரித்தல்.

2) நகர மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம் (Comprehensive Mobility Plan) தயாரித்து தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின்கீழ் அறிவிக்கை வெளியிடுதல்.

3) எந்த வகையான துரிதப் போக்குவரத்து அமைப்பு தேவை என்பதைக் கண்டறிய மாற்று போக்குவரத்து ஆய்வறிக்கை தயாரித்தல், பொதுவாக அனைத்து இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களுக்கு மிக அதிக முதலீட்டுடன்கூடிய மெட்ரோ இரயில் திட்டம் உகந்ததாக அமைவதில்லை.

4) மேற்கண்ட ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம் மற்றும் மாற்று போக்குவரத்து ஆய்வறிக்கை பரிந்துரைக்கும் அதிகப் போக்குவரத்து வழித்தடங்களுக்கான விரிவான சாத்தியக்கூறு மற்றும் திட்ட அறிக்கைகள் தயாரித்தல்.

5) இதற்கிடையில் ஆரம்ப கட்ட திட்ட அறிக்கை தயாரித்து வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறுவதற்காக ஒன்றிய அரசிற்கு விண்ணப்பித்தல்.

6) விரிவான திட்ட அறிக்கையை மாநில அரசு ஆய்வு செய்து துரிதப் போக்குவரத்து தேவையின் அவசர அவசியம், ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டுவரும் போக்குவரத்து திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் புதிய திட்டத்தினை செயல்படுத்துவதற்கான அப்போதைய நிதி நிலைமை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு மாநில அரசின் ஒப்புதல் வழங்குதல்.

2022 அக்டோபர் 18]

7) *மாநில அரசு ஒப்புதல் வழங்கிய பின்னர் ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவிக்காக பரிந்துரை செய்தல்.*

மேலே குறிப்பிட்டுள்ள நடைமுறைகளின்படி ஓசூர், தூத்துக்குடி, ஈரோடு, திருப்பூர், வேலூர், திண்டுக்கல், தஞ்சாவூர் மற்றும் நாகர்கோவில் நகரங்களுக்கான பெருந்திரள் துரிதப் போக்குவரத்து அமைப்புகள் ஏற்படுத்துவது குறித்து உரிய நேரத்தில் அரசு முடிவெடுக்கும்.

6—

மெட்ரோ இரயில் திட்டம் செயல்படுத்துதல்

வினா எண் 18145—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *ஏற்றுமதி நகரம் எனப்படும் திருப்பூர் மாநகராட்சியில் மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்த ஒன்றிய அரசை தமிழக அரசு வலியுறுத்துமா ?*

(ஆ) *ஆம் எனில், விவரம் என்ன ?*

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *ஒரு நகருக்கு பெருந்திரள் துரிதப் போக்குவரத்து திட்டத்தை* (Mass Rapid Transit System) *ஏற்படுத்துவது குறித்து கீழ்க்கண்ட நடைமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன:-*

1) *நகரத்தின் போக்குவரத்து தேவை உள்ளிட்ட ஒட்டுமொத்த வளர்ச்சியை ஆவணப்படுத்தும் வகையில் நகர மேம்பாட்டுத் திட்டம்* (City Development Plan) *தயாரித்தல்.*

2) *நகர மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம்* (Comprehensive Mobility Plan) *தயாரித்து தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின்கீழ் அறிவிக்கை வெளியிடுதல்.*

3) *எந்த வகையான துரிதப் போக்குவரத்து அமைப்பு தேவை என்பதைக் கண்டறிய மாற்று போக்குவரத்து ஆய்வறிக்கை*

தயாரித்தல். பொதுவாக அனைத்து இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களுக்கு மிக அதிக முதலீட்டுடன்கூடிய மெட்ரோ இரயில் திட்டம் உகந்ததாக அமைவதில்லை.

4) மேற்கண்ட ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம் மற்றும் மாற்று போக்குவரத்து ஆய்வறிக்கை பரிந்துரைக்கும் அதிகப் போக்குவரத்து வழித்தடங்களுக்கான விரிவான சாத்தியக்கூறு மற்றும் திட்ட அறிக்கைகள் தயாரித்தல்.

5) இதற்கிடையில் ஆரம்ப கட்ட திட்ட அறிக்கை தயாரித்து வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறுவதற்காக ஒன்றிய அரசிற்கு விண்ணப்பித்தல்.

6) விரிவான திட்ட அறிக்கையை மாநில அரசு ஆய்வு செய்து துரிதப் போக்குவரத்து தேவையின் அவசர அவசியம், ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டுவரும் போக்குவரத்து திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் புதிய திட்டத்தினை செயல்படுத்துவதற்கான அப்போதைய நிதி நிலைமை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு மாநில அரசின் ஒப்புதல் வழங்குதல்.

7) மாநில அரசு ஒப்புதல் வழங்கிய பின்னர் ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவிக்காக பரிந்துரை செய்தல்.

மேலே குறிப்பிட்டுள்ள நடைமுறைகளின்படி ஓசூர், தூத்துக்குடி, ஈரோடு, திருப்பூர், வேலூர், திண்டுக்கல், தஞ்சாவூர் மற்றும் நாகர்கோவில் நகரங்களுக்கான பெருந்திரள் துரிதப் போக்குவரத்து அமைப்புகள் ஏற்படுத்துவது குறித்து உரிய நேரத்தில் அரசு முடிவெடுக்கும்.

7—

மெட்ரோ இரயில் திட்டம் செயல்படுத்துதல்

வினா எண் 18166—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாநகராட்சியில் மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்த ஒன்றிய அரசை தமிழக அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒரு நகருக்கு பெருந்திரள் துரிதப் போக்குவரத்து திட்டத்தை (Mass Rapid Transit System) ஏற்படுத்துவது குறித்து கீழ்க்கண்ட நடைமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன:-

1) நகரத்தின் போக்குவரத்து தேவை உள்ளிட்ட ஒட்டுமொத்த வளர்ச்சியை ஆவணப்படுத்தும் வகையில் நகர மேம்பாட்டுத் திட்டம் (City Development Plan) தயாரித்தல்.

2) நகர மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம் (Comprehensive Mobility Plan) தயாரித்து தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின்கீழ் அறிவிக்கை வெளியிடுதல்.

3) எந்த வகையான துரிதப் போக்குவரத்து அமைப்பு தேவை என்பதைக் கண்டறிய மாற்று போக்குவரத்து ஆய்வறிக்கை தயாரித்தல். பொதுவாக அனைத்து இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களுக்கு மிக அதிக முதலீட்டுடன்கூடிய மெட்ரோ இரயில் திட்டம் உகந்ததாக அமைவதில்லை.

4) மேற்கண்ட ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம் மற்றும் மாற்று போக்குவரத்து ஆய்வறிக்கை பரிந்துரைக்கும் அதிகப் போக்குவரத்து வழித்தடங்களுக்கான விரிவான சாத்தியக்கூறு மற்றும் திட்ட அறிக்கைகள் தயாரித்தல்.

5) இதற்கிடையில் ஆரம்ப கட்ட திட்ட அறிக்கை தயாரித்து வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறுவதற்காக ஒன்றிய அரசிற்கு விண்ணப்பித்தல்.

6) விரிவான திட்ட அறிக்கையை மாநில அரசு ஆய்வு செய்து துரிதப் போக்குவரத்து தேவையின் அவசர அவசியம், ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டுவரும் போக்குவரத்து திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் புதிய திட்டத்தினை செயல்படுத்துவதற்கான அப்போதைய நிதி நிலைமை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு மாநில அரசின் ஒப்புதல் வழங்குதல்.

[2022 அக்டோபர் 18

7) *மாநில அரசு ஒப்புதல் வழங்கிய பின்னர் ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவிக்காக பரிந்துரை செய்தல்.*

மேலே குறிப்பிட்டுள்ள நடைமுறைகளின்படி ஓசூர், தூத்துக்குடி, ஈரோடு, திருப்பூர், வேலூர், திண்டுக்கல், தஞ்சாவூர் மற்றும் நாகர்கோவில் நகரங்களுக்கான பெருந்திரள் துரிதப் போக்குவரத்து அமைப்புகள் ஏற்படுத்துவது குறித்து உரிய நேரத்தில் அரசு முடிவெடுக்கும்.

8—

மெட்ரோ இரயில் திட்டம் செயல்படுத்துதல்

வினா எண் 18176—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆவடி மாநகராட்சியில் மெட்ரோ இரயில் திட்டத்தை நிறைவேற்ற ஒன்றிய அரசை தமிழக அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை மெட்ரோ இரயில் திட்டம்-கட்டம்-II-ன்கீழ் வழித்தடம்-3, வழித்தடம்-4 மற்றும் வழித்தடம்-5 ஆகிய மூன்று வழித்தடங்கள், மொத்தம் 118.9 கி.மீ. நீளத்தில் தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் வழித்தடம் 5-ல் அமையவுள்ள உயர்த்தப்பட்ட திருமங்கலம் மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து முகப்பேர் மற்றும் அம்பத்தூர் வழியாக ஆவடி வரை மெட்ரோ இரயிலை நீட்டிப்பதற்கான ஒரு விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்படும் என 2022-2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட பதிலுரையின்போது மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் ஓர் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார். அந்த அறிவிப்பினை விரைவில் செயல்படுத்துவதற்கான பூர்வாங்க பணிகளை அரசு துவக்கியுள்ளது.

2022 அக்டோபர் 18]

9—

மெட்ரோ இரயில் திட்டம் செயல்படுத்துதல்

வினா எண் 18177—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரை மாநகராட்சியில் மெட்ரோ இரயில் திட்டத்தை நிறைவேற்ற ஒன்றிய அரசை தமிழக அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி நகரங்களில் பெருந்திரள் துரித போக்குவரத்து அமைப்பினை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறு ஆய்வினை மேற்கொள்ளலாம் என்று அரசு முடிவு செய்து 9-8-2021 ஆம் நாளிட்ட திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் அரசாணை எண் 156-ல் ஆணைகள் வழங்கப்பட்டன. மதுரை நகருக்கான ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுவிட்டதால், அதனடிப்படையில் பெருந்திரள் துரித போக்குவரத்து அமைப்பினை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறு ஆய்வினை தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சாத்தியக்கூறு ஆய்வறிக்கை தயாரிப்பதற்கான பணியை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின்மூலம் திருவாளர்கள் பாலாஜி இரயில் ரோடு சிஸ்டம் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. இந்த ஆய்வறிக்கை தயாரிப்பதற்கான கால அவகாசம் 4 மாதங்கள் ஆகும். சாத்தியக்கூறு ஆய்வறிக்கை மே 2022-க்குள் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விரிவான சாத்தியக்கூறு அறிக்கை பெறப்பட்ட பின்னர், முன்னுரிமை அடிப்படையிலான வழித்தடங்களை கண்டறிந்து, மதுரை நகருக்கு உகந்த துரித இரயில் போக்குவரத்து அமைப்பினை தேர்வு செய்து, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி துவக்கப்படும். விரிவான திட்ட அறிக்கைமீது மாநில அரசு முடிவு எடுத்த பின்னர், ஒன்றிய அரசின் ஒப்புதல், நிதியுதவி மற்றும்

[2022 அக்டோபர் 18

வெளிநாட்டு கடனுதவி ஆகியவற்றிற்காக ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

10—

மெட்ரோ இரயில் திட்டம் செயல்படுத்துதல்

வினா எண் 18179—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாநகராட்சியில் மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்த ஒன்றிய அரசை தமிழக அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒரு நகருக்கு பெருந்திரள் துரிதப் போக்குவரத்து திட்டத்தை (Mass Rapid Transit System) ஏற்படுத்துவது குறித்து கீழ்க்கண்ட நடைமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன:-

1) நகரத்தின் போக்குவரத்து தேவை உள்ளிட்ட ஒட்டுமொத்த வளர்ச்சியை ஆவணப்படுத்தும் வகையில் நகர மேம்பாட்டுத் திட்டம் (City Development Plan) தயாரித்தல்.

2) நகர மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம் (Comprehensive Mobility Plan) தயாரித்து தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின்கீழ் அறிவிக்கை வெளியிடுதல்.

3) எந்த வகையான துரிதப் போக்குவரத்து அமைப்பு தேவை என்பதைக் கண்டறிய மாற்று போக்குவரத்து ஆய்வறிக்கை தயாரித்தல். பொதுவாக அனைத்து இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களுக்கு மிக அதிக முதலீட்டுடன்கூடிய மெட்ரோ இரயில் திட்டம் உகந்ததாக அமைவதில்லை.

2022 அக்டோபர் 18]

4) மேற்கண்ட ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம் மற்றும் மாற்று போக்குவரத்து ஆய்வறிக்கை பரிந்துரைக்கும் அதிகப் போக்குவரத்து வழித்தடங்களுக்கான விரிவான சாத்தியக்கூறு மற்றும் திட்ட அறிக்கைகள் தயாரித்தல்.

5) இதற்கிடையில் ஆரம்ப கட்ட திட்ட அறிக்கை தயாரித்து வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறுவதற்காக ஒன்றிய அரசிற்கு விண்ணப்பித்தல்.

6) விரிவான திட்ட அறிக்கையை மாநில அரசு ஆய்வு செய்து துரிதப் போக்குவரத்து தேவையின் அவசர அவசியம், ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டுவரும் போக்குவரத்து திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் புதிய திட்டத்தினை செயல்படுத்துவதற்கான அப்போதைய நிதி நிலைமை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு மாநில அரசின் ஒப்புதல் வழங்குதல்.

7) மாநில அரசு ஒப்புதல் வழங்கிய பின்னர் ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவிக்காக பரிந்துரை செய்தல்.

மேலே குறிப்பிட்டுள்ள நடைமுறைகளின்படி ஓசூர், தூத்துக்குடி, ஈரோடு, திருப்பூர், வேலூர், திண்டுக்கல், தஞ்சாவூர் மற்றும் நாகர்கோவில் நகரங்களுக்கான பெருந்திரள் துரிதப் போக்குவரத்து அமைப்புகள் ஏற்படுத்துவது குறித்து உரிய நேரத்தில் அரசு முடிவெடுக்கும்.

11—

மெட்ரோ இரயில் திட்டம் செயல்படுத்துதல்

வினா எண் 18204—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாநகராட்சியில் மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்த ஒன்றிய அரசை தமிழக அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[2022 அக்டோபர் 18

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒரு நகருக்கு பெருந்திரள் துரிதப் போக்குவரத்து திட்டத்தை (Mass Rapid Transit System) ஏற்படுத்துவது குறித்து கீழ்க்கண்ட நடைமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன:-

1) நகரத்தின் போக்குவரத்து தேவை உள்ளிட்ட ஒட்டுமொத்த வளர்ச்சியை ஆவணப்படுத்தும் வகையில் நகர மேம்பாட்டுத் திட்டம் (City Development Plan) தயாரித்தல்.

2) நகர மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம் (Comprehensive Mobility Plan) தயாரித்து தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின்கீழ் அறிவிக்கை வெளியிடுதல்.

3) எந்த வகையான துரிதப் போக்குவரத்து அமைப்பு தேவை என்பதைக் கண்டறிய மாற்று போக்குவரத்து ஆய்வறிக்கை தயாரித்தல். பொதுவாக அனைத்து இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களுக்கு மிக அதிக முதலீட்டுடன்கூடிய மெட்ரோ இரயில் திட்டம் உகந்ததாக அமைவதில்லை.

4) மேற்கண்ட ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம் மற்றும் மாற்று போக்குவரத்து ஆய்வறிக்கை பரிந்துரைக்கும் அதிகப் போக்குவரத்து வழித்தடங்களுக்கான விரிவான சாத்தியக்கூறு மற்றும் திட்ட அறிக்கைகள் தயாரித்தல்.

5) இதற்கிடையில் ஆரம்ப கட்ட திட்ட அறிக்கை தயாரித்து வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறுவதற்காக ஒன்றிய அரசிற்கு விண்ணப்பித்தல்.

6) விரிவான திட்ட அறிக்கையை மாநில அரசு ஆய்வு செய்து துரிதப் போக்குவரத்து தேவையின் அவசர அவசியம், ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டுவரும் போக்குவரத்து திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் புதிய திட்டத்தினை செயல்படுத்துவதற்கான அப்போதைய நிதி நிலைமை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு மாநில அரசின் ஒப்புதல் வழங்குதல்.

2022 அக்டோபர் 18]

7) *மாநில அரசு ஒப்புதல் வழங்கிய பின்னர் ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவிக்காக பரிந்துரை செய்தல்.*

மேலே குறிப்பிட்டுள்ள நடைமுறைகளின்படி ஓசூர், தூத்துக்குடி, ஈரோடு, திருப்பூர், வேலூர், திண்டுக்கல், தஞ்சாவூர் மற்றும் நாகர்கோவில் நகரங்களுக்கான பெருந்திரள் துரிதப் போக்குவரத்து அமைப்புகள் ஏற்படுத்துவது குறித்து உரிய நேரத்தில் அரசு முடிவெடுக்கும்.

12—

மெட்ரோ இரயில் திட்டம் செயல்படுத்துதல்

வினா எண் 18222—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சுற்றுலா பயணிகள் அதிகம் வரும் நாகர்கோவில் மாநகராட்சியில் மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்த ஒன்றிய அரசை தமிழக அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒரு நகருக்கு பெருந்திரள் துரிதப் போக்குவரத்து திட்டத்தை (Mass Rapid Transit System) *ஏற்படுத்துவது குறித்து கீழ்க்கண்ட நடைமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன:-*

1) *நகரத்தின் போக்குவரத்து தேவை உள்ளிட்ட ஒட்டுமொத்த வளர்ச்சியை ஆவணப்படுத்தும் வகையில் நகர மேம்பாட்டுத் திட்டம்* (City Development Plan) *தயாரித்தல்.*

2) *நகர மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம்* (Comprehensive Mobility Plan) *தயாரித்து தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின்கீழ் அறிவிக்கை வெளியிடுதல்.*

3) *எந்த வகையான துரிதப் போக்குவரத்து அமைப்பு தேவை என்பதைக் கண்டறிய மாற்று போக்குவரத்து ஆய்வறிக்கை தயாரித்தல். பொதுவாக அனைத்து இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களுக்கு மிக அதிக*

முதலீட்டுடன்கூடிய மெட்ரோ இரயில் திட்டம் உகந்ததாக அமைவதில்லை.

4) மேற்கண்ட ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம் மற்றும் மாற்று போக்குவரத்து ஆய்வறிக்கை பரிந்துரைக்கும் அதிகப் போக்குவரத்து வழித்தடங்களுக்கான விரிவான சாத்தியக்கூறு மற்றும் திட்ட அறிக்கைகள் தயாரித்தல்.

5) இதற்கிடையில் ஆரம்ப கட்ட திட்ட அறிக்கை தயாரித்து வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறுவதற்காக ஒன்றிய அரசிற்கு விண்ணப்பித்தல்.

6) விரிவான திட்ட அறிக்கையை மாநில அரசு ஆய்வு செய்து துரிதப் போக்குவரத்து தேவையின் அவசர அவசியம், ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டுவரும் போக்குவரத்து திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் புதிய திட்டத்தினை செயல்படுத்துவதற்கான அப்போதைய நிதி நிலைமை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு மாநில அரசின் ஒப்புதல் வழங்குதல்.

7) மாநில அரசு ஒப்புதல் வழங்கிய பின்னர் ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவிக்காக பரிந்துரை செய்தல்.

மேலே குறிப்பிட்டுள்ள நடைமுறைகளின்படி ஓசூர், தூத்துக்குடி, ஈரோடு, திருப்பூர், வேலூர், திண்டுக்கல், தஞ்சாவூர் மற்றும் நாகர்கோவில் நகரங்களுக்கான பெருந்திரள் துரிதப் போக்குவரத்து அமைப்புகள் ஏற்படுத்துவது குறித்து உரிய நேரத்தில் அரசு முடிவெடுக்கும்.

13—

மெட்ரோ இரயில் திட்டத்தை விரிவுபடுத்துதல்

வினா எண் 18229—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் கத்திப்பாரா முதல் பூந்தமல்லி வரை மெட்ரோ இரயில் திட்டத்தை விரிவுபடுத்த ஒன்றிய அரசை தமிழக அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை மெட்ரோ இரயில் திட்டம்-கட்டம்-II-ன்கீழ் வழித்தடம்-3, வழித்தடம்-4 மற்றும் வழித்தடம்-5 ஆகிய மூன்று வழித்தடங்கள் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதில், வழித்தடம்-4 மற்றும் 5-ன் ஒரு பகுதியாக கத்திப்பாரா முதல் பூந்தமல்லி வரையிலான வழித்தட பகுதி இணைக்கப்பட்டுள்ளது. இந்த வழித்தடப் பகுதியில் கட்டுமானப் பணிகள் தற்போது துவக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

14—

மெட்ரோ இரயில் திட்டம் நிறைவேற்றுதல்

வினா எண் 21184—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாநகராட்சியில் மெட்ரோ இரயில் திட்டத்தை நிறைவேற்ற ஒன்றிய அரசை தமிழக அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியில் பெருந்திரள் துரித போக்குவரத்து அமைப்பினை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறு ஆய்வினை மேற்கொள்ளலாம் என்று அரசு முடிவு செய்து, அரசாணை எண் 156, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 9-8-2021-ல் ஆணை வழங்கப்பட்டது. ஒன்றிய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் நடைமுறைகளின்படி சாத்தியக்கூறு ஆய்விற்கு முன்னரே இந்த மாநகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, இந்த மாநகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம் தயாரிக்கும் பணி, தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2022 அக்டோபர் 18

இதற்கிடையில், சாத்தியக்கூறு அறிக்கை தயாரிப்பதற்கான ஆலோசகர் நிறுவனத்தை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி நடைமுறையின் வழியாக தேர்வு செய்யும் பணியை துவக்கியுள்ளது. ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம் மற்றும் விரிவான சாத்தியக்கூறு அறிக்கை ஆகியவை தயாரிக்கப்பட்ட பின்னர், இந்த மாநகராட்சியில் உகந்த துரித இரயில் போக்குவரத்து அமைப்பினை தேர்வு செய்து முன்னுரிமை அடிப்படையிலான வழித்தடத்தை கண்டறிந்து விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி துவக்கப்படும். விரிவான திட்ட அறிக்கைமீது மாநில அரசு முடிவு எடுத்த பின்னர், ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவிக்காக பரிந்துரை செய்யப்படும்.

15—

மெட்ரோ இரயில் திட்டம் நிறைவேற்றுதல்

வினா எண் 21185—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலகின் 13-வது நகரமாக வளர்ந்து வரும் ஓசூர் மாநகராட்சியில் மெட்ரோ இரயில் திட்டத்தை நிறைவேற்ற ஒன்றிய அரசை தமிழக அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒரு நகருக்கு பெருந்திரள் துரிதப் போக்குவரத்து திட்டத்தை (Mass Rapid Transit System) ஏற்படுத்துவது குறித்து கீழ்க்கண்ட நடைமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன:-

1) நகரத்தின் போக்குவரத்து தேவை உள்ளிட்ட ஒட்டுமொத்த வளர்ச்சியை ஆவணப்படுத்தும் வகையில் நகர மேம்பாட்டுத் திட்டம் (City Development Plan) தயாரித்தல்.

2) நகர மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம் (Comprehensive Mobility Plan) தயாரித்து தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின்கீழ் அறிவிக்கை வெளியிடுதல்.

2022 அக்டோபர் 18]

3) எந்த வகையான துரிதப் போக்குவரத்து அமைப்பு தேவை என்பதைக் கண்டறிய மாற்று போக்குவரத்து ஆய்வறிக்கை தயாரித்தல். பொதுவாக அனைத்து இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களுக்கு மிக அதிக முதலீட்டுடன்கூடிய மெட்ரோ இரயில் திட்டம் உகந்ததாக அமைவதில்லை.

4) மேற்கண்ட ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம் மற்றும் மாற்று போக்குவரத்து ஆய்வறிக்கை பரிந்துரைக்கும் அதிகப் போக்குவரத்து வழித்தடங்களுக்கான விரிவான சாத்தியக்கூறு மற்றும் திட்ட அறிக்கைகள் தயாரித்தல்.

5) இதற்கிடையில் ஆரம்ப கட்ட திட்ட அறிக்கை தயாரித்து வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறுவதற்காக ஒன்றிய அரசிற்கு விண்ணப்பித்தல்.

6) விரிவான திட்ட அறிக்கையை மாநில அரசு ஆய்வு செய்து துரிதப் போக்குவரத்து தேவையின் அவசர அவசியம், ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டுவரும் போக்குவரத்து திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் புதிய திட்டத்தினை செயல்படுத்துவதற்கான அப்போதைய நிதி நிலைமை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு மாநில அரசின் ஒப்புதல் வழங்குதல்.

7) மாநில அரசு ஒப்புதல் வழங்கிய பின்னர் ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவிக்காக பரிந்துரை செய்தல்.

மேலே குறிப்பிட்டுள்ள நடைமுறைகளின்படி ஓசூர், தூத்துக்குடி, ஈரோடு, திருப்பூர், வேலூர், திண்டுக்கல், தஞ்சாவூர் மற்றும் நாகர்கோவில் நகரங்களுக்கான பெருந்திரள் துரிதப் போக்குவரத்து அமைப்புகள் ஏற்படுத்துவது குறித்து உரிய நேரத்தில் அரசு முடிவெடுக்கும்.

16—

மெட்ரோ இரயில் திட்டம் நிறைவேற்றுதல்

வினா எண் 21186—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2022 அக்டோபர் 18

(அ) திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் மெட்ரோ இரயில் திட்டத்தை நிறைவேற்ற ஒன்றிய அரசை தமிழக அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் பெருந்திரள் துரித போக்குவரத்து அமைப்பினை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறு ஆய்வினை மேற்கொள்ளலாம் என்று அரசு முடிவு செய்து அரசாணை எண் 156, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 9-8-2021-ல் ஆணை வழங்கப்பட்டது. ஒன்றிய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் நடைமுறைகளின்படி சாத்தியக்கூறு ஆய்விற்கு முன்னரே இந்த மாநகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, இந்த மாநகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம் தயாரிக்கும் பணி, தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்கிடையில், சாத்தியக்கூறு அறிக்கை தயாரிப்பதற்கான ஆலோசகர் நிறுவனத்தை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி நடைமுறையின் வழியாக தேர்வு செய்யும் பணியை துவக்கியுள்ளது. ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம் மற்றும் விரிவான சாத்தியக்கூறு அறிக்கை ஆகியவை தயாரிக்கப்பட்ட பின்னர், இந்த மாநகராட்சியில் உகந்த துரித இரயில் போக்குவரத்து அமைப்பினை தேர்வு செய்து முன்னுரிமை அடிப்படையிலான வழித்தடத்தை கண்டறிந்து விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி துவக்கப்படும். விரிவான திட்ட அறிக்கைமீது மாநில அரசு முடிவு எடுத்த பின்னர், ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவிக்காக பரிந்துரை செய்யப்படும்.

2022 அக்டோபர் 18]

17—

மெட்ரோ இரயில் திட்டம் நிறைவேற்றுதல்

வினா எண் 21506—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் மெட்ரோ இரயில் திட்டத்தை நிறைவேற்ற ஒன்றிய அரசை தமிழக அரசு வலியுறுத்த முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருகிவரும் போக்குவரத்து நெரிசலைக் கருத்தில்கொண்டு கோயம்புத்தூர் நகருக்கு ஒரு பெருந்திரள் துரித போக்குவரத்து அமைப்பினை ஏற்படுத்துவது குறித்து, ஜூலை 2017-ல் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதற்கான சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான பணி, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின்மூலம் திருவாளர்கள் சிஸ்ட்ரா மற்றும் ரைட்ஸ் கூட்டமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த அறிக்கைகள் தயாரிப்பதற்கான நிதியுதவியை ஜெர்மன் நிதி நிறுவனமான கே.எப். டபிள்யூ. வழங்குகிறது.

ஆலோசகர் நிறுவனம் சமர்ப்பித்த விரிவான சாத்தியக்கூறு அறிக்கையை பரிசீலனை செய்த பின்னர், விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான ஆணையை, அரசாணை நிலை எண் 143, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 16-7-2021-ல் வழங்கப்பட்டது. 2021-2022 ஆம் ஆண்டுக்கான திருத்திய வரவு-செலவுத் திட்ட உரையிலும், கோயம்புத்தூர் நகரில் மெட்ரோ இரயில் திட்டம் ஒன்றிய அரசுடன் கலந்தாலோசித்து செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. தற்போது விரிவான திட்ட அறிக்கை மாநில அரசால் பெறப்பட்டு, பரிசீலனையில் உள்ளது. விரிவான திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் வழங்கப்பட்ட பின்னர், ஒன்றிய அரசின் ஒப்புதல், நிதியுதவி மற்றும் பன்னாட்டு நிதி நிறுவனங்களின் கடனுதவி ஆகியவற்றிற்காக ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

[2022 அக்டோபர் 18

18—

காவிரி ஆற்றில் நீரொழுங்கி அமைத்தல்

வினா எண் 2368—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் மாவட்ட அரசு பொது மருத்துவமனை பகுதியில் காவிரி ஆற்றில் மைல் 57/3-ல் நீரொழுங்கி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவிரி உப வடிநிலம் நீட்டித்தல், புனரமைத்தல், நவீனப்படுத்துதல் (ERM) திட்டத்தில், சிப்பம் எண் 26, ரூ.108 கோடி மதிப்பீட்டில் காவிரி ஆற்றின் குறுக்கே மைல் 57/7-ல் நீரொழுங்கி (Regulator) அமைக்கும் பணிக்கு ரூ.1,620.00 இலட்சம் உள்ளடக்கம் செய்யப்பட்டு நிதி ஒதுக்கீட்டிற்குட்பட்டு பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

19—

திருமலைராஜன் ஆற்றில் நீரொழுங்கி அமைத்தல்

வினா எண் 2371—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, திப்பிராஜபுரம் கிராமத்தில் திருமலைராஜன் ஆற்றில் 59/4 மைலில் புதிய நீரொழுங்கி (Regulator) கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதி, திப்பிராஜபுரம் கிராமம், திருமலைராஜன் ஆற்றின் குறுக்கே 59/4 மைலில் ரெகுலேட்டர் புதிதாக மாற்றி அமைக்கும் பணிக்கு ரூ.5.29 கோடி மதிப்பில் காவிரி உப வடிநிலக் கோட்டம் நீட்டித்தல், புனரமைத்தல், நவீனப்படுத்துதல் (ERM) திட்டத்தில் சிப்பம் எண் 10-ல் ரூ.102.90 கோடி மதிப்பிலான பணிகள் உள்ளடக்கம் செய்யப்பட்டு நிதி ஒதுக்கீட்டிற்குட்பட்டு பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

20—

அணைகளை அடைக்கும் தேதியை நீட்டித்தல்

வினா எண் 3903—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கடைவரம்பு விவசாயிகள் பயன்பெற வசதியாக பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளை அடைக்கும் தேதியை மார்ச் 31 ஆம் தேதி வரை நீட்டிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கடைவரம்பு விவசாயிகள் பயன்பெற வசதியாக பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணைகளை அடைக்கும் தேதி, அரசாணை (வாலாயம்) எண் 76/நீர்வள (என்.2)த் துறை, நாள் 25-2-2022-ன்படி மார்ச் 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

21—

குளத்தை தூர்வாருதல்

வினா எண் 3904—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பத்மநாபபுரம் தொகுதி, காட்டாத்துறை ஊராட்சிக்குட்பட்ட வெள்ளிகோடு பகுதியில் அமைந்துள்ள காட்டுக்குளத்தை தூர்வாரி சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காட்டாத்துறை ஊராட்சிக்குட்பட்ட வெள்ளிகோடு கிராமத்தில் அமைந்துள்ள காட்டுக்குளம் பட்டணங்கால் பிரதான கால்வாய் நெடுகை 25/375-ல் உள்ள சில்ட் டிராப் (Silt Trap) ஆகும். மேற்குறிப்பிட்ட Silt Trap-ஐ தூர்வார ரூ.1.00 இலட்சம் ஆகும். 2022-2023 ஆம் நிதியாண்டில் வருடாந்திர பராமரிப்பு நிதியில் தூர்வாரி சீரமைக்கப்படும்.

22—

வாக்குச்சாவடியை மாற்றியமைத்தல்

வினா எண் 26252—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், களிக்கொடி ஊராட்சி, வாக்குச்சாவடி எண் 61-ஐ பரணம்பேடு கிராமத்திற்கு மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம் மற்றும் தொகுதி, பரணம்பேடு கிராமத்தில் 1. பரணம்பேடு, 2. பரணம்பேடு ஆதி திராவிடர் காலனி, 3. அயல்நாடுவாழ் வாக்காளர்கள் ஆகியோரை சேர்த்து ஆண் வாக்காளர்கள் 259, பெண் வாக்காளர்கள் 309, மொத்த வாக்காளர்கள் 568 நபர்கள் உள்ளனர். பரணம்பேடு கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி பழுதடைந்து பள்ளிக் கட்டடம் இடிக்கப்பட்டு புதிய பள்ளிக் கட்டடம் கட்டப்படவுள்ளது. இந்நேர்வில், மேற்படி புதிய பள்ளிக் கட்டடம் பரணம்பேடு கிராமத்தில் கட்டப்பட்டவுடன் வாக்குச்சாவடி மறுசீரமைப்பின்போது வாக்குச்சாவடி மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

23—

கூட்டுக் குடிநீர் வசதி செய்தல்

வினா எண் 6580—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், ஓனமாக்குளம் ஊராட்சிக்குட்பட்ட வீரபாண்டியாபுரம், வீரபாண்டிபுலிகுளம் ஆகிய கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், ஓனமாக்குளம் ஊராட்சியில் வீரபாண்டிபுலிகுளம், வீரபாண்டியாபுரம், ஓனமாக்குளம் ஆகிய மூன்று குடியிருப்புகள் உள்ளன. இவ்வூராட்சியின் மக்கள்தொகை 1,638 ஆகும். ஊரகக்

குடியிருப்புகளில் உள்ள மக்களுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் என மொத்த குடிநீர் தேவை நாளொன்றுக்கு 0.90 இலட்சம் லிட்டர் ஆகும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் கடம்பூர், புதூர், விளாத்திகுளம் பேரூராட்சிகள் மற்றும் 180 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் 248 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் வடிவமைக்கப்பட்ட குடிநீரின் அளவு 0.65 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மேற்காணும் அனைத்து குடியிருப்புகளுக்கும் உள்ளூர் நீராதாரம்மூலம் 0.25 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

ஜல் ஜீவன் மிஷன் கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் (MVS) 2022-2023 நிதியாண்டில் 0.90 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்க ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

24—

கூட்டுக் குடிநீர் வசதி செய்தல்

வினா எண் 6582—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், கொடியன்குளம் ஊராட்சியில் கூட்டுக் குடிநீர் (TWAD) கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, தூத்துக்குடி ஒன்றியத்தில் உள்ள கொடியன்குளம் ஊராட்சியின் மக்கள்தொகை 1,371 ஆகும். இவ்வூராட்சியில் உள்ள மக்களுக்கு நாளொன்றிற்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் என மொத்த குடிநீர் தேவை நாளொன்றுக்கு 75,400 லிட்டர் ஆகும்.

2022 அக்டோபர் 18]

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் பராமரிக்கப்படும் கொடியன்குளம் மற்றும் 10 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் இக்குடியிருப்புகளுக்கு வடிவமைக்கப்பட்ட அளவான 52,000 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், உள்ளூர் நீராதாரம்மூலம் 23,400 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஜல் ஜீவன் இயக்கத்தின்கீழ் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டம் ஊராட்சி நிருவாகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

25—

கூட்டுக் குடிநீர் வசதி செய்தல்

வினா எண் 6583—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், கலியாவூர் ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், கலியாவூர் ஊராட்சியில் கலியாவூர், காலன்கரை, அம்பேத்கர் நகர், உலக்குடி, சின்ன கலியாவூர் ஆகிய குடியிருப்புகள் உள்ளன. இவ்வூராட்சியின் மக்கள்தொகை 3,513 ஆகும். இக்குடியிருப்புகளில் உள்ள மக்களுக்கு நாளொன்றிற்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் என மொத்த குடிநீர்த் தேவை 1,93,000 லிட்டர் ஆகும்.

கலியாவூர் ஊராட்சிக்கு சீவலப்பேரி அருகில் தாமிரபரணி ஆற்றில் அமைக்கப்பட்டுள்ள நீர் உறிஞ்சு கிணறுமூலம் ஊராட்சி நிருவாகத்தினால் 1,93,000 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஜல் ஜீவன் இயக்கத்தின்மூலம் அனைத்து வீடுகளுக்கும்

குடிநீர் வழங்கும் திட்டம் ஊராட்சி நிருவாகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

26—

பாதாள சாக்கடைக் கழிவுகளை இயந்திரங்கள்மூலம் அகற்றுதல்

வினா எண் 27171—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மனிதக் கழிவுகளை மனிதரே அகற்றும் நிலையை தமிழ்நாட்டில் முழுவதுமாக ஒழிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மனிதக் கழிவுகளை மனிதரே அகற்றும் முறையானது, தமிழ்நாட்டில் 2015 ஆம் ஆண்டு முதல் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. மேலும், கழிவுநீர் கால்வாய்கள், நச்சுத் தொட்டிகள், பாதாள சாக்கடை கட்டமைப்பு போன்றவற்றின் பராமரிப்புப் பணிகளில் இயந்திரங்களின் பயன்பாட்டினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன்மூலம், மனிதக் கழிவுகளை மனிதரே அகற்றும் முறை இம்மாநிலத்தில் முற்றிலும் இல்லை என்ற நிலையை அடைவதுடன், அதனை நீடித்து நிலைக்கச் செய்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகின்றது.

27—

அதிக சர்க்கரை சத்து கொண்ட கரும்பு வகைகளைப் பயிரிடுதல்

வினா எண் 2354—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 அக்டோபர் 18]

(அ) தஞ்சாவூர் மாவட்டம், குருங்குளம் அறிஞர் அண்ணா அரசு சர்க்கரை ஆலையின் மூலமாக அதிக சர்க்கரை சத்து கொண்ட கரும்பு வகைகளை ஆராய்ந்து அதிகமாக பயிரிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடந்த நான்கு வருடங்களாக புத்தாக்கம் செய்யப்பட்ட கோ 86032 இரக கரும்பு விதை கரணைகளை திசுவளர்ப்பு நாற்றுகளாகவும், வல்லுநர் விதைக் கரும்பாகவும், கரும்பு இனப்பெருக்க நிறுவனம் கோவையிலிருந்து பெற்று, அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலைப் பகுதிகளில் பெருக்கம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், கோ.க 13339, கோ 11015, கோ.கு 6 ஆகிய புதிய உயர் சர்க்கரை சத்து மற்றும் உயர் விளைச்சல் வல்லுநர் விதைக் கரும்புகள் கரும்பு இனப்பெருக்கம் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தைச் சார்ந்த ஆராய்ச்சி நிலையங்களிலிருந்து பெறப்பட்டு, வணிக நாற்றாங்கால்மூலம் பெருக்கம் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் பருவங்களில் ஆலைக்குட்பட்ட பெரும்பாலான பகுதிகளில் உயர் விளைச்சல், உயர் சர்க்கரை சத்து கொண்ட கரும்பு இரகங்கள் பயிரிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

28—

வேளாண் இயந்திரத்தை மானிய விலையில் வழங்குதல்

வினா எண் 3595—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விவசாயிகள் பயன்பெறும் வகையில் Ridge Moulder *இயந்திரம் 50% மானிய விலையில் வழங்க அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் வேளாண்மை இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின்கீழ், நிலமுள்ள தனிப்பட்ட விவசாயிகளுக்கு வரப்பு அமைக்கும் கருவி (Ridge Moulder/Bund Former) உட்பட பல்வேறு வகையான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் சிறு, குறு ஆதி திராவிட, பழங்குடியின மற்றும் பெண் விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியம் அல்லது அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அதிகபட்ச மானியத் தொகை இவற்றில் எது குறைவோ அந்தத் தொகை மானியமாகவும், இதர விவசாயிகளுக்கு 40 சதவிகித மானியம் அல்லது அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அதிகபட்ச மானியத் தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாகவும், வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி விவசாயிகளுக்குத் தேவைக்கேற்ப வழங்கிட இயலும். மேலும், இக்கருவியினை விவசாயிகளிடையே ஊக்குவிப்பதற்காகவும், பிரபலப்படுத்துவதற்காகவும் டிராக்டரால் இயங்கக்கூடிய வரப்பு செதுக்கி சேறு பூசும் கருவி (Ridge Moulder) அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த வாடகை அடிப்படையில் மணிக்கு ரூ.400/- என்ற வீதத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கப்படுகிறது.

29—

சர்க்கரை ஆலையைத் திறத்தல்

வினா எண் 17913—திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையைத் திறக்க அரசு முன்வருமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் அறிஞர் அண்ணா பொதுத் துறை சர்க்கரை ஆலை நடப்பு அரவை பருவம் 2021-2022 இல் கரும்பு அரவை செய்து வருகிறது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

30—

கரும்புக்கான நிலுவைத் தொகை வழங்குதல்

வினா எண் 17914—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி, குரும்பூர் சர்க்கரை ஆலையால் விவசாயிகளுக்கு வழங்கப்படாமல் உள்ள கரும்புக்கான நிலுவைத் தொகையை வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், குரும்பூரில் உள்ள ஈ.ஐ.டி பாரி (இந்தியா) லிமிடெட், 2018-2019 அரவைப் பருவம் முதல் நிரந்தரமாக மூடப்பட்டுவிட்டது. இவ்வாலையில் கொள்முதல் செய்து 2017-2018 அரவைப் பருவம் வரை அரவை செய்த கரும்பிற்கு ஒன்றிய அரசின் நியாயமான மற்றும் ஆதாய விலை நிலுவையின்றி விவசாயிகளுக்கு வழங்கி முடிக்கப்பட்டுவிட்டது. மாநில அரசு பரிந்துரை விலையைப் பொறுத்தவரை, தனியார் சர்க்கரை ஆலைகள் மாநில அரசு பரிந்துரை விலை அறிவிப்பை எதிர்த்து தென்னிந்திய சர்க்கரை ஆலைகளின் சங்கம் மூலமாக மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு (W.P.No.28620/2014) தொடர்ந்து 2013-2014 அரவைப் பருவம் முதல் 2016-2017 அரவைப் பருவம் வரை மாநில அரசு பரிந்துரை விலையை விவசாயிகளுக்கு வழங்காமல் நிலுவையில் உள்ளது. இவ்வழக்கு தொடர்பாக அரசு சார்பாகவும், சர்க்கரைத் துறை

சார்பாகவும் எதிர்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், மாநில அரசு பரிந்துரை விலையை தனியார் சர்க்கரை ஆலைகள் வழங்க மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழக கரும்பு விவசாயிகள் சங்கம் வழக்கு (W.P.No.7320/2020) தொடர்ந்துள்ளது. மேற்கண்ட இரண்டு வழக்குகளும் நிலுவையில் உள்ளன.

31—

தவில், நாதசுரக் கலைஞர்களுக்கு சிறப்பு கடன் வசதி

வினா எண் 2204—திரு. இரா. அருள்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தவில், நாதசுரக் கலைஞர்களின் வாழ்வாதாரம் பெருந்தொற்று காலத்தில் பாதிப்படைந்துள்ளதால் சிறப்பு கடன் வசதி அளிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ள தவில், நாதசுரக் கலைஞர்களுக்கு தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்மூலம் கல்வி உதவித் தொகை, திருமண உதவி, மகப்பேறு நிதி உதவி (பெண்களுக்கு மட்டும்), மூக்கு கண்ணாடி, இயற்கை மரண உதவித் தொகை, ஈமச் சடங்கு உதவித் தொகை, விபத்து மரண உதவித் தொகை ஆகிய உதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே, தவில் மற்றும் நாதசுரக் கலைஞர்களுக்கு தனியாக சிறப்பு கடன் வழங்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

32—

அரசு தேயிலை தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டுதல்

வினா எண் 3182—திரு. பொன். ஜெயசீலன்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2022 அக்டோபர் 18]

கூடலூர் தொகுதியில் வசிக்கும் அரசு தேயிலை தோட்டக் கழகத் (TANTEA) தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

கூடலூர் தொகுதியில் வசிக்கும் அரசு தேயிலை தோட்டக் கழகத் (TANTEA) தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்ட இயலாத நிலையில் உள்ளது எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

33—

உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

வினா எண் 6965—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த புதிய செயல் திட்டங்களை உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

12-10-2021 *அன்று நடைபெற்ற* 18-*வது உள்கட்டமைப்பு மற்றும் வசதி உயர்மட்டக் குழுக் கூட்டத்தில் ரூ.*645.48 *கோடி மதிப்பீட்டிலான* 19 *உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

I. பெருநகர சென்னை மாநகராட்சி

வ. எண்	திட்டப் பணியின் பெயர்	ஒதுக்கீடு தொகை ரூ. (கோடியில்)
1.	5,9,10-மண்டலங்களில் பல்வேறு இடங்களில் மழைநீர் வடிகால் வசதி ஏற்படுத்துதல் (அரசாணை எண் 11, ந.நி.(ம)கு.வ. துறை, நாள் 10-1-2022	26.28
2.	கணேசபுரத்தில் இருக்கும் சுரங்கப்பாதையில் மேல் மேம்பாலம் கட்டுதல் (அரசாணை (*D*) எண் 12, ந.நி.(ம)கு.வ. துறை, நாள் 10-1-2022	176.00
3.	கொன்னூர் ஹை ரோடு-ஸ்ட்ரஹான்ஸ் ரோடு-குக்ஸ் ரோடு-பிரிக்லின் ரோடு (ஓட்டேரி) சந்திப்பில் மேம்பாலம் கட்டுதல் (அரசாணை (*D*) எண் 12, ந.நி.(ம)கு.வ. துறை, நாள் 10-1-2022	65.00
4.	தெற்கு உஸ்மான் சாலை மற்றும் சிஐடி நகர் 1-வது மெயின் சாலையில் மேம்பாலம் கட்டுதல் (அரசாணை (*D*) எண் 12, ந.நி.(ம)கு.வ. துறை, நாள் 10-1-2022	94.00
5.	125, மண்டலம்-*IX*-ல் உள்ள லூப் சாலையில் நவீன மீன் சந்தையின் கட்டுமானம் (அரசாணை (*D*) எண் 13, ந.நி.(ம)கு.வ. துறை, நாள் 10-1-2022	9.97
	மொத்தம்	**371.25**

II. ஈரோடு மாநகராட்சி மற்றும் கரூர், கடலூர், காஞ்சிபுரம், திருத்தணி, திருமங்கலம், ராணிப்பேட்டை, திண்டிவனம், திருவண்ணாமலை, மன்னார்குடி, மயிலாடுதுறை, நாமக்கல் மற்றும் சங்கரன்கோவில் நகராட்சிகளில் புதிய பேருந்து நிலையங்கள் கட்டுவதற்கான மொத்த மதிப்பீட்டில் 50% மானியத் தொகையான ரூ.204.23 கோடி (18 நகர உள்ளாட்சிகள்) உள்கட்டமைப்பு மற்றும் வசதி நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசினால்

2022 அக்டோபர் 18]

அரசாணை எண் 20 (டி) நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25-1-2022 இன்மூலம் நிருவாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

III. மேலும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் அமைக்க அதிகபட்சமாக ரூ.70.00 கோடி மானியமாக வழங்க மாநில உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் உயர்மட்ட குழுவால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

IV. திருவள்ளூர் மாவட்டம், தாமரைப்பாக்கம், அம்மணம்பாளையம் கிராமத்தில் பேருந்து பணிமனையுடன்கூடிய பேருந்து நிலையங்கள் அமைக்கும் திட்டத்திற்கு ரூ.8.03 கோடிக்கான கருத்துருவும், இராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடியில் புதிய பணிமனை அமைக்கும் திட்டத்திற்கு ரூ.193 கோடிக்கான கருத்துருவும் பெறப்பட்டுள்ளன. இக்கருத்துருக்கள் பரிசீலனைக்கு பின்பு முடிவு செய்யப்படும்.

34—

வீடுகள் கட்டுதல்

வினா எண் 9745—திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேட்டூர் தொகுதி, மேட்டூர் நகரத்தில் EB Workshop-க்கு சொந்தமான குடியிருப்புகளில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்குச் சொந்தமான நிலத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் கட்டுவதற்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் செயல் திட்டம் அளிக்கும்பட்சத்தில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் ஒப்புதலின்பேரில் வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

35—

கழிவுநீர் வெளியேற்ற நிலத்தினை வழங்குதல்

வினா எண் 10043—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மேற்கு தொகுதி, கோட்டக்கவுண்டம்பட்டி ஊராட்சி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் கழிவுநீர் வெளியேற்ற அருகில் உள்ள புறம்போக்கு நிலத்தினை வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

கோட்டக்கவுண்டம்பட்டி கிராமத்தில் வீட்டு வசதி திட்டம் செயல்படுத்த புல எண் 62/1A உள்ளிட்ட 13.20.0 ஹெக்டேர் நிலத்திற்கு நகர் மற்றும் ஊரமைப்பு துறையின்மூலம் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்று, வாரிய ஒப்புதலின்படி முதற்கட்டமாக நிலை I-ல் 200 வீடுகள், நிலை II-ல் 210 வீடுகள், மனை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 36 மனைகள் மற்றும் சுயநிதித் திட்டத்தின்கீழ் 84 வீடுகள் கட்டி திட்டம் செயல்படுத்தி முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களில் உள்ள வீடுகளில் வெளியேறும் கழிவுநீரை வெளியேற்ற கீழ்நிலை கழிவுநீர்த் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் செயல்படுத்தப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகள் தொடர் பராமரிப்புக்காக வாரியம்மூலம் கோட்டக்கவுண்டம்பட்டி ஊராட்சி வசம் கடந்த 1-6-2021 அன்று ஒப்படைக்கப்பட்டு விட்டது. இத்திட்டத்தின் அருகில் உள்ள அரசு வண்டிப்பாதை புறம்போக்கு நிலங்கள் உரிய நிலத்தொகை செலுத்தப்பட்டு பின்னர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் மனை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் சுயநிதித் திட்டத்தின்மூலம் வீடுகள் கட்டும் திட்டம் செயல்படுத்தப்படும்போது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தோடு அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2022 அக்டோபர் 18]

36—

அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல்

வினா எண் 15657—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருப்பூர் பகுதிகளில் வசிக்கும் தொழிலாளர்களுக்கு புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருப்பூர் மாவட்டம், முதலிபாளையம் கிராமத்தில் உள்ள திட்டப் பகுதியில் வாரியத் தீர்மானம் எண் 2.03, *நாள்* 20-11-1997-*ல் ஒப்புதல் பெறப்பட்டு* 96 *ஹெக்டேர் நிலப்பரப்பில்* 8,302 *மனைகள் (உயர் வருவாய் பிரிவு*-115, *மத்திய வருவாய் பிரிவு*-451, *குறைந்த வருவாய் பிரிவு*-I-1,481, *குறைந்த வருவாய் பிரிவு*-II-700, *பொருளாதாரத்தில் நலிவுற்றோர்*-A-2,377 *மற்றும் பொருளாதாரத்தில் நலிவுற்றோர்*-B-3,178) *ரூ.*4,820.60 *இலட்ச மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. இத்திட்டப் பகுதியில்* 0.86 *ஹெக்டேர் நிலப்பரப்பு மீதமுள்ளது. இதில் தனியார் தொழிற்கூடங்களில் பணிபுரியும் திருப்பூர் பனியன் தொழிலாளர்களுக்கு குறைவான வாடகையில் வீடு கட்டுவது குறித்து* 28-7-2021 *அன்று தொழிற்சாலை நிருவாகிகளை தொடர்பு கொண்டபோது அத்தொழிற்சாலைகளில் குறைவான அளவிலேயே நிரந்தரப் பணியாளர்கள் உள்ளதாலும், பெரும்பாலான தொழிலாளர்கள் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிவதாலும், முதலிபாளையம் தன்னிறைவு வீட்டு மனைத் திட்டத்தில் வாடகைக் குடியிருப்புகளுக்கு விருப்பமில்லை என தெரிவித்துள்ளார்கள்.*

மேலும், திருப்பூர் பகுதிகளில் வசிக்கும் தொழிலாளர்களிடம் கேட்பு பெறப்படும்பட்சத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் திட்டம் செயல்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்படும்.

[2022 அக்டோபர் 18

37—

வீடுகள் கட்டுதல்

வினா எண் 15687—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வீடு இல்லாத குடும்பங்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தற்போது நாகர்கோவில் பகுதியில் உள்ள வல்லன்குமாரவிளை திட்டப் பகுதியில் 25 மனைகளுக்கான மனை மேம்பாட்டுத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலங்கள் ஏதும் இல்லாததால், தற்சமயம் வீடுகள் கட்டும் திட்டம் இல்லை. பொது மக்களிடம் போதிய கேட்பு பெறப்பட்டு நிலம் கிடைக்கும்பட்சத்தில், கன்னியாகுமரி மாவட்டத்தில் வீடுகள் கட்டுவது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

38—

வீடுகள் கட்டுதல்

வினா எண் 15688—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீர்நிலைகளை ஆக்கிரமித்து குடியிருப்புகளைக் கட்டி குடியிருப்பவர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நீர்நிலைகளை ஆக்கிரமித்து குடியிருப்பவர்களுக்கு மாற்று இடங்களில் குடியிருப்புகள் கட்ட அரசு கொள்கை அளவில் முடிவெடுக்கும்பட்சத்தில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் குடியிருப்புகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், பொதுவாக நீர்நிலைகளை ஆக்கிரமித்து குடியிருப்பவர்களுக்கு குடியிருப்புகள் கட்டும் திட்டமானது தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மீள்குடியேற்றம் மற்றும் மறுவாழ்வு தனது கொள்கை குறிகோளாக கொண்டு செயல்படுத்தி வருகிறது.

39—

நவீன வீடுகள் கட்டுதல்

வினா எண் 15693—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் நவீன வீடுகள் கட்டி விற்பனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தனது தொடக்க காலத்திலிருந்தே வீட்டு வசதி திட்டங்களை செயல்படுத்தும்போது நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி செயல்படுத்துவதில் முன்னணி நிறுவனமாக விளங்கி வருகிறது. பின்னர் பன்னடுக்கு மாடி கட்டடங்களை நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி செயல்படுத்துவதில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மாநிலத்தில் முதன்மை நிறுவனமாக உள்ளது. இந்நிலையில், வீட்டு வசதி வாரியத்தால் மைவான் தொழில்நுட்பம் (Myvon Technology)

மற்றும் முன் தயாரிப்பு தொழில்நுட்பங்களும் (Prefab Technology) *கையாளப்பட்டு வருகின்றன. பின்வரும். காலங்களிலும் மாநிலத்திற்கு பொருந்தக்கூடிய நவீன தொழில்நுட்பங்களை ஆராய்ந்து செயல்படுத்தும்.*

40—

தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 17864—திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஸ்ரீவைகுண்டம் தொகுதி, பெரியதாழை மீனவர்களுக்கு சிங்காரவேலர் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் தொகுப்பு வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் தொகுதி, பெரியதாழை மீனவர்களுக்காக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் திட்டங்கள் ஏதும் செயல்படுத்தப்படவில்லை. மேலும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலங்கள் ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் ஏதுமில்லை.

41—

மானியங்கள் குறித்த செய்திகளை முதன்மைப்படுத்துதல்

வினா எண் 30734—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழக அரசு வழங்கி வரும் பொது நலத் திட்டங்கள் மானியங்கள் குறித்த செய்திகளை மட்டும் முதன்மைப்படுத்தி கிராமப்புறங்கள் வரை கொண்டு செல்ல அரசு ஆவன செய்யுமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசின் சாதனைகள், பொது நலத் திட்டங்கள், கொள்கைகள் மற்றும் சமூக நலப் பணிகள் தொடர்பான குறும்படங்கள் மற்றும் குறும்பாடல்கள் செய்தி மக்கள் தொடர்புத் துறையால் தயாரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள LED TV மூலமாகவும் மற்றும் நவீன மின்னணு விளம்பர வாகனம் மூலமாகவும் அரசு கேபிள் TV மூலமாகவும் மற்றும் திரையரங்குகளில் செய்தி மலராகவும் வெளியிடப்பட்டு கிராமப்புற மக்களுக்கு சென்றடைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

42—

சத்துணவுக்கூடம் கட்டுதல்

வினா எண் 5419—திரு. J.L. ஈஸ்வரப்பன்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆற்காடு தொகுதி, ஆற்காடு வட்டம், செய்யாத்துவண்ணம், அரசு பள்ளிக்கு சத்துணவுக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டம்/ராணிப்பேட்டை மாவட்டம், திமிரி ஊராட்சி ஒன்றியம், செய்யாத்துவண்ணம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 23 மாணவர்கள் மட்டுமே பயின்று வருகின்றனர். பயனாளிகளின் எண்ணிக்கை 25-க்கும் குறைவாக உள்ளதால் இப்பள்ளி பயனாளிகளுக்கு, அருகில் 1 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மழையூர் ஆதி திராவிடர் நல தொடக்கப் பள்ளி சத்துணவு மையத்திலிருந்து சத்துணவு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றது. எனவே, மேற்காணும் ஆற்காடு தொகுதி, ஆற்காடு வட்டம், செய்யாத்துவண்ணம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் கட்ட வேண்டிய தேவை ஏதும் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2022 அக்டோபர் 18

43—

கால்நடை ஆராய்ச்சி நிலையம் அமைத்தல்

வினா எண் 9752—திரு. கடம்பூர் ராஜு: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி கால்நடை உதவி இயக்குநர் அலுவலக வளாகத்தில் கால்நடை ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் பணியினை விரைந்து முடிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கோவில்பட்டி தொகுதி, கோவில்பட்டி கால்நடை உதவி இயக்குநர் அலுவலக வளாகத்தில் கால்நடை ஆராய்ச்சி நிலையம் அமைக்க நில ஒதுக்கீடு மற்றும் நிதி ஒப்புதல் பெறப்பட்டபின் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் பணி துவக்கப்படும்.

44—

நாட்டின மாடுகளைப் பாதுகாத்தல்

வினா எண் 10012—திரு. இரா. அருள்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காங்கேயம் காளை, காராம் பசு, ஆலம்பாடி போன்ற நாட்டுப்புற மாட்டு இனங்களை பாதுகாக்கவும், அவற்றை அபிவிருத்தி செய்து பால் உற்பத்தித் திறனை கூட்டவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தமிழகத்தின் நாட்டின மாடுகளான பர்கூர், புலிக்குளம், காங்கேயம் மற்றும் ஆலம்பாடி மாட்டினங்களைப் பாதுகாத்து

2022 அக்டோபர் 18]

பால் உற்பத்தித் திறனைக் கூட்டுவதற்கென அதன் வாழ்விடங்களில் பாதுகாத்திட பர்கூரில் பர்கூர் மாட்டின ஆராய்ச்சி நிலையம், மானாமதுரையில் புலிக்குளம் மாட்டின ஆராய்ச்சி நிலையம், ஈரோட்டில் காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையம் மற்றும் தருமபுரியில் ஆலம்பாடி மாட்டின ஆராய்ச்சி நிலையம் ஆகியவை தமிழக அரசின் நிதியுதவியுடன் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன. மேலும், மரபு திறனுயர்த்தப்பட்ட உயர் ரக மாடுகள் இனப்பெருக்கம் செய்யப்பட்டு கால்நடை விவசாயிகளுக்கு வழங்கும் பணியினை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மேற்கொள்ளும்.

45—

புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைத்தல்

வினா எண் 10437—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் சேலம், தேனி, உடுமலைப்பேட்டை, சென்னை, நாமக்கல், ஒரத்தநாடு, திருநெல்வேலியை சேர்த்து தற்போது மொத்தம் ஏழு இடங்களில் கால்நடை மருத்துவக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. ஆதலால், புதிய கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் துவக்க தற்பொழுது அவசியம் எழவில்லை.

[2022 அக்டோபர் 18

46—

மீன் விற்பனை செய்தல்

வினா எண் 15641—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஏற்காடு ஏரியில் பிடிக்கும் மீன்களை உள்ளூர் மக்களுக்கே விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

ஏற்காடு ஏரியில் உள்ளூர் பங்கு மீனவர்களை கொண்டு பிடிக்கப்படும் மீன்கள் அனைத்தும் உள்ளூர் மக்களுக்கே விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

47—

உதவித் தொகை வழங்குதல்

வினா எண் 21187—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையினால் வாரிசுகளுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகையை உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2021-2022 ஆம் ஆண்டு முதல் கல்வி உதவித் தொகை பெறுவதற்கான குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திலிருந்து ரூ.2.50 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

2022 அக்டோபர் 18]

மேலும், 2021-2022 ஆம் ஆண்டு முதல் கல்வி நிலையங்களுடன் இணைந்துள்ள விடுதிகளில் தங்கி பயிலும் மாணவர்களுக்கு உண்டி, உறையுள் கட்டணம் உயர்த்தப்பட்டு மாதத்திற்கு ரூ.400/- என 10 மாதங்களுக்கு ரூ.4,000/- வழங்கப்படுகிறது.

48—

வருமான உச்சவரம்பை நீக்கக் கோருதல்

வினா எண் 21509—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பிற்படுத்தப்பட்டோருக்கான ஆண்டு வருமான உச்சவரம்பை நீக்குவதற்கு ஒன்றிய அரசை வலியுறுத்த தமிழக அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இட ஒதுக்கீடு, சமூக மற்றும் கல்வி ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே வழங்கப்பட வேண்டும். பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீட்டினை மறுப்பது சமூக நீதிக்கு குந்தகத்தை விளைவிக்கும் என கருதப்படுகிறது. எனவே, ஒன்றிய அரசின் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான (OBC) இட ஒதுக்கீட்டிற்கான வளமான பிரிவினரை (Creamy Layer) நீக்கம் செய்வதற்கான அளவுகோலான வருமான உச்சவரம்பினை நீக்க வேண்டுமென ஒன்றிய அரசை இவ்வரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

49—

இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துதல்

வினா எண் 25681—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழக அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை நடப்பு ஆண்டிலேயே நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1989 ஆம் ஆண்டு முதல் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினர்களுக்கு 20 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. தற்போதும் அந்த 20 சதவிகித இட ஒதுக்கீடு தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

50—

பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்

வினா எண் 30709—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வாழும் ஜங்கமா இனத்தவரை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) லிங்காயத் (ஜங்கமா) இனத்தவர் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக ஏற்கெனவே வகைப்படுத்தப்பட்டுள்ளனர். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் "லிங்காயத் (ஜங்கமா)" என்று வரிசை எண் 65-ல் சேர்க்கப்பட்டுள்ளனர்.

2022 அக்டோபர் 18]

51—

சாதிப் பெயர் மாற்றம், கல்வி உள் ஒதுக்கீடு-நடவடிக்கை எடுத்தல்

வினா எண் 30717—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்வேறு சமுதாய மக்களின் சாதிப் பெயர் மாற்றம், கல்வி உள் ஒதுக்கீடு போன்ற கோரிக்கைகள்மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சாதிப் பெயர் மாற்றம் குறித்த கோரிக்கைகளின்மீது தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

52—

விலையுயர்ந்த மரங்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல்

வினா எண் 6966—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஏற்காட்டில், புறம்போக்கு மற்றும் வனங்களில் உள்ள விலையுயர்ந்த மரங்கள் வெட்டப்படுவதைத் தடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்:

புறம்போக்கு நிலத்தைப் பொறுத்தவரை, ஏற்காடு பகுதியானது, தமிழ்நாடு மலைத்தல மரங்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ்

வரையறுக்கப்பட்ட பகுதியாகும். மேற்படி பகுதியில் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் செயல்படும் வனக் குழுவின் அனுமதிக்கு பின்னரே மரங்கள் வெட்டப்படுகின்றன. மேலும், வனங்களில் உள்ள விலையுயர்ந்த மரங்கள் வெட்டப்படுவதைத் தடுக்கும் விதமாக வனப் பணியாளர்களால் ரோந்துப் பணி மேற்கொள்ளப்பட்டு, மரம் வெட்டப்படுவது தடுக்கப்பட்டு, வனம் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

53—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 10060—திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, அனுமந்தபுரம் ஊராட்சியில் கூச்சுவாடி முதல் குடியூர் வரை தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வனக்கோட்டம், தளி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அனுமந்தபுரம் ஊராட்சியிலுள்ள கூச்சுவாடி முதல் குடியூர் வரை உள்ள பாதையானது 1980 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே மண் சாலையாக பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இச்சாலையானது ஓசூர் வனக் கோட்டம், காவேரி வடக்கு வன உயிரின சரணாலயம், தேன்கனிக்கோட்டை வனச் சரகம், அய்யூர் விரிவாக்கம்-3 ஆகிய காப்புக் காடுகளின் வழியாக செல்கிறது. இக்காப்புக் காடுகளின் தமிழ்நாடு வனச் சட்டம் 1882 பிரிவு 16-ன்கீழான அறிவிக்கையில் அனுமதிக்கப்பட்ட உரிமை வழிப்பாதை (Right of way) ஏதும் வழங்கப்படவில்லை.

குடியூர் கிராமத்தில் உள்ள 40 குடும்பங்களில் 10 குடும்பங்களும், கூச்சுவாடி கிராமத்தில் உள்ள சுமார் 500 குடும்பங்களில் 40 குடும்பங்களும் இருளர் இன பழங்குடியினர் ஆவர்.

2022 அக்டோபர் 18]

மேலும், இப்பாதையானது குடியூர் உள்ளடைப்பு கிராமம் (Enclosure) முதல் கூச்சுவாடி உள்ளடைப்பு கிராமம் வரை சுமார் 3 கிலோ மீட்டர் சாலையில், காப்புக் காட்டிற்குள் மட்டும் சுமார் 220 கி.மீ. செல்கிறது. இச்சாலையினை தார்ச் சாலையாக மேம்படுத்த வேண்டுமெனில் இதற்கு வன நிலம் ஒதுக்கப்பட வேண்டும். நடைமுறையில் உள்ள 1980 ஆம் வருட வனச் (பாதுகாப்பு) சட்டப்படி வனமற்ற பிற பயன்பாட்டிற்கு வன நிலம் ஒதுக்க மேற்கண்ட சட்டத்தின்படி ஒன்றிய அரசின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். எனவே, வன நிலம் ஒதுக்க கோரி வனச் (பாதுகாப்பு)சட்டம் 1980, பிரிவு 2-ன்கீழ் www.parivesh.nic.in என்ற ஒன்றிய அரசின் இணையதளத்தில் ஊரக வளர்ச்சித் துறையால் பிரேரணை பதிவேற்றம் செய்யும்பட்சத்தில் ஒன்றிய அரசின் அனுமதி பெற்று சாலை மேம்பாடு செய்ய வழிவகை செய்யப்படும்.

54—

தேயிலைத் தூள் வகைகள் விற்பனை செய்தல்

வினா எண் 10457—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகத்தில் குறிஞ்சி, கிரீன் டீ, ஓட்டல் பிளன்ட் ஆகிய தேயிலைத் தூள் வகைகளை தமிழகமெங்கும் விற்பனை செய்யவும், இதற்காக முகவர்களை நியமிக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடப்பு ஆண்டில் ஏப்ரல் 2021 முதல் ஜனவரி 2022 வரை 95,939 கிலோ தேயிலைத் தூள் சில்லரை விற்பனைமூலம் விற்கப்பட்டுள்ளது என்றும், இக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட மொத்த விற்பனையாளர் மற்றும் சில்லரை விற்பனை முகவர்கள்மூலம் விற்பனை செய்யப்பட்டு வருவதோடு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகவும் இக்கழகத்தின் தேயிலைத் தூள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

[2022 அக்டோபர் 18

55—

மலைக் கிராமங்களுக்கு சாலை மற்றும் மின் வசதி செய்தல்

வினா எண் 14243—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், மிட்டாரெட்டி அள்ளி ஊராட்சி, பையன்குட்டை, கெஜமான்குட்டை, வாழைமரத்துக்குட்டை, மல்லங்கொள்ளை ஆகிய மலைக் கிராமங்களுக்கு சாலை மற்றும் மின் வசதி செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், மிட்டாரெட்டி அள்ளி ஊராட்சி, பையன்குட்டை, கெஜமான்குட்டை, வாழைமரத்துக்குட்டை, மல்லங்கொள்ளை ஆகிய கிராமங்களுக்கு சாலை மற்றும் மின் வசதி செய்து தரக் கோரியுள்ள பணிகள் நூலஅள்ளி, ரெட்டிஅள்ளி காப்புக் காட்டில் அமைக்கப்பட வேண்டும்.

பையன்குட்டை, கெஜமான்குட்டை, வாழைமரத்துக்குட்டை, மல்லங்கொள்ளை ஆகிய கிராமங்களுக்கு மிட்டாரெட்டிஅள்ளி கோம்பேரி சாலையிலிருந்து வனப் பகுதிக்குள் 150 மீ. நீளமும், வனப் பகுதிக்கு வெளியே பட்டா நிலங்களில் 2.50 கி.மீ. நீளமும் அமைக்கப்பட வேண்டும். தற்போது மேற்படி கிராம மக்கள் நூலஅள்ளி/ரெட்டிஅள்ளி காப்புக் காட்டின் பிரிவு 16-ன்கீழ் அறிவிக்கையில் அனுமதிக்கப்பட்ட 1.5 மீ. அகலம் கொண்ட மண் பாதையை பயன்படுத்தி வருகின்றனர்.

நூலஅள்ளி-ரெட்டிஅள்ளி காப்புக்காட்டில் அனுமதிக்கப்பட்ட வழித்தடத்தை சாலையாக அமைக்க வேண்டுமெனில், கூடுதல் வன நிலம் ஒதுக்கப்பட வேண்டும். நடப்பிலுள்ள 1980 ஆம் வருட வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி வனமற்ற பிற பயன்பாட்டிற்கு வன நிலம் ஒதுக்க மேற்கண்ட சட்டத்தின்படி ஒன்றிய அரசின் அனுமதி பெறப்பட வேண்டும். பொதுவாக, கிராம சாலைகள்

2022 அக்டோபர் 18]

அமைக்கும் பணி ஊரக வளர்ச்சித் துறையாலும், மின் வசதி பணிகள் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் மேற்கொள்ளப்படுவதாலும் இக்கோரிக்கை தொடர்பாக மேற்கண்ட துறைகளின்மூலம் வன நிலம் ஒதுக்கக் கோரி பிரேரணை (PARIVESH WEB PORTAL) *இணையதள வாயிலாக பதிவேற்றம் செய்யும் நிலையில் அதனை பரிசீலனை செய்து ஒன்றிய அரசின் ஒப்புதல் பெற உரிய தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.*

56—

குடும்ப அட்டை வழங்குதல்

வினா எண் 2172—திரு. இரா. அருள்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகராட்சி, ரெட்டியூர் கோட்டம் எண் 3, ரெட்டியூர் பகுதியில் குடும்ப அட்டை இல்லாதவர்களுக்கு குடும்ப அட்டை வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

சேலம் மேற்கு வட்டம், சேலம் மாநகராட்சி, ரெட்டியூர் கோட்டம் எண் 3, ரெட்டியூர் பகுதிவாழ் மக்களுக்காக 1, ரெட்டியூர் (07JA003PN) *மற்றும் 2. ரெட்டியூர் மாரியம்மன் கோவில் தெரு* (07JA055PN) *ஆகிய இரண்டு நியாய விலைக் கடைகள் பொன்னி கூட்டுறவுச் சங்கம்மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. மேற்குறிப்பிட்ட ரெட்டியூர்* (07JA003PN) *நியாய விலைக் கடையில் 1,352 குடும்ப அட்டைகளும், ரெட்டியூர் மாரியம்மன் கோவில் தெரு* (07JA055PN) *நியாய விலைக் கடையில் 756 குடும்ப அட்டைகளும் ஆக மொத்தம் ரெட்டியூர் பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு 2,108 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், புதிய மின்னணு குடும்ப அட்டை பெற* www.tnpds.gov.in *என்ற இணையதளத்தில் உரிய முகவரி ஆதாரத்துடன் விண்ணப்பம் செய்யப்படின், தல தணிக்கைக்குப்* (Field Verification) *பின்னர் தகுதியுடைய நபர்களுக்குப் புதிய மின்னணு குடும்ப அட்டை வழங்கப்படுகிறது.*

[2022 அக்டோபர் 18

57—

கட்டாய வசூல் செய்வதைத் தடுத்தல்

வினா எண் 2187—திரு. இரா. அருள்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விவசாயிகளின் நெல் கொள்முதல் செய்வதில் ஒரு மூட்டைக்கு ரூ.40 கட்டாய வசூல் செய்வதை தடுத்து நிறுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகளிடம் நெல் கொள்முதல் செய்திட உரிய வழிமுறைகள் அரசாணை (நிலை) எண் 60, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 16-7-2021-ல் வெளியிடப்பட்டுள்ளன. மாவட்ட வேளாண்மைத் துறை அறிக்கையின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர்களால் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் பணி நடைபெற்று வருகிறது.

கொள்முதல் பணியை மேற்கொள்ளும் அமைப்பான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமானது வகுத்துரைக்கப்பட்ட விதிகளின்படி செயல்பட்டு வருகிறது. மேலும், கொள்முதல் பணியில் ஈடுபடுத்தப்படும் பணியாளர்கள் விதிகளுக்குட்பட்டே அப்பணியினைச் செய்து வருகின்றனர். இருப்பினும், தன்னிச்சையாக பணியாளர்களில் சிலர் விவசாயிகளிடம் மூட்டைக்கு பணம் வசூலித்தல் போன்ற முறைகேடு தொடர்பான புகார் பெறப்படும் நேர்வுகளில், விசாரணைக்குப் பின்னர் பணி நீக்கம், கருப்புப் பட்டியலில் சேர்த்தல் போன்ற ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

எவ்வித முறைகேடுகளுக்கும் இடமின்றி, இதுபோன்ற முறைகேடுகள் ஏதும் நடக்காமலிருக்க நெல் கொள்முதல் நிலைய சுமைதூக்கும் தொழிலாளர்களுக்கு மூட்டை ஒன்றுக்கு கொடுக்கப்பட்டு வந்த ரூ.3.25 என்ற ஊதியத்தை ரூ.10/- ஆக உயர்த்தியதோடு பருவகால பட்டியல் எழுத்தர்களுக்குத்

2022 அக்டோபர் 18]

தினப்படியாக ரூ.120/- மற்றும் பருவகால உதவுபவர்களுக்கும், காவலர்களுக்கும் தினப்படியாக ரூ.100/- கூடுதலாக வழங்க அரசு ஆணையிட்டது. விவசாயிகளிடமிருந்து ஒரு பைசா கூட பெறக்கூடாது என்ற நோக்கத்திற்காகத்தான் ஆண்டொன்றுக்கு அரசுக்கு 83 கோடி ரூபாய் கூடுதல் செலவானாலும் நெல் கொள்முதல் நிலைய ஊழியர்களுக்கு ஊதியம் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அனைத்து வகைகளிலும் மூட்டைகளுக்கு முறைகேடாகப் பணம் பெறுவதைத் தடுக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

58—

குறுஞ்செய்தி மூலம் தகவல் அளித்தல்

வினா எண் 2487—திரு. இரா. அருள்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நியாய விலைக் கடைகளில் பொருள் விநியோகம் பற்றி பயனாளர்களுக்கு முன்கூட்டியே SMS மூலம் தகவல் அளிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

குடும்ப அட்டைதாரர்கள் நியாய விலைக் கடைகளின் திறப்பு விவரம் மற்றும் பொருட்களின் இருப்பு விவரம் ஆகியவற்றினை கீழ்க்கண்டுள்ள குறியீட்டை 9773904050 என்ற எண்ணுக்கு குறுஞ்செய்தியாக பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணிலிருந்து அனுப்பி விவரம் பெற இயலும்.

நியாய விலைக் கடையில் இருப்பில் உள்ள பொருள் விவரங்கள் பெறுவதற்கு	-	PDS‹இடைவெளி› 101
நியாய விலைக் கடை திறந்துள்ளதா (அ) மூடப்பட்டுள்ளதா என்ற விவரத்தினை அறிய	-	PDS‹இடைவெளி› 102

[2022 அக்டோபர் 18

இதனால் நியாய விலைக் கடைகளில் பொருள் விநியோகம் பற்றி பயனாளர்களுக்கு முன்கூட்டியே SMS மூலம் தகவல் அளிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

59—

குடும்ப அட்டை வழங்குதல்

வினா எண் 3897—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகன்களால் கைவிடப்பட்டு தனிமையில் வாடும் பெற்றோர் பெயர் மட்டும் உள்ள குடும்ப அட்டை இரத்து செய்யப்பட்டுள்ளது. இதை மீண்டும் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மகன்களால் கைவிடப்பட்டு தனிமையில் வாடும் பெற்றோர் பெயர் மட்டும் உள்ள குடும்ப அட்டை என தனியாக குடும்ப அட்டை வகைப்படுத்தப்படவில்லை. ஒரு தனி நபர் குடும்பத்தைச் சார்ந்திராமல், தனியாக சமைத்து உண்டு வாழ்ந்து வருவாராயின், அவருக்குத் தனியே புதிய குடும்ப அட்டை வழங்கப்படுகின்றது. நாளது தேதியின்படி, 23,32,939 குடும்ப அட்டைகள் தனி நபர் குடும்ப அட்டைகளாக இருந்து இன்றியமையாப் பொருள்கள் தொடர்ந்து பெற்று வருகின்றனர்.

இக்குடும்ப அட்டைகளுக்கு அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு அரசு 12 கிலோ அரிசி மற்றும் இதர இன்றியமையாப் பண்டங்கள் வழங்கி அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு வழங்கப்படுவதை உறுதி செய்கின்றது. தனி நபர் அரிசி அட்டைகளுக்கு கொரோனா நிவாரண நிதி மற்றும் 14 பொருள்கள் அடங்கிய சிறப்பு மளிகைப் பொருள்கள் தொகுப்பு மற்றும் பொங்கல் பரிசுத் தொகுப்பு ஆகியவை விநியோகம் செய்யப்பட்டன.

2022 அக்டோபர் 18]

60—

வாழ்வாதாரத்தைப் பாதுகாத்தல்

வினா எண் 7242—திரு. இரா. அருள்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சமையல் கியாஸ் விலை உயர்வை தமிழக அரசே ஏற்று ஊரடங்கால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

தற்பொழுது ஒன்றிய, மாநில அரசுகளின் தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் உரிய நேரத்தில் தடுப்பூசி செலுத்துவதன் காரணமாக, கொரோனா நோய்த்தொற்று அச்சுறுத்தல் வெகுவாகக் குறைந்துள்ளது. இந்நிலையில், விலை உயர்வை ஒவ்வொரு முறையும் தமிழக அரசே ஏற்க வழிவகை இல்லை.

61—

புதிய குடும்ப அட்டை வழங்குதல்

வினா எண் 7721—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரசு வழங்கும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை பெற, குடும்ப அட்டை இல்லாத ஏழைக் குடும்பங்களுக்கு அரசால் புதிய குடும்ப அட்டை (ரேசன் கார்டு) வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1-4-2017 முதல் பொது விநியோகத் திட்டமானது கணினிமயமாக்கப்பட்டு ஆதார் எண் பதிவு மற்றும் கைபேசி எண் ஆகியவற்றின் அடிப்படையில் மின்னணு குடும்ப அட்டை வழங்கப்பட்டு வருகிறது. புதிய மின்னணு குடும்ப அட்டை விண்ணப்பிக்க www.tnpds.gov.in என்ற இணையதளம் வாயிலாக வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கள விசாரணையின் அடிப்படையில், குறிப்பிட்டுள்ள முகவரியில் வசிப்பது உறுதி செய்யப்பட்டு, துரிதமாக விண்ணப்பதாரர்களுக்கு எவ்விதச் சிரமமுமின்றி குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன. மேலும், தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013-ல் வழங்கப்பட்ட வழிகாட்டுதலின்படி, உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும்பொருட்டு குடும்ப அட்டை இல்லாத ஏழைக் குடும்பங்களுக்கு குடும்ப அட்டை வழங்கப்பட்டு அத்தியாவசியப் பொருட்கள் தொடர்ந்து விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

62—

புகார் தெரிவிக்க தொலைபேசி எண்களின் விவரம்

வினா எண் 7888—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின்கீழ் செயல்படும் அனைத்து நியாய விலைக் கடைகளிலும் புகார் தெரிவிக்க வேண்டிய தொலைபேசி எண்களின் விவரம் வைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின்கீழ் 447 முழுநேர நியாய விலைக் கடைகள் மற்றும் 121 பகுதி நேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இந்நியாய விலைக் கடைகளில் பொது விநியோகத் திட்டம் தொடர்பான புகார் தெரிவிக்க வேண்டிய தொலைபேசி எண்களின் விவரம் தகவல் பலகையில் காட்சிப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது.

2022 அக்டோபர் 18]

63—

பொருள் வாங்கும் காலநேரத்தை அறிவித்தல்

வினா எண் 12361—திரு. இரா. அருள்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வீரபாண்டி தொகுதி, ஜருகு மலைவாழ் மக்கள் நியாய விலைக் கடையில் பொருள் வாங்க காலநேரத்தை அறிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய், கோதுமை ஆகிய இன்றியமையாப் பொருட்களும், சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் துவரம் பருப்பு, பாமாயில் ஆகிய இன்றியமையாப் பொருட்களும் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. சேலம் மாவட்டம், குரால்நத்தம், ஜருகுமலை கிராமத்தில் 07AC118PN-*ஜருகுமலை என்ற நியாய விலைக் கடையானது காலை* 9.00 *மணி முதல் பிற்பகல்* 1.00 *மணி வரையிலும், பிற்பகல்* 3.00 *மணி முதல் மாலை* 6.00 *மணி வரையிலும் வாரத்தில் திங்கள், புதன் மற்றும் சனிக்கிழமை ஆகிய மூன்று நாட்கள் இயங்கி வருகிறது. இந்நியாய விலைக் கடையில்* 261 *குடும்ப அட்டைகள் உள்ளன.*

64—

NPHH குடும்ப அட்டைகளுக்கு அனைத்து சலுகைகளும் வழங்குதல்

வினா எண் 15430—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அனைத்து NPHH *குடும்ப அட்டைகளுக்கும் அனைத்து சலுகைகளும் வழங்க அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாநில பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களின் விருப்பம் மற்றும் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஐந்து வகையான மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன. முன்னுரிமையற்ற (NPHH) *குடும்ப அட்டைகளில் அரிசி குடும்ப அட்டைக்கு அரிசி உட்பட அனைத்து பொருட்களும், சர்க்கரை குடும்ப அட்டைகளுக்கு அரிசி தவிர்த்து பிற அத்தியாவசியப் பொருட்களும் கூடுதலாக 2 கிலோ சர்க்கரை மற்றும் பண்டகமில்லா குடும்ப அட்டைக்கு எப்பொருளும் வழங்கப்படுவதில்லை. ஆகவே, பண்டகமில்லா குடும்ப அட்டை தவிர்த்து மற்ற முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகளுக்கு அரசு நிர்ணயித்த அளவில்* (NPHH) *அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் வழங்கப்பட்டு வருகின்றன.*

65—

புதிய குடும்ப அட்டை வழங்குதல்

வினா எண் 21497—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குடும்ப அட்டை இல்லாத தகுதியானவர்களுக்கு விண்ணப்பித்த 15 நாட்களில் புதிய குடும்ப அட்டைகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மின்னணு குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு கள விசாரணையின் அடிப்படையில் விண்ணப்பங்களை சரிபார்க்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டு,

2022 அக்டோபர் 18]

குடும்ப அட்டை விண்ணப்பங்கள் உரிய காலத்தில் தீர்வு செய்யப்பட்டு 7-5-2021 முதல் 31-5-2022 வரை 11,47,844 குடும்ப அட்டைகள் அச்சிடப்பட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

66—

மழைக்கால நிவாரணத் தொகை வழங்குதல்

வினா எண் 10327—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கைத்தறி மற்றும் விசைத்தறி கூலித் தொழிலாளர்களுக்கு மழைக்கால நிவாரணத் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் புயல், வெள்ளம், வறட்சி, நிலநடுக்கம், தீ, சுனாமி மற்றும் ஆலங்கட்டி மழை போன்ற இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்படும்பொழுது, தகுதிகளுக்குட்பட்டு, மாநில பேரிடர் நிவாரண நிதி மற்றும் தேசிய பேரிடர் நிவாரண நிதி மாவட்ட நிர்வாகத்தால் வழங்கப்படுகிறது. ஆனால், கைத்தறி மற்றும் விசைத்தறி கூலித் தொழிலாளர்களுக்கு என தனியாக மழைக்கால நிவாரணத் தொகை வழங்குவது தொடர்பான முன்மொழிவுகள் ஏதும் தற்சமயம் அரசின் ஆய்வில் இல்லை.

67—

நெசவாளர்களுக்கு உதவித் தொகை உயர்த்துதல்

வினா எண் 12122—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2022 அக்டோபர் 18

(அ) கும்பகோணம் தொகுதி, நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் உறுப்பினர்களாக உள்ள நெசவாளர்கள் தாம் ஈட்டும் கூலியில் ஒரு ரூபாய்க்கு எட்டு பைசா வீதம் செலுத்தி வருகின்றனர். அதற்கு ஈடாக, மாநில அரசு தமது பங்காக நெசவாளர்கள் ஈட்டும் கூலியில், ஒரு ரூபாய்க்கு 8 பைசா வீதம் வழங்குகிறது. நெசவாளர்களால் செலுத்தப்பெறும் சந்தா மற்றும் அதற்கு ஈடாக மாநில அரசால் செலுத்தப்பெறும் சந்தா ஆகிய இரண்டு தொகைகளும் அதற்கான அரசுக் கணக்கில் வைப்பீடு செய்யப்பட்டு வருகிறது. இத்தொகைக்கு ஆண்டுக்கு 6.5 சதவீத வட்டி அரசால் வழங்கப்படுகிறது.

கும்பகோணம் தொகுதியிலுள்ள நான்கு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் இரண்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் உறுப்பினர்களாக உள்ள 62 நெசவாளர்களுக்கு 2021-2022 ஆம் ஆண்டில் 6.5 சதவீத வட்டித் தொகையாக ரூ.2,34,235/- வழங்கப்பட்டுள்ளது.

நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் இணைந்து 60 வயதை அடையும் நெசவாளர்களுக்கு முதியோர் ஓய்வூதியமாக ரூ.1,000/- மற்றும் 60 வயதினை எய்துவதற்குள் இறக்கும் நெசவாளரின் குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியமாக ரூ.1,000/- திட்ட விதிகளுக்குட்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

கும்பகோணம் தொகுதியில், நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில், 2019-2020 மற்றும் 2020-2021 ஆம் ஆண்டுகளில் முறையே 56 உறுப்பினர்களுக்கு ஆண்டுக்கு ரூ.6,00,000/- வீதமும் மற்றும் 2021-2022 ஆம் ஆண்டில் 58 உறுப்பினர்களுக்கு ரூ.6,27,000/-ம் முதியோர் ஓய்வூதியமும் ஒப்பளிப்பு செய்து வழங்கப்பட்டுள்ளது.

2022 அக்டோபர் 18]

இவை தவிர, 2021-2022 ஆம் நிதியாண்டில் கும்பகோணம் சரகத்திற்குட்பட்ட 1,673 சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட உறுப்பினர்களுக்கு ஒரு ரூபாய்க்கு எட்டு பைசா வீதம் செலுத்திய தொகைக்கு அரசு சந்தாவாக ரூ.65,86,010/-ம் மற்றும் 6.5 சதவீத வட்டித் தொகையாக ரூ.1,74,31,534/-ம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2,243 முதியோர் ஓய்வூதியத் திட்ட பயனாளிகளுக்கு ரூ.2,71,24,000/- மற்றும் 83 குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.10,76,694/- ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும், கும்பகோணம் தொகுதியில் முதியோர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் தொகை ஒப்பளிப்பு செய்து வழங்க வேண்டிய நிலுவை ஏதுமில்லை.

இவ்வாறாக தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் நெசவாளர்களுக்கான சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை தற்போது உள்ள விதிமுறைகளுக்குட்பட்டு முறையாக வழங்கப்பட்டு வருவதால், அந்த உதவித் தொகையை உயர்த்தி வழங்குதல் தொடர்பான செயற்குறிப்பு ஏதும் இல்லை.

68—

அடையாள அட்டை வழங்குதல்

வினா எண் 14516—திரு. இரா. அருள்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாட்டில் அனைத்து விசைத்தறி மற்றும் கைத்தறி நெசவாளர்களுக்கு அடையாள அட்டை வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

4-வது அகில இந்திய கைத்தறி கணக்கெடுப்பு 2019-2020-ன்படி தமிழ்நாட்டில் 2.44 இலட்சம் பேர் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். கணக்கெடுப்பில் கண்டுள்ள கைத்தறி

நெசவாளர்களுக்கான அடையாள அட்டைகள் கைவினைப் பொருட்களுக்கான ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (Export Promotion Council for Handicrafts) மூலம் அச்சிடப்பட்டு, அந்தந்த மாநிலத்திலுள்ள நெசவாளர் சேவை மையம்மூலம் கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

விசைத்தறி கணக்கெடுப்பின்படி, 4.66 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் விசைத்தறி நெசவாளர்கள் மற்றும் உபதொழில் செய்வோர் விசைத்தறி தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

அனைத்து விசைத்தறிகளையும் புவிசார் அடையாளம் (Geo-tagging) மூலம் இணைப்பதற்கு அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் அடையாள அட்டை வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

69—

நெசவாளர் குறைதீர்க்கும் நாள் ஏற்படுத்துதல்

வினா எண் 14517—திரு. இரா. அருள்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களிலும் மாதம் ஒரு முறை நெசவாளர் குறைதீர்க்கும் நாள் ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களிலும் வாரந்தோறும் திங்கட்கிழமை பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் முகாம் நடைபெறுகிறது. இந்த குறை தீர்க்கும் நாளில் நெசவாளர்களும் தங்கள் குறைகளை தெரிவித்து வருகின்றனர். மேற்படி குறை தீர்க்கும் நாளில் நெசவாளர்களிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனுக்குடன் சரக அளவில் தீர்வு செய்யப்படுகிறது.

2022 அக்டோபர் 18]

மேலும், 6-9-2021 அன்று நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தொடரில், 2021-2022 ஆம் ஆண்டிற்கான கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் மானியக் கோரிக்கை எண் 17-ஐ தாக்கல் செய்து மாண்புமிகு அமைச்சர் (கைத்தறி மற்றும் துணிநூல்) அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்புகளில், அறிவிப்பு எண் 18-ல் பின்வருமாறு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது:-

18. கைத்தறி மற்றும் துணிநூல் துறை ஆணையரகத்தில் நெசவாளர் குறைதீர்க்கும் மையம் அமைக்கப்படும்.

மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாகவும், கைத்தறி நெசவாளர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதற்காகவும், நெசவாளர்களின் குறைகளான வேலைவாய்ப்பு, கூலி, நலத் திட்டங்கள், நெசவாளர்களுக்கு துறையின்மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களில் சேர்ப்பது போன்றவற்றை மேம்படுத்தவும், அவர்கள், தங்களின் குறைகளை தெரிவிக்க ஏதுவாகவும், கைத்தறி ஆணையரகத்தில் நெசவாளர் குறை தீர்க்கும் மையம் 23-3-2022 அன்று தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நெசவாளர்கள் தங்கள் குறைகளை தெரிவித்து உடனுக்குடன் தீர்வு பெற்றுக் கொண்டுள்ளனர்.

70—

மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

வினா எண் 14518—திரு. இரா. அருள்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விசைத்தறி தொழிலாளர்களின் காப்பீட்டுத் திட்டத்தை மருத்துவம் மற்றும் உயிர் காப்பீட்டுத் திட்டமாக மாற்றி மேம்படுத்திடவும், நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை மீண்டும் வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

[2022 அக்டோபர் 18

ஒன்றிய அரசின் பவர்டெக்ஸ் இந்தியா திட்டத்தின்கீழ் அனைத்து விசைத்தறி நெசவாளர்களுக்கும் ஒருங்கிணைந்த குழுக் காப்பீட்டுத் திட்டம் (Converged Group Insurance Scheme) *செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் சுமார் 57,100 விசைத்தறி நெசவாளர்கள்/தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டு தொழிலாளர் நல வாரியம்மூலம் பயனடைந்து வந்தனர்.*

பவர்டெக்ஸ் இந்தியா திட்டம் ஒன்றிய அரசால் 31-3-2020 உடன் முடிவு பெற்றுள்ளது. இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்துவது என்பது, ஒன்றிய அரசின் கொள்கை முடிவாகும்.

விசைத்தறி நெசவாளர்கள் உள்ளிட்ட அனைத்து பொதுமக்களும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பயனடைந்து வருகிறார்கள்.

எனவே, விசைத்தறி தொழிலாளர்களின் காப்பீட்டுத் திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்துவது தொடர்பான கருத்துரு எதுவும் தற்போது தமிழக அரசின் பரிசீலனையில் இல்லை.

71—

போக்குவரத்துக் கட்டமைப்பை உருவாக்குதல்

வினா எண் 14520—திரு. இரா. அருள்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விசைத்தறி தொழிலில் வர்த்தகம் மற்றும் சேவைத் துறையில் சிறப்பான செயல்பாட்டுக்குத் தேவையான போக்குவரத்துக் கட்டமைப்பை உருவாக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும்பாலும் நாமக்கல், சேலம், திருப்பூர், ஈரோடு, கோயம்புத்தூர், வேலூர், கடலூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, மதுரை, கரூர், திருவள்ளூர்,

2022 அக்டோபர் 18]

திருநெல்வேலி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ளன. சேலம், கரூர், திருப்பூர், பள்ளிப்பாளையம் மற்றும் கொமாரபாளையம் போன்ற பகுதிகளில் உள்ள பெரும்பாலான விசைத்தறிகள், ஏற்றுமதி இரக உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன.

- *மேற்படி அனைத்து மாவட்டங்களும் வர்த்தகம் மற்றும் சேவைத் துறையில் சிறப்பான செயல்பாட்டுக்குத் தேவையான சாலை மற்றும் இரயில் போக்குவரத்துமூலம் இணைக்கப்பட்டுள்ளது.*

- *மேலும், தென் மாவட்டங்களில் உள்ள பகுதிகள் தூத்துக்குடி விமான நிலையம் மூலமும், மேற்கு மாவட்டங்களில் உள்ள பகுதிகள் கோயம்புத்தூர் விமான நிலையம் மூலமும், வடக்கு மாவட்டங்கள் சென்னை விமான நிலையம் மூலமும் இணைக்கப்பட்டு, விமானப் போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.*

- *கடல் போக்குவரத்துமூலம் ஏற்றுமதியினை ஊக்குவிக்க ஏதுவாக, தமிழ்நாட்டின் வடக்கு பகுதிகள் எண்ணூர் துறைமுகம் மூலமாகவும் மற்றும் தென் பகுதிகள் தூத்துக்குடி துறைமுகம் மூலமாகவும் இணைக்கப்பட்டுள்ளன.*

72—

விசைத்தறியில் புதிய தொழில் முயற்சிகள்

வினா எண் 14522—திரு. இரா. அருள்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோயம்புத்தூரில் விசைத்தறி தொழிலில் புதிய தொழில் முயற்சிகளை மேற்கொள்ளும் விதமாக ஸ்டார்ட் அப் (Start Up) விரைவுபடுத்தும் மையங்கள் உருவாக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

கோயம்புத்தூரில் விசைத்தறி தொழிலில் புதிய தொழில் முயற்சிகளை மேற்கொள்ளும்விதமாக ஸ்டார்ட் அப்

[2022 அக்டோபர் 18

(Start Up) விரைவுபடுத்தும் மையங்கள் உருவாக்குவது தொடர்பாக விசைத்தறி தொழில்முனைவோர்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்படின், அரசால் பரிசீலிக்கப்பட்டு, ஒன்றிய அரசின் வழிகாட்டுதலுக்குட்பட்டு, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

73—

தடுப்பூசி மையங்களில் தனி வரிசை

வினா எண் 1831—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தடுப்பூசி மையங்களில் மாற்றுத் திறனாளிகள், முதியோர்களுக்கு தனி வரிசையை ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழக அரசு கடந்த ஆண்டு மார்ச் 13, 2020-ல் தமிழ்நாடு அரசு பொது சுகாதாரச் சட்டம், 1939-ன்படி கோவிட் நோயினை அறிவிக்கப்பட வேண்டிய பெருந்தொற்றாக அறிவித்து, அதற்கான தடுப்பு நடவடிக்கைகளையும் அறிவித்தது. தமிழகத்தில் முதற்கட்டமாக 16-1-2021 முதல் மருத்துவப் பணியாளர்கள்/முன்களப் பணியாளர்களுக்கும், 1-3-2021 முதல் 45-59 வயதிற்குட்பட்ட இணைநோய் உள்ளவர்கள் மற்றும் 60 வயது மேற்பட்டவர்களுக்கும், 1-4-2021 முதல் 45 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும், 1-5-2021 முதல் 18-44 வயதுடையவர்களுக்கும் தடுப்பூசி வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

தமிழக அரசின் கோவிட்-19 தடுப்பூசி வழங்கும் திட்டத்தின்மூலம் 9-2-2022 வரை 9,72,709 பயனாளிகளுக்கு இலவசமாக கோவிட் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசின் வழிகாட்டுதலின்படி, அனைத்து மாவட்ட துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் அவர்களுக்கு மாற்றுத்

2022 அக்டோபர் 18]

திறனாளிகள் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்டோர்களுக்கு தடுப்பூசி வழங்க தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், மாற்றுத் திறனாளிகள் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்டோர்களுக்கு எளிதில் கோவிட் தடுப்பூசி செலுத்திக்கொள்ள வசதியாக (Near to Home Vaccination Centre) தொடங்கப்பட்டு தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது.

மேலும், மாற்றுத் திறனாளிகள் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்டோர் 104-ஐ தொடர்புகொண்டு அழைத்தாலும், அவர்களுக்கு உரிய தடுப்பூசி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நாள் வரை 3,73,015 மாற்றுத் திறனாளிகளுக்கும் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்ட 1,24,22,255 முதியவர்களுக்கும் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

74—

இறப்புச் சான்றிதழ்கள் வழங்குதல்

வினா எண் 1837—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கொரோனா மரணங்களில் சரியான இறப்புச் சான்றிதழ்களை வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய பிறப்பு, இறப்பு பதிவுச் சட்டம், 1969-ன்படி பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவை, அவை நிகழ்ந்த இடத்திலேயே பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பதிவுச் சட்டம் தமிழ்நாடு பிறப்பு, இறப்பு விதிகள், 2000-ன்படி, மாநிலம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட மத்திய பிறப்பு, இறப்பு பதிவுச் சட்டம், 1969-ன் பிரிவு 10(3)-ன்படி, ஒரு நபர் அவர் கடைசியாக நோயுற்றிருந்தபோது எந்த ஒரு மருத்துவரால் கவனிக்கப்பட்டாரோ அந்த நபர் இறந்து போகையில் இறப்பின் காரணம் குறித்து மருத்துவச் சான்றிதழ் அந்த மருத்துவரால் படிவம்-4 (மருத்துவமனையில் நிகழும்

இறப்பிற்கும்) படிவம்-4அ (வீடுகளில் நிகழும் இறப்பிற்கும்) எவ்வித கட்டணமுமின்றி மருத்துவச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும். இந்திய தலைமைப் பதிவாளரின் அறிவுரையின்படி, அனைத்து பிறப்பு, இறப்பு பதிவாளர்களுக்கு இறப்பின் காரணம் குறித்த மருத்துவச் சான்றிதழ் (படிவம்-4/4அ) நகலினை இறந்தவரின் குடும்ப உறுப்பினர் அணுகும்பட்சத்தில் வழங்கிட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்ற தீர்ப்பாணையின்படியும், ஒன்றிய சுகாதாரத் துறையின் வழிகாட்டு நெறிமுறைகளின்படியும் கொரோனா தொற்றால் இறந்தவரின் குடும்ப உறுப்பினர்களுக்கு இறப்பின் காரணம் கோவிட் எனக் குறிப்பிட்ட அதிகாரபூர்வ ஆவணம் (Official Document Ascertaining Committee (CDAC)) வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண் 411, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் (ப்பி1) துறை, நாள் 22-9-2021). இறப்பின் காரணம் குறித்த மருத்துவச் சான்றிதழ் பெறப்படாத இறப்புப் பதிவுகள் மற்றும் பிறப்பு, இறப்பு பதிவாளரிடம் பெறப்பட்ட இறப்பின் காரணம் குறித்த மருத்துவச் சான்றிதழில் குறிப்பிட்டுள்ள இறப்பின் காரணம் திருப்தி அளிக்காத இறப்புகளுக்கு மேற்கண்ட மாவட்ட அளவில் அமைக்கப்பட்ட குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு கோவிட்-19 இறப்பு என காரணம் குறிப்பிட்ட அதிகாரபூர்வ ஆவணம் பெற சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பிக்கலாம் என அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட அரசாணையைத் தொடர்ந்து மாவட்ட அளவிலான குழு அமைக்கப்பட்டு பொதுமக்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களை பரிசீலனை செய்து கோவிட்-19 இறப்பிற்கான அதிகாரபூர்வ ஆவணம் வழங்கப்பட்டு வருகிறது.

75—

தடுப்பூசி சான்றிதழ்கள் வழங்குதல்

வினா எண் 1873—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோவிட்-19 தடுப்பூசி போடப்பட்டவர்களுக்கு சான்றிதழ்களை அன்றே வழங்க அரசு முன்வருமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கோவிட்-19 தடுப்பூசி செலுத்திக்கொண்ட பயனாளிகள் www.cowin.gov.in *என்ற இணையதளத்தில் தங்களது தொலைபேசி எண்ணைப் பயன்படுத்தி எளிய முறையில் கோவிட்-19 தடுப்பூசி சான்றிதழ்களை அன்றே பதிவிறக்கம் செய்துகொள்ள வழிவகை உள்ளது.*

கோவிட்-19 தடுப்பூசி பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட பின்னர், Co-WIN *இணையதளத்திலிருந்து பயனாளிகளுக்கு பதிவு செய்யப்பட்ட எண்ணிற்கு தடுப்பூசி செலுத்தியதற்கான குறுஞ்செய்தி மற்றும் சான்றிதழ் பதிவிறக்கம் செய்வதற்கான இணையதள* Link *உடனே வந்தடைகிறது. இந்த* Link *உதவியுடன் கோவிட்-19 தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்கள் அன்றே தடுப்பூசி சான்றிதழ்களை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.*

மேலும், selfregistration.cowin.gov.in *என்ற இணையதளத்தில் பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணைக் கொண்டு கோவிட்-19 தடுப்பூசி சான்றிதழைப் பதிவிறக்கம் செய்ய முடியும்.*

76—

வீடற்றோர்களைக் கணக்கெடுத்தல்

வினா எண் 1875—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோவிட் தடுப்பூசி போடும் திட்டத்தில் தெருவில் வாழும் வீடற்றோர்களை உடனே கணக்கெடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மாவட்டந்தோறும் எந்தவித அடையாள சான்றும் இல்லாத நபர்களுக்கு (தெருவில் வசிக்கும் வீடற்றோர் உட்பட) கோவிட்-19

தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 1,20,748 நபர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. தற்போது 7-2-2022 வரை சுகாதார மாவட்ட அலகு (HUD) வாரியாக தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களின் விவரம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது:

வ. எண்	மாவட்டம்	எண்ணிக்கை
1	அறந்தாங்கி	82
2	அரியலூர்	0
3	ஆத்தூர்	2
4	செங்கல்பட்டு	381
5	சென்னை	2571
6	செய்யார்	2
7	கோயம்புத்தூர்	5905
8	கடலூர்	5
9	தருமபுரி	404
10	திண்டுக்கல்	906
11	ஈரோடு	118
12	கள்ளக்குறிச்சி	79
13	காஞ்சிபுரம்	1606
14	கன்னியாகுமரி	1368
15	கரூர்	8
16	கோவில்பட்டி	319
17	கிருஷ்ணகிரி	1
18	மதுரை	5533
19	நாகப்பட்டினம்	675
20	நாமக்கல்	621
21	நீலகிரி	4
22	பழனி	34

வ. எண்	**மாவட்டம்**	**எண்ணிக்கை**
23	பரமக்குடி	210
24	பெரம்பலூர்	71
25	பூந்தமல்லி	0
26	புதுக்கோட்டை	442
27	இராமநாதபுரம்	148
28	ராணிப்பேட்டை	274
29	சேலம்	2675
30	சிவகங்கை	66
31	சிவகாசி	571
32	தென்காசி	49
33	தஞ்சாவூர்	62
34	தேனி	682
35	தூத்துக்குடி	667
36	திருச்சிராப்பள்ளி	2161
37	திருநெல்வேலி	2241
38	திருப்பத்தூர்	42
39	திருப்பூர்	235
40	திருவள்ளூர்	3522
41	திருவண்ணாமலை	42389
42	திருவாரூர்	56
43	வேலூர்	2
44	விழுப்புரம்	153
45	விருதுநகர்	43406
	மொத்தம்	**1,20,748**

[2022 அக்டோபர் 18

77—

ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஆம்புலன்ஸ் வசதி செய்தல்

வினா எண் 7880—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஆம்புலன்ஸ் வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் தேவையின் அடிப்படையில் மற்றும் பயனாளிகளின் சராசரி தேவையைப் பொறுத்து 108 அவசரகால ஊர்தியானது நிலைநிறுத்தப்பட்டு, இயக்கப்பட்டு (based location) வருகிறது.

78—

அவசரக் கால ஊர்தி வழங்குதல்

வினா எண் 25820—திரு. ஜி. கே. மணி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், சீமாபுரம் ஊராட்சிக்கு 108 அவசரகால வாகனம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

2022 அக்டோபர் 18]

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், சீமாபுரம் ஊராட்சி பகுதியைப் பொறுத்தவரை, மொத்தம் நான்கு 108 அவசரகால ஊர்திகள் தற்போது சேவை வழங்கி வருகின்றன. அழைப்பு பெறப்பட்டவுடன் 10 முதல் 15 நிமிடத்திற்குள் 108 அவசரகால ஊர்தியானது அழைப்பு பெறப்பட்ட இடத்திற்கு தற்போது சென்றடைகின்றன.

79—

அவசரகால ஊர்தி வழங்குதல்

வினா எண் 26067—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, களப்பால் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அவசரகால ஊர்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, களப்பால் ஊராட்சியைப் பொறுத்தவரை, மொத்தம் 6 அவசரகால 108 ஆம்புலன்ஸ் ஊர்திகள் சேவை வழங்கி வருகின்றன. அழைப்பு பெறப்பட்டவுடன் 15 முதல் 20 நிமிடத்திற்குள் 108 அவசரகால ஊர்தியானது அழைப்பு பெறப்பட்ட இடத்திற்குச் சென்றடைகின்றது.

80—

GST செலுத்த கால அவகாசம்

வினா எண் 2157—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வணிகர்களுக்கு GST செலுத்த 6 மாத கால அவகாசம் பெற்றுத் தர மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்த முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

ஜி.எஸ்.டி வரி செலுத்த கால அவகாசத்தை நீட்டிப்பு செய்தால், அரசு வருவாயின் பெரும்பங்கான வணிக வரி வருவாய் வசூலில் சுணக்கம் ஏற்படும். மேலும், விற்பனை மேற்கொள்ளும் வரிசெலுத்துவோர் தாக்கல் செய்யும் அறிக்கையின் பேரிலேயே அவரிடமிருந்து கொள்முதல் செய்யும் வரிசெலுத்துவோர் செலுத்திய வரியை உள்ளீட்டு வரியாக வரவு வைக்கப்படும். வரிசெலுத்துவோர் உரிய நேரத்தில் வரி செலுத்தாவிடில், அவரிடமிருந்து கொள்முதல் செய்யும் வரிசெலுத்துவோர் உள்ளீட்டு வரியை உரிய நேரத்தில் பெற இயலாது என்று தெரிவிக்கப்படுகிறது.

81—

இடுபொருளுக்கு செலுத்திய GST-யை திரும்பப் பெறுதல்

வினா எண் 4165—திரு. G.V. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விவசாயிகள் பயன்படுத்தும் விதை, இடுபொருள் மற்றும் உரங்களுக்குச் செலவு செய்த தொகையில் உள்ள GST பணத்தை விவசாயிகள் கூட்டமைப்பில் இருந்து Input Terms திரும்பப்பெற வழிவகை இருக்கிறதா என்பதைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

விவசாயிகள் பயன்படுத்தும் விதைகளுக்கு சரக்குகள் மற்றும் சேவைகள் வரியிலிருந்து (GST) விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும், விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் வேளாண் விளை பொருள்களுக்கு வரி இல்லாத காரணத்தினால் அவர்கள் வாங்கும் இடுபொருட்கள் மற்றும் உரங்களுக்கு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின்கீழ் செலுத்திய வரியை உள்ளீட்டு வரி வரவாக (Input Tax Credit) பெறுவதற்கு சட்டத்தில் வழிவகைகள் ஏதுமில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

2022 அக்டோபர் 18]

82—

வெள்ளி நகை தொழிலுக்கு வரிவிலக்கு அளித்தல்

வினா எண் 11446—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *சேலம் மாநகராட்சியில் வெள்ளி ஆபரணப் பொருட்கள் தயாரிப்பில் பெரும்பாலோர் ஈடுபட்டிருப்பதால் வெள்ளி நகை தொழிலுக்கு வரிவிலக்கு அளிக்க ஒன்றிய அரசை வலியுறுத்த தமிழக அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *வெள்ளி ஆபரணப் பொருட்களின்மீது* 3% *சரக்குகள் மற்றும் சேவைகள் வரி* (1.5% *மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி* + 1.5% *மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி*) *விதிக்கப்பட்டு வருகிறது. மேலும், வரிவிலக்கு அளித்தல் என்பது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தில் விவாதிக்கப்பட்டு அனைத்து மாநில அரசுகள் மற்றும் ஒன்றிய அரசின் ஒப்புதலின் பேரிலேயே முடிவுகள் மேற்கொள்ள இயலும் என்று தெரிவிக்கப்படுகிறது.*

83—

வணிக வரி அலுவலகம் கட்டுதல்

வினா எண் 26159—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *போளூரில் ஒருங்கிணைந்த வணிக வரி அலுவலகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் வணிக வரிக் கோட்டம், திருவண்ணாமலை மாவட்டம், போளூரில் புதிதாக வணிக வரி அலுவலகக் கட்டடம் கட்ட ரூ.1,48,73,397/-க்கு நிருவாக இசைவளித்து அரசாணை (நிலை) எண் 155, வணிக வரி மற்றும் பதிவுத் (டி2) துறை, நாள் 27-11-2021-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், மேற்படி தொகைக்கு நிதி ஒதுக்கீடு செய்தும் அரசாணை (நிலை) எண் 33, வணிக வரி மற்றும் பதிவுத் (டி.2) துறை, நாள் 28-2-2022-ல் ஆணையிடப்பட்டுள்ளது. விதிமுறைகளைப் பின்பற்றி விரைவில் கட்டடம் கட்டப்படும்.

84—

கல்வி நிறுவன வாகனங்களுக்கு வரிவிலக்கு அளித்தல்

வினா எண் 7823—திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகம் முழுவதிலும் உள்ள கல்வி நிறுவனங்களிலுள்ள மாணவர்களுக்கான வாகனங்கள் தொடர்ந்து 2020 ஏப்ரல் 24 ஆம் தேதி முதல் செயல்படாமல் உள்ளன. எனவே, இந்த வாகனங்கள் ஓடாத காலங்களுக்கு வரிவிலக்கு வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கொரோனா தொற்று பேரிடர் காலத்தில் அரசு அறிவிக்கப்பட்ட ஊரடங்கினைத் தொடர்ந்து 1-4-2020 முதல் 30-9-2021 வரை பொதுச்சாலையில் இயக்கப்படாமல் நிறுத்தி வைத்திருந்த வாகனங்களின் வாகன நிறுத்தல் அறிக்கை (Stoppage report) பெறுவது குறித்து அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களுக்கும் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, 1-4-2020 முதல்

2022 அக்டோபர் 18]

30-9-2021 வரையிலான காலத்திற்கு இயக்கப்படாத பள்ளி வாகனங்களுக்கு வாகன நிறுத்தல் அறிக்கையை (Stoppage report-SPR A) சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் விண்ணப்பித்து இருந்தால் வாகன வரித் தீர்வை (Tax Nil Assessment) செய்துகொள்ள வழிவகை உள்ளது.

85—

ஆட்டோக்களுக்கு சாலை வரி இரத்து செய்தல்

வினா எண் 7920—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொரோனா பொருளாதார பாதிப்பிலிருந்து ஆட்டோ தொழிலாளிகள் மீண்டு வர ஏதுவாக, ஆட்டோக்களின் சாலை வரியை இரத்து செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஆட்டோ ரிக்ஷா வாகனங்களுக்கு புதிய அனுமதிச் சீட்டு வழங்கும்போது/அனுமதிச் சீட்டு புதுப்பிக்கும்போது 5 ஆண்டுகள் வரி வசூலிக்கப்படுகிறது. ஏற்கெனவே செலுத்தப்பட்ட வரியினை திரும்பி அளித்தல்/இரத்து செய்தல் என்பது அரசின் கொள்கை முடிவாகும்.

இருப்பினும், தமிழக அரசு கொரோனா பொருளாதார பாதிப்பிலிருந்து ஆட்டோ தொழிலாளிகள் உட்பட அனைத்து வாகன ஓட்டிகளும் மீண்டு வர ஏதுவாக, வாகனங்களின் அனைத்து ஆவணங்கள் (தகுதிச் சான்று புதுப்பித்தல், அனுமதிச் சீட்டு (அனைத்து வகை), ஓட்டுநர் உரிமம், வாகனப் பதிவு மற்றும் இது தொடர்பான ஆவணங்கள்) செல்லுபடியாகும் காலத்தினை நீட்டித்து பல்வேறு அரசாணைகளை வெளியிட்டுள்ளது.

[2022 அக்டோபர் 18

86—

கடத்தப்பட்ட சிலைகள், ஆபரணங்களை மீட்டல்

வினா எண் 10073—திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக கோயில்களில் கடத்தப்பட்ட சிலைகள், ஆபரணங்களை மீட்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக திருக்கோயில்களிலிருந்து கடத்தப்பட்ட சிலைகள் மற்றும் ஆபரணங்கள் ஆகியவை தமிழக காவல் துறை (ம) சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு, காவல் கண்காணிப்பாளர் தலைமையிலான குழுமூலம் கண்டறியப்பட்டு, நீதிமன்ற வழக்குகள் தொடரப்பட்டு, நீதிமன்ற உத்தரவுகளின்மூலம், உரிய திருக்கோயில் செயல் அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.

மேலும், பல்வேறு திருக்கோயில்களிலிருந்து திருடப்பட்டு, வெளிநாட்டு அருங்காட்சியகங்களில் காட்சிப்படுத்தப்பட்ட சிலைகள், அவ்வப்போது இனம் காணப்பட்டு, மீண்டும் இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்டு, அடையாளம் காணப்பட்டு, தமிழக திருக்கோயில்களில் உள்ள சிலைகளுடன் ஒப்பீடு செய்யப்பட்டு, சரியான சிலைகள்தானா என அடையாளம் காணப்பட்டு, அந்தந்த திருக்கோயில்கள்வசம் ஒப்படைக்கப்படுகின்றன.

87—

கோயில்களில் உள்ள நகைகள் மற்றும் பொருட்களைத் தணிக்கை செய்தல்

வினா எண் 10373—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 அக்டோபர் 18]

(அ) அறநிலையத் துறை கட்டுப்பாட்டிலுள்ள கோயில்களில் தங்கம், வெள்ளி நகைகள், பூஜை பொருட்கள், பாத்திரங்கள் ஆகியவற்றைத் தணிக்கை செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் சட்டப் பிரிவு 46 (i), 46 (ii), 46 (iii)-ன்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள திருக்கோயில்களின் நகைகள் மற்றும் விலையுயர்ந்தவைகளை வருடத்திற்கு ஒருமுறை பிற்சேர்க்கை மதிப்பீடும் மற்றும் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மறுமதிப்பீடும் (தணிக்கை) செய்யப்பட்டு வருகிறது.

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் சட்டப் பிரிவு 49(i)-ன்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள திருக்கோயில்களின் நகைகள் மற்றும் விலையுயர்ந்தவைகளை ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை பிற்சேர்க்கை மதிப்பீடும் (தணிக்கை) மற்றும் பத்தாண்டுகளுக்கு ஒருமுறை மறுமதிப்பீடும் (தணிக்கை) செய்யப்பட்டு வருகிறது.

88—

சிலை திருட்டைத் தடுத்தல்

வினா எண் 10381—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டு கோயில்களில் பழங்காலச் சிலைகள் திருடப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களில் உள்ள சிலைகள் நமது பாரம்பரிய சின்னங்களாகவும், கலை

பொக்கிஷங்களாகவும், விலை மதிப்புமிக்கவைகளாகவும் உள்ளன. அவற்றை பாதுகாப்பது நமது கடமையாகும். மேற்படி சிலைகளைப் பாதுகாக்க இந்து சமய அறநிலையத் துறையில் கீழ்க்கண்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது:

i. திருக்கோயில்களில் உள்ள சிலைகளைப் பாதுகாக்கும்பொருட்டு, கள்வர் எச்சரிக்கை மணி (ம) கண்காணிப்புக் கேமராக்கள் ஆகியன பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

ii. திருக்கோயில்களில் ஷிப்ட் 1-க்கு 3 காவலர்கள் வீதம் 3 ஷிப்ட்களுக்கு 9 காவலர்கள் மற்றும் தலைமை காவலர் ஒருவர் என 10 காவலர்கள் நியமனம் செய்யப்பட்டு, திருக்கோயிலில் உள்ள சிலைகள் மற்றும் நகைகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

iii. திருக்கோயில்களில் பாதுகாப்பற்ற நிலையில் உள்ள உலோகச் சிலைகள் மற்றும் கற்சிலைகளை பாதுகாக்கும்பொருட்டு. உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, சிலைகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

iv. திருக்கோயில்களில் காவல் துறையினர், முன்னாள் இராணுவத்தினர் ஆகியோரைக் கொண்ட திருக்கோயில் பாதுகாப்புப் படை ஏற்படுத்தப்பட்டு, அதில் பணிபுரியும் காவலர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தில் 25% பங்குத்தொகை அந்தந்த திருக்கோயில்கள்மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

v. 2021-2022 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பின்படி, திருக்கோயிலுக்குச் சொந்தமான சொத்துகளைப் பாதுகாக்கும்பொருட்டு, தேவையான பயிற்சிகள் அளித்து, இளைஞர்களை பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தும்பொருட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

89—

திருக்கோயில் திருப்பணி செய்தல்

வினா எண் 13163—திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2022 அக்டோபர் 18]

பழனி தொகுதி, பழனி வட்டம், காவலப்பட்டி ஊராட்சியில் உள்ள அருள்மிகு பங்காரு அழகர் திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்ய இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை மூலமாக நிதியுதவி வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

பழனி தொகுதி, பழனி வட்டம், காவலப்பட்டி ஊராட்சியில் உள்ள அருள்மிகு பங்காரு அழகர் திருக்கோயில் 2021-2022 ஆம் நிதியாண்டிற்கான ஆதி திராவிடர் வசிக்கும் பகுதியில் உள்ள திருக்கோயில், திருப்பணிக்கான தகுதியான திருக்கோயில்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டு, பொதுநல நிதி ரூ.2,00,000/- அனுமதிக்கப்பட்டு திருப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

90—

பள்ளிக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 5327—திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருச்செங்கோடு தொகுதி, எலச்சிபாளையம் ஒன்றியம், குமரமங்கலம் அரசுப் பள்ளிக்கு இந்திரா நகரில் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு தொகுதி, எலச்சிபாளையம் ஒன்றியம், குமரமங்கலம், அரசு உயர்நிலைப் பள்ளி அமைந்துள்ள நிலம் நாமக்கல் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரது பெயருக்கு நிலமாற்றம் செய்யப்படவில்லை. எனவே, இப்பள்ளிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட நபார்டு கடனுதவி திட்டத்தில் வழிவகை இல்லை.

[*2022 அக்டோபர் 18*

91—

அரசுப் பள்ளிகளில் ஆங்கில வழி கல்வி துவங்குதல்

வினா எண் 9791—திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சோழிங்கநல்லூர் தொகுதியிலுள்ள அனைத்து அரசுப் பள்ளிகளிலும் ஆங்கில வழி கல்வி துவங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

சோழிங்கநல்லூர் தொகுதியில் 11 மேல்நிலைப் பள்ளிகளிலும், 8 அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும், 20 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலும் மற்றும் 1 நகராட்சி தொடக்கப் பள்ளியிலும் தமிழ் மற்றும் ஆங்கில வழியில் கல்வி கற்க அனுமதி வழங்கப்பட்டு, ஆங்கில வழி வகுப்புகள் செயல்பட்டு வருகின்றன. அத்தொகுதியில் மீதமுள்ள பள்ளிகளில், மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பெற்றோர்களின் விருப்பத்திற்கிணங்க, ஆங்கில வழியில் கல்வி கற்பிக்கும் வகுப்புகள் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

92—

பெண்கள் மேல்நிலைப் பள்ளியைத் தனியாகப் பிரித்தல்

வினா எண் 10136—திரு. ஆ. கோவிந்தசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி ஒன்றியம், சோலைக்கொட்டாய் மேல்நிலைப் பள்ளியிலிருந்து பெண்கள் மேல்நிலைப் பள்ளி என தனியாக பிரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது உள்ள நெறிமுறைகளின்படி, இருபாலர் மேல்நிலைப் பள்ளியிலிருந்து முதலில் மகளிர் உயர்நிலைப் பள்ளியாக மட்டுமே பிரிப்பதற்கு வழிவகை உள்ளது. அரசினர் இருபாலர் மேல்நிலைப் பள்ளியைப் பிரித்து நேரடியாக தனியாக பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைக்க வழிவகை இல்லை. எனவே, தருமபுரி ஒன்றியம், சோலைக்கொட்டாய் அரசு மேல்நிலைப் பள்ளியை பிரித்து தனியாக பெண்கள் மேல்நிலைப் பள்ளி துவக்க இயலாத நிலை உள்ளது.

93—

மேல்நிலைப் பள்ளியில் ஆங்கில வழிக் கல்வி துவக்குதல்

வினா எண் 15674—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மண்டைகாட்டில் உள்ள தேவசம்போர்டு மேல்நிலைப் பள்ளியில் ஆங்கில வழிக் கல்வி துவக்கவும், புதிய கட்டடங்கள் கட்டவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், மண்டைகாட்டில் உள்ள தேவசம்போர்டு அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளியில் ஆங்கில வழிக் கல்வி துவங்க அரசாணை (நிலை) எண் 148, பள்ளிக் கல்வித் (பக6(1)) துறை, நாள் 20-7-2018-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி முன்மொழிவுகள் சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்மூலம் பெறப்படும் நிலையில் இதுகுறித்து பரிசீலிக்கப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

[2022 அக்டோபர் 18

அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகளில் கட்டடங்கள் கட்டுவது, உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது, கட்டடங்களைச் சீரமைப்பது ஆகிய பணிகள் அரசால் மேற்கொள்ளப்படுவதில்லை. எனவே, கன்னியாகுமரி மாவட்டம், மண்டைகாட்டில் உள்ள தேவசம்போர்டு அரசு நிதியுதவிபெறும் தனியார் மேல்நிலைப் பள்ளிக்கு பள்ளி நிருவாகமே உரிய வசதிகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

94—

இரசாயன கழிவுகள் கொட்டும் வாகனங்கள்மீது நடவடிக்கை

வினா எண் 6978—திரு. இரா. அருள்: *மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மேற்கு தொகுதி, தேசிய நெடுஞ்சாலை IT பார்க் எதிரில் தொழிற்சாலை கழிவுகள் கொட்டப்படுவதைத் தடுக்கவும், இரசாயன கழிவுகளைக் கொட்டும் வாகனங்கள்மீது நடவடிக்கை எடுக்கவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் மேற்கு தொகுதி, தேசிய நெடுஞ்சாலை IT பார்க் அருகில் உள்ள பகுதி தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய சேலம் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் அவர்களால் 10-3-2022 அன்று ஆய்வு செய்யப்பட்டதில், சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், வெள்ளக்கல்பட்டி பஞ்சாயத்து பகுதியில் உற்பத்தியாகும் நகராட்சி திடக்கழிவுகள் IT பார்க் அருகில் கொட்டப்படுகின்றன. அத்திடக்கழிவுகளில் இராசயனக் கழிவுகள் இல்லை என்பது ஆய்வில் தெரிய வருகிறது. மேலும், 11-3-2022 ஆம் நாளிட்ட கடிதத்தில், இந்நேர்வு தொடர்பாக திடக்கழிவு மேலாண்மை விதிகள்

2022 அக்டோபர் 18]

2016-ன்படி உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஓமலூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், மேற்படி இடத்தில் குப்பைகள் கொட்டாமல் இருப்பது கண்காணிக்கப்படும்.

95—

காற்று மாசுபடுதலைத் தடுத்தல்

வினா எண் 9722—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சென்னையில் காற்று மாசுபடுவதைக் கட்டுப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

தொழிற்சாலைகள் காற்று மாசினைக் கட்டுப்படுத்தும் கருவிகளை பொருத்தி உள்ளனவா என ஆய்வு செய்து வாரியத்தால் இசைவாணை வழங்கப்பட்டு வருகிறது.

சென்னையில் காற்றின் தரத்தைக் கண்காணிக்க 8 இடங்களில் தேசிய காற்று கண்காணிப்பு நிலையங்களும், 4 நிலையான தொடர் காற்று கண்காணிப்பு நிலையங்களும், ஒரு நடமாடும் தொடர் காற்று கண்காணிப்பு நிலையமும் இயங்கி வருகின்றன. காற்றின் தரத்தின் அளவு தினமும் கண்காணித்து காற்றுத் தரக் குறியீடு கணக்கிடப்படுகிறது.

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் வாயுக் கழிவுகளை கணக்கீடு செய்யும் கருவிகளை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய காற்று தர கண்காணிப்பு மையத்துடன் இணைந்து தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மருத்துவக் கழிவுகளை மேலாண்மை செய்யும் பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் சென்னை நகரத்திற்கு

வெளியே நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன. தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் இசைவாணை நிபந்தனைகளின்படி அதன் மொத்த பரப்பளவில் 25 சதவீதம் மரங்கள் வளர்க்கப்பட்டு வருவதால் காற்று மாசு குறைந்துள்ளது.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் அறிவுரையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவுகள் எரிப்பதை தடை செய்து அவற்றை தரம் பிரித்து கையாண்டு வருகிறது.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் காற்று மாசினைத் தடுக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள போக்குவரத்து (Transport), மாநகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் துறை (MA&WS), தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலை துறைகளை அறிவுறுத்தியுள்ளது.

தீபாவளி மற்றும் போகிப் பண்டிகை காலங்களில் காற்று மாசினைத் தடுக்க விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொண்டு தொடர்ந்து கண்காணித்து வருவதால், புகையின் அளவு குறைந்துள்ளது. இத்தொடர் நடவடிக்கைகளால் சென்னை மாநகரின் காற்று மாசின் தரம் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது.

96—

வேலைவாய்ப்புத் துறைமூலம் பணியாளர்களை நியமித்தல்

வினா எண் 27732—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒப்பந்தம் மற்றும் தற்காலிக பணியாளர்களை வேலைவாய்ப்புத் துறைமூலம் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) அரசாணை (நிலை) எண் 790, தொழிலாளர் நலத் துறை, நாள் 5-7-1971-ன்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர்

2022 அக்டோபர் 18]

தேர்வாணையத்தின் வரம்பிற்கு உட்படாத அனைத்து தற்காலிக மற்றும் நிரந்தர பணி நியமனங்களும் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வாயிலாக மட்டுமே மேற்கொள்ளப்பட்டன. வேலைவாய்ப்பு அலுவலக உயிர்பதிவேட்டில் தகுதியான பதிவுதாரர்கள் இல்லாதபட்சத்தில் ஆளில்லா சான்றிதழ் பெறப்பட்ட பின்னரே பணியிடங்கள் நிரப்பப்படவேண்டும் என ஆணையிடப்பட்டது.

மேலும், அரசாணை (நிலை) எண் 1138, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 25-9-1978-ன்படி அரசிடமிருந்து நிதி உதவிபெறும் தொழில் நிறுவனம், பல்கலைக்கழகங்கள், பள்ளிகள், விடுதிகள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் அரசுச் சார்பு நிறுவனங்கள் அனைத்தும் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வாயிலாக மட்டுமே பணி நியமனங்கள் செய்யப்பட வேண்டும் என்று ஆணையிடப்பட்டது.

அதன்பின் ஒன்றிய அரசின் அனைத்துத் துறைகளும் உச்ச நீதிமன்ற தீர்ப்பின் (வழக்கு எண் 11646-11724/1996) அடிப்படையில், பொதுத் துறை பணிக் காலியிடங்களை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களுக்கு அறிவிப்பு செய்வதோடு மட்டுமின்றி, பத்திரிகைகளிலும் விளம்பரப்படுத்த வேண்டும் என ஒன்றிய அரசால் 18-5-1998-ல் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

இந்நிலையில் திரு. கே.பி. ஜெகந்நாதன் என்பவரால் சென்னை உயர் நீதிமன்றத்தில் WP.No. 26162/2010 என்ற எண்ணில் தொடரப்பட்ட வழக்கின்மீது வழங்கப்பட்ட 2-8-2012 ஆம் தேதியிட்ட உயர் நீதிமன்ற தீர்ப்பில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள்மூலம் பரிந்துரைக்கப்படும் மனுதாரர்கள் மட்டுமல்லாது வெளிச்சந்தையில் உள்ள தகுதியுள்ள மனுதாரர்களும் பணி நியமனத்தில் பங்குபெறுவதற்கு ஏதுவாக பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்பட்டு, அதனடிப்படையில் தகுதியான மனுதாரர்கள் கருத்தில்கொள்ளப்பட்டு அரசு பணி நியமனங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என ஆணையிடப்பட்டது. அதனடிப்படையில் அரசாணை (நிலை) எண் 44, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 11-3-2015 அன்று வெளியிடப்பட்டு நீதிமன்ற ஆணைகளை முழுமையாக பின்பற்றுமாறு அரசால் ஆணையிடப்பட்டது.

இவ்வரசாணைகளின் அடிப்படையில் தற்போது தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் வரம்பிற்கு உட்படாத அனைத்து அரசு பணிக் காலியிடங்களும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களுக்கு அறிவிப்பு செய்யப்பட்டு பட்டியல் பெறப்படுவதோடு பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்யப்பட்டு தகுதியுடன் விருப்பமுள்ள அனைத்து மனுதாரர்களிடம் இருந்தும் விண்ணப்பங்களும் பெறப்பட்டு இவற்றின் அடிப்படையில் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன.

மேலும், அரசுத் துறைகளில் ஏற்படும் 'டி' தொகுதி பணியிடங்கள் (அலுவலக உதவியாளர் தவிர) அனைத்தும் அரசாணை (நிலை) எண் 49, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 14.5.2002-ல் குறிப்பிடப்பட்ட நெறிமுறைகளை பின்பற்றி, வெளிமுகமைகள் வாயிலாக நிரப்பப்பட்டு வருகின்றன. ஆகவே, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களால் தற்காலிக மற்றும் ஒப்பந்த பணியாளர்களை நியமனம் செய்வது என்ற நிலை எழவில்லை.

(ஆ) எழாது.

97—

தொழிற்பயிற்சி நிறுவனங்கள் அமைத்தல்

வினா எண் 30654—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் முக்கியத் தொழில் நகரங்களில் புதிய தொழிற்பயிற்சி நிறுவனங்கள் (ITI) அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2022-2023 ஆம் ஆண்டு சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது, மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும்

2022 அக்டோபர் 18]

திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் மாவட்டங்களில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் துவங்கப்படும் என அறிவித்துள்ளார்:

வ.எண்	**மாவட்டம்**	**அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமையவுள்ள இடம்**
1.	கடலூர்	மங்களூர்
2.	சிவகங்கை	மானாமதுரை
3.	திருவண்ணாமலை	செய்யாறு
4.	விருதுநகர்	திருச்சுழி
5.	திருவள்ளூர்	கும்மிடிப்பூண்டி
6.	திண்டுக்கல்	ஒட்டன்சத்திரம்
7.	இராமநாதபுரம்	கடலாடி
8.	தருமபுரி	அரூர்
9.	கிருஷ்ணகிரி	தேன்கனிக்கோட்டை
10.	பெரம்பலூர்	குன்னம்
11.	கோயம்புத்தூர்	வால்பாறை

மேற்கூறிய அறிவிப்பினை தொடர்ந்து, விரைவில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் துவங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

98—

ஊதியம் வழங்காத நிறுவனங்கள்மீது நடவடிக்கை

வினா எண் 30767—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் குறைந்தபட்ச ஊதிய சட்டப்படி ஊதியம் வழங்காத நிறுவனங்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குறைந்தபட்ச ஊதியச் சட்டம் அமலாக்கம் தீவிரப்படுத்துதல் தொடர்பாக, மாதந்தோறும் குறைந்தபட்ச ஊதிய சட்ட அட்டவணையில் சேர்க்கப்பட்ட தொழில் இனங்களில் உள்ள ஒரு தொழிலுக்கு அமலாக்க அலுவலர்களால் சிறப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு குறைந்தபட்ச ஊதியம் வழங்காத நேர்வுகளில், சம்பந்தப்பட்ட அலுவலரால், அந்நிறுவனங்களுக்கு எதிராக கேட்பு மனு தாக்கல் செய்யப்படுகிறது.

1-4-2021 முதல் 31-3-2022 வரையிலான காலத்தில் குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948-ன்கீழ் அமலாக்க அலுவலர்களால் 24,753 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பல்வேறு முரண்பாடுகள் நிமித்தம் வேலையளிப்பவருக்கு எதிராக 106 வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ.1,90,500/- அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. 831 கேட்பு மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு, தொழிலாளர்களுக்கு ரூ.6,25,08,561/- வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

99—

தற்காலிக பணியாளர்கள் நியமனம்

வினா எண் 31005—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரசு அலுவலகங்களில் தற்காலிக பணியாளர்களை பணி நியமனம் செய்யும்போது வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக பணி நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

2022 அக்டோபர் 18]

(அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு உட்படாத தற்காலிக/நிரந்தர பணிக் காலியிடங்களை நிரப்ப வேலையளிப்போரால் பட்டியல் கோரப்படும் நேர்வுகளில் அப்பணிக் காலியிடங்கள் கல்வித் தகுதி, வயது, இனச் சுழற்சி, பணிமூப்பு மற்றும் முன்னுரிமை ஆகிய விதிகள் பின்பற்றப்பட்டு ஒரு பணிக் காலியிடத்திற்கு ஐந்து நபர்கள் என்ற கணக்கில் வேலைவாய்ப்பு அலுவலகங்களால் பரிந்துரைக்கப்படுகின்றன. பணிக் காலியிடங்கள் குறித்து பத்திரிகைகளிலும் வேலையளிப்போரால் விளம்பரம் அளிக்கப்பட்டு விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. வேலைவாய்ப்பு பட்டியலில் பரிந்துரைக்கப்பட்டோர் மற்றும் விளம்பரம் வாயிலாக நேரடியாக பெறப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் பரிசீலிக்கப்பட்டு வேலையளிப்போரால் நேர்காணல்மூலம் பணிக் காலியிடங்கள் நிரப்பப்படுகின்றன. பணிக் காலியிடங்களை நிரப்பும் அதிகாரம் அந்தந்த வேலையளிப்பவரிடம் மட்டுமே உள்ளது. ஆகவே, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள்மூலம் தற்காலிக பணியாளர்களை நியமனம் செய்வது என்ற நிலை எழவில்லை.

(ஆ) எழாது.

100—

பட்டியலின மாணவர்களுக்கு ஆய்வுக் கொடையை உயர்த்துதல்

வினா எண் 12287—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பட்டியல் இன மாணவர்களுக்கு வழங்கப்படும் ஆய்வுக் கொடையை உயர்த்தி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2021-2022 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள

மேலாண்மைத் துறை) அவர்களின் அறிவிப்பின்படி, அரசாணை (நிலை) எண் 96, ஆதி(ம)பந(ஆதிந-3) துறை, நாள் 25-11-2021-ல் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணாக்கர்கள் முழுநேர முனைவர் பட்ட ஆராய்ச்சி படிப்பில் சிறந்து விளங்க அம்மாணாக்கர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த ஊக்கத்தொகை ரூ.50,000/-ஐ ரூ.1,00,000/- ஆகவும், தேர்ந்தெடுக்கப்படும் மாணாக்கர்களின் எண்ணிக்கை 1,200-லிருந்து 1,600 ஆகவும் மற்றும் அவர்களின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திலிருந்து ரூ.8.00 இலட்சமாகவும் உயர்த்தி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

பட்டியல்-8

1—

காலிப் பணியிடங்களை நிரப்புதல்

வினா எண் 21140—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு முதலமைச்சர் அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட ஏரியூர் மற்றும் ஒகேனக்கல் காவல் நிலையத்தில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக அரசின், அரசாணை (ப) எண் 587, உள்(காவல்-3) துறை, நாள் 27-4-2020-ன்படி 10,391 இரண்டாம் நிலை காவலர் காலிப் பணியிடங்களை நிரப்ப ஆணை பிறப்பிக்கப்பட்டு, அதன்படி தேர்ந்தெடுக்கப்பட்ட காவலர்கள் தற்போது 15-3-2022 முதல் பயிற்சியில் உள்ளனர். மேற்காணும் பயிற்சி காவலர்கள் பயிற்சி முடித்து 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பணியமர்த்தப்படும்போது ஏரியூர் மற்றும் ஒகேனக்கல் காவல் நிலையத்தில் உள்ள காலிப் பணியிடங்களை தேவையின் அடிப்படையில் நிரப்ப ஆவன செய்யப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

2022 அக்டோபர் 18]

2—

ஆக்கிரமிப்பினை அகற்றி, தூர்வாருதல்

வினா எண் 2463—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(*அ*) *திருவையாறு தொகுதி, ஆலங்குடி, வண்ணாரப்பேட்டை கல்லணை கால்வாய் பாசன வாய்க்கால்* GA3 *ஆக்கிரமிப்பை அகற்றி, தூர்வாரிட அரசு முன்வருமா?*

(*ஆ*) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(*அ*) *மற்றும்* (*ஆ*) *திருவையாறு தொகுதி, ஆலங்குடி, வண்ணாரப்பேட்டை கல்லணைக் கால்வாய் பாசன வாய்க்கால்* GA3 *பாசன வாய்க்காலில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற வருவாய்த் துறைமூலம் ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டு அவற்றை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், வரும் நிதியாண்டில்* (2022-2023) *ரூ.*2.00 *இலட்சம் மதிப்பீட்டில் ஆண்டு பராமரிப்பு நிதியில்* (*திட்டம் சாரா பணிகளின்கீழ்*) *வாய்க்கால் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டு, ஜூன்* 2022-*க்குள் பணி முடிக்கப்படும்.*

3—

குழு அமைத்தல்

வினா எண் 21146—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(*அ*) *முன்னாள் இராணுவ வீரர்களின் நலன் காக்க குழு அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(*ஆ*) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) படைவீரர் நலன் காக்க 1919 இல் அமைக்கப்பட்ட மெட்ராஸ் படைவீரர் வாரியம் தற்போது தமிழ்நாடு முப்படை வீரர் வாரியமாக செயல்படுகிறது. இம்மாநில முப்படை வீரர் வாரியம் மாண்புமிகு அமைச்சர் (முன்னாள் படைவீரர் நலன்) அவர்களைத் தலைவராகவும், மாநில, ஒன்றிய அரசின் முறையே ஒன்பது மற்றும் ஆறு அலுவலர்களை அலுவல்சார் உறுப்பினர்களாகவும், ஐந்து அலுவல் சார்பற்ற உறுப்பினர்கள் மற்றும் கூடுதல்/இணை இயக்குநர், முன்னாள் படைவீரர் நலன் அவர்களை செயலாளராகவும் கொண்டு இயங்குகிறது. மேலும், மாவட்ட அளவில் 30 மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட முப்படை வீரர் வாரியம் செயல்படுகிறது. இவ்வாரியங்கள் மூலமாக முன்னாள் படைவீரர் நலன் குறித்த செயலாக்கங்கள் அரசின் பரிசீலனைக்காக இயக்குநர், முன்னாள் படைவீரர் நலன், சென்னை அவர்களுக்கு பரிந்துரைக்கப்படுகிறது. அவ்வாறு வரப்பெறும் கருத்துருக்கள் அரசால் பரிசீலிக்கப்பட்டு, நடைமுறைபடுத்தப்பட்டு வருகின்ற நிலையில் முன்னாள் இராணுவ வீரர்களின் நலன் காக்க குழு ஒன்று அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

4—

பழைய தோட்டங்களை புதுப்பித்தல்

வினா எண் 1854—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதியில் முந்திரி பழைய தோப்பு புதுப்பித்தல் திட்டத்தை விரிவுபடுத்தி, நடைமுறைப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி இயக்கம்-தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்மூலம் பழைய தோட்டங்கள் புதுப்பித்தல் திட்டம் நடைமுறையில் உள்ளது. இத்திட்டம்

2022 அக்டோபர் 18]

நெய்வேலி தொகுதியிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், வரும் ஆண்டில் இத்திட்டம் விரிவுபடுத்தி செயல்படுத்தப்படும். மேலும், தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்கீழ் பழைய தோட்டங்களை புதுப்பிக்க 50 சதவீதம் மானியத்தில் ஒரு ஹெக்டருக்கு ரூ.20,000/- வீதம் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

5—

மானியம் வழங்குதல்

வினா எண் 3013—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, நாற்றங்கால் நர்சரி விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனத்திற்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

நாற்றங்கால்களுக்கென பிரத்தியேக பாசன அமைப்புகளுக்கு மானியம் அளித்திட நுண்ணீர் பாசன திட்டத்தில் வழிவகை இல்லை.

6—

இழப்பீடு வழங்குதல்

வினா எண் 3899—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, ரீத்தாபுரம் பேரூராட்சிக்குட்பட்ட பத்தரை பகுதியில் உள்ள வாழை மரங்கள் மழையால் பாதிக்கப்பட்டுள்ளதால், இழப்பீடு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். ரீத்தாபுரம் பேரூராட்சியில் மழையால் பாதிக்கப்பட்ட வாழை மரங்களுக்கு அரசு இழப்பீடு வழங்கியுள்ளது.

ரீத்தாபுரம் பேரூராட்சியில் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதம் பெய்த வடகிழக்கு பருவமழையால் 9.58 எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்ட 8 விவசாயிகளின் தோட்டக்கலைப் பயிரான வாழைப் பயிர்களில் 8.98 எக்டர் வாழைப் பயிர்கள் சேதாரம் அடைந்ததாக, மாவட்ட ஆட்சியர், கன்னியாகுமரி அவர்களிடமிருந்து கருத்துரு வரப்பெற்றதைத் தொடர்ந்து அரசாணை எண் 13 மற்றும் 14, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 5-1-2022-ன்படி எக்டர் ஒன்றிற்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகையான ரூ.13,500/-னை மாநில பேரிடர் நிவாரண நிதியில் இருந்தும், ரூ.6,550/- மாநில நிதியில் இருந்தும் சேர்த்து ஆக மொத்தம் ரூ.20,000/- ஆக எக்டர் ஒன்றிற்கு உயர்த்தி வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி நிவாரணத் தொகையாக ரூ.1,21,825/- மாநில பேரிடர் நிவாரண நிதியில் இருந்தும், ரூ.58,175/- மாநில நிதியில் இருந்தும் சேர்த்து ஆக மொத்தம் ரூ.1,80,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டு, பாதிக்கப்பட்ட 8 விவசாயிகளுக்கு நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

நிவாரணம் வழங்கப்பட்ட 8 விவசாயிகளின் விவரங்கள்:

வ. எண்	விவசாயி பெயர்	சாகுபடி செய்யப் பட்ட பரப்பு (எக்டர்)	சேத மடைந்த பரப்பு (எக்டர்)	இழப்பீட்டுத் தொகை மாநில பேரிடர் நிவாரண நிதி (ரூ.)	இழப்பீட்டு தொகை மாநில நிதி (G.O.No.13 & 14 dated 5.1.2020) (ரூ.)	மொத்த இழப்பீட்டு தொகை (ரூ.)
1.	திரு. ஜான் ரமேஷ், த/பெ. வருவேல்	2.00	1.60	21,600	10,400	32,000
2.	திரு.ஜெயக்குமார், த/பெ. முத்தையன்	1.60	1.40	18,900	9,100	28,000

2022 அக்டோபர் 18]

3.	திருமதி மரியா ஆண்டனி, த/பெ. சபரிமுத்து	0.80	0.80	10,800	5,200	16,000
4.	திரு. முரளிதரன், த/பெ. ஸ்ரீதரன்	0.35	0.35	4,725	2,275	7,000
5.	திரு.ஆல்ப்ரெட், த/பெ. சிலுவைராஜன்	0.60	0.60	8,100	3,900	12,000
6.	திரு.ராபர்ட் வின்சென்ட், த/பெ. முத்தையன்	3.00	3.00	40,500	19,500	60,000
7.	திரு. நாகராஜ், த/பெ. தங்கநாடார்	1.20	1.20	16,200	7,800	24,000
8.	திருமதி பினுமோல், க/பெ. செந்தில் குமார்	0.03	0.03	1,000	--	1000
	மொத்தம்					**1,80,000**

7—

காப்பீட்டுத் தொகை வழங்குதல்

வினா எண் 4164—திரு. G.V. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விளாத்திகுளம் பகுதியில் 2019-20 ஆம் ஆண்டுக்கான காப்பீட்டுத் தொகையை விவசாயிகளுக்கு வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 2019-20 ஆம் ஆண்டிற்கு இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனம்மூலம் ரூ.63.904 கோடி இழப்பீட்டுத் தொகையாக தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் விளாத்திகுளம் வட்டாரத்திற்கு மட்டும், ரூ.3.28 கோடி உளுந்து, பச்சைப்பயறு,

நிலக்கடலை, பருத்தி மற்றும் சம்பா நெல் ஆகிய பயிர்களுக்கு 4,181 விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகையாக வழங்கப்பட்டது.

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் திட்ட வழிமுறைகளின்படி தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டாரத்திற்கு வேளாண் பயிர்களுக்கு 2019-2020 ஆம் ஆண்டுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகை நிலுவை ஏதுமின்றி முழுவதுமாக வழங்கப்பட்டு விட்டது.

8—

மாடித்தோட்டம் அமைத்தல்

வினா எண் 11157—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நகர்ப்புறங்களில் வீடுகளில் மாடித் தோட்டம் அமைக்கும் திட்டத்தை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

நகர்ப்புற வீடுகளில் மாடித் தோட்டமானது மாண்புமிகு முதலமைச்சரின் ஊட்டச்சத்து காய்கறித் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு மேலும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். 2021-2022 ஆம் ஆண்டில் நகர்ப்புற மக்களுக்கு பயன்படும் வகையில் 1 இலட்சம் மாடித் தோட்டத் தளைகள் 75% மானியத்தில் வழங்கப்பட்டன. 2022-2023 ஆம் ஆண்டில் இத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்படும். மாடித் தோட்ட தொகுப்பில் 6 வகையான காய்கறி விதைகள், காய்கறி வளர்க்கும் பைகள், கோகோபீட், வேப்ப எண்ணெய், அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, டிரைகோடெர்மா மற்றும் துண்டுப் பிரசுரம் போன்றவை இத்தொகுப்பில் வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித் தோட்டத் திட்டத்தின்கீழ் நகர்ப்புறங்களில் காய்கறித் தோட்டத்தை

2022 அக்டோபர் 18]

ஊக்குவிக்க மாடித்தோட்ட தளைகள் 75% மானிய விலையில் ரூ.225/-க்கு வழங்கப்பட்டு வருகிறது.

9—

மாடித் தோட்டம் அமைத்தல்

வினா எண் 11415—திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாநகராட்சி மற்றும் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் காய்கறிகளை விளைவிக்க மாடித் தோட்டங்கள் அமைக்கவும், இதுபோன்று வீடுகளில் மாடித் தோட்டங்களை அமைத்து, காய்கறிகளை விளைவிப்போரை ஊக்குவிக்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

2021-2022 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சரின் ஊட்டச்சத்து காய்கறித் திட்டத்தின்கீழ் நகர்ப்புற மக்களுக்கு பயன்படும் வகையில் ஒரு இலட்சம் மாடித் தோட்டத் தளைகள் ஆறு வகையான காய்கறி விதைகள் அடங்கிய தொகுப்பு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மாநகராட்சி மற்றும் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் காய்கறிகளை விளைவிக்க மற்றும் மாடித் தோட்டம் அமைக்க எவ்வித திட்டமும் செயல்படுத்தப்படவில்லை.

10—

கட்டடம் புதுப்பித்தல்

வினா எண் 24054—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், களத்தூர் ஊராட்சி, பழுதடைந்த கிராம நிர்வாக அலுவலகக் கட்டடம் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், களத்தூர் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல் தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் புதுப்பித்தல் தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொது பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது மேற்படி கட்டடத்தைப் புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11—

கட்டடம் புதுப்பித்தல்

வினா எண் 24057—திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், முசிறியம் ஊராட்சி, பழுதடைந்த திட்டாணிமுட்டம் கிராம நிர்வாக அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், முசிறியம் ஊராட்சி, திட்டாணிமுட்டம் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல் தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் புதுப்பித்தல் தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொது பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது மேற்படி கட்டடத்தைப் புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2022 அக்டோபர் 18]

12—

கட்டடம் புதுப்பித்தல்

வினா எண் 24058—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், எண்கண் ஊராட்சி, பழுதடைந்த கிராம நிர்வாக அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், எண்கண் ஊராட்சி, கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல் தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் புதுப்பித்தல் தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொது பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது மேற்படி கட்டடத்தைப் புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

13—

கட்டடம் புதுப்பித்தல்

வினா எண் 24059—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், அத்திச்சோழமங்கலம் ஊராட்சி, பழுதடைந்த கிராம நிர்வாக அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், அத்திச்சோழமங்கலம் ஊராட்சி, கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல் தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் புதுப்பித்தல் தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொது பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது மேற்படி கட்டடத்தைப் புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

14—

கட்டடம் புதுப்பித்தல்

வினா எண் 24060—திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், தேவர்கண்டநல்லூர் ஊராட்சி, பழுதடைந்த கிராம நிர்வாக அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், தேவர்கண்டநல்லூர் ஊராட்சி, கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல் தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் புதுப்பித்தல் தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொது பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது மேற்படி கட்டடத்தைப் புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2022 அக்டோபர் 18]

15—

கட்டடம் புதுப்பித்தல்

வினா எண் 24063—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், உத்திரங்குடி ஊராட்சி, பழுதடைந்த மேலஉத்திரங்குடி கிராம நிர்வாக அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், உத்திரங்குடி ஊராட்சி, மேலஉத்திரங்குடி கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல் தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் புதுப்பித்தல் தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொது பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது மேற்படி கட்டடத்தைப் புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

16—

பணி நியமன ஆணை வழங்குதல்

வினா எண் 12947—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகம் முழுவதும் இரண்டாம் நிலை காவலர் தேர்வில் 2013 முதல் 2020 வரை தேர்வாகி உயர் நீதிமன்றம் மற்றும் நடுவர் நீதிமன்றங்களில் குற்றமற்றவர்கள் என தீர்ப்பு பெற்ற சுமார் 120 நபர்களுக்கு பணி நியமன ஆணை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி, சட்டத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2013 முதல் 2020 வரை இரண்டாம் நிலை காவலராக தேர்வு செய்யப்பட்டு குற்ற வழக்கில் ஈடுபட்ட காரணத்தினால் பணி நியமனம் செய்யப்படாத நபர்களின் மனுக்கள், தமிழ்நாடு காவலர் சார்நிலை விதிகள் மற்றும் உச்ச நீதிமன்ற ஆணைகளின்படி மறுபரிசீலனை செய்யப்பட்டு, மேற்படி நபர்கள் மேற்குறிப்பிட்ட சார்நிலை விதிகள் மற்றும் உச்ச நீதிமன்ற ஆணைகளுக்கு உட்பட்டு தகுதி பெற்றிருப்பின், அவர்களை இரண்டாம் நிலை காவலர்களாக பணி நியமனம் செய்வது குறித்து பரிசீலிக்கப்படும்.

17—

பட்டா வழங்குதல் மற்றும் குடியிருப்புகள் கட்டுதல்

வினா எண் 7514—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் (தெற்கு) தொகுதியில் உள்ள குடிசைப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு இலவச பட்டா வழங்கவும், புதிய குடியிருப்புகள் கட்டவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் (தெற்கு) சட்டமன்றத் தொகுதியில் உள்ள குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் இலவச பட்டா வழங்கும் திட்டம் தற்போது ஏதும் செயலாக்கத்தில் இல்லை.

2. அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் 4,128 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2022 அக்டோபர் 18]

ரூ. 322.14 கோடி திட்ட மதிப்பீட்டில் முடிவுற்று தகுதியான பயனாளிகளுக்கு குடியிருப்புகளை ஒதுக்கீடு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், கூடுதலாக 2,788 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் ரூ. 253.36 கோடி திட்ட மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

முடிவுற்றவை:

வ. எண்	திட்டப் பகுதியின் பெயர்	குடியிருப்புகளின் எண்ணிக்கை	திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்)
1.	வீரபாண்டி, திருப்பூர்	1280	96.11
2.	திருக்குமரன் நகர், திருப்பூர்	1248	99.95
3.	பாரதி நகர் பகுதி 1, திருப்பூர்	288	22.57
4.	ஜெயா நகர், திருப்பூர்	256	20.23
5.	சோலை நகர், அவினாசி	448	37.27
6.	ஜே.ஜே.நகர், உடுமலைப்பேட்டை	320	26.26
7.	அறிவொளி நகர், பல்லடம் (*RAY*)	288	19.75
	மொத்தம்	**4128**	**322.14**

முன்னேற்றத்தில் உள்ளவை:

வ. எண்	திட்டப் பகுதியின் பெயர்	குடியிருப்புகளின் எண்ணிக்கை	திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்)
1.	பாரதி நகர் பகுதி 2, திருப்பூர்	384	33.02
2.	செட்டிபாளையம், திருப்பூர்	240	21.36
3.	பட்டேல் நகர், அவினாசி	272	23.87

4.	பூண்டி நகர், திருமுருகன் பூண்டி	224	18.80
5.	புதூர், மடத்துக்குளம்	156	13.49
6.	ஹை டெக் பார்க், பல்லடம்	432	36.73
7.	பெருந்தொழுவு, திருப்பூர்	192	19.10
8.	அண்ணா நகர், பொங்கலூர்	360	35.09
9.	காந்தி நகர்- பொங்கலூர்	528	51.80
	மொத்தம்	**2788**	**253.26**

18—

வீடுகள் வழங்குதல்

வினா எண் 17845—திரு. இரா. அருள்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை பல்கலைக்கழக விக்டோரியா மாணவியர் விடுதி அருகில் லாக் நகர் தெருவோரம் வசிப்பவர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் வீடுகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் எண் 9, வார்டு எண் 114, லாக் நகர் திட்டப் பகுதியில் பழுதடைந்த குடியிருப்புகள் இடிக்கப்பட்டு 304 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் 2016 ஆம் ஆண்டில் கட்டப்பட்டு, தகுதி வாய்ந்த குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு குடியிருந்து வருகின்றார்கள். சென்னை

2022 அக்டோபர் 18]

பல்கலைக்கழக விக்டோரியா மாணவியர் விடுதிக்கு அருகில் லாக் நகர் தெருவோரம் வசிக்கும் ஆக்கிரமிப்புதாரர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியால் கணக்கெடுப்பு செய்யப்பட வேண்டும். சென்னை மாநகரில் புதிய மற்றும் மறுகட்டுமான திட்டத்தின்கீழ் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் பணிகள் பல்வேறு நிலைகளில் தற்போது முன்னேற்றத்தில் உள்ளன.

மேற்கூறப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்புகளில் உள்ள கூடுதல் குடியிருப்புகள் சட்டமன்ற வினாவில் கூறப்பட்டுள்ள இடங்களில் வாழும் குடும்பங்கள் ஒதுக்கீடு பெற விருப்பம் தெரிவித்து தகுதியான பயனாளிகளின் பங்களிப்பு தொகையை பெருநகர சென்னை மாநகராட்சி/நில உடைமைத் துறைக்குச் செலுத்த முன்வரும்பட்சத்தில் அக்குடும்பங்களுக்கு குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்ய அரசு உரிய நேரத்தில் பரிசீலனை செய்யும்.

19—

வீடுகள் வழங்குதல்

வினா எண் 17846—திரு. இரா. அருள்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேப்பாக்கம் விளையாட்டரங்கம் எதிர்புறம் சாலையோரங்களில் வசிப்பவர்களுக்கு வீடுகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

சென்னை, சேப்பாக்கம் விளையாட்டரங்கம் எதிர்ப்புறம் சாலையோரம் ஆக்கிரமிப்பாளர்கள் வசிப்பதால், இக்குடும்பங்களை பெருநகர சென்னை மாநகராட்சி, கணக்கெடுப்பு செய்ய வேண்டும். சென்னை மாநகரில் புதிய மற்றும் மறுகட்டுமான திட்டத்தின்கீழ் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் பணிகள் பல்வேறு நிலைகளில் தற்போது முன்னேற்றத்தில் உள்ளன.

மேற்கூறப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்புகளில் உள்ள கூடுதல் குடியிருப்புகள் சட்டமன்ற வினாவில் கூறப்பட்டுள்ள இடங்களில் வாழும் குடும்பங்கள் ஒதுக்கீடு பெற விருப்பம் தெரிவித்தபின், தகுதியான பயனாளிகளின் பங்களிப்பு தொகையை பெருநகர சென்னை மாநகராட்சி/நில உடைமைத் துறைக்குச் செலுத்த முன்வரும்பட்சத்தில் அக்குடும்பங்களுக்கு குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்ய அரசு உரிய நேரத்தில் பரிசீலனை செய்யும்.

20—

நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் இணைத்தல்

வினா எண் 17898—திரு. க. கணபதி: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரவாயல் தொகுதி, வார்டு எண் 152, வளசரவாக்கம், டாக்டர் அம்பேத்கர் சாலையில் வசிக்கும் வரி செலுத்துபவர்களை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் இணைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, மதுரவாயல் தொகுதி, வார்டு எண் 152, வளசரவாக்கம், டாக்டர் அம்பேத்கர் சாலையில் மக்கள் ஏரிக்கரைகளில் வாழ்ந்து வருகின்றனர். இக்குடும்பங்களின் வாழ்வாதாரம் கருதி இப்பகுதிகளில் முறைசாரா துறைகளில் பணிகளை மேற்கொண்டு வாழ்ந்து வருகின்றனர். ஏரிக்கரைகள் பொதுப் பணித் துறையின் பொறுப்பு மற்றும் பராமரிப்பில் உள்ளன. எனவே, இக்குடும்பங்கள் பொதுப் பணித் துறைமூலம் கணக்கெடுப்பு செய்யப்பட வேண்டும்.

சட்டமன்ற வினாவில் கூறப்பட்டுள்ள குடும்பங்களுக்கான குடியிருப்புகளின் கட்டுமானச் செலவின் நிதி ஆதாரத்தில்

2022 அக்டோபர் 18]

பயனாளிகளின் பங்களிப்பும் அடங்கும். எனவே, பயனாளிகளின் பங்களிப்பிற்கான தொகையினை வீடுகளை ஒதுக்கீடு செய்யும் முன்னர் பெற வேண்டிய அவசியம் வாரியத்திற்கு ஏற்பட்டுள்ளது. பயனாளிகளின் பங்களிப்புத் தொகையினை பொதுப் பணித் துறையினர் செலுத்த முன்வந்தால், இக்குடும்பங்களுக்கு குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்ய உரிய நடவடிக்கைகள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் மேற்கொள்ளப்படும்.

21—

வீடுகள் ஒதுக்கீட்டை முறைப்படுத்துதல்

வினா எண் 18639—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூரில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பில் தகுதியில்லாதவர்களுக்கு வீடுகள் ஒதுக்கியுள்ளதை கண்டறிந்து முறைப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் பாரதப் பிரதமரின் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டம் PMAY(U)-AHP *மூலமாக திருப்பூர் நகரில் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு பயனாளிகள் மாவட்ட ஆட்சித் தலைவர், வட்டாட்சியர் மற்றும் துணை ஆட்சித் தலைவர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு, தகுதி வாய்ந்த வீடற்ற மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பயனாளிகள் மட்டுமே தேர்வு செய்யப்பட்டு, பயனாளிகள் தெரிவிக்கும் சுய உறுதிமொழி தரவுகளின்படி வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பயனாளிகள் அளித்த தரவுகள் விவரங்கள் தவறு என்று (ஒன்றுக்கு மேற்பட்ட வீடு ஒதுக்கீடு பெறப்பட்டிருப்பது) பின்னர் தெரியவந்தால், வாரிய ஒதுக்கீடு ஆணை இரத்து செய்யப்படும்.*

22—

விற்பனை பத்திரம் வழங்குதல்

வினா எண் 21272—திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருகம்பாக்கம் தொகுதியில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புப் பகுதியில் ஒதுக்கீடு பெற்றவர்களுக்கு விற்பனை பத்திரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீழே கூறப்பட்டுள்ள **3** *அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப் பகுதிகளில் கட்டப்பட்டுள்ள* **2,254** *அடுக்குமாடிக் குடியிருப்புகளுள்* **1,781** *அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு கிரையப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள* **441** *குடியிருப்புகளுக்கு முழு தவணைத் தொகை, செலுத்தாததாலும், சிவலிங்கபுரம் திட்டப் பகுதியில் உள்ள* **32** *குடியிருப்புகளுக்கு* **5** *ஆண்டுகள் நிறைவடையாததாலும் கிரையப் பத்திரங்கள் வழங்க இயலவில்லை. அதன் விவரம் பின்வருமாறு:*

2022 அக்டோபர் 18]

வ. எண்	திட்டப் பகுதியின் பெயர்	மொத்த குடி யிருப்புகள்	கிரையப் பத்திரம் வழங்கப் பட்டவை	கிரையப் பத்திரம் வழங்கப்பட வேண்டியவை	கிரையப் பத்திரம் வழங்கப்படாத தற்கான காரணம்
1.	கே.கே.நகர் பகுதி-1	488	446	42	தவணைத் தொகை நிலுவையில் உள்ளது. சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு மீதமுள்ள குடும்பங்களுக்கும் விற்பனை பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
2.	இராணி அண்ணா நகர்	1734	1335	399	தவணைத் தொகை மற்றும் பராமரிப்பு கட்டணம் வசூலிக்க சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளன. மீதமுள்ள குடும்பங்களுக்கும் கிரையப் பத்திரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
3.	சிவலிங்கபுரம்	32	--	32	இத்திட்டப் பகுதியில் குடியிருப்புகள் 2021-ம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டன. தகுதியான பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

					வ ா ரி ய . வி தி க ளி ன் ப டி ஐந்து ஆண்டுகள் நி றை வ டை ந் த பின்னர் கிரையப் ப த் தி ர ம் வழங்கப்படும்
	மொத்தம்	2254	1781	473	

23—

விற்பனை பத்திரம் வழங்குதல்

வினா எண் 21273—திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விருகம்பாக்கம் தொகுதி, சாலிகிராமம், புதுவிஜயரகபுரம் திட்டப் பகுதியில் உள்ள வீட்டுமனைகளுக்கு விற்பனை பத்திரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

விருகம்பாக்கம் தொகுதி, சாலிகிராமம் திட்டப் பகுதியில் உள்ள மொத்த மனைகள் 297, அவற்றில் 224 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டப் பகுதியில் பிளாக் எண் 4, சர்வே எண்-1 இல் உள்ள ஒரு பகுதி நிலம் அரசாணை (நிலை) எண் 724, வருவாய் நி.மு.(5(2)), துறை, நாள் 12-11-2021 இல் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதுவரை இரண்டு ஒதுக்கீடுதாரர்களுக்கு மட்டும் விற்பனை பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. நில மாற்றம் செய்யப்பட்ட பகுதியில் உள்ள மீதமுள்ள மனைகளில் விலைக்கு வாங்கிய நபர்களை தவிர்த்து, இதர ஒதுக்கீடுதாரர்கள் அல்லது வாரிசுதாரர்கள் மனைக்கான முழுக் கிரயத் தொகைகளை செலுத்தி ஒதுக்கீடுதாரர்கள் அல்லது வாரிசுதாரர்கள் மனு செய்தால் வாரிய விதிமுறைகளின்படி விரைவில் விற்பனை பத்திரங்கள் வழங்கப்படும்.

2022 அக்டோபர் 18]

24—

சிலை நிறுவுதல்

வினா எண் 4418—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சென்னையில் மாமன்னன் இராசாராசனுக்கு சிலை நிறுவ அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

மாமன்னன் இராசராசசோழனுக்கு தமிழ்நாடு அரசால் தஞ்சாவூர் மாவட்டத்தில் மணிமண்டபம் அமைக்கப்பட்டு, பொதுப் பணித் துறையால் பராமரிக்கப்பட்டு வரும் நிலையில் அவருக்கு சென்னையில் சிலை நிறுவக் கோரும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

25—

மணிமண்டபம் கட்டுதல்

வினா எண் 10304—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் அவர்களுக்கு மணிமண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் அவர்களுக்கு தமிழ்நாடு அரசால் சென்னையில் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டுள்ள நிலையில், அன்னாருக்கு மணிமண்டபம் கட்டக் கோரும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2022 அக்டோபர் 18

26—

மணிமண்டபம் கட்டுதல்

வினா எண் 10305—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சொல் ஆராய்ச்சி வல்லுநர் தேவநேயப் பாவாணர் அவர்களுக்கு மணிமண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

சொல் ஆராய்ச்சி வல்லுநர் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களுக்கு தமிழ்நாடு அரசால் மதுரை சாத்தமங்கலத்தில் நூலகத்துடன்கூடிய மணிமண்டபம் அமைக்கப்பட்டு, செய்தி மக்கள் தொடர்புத் துறையால் சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

27—

மணிமண்டபம் கட்டுதல்

வினா எண் 10306—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை மறைமலை அடிகளாருக்கு மணிமண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை மறைமலை அடிகளாருக்கு மணிமண்டபம் கட்டக் கோரும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2022 அக்டோபர் 18]

28—

முழு உருவச் சிலை அமைத்தல்

வினா எண் 10132—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்தணி தொகுதி, திருத்தணி ஒன்றியம், முன்னாள் குடியரசுத் தலைவர் சர்வபள்ளி டாக்டர் இராதாகிருஷ்ணன் முழு உருவச் சிலையை வெங்கடாபுரம் கிராமத்தில் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

திருத்தணி தொகுதி, திருத்தணி ஒன்றியம், வெங்கடாபுரம் ஒன்றியத்தில் முன்னாள் குடியரசுத் தலைவர் சர்வபள்ளி டாக்டர் இராதாகிருஷ்ணன் முழு உருவச் சிலையை அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

29—

நினைவுச் சின்னம் அமைத்தல்

வினா எண் 14501—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சென்னையில் கரிகால பெருவளத்தானுக்கு நினைவுச் சின்னம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

கரிகால பெருவளத்தானுக்கு தமிழ்நாடு அரசால் தஞ்சாவூர் மாவட்டத்தில் மணிமண்டபம் அமைக்கப்பட்டு, பொதுப் பணித் துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது. சென்னையில் கரிகால பெருவளத்தானுக்கு நினைவுச் சின்னம் அமைத்திடக் கருதும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

30—

சிலை அமைத்தல்

வினா எண் 14502—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தலைநகரில் சுதந்திரப் போராட்ட வீரர் வ.உ. சிதம்பரம் பிள்ளைக்கு சிலை அமைத்து, 150-வது பிறந்த நாளில் அவரின் நினைவைப் போற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்களுடைய 150-வது பிறந்த நாள் விழாவினையொட்டி சென்னை, காந்தி மண்டபத்தில் உள்ள கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்கள் சிறையில் இழுத்த செக்கு வைக்கப்பட்டுள்ள திறந்தவெளி மண்டபமானது பொலிவூட்டப்பட்டு, அவ்விடத்தில் அன்னாரது மார்பளவுச் சிலை திறந்து வைக்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டு, தற்போது நிதியொப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

31—

சிலை வைத்தல்

வினா எண் 15237—திரு. வே. சம்பத்குமார்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரூரில் தியாகி S.S. கோவிந்தசாமி செட்டியார் அவர்களுக்கு சிலை வைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

அரூரில் தியாகி S.S. கோவிந்தசாமி செட்டியார் அவர்களுக்கு சிலை வைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2022 அக்டோபர் 18]

32—

மனோரமா திரைப்படக் கல்லூரி உருவாக்குதல்

வினா எண் 15606—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நடிகை மனோரமா அவர்களது பெயரில் திரைப்படக் கல்லூரி உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

செய்தி மக்கள் தொடர்புத் துறையின்கீழ் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கும் நிலையில், தற்போது நடிகை மனோரமா அவர்களது பெயரில் திரைப்படக் கல்லூரி உருவாக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

33—

உதவித் தொகை வழங்குதல்

வினா எண் 21973—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் பத்திரிகையில் பணிபுரியும்போது இறக்கும் பத்திரிகையாளர்களின் குடும்பத்திற்கு உதவித் தொகையாக ரூபாய் 5 இலட்சம் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

2021-2022 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடரில், செய்தி மற்றும் விளம்பரம் தொடர்பான மானியக் கோரிக்கையின் மீதான அறிவிப்புகளில் "பத்திரிகைத் துறையில் பணியாற்றும் ஆசிரியர், உதவி ஆசிரியர், நிருபர், புகைப்படக்காரர்

மற்றும் பிழைதிருத்துவோர் பணிக்காலத்தில் இயற்கை எய்திட நேரிட்டால், அவர்களது குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தற்பொழுது குடும்ப உதவி நிதியாக அவர்கள் பணிபுரிந்த காலத்திற்கேற்ப ரூபாய் மூன்று இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகிறது. இந்தக் குடும்ப உதவி நிதி மூன்று இலட்சத்திலிருந்து ரூபாய் ஐந்து இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்" என்ற மாண்புமிகு செய்தித் துறை அமைச்சரின் அறிவிப்பிற்கிணங்க, அரசாணை (நிலை) எண் 116, தமிழ் வளர்ச்சி (ம) செய்தித் துறை நாள் 10-11-2021 மூலம் ஆணை வெளியிடப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

34—

உதவித் தொகை உயர்த்துதல்

வினா எண் 21924—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்தி மற்றும் விளம்பரத் துறையில் பணிபுரியும் செய்தியாளர்களுக்கு உதவித் தொகையை உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செய்தி மற்றும் விளம்பரத் துறையில் பணிபுரியும் செய்தியாளர்களுக்கு உதவித்தொகையை உயர்த்தி வழங்குவது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

35—

சமையல் கூடம் கட்டுதல்

வினா எண் 15574—திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 அக்டோபர் 18]

(அ) *மதுராந்தகம் தொகுதி, அச்சிறுபாக்கம் ஊராட்சி ஒன்றியம், மதூர் ஊராட்சியில் உள்ள பள்ளியில் சமையல் கூடம் கட்ட அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *செங்கல்பட்டு மாவட்டம், அச்சிறுபாக்கம் ஊராட்சி ஒன்றியம், மதூர் ஊராட்சியில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் உள்ள சத்துணவு மையத்தில்* 78 *பயனாளிகள் பயனடைந்து வருகிறார்கள். இச்சத்துணவு மைய சமையல் கூடம்* 2008-2009 *ஆம் ஆண்டில் கட்டப்பட்டு தற்போது வரை பயன்பாட்டில் உள்ளது. மேலும், இச்சத்துணவு மைய சமையல் கூடத்தை* 12-4-2022 *அன்று அலுவலர்கள் ஆய்வு செய்ததில் இக்கட்டடம் சிறிய அளவில் பழுது பார்க்க வேண்டியுள்ளது எனக் கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து இக்கட்டடத்தில் பழுது பார்க்கும் பணிகளை உடனடியாக* 2022-2023 *ஆம் ஆண்டின் ஒன்றிய பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பள்ளியின் சத்துணவு மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.*

36—

உதவித் தொகையை உயர்த்துதல்

வினா எண் 18638—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை ரூ.*1,000/- *ஆக உயர்த்தி வழங்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 41, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந6(1)) துறை, நாள் 17-5-2011-ல் சமூக நலத் துறையால் செயல்படுத்தப்படும் ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுவரும் மாத ஓய்வூதியம் ரூ.500/-ஐ ரூ.1,000/- ஆக உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடப்பட்டு மே, 2011 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு மாற்றுத் திறனாளிகளுக்கு ஒவ்வொரு மாதமும் ரூ.1,000/- வழங்கப்பட்டு வருகிறது.

37—

கால்நடைப் பண்ணையைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 5358—டாக்டர் வை. முத்துராஜா: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை மாவட்ட கால்நடைப் பண்ணையை விரிவுபடுத்தி, தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்ட கால்நடைப் பண்ணையில் 270 கலப்பின ஜெர்சி பசுக்கள், 12 கலப்பின ஹெச்.எப். பசுக்கள், 172 இராமநாதபுர வெள்ளை இன செம்மறியாடுகள், 29 ஜமுனாபாரி இன வெள்ளாடுகள், 113 பன்றியினங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பண்ணையின்மூலம் விவசாயிகளுக்கு அவர்களின் கால்நடைகளைத் தரம் உயர்த்திட இனவிருத்திக்காக அரசு நிர்ணய விலையில் கால்நடைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2022 அக்டோபர் 18]

இப்பண்ணையினை மேலும் விரிவுபடுத்தி, பொதுமக்கள் பயன்பெறும் வகையில் வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, அக்குழு அளித்த கருத்துருவின் அடிப்படையில் பண்ணையினை மேம்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

38—

மீனவ கூட்டுறவுச் சங்க தொகுப்பு வீடுகள் அமைத்தல்

வினா எண் 7996—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், அவுரிவாக்கம் ஊராட்சி, மீனவ மக்களுக்கு மீனவ கூட்டுறவுச் சங்க தொகுப்பு வீடு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தாலுகா, மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை உதவி இயக்குநர் அலுவலகக் கட்டுப்பாட்டின்கீழ் அவுரிவாக்கம் ஊராட்சியில் அவுரிவாக்கம் கிழக்கு மீனவர் மற்றும் மீனவ மகளிர், அவுரிவாக்கம் மேற்கு மீனவர் மற்றும் மீனவ மகளிர், அவுரிவாக்கம் ஆதி திராவிடர் மீனவர் கூட்டுறவுச் சங்கம் என மொத்தம் ஐந்து மீனவ கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. இக்கிராமத்தில் சுமார் 350 மீனவ குடும்பங்கள் வசித்து வருகின்றனர் இதில் 424 மீனவ/மீனவ மகளிர், கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். திருவள்ளூர் மாவட்டத்தில், மீன்வளம் மற்றும் மீனவ நலத் துறையின்மூலம் 2016-2017 ஆம் ஆண்டு முதல் மீனவர் வீட்டு வசதித் திட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத் துறையின் வாயிலாக மீனவ பயனாளிகளுக்கு வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டு வருகின்றன.

மீனவர் வீட்டு வசதித் திட்டத்தின் மூலமாக வீடுகள் கட்டி கொடுக்க வேண்டி அவுரிவாக்கம் ஊராட்சியில் வசிக்கும் மீனவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்படும்பட்சத்தில், அவ்விண்ணப்பங்களை பரிசீலனை செய்து தகுதியான பயனாளிகளுக்கு வீடுகள் கட்டித் தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

39—

உயர் மின்கோபுரம் அமைத்தல்

வினா எண் 7999—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், கோட்டைக்குப்பம் ஊராட்சி, கோட்டைக்குப்பம் கிராம படகு நிறுத்தும் தளத்தில் உயர் மின்கோபுரம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், கோட்டைக்குப்பம் ஊராட்சி, கோட்டைக்குப்பம் கிராம படகு நிறுத்தும் தளத்தில் உயர்மின் கோபுரம் அமைக்க ஆவன செய்யப்படும். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் வழியாக திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், கோட்டைக்குப்பம் ஊராட்சி, கோட்டைக்குப்பம் கிராமத்தில் தேவையான அளவிற்கு மின் விளக்குகள் பொருத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், கூடுதலாக மின்விளக்குகள் வேண்டி மனுக்கள் பெறப்படின், கள ஆய்வு மேற்கொண்டு, உயர் மின்கோபுரம் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2022 அக்டோபர் 18]

40—

மீன்வலை பாதுகாப்பு கட்டடம் கட்டுதல்

வினா எண் 8000—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், கோட்டைக்குப்பம் ஊராட்சி, ஜமீலாபாத் கிராமத்தில் மீன்வலை பாதுகாப்பு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், கோட்டைக்குப்பம் ஊராட்சி, ஜமீலாபாத் கிராமத்தில் மீன்வலை பாதுகாப்பு கட்டடம் கட்ட தேவையான இட வசதிகள் இருக்கும்பட்சத்தில், அக்கிராமத்தில் மீன்வலை பாதுகாப்பு கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

41—

மீன்பிடித் தடைக்கால நிவாரணம் வழங்குதல்

வினா எண் 8001—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பொன்னேரி தொகுதி, பொன்னேரி வட்டம், கோட்டைக்குப்பம் ஊராட்சியில் அடங்கிய ஜமீலாபாத் கிராமத்தில் மெய்த்தன்மை சான்று பெற்ற மீனவர்களை மீனவ சேமிப்பு நல நிவாரண திட்டத்தில் சேர்க்கவும், மீன்பிடித் தடைக்காலம் மற்றும் மீன்பிடிக் குறைகாலம் நிவாரணம் வழங்கிடாத நபர்களுக்கு நிவாரணம் வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

[*2022 அக்டோபர் 18*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் வாழும் மீனவர்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்திட பல்வேறு நலத் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. மீனவர்களின் நலனுக்காக செயல்படுத்தப்படும் கீழ்க்கண்ட நிவாரணத் திட்டங்களில் திருவள்ளூர் மாவட்டத்தில் பயனடைந்த பயனாளிகள் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:

1) *தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்*-19,501 *மீனவர்கள்.*

2) *தமிழ்நாடு கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்*-16,876 *மீனவ மகளிர்.*

3) *மீன்பிடித் தடைக்காலத்தில் மீனவக் குடும்பங்களுக்கு தடைக்கால நிவாரண வழங்கும் திட்டம்*-12,517 *குடும்பங்கள்.*

4) *மீன்பிடிக் குறைவு காலத்தில் மீனவக் குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரணத் தொகை வழங்கும் திட்டம்*-13,194 *குடும்பங்கள்.*

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், கோட்டைக்குப்பம் ஊராட்சிக்குட்பட்ட ஜமீலாபாத் மீனவ கிராமத்தில் 980 *ஆண்கள்,* 1,120 *பெண்கள் கொண்ட* 390 *மீனவக் குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்களில் கடந்த* 2021-2022 *ஆம் ஆண்டிற்கான சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தில்* 402 *மீனவர்கள்,* 360 *மீனவ மகளிரும், மீன்பிடித் தடைக்காலம் மற்றும் மீன்பிடிக் குறைவுகால நிவாரணத் திட்டத்தில்* 300 *மீனவ குடும்பங்களும் பயனடைந்துள்ளன.*

ஜமீலாபாத் மீனவ கிராமத்தைச் சேர்ந்த 21 *மீனவர்கள் மற்றும்* 30 *மீனவ மகளிர் புதிய பயனாளிகளாக* 2019-2020 *ஆம் ஆண்டில் மேற்படி திட்டங்களில் சேர்ந்து பயனடைந்துள்ளனர்.* 2020-21 *ஆம் ஆண்டில் இம்மீனவ கிராமத்தில் புதிய பயனாளிகளுக்கான விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படாததால் மேற்படி நிவாரணத் திட்டத்தில் புதிய மீனவர்கள் எவரும் பயன்பெறவில்லை.*

2022 அக்டோபர் 18]

மேலும், 2022-23 ஆம் ஆண்டிற்கான சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தில் ஜமீலாபாத் மீனவ கிராமத்தைச் சேர்ந்த 55 மீனவர்கள் மற்றும் 75 மீனவ மகளிர் புதியதாக விண்ணப்பித்துள்ளனர். புதிதாக விண்ணப்பித்த பயனாளிகள் குறித்து உரிய ஆய்வுகள் மேற்கொண்டு, அதனடிப்படையில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரிடமிருந்து மெய்த்தன்மை சான்று பெற்று தகுதியான புதிய பயனாளிகளை 2022-2023 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் நிவாரணத் திட்டத்தில் சேர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

42—

நுழைவாயில் மற்றும் உயர் கோபுர மின் விளக்குகள் அமைத்தல்

வினா எண் 8012—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், பழவேற்காடு மீன்பிடி இறங்குதளத்தில் நுழைவாயில் மற்றும் உயர் கோபுர மின் விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், பழவேற்காடு மீன்பிடி இறங்குதளத்தில் தேவையான அளவிற்கு மின் விளக்குகள் அமையப் பெற்றுள்ளன. கூடுதலாக மின் விளக்குகள் தேவைப்படும்பட்சத்தில், மனுக்கள் பெறப்படின், உயர் கோபுர மின் விளக்குகள் மற்றும் மீன்பிடி இறங்குதளத்தில் நுழைவு வாயில் பணிகளுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, பணிகள் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2022 அக்டோபர் 18

43—

கால்நடை ஆய்வகம் அமைத்தல்

வினா எண் 9854—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரியில் கால்நடைப் பராமரிப்புத் துறைமூலம் விலங்குகளுக்கு பரவும் நோய்கள் கண்டறியும் ஆய்வகம் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரியில் கால்நடை பராமரிப்புத் துறைமூலம் கால்நடைகளுக்கு பரவும் நோய்களைக் கண்டறியும் பொருட்டு, அரசாணை எண் 49, கால்நடை பராமரிப்பு, பால்வளம் (ம) மீன்வளத் (காப7) துறை, நாள் 5-3-2020 இன் வழி 30-3-2020 அன்று முதல் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு தொடங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

44—

உள்நாட்டு மாட்டினங்களைப் பாதுகாத்தல்

வினா எண் 10441—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உள்நாட்டு மாட்டினங்களைப் பாதுகாக்கவும், அவற்றின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உள்நாட்டு மாட்டினங்களான காங்கேயம், புலிக்குளம், பர்கூர், சிவப்பு சிந்தி மற்றும் உம்பளாச்சேரி ஆகிய இனங்களை பாதுகாக்கவும் அவற்றின் இனவிருத்தியை பெருக்கிடவும் நல்ல தரமான கால்நடைகள் தேர்தெடுக்கப்பட்டு ஓசூர், மாவட்ட கால்நடைப் பண்ணையிலும், ஈச்சங்கோட்டை, உயிரின கால்நடை பெருக்குப் பண்ணையிலும் பராமரிக்கப்பட்டு, அவற்றின்மூலம் உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டு அவ்வின வாழ்விடங்களில் செயற்கைமுறை கருவூட்டல் பணிக்கென பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் கருமாற்று தொழில்நுட்பத்தின்மூலம் உயர் மரபணு கொண்ட உள்நாட்டு மாட்டினங்களான காங்கேயம், புலிக்குளம், பர்கூர், சிவப்பு சிந்தி மற்றும் உம்பளாச்சேரி காளைக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

45—

காங்கேயம் காளைகளைப் பாதுகாத்தல்

வினா எண் 12130—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காங்கேயம் காளைகளைப் பாதுகாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாட்டு மாட்டினமான காங்கேயம் இன கால்நடைகள் அழிந்து வருவதை தடுக்கவும், இன விருத்தியை மேம்படுத்தவும், காங்கேயம் இனத்தில் உள்ள நல்ல தரமான

பொலிகாளைகளைத் தேர்வு செய்து, அவற்றை ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் பராமரித்து, அக்காளைகளின்மூலம் உற்பத்தி செய்யப்படும் உறைவிந்து குச்சிகள் செயற்கை முறை கருவூட்டல் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 2020-2021 ஆம் ஆண்டில் 1.91 இலட்சம் எண்ணிக்கை காங்கேயம் உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் கருமாற்று தொழில்நுட்பம்மூலம் உயர் மரபணு கொண்ட காங்கேயம் பொலிகாளைகள் உற்பத்தி செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

46—

மீனவர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல்

வினா எண் 14507—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழக கடற்கரையோரங்களில் மீனவர்களுக்குத் தரமான, பாதுகாப்பான குடியிருப்புகளைக் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு மற்றும் கடல் மீனவர்/மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களை சார்ந்த மீனவர்களுக்கு மீனவர் வீட்டு வசதித் திட்டத்தின் வாயிலாக வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், மீனவர் வீட்டு வசதித் திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு தகுதியான மீனவ பயனாளிகளுக்கு வீடுகள் கட்டித்தர அரசின் விதிமுறைகளைப் பின்பற்றி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2022 அக்டோபர் 18]

47—

மீனவர்கள் வாழ்க்கைத்தரம் உயர வழிகாட்டுதல் வழங்குதல்

வினா எண் 14512—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்கவும், ஏற்றுமதி தரம் வாய்ந்த சூரை மீனை பிடித்து மீனவர்கள் வாழ்வாதாரம் உயரவும் அரசு உரிய வழிகாட்டுதல் வழங்க முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்கவும், நிலைத்த மீன்வளத்திற்காக கடலோர மீன்வள ஆதாரங்களைப் பாதுகாக்கும் பொருட்டும், இதுவரை பிடிக்கப்படாத/குறைவாக பிடிக்கப்பட்ட சூரைமீன் போன்ற கடல் மீன் ஆதாரங்களை மீனவர்கள் அறுவடை செய்து மீனவர்களின் வாழ்வாதாரம் உயர அரசு கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்தி வருகிறது:

1. **மாநில அரசு திட்டம்**

புதிய சூரை மீன்பிடி தூண்டில் மற்றும் செவுள்வலை விசை படகுகள் வாங்கிட 50 விழுக்காடு மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் படகு கட்டுவதற்கான உத்தேச மதிப்பான ரூ.60 இலட்சத்தில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 104 விண்ணப்பதாரர்களுக்கு புதிய சூரை மீன்பிடி படகு கட்டுவதற்கு பணி ஆணைகள் வழங்கப்பட்டு, இதுவரை ரூ.28.51 கோடி மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது. தற்போது வரை 99 படகுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 5 படகுகளின் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

2. மத்திய, மாநில அரசு திட்டங்கள்

(அ) நீலப் புரட்சி திட்டம்

பாக் வளைகுடா பகுதி இழுவலை படகுகளுக்கு மாற்றாக ஆழ்கடல் சூரை மீன்பிடி படகுகள் கட்டுவதற்கு, அதன் விலையில் 70 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது. ஒரு படகின் விலையான ரூ.80 இலட்சத்தில் 50 விழுக்காடு மத்திய அரசின் மானியமாகவும், 20 விழுக்காடு தமிழ்நாடு அரசின் மானியமாகவும், 10 விழுக்காடு பயனாளியின் பங்காகவும், மீதமுள்ள 20 விழுக்காடு தொகை வங்கிக் கடனாகவும் வழங்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் 696 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 103 பயனாளிகளுக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. 79 படகுகள் கட்டுமானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, 46 படகுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 33 படகுகளின் கட்டுமானம் பல்வேறு நிலைகளில் உள்ளன. இதுவரை ரூ.32.24 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) பிரதம மந்திரியின் மீன் வள மேம்பாட்டுத் திட்டம் (PMMSY)

2021-2022 ஆம் ஆண்டில் பிரதம மந்திரியின் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் (PMMSY)கீழ் படகு ஒன்றின் விலையான ரூ.1.20 கோடியில் 50 ஆழ்கடல் மீன்பிடி படகுகள் கட்ட மானியம் வழங்கிட மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மேற்காணும் அலகு விலையில் 40 விழுக்காடு அதாவது ரூ.48 இலட்சம் அரசு மானியமாக வழங்கப்படும். (மத்திய அரசு மானியம் ரூ.28,80,000/-, மாநில அரசு மானியம் ரூ.19,20,000/-) பயனாளிகளைத் தேர்வு செய்த உடன் பணி ஆணை வழங்கப்படும்.

48—

கோமாரி நோய் தடுக்க முன்கூட்டியே தடுப்பு ஊசி போடுதல்

வினா எண் 15612—திரு. இரா. அருள்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2022 அக்டோபர் 18]

கால்நடைகளுக்கு வரும் கோமாரி நோயை தடுக்க முன்கூட்டியே தடுப்பு ஊசி போட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கால்நடை பராமரிப்புத் துறையில், 2011 ஆம் ஆண்டு முதல் கோமாரி நோய் தடுப்பூசி திட்டத்தின்மூலம் ஆண்டிற்கு இருமுறை ஆறு மாத கால இடைவெளியில் இம்மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலுள்ள தகுதியுள்ள பசுவினம் மற்றும் எருமையினங்களுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி தொய்வில்லாமல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 2019 ஆம் ஆண்டு வரையில் கோமாரி நோய் தடுப்பு திட்டத்தின் (FMDCP)கீழ் 17 சுற்றுகள் கோமாரி நோய் தடுப்பூசி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. செப்டம்பர் 2020-ல் தேசிய கால்நடை நோய் தடுப்பு திட்டத்தின் (NADCP)கீழ் முதலாவது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாமில் மாநிலத்தில் மொத்தம் 87.03 இலட்சம் தகுதியுள்ள பசுவினம் மற்றும் எருமை இனங்களுக்கு தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ளப்பட்டது. தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் 2-வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணியில் இம்மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் இந்நாள் வரை 86.33 இலட்சம் தகுதியுள்ள பசுவினம் மற்றும் எருமை இனங்களுக்கு தடுப்பூசி போடப்பட்டு எதிர்வரும் 30-6-2022-க்குள் தடுப்பூசி செலுத்தும் பணி முடிவு பெறும்.

49—

குறைந்த வாடகையில் டிராக்டர்கள் வழங்குதல்

வினா எண் 17865—திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெரியதாழை மீனவர்களுக்கு படகுகளை மீட்கத் தேவையான டிராக்டர்களை குறைந்த வாடகையில் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் தொகுதிக்குட்பட்ட பெரியதாழை கிராமத்தைச் சேர்ந்த மீனவர்கள் 4 டிராக்டர்களை குறைந்த வாடகைக்கு அமர்த்தி நாட்டுப் படகுகளை கடலிலிருந்து கரைக்கு இழுத்து வரும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், பெரியதாழை கிராமத்தைச் சேர்ந்த மீனவர்களிடமிருந்து வாடகைக்கு டிராக்டர்கள் வழங்கக் கோரி கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை. எனவே, ஸ்ரீவைகுண்டம் தொகுதி, பெரியதாழை மீனவர்களுக்கு படகுகளை மீட்க தேவையான டிராக்டர்களை குறைந்த வாடகையில் வழங்கிடும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

50—

மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை முறைப்படுத்துதல்

வினா எண் 30963—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் ஒரு சமுதாயம் ஒரு மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பாகவும், மற்றொரு மாவட்டத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பாகவும் உள்ளதை முறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் ஒரு மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக வகைப்படுத்தப்பட்ட வகுப்பினர், மற்றொரு மாவட்டத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக வகைப்படுத்தப்படவில்லை. மிகப் பிற்படுத்தப்பட்ட

2022 அக்டோபர் 18]

வகுப்பினர் மற்றும் சீர்மரபின வகுப்பினருக்கும் சேர்த்து 20 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. சீர்மரபின வகுப்பினர் ஒரு சில மாவட்டங்களில் சீர்மரபினர் வகுப்பினராகவும், மற்ற மாவட்டங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளனர். இச்சூழ்நிலையில் முறைப்படுத்தப்படவேண்டிய அவசியம் எழவில்லை.

51—

குடும்ப அட்டைகள் வழங்குதல்

வினா எண் 14330—முனைவர் த. இனிகோ இருதயராஜ்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குடும்ப அட்டைகள் பெறுவதற்கு தற்போது இ-சேவை மையங்கள் சென்று பதிவு செய்ய வேண்டும் என்ற நிலை உள்ளது. படிப்பறிவற்ற பாமர மக்கள் அதன் வழிமுறைகள், ஓ.டி.பி. பெறுவது போன்ற நடைமுறைகளால் பெரும் அவதிக்கு உள்ளாகின்றனர். மின்னணு சேவைகளைப் பெற அவர்களுக்குத் தகுந்த வழிகாட்டுதலும் தேவைப்படுகிறது. எனவே, சம்பந்தப்பட்ட துறை சார்பாக வார்டு வாரியாக முகாம்கள் நடத்தி குடும்ப அட்டைகள் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டமானது, கணினிமயமாக்கப்பட்டு, 1-4-2017 முதல் பழைய காகிதக் குடும்ப அட்டைக்குப் பதிலாக ஆதார் எண் பதிவு மற்றும் கைபேசி எண் அடிப்படையில் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. புதிய மின்னணு குடும்ப அட்டை விண்ணப்பம் மற்றும் குடும்ப அட்டை தொடர்பான இதர சேவைகளை பெற இத்துறையின் www.tnpds.gov.in *என்ற இணையதளம் வாயிலாக அரசு இ-சேவை மையம் மற்றும் தனியார் கணினி மையங்களில் அரசு நிர்ணயித்த தொகையினைச் செலுத்தி உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பொருளாதாரத்தில் விளிம்பு*

TRUTH ALONE TRIUMPHS

நிலையில் உள்ள மக்களைக் கண்டறிந்து வட்ட வழங்கல் அலுவலகம்/உதவி ஆணையாளர் அலுவலகம் வாயிலாக துரிதமாக குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனிக்கிழமைகளில் அனைத்து வட்ட வழங்கல் அலுவலகங்கள்/உதவி ஆணையாளர் அலுவலகங்களிலும் சிறப்பு முகாம் நடத்தப்பட்டு, குடும்ப அட்டை மற்றும் இதர கோரிக்கை விண்ணப்பங்கள் பெறப்பட்டு தீர்வு செய்யப்பட்டு வருகின்றன.

52—

குடும்ப அட்டைகள் வழங்குதல்

வினா எண் 17783—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் பதிவு செய்து பல மாதங்களுக்கு மேலாக காத்திருக்கும் அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும், உடனே குடும்ப அட்டைகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டத்தில் மின்னணு குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு கள விசாரணையின் அடிப்படையில் விண்ணப்பங்களை சரிபார்க்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டு, குடும்ப அட்டை விண்ணப்பங்கள் உரிய காலத்தில் உடனுக்குடன் தீர்வு செய்யப்பட்டு, 1-5-2021 முதல் 31-5-2022 வரை 4,836 குடும்ப அட்டைகள் அச்சிடப்பட்டு, குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், புதிய குடும்ப அட்டை விண்ணப்பங்கள் உடனடியாக தீர்வு செய்யப்பட்டு அச்சிட்டு, காலதாமதமின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

2022 அக்டோபர் 18]

53—

குடும்ப அட்டைக்கு பல்புகள் வழங்குதல்

வினா எண் 18237—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குடும்ப அட்டைக்கு மானிய விலையில் LED பல்புகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குடும்ப அட்டைக்கு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் உள்ள நியாய விலைக் கடைகளில் அரிசி, கோதுமை, சர்க்கரை, துவரம் பருப்பு, பாமாயில், மண்ணெண்ணெய் ஆகியவற்றுடன் கட்டுப்பாடற்ற பொருட்களாக அயோடின் கலந்த உப்பு, டீத்தூள் மற்றும் மளிகைப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், குடும்ப அட்டைதாரர்களுக்கு மானிய விலையில் LED பல்புகள் வழங்க தற்போது வழிவகை இல்லை.

54—

குடும்ப அட்டைகள் வழங்குதல்

வினா எண் 23182—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் புதியதாக குடும்ப அட்டை கேட்டு விண்ணப்பம் செய்துள்ளோருக்கு காலதாமதமின்றி குடும்ப அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மின்னணு குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு கள விசாரணையின் அடிப்படையில் விண்ணப்பங்களை சரிபார்க்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டு, குடும்ப அட்டை விண்ணப்பங்கள் உரிய காலத்தில் உடனுக்குடன் தீர்வு செய்யப்பட்டு, 7-5-2021 முதல் 30-6-2022 வரை 12,19,678 குடும்ப அட்டைகள் அச்சிடப்பட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

55—

கைத்தறித் தொழிலை மேம்படுத்துதல்

வினா எண் 7546—முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதி, தமிழக கைத்தறித் தொழிலை மேம்படுத்த ஜரிகை மானியத்தை 2%-லிருந்து 10% ஆக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர் தொகுதிக்குட்பட்ட திருபுவனம் பேருராட்சியில் செயல்பட்டுவரும் திருபுவனம் பட்டு மற்றும் திருபுவனம் சோழன் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் ஒன்றிய அரசின் மூலப்பொருள் விநியோகத் திட்டத்தின்கீழ் தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின்மூலம் கொள்முதல் செய்யப்படும் பட்டு நூல்களுக்கு நவம்பர் 2021 முதல் 15 விழுக்காடு நூல் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டத்தின்கீழ் ஜரிகைக்கு 17-1-2016 முதல் 2 விழுக்காடு டிப்போ மானியம் வழங்கப்பட்டு வருகிறது. நூலிற்கு

2022 அக்டோபர் 18]

15 விழுக்காடு மானியம் வழங்குவதால், பாவு, பட்டு கொள்முதல் செய்வதன் விலை குறைகிறது. மேற்கண்டவாறு கொள்முதல் செய்யும் மூலப்பொருட்களின் விலையில் 15 விழுக்காடு மானியம் போக, சங்கங்கள் செலுத்தும் நிகர விலையின் அடிப்படையில் விலைப் பட்டியல் தயார் செய்யப்படுகிறது. இதன் காரணமாக சங்கத்திற்கு நேரடி இலாபம் இல்லாவிட்டாலும், நுகர்வோருக்கு குறைந்த விலையில் சேலைகளை விற்பனை செய்ய முடிகிறது. இதனால், சங்கத்தின் விற்பனை அதிகரிப்பதால், நிகர இலாபம் கணிசமாக அதிகரிக்கும். 2 விழுக்காட்டுக்கு உட்பட்டு டிப்போ மானியம், 25-10-2021 முதல் 2 விழுக்காடு அல்லது ரூ.15,000/- (மாதம் ஒன்றுக்கு) இதில் எது குறைவோ, அது வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி மானியத் தொகை டிப்போவின் நிருவாகச் செலவினங்களுக்கு உதவிகரமாக உள்ளது. மேலும் "உள்ளபடி" வழங்கப்படும் போக்குவரத்து மானியம் மூலப்பொருட்களை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்ல ஆகும் செலவினத்திற்காக சங்கங்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

56—

கூட்டுறவு நூற்பாலைகளை மீண்டும் செயல்படுத்துதல்

வினா எண் 9860—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் செயல்படாமல் உள்ள கூட்டுறவு நூற்பாலைகளை மீண்டும் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் 18 கூட்டுறவு நூற்பாலைகள் 1958 முதல் 1985 வரையிலான காலகட்டத்தில் 4.70 இலட்சம் கதிர்களுடன் அரசு திட்டங்களுக்காக நூல் விநியோகம், கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல் மற்றும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நூல் தேவையினை

நியாயமான விலையில் வழங்கும்பொருட்டு துவங்கப்பட்டது. பொருளாதார மந்தநிலை, சாதகமற்ற சந்தை நிலவரம், பஞ்சு விலை ஏற்றம், பழைய இயந்திரங்கள், உற்பத்தி குறைவு மற்றும் மூலதன பற்றாக்குறை போன்ற பல்வேறு காரணங்களினால் 13 கூட்டுறவு நூற்பாலைகள் முற்றிலுமாக செயலிழந்தன. இவற்றை மீளத் திறந்து இயக்க வாய்ப்புகள் அற்றுப்போன காரணத்தால் சட்டபூர்வ ஆய்வு மற்றும் அரசால் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் ஆலோசனையின்பேரில், செயலிழந்த 13 கூட்டுறவு நூற்பாலைகளில், இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை மறுசீரமைப்பு மற்றும் நவீனமயமாக்கப்பட்டு 12,096 கதிர்களுடன் 4-3-2015-ல் துவக்கப்பட்டது. மீதமுள்ள 12 கூட்டுறவு நூற்பாலைகள் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983 பிரிவு 137(2) (b)-ன்கீழ் தற்போது கலைக்கப்பட்டுவிட்டன. தற்போது, ஆறு கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கி வருகின்றன. தமிழ்நாட்டில் ஏற்கெனவே போதுமான எண்ணிக்கையில் தனியார் மற்றும் கூட்டுறவு நூற்பாலைகள் உள்ள காரணத்தால் செயல்படாமல் உள்ள கூட்டுறவு நூற்பாலைகளை மீண்டும் செயல்படுத்த வேண்டிய அவசியம் தற்சமயம் எழவில்லை.

57—

புதிய வழிகாட்டு நெறிமுறைகளை வழங்குதல்

வினா எண் 9965—திரு. இரா. அருள்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கைத்தறி நெசவாளர்கள் எதிர்கொள்ளும் தடைகளை நீக்கி, துணிநூல் சாயமிடுதல், சந்தைப்படுத்துதல் போன்றவற்றில் புதிய வழிகாட்டு நெறிமுறைகளை வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

கைத்தறி நெசவாளர்கள் எதிர்கொள்ளும் தடைகளை நீக்கி துணிநூல் சாயமிடுதல், சந்தைப்படுத்துதல் போன்றவற்றிற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2022 அக்டோபர் 18]

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் பூஜ்ஜிய நிலை திரவக் கழிவு வெளியேற்றம் (ZLD) நிபந்தனையினை பூர்த்தி செய்யும்விதமாக, திருப்பூர் பகுதியில் 18 புதிய சாயக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், குழும வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்துடன்கூடிய மாவட்ட அளவிலான சாயச் சாலை அமைப்பதற்கு ரூ.50 இலட்சம் நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் 7 சாயச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டத்தின்கீழ் மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்பு 40%, 9% என்கிற விகிதத்தில் மத்திய அரசு மானியமாக ரூ.40 கோடி வரையும், மாநில அரசின் மானியமாக ரூ.9 கோடி வரையும் தனியார் துணிநூல் பதனிடும் ஆலைகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

இதேபோன்று, ஒருங்கிணைந்த பதனிடுதல் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்பு 50%, 25% என்கிற விகிதத்தில் மத்திய அரசு மானியமாக ரூ.75 கோடி வரையும், மாநில அரசின் மானியமாக ரூ.37.5 கோடி வரை தனியார் துணிநூல் பதனிடும் ஆலைகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி, இரு திட்டங்களும் அரசு மற்றும் தனியார் கூட்டமைப்பு (Public Private Partnership) முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் துணி வகைகளை கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் நேரடி மற்றும் முகவர் கிளை விற்பனை நிலையங்கள், லூம்வோர்ல்டு விற்பனை நிலையங்கள் மற்றும் தமிழ்நாட்டின் முக்கிய இடங்களில் கண்காட்சி நடத்துதல் மற்றும் மின்னணு வர்த்தகம் ஆகிய வழிகளில் சந்தைப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், கைத்தறி இரகங்களை சந்தைப்படுத்துவதை ஊக்குவிக்கும் விதமாக அரசு தள்ளுபடி மானியத் திட்டம், விற்பனை ஊக்கத் தொகை திட்டம் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தேசிய அளவிலான கைத்தறி கண்காட்சிகள், சிறப்பு கைத்தறி கண்காட்சிகள் மற்றும் மாவட்ட அளவிலான கைத்தறி கண்காட்சிகளை நடத்துவதற்கு

[2022 அக்டோபர் 18

ஒன்றிய அரசால் முறையே ரூ.45 இலட்சம், ரூ.12 இலட்சம் மற்றும் ரூ.3.50 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்ட திட்டங்கள்மூலம் துணிநூல் சாயமிடுதல், சந்தைப்படுத்துதல் போன்ற செயல்களில் கைத்தறி நெசவாளர்கள் எதிர்கொள்ளும் தடைகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன.

58—

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை உயிர்ப்பித்தல்

வினா எண் 9966—திரு. இரா. அருள்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செயல்படாமல் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை உயிர்ப்பிக்கவும், கைத்தறி நெசவுத் தொழிலை வளர்த்தெடுக்கவும் புதிய செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

செயல்படாமல் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த உறுப்பினர்கள் மீண்டும் தொழில் செய்திட முன்வரும்பட்சத்தில் அவர்களின் உற்பத்தித் திறனை ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் அவர்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் உற்பத்தித் திட்டம் மற்றும் வேட்டி-சேலை வழங்கும் திட்டத்திற்கு உற்பத்தி இலக்கு நிர்ணயம் செய்து மீண்டும் தொழில் வழங்கப்பட்டுவருகிறது.

கைத்தறி நெசவுத் தொழிலை மேம்படுத்தவும், கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தினைப் பாதுகாக்கவும், கைத்தறி நெசவாளர்களுக்கு அவரவர் நெய்யும் இரகங்களுக்கேற்ப 1-1-2022 முதல் அடிப்படை கூலியில் 10 சதவீத உயர்வும், அகவிலைப் படியில் 10 சதவீதம் (145 சதவீதத்திலிருந்து 155 சதவீதமாக) உயர்வும் 1-1-2022 முதல் வழங்கப்பட்டுவருகிறது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான அனைத்து வகையான சிட்டா நூல் வகைகளும், நியாயமான விலையில் தட்டுப்பாடின்றி கிடைப்பதற்கு ஏதுவாக, துணிநூல்

2022 அக்டோபர் 18]

துறையால் ஒவ்வொரு திங்களிலும் நூல் விலை நிர்ணயக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டு, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் நூல் வகைகளுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டு, கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக மூலப்பொருட்கள் விநியோகத் திட்டத்தின்கீழ், 15 விழுக்காடு சிட்டா நூல் மானியம், 2.5 விழுக்காடு போக்குவரத்து மானியம் மற்றும் 1 விழுக்காடு கிடங்கு மானியம் ஆகிய மானியங்களுடன் நியாயமான விலையில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சிட்டா நூல் தொடர்ந்து வழங்கப்பட்டுவருகிறது.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி வழங்கும் விதமாக அரசு வட்டி மானியத் திட்டம், தள்ளுபடி மானியத் திட்டம் ஆகிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கைத்தறி ஆதரவுத் திட்டம் மூலமாக நடை முறை மூலதனக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான கைத்தறி உபகரணங்கள் கைத்தறி ஆதரவுத் திட்டம் மற்றும் குழும வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்கள் மூலமாக வழங்கப்பட்டுவருகின்றன.

செயல்படாமல் இருக்கும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த உறுப்பினர்கள் மீண்டும் தொழில் செய்திட முன்வரும்பட்சத்தில், அச்சங்கங்களை மீண்டும் இயக்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

59—

தீயணைப்பு நிலையத்திற்கு நிலம் வழங்குதல்

வினா எண் 21618—திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *மயிலாடுதுறை, மணல்மேடு கூட்டுறவு நூற்பாலைக்குச் சொந்தமான 2 ஏக்கர் நிலத்தை தீயணைப்பு நிலையத்திற்கு வழங்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை, மணல்மேடு கூட்டுறவு நூற்பாலைக்குச் சொந்தமான 39.95 ஏக்கர் நிலப்பரப்பில் 5.86 ஏக்கர் நிலம் அரசு உயர் கல்வித் துறைக்கு விற்பனை செய்யப்பட்டது போக, எஞ்சிய 34.09 ஏக்கர் நிலப்பரப்பு உள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், நாகப்பட்டினம் கிடங்கு அமைக்க ஏற்கெனவே இவ்விடத்தைக் கோரியுள்ளது. கலைக்கப்பட்ட கூட்டுறவு நூற்பாலைகளில் உள்ள காலி நிலங்களை அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கு சந்தை விலையில் விற்பனை செய்ய அரசால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில், கலைக்கப்பட்ட நாகப்பட்டினம் கூட்டுறவு நூற்பாலைக்குச் சொந்தமான நிலத்தை அரசுத் துறை நிறுவனங்கள் கோரும்பட்சத்தில், நிர்ணயம் செய்யப்படும் சந்தை விலைக்கு கொள்முதல் செய்துகொள்ள விருப்பப்படும் துறைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, விற்பனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

60—

108 அவசரகால ஊர்திகள்

வினா எண் 12399—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அவசரகால ஊர்திகள்-108 எண்ணிக்கையை 2,000 ஆக உயர்த்தி, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் தற்போது 108 அவசரகால ஊர்தி சேவையில் 1,353 ஊர்திகள் செயல்பாட்டில் உள்ளன. மேலும், இனிவரும் காலங்களில் மக்களின் தேவைக்கேற்ப ஊர்திகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

2022 அக்டோபர் 18]

61—

அவசரகால ஊர்தி

வினா எண் 15465—திரு. ஈ. ராஜா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரன்கோவில் தொகுதி அதிகமான கிராமங்களை உள்ளடக்கிய தொகுதியாகும். எனவே, அனைத்து கிராமங்களுக்கும் அவசரகால ஊர்தி கிடைத்திடவும், அவசரகால ஊர்திகளை கூடுதலாக வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டத்திலுள்ள சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையிலேயே ஒரு ஊர்தியும் (IFT) மற்றும் அதன் அருகாமையில் 2 கி.மீ. தொலைவில் தென்காசி யூனியன் அலுவலகம், 9 கி.மீ. தொலைவில் குருக்கல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம், 11 கி.மீ. தொலைவில் கரிவலம்வந்தநல்லூர் மற்றும் 21 கி.மீ. தொலைவில் திருவேங்கடத்தை மையமாகக் கொண்டும் அவசரகால ஊர்தி சேவை செயலாற்றி வருகிறது.

மேலும், இனிவரும் காலங்களில் தேவை அதிகரிக்கும்போதும் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கையை கூட்டும்போதும் இந்தக் கோரிக்கை முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும்.

62—

இலவச அவசர சிகிச்சை ஊர்தி

வினா எண் 18875—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், ஒட்டநத்தம் மேம்படுத்தப்பட்ட வட்டார அரசு மருத்துவமனையில் 108 Ambulance இலவச அவசர சிகிச்சை ஊர்தியை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டநத்தம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 108 அவசரகால ஊர்தி தற்போது செயல்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சியர் அவர்கள் 3-3-2022 அன்று 108 அவசரகால ஊர்தியை (வண்டி எண் TN 20 G 3499) கொடியசைத்துத் துவக்கி வைத்தார். 11-3-2022 முதல் ஒட்டநத்தம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 108 ஆம்புலன்ஸ் சேவையாற்றி வருகிறது.

63—

108 ஆம்புலன்ஸ் வசதி ஏற்படுத்துதல்

வினா எண் 21036—திரு. இரா. அருள்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஆத்தூர் பகுதியில் கூடுதலாக 108 ஆம்புலன்ஸ் வசதி ஏற்படுத்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஆத்தூரில் கீழ்க்கண்ட இடங்களில் 108 அவசரகால ஊர்திகள் நிலைநிறுத்தப்பட்டு இயக்கப்பட்டு வருகின்றன:-

2022 அக்டோபர் 18]

- *ஆத்தூர் காவல் நிலையம்*
- *ஆத்தூர் (IFT)*
- *ஆத்தூர் அரசு மருத்துவமனை*
- *ஆத்தூர் தொகுதியிலுள்ள காட்டுக்கோட்டை மற்றும் மல்லியக்கரை ஆரம்ப சுகாதார நிலையம் ஆகிய இடங்களிலிருந்தும் 108 அவசரகால ஊர்தி இயக்கப்பட்டு, சேவை வழங்கப்படுகிறது.*

64—

முதலமைச்சர் காப்பீட்டு திட்ட அட்டை

வினா எண் 21179—திரு. ஈ. ராஜா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரன்கோவில் தொகுதி, தென்காசி மாவட்டத்திலேயே முதலமைச்சர் காப்பீட்டு திட்ட அட்டை பெற வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முதலமைச்சர் காப்பீட்டுத் திட்ட அட்டை பெறுவதற்கு உறுப்பினர் சேர்க்கை மையம் துவங்கப்பட்டது.

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உறுப்பினர் சேர்க்கை மையம் 20-3-2020 அன்று துவங்கப்பட்டு, இதுவரை 8,418 பயனாளிகள் திட்டத்தில் பதிவு செய்து, அவர்களுக்கு காப்பீட்டு அட்டை வழங்கப்பட்டுள்ளது.

65—

108 அவசரகால ஊர்தி

வினா எண் 25789—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர், மேச்சேரி, குஞ்சாண்டியூர், கொளத்தூர் ஆகிய பகுதிகளுக்குத் தனியாக 108 அவசரகால வாகனம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர், மேச்சேரி, குஞ்சாண்டியூர், கொளத்தூர் ஆகிய பகுதிகளில் ஏற்கெனவே கீழ்க்காணும் இடங்களில் 108 அவசரகால ஊர்திகள் நிலைநிறுத்தப்பட்டு சேவையாற்றி வருகின்றன:-

1.	மேச்சேரி, ஆரம்ப சுகாதார நிலையம்	TN 20 G 3328
2.	மேட்டூர், அரசு மருத்துவமனை	TN 20 G 3560
3.	கொளத்தூர், ஆரம்ப சுகாதார நிலையம்	TN 20 G 2126
4.	குஞ்சாண்டியூர்	TN 20 G 1605

66—

சரக்கு மற்றும் சேவை வரி விலக்கு அளித்தல்

வினா எண் 12917—திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கைத்தறியினால் தயாரிக்கப்படும் பட்டு மற்றும் பருத்தி நூல்மூலம் தயாரிக்கப்படும் மூலப்பொருட்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரி (GST) முற்றிலுமாக விலக்கு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கைத்தறி மற்றும் பட்டுத் துணிகள் மீதான சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விகிதத்தில் மாற்றம் செய்வது குறித்து 45-வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, 1-1-2022 முதல் 5 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாக உயர்த்தி ஒன்றிய அரசு அறிவிக்கை எண் 14/2021-மத்திய வரி (வரி விகிதம்), நாள் 18-11-2021-ல் வெளியிடப்பட்டது. பின்னர், 46-வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, கைத்தறி மற்றும் பட்டுத் துணிகள் மீதான உயர்த்தப்பட்ட வரி விகிதம் திரும்பப் பெறப்பட்டு, ஒன்றிய அரசு அறிவிக்கை எண் 21/2021-மத்திய வரி (வரி விகிதம்), நாள் 31-12-2021-ன்படி மீண்டும் 5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது. மேலும், கைத்தறி மற்றும் பட்டுத் துணிகளின்மீது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விலக்களிப்பது குறித்து சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தில் விவாதிக்கப்பட்டு, அனைத்து மாநில அரசுகள் மற்றும் ஒன்றிய அரசின் ஒப்புதலின் பேரிலேயே முடிவுகள் மேற்கொள்ள இயலும் என்று தெரிவிக்கப்படுகிறது.

67—

கிரிவலப் பாதைக்கு தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 4457—திரு. இரா. அருள்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், வீரபாண்டி ஒன்றியம், கஞ்சமலையில் உள்ள கிரிவலப் பாதைக்கு தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் மேற்கு வட்டம், கஞ்சமலை அருள்மிகு சித்தேஸ்வர சுவாமி திருக்கோயில், சட்டப் பிரிவு

46 (iii)-ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயில் நிலை-2 செயல் அலுவலராலும், சேலம் மண்டல உதவி ஆணையரால் தக்கார் நிலையிலும் நிருவகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலிலுள்ள சன்னதிகள் மற்றும் நாழிக் கிணறுகளுக்குச் செல்ல சுமார் இரண்டு கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை உள்ளது. இத்திருக்கோயிலுக்கு அமாவாசை மற்றும் பௌர்ணமி நாட்களில் அதிக அளவிலான பக்தர்கள் வருகிறார்கள். பக்தர்களால் கிரிவலத்திற்குப் பயன்படுத்தப்படும் பாதையானது, மலைத்தொடரின் வெளிப் பகுதியில் அமைந்துள்ளதாலும், திருக்கோயில் அமைந்துள்ள இடம் மலைத்தொடரின் அடிவாரத்தில் வலம் வருவதற்கு ஏற்ற அமைப்பாக இல்லாததாலும், இப்பகுதி வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதாலும், இந்து சமய அறநிலையத் துறைமூலம் கிரிவலம் வரும் பாதையில் தார்ச் சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

68—

திருக்கோயிலை புனரமைத்து குடமுழுக்கு நடத்துதல்

வினா எண் 9949—திரு. இரா. அருள்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ஆழ்வார்குறிச்சி அருள்மிகு வன்னீஸ்வரர் திருக்கோயிலைப் புனரமைத்து குடமுழுக்கு நடத்தவும், கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை மீட்டு கோயில் நிர்வாகத்திற்கு பட்டா மாற்றம் செய்யவும், அங்குள்ள கற்சிலைகள், கலைப் பொக்கிஷங்களைக் காக்கவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

தென்காசி மாவட்டம் மற்றும் வட்டம், ஆழ்வார்குறிச்சி அருள்மிகு வன்னியப்பர் திருக்கோயிலைப் புனரமைத்து குடமுழுக்கு நடத்த சட்டமன்ற அறிவிப்பு 2021-2022-ன்படி ரூ.9.00

2022 அக்டோபர் 18]

கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ள அரசாணை நிலை எண் 18, நாள் 24-1-2022-ல் நிருவாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, திருப்பணிகள் முழுவதும் முடிவடைந்த பின்பு குடமுழுக்கு நடத்தப்படும். மேலும், கோயிலுக்குச் சொந்தமாக நன்செய் 96.37 சென்ட், புன்செய் 63.02 சென்ட், கட்டடம் 0.00, மனை 0.00 நிலங்கள் உள்ளன. மேற்கண்ட நன்செய் நிலங்களில், 2 குத்தகைதாரர்கள்மூலம் திருக்கோயிலுக்கு வருவாய் ஈட்டப்பட்டு, கேட்பு-வசூல் பதிவேடு பேணப்பட்டு வருகிறது. மேலும், புன்செய் நிலம் திருக்கோயில் பயன்பாட்டில் உள்ளது. மேற்கண்ட திருக்கோயில் நிலங்களின் பட்டா திருக்கோயில் பெயரில் உள்ளது. மேலும், அங்குள்ள கற்சிலைகளையும், கலைப் பொக்கிஷங்களையும் காக்க தொல்லியல் துறையில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. திருப்பணி வேலைகள் முடிவுற்ற பின்பு சி.சி.டி.வி. கேமரா பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

69—

இராஜகோபுரம் கட்டுதல்

வினா எண் 10124—திரு. வே. சம்பத்குமார்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தீர்த்தமலை அருள்மிகு தீர்த்தகிரீஸ்வரர் கோயிலுக்கு இராஜகோபுரம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், தீர்த்தமலை அருள்மிகு தீர்த்தகிரீஸ்வரர் திருக்கோயில் சட்டப் பிரிவு 46(iii)-ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயில் நிலை-3 செயல் அலுவலராலும், தருமபுரி மண்டல உதவி

[2022 அக்டோபர் 18

ஆணையரால் தக்கார் நிலையிலும் நிருவகிக்கப்பட்டு வருகிறது. மாநில அளவிலான வல்லுநர் குழுவின் கருத்துருவின்படி, இத்திருக்கோயிலின் இராஜகோபுரத்தின் வரைபடம் மண்டல ஸ்தபதிமூலம் தயாரிக்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லாததால் உபயதாரர் நிதிமூலம் இராஜகோபுரம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

70—

திருக்கோயிலுக்கு திருமண மண்டபம் கட்டுதல்

வினா எண் 15588—திரு. வே. சம்பத்குமார்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் அருள்மிகு சிங்காரவேலன் முனீஸ்வரன் திருக்கோயிலுக்கு திருமண மண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், மொரப்பூர், நடுப்பட்டி கிராமத்தில் அருள்மிகு சிங்காரவேலன் முனீஸ்வரன் திருக்கோயிலுக்குச் சொந்தமான திருமண மண்டபம் 47,000 சதுர அடியில் மொரப்பூர் நகரில் அமைந்துள்ளது. இம்மண்டபத்தில் நடைபெறும் நிகழ்ச்சி ஒன்றுக்கு ரூ.11,000/- வரை கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இம்மண்டபம்மூலம் திருக்கோயிலுக்கு தற்போது வருமானம் வரப்பெறுகிறது.

எனவே, இத்திருக்கோயிலுக்கு ஒரு திருமண மண்டபம் பயன்பாட்டில் இருந்து வருவதால், புதியதாக திருமண மண்டபம் கட்டுவதற்கு அவசியம் எழவில்லை.

71—

திருக்குளத்தை தூர் வாருதல்

வினா எண் 15589—திரு. வே. சம்பத்குமார்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தீர்த்தமலை அருள்மிகு தீர்த்தகிரீஸ்வரர் திருக்கோயிலின் திருக்குளத்தை தூர்வார அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், தீர்த்தமலை அருள்மிகு தீர்த்தகிரீஸ்வரர் திருக்கோயில் சட்டப் பிரிவு 46 (iii)-ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் நிலை-3 செயல் அலுவலராலும், தருமபுரி மண்டல உதவி ஆணையரால் தக்கார் நிலையிலும் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலின் உதவித் தொகை நிர்ணய வருவாய் பசலி 1429-க்கு ரூ.44,79,446/- ஆகும். இத்திருக்கோயிலின் ஆவணங்கள் மற்றும் வருவாய்த் துறையின் ஆவணங்களின்படி இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக திருக்குளங்கள் ஏதுமில்லை.

72—

சுற்றுலாத் தலமாக்குதல்

வினா எண் 28005—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நிலக்கோட்டை தொகுதி, அணைப்பட்டியில் உள்ள அருள்மிகு ஆஞ்சநேயர் திருக்கோயிலுக்கு சாலை அமைக்கவும், சுற்றுலாத் தலமாக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2022 அக்டோபர் 18*

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், அணைப்பட்டி அருள்மிகு ஆஞ்சநேயர் திருக்கோயில், சட்டப் பிரிவு 46(i)-ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட பட்டியலைச் சேர்ந்த திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயில் பரம்பரை அறங்காவலரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலின் பசலி 1430-க்கான உதவித் தொகை நிர்ணய வருவாய் ரூ.2,04,110/-.

இத்திருக்கோயில் சித்தர்கள் நத்தம் கிராமம், சர்வே எண் 300/2-ல் 0.064 ஏர்ஸ் விஸ்தீரணத்தில் அரசு புறம்போக்கு நிலத்தில் திருக்கோயில் மட்டும் 21 சென்ட்டில் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் கிராமப்புற பகுதியில் அமைந்துள்ள சிறிய திருக்கோயில் என்பதால், வருடத்தில் அனைத்து நாட்களிலும் பக்தர்கள் வருவதில்லை. ஆடி அமாவாசை அன்று மட்டும் சுமார் 10,000 எண்ணிக்கையிலான பக்தர்களும், இதர முக்கிய தினங்களான தை அமாவாசை, ஆஞ்சநேயர் ஜெயந்தி மற்றும் சனிக்கிழமைகளில் மட்டுமே இத்திருக்கோயிலுக்கு அதிகளவில் பக்தர்கள் வருகை புரிகின்றனர்.

இத்திருக்கோயிலுக்கு சாலை அமைக்கக் கோரும் இடம் பொதுப் பணித் துறைக்குச் (Public Works Department-Water Resources) *சொந்தமானது என்பதால், இத்துறைமூலம் சாலை அமைக்க சாத்தியகூறுகள் இல்லாத நிலையில், பொதுப் பணித் துறைமூலம் சாலை வசதி ஏற்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்படும்.*

இத்திருக்கோயிலைச் சுற்றுலாத் தலமாக்க திருக்கோயில் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் அடிப்படை வசதிகள் மற்றும் இதர கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த திருக்கோயிலுக்குச் சொந்தமாக இடவசதி இல்லாததாலும், இத்திருக்கோயிலில் போதிய நிதி இல்லாத காரணத்தினாலும், உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறைமூலம் திருக்கோயில் அமைந்துள்ள பகுதிகளில் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்படும்.

2022 அக்டோபர் 18]

73—

ஒரு கால பூஜை திட்டத்தைச் செயல்படுத்துதல்

வினா எண் 28039—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் வருவாய் குறைந்த இந்து சமய அறநிலையத் துறை கோயில்களில் ஒரு கால பூஜை திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இந்து சமய அறநிலையத் துறையின் நிருவாக கட்டுப்பாட்டில் உள்ள நிதி வசதியற்ற, ஒரு கால பூஜைகூட செய்திட இயலாத திருக்கோயில்களுக்கு ஒரு கால பூஜை செய்திட உதவும் ஒரு கால பூஜைத் திட்டம் 1986 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1993 ஆம் ஆண்டில் பொதுமக்களும் பங்கேற்கும் நோக்கில், திருக்கோயில் ஒன்றுக்கு பொதுமக்கள் நன்கொடையாக ரூ.2,500/- வழங்க முன்வந்தால், நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.20,000/-மும், திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதியிலிருந்து ரூ.1,300/-ம் ஆலய மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.1,200/-ம் ஆக மொத்தம் ரூ.25,000/- அந்தந்த திருக்கோயில் பெயரில் வைப்பு நிதியாக முதலீடு செய்யப்பட்டு, அதில் கிடைக்கும் வட்டி வருவாயைக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

அவ்வாறு ரூ.25,000/- முதலீட்டிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித்தொகை போதுமானதாக இல்லை என்பதை கருத்தில் கொண்டு வைப்பு நிதி முதலீட்டுத் தொகை ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ரூ.1.00 இலட்சமாக 2011 ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 11,931 திருக்கோயில்கள் பயனடைந்தன. பின்னர், இத்திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு தற்போது 12,959 திருக்கோயில்களில் செயல்பாட்டில் உள்ளது.

ஒரு கால பூஜைகூட நடைபெறாத எந்தவொரு திருக்கோயிலுக்கேனும் நன்கொடையாளர்கள் எவரேனும் ரூ.10,000/- அளித்தால், ஆலய மேம்பாட்டு நிதி (ரூ.4,200) திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதியிலிருந்து (ரூ.5,800/-) கூடுதல் ரூ.10,000/- மற்றும் உபரி நிதியுள்ள திருக்கோயில்களிலிருந்து நிதி மாற்றம்மூலம் ரூ.80,000/-ஆகியவற்றைக் கொண்டு ரூ.1,00,000/-ஐ அத்திருக்கோயிலின் பெயரில் தமிழ்நாடு அரசு நிறுவனங்களில் (Tamil Nadu Power Finance & Infrastructure Development Corporation மற்றும் Tamil Nadu Transport Development Finance Corporation) நிரந்தர வைப்பு நிதி உருவாக்கப்பட்டு அதிலிருந்து காலாண்டு வட்டித் தொகை அந்தந்த திருக்கோயிலின் வங்கிக் கணக்கிற்கு மின்னனு மாற்றம் மூலமாக நேரடியாக அனுப்பப்படுகிறது.

மேற்காணும் வைப்பு நிதியிலிருந்து காலாண்டு ஒன்றுக்கு ரூ.2,140/- அந்தந்த திருக்கோயிலின் வங்கிக் கணக்கிற்கு நேடியாக அனுப்பப்படுகிறது. இதன்மூலம் சராசரியாக நாளொன்றுக்கு ரூ.23.78 வீதம் திருக்கோயில் பூஜை செலவிற்கு கிடைக்கப் பெற்று வந்தது. இந்நிலையில், 2021-2022 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை மாண்புமிகு நிதியமைச்சர் சட்டமன்ற மானியக் கோரிக்கையில் அறிவிப்பு எண் 151-ல் "போதிய நிதி வசதி இல்லாத 12,959 திருக்கோயில்களில் ஒரு கால பூஜை திட்டத்தைச் செயல்படுத்த உதவும் வகையில் 130 கோடி ரூபாயில் நிதிநிலை ஏற்படுத்தப்படும். இந்த நிதிநிலையின்மூலம் ஈட்டப்படும் வட்டித்தொகை மேற்கண்ட கோயில்களின் தினசரி பூஜைக்கு பயன்படுத்தப்படும்" எனத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வறிப்பினை செயல்படுத்தும் பொருட்டு ஒரு கால பூஜை திட்டத்தின்கீழ் பயன்பெற்று வரும் 12,959 திருக்கோயில்களுக்கான வைப்பு நிதியை ரூ.1.00 இலட்சத்திலிருந்து ரூ.2.00 இலட்சமாக உயர்வு செய்து முதலீடு செய்யப்பட்டது. இதிலிருந்து காலாண்டு ஒன்றுக்கு ரூ.4,300/- நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் சராசரியாக நாள் ஒன்றுக்கு ரூ.48/- வீதம் திருக்கோயில் பூஜை செலவிற்கு கிடைக்கப்பெறுகிறது.

இதுபோன்று ஒரு கால பூஜைகூட நடத்த இயலாத திருக்கோயில்களையும் கண்டறிந்து, அவற்றினை இத்துறை கட்டுப்பாட்டின்கீழ் கொணர்ந்து, அத்திருக்கோயில்களுக்கும் ஒரு கால பூஜை நிதியுதவியாக திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.2.00 இலட்சம் வைப்பு நிதி ஏற்படுத்தப்படும்.

2022 அக்டோபர் 18]

74—

மத்திய அரசு அலுவலகங்களில் இட ஒதுக்கீடு

வினா எண் 11610—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்திலுள்ள மத்திய அரசின் அலுவலகங்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்கீடு செய்ய ஒன்றிய அரசை தமிழக அரசு வலியுறுத்த முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்திலுள்ள மத்திய அரசின் அலுவலகங்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்க ஒன்றிய அரசினை வலியுறுத்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 17-06-2021 அன்று மாண்புமிகு பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து கடிதம் ஒன்றினை வழங்கியுள்ளார். இதனைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு 12-10-2021 நாளிட்ட நேர்முகக் கடிதம் ஒன்றும் அனுப்பப்பட்டுள்ளது.

75—

தகவல் ஆணைய கிளை அலுவலகம் அமைத்தல்

வினா எண் 26436—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதியில் அரசின் தகவல்களை அறிந்துகொள்ள தகவல் ஆணைய கிளை அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

[2022 அக்டோபர் 18

விடை—

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு தகவல் ஆணையம் சென்னையில் அமைக்கப்பட்டிருந்தாலும், தூரத்தில் உள்ள மாவட்டங்கள் மற்றும் மற்ற மாவட்டங்களில் உள்ள மனுதாரர்கள் பயன்பெறும் வகையில் காணொளி வாயிலாகவும் விசாரணை நடத்தப்பட்டு வருவதால், தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் கிளை எதுவும் அமைப்பதற்கான அவசியம் எழவில்லை. எனவே, குளச்சல் தொகுதியில் அரசின் தகவல்களை அறிந்துகொள்ள தகவல் ஆணைய கிளை அலுவலகம் அமைப்பதற்கான அவசியம் எழவில்லை.

76—

பாதுகாப்பு வழங்குதல்

வினா எண் 25689—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் அரபிக் கல்லூரியில் ஹாஜியை தவிர மற்ற பணியாளர்களுக்கும் ஊதியம் வழங்கவும், ஷரியத் கூடும் நாட்களில் காவலர் பாதுகாப்பு வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் அரபிக் கல்லூரியில் பணியாற்றும் பணியாளர்களில் ஹாஜி M. அபுல் கலாம் கான் அவர்கள் சேலம் மாவட்ட ஹாஜியாக 2-8-2007 ஆம் நாளிட்ட பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் அரசாணை (நிலை) எண் 74-ன்படி நியமனம் செய்யப்பட்டு, மாவட்ட ஹாஜிகளுக்கான மதிப்பூதியமாக பிரதி

2022 அக்டோபர் 18]

மாதம் ரூபாய் 20,000/- அரசால் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி, அரபிக் கல்லூரியில் பணியாற்றும் மற்ற பணியாளர்களுக்கான ஊதியம் அரபிக் கல்லூரி நிர்வாகத்தின்மூலம் மட்டுமே வழங்க வழிவகை உண்டு. மேலும், ஷரியத் கூடும் நாட்களில் மேற்படி கல்லூரி நிர்வாகத்தின்மூலம் காவல் துறை பாதுகாப்பு கோரும்பட்சத்தில், சம்பந்தப்பட்ட சரக காவல் ஆய்வாளருக்கு உரிய வக்ஃப் கண்காணிப்பாளரால் பரிந்துரை செய்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

77—

இணையவழி கல்வி

வினா எண் 4451—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிராமப்புற, மலைப் பகுதி மாணவர்களின் இணையவழி கல்வி மேம்பாட்டிற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

கிராமப்புற மலைப் பகுதிகள் உள்ளிட்ட அனைத்து அரசுப் பள்ளிகளிலும் பயிலும் மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துவதற்கு உயர் தொழில்நுட்ப ஆய்வகங்களுடன் 3,090 அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பள்ளி ஒவ்வொன்றுக்கும் இணையதள இணைப்புடன்கூடிய 10 கணிப்பொறிகளும், 2,939 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பள்ளி ஒவ்வொன்றுக்கும் இணையதள இணைப்புடன்கூடிய 20 கணிப்பொறிகளும் வழங்கப்பட்டு, மாணவர்கள் இணையவழியில் கல்வி கற்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் நிறுவப்பட்டுள்ள மேற்படி 6,029 பள்ளிகளில் கொல்லி மலை, ஜவ்வாது மலை மற்றும் பிற மலைப் பகுதிகளில் உள்ள வனத் துறை பள்ளிகள், ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளிலும் ஆய்வகங்கள் அமைக்கப்பட்டு மாணவர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள், மாணவர்களுக்கு இணைய வழியில் பாடங்கள் நடத்தவும், மதிப்பீடு செய்யவும் மற்றும் ஆசிரியர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கவும் பயன்படுத்தப்படுகின்றன. 2021-22 ஆம் கல்வியாண்டிற்கு 1,784 அரசு நடுநிலைப் பள்ளிகளில் ரூ.114 கோடியில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஆய்வகங்கள்மூலம் கிராமப்புற மற்றும் மலைப் பகுதியில் உள்ள மாணவர்களுக்கு இணைய வழியில் கல்வி கற்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

78—

அடிப்படை வசதி செய்தல்

வினா எண் 6781—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, இந்தலூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு வகுப்பறைகள், சுற்றுச்சுவர் மற்றும் கழிவறைகள் கட்டுதல் குறித்த செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, இந்தலூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு தேவைப்படும் 5 வகுப்பறைகள் மற்றும் 4 கழிவறைகள் கட்டுதல் குறித்த கருத்துரு தஞ்சாவூர் மாவட்ட பொதுப் பணித் துறை (க&ப) கோட்ட செயற்பொறியாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 130 மீட்டர் நீள சுற்றுச்சுவர் கட்ட தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட உள்ளன.

2022 அக்டோபர் 18]

79—

அடிப்படை வசதி செய்தல்

வினா எண் 6800—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, தாழக்குடி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு வகுப்பறைகள், சுற்றுச்சுவர் மற்றும் கழிவறைகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, தாழக்குடி அரசு உயர்நிலைப் பள்ளிக்குத் தேவைப்படும் 5 வகுப்பறைகள் மற்றும் 90 மீட்டர் சுற்றளவு கொண்ட சுற்றுச்சுவர் அமைத்திடும்பொருட்டு கருத்துரு தஞ்சாவூர் மாவட்ட பொதுப் பணித் துறை (க&ப) கோட்ட செயற்பொறியாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்குப் போதுமான அளவு கழிப்பறை வசதி உள்ளது.

80—

வகுப்பறைக்குத் தேவையான பொருட்கள் வழங்குதல்

வினா எண் 7538—திரு. சீ. கதிரவன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மண்ணச்சநல்லூர் தொகுதி, ஓமாந்தூர் ஊராட்சி, அரசு மேல்நிலைப் பள்ளிக்கு மேசை, நாற்காலிகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

[*2022 அக்டோபர் 18*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மண்ணச்சநல்லூர் தொகுதி, ஓமாந்தூர் ஊராட்சி, அரசு மேல்நிலைப் பள்ளிக்கு தேவையான மேசை, நாற்காலிகள் நபார்டு வங்கி திட்டத்தின்மூலம் வழங்கப்பட்டுள்ளன. மேலும், இப்பள்ளிக்கு முன்னாள் மாணவர்களால் நன்கொடையாக 75 பெஞ்ச்கள் மற்றும் டெஸ்க்குகள் பெறப்பட்டுள்ளதாலும், இப்பள்ளிக்கு போதுமான எண்ணிக்கையில் மேசை, நாற்காலிகள் உள்ளதால் புதிதாக வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

81—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 9798—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மண்டைக்காடு பேரூராட்சியில் உள்ள குன்னங்காடு நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை மண்டைக்காடு பேரூராட்சியில் உள்ள குன்னங்காடு நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

2022 அக்டோபர் 18]

82—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 12189—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், வடமாமாந்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், வடமாமாந்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

83—

பள்ளிக்கு அடிப்படை வசதி செய்தல்

வினா எண் 15203—திரு. K.A. பாண்டியன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிதம்பரம் தொகுதி, சிதம்பரம் நகரில் உள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 அக்டோபர் 18

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2023-2024 ஆம் நிதியாண்டில் முன்னுரிமை அளித்து கடலூர் மாவட்டம், சிதம்பரம் தொகுதி, சிதம்பரம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு திட்டத்தின்கீழ் கூடுதல் வகுப்பறை மற்றும் சுற்றுச்சுவர் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

84—

ஆசிரியர் பணியிடங்கள் நிரப்புதல்

வினா எண் 18596—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, பி.கொல்லப்பட்டி, பெரியூர் மற்றும் நெருப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் பெண்ணாகரம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, பி.கொல்லப்பட்டி மற்றும் நெருப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் தலா 2 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், பெரியூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் ஒரு பட்டதாரி ஆசிரியர் பணியிடம் என 7 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன. இந்த காலிப் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2022 அக்டோபர் 18]

85—

காவலாளிகளை நிரந்தரமாக நியமித்தல்

வினா எண் 21671—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரசு உதவிபெறும் பள்ளிகளில் நிரந்தர காவலாளிகளை பணி நியமனம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரசு நிதியுதவிபெறும் பள்ளிகளுக்கு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள காவலர் பணியிடங்களில், அரசாணை (நிலை) *எண்* 238, *பள்ளிக் கல்வித்* (பக6(1)) *துறை, நாள்* 13-11-2018-*ன்படி நிரப்பிக்கொள்ள அரசளவில் எவ்வித தடையும் விதிக்கப்படவில்லை.*

86—

பள்ளிகளைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 28072—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், கீழவனம், தண்டலம் ஆகிய ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை, உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

[2022 அக்டோபர் 18

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை, உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், கீழவனம், தண்டலம் ஆகிய பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் பூர்த்தி செய்யாததால் இப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

87—

சாதி மற்றும் வருமானச் சான்றிதழ்கள் வழங்குதல்

வினா எண் 28076—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பள்ளி மாணவர்களுக்கு சாதி மற்றும் வருமான சான்றிதழ்கள் அந்தந்த பள்ளிகளிலேயே வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 184, வருவாய்த் [R.A.3(2)] துறை, நாள் 5-6-2012-ன்படி 2012-2013 ஆம் கல்வியாண்டு முதல் அனைத்து பள்ளிகளிலும் பயிலும் ஆறாம் வகுப்பு மாணவ/மாணவியரிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்று சாதி, வருமானம் மற்றும் இருப்பிடச் சான்றிதழ்கள் அவர்கள் பயிலும் பள்ளிகளிலேயே வழங்கப்பட்டு வருகின்றன.

88—

வேலைவாய்ப்பு உருவாக்குதல்

வினா எண் 14499—திரு. இரா. அருள்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் பகுதியில் தொழில் நிறுவனங்கள் மற்றும் வேலை தேடுவோர்களுக்கான முகாம்கள்மூலம் படித்த இளைஞர்களின் வேலைவாய்ப்பை உருவாக்க அரசு முன்வருமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் பதிவு செய்த பதிவுதாரர்கள் தனியார் துறையில் பணி நியமனம் பெற உதவும் வகையில் ஒவ்வொரு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்திலும் மாவட்ட அளவிலான தனியார் துறை பணியமர்த்தல் பிரிவு செயல்பட்டு வருகிறது. தனியார் துறையில் வேலைநாடுநர்களை அதிக அளவில் பணியமர்த்தும் நோக்கத்தோடு வாரந்தோறும் சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்களும், மாவட்ட அளவில் பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்களும் காலாண்டுதோறும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் வாயிலாக நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், சேலம் மாவட்டத்தில் மட்டும் சிறிய மற்றும் பெரிய அளவிலான 18 தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டதில், 479 வேலையளிக்கும் நிறுவனங்கள் மற்றும் 43,689 வேலைநாடுநர்கள் கலந்துகொண்டதில் 4,020 நபர்கள் பணி நியமனம் பெற்றுள்ளனர். மேற்படி முகாம்களில் கலந்துகொள்ளும் இளைஞர்கள் உரிய திறன் இன்மையால் வேலைவாய்ப்பு பெற இயலாத நேர்வுகளில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் தேவையான திறன் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வேலைவாய்ப்பும் வழங்கப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையமானது (www.tnprivatejobs.tn.gov.in) *வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை பெற்று வழங்கும் நோக்கில் செயல்பட்டு வருகிறது.*

இவ்வாறு, தனியார் துறையில் ஏற்படும் காலிப் பணியிடங்களில் பதிவுதாரர்களை பணியமர்த்தம் செய்யும் நோக்கத்துடன் சேலம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் வாயிலாக தொடர்ந்து சிறிய மற்றும் பெரிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படும்.

[2022 அக்டோபர் 18

89—

பல்திறன் மேம்பாட்டு மையம் அமைத்தல்

வினா எண் 24415—திரு. ஜெ. கருணாநிதி: மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தியாகராய நகர் தொகுதியில் பல்திறன் மேம்பாட்டு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

சென்னை மாவட்டத்தில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் 57 அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மற்றும் அரசின் பல்வேறு துறைகளால் பலவிதமான திறன் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மேலும், சிமன்ஸ் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து நடத்தும் உயர்திறன் மேம்பாட்டு மையத்தின் ஒரு பகுதியாக பொறியியல் பட்டதாரிகளுக்கு குரோம்பேட்டை எம்.ஐ.டி.-யிலும் மற்றும் ஆவடி முருகப்பா தொழில்நுட்பக் கல்லூரியில் பொறியியல் பயிலும் மாணவர்களுக்கும் திறன் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. எனவே, தியாகராய நகர் தொகுதியில் தனியே பல்திறன் மேம்பாட்டு மையம் அமைக்கும் நிலை எழவில்லை.

90—

பயிற்சி வகுப்புகள் எடுத்தல்

வினா எண் 27728—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, முகாம் பழைமை வாய்ந்த இரணியல் மேல்நிலைப் பள்ளியில் மத்திய, மாநில தேர்வுகளை எழுதுவதற்காக பயிற்சி வகுப்புகள் நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் உள்ள தன்னார்வ பயிலும் வட்டங்களில், அரசு பணிகளுக்காக நடைபெறும் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கி வரும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தால் மேற்கண்ட அனைத்து போட்டித் தேர்வுகளுக்கும் நேரடி மற்றும் இணைய வழியிலான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. மேலும், கல்வித் தொலைக்காட்சி வாயிலாக ஒளிபரப்பப்படும் இப்பயிற்சி வகுப்புகள் யாவும் 'TN Career Services Employment' *என்ற* YouTube Channel-*ல் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன. எனவே, குளச்சல் தொகுதி, முகாம் பழைமை வாய்ந்த இரணியல் மேல்நிலைப் பள்ளியில் மத்திய, மாநில தேர்வுகளை எழுதுவதற்காக தனியே பயிற்சி வகுப்புகள் எடுக்க வேண்டிய நிலை எழவில்லை.*

91—

பயிற்சி வகுப்புகள் எடுத்தல்

வினா எண் 27735—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதியில் அனைத்து பட்டதாரி மாணவர்களுக்கும் வேலைவாய்ப்பு பயிற்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலைவாய்ப்பு அலுவலகங்கள் அனைத்தும், வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களாக

செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம், பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், இரயில்வே தேர்வு வாரியம், வங்கிப் பணியாளர்கள் தேர்வு நிறுவனம் போன்ற அமைப்புகள் நடத்தும் போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் செயல்பட்டு வரும் தன்னார்வ பயிலும் வட்டங்களின் வாயிலாக நடத்தப்படுகின்றன. குளச்சல் தொகுதியை உள்ளடக்கிய கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கி வரும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தால் மேற்கண்ட அனைத்து போட்டித் தேர்வுகளுக்கும் நேரடி மற்றும் இணைய வழியிலான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. மேலும் 'நான் முதல்வன்' என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக இளைஞர்களது அரசுப் பணி கனவையும் நனவாக்கும் வகையில், கல்வித் தொலைக்காட்சியின்மூலம், பல்வேறு அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகளுக்கு கட்டணமில்லா பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. கல்வித் தொலைக்காட்சி வாயிலாக ஒளிப்பரப்படும் இப்பயிற்சி வகுப்புகள் யாவும் 'TN Career Services Employment' என்ற YouTube Channel-ல் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன. எனவே, குளச்சல் தொகுதியில் அனைத்து பட்டதாரி மாணவர்களுக்கும் தனியாக வேலைவாய்ப்பு பயிற்சி மையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

92—

தொழிலாளர் மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 27738—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் E.S.I. மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

2022 அக்டோபர் 18]

(அ) மற்றும் (ஆ) மாநில அரசு, காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு மருத்துவ சேவை மட்டுமே வழங்கி வருகிறது.

கட்டடம் கட்டுதல், விரிவாக்கம், பராமரித்தல் மற்றும் அனைத்து முக்கிய கொள்கை முடிவுகளும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தைச் சார்ந்ததாகும்.

மேலும், தற்பொழுது கன்னியாகுமரி மாவட்டத்தில் 100 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை கட்டுவதற்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

93—

குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல்

வினா எண் 28628—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குழந்தைத் தொழிலாளர்களை கண்டறிந்து தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குழந்தைத் தொழிலாளர் முறையை தமிழகத்திலிருந்து முற்றிலும் அகற்றிட, தமிழக அரசு குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் முனைப்புடனும், தீவிர ஈடுபாட்டுடனும் செயல்பட்டு வருகிறது. குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர் முறையை அகற்றுவதற்கான மாநில செயல் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இச்செயல் திட்டமானது இத்துறையின் அமலாக்க அதிகாரிகளுக்கும் தொடர்புடைய பிற துறை அலுவலர்களின் செயல்பாடு மற்றும் பங்கு குறித்து உரிய வழிகாட்டுதல்களை அளிக்கிறது. குழந்தை மற்றும் வளரிளம்

பருவத் தொழிலாளர் (தடைசெய்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1986-ஐத் தீவிரமாக அமல்படுத்தும் பொருட்டு, நிலையான இயக்க நடைமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

மேலும், திருத்தப்பட்ட குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர்கள் (தடை செய்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1986-ஐ எளிய மற்றும் சீரிய முறையில் அமல்படுத்தும் பொருட்டு, குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர்கள் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) விதிகள் 1994-ஐ உருவாக்கியுள்ளது. சட்ட அமலாக்கத்தை வலுப்படுத்தும் பொருட்டு, மாவட்ட அளவிலான தடுப்புப் படைகள் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. குழந்தைகளை பணியமர்த்துவதைத் தடை செய்திட, குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர்கள் (தடை செய்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1986 மற்றும் தொடர்புடைய சட்டங்கள், மாநில அளவில், தொழிலாளர் துறை ஆணையரகம் மற்றும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரக அதிகாரிகளால் அமலாக்கம் செய்யப்படுகின்றன. 1-4-2021 முதல் 31-5-2022 வரை மாவட்ட தடுப்புப் படை மற்றும் தொழிலாளர் துறை அமலாக்க அதிகாரிகள்மூலம் 41,911 நிறுவனங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 153 குழந்தைத் தொழிலாளர்கள் கண்டறியப்பட்டு மீட்கப்பட்டனர். 116 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, 94 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 84 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டு, ரூ.16,65,000/- அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

94—

குழந்தைத் தொழிலாளர்களை பள்ளிக்கு அனுப்புதல்

வினா எண் 30533—திரு. இரா. அருள்: மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக கிராமப்புறங்களில் சமூக ஆர்வலர்களையும், தன்னார்வலர்களையும் பயன்படுத்தி, குழந்தைத் தொழிலாளர்களாக மாறிய மாணவர்களைக் கண்டறிந்து பள்ளிக்குத் திரும்ப அனுப்ப உரிய செயல்திட்டம் வகுக்க அரசு முன்வருமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர் முறையை அகற்றுவதற்கான மாநில செயல்திட்டம் (State Action Plan) *அரசாணை (நிலை) எண் 8, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (யு2) துறை, நாள் 30-1-2019-ல் வகுக்கப்பட்டுள்ளது. இச்செயல்திட்டமானது அமலாக்க அலுவலர்கள் மற்றும் தொடர்புடைய பிற துறை அலுவலர்களிடம் அவர்களின் செயல்பாடு மற்றும் பங்கு குறித்து உரிய வழிகாட்டுதல்களை அளிக்கிறது. குழந்தை மற்றும் வளரிளம் தொழிலாளர்களைக் கண்டறிந்து மீட்டு, பள்ளிக்கு அனுப்பவும், திறன்வளர் பயிற்சி அளிக்கவும் இச்செயல்திட்டத்தில் வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.*

அரசாணை (2D) *எண் 2, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (யு2) துறை, நாள் 11-1-2021மூலம் மாவட்ட அளவிலான தடுப்புப் படைகள்* (District Task Force) *மாவட்ட ஆட்சியரின் தலைமையில் அனைத்து மாவட்டங்களிலும் மறுசீரமைக்கப்பட்டுள்ளன. இந்தத் தடுப்புப் படையில் மாவட்ட வாரியாக 2 தன்னார்வலர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.*

மாநில அரசால் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட முதன்மை அலுவலர்களாக (District Nodal Officers) *தொழிலாளர் உதவி ஆணையர்கள் (அமலாக்கம்) நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஏற்கெனவே, மாநில செயல்திட்டம் நடைமுறையில் உள்ள நிலையில், தமிழக கிராமப்புறங்களில் சமூக ஆர்வலர்களையும், தன்னார்வலர்களையும் பயன்படுத்தி, குழந்தைத் தொழிலாளர்களாக மாறிய மாணவர்களைக் கண்டறிந்து பள்ளிக்குத் திரும்ப அனுப்ப புதிய செயல்திட்டம் வகுக்க வேண்டிய நிலை எழாது.*

95—

கொத்தடிமை தொழில்துறை கையேடு

வினா எண் 30772—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கொத்தடிமைத் தொழிலாளர்களை அடையாளம் காண்பது குறித்த செயல்முறைகள் அடங்கிய கொத்தடிமை தொழில்முறை கையேட்டை வெளியிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கொத்தடிமைத் தொழிலாளர்களைக் கண்டறிதல், மீட்டெடுத்தல் மற்றும் மறுவாழ்வு அளித்தல் ஆகியவை பற்றிய மாநில செயல்திட்டம் அரசாணை (நிலை) எண் 163, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (யு1) துறை, நாள் 21-9-2017-ல் வெளியிடப்பட்டுள்ளது.

கொத்தடிமைத் தொழிலாளர் முறை (ஒழித்தல்) சட்டம், 1976 மற்றும் ஒன்றிய அரசின் கொத்தடிமைத் தொழிலாளர் மறுவாழ்வு திட்டம், 2016 ஆகியவற்றைத் தீவிரமாக அமல்படுத்தும் நோக்கில், நிலையான இயக்க நடைமுறைகள், அரசாணை (நிலை) எண் 35, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (யு1) துறை, நாள் 8-3-2019 மற்றும் அரசாணை (நிலை) எண் 138, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (யு1) துறை, நாள் 28-9-2021-ல் வகுக்கப்பட்டுள்ளன.

மாநில செயல்திட்டம் மற்றும் நிலையான இயக்க நடைமுறைகள் அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் தொடர்புடைய பிற துறை அலுவலர்கள் (line department officials) ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

மேலும், கொத்தடிமைத் தொழிலாளர்களை அடையாளம் காண்பது குறித்த செயல்முறைகள் அடங்கிய அரசாணை www.tn.gov.in என்ற வலைதளத்தில் பொதுமக்களின் பார்வைக்கு பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே, கொத்தடிமைத் தொழிலாளர்களை அடையாளம் காண்பது தொடர்பான கையேட்டை வெளியிட வேண்டிய அவசியம் எழவில்லை.

2022 அக்டோபர் 18]

96—

கொத்தடிமை முறையை ஒழித்தல்

வினா எண் 30774—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கொத்தடிமை மீட்பு மற்றும் மறுவாழ்வு சட்டத்தில் காலத்திற்கேற்ப மாற்றங்கள் செய்து கொத்தடிமை முறையை முற்றிலுமாக ஒழிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கொத்தடிமைத் தொழிலாளர் முறை (ஒழித்தல்) சட்டம், 1976 என்பது ஒன்றிய அரசு சட்டமாகும். மேற்படி சட்டத்தில் மாற்றங்கள் செய்வது ஒன்றிய அரசின் வரையறைக்குட்பட்டதாகும்.

கொத்தடிமைத் தொழிலாளர் முறையினை முற்றிலும் அகற்றி, தமிழ்நாட்டை கொத்தடிமைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக உருவாக்கிட பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும்பொருட்டு, ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 9 ஆம் நாளை கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தினமாக அனுசரித்திட அரசாணை (1டி) எண் 448, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (யு1) துறை, நாள் 23-9-2020-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தினம் தமிழகம் முழுவதும் ஆண்டுதோறும் பிப்ரவரி 9 ஆம் நாளன்று அனுசரிக்கப்பட்டு, அனைத்து அரசு அலுவலகங்களிலும் கொத்தடிமைத் தொழிலாளர் முறையை ஒழித்திட உறுதிமொழி ஏற்கப்படுகிறது.

கொத்தடிமைத் தொழிலாளர் குறித்த புகார்களைத் தெரிவிக்க கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 4252 650 (Toll Free Helpline) உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கொத்தடிமைத் தொழிலாளர் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்திட தமிழக அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அனைத்து மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. மேலும், இப்பொருள் தொடர்பாக கையெழுத்து இயக்கம் நடத்துதல், துண்டுபிரசுரங்கள் விநியோகம் செய்தல், பேருந்து மற்றும் ஆட்டோ பின்புறம் விழிப்புணர்வு வாசகம் மற்றும் கட்டணமில்லா தொலைபேசி எண் குறித்த விவரம் ஒட்டி விழிப்புணர்வு மேற்கொள்ளுதல், கடைகள் மற்றும் நிறுவனங்களில் விழிப்புணர்வு வாசகங்கள் ஒட்டுதல், மக்கள் அதிகம் கூடும் இடங்களில் பேனர் வைத்தல், தெருக்கூத்து நாடகங்கள் நடத்துதல் ஆகிய நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

இவ்வாறாக, தமிழ்நாட்டில் கொத்தடிமைத் தொழிலாளர் முறையை விரைவில் ஒழித்திட அரசு சீரிய முயற்சிகள் மற்றும் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

97—

ESI மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 30891—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் பேரூராட்சியில் ESI மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டத்தில் மீஞ்சூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் உட்பட தற்போது கீழ்க்காணும் 10 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. அவை பின்வருமாறு:

2022 அக்டோபர் 18]

1) அம்பத்தூர்	6) பஞ்செட்டி
2) ஆவடி	7) பூந்தமல்லி
3) கும்மிடிப்பூண்டி	8) செங்குன்றம்
4) மணலி	9) திருவள்ளூர்
5) மீஞ்சூர்	10) திருமுடிவாக்கம்

மீஞ்சூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தில் 9,883 காப்பீட்டாளர்கள் மட்டுமே உள்ளனர். மேலும், 50 படுக்கை வசதி கொண்ட ஒரு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைப்பதற்கு குறைந்தபட்சம் 50,000 காப்பீட்டு நபர்கள் இருக்க வேண்டும்.

காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு தமிழக அரசு மருத்துவ சேவை மட்டுமே வழங்கி வருகிறது. கட்டடம் கட்டுதல், விரிவாக்கம், பராமரித்தல் மற்றும் அனைத்து முக்கியக் கொள்கை முடிவுகளும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தைச் சார்ந்ததாகும்.

எனவே, பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் பேரூராட்சியில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் கொள்கைப்படி புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை தற்சமயம் அமைக்க இயலாது.

98—

ESI மருத்துவமனை ஏற்படுத்துதல்

வினா எண் 30965—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோட்டில் இ.எஸ்.ஐ. மருத்துவமனை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

[2022 அக்டோபர் 18

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டத்தில் தற்போது ஈரோடு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் உட்பட கீழ்க்காணும் **7** தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. அவை பின்வருமாறு:

1)	சென்னிமலை	5)	புஞ்சைப்புளியம்பட்டி
2)	ஈரோடு	6)	சத்தியமங்கலம்
3)	கோபிச்செட்டிப்பாளையம்	7)	பவானி
4)	பெருந்துறை		

ஈரோடு மாவட்டத்தில் மொத்தம் 28,336 காப்பீட்டாளர்கள் மட்டுமே உள்ளனர். மேலும், 50 படுக்கை வசதி கொண்ட ஒரு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைப்பதற்கு குறைந்தபட்சம் 50,000 காப்பீட்டு நபர்கள் இருக்க வேண்டும்.

மாநில அரசு காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு மருத்துவ சேவை மட்டுமே வழங்கி வருகிறது. கட்டடம் கட்டுதல், விரிவாக்கம், பராமரித்தல் மற்றும் அனைத்து முக்கியக் கொள்கை முடிவுகளும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தைச் சார்ந்ததாகும்.

எனவே, ஈரோடு மாவட்டத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் கொள்கைப்படி தற்சமயம் புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்க இயலாது.

99—

சிறப்புக் கூறுகள் திட்ட நிதி

வினா எண் 10455—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்ட நிதி அவர்களுக்கு முழுமையாகச் சென்றடைய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் நலத் திட்டங்களுக்காக ஒன்றிய அரசின் வழிகாட்டுதலின்படி, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு 2011 விகிதாச்சாரத்திற்கேற்ப 20.01% அளவிற்கு இணையாக மாநில அரசின் ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டிலிருந்து ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுவருகிறது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கண்காணிப்புத் துறையாக (Nodal Department) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை செயல்படுகிறது. இத்துறையின் செயலாளர் அவர்கள் மாநில அளவில் கண்காணிப்பு அலுவலராக நியமனம் செய்யப்பட்டு, திட்டங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் ஒவ்வொரு மாதமும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான முன்னேற்ற அறிக்கைகள் அனைத்து செயலாக்கத் துறைகளிலிருந்தும் பெறப்பட்டு, துணைத் திட்ட முன்னேற்றம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், தலைமைச் செயலாளர் அவர்களைத் தலைவராகக் கொண்ட மாநில அளவிலான கண்காணிப்புக் குழு (State Level Monitoring Committee) அனைத்துத் துறைகளின் திட்ட முன்னேற்றம் குறித்து அவ்வப்போது ஆய்வு செய்கிறது. எனவே, சிறப்புக் கூறுகள் திட்ட நிதி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு முறையாகச் சென்றடைவதற்கு துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

100—

ஆதி திராவிடர்களுக்கு இட ஒதுக்கீடு

வினா எண் 30716—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்துத் துறை வேலைவாய்ப்புகளிலும், கல்வியிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் அருந்ததியர் இட ஒதுக்கீட்டை முழுமையாக கடைபிடிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 அக்டோபர் 18

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு அரசுப் பணிகளிலும், கல்வி நிலையங்களிலும் பங்கேற்பினை உறுதி செய்யும் பொருட்டு, 18 சதவீதம் மற்றும் 1 சதவீதம் இட ஒதுக்கீடு அரசாணை (நிலை) எண் 1090, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 22-6-1990-ன்படி, வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஆதி திராவிடர் மக்களில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள அருந்ததியர் மக்களின் பங்கேற்பினை அரசுப் பணிகளில் உறுதி செய்யவும், அவர்களின் முன்னேற்றத்திற்கும் ஆதி திராவிடருக்கான மொத்த இட ஒதுக்கீட்டில் அருந்ததியருக்கு உள் ஒதுக்கீடாக 16 சதவீதம் வழங்கி அரசாணை (நிலை) எண் 50, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 29-4-2009 மூலம் ஆணையிடப்பட்டுள்ளது.

அரசுப் பணிகளில் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் அருந்ததியரின் பங்களிப்பினை உறுதி செய்யவும், இட ஒதுக்கீட்டினை முறையாகக் கடைப்பிடிக்கவும், கண்காணிக்கவும் அனைத்து தலைமைச் செயலக துறைகள் மற்றும் அதன் கீழுள்ள தலைமை அலுவலகங்கள், சார்நிலை அலுவலகங்கள் மற்றும் அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் பற்றாளர் நியமனம் செய்ய அரசாணை (நிலை) எண் 65, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ப.மே.2) துறை, நாள் 9-4-1997-ன்மூலம் ஆணையிடப்பட்டுள்ளது.

பட்டியல்-9

1—

கோட்டம் மாற்றியமைத்தல்

வினா எண் 2466—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, கடையக்குடி கிராமத்தில் அய்யனார் ஏரி, குருக்கள் ஏரி, பட்டுக்கோட்டை அக்னி ஆறு கோட்டத்தில் உள்ளதை கல்லணை கால்வாய் கோட்டத்தில் மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, கடையக்குடி அய்யனார் ஏரி, குருக்கள் ஏரியானது மழைநீரை பயன்படுத்தி (Rainfed) பாசன பயன்பெறும் ஏரிகளாகும். அய்யனார், குருக்கள் ஏரிகளானது 2019 ஆம் ஆண்டில் ஒரு முறையும், 2020 ஆம் ஆண்டில் இரண்டு முறையும் அதன் முழு கொள்ளளவை எட்டியுள்ளன. மழை நீரை பயன்படுத்தி பாசனம் பெறும் ஏரிகள் அனைத்தும் அக்னியாறு கோட்டத்தால் பராமரிக்கப்பட்டு வருவதால், கல்லணை கால்வாய் கோட்டத்திற்கு மாற்ற வேண்டிய சூழல் எழவில்லை.

2—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 4266—டாக்டர் சி. சரஸ்வதி: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொடக்குறிச்சி தொகுதியின் பிரதான ஓடையான குரங்கன் ஓடையில் உள்ள சீமைக் கருவேல முட்புதர்களை அகற்றி, தூர்வாரி தேவைப்படும் இடங்களில் தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மொடக்குறிச்சி வட்டத்தின் பிரதான ஓடையான குரங்கன் ஓடையில் உள்ள சீமைக் கருவேல முட்புதர்கள் அகற்றப்பட்டு, தேவைப்படும் இடங்களில் தூர்வாரப்பட்டு, தடுப்பணை கட்ட நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு, பணிகளை விரைவாகச் செயல்படுத்தி நிறைவேற்றப்பட்டுள்ளன.

[2022 அக்டோபர் 18

3—

நீர்நிலைகள், நீர்வழிப் பாதைகள் சுத்தம் செய்தல்

வினா எண் 7218—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நீர்நிலைகளிலும், நீர்வழிப் பாதைகளிலும் காலி மதுபுட்டிகள் நிரம்பி வழிவதை சுத்தம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

நீர்நிலைகளிலும், நீர்வழிப் பாதைகளிலும் காலி மதுபுட்டிகள் நிரம்பி வழிவதைத் தடுக்க, எச்சரிக்கை பதாகைகள் வைத்து நீர்நிலைகளைக் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆண்டு பராமரிப்பு நிதி மற்றும் அவ்வப்போது கிடைக்கும் சிறப்பு நிதியின்மூலம் நீர்நிலைகள் தூர்வாரி சுத்தம் செய்யப்பட்டு வருகின்றன.

4—

வாய்க்கால் தூர்வாருதல்

வினா எண் 11826—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் ஒன்றியம், அரியலூர் ஊராட்சி, பெரிய ஏரிக்கு செல்லும் PWD வாய்க்காலை தூர்வார அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

ரிஷிவந்தியம் ஒன்றியம், அரியலூர் ஊராட்சி, பெரிய ஏரிக்கு செல்லும் PWD வாய்க்கால், ஆண்டு பராமரிப்பு நிதிமூலம் தூர்வாரப்பட்டு, வாய்க்கால்மூலம் ஏரிக்கு தண்ணீர் சென்று கொண்டுள்ளது. தற்போது பயன்பாட்டிலுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY ... ALONE TRIUMPHS

2022 அக்டோபர் 18]

5—

வாய்க்கால் தூர்வாருதல்

வினா எண் 23457—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பாம்பூரி வாய்க்காலின் இருபுறமும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, தூர்வாரி சீர்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், பாம்பூரி வாய்க்காலை அளந்து எல்லை நிர்ணயம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி வாய்க்கால் Natural Drain Course ஆகும். மேலும், தண்ணீர் எவ்வித தடையும் இன்றி செல்வதால் தூர்வாரப்பட வேண்டிய தேவை இல்லை.

6—

கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கட்டடம்

வினா எண் 3375—திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை தொகுதியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதியில் உள்ள 14 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் 13 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் சொந்தக்

கட்டடத்தில் இயங்கி நல்ல நிலையில் உள்ளன. மூவலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் மட்டும் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இச்சங்கத்திற்குச் சொந்தமாக மூவலூர் தெற்கு ரதவீதியில் 2,000 சதுர அடி பரப்பளவில் காலிமனை உள்ளது. சங்க உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் வந்து செல்வதற்கும், வியாபார நடவடிக்கைகளுக்கும் அவ்விடம் ஏற்றதாக இல்லை. எனவே, மேற்படி சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

7—

விவசாயக் கடன்கள் வழங்குதல்

வினா எண் 3594—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *விவசாயக் கடன்களை கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் விரைந்து வழங்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் மாநிலம் முழுவதும் செயல்படும் 4,451 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வாயிலாக விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் (2020-2021) 12,37,448 விவசாயிகளுக்கு ரூ.9,504.13 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில், 9,57,183 குறு, சிறு விவசாயிகளுக்கு ரூ.7,034.27 கோடியும், 1,14,330 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.755.81 கோடியும் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் (2021-2022) பயிர்க் கடன் வழங்குவதற்கு ரூ.11,500 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 15-3-2022 வரை ரூ.9,829.05 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. இது கடந்த நிதியாண்டில் வழங்கப்பட்ட கடன்களைவிட ரூ.325 கோடி

2022 அக்டோபர் 18]

அதிகமாகும். மேலும், 11,75,609 குறு, சிறு விவசாயிகளுக்கு ரூ.7,766.36 கோடியும், 1,40,492 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.810.60 கோடியும் நடப்பு நிதியாண்டில் பயிர்க் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களிலும், மத்திய கூட்டுறவு வங்கிகளிலும் விவசாயிகளுக்கு அவர்களின் கடன் தேவைக்கேற்ப தேவையான அளவிற்கு கடன் வழங்குவதற்கு போதுமான நிதி வசதி உள்ளது. எனவே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் தகுதியான விவசாயிகளுக்கு அவர்கள் விண்ணப்பம் செய்த உடன் காலதாமதமில்லாமல் உடனுக்குடன் கடன் வழங்கப்பட்டு வருகிறது.

8—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 4107—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் வட்டம், ஒட்டப்பிடாரம் ஒன்றியம், தெற்கு வீரபாண்டியாபுரம் நியாய விலைக் கடை அமைந்துள்ள குமரெட்டியாபுரம் கிராமத்திற்கு கிளைக் கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி சரகம், சாமிநத்தம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின்கீழ் 2 முழுநேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட சங்கம் நடத்தும் தெற்கு வீரபாண்டியாபுரம் தாய்க் கடையில் 452 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில், குமரெட்டியாபுரம் பகுதியைச் சார்ந்த 180 குடும்ப அட்டைகளும் அடங்கும். மேலும், குமரெட்டியாபுரம் பகுதிக்கும், தாய்க் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 1 கி.மீ.-க்கு உட்பட்டே

உள்ளது. எனவே, அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாததால், குமரெட்டியாபுரம் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

9—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 4111—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் வட்டம், ஒட்டப்பிடாரம் ஒன்றியம், தருவைக்குளத்தில் நியாய விலைக் கடை அமைந்துள்ள சமத்துவபுரம் கிராமத்திற்கு கிளைக் கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி சரகம், 0.1035 தருவைக்குளம் கூட்டுறவு பண்டகசாலை லிட்., ஐந்து முழுநேர நியாய விலைக் கடைகளையும், இரண்டு பகுதிநேர நியாய விலைக் கடைகளையும் நடத்தி வருகிறது. இப்பண்டகசாலை நடத்திவரும் தருவைக்குளம் (26FD008PY) நியாய விலைக் கடையில் சமத்துவபுரம் பகுதியைச் சேர்ந்த 10 குடும்ப அட்டைதாரர்கள் மட்டுமே அத்தியாவசியப் பொருட்கள் பெற்று வருகின்றனர்.

சமத்துவபுரம் கிராமம், தாய்க் கடையான தருவைக்குளம் கடை எண் 2 நியாய விலைக் கடையிலிருந்து 2.5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளபோதிலும், அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாததால் சமத்துவபுரம் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

10—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 4114—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் வட்டம், ஒட்டப்பிடாரம் ஒன்றியம், கொ.தளவாய்புரம் நியாய விலைக் கடை அமைந்துள்ள கந்தசாமிபுரம் கிராமத்திற்கு கிளைக் கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி சரகம், ஏ.149 ஒட்டப்பிடாரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின்கீழ் 7 முழுநேர நியாய விலைக் கடைகளும், 2 பகுதிநேர நியாய விலைக் கடைகளும் இயங்கி வருகின்றன. இச்சங்கம் நடத்திவரும் கொ.தளவாய்புரம் நியாய விலைக் கடையில் கந்தசாமிபுரம் பகுதியைச் சேர்ந்த 85 குடும்ப அட்டைதாரர்கள் அத்தியாவசியப் பொருட்கள் பெற்று வருகின்றனர்.

கந்தசாமிபுரம் கிராமம் தாய்க் கடையான கொ.தளவாய்புரம் நியாய விலைக் கடையிலிருந்து 2 கி.மீ. தூரத்தில் உள்ளது. எனினும், கந்தசாமிபுரம் பகுதியில் 85 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதால், அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் கந்தசாமிபுரம் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

11—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 4115—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் வட்டம், தூத்துக்குடி ஒன்றியம், குலையன்கரிசல் நியாய விலைக் கடை அமைந்துள்ள இரத்தினகிரி கிராமத்திற்கு கிளைக் கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி சரகம், 0.961 தூத்துக்குடி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை நடத்திவரும் குலையன்கரிசல் முழுநேர நியாய விலைக் கடையில் மொத்தம் 652 குடும்ப அட்டைகள் உள்ளன. இக்கடையில் இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த 50 குடும்ப அட்டைதாரர்கள் அத்தியாவசியப் பொருட்கள் பெற்று வருகின்றனர்.

உத்தேசிக்கப்பட்டுள்ள இரத்தினபுரி நியாய விலைக் கடை தாய்க் கடையான குலையன்கரிசல் கடையிலிருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ளது. இருப்பினும், உத்தேசிக்கப்பட்டுள்ள இரத்தினபுரி பகுதியில் 50 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ள நிலையில், இந்நேர்வில், அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாததால் இரத்தினபுரி பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

12—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 4122—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி வட்டம், தூத்துக்குடி ஒன்றியம், மேலதட்டப்பாறையில் இயங்கிவரும் நியாய விலைக் கடையிலிருந்து எஸ்.எஸ். காலனி கிராமத்திற்கு கிளைக் கடை அமைத்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி சரகம், மேலத்தட்டப்பாறை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின்கீழ் 5 முழுநேர நியாய விலைக் கடைகள் மற்றும் 5 பகுதிநேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. மேற்படி சங்கம் நடத்தும் மேலத்தட்டப்பாறை தாய்க் கடையில் 689 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில், எஸ்.எஸ். காலனி பகுதியைச் சேர்ந்த 50 குடும்ப அட்டைகளும் அடங்கும். எஸ்.எஸ். காலனி பகுதிக்கும், தாய்க் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 0.5 கி.மீ. மட்டுமே உள்ளது. எனவே, அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாததால் எஸ்.எஸ். காலனி பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய நிலை எழவில்லை.

13—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 4126—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி வட்டம், தூத்துக்குடி ஒன்றியம், வடக்கு சிலுக்கன்பட்டி நியாய விலைக் கடை அமைந்துள்ள முத்துசாமிபுரம் கிராமத்திற்கு கிளைக் கடை அமைத்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி சரகம், இஇ152 மேலத்தட்டப்பாறை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின்கீழ் 5 முழுநேர நியாய விலைக் கடைகள் மற்றும் 5 பகுதிநேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட சங்கம் நடத்தும் வடக்கு சிலுக்கன்பட்டி பகுதிநேர நியாய விலைக் கடையில் 237 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில், முத்துசாமிபுரம் பகுதியைச் சேர்ந்த 50 குடும்ப அட்டைகளும் அடங்கும். பகுதிநேரக்

கடையான வடக்கு சிலுக்கன்பட்டிக்கும், முத்துசாமிபுரம் பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 1 கி.மீ. உள்ளது. எனவே, அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாததால் முத்துசாமிபுரம் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

14—

நியாய விலைக் கடை, ஊழியர்கள் நியமனம்

வினா எண் 12407—திரு. இரா. அருள்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நியாய விலைக் கடைகளில் ஊழியர் பற்றாக்குறையிருப்பதால் ஊழியர்களை நியமனம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள காலிப் பணியிடங்கள், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983, பிரிவு 74-ன்படி அமைக்கப்பட்ட மாநில ஆள்சேர்ப்பு நிலையம் மற்றும் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையங்கள்மூலம் நிரப்பப்படுகின்றன.

அதன்படி, கூட்டுறவுச் சங்கங்களில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் செயல்படும் நியாய விலைக் கடைகளில் ஏற்படும் விற்பனையாளர் மற்றும் கட்டுநர் காலிப் பணியிடங்களை அவ்வப்போது கண்டறிந்து மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையங்கள்மூலம் நிரப்புவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

15—

கூட்டுறவுச் சங்கங்கள், பணியாளர்கள் நியமனம்

வினா எண் 12759—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 அக்டோபர் 18]

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனையாளர்கள் கட்டுநர் மற்றும் எடையாளர் பணியாளர்கள் பணியிடம் கடந்த பத்தாண்டுகளாக நிரப்பப்படாமல் உள்ளதை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள காலிப் பணியிடங்கள், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983, பிரிவு 74-ன்படி அமைக்கப்பட்ட மாநில ஆள்சேர்ப்பு நிலையம் மற்றும் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையங்கள்மூலம் நிரப்பப்படுகின்றன.

அதன்படி, கூட்டுறவுச் சங்கங்களில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் செயல்படும் நியாய விலைக் கடைகளில் 1-5-2022 அன்றுள்ளவாறு 3,304 விற்பனையாளர் மற்றும் 695 எடையாளர் என மொத்தம் 3,999 காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். எனவே, மேற்காணும் காலிப் பணியிடங்களை மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையங்கள்மூலம் நிரப்புவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

16—

கூட்டுறவு அங்காடிகள், பணியாளர்கள் நியமனம்

வினா எண் 25936—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பரங்குன்றம் தொகுதியில் உள்ள கூட்டுறவு அங்காடிகளில் விற்பனையாளர்கள் மற்றும் பணியாளர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்படும் விற்பனையாளர்கள் மற்றும் கட்டுநர்கள் காலிப் பணியிடங்கள்,

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983, பிரிவு 74-ன்படி அமைக்கப்பட்ட மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையங்கள்மூலம் நிரப்பப்படுகின்றன.

எனவே, திருப்பரங்குன்றம் தொகுதியில் உள்ள கூட்டுறவு அங்காடிகளில் ஏற்படும் காலிப் பணியிடங்களை அவ்வப்போது கண்டறிந்து, மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்மூலம் நிரப்புவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

17—

விவசாயிகளுக்கு மரபணு விதை வழங்குதல்

வினா எண் 4163—திரு. G.V. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு வேளாண்மை—உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரசு அமைத்துக் கொடுத்த பசுமைக் குடில் (GREEN HOUSE) போன்றவற்றில் பயிரிடும் மரபணு (HYBRID BREED) விதைகளை விவசாயிகளுக்கு வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

வீரிய ரக காய்கறிகளின் நடவு செடிகளை கொள்முதல் செய்து பசுமைக் குடில்களில் பயிரிடுவதற்காக தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.70/- வீதம் அதிகபட்சமாக 4,000 சதுர மீட்டர் வரை ஒரு விவசாயிக்கு பின்னேற்பு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

18—

மண் அரிப்பைத் தடுத்தல்

வினா எண் 12477—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விவசாய மானாவாரி நிலங்களில் சரிவான பகுதிகளில் மண் அரிப்பைத் தடுக்க தடுப்புக்கல் (Contour bunding) அமைக்க அரசு முன்வருமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

மானாவாரி நிலங்களில் கடந்த 5 ஆண்டுகளில் வயல்வரப்புகள் 65,575.00 எக்டர் பரப்பில், நீடித்த நிலைத்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கம் மற்றும் முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம் ஆகிய திட்டங்களின் வாயிலாக திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர், கரூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், மதுரை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், சிவகங்கை, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி ஆகிய 27 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பல்நோக்கு நீர்த்தேக்கங்களுக்குள் மழை நீரினால் அடித்துச் செல்லப்படும் வண்டல் மண் படிந்து, அதன் கொள்திறன் குறைவதைத் தடுக்கவும், மண்ணை அதன் இடத்திலேயே நிறுத்தி நிலத்தின் தரம் மற்றும் ஈரத்தினை நிலைநிறுத்தவும் ஒன்றிய அரசுடன் ஒன்றிணைந்து மாநில அரசால் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்பெண்ணையாறு மற்றும் ஈரோடு மாவட்டத்தில் மேட்டூர் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டுவரும், நதிப் பள்ளத்தாக்குத் திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டப் பகுதிகளில் அமைந்த நீர்வடிப் பகுதிகளில் தனிப்பட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில், விவசாயிகளின் நிலங்களில் கல் சுவர் அமைக்கும் பணி 50 சதவிகிதம் விவசாயிகள் பங்களிப்போடு கடந்த நிதியாண்டில் 12.00 எக்டர் பரப்பில் செயல்படுத்தப்பட்டுள்ளன. நடப்பு 2022-2023 ஆம் நிதியாண்டிலும் தொடர்ந்து கல் சுவர் அமைக்கும் இத்திட்டம் விவசாயிகளின் நிலங்களில், 50 சதவிகிதம் விவசாயிகள் பங்களிப்போடு செயல்படுத்தப்படும்.

19—

துணை மண்டலம் அமைத்தல்

வினா எண் 18200—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொள்ளாச்சியில் தென்னை வளர்ச்சி வாரியத்தின் துணை மண்டல மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் தென்னை வளர்ச்சி வாரியத்தின் மண்டல அலுவலகம் சென்னையில் செயல்பட்டு வருகிறது. துணை மண்டல மையம் அமைத்திட பூர்த்தி செய்ய வேண்டிய நிபந்தனைகள் குறித்து தென்னை வளர்ச்சி வாரியத்தை தொடர்பு கொண்டு கேட்டபோது போதுமான "பணியாளர்கள் மற்றும் நிதி வசதி இல்லை என்பதாலும், திருப்பூர் மாவட்டம், தளி பேரூராட்சியில் தென்னை வளர்ச்சி வாரியத்தின் செயல் விளக்கம் மற்றும் விதை உற்பத்தி பண்ணை தேவையான தொழில்நுட்ப அலுவலர்களுடன் செயல்பட்டு வருவதாலும் பொள்ளாச்சியில் தென்னை வளர்ச்சி வாரியத்தின் துணை மண்டலம் அமைக்க தேவை எழாது" என தென்னை வளர்ச்சி வாரியம் தெரிவித்துள்ளது.

20—

காளான், வாத்து வளர்ப்பு ஊக்குவித்தல்

வினா எண் 21133—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விவசாயிகள் இடையே சிப்பிக் காளான், வாத்து வளர்ப்பை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் காளான் வளர்ப்பை ஊக்குவிக்கும்பொருட்டு காளான் வளர்ப்புக்கூடம் அமைப்பதற்கு மானியம்

2022 அக்டோபர் 18]

வழங்கப்படுகிறது. 2022-2023 ஆம் ஆண்டு மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (SHDS) 600 சதுர அடி அளவுள்ள காளான் வளர்ப்புக்கூடம் அமைப்பதற்கு 50 சதவிகித மானியமாக ரூ.50,000/- வழங்கப்படுகிறது. மேலும், வாத்து வளர்ப்பிற்கென தோட்டக்கலைத் துறையில் எந்த மானியமும் வழங்கப்படவில்லை.

21—

வெள்ளை பூச்சி ஈக்களை ஒழித்தல்

வினா எண் 23307—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொள்ளாச்சி பகுதியில் தென்னை மரத்தில் உள்ள வெள்ளை பூச்சி ஈக்களை ஒழிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 4 இலட்சத்து 38 ஆயிரம் எக்டர் பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் 87 ஆயிரத்து 700 எக்டர் பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சமீபகாலமாக தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ என்ற பூச்சி தாக்குதல் தென்பட்டதைத் தொடர்ந்து இப்பூச்சியினைக் கட்டுப்படுத்த விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துடன் இணைந்து வேளாண் துறையின் வாயிலாக தொடர்ந்து, கடந்த இரண்டு வருடங்களாக விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. நமது மாநிலத்தில் 2016 ஆம் ஆண்டில் பொள்ளாச்சி பகுதியில் முதன்முதலில் தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ கண்டறியப்பட்டது. இப்பூச்சி மழையின்றி வறண்ட காலநிலையில் அதிகம் பரவும் தன்மை கொண்டது. 2021-2022 ஆம் ஆண்டில், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை பயன்படுத்தி தென்னையில் சுருள் வெள்ளை ஈ

[2022 அக்டோபர் 18

தாக்குதலைக் கட்டுப்படுத்தும்பொருட்டு எக்டருக்கு 20 எண்கள் மஞ்சள் வண்ண ஒட்டுப்பொறி அமைத்தல் மற்றும் சுருள் வெள்ளை ஈ பூச்சிகளை தாக்கி அழிக்கும் எதிர் உயிரி பூச்சியான கிரைசோபெர்லா என்னும் கண்ணாடி இறக்கை பூச்சிகளை எக்டருக்கு 1,000 எண்கள் வீதம் வெளியிடுதல் போன்ற இனங்கள் கோவை மாவட்டத்தில் 6,900 எக்டர் பரப்பில் ரூ.69 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டன. இதில், பொள்ளாச்சி வட்டாரத்தில் 3,500 எக்டர் பரப்பில் ரூ.35 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. மேலும், வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் நடப்பாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

22—

அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல்

வினா எண் 24055—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், மேலராதாநல்லூர் ஊராட்சி, பழுதடைந்த கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், மேலராதாநல்லூர் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல் தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் புதுப்பித்தல் தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது மேற்படி கட்டடத்தைப் புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2022 அக்டோபர் 18]

23—

அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல்

வினா எண் 24056—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், திருவிடைவாசல் ஊராட்சி, பழுதடைந்த கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், திருவிடைவாசல் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல் தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் புதுப்பித்தல் தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது மேற்படி கட்டடத்தைப் புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

24—

அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல்

வினா எண் 24061—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், முசிறியம் ஊராட்சி, பழுதடைந்த நாலில் ஒன்று கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், முசிறியம் ஊராட்சி, நாலில் ஒன்று கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல் தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் புதுப்பித்தல் தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது மேற்படி கட்டடத்தைப் புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

25—

அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல்

வினா எண் 24062—திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், காவனூர் ஊராட்சி, பழுதடைந்த நட்டுவாக்குடி கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், காவனூர் ஊராட்சி, நட்டுவாக்குடி கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல் தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் புதுப்பித்தல் தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது மேற்படி கட்டடத்தைப் புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2022 அக்டோபர் 18]

26—

அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல்

வினா எண் 24064—திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், உத்திரங்குடி ஊராட்சி, பழுதடைந்த கீழப்பாலையூர் கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், உத்திரங்குடி ஊராட்சி, கீழப்பாலையூர் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல் தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் புதுப்பித்தல் தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது மேற்படி கட்டடத்தைப் புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

27—

அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல்

வினா எண் 24065—திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், உத்திரங்குடி ஊராட்சி, பழுதடைந்த கீரந்தங்குடி கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2022 அக்டோபர் 18*

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், உத்திரங்குடி ஊராட்சி, கீரந்தங்குடி கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல் தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் புதுப்பித்தல் தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது மேற்படி கட்டடத்தைப் புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

28—

அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல்

வினா எண் 24066—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், கமலாபுரம் ஊராட்சி, பழுதடைந்த கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், கமலாபுரம் ஊராட்சி, கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல் தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் புதுப்பித்தல் தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது மேற்படி கட்டடத்தைப் புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2022 அக்டோபர் 18]

29—

அலுவலகக் கட்டடங்கள் புதுப்பித்தல்

வினா எண் 24067—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், பருத்தியூர், திருக்கண்ணமங்கை, அகரத்திருநல்லூர், காட்டூர், அரசவனங்காடு, கீரங்குடி மற்றும் செம்மங்குடி ஊராட்சிகளில் பழுதடைந்த கிராம நிருவாக அலுவலகக் கட்டடங்களைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், பருத்தியூர், திருக்கண்ணமங்கை, அகரத்திருநல்லூர், காட்டூர், அரசவனங்காடு, கீரங்குடி மற்றும் செம்மங்குடி ஊராட்சிகளில் பழுதடைந்த கிராம நிருவாக அலுவலகக் கட்டடங்கள் புதுப்பித்தல் தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடங்களைப் புதுப்பித்தல் தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துருக்கள் பெறப்படும்போது மேற்படி கட்டடங்களைப் புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

30—

அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல்

வினா எண் 24075—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், வடகண்டம் ஊராட்சி, பழுதடைந்த கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், வடகண்டம் ஊராட்சி, கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல் தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் புதுப்பித்தல் தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது மேற்படி கட்டடத்தைப் புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

31—

அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல்

வினா எண் 24076—திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், செம்மங்குடி ஊராட்சி, பழுதடைந்த தீபங்குடி கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், செம்மங்குடி ஊராட்சி, தீபங்குடி கிராம நிருவாக அலுவலகக்

2022 அக்டோபர் 18]

கட்டடம் புதுப்பித்தல் தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் புதுப்பித்தல் தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது மேற்படி கட்டடத்தைப் புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

32—

வீடுகள் வழங்குதல்

வினா எண் 17805—திரு. சீ. கதிரவன்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மண்ணச்சநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் வீடற்றவர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக வீடுகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ)

i. நில உரிமம் பெற்று, சொந்தமாக மனையினைக் கொண்ட, ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்குக்கீழ் நகரங்களில் வாழும் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர் மற்றும் நகர ஏழைக் குடும்பங்களுக்கு அவர்கள் சொந்த மனையில் வீடு கட்ட மானியமாக குடும்பம் ஒன்றிற்கு பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டத்தின்கீழ் ரூ.2.10 இலட்சம் வழங்கப்படுகிறது.

ii. மண்ணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மண்ணச்சநல்லூர் பேரூராட்சியில் இருங்களூர் பகுதியில் பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டத்தின்கீழ், 157 வீடுகள் கட்ட அரசிடம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இவற்றுள் 94 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 49 வீடுகளுக்கான பணிகள்

நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 14 வீடுகளுக்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

iii. ஆட்சேபகரமான பகுதியில் குடியிருந்துவரும் மக்களை மறுகுடியமர்வு செய்வதற்கு அரசால் உரிய நிலங்கள் கண்டறியப்பட்டு, அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. திட்டச் செலவில் அரசு மானியம் நீங்கலாக உள்ள மீதித் தொகையினை பயனாளிகள் செலுத்த வேண்டும்.

iv. தகுதிப் பட்டியல் தயார் செய்து உரிய காலி நிலம் தேர்வு செய்யப்பட்டு வாரியத்தின் பெயரில் மாற்றம் செய்யப்பட்டால், பயனாளிகள் பங்களிப்புத் தொகையினைச் செலுத்த சம்மதம் தெரிவிக்கும்பட்சத்தில், அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித் தரப்படும். பொருளாதாரத்தில் நலிவுற்ற குடும்பங்கள் இதுபோன்ற திட்டங்களால் பயன்பெறலாம்.

v. மண்ணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மண்ணச்சநல்லூர் பேரூராட்சியில் இருங்களூர் பகுதியில் 768 அடுக்குமாடிக் குடியிருப்புகள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்ட அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவற்றுள் 528 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 240 குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் டிசம்பர் 2022-ல் முடிவுறும் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

33—

விற்பனைப் பத்திரம் வழங்குதல்

வினா எண் 11955—திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, புதுவண்ணை, பாப்பான் அலி தோட்டம், தனபால் நகரில் வசிப்பவர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலமாக விற்பனைப் பத்திரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை தண்டையார்பேட்டை, பாப்பான் அலி தோட்டம் திட்டப் பகுதியில் திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் சென்னை பெருநகர மேம்பாட்டுத் திட்டம்-II-ன்கீழ் 100 மேம்படுத்தப்பட்ட மனைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்படி கோயிலுக்குச் சொந்தமான இந்நிலத்தினை வாரியத்தின் பெயரில் நிலக் கிரயம் செய்வது குறித்து கோயில் நிர்வாகத்துடன் இணைந்து தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்படி நிலம் வாரியத்தின் பெயரில் மாற்றம் செய்யப்பட்டவுடன் மேம்படுத்தப்பட்ட மனைகளின் பயனாளிகளுக்கு கிரயப் பத்திரம் வழங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

34—

மானியம் வழங்குதல்

வினா எண் 18133—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உயர் ரக மல்பெரி புதுநடவு செய்யும் விவசாயிகளுக்கு நடவு மானியம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை நீங்கலாக) பட்டு வளர்ப்பினை மேம்படுத்திட, பட்டுப்புழுவின் பிரதான உணவுத் தாவரமான மல்பெரி சாகுபடி பரப்பினை அதிகரித்திட பட்டு வளர்ச்சித் துறையின்மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பட்டுத் தொழிலுக்கு புதிதாக வரும் விவசாயிகளை ஊக்கப்படுத்தும்

வகையில், ஒவ்வோர் ஆண்டும் உயர் ரக மல்பெரி நடவு செய்யும் விவசாயிகளுக்கு மாநில மற்றும் மத்திய பகுதி (சில்க் சமக்ரா) திட்டங்களின்கீழ் மானிய உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2021-2022 ஆம் ஆண்டில் மாநிலத் திட்டத்தின்கீழ், 5,000 ஏக்கரில் மல்பெரி சாகுபடி செய்த 3,197 பட்டு விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.10,500/- வீதம் ரூ.525.00 இலட்சம் மல்பெரி நடவு மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், நடப்பாண்டிலும் மாநிலத் திட்டத்தின்கீழ் உயர் ரக மல்பெரி புதுநடவு செய்ய ஏக்கருக்கு ரூ.10,500/- வீதம் 5,000 ஏக்கருக்கு ரூ.525.00 இலட்சம் மானியமாக வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

35—

மானியம் வழங்குதல்

வினா எண் 18134—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுப்புழு வளர்ப்பில் தனியாக புழு வளர்ப்பு மனை கட்டும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வெற்றிகரமான பட்டுக்கூடு அறுவடைக்கு பட்டுப்புழுக்களுக்கு தரமான மல்பெரி இலைகளை உணவாக வழங்கி வளர்ப்பது அவசியமாகும். அதேபோன்று, பட்டுப்புழுக்களின் ஒவ்வொரு பருவத்திற்கும் ஏற்ப வெப்பம் மற்றும் ஈரப்பதம் பராமரித்து சுகாதாரமான முறையில் வளர்ப்பதும் இன்றியமையாததாகும். இதற்கு தனியாக புழு வளர்ப்பு மனை அமைப்பது அவசியமாகிறது. பட்டுப்புழு வளர்ப்பில் குறு, சிறு விவசாயிகளே அதிகம் ஈடுபடுவதால் தனி புழு வளர்ப்பு மனை அமைப்பதற்காக தேவைப்படும் முதலீட்டிற்கான நிதிச் சுமையினை குறைத்திடும் வகையில், தனி புழு வளர்ப்பு மனை அமைப்பதற்கு

2022 அக்டோபர் 18]

பட்டு வளர்ச்சித் துறையின்மூலம் மாநில மற்றும் மத்திய பகுதி (சில்க் சமக்ரா) திட்டங்களின்கீழ் மானிய உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2021-2022 ஆம் ஆண்டில் மாநிலத் திட்டத்தின்கீழ், 300 தனி புழு வளர்ப்பு மனை அமைத்த 300 பட்டுப்புழு விவசாயிகளுக்கு ரூ.1,20,000/- வீதம் ரூ.360.00 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், நடப்பாண்டிலும் மாநிலத் திட்டத்தின்கீழ், 500 தனி புழு வளர்ப்பு மனை அமைப்பதற்கு ரூ.1,20,000/- வீதம் ரூ.600.00 இலட்சம் மானியமாக வழங்கப்படவுள்ளது.

36—

மின் சாதனங்கள் சீரமைத்தல்

வினா எண் 18693—திரு. இரா. அருள்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சென்னை சைதாப்பேட்டை, வெங்கடாபுரம் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பு E பிளாக்கில் தொங்கிக் கொண்டிருக்கும் மின் சாதனங்களைச் சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

சென்னை, சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் உள்ள வெங்கடாபுரம் திட்டப் பகுதியில் 836 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடி குடியிருப்புத் திட்டப் பகுதிகளில் குடியிருப்போர் நலச் சங்கங்கள் அமைத்து குடியிருப்புகளுக்கான பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள தற்போது திட்டமிடப்பட்டுள்ளது. குடியிருப்போர் நலச் சங்கங்கள் அமைக்கப்படும் திட்டப் பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் ரூ.100.00 கோடி திட்ட மதிப்பீட்டில் அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு புனரமைப்புப் பணிகள் 2022-2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

[2022 அக்டோபர் 18

சென்னை, வெங்கடாபுரம் அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப் பகுதிவாழ் குடும்பங்கள் குடியிருப்பு நலச் சங்கம் அமைத்து பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள ஒத்துழைப்பு அளித்தால், இத்திட்டப் பகுதியில் பழுதடைந்துள்ள மின் சாதனங்களையும் சீரமைக்க விரைவில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

37—

மானியம் வழங்குதல்

வினா எண் 22870—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, வட்டுவன அள்ளி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மல்பெரி பயிர் செய்யப்படும் விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் சுற்று வட்டாரப் பகுதிகளில் பட்டு வளர்ப்புத் தொழிலை மேம்படுத்துவதற்காக பட்டு வளர்ச்சித் துறையின் சார்பில் உதவி இயக்குநர் அலுவலகம் பெண்ணாகரத்தில் செயல்பட்டு வருகிறது. இதன்கீழ் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள பெண்ணாகரம், ஏரியூர், பாலக்கோடு, மாரண்டஹள்ளி, காரிமங்கலம் மற்றும் பாப்பாரப்பட்டி ஆகிய ஆறு இடங்களில் தொழில்நுட்ப சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில், பெண்ணாகரம் தொழில்நுட்ப சேவை மையத்திற்குட்பட்ட வட்டுவன அள்ளி ஊராட்சிப் பகுதியில் 5.00 ஏக்கரில் 4 விவசாயிகளால் மல்பெரி நடவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், 2021-2022 ஆம் ஆண்டில் மல்பெரி புதுநடவு மேற்கொள்ளப்படாததால் மானியத் தொகை ஏதும் வழங்கப்படவில்லை. மேலும், 2022-2023 ஆம் ஆண்டிற்கு மல்பெரி

2022 அக்டோபர் 18]

புதுநடவு மேற்கொள்ள 4 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். நடப்பாண்டில் இப்பகுதியில் மல்பெரி புதுநடவு செய்யும் அனைத்து விவசாயிகளுக்கும் நடவு மானியம் வழங்கப்படும்.

38—

மானியம் வழங்குதல்

வினா எண் 22883—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சிக்குட்பட்ட கே.குள்ளாத்திரம்பட்டி கிராமத்தில் பட்டு விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் சுற்று வட்டாரப் பகுதிகளில் பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலை மேம்படுத்துவதற்காக பட்டு வளர்ச்சித் துறையின் சார்பில் உதவி இயக்குநர் அலுவலகம் பெண்ணாகரத்தில் செயல்பட்டு வருகிறது. இதன்கீழ் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள பெண்ணாகரம், ஏரியூர், பாலக்கோடு, மாரண்டஹள்ளி, காரிமங்கலம் மற்றும் பாப்பாரப்பட்டி ஆகிய ஆறு இடங்களில் தொழில்நுட்ப சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில், பெண்ணாகரம் தொழில்நுட்ப சேவை மையத்திற்குட்பட்ட கூத்தப்பாடி ஊராட்சிப் பகுதியில் 7.00 ஏக்கரில் 5 விவசாயிகளால் மல்பெரி நடவு செய்யப்பட்டுள்ளது. கூத்தப்பாடி ஊராட்சிக்குட்பட்ட கே.குள்ளாத்திரம்பட்டி கிராமத்தில் உள்ள விவசாயிகள் இதுவரை மல்பெரி நடவு மேற்கொள்ளவில்லை.

மேலும், 2021-2022 ஆம் ஆண்டில் மல்பெரி புதுநடவு மேற்கொள்ளப்படாததால் மானியத் தொகை ஏதும் வழங்கப்படவில்லை. 2022-2023 ஆம் ஆண்டிற்கு மல்பெரி புதுநடவு

மேற்கொள்ள 2 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். நடப்பாண்டில் இப்பகுதியில் மல்பெரி புதுநடவு செய்யும் அனைத்து விவசாயிகளுக்கும் நடவு மானியம் வழங்கப்படும்.

39—

மானியம் வழங்குதல்

வினா எண் 22885—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, மரதஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பயிர் செய்யப்படும் மல்பெரி பட்டு விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் சுற்று வட்டாரப் பகுதிகளில் பட்டு வளர்ப்புத் தொழிலை மேம்படுத்துவதற்காக பட்டு வளர்ச்சித் துறையின் சார்பில் உதவி இயக்குநர் அலுவலகம் பெண்ணாகரத்தில் செயல்பட்டு வருகிறது. இதன்கீழ் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள பெண்ணாகரம், ஏரியூர், பாலக்கோடு, மாரண்டஹள்ளி, காரிமங்கலம் மற்றும் பாப்பாரப்பட்டி ஆகிய ஆறு இடங்களில் தொழில்நுட்ப சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில், பாப்பாரப்பட்டி தொழில்நுட்ப சேவை மையத்திற்குட்பட்ட மரதஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் 4.50 ஏக்கரில் 3 விவசாயிகளால் மல்பெரி நடவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், 2021-2022 ஆம் ஆண்டில் 1.50 ஏக்கரில் மல்பெரி புதுநடவு செய்த 1 விவசாயிக்கு மானியத் தொகை வழங்கப்பட்டுள்ளது. 2022-2023 ஆம் ஆண்டிற்கு மல்பெரி புதுநடவு மேற்கொள்ள 2 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். நடப்பாண்டில் இப்பகுதியில் மல்பெரி புதுநடவு செய்யும்

2022 அக்டோபர் 18]

அனைத்து விவசாயிகளுக்கும் நடவு மானியம் வழங்கப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

40—

மானியம் வழங்குதல்

வினா எண் 22886—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பெண்ணாகரம் தொகுதி, மாங்கரை ஊராட்சியில் பயிர் செய்யப்படும் மல்பெரி விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் சுற்று வட்டாரப் பகுதிகளில் பட்டு வளர்ப்புத் தொழிலை மேம்படுத்துவதற்காக பட்டு வளர்ச்சித் துறையின் சார்பில் உதவி இயக்குநர் அலுவலகம் பெண்ணாகரத்தில் செயல்பட்டு வருகிறது. இதன்கீழ் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள பெண்ணாகரம், ஏரியூர், பாலக்கோடு, மாரண்டஹள்ளி, காரிமங்கலம் மற்றும் பாப்பாரப்பட்டி ஆகிய ஆறு இடங்களில் தொழில்நுட்ப சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில், பெண்ணாகரம் தொழில்நுட்ப சேவை மையத்திற்குட்பட்ட மாங்கரை ஊராட்சிப் பகுதியில் 2.00 ஏக்கரில் 2 விவசாயிகளால் மல்பெரி நடவு செய்யப்பட்டுள்ளது.*

மேலும், 2021-2022 ஆம் ஆண்டில் மல்பெரி புதுநடவு மேற்கொள்ளப்படாததால், மானியத் தொகை ஏதும் வழங்கப்படவில்லை. 2022-2023 ஆம் ஆண்டிற்கு மல்பெரி புதுநடவு மேற்கொள்ள 2 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். நடப்பாண்டில் இப்பகுதியில் மல்பெரி புதுநடவு செய்யும் அனைத்து விவசாயிகளுக்கும் நடவு மானியம் வழங்கப்படும்.

[2022 அக்டோபர் 18

41—

மானியம் வழங்குதல்

வினா எண் 22888—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, அரகாசனஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மல்பெரி பயிர் செய்யப்படும் விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் சுற்று வட்டாரப் பகுதிகளில் பட்டு வளர்ப்புத் தொழிலை மேம்படுத்துவதற்காக பட்டு வளர்ச்சித் துறையின் சார்பில் உதவி இயக்குநர் அலுவலகம் பெண்ணாகரத்தில் செயல்பட்டு வருகிறது. இதன்கீழ் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள பெண்ணாகரம், ஏரியூர், பாலக்கோடு, மாரண்டஹள்ளி, காரிமங்கலம் மற்றும் பாப்பாரப்பட்டி ஆகிய ஆறு இடங்களில் தொழில்நுட்ப சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில், பெண்ணாகரம் தொழில்நுட்ப சேவை மையத்திற்குட்பட்ட அரகாசனஅள்ளி ஊராட்சிப் பகுதிகளில் 6 விவசாயிகளால் 7.50 ஏக்கரில் மல்பெரி நடவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், 2021-2022 ஆம் ஆண்டில் 1.50 ஏக்கரில் மல்பெரி நடவு செய்த 1 விவசாயிக்கு மல்பெரி புது நடவிற்கான மானியத் தொகை வழங்கப்பட்டுள்ளது. 2022-2023 ஆம் ஆண்டிற்கு மல்பெரி புதுநடவிற்கு 5 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதில், 1.00 ஏக்கரில் 1 விவசாயி மல்பெரி புதுநடவு செய்துள்ளார். இவருக்கு மானிய உதவிகள் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் இப்பகுதியில் மல்பெரி புதுநடவு செய்யும் அனைத்து விவசாயிகளுக்கும் நடவு மானியம் வழங்கப்படும்.

2022 அக்டோபர் 18]

42—

ஆதரவற்றோர் இல்லம் அமைத்தல்

வினா எண் 28608—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, பொன்னேரியில் ஆதரவற்றோர் இல்லம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சமூக நல இயக்குநரகத்தின்கீழ் மாநில அரசின் மானியம் பெறும் முதியோர் இல்லங்கள், முதியோர்கள் மற்றும் குழந்தைகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகம் மற்றும் ஒன்றிய அரசின் மானியம் பெறும் மூத்த குடிமக்களுக்கான ஒருங்கிணைந்த திட்டம் (IPSrC) *போன்ற திட்டங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

- *திருவள்ளூர் மாவட்டத்தில் ஆதரவற்றோருக்கான 22 பதிவுபெற்ற முதியோர் இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன.*
- *மாநில அரசின் மானியம் பெற்று இயங்கும் சேவாலயா ஒருங்கிணைந்த வளாகம் மற்றும் ஒன்றிய அரசின் மானியம் பெறும் ராஸ் முதியோர் இல்லம் திருவள்ளூர் மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்றன.*
- *திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி பகுதியில்* Paula Greer Memorial Old Age Home, No.1/350, Vijayalakmi Nagar Main Road, Alamathi, Ponneri, Solavaram, Thiruvallur-52 *என்ற பகுதியில் தனியார் இலவச முதியோர் இல்லம் செயல்பட்டு வருகிறது.*
- *மேலும், கூடுதல் தேவை இருப்பின், பொன்னேரி தொகுதியில் புதியதாக முதியோர் இல்லங்கள் துவங்க விதிமுறைகளின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

[2022 அக்டோபர் 18

43—

ஆதரவற்றோர் இல்லம் அமைத்தல்

வினா எண் 28623—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *ஒவ்வோர் ஒன்றியத்திலும், ஆதரவற்றோர்கள், முதியோர்கள் மற்றும் ஊனமுற்றோர் ஆகியோர்களுக்கு சுகாதார வசதியுடன்கூடிய இல்லங்கள் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *சமூக நல இயக்குநரகத்தின்கீழ் மாநில அரசின் மானியம் பெறும் முதியோர் இல்லங்கள், முதியோர்கள் மற்றும் குழந்தைகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் மற்றும் ஒன்றிய அரசின்கீழ் மானியம் பெறும் மூத்த குடிமக்களுக்கான ஒருங்கிணைந்த திட்டம்* (Integrated Programme for Senior Citizens) *கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்பட்டு வருகின்றன:*

i. *மாநிலம் முழுவதும் மாநில அரசின் மானியம் பெறும் 21 முதியோர் இல்லங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

ii. *முதியோர்கள் மற்றும் குழந்தைகளுக்கு இடையே அன்பையும், பாசத்தையும் பகிர்ந்துகொள்ளக்கூடிய சிறப்பு இல்லங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் 2012 ஆம் ஆண்டு முதல் மாநிலம் முழுவதும் தொடங்கப்பட்டு 25 குழந்தைகள் மற்றும் 25 முதியோர்கள் தங்கும் வசதியுடன்கூடிய 42 ஒருங்கிணைந்த வளாகங்கள் 75:25* (அரசு:தன்னார்வத் தொண்டு நிறுவனம்) *என்ற மானிய விகிதத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

iii. *ஒன்றிய அரசின்கீழ் மானியம் பெறும் மூத்த குடிமக்களுக்கான ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ்* (Integrated Programme

2022 அக்டோபர் 18]

for Senior Citizens) *தற்போது மாநிலம் முழுவதும் 66 அரசு சாரா நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் இல்லங்கள்* 90:10 *(ஒன்றிய அரசு:அரசு சாரா நிறுவனம்) என்ற விகிதத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

44—

மீன் விற்பனைக்கூடம் அமைத்தல்

வினா எண் 6759—திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் உள்ள காசிமேடு மீன்பிடித் துறைமுகத்தில் உள்ள ஐஸ் மீன் கமிஷன் வியாபாரிகள் மீன் வியாபாரம் செய்ய, மீன் விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் உள்ள காசிமேடு மீன்பிடித் துறைமுகத்தில் மத்திய அரசு நிதி உதவியுடன் சென்னை துறைமுக பொறுப்புக் கழகம் வாயிலாக சென்னை காசிமேடு மீன்பிடித் துறைமுகம் நவீனபடுத்துதல் மற்றும் மேம்படுத்துவதற்கான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, இத்திட்டத்தின்கீழ் மீன் விற்பனைக்கூடம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

45—

மீனவர்களைத் தடுத்தல்

வினா எண் 7995—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2022 அக்டோபர் 18

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், பழவேற்காடு பகுதி கடற்கரைக்கு அதிவேக போட் கொண்டு மீன்பிடிக்க வரும் காரைக்கால் மீனவர்களைத் தடுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பழவேற்காடு பகுதி கடற்கரையில் அதிவேக போட் கொண்டு மீன்பிடிக்க வரும் காரைக்கால் மீனவர்களைத் தடுத்திட உரிய நடவடிக்கை மீன்வளத் துறையின்மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

46—

மீன் ஏல மையம் அமைத்தல்

வினா எண் 8010—திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், பழவேற்காடு மீன் இறங்குதளத்தில் மீன் ஏலக் கூடத்தினை விரிவுபடுத்தவும், சிறு மீன் வியாபாரிகளுக்கு மீன் ஏல மையம் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், பழவேற்காடு மீன் இறங்குதளத்தில் கூடுதல் மீன் ஏலக்கூடம் அமைக்கவும், சிறு மீன் வியாபாரிகளுக்கு மீன் ஏல மையம் அமைக்கவும் தள ஆய்வு

2022 அக்டோபர் 18]

மேற்கொண்டு அதனடிப்படையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, அரசுக்கு அனுப்பி, அனுமதி கிடைக்கப்பெற்றதும் பணிகள் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

47—

கடைகளை அதிகரித்தல்

வினா எண் 8014—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், பழவேற்காடு மீன் இறங்குதள வளாகத்தில் உள்ள கடைகளை அதிகரிக்கவும், பழுதடைந்துள்ள விற்பனைக்கூடத்தை மாற்று பயன்பாட்டிற்குப் பயன்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், பழவேற்காடு மீன் இறங்குதள வளாகத்தில் மீன் விற்பனைக் கடைகளை அதிகரிக்கவும் மற்றும் பழுதடைந்துள்ள மீன் விற்பனைக்கூடத்தை சீரமைத்து பயன்பாட்டிற்குக் கொண்டுவரவும் உரிய கருத்துரு தயார் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

48—

மீன் விற்பனை அங்காடி கட்டுதல்

வினா எண் 9782—திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள மீன் வியாபாரிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, மீன் விற்பனை அங்காடி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சோழிங்கநல்லூர் பகுதியிலுள்ள மீன் வியாபாரிகளுக்கு, மீன் விற்பனை செய்திட ஏதுவாக வருவாய்த் துறை/சென்னை மாநகராட்சியிடம் போதிய இடம் ஒதுக்கீடு பெறப்பட்டு, மீன் விற்பனை அங்காடி அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

49—

வழிகாட்டுதல் நெறிமுறைகளை உருவாக்குதல்

வினா எண் 10008—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சென்னை காசிமேடு மீன் சந்தையில் வரைமுறையின்றி மக்கள் கூடுவதைத் தவிர்க்க உரிய வழிகாட்டுதல் நெறிமுறைகளை உருவாக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சென்னை காசிமேடு மீன் சந்தையில் பொதுமக்கள் அதிகளவில் கூடுவதால் கொரோனா தொற்று பரவலை தடுத்திடும்பொருட்டு, மீன்வளத் துறை, காவல் துறை, சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை துறைமுக பொறுப்புக் கழக அலுவலர்களிடையே கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, சென்னை காசிமேடு மீன் சந்தையில் வரைமுறையின்றி மக்கள் கூடுவதைத் தடுத்திடும்பொருட்டு, கீழ்க்கண்ட வழிகாட்டு நெறிமுறைகள் வகுத்து கடைபிடிக்கப்பட்டன:

1. *சென்னை மீன்பிடித் துறைமுகத்திற்கு வரும் நுழைவுவாயில்கள் 2 முதல் 3 மட்டுமே திறக்கப்பட்டு, எஞ்சிய நுழைவாயில்கள் மூடப்பட்டன.*

2022 அக்டோபர் 18]

2. மீன்பிடித் துறைமுகத்தின் நுழைவாயில்களில் தடுப்பு அரண்கள் (Barricades) அமைக்கப்பட்டு, பொதுமக்கள் நுழைவது காவல் துறையினரால் தடுக்கப்பட்டது.

3. மீன்பிடித் துறைமுகத்திற்குள் வருகைபுரியும் மீனவர்கள், மொத்த கொள்முதல் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் மீன் வண்டி ஓட்டுநர்கள் ஆகியோர் கண்டறியப்பட்டு, மீன்வளத் துறையின்மூலம் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. மீன்பிடித் துறைமுக வார்ஃப் மற்றும் மீன் ஏலக்கூடம் அமையப் பெற்றுள்ள பகுதிக்குள் மீன்வளத் துறைமூலம் வழங்கப்பட்ட அடையாள அட்டை வைத்துள்ள மீனவர்கள், மீன் விற்பனையாளர்கள், வியாபாரிகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். அடையாள அட்டை இல்லாமல் வரும் பொதுமக்கள் மீன்பிடித் துறைமுகத்திற்குள் தேவையின்றி நுழைவது தடுக்கப்பட்டது.

4. விசைப் படகுகள் மற்றும் நாட்டுப் படகில் இருந்து மீன்கள் இறக்க தனித்தனியே இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அப்பகுதியில் மட்டும் மீன்கள் இறக்கப்பட்டன. சில்லறை வியாபாரிகள் எவரும் மீன் ஏலம் விடும் பகுதிக்குள் அனுமதிக்கப்படவில்லை.

5. மீன்பிடி படகில் இருந்து மீன்கள் இறக்கி ஏலம் விடும் பணிகள் காலை 6 மணிக்குள் முடித்திட கேட்டுக்கொள்ளப்பட்டது. இச்சமயம் சில்லறை விற்பனை செய்பவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

6. சில்லறை மீன் விற்பனை செய்திட பிரத்யேக இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

7. மீன்பிடித் துறைமுகத்திற்குள் நுழையும் வாகனங்களை நிறுத்திட தனியே இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவ்விடத்தில் மட்டும் வாகனங்கள் நிறுத்தப்பட்டன.

8. மீன்பிடித் துறைமுகத்திற்குள் காவல் துறை வாகனம்மூலம் பொதுமக்களுக்கு சமூக இடைவெளி பின்பற்றவும், முகக்கவசம் அணியவும் மற்றும் சானிடைசர்கள் பயன்படுத்தவும் தொடர்ந்து அறிவிப்பு செய்யப்பட்டது.

9. வார இறுதி நாட்கள் மற்றும் விடுமுறை நாட்களில் மீன்பிடித் துறைமுகத்திற்குள் பொதுமக்கள் அதிகளவில் கூடுவதைத் தடுத்திட மீன்வளத் துறை மற்றும் காவல் துறை அலுவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

50—

மீன் விற்பனை அங்காடி

வினா எண் 10047—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மீனவர்களே நேரடியாக மீன் விற்பனை செய்ய மீனவர் சந்தை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் மற்றும் மாநில அரசு நிதியுதவியுடன் பல்வேறு மாவட்டங்களில் 17 மீன் விற்பனை அங்காடிகள் கட்டப்பட்டுள்ளன. இம்மீன் விற்பனை அங்காடிகள் வாயிலாக, மீனவர்கள் மொத்தம் மற்றும் சில்லறை மீன் விற்பனையாளர்களால் நுகர்வோர்களுக்கு மீன்கள் விற்பனை செய்து வரப்படுகிறது. மேலும், 4 மாவட்டங்களில் மீன் விற்பனை அங்காடிகள் அமைத்திட கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

51—

விவசாயிகளுக்கு மீன் வளர்க்க பயிற்சி அளித்தல்

வினா எண் 10131—திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாகப்பட்டினத்தில் மீன்வளப் பல்கலைக்கழகத்தின் மூலமாக உள்நாட்டு மீன் வளர்ப்புக்கு விவசாயிகளைத் தேர்வு செய்யவும், அவர்களுக்குப் பயிற்சியளிக்கவும் அரசு ஆவன செய்யுமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் 2012 முதல் மீன் விவசாயிகள் மற்றும் ஏனைய விவசாயிகளுக்காக மீன் வளர்ப்பு தொழில்நுட்ப உள்வளாக மற்றும் வெளிவளாக பயிற்சிகள், செயல் விளக்கங்கள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் தொடர்ந்து அளித்து வருகின்றது. இதுவரை 58 எண்ணிக்கை மீன் வளர்ப்பு பயிற்சிகள் 2,648 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து விவசாயிகளைத் தேர்வு செய்து அவர்களுக்கு உள்நாட்டு மீன் வளர்ப்பு தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்கிட ஆவன செய்யப்படும்.

52—

சங்குகுளி மீனவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்

வினா எண் 10320—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தூத்துக்குடியில் சங்கு குளிப்பவர்களால் எடுக்கப்படும் பால் சங்குகளை தமிழ்நாடு காதி கிராமத் தொழில் வாரியம்மூலம் மெருகுபடுத்தி சங்கு குளிக்கும் மீனவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டத்தில் 174 வள்ளங்கள் சங்குகுளி உரிமம் பெற்று அவற்றின்மூலம் 348 மீனவர்கள் சங்குகுளி தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள். இத்துறைமூலம் சங்கு எடுப்பதற்கு சங்குகுளி நபர்களை அழைத்துச் செல்லும் படகுகளுக்கு அனுமதி மற்றும் சங்குகுளி மீனவர்களுக்கு குளியோடுவதற்கு அனுமதி மட்டும் வழங்கப்படுகிறது. மீன்வளத் துறை மூலமாகவோ

அல்லது மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவோ சங்குகள் கொள்முதல் செய்திடும் நடைமுறை தற்போது செயல்பாட்டில் இல்லை. மேலும், சங்குகுளி மீனவர்கள் அவர்கள் சேகரிக்கும் சங்குகளை நேரிடையாக சங்கு வியாபாரிகளிடம் விற்பனை செய்கிறார்கள். மேலும், கொள்முதல் செய்யப்படும் சங்குகள் சுத்தப்படுத்தப்பட்டு நல்ல வடிவத்திலும், தரத்திலும் உள்ள சங்குகள், சங்கு வியாபாரிகளால் தேவைப்படும் இடத்திற்கு/ பிற மாநிலத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சங்குகுளி மீனவர்கள், அவர்கள் சேகரிக்கும் சங்குகளை உடனுக்குடன் சங்கு வியாபாரிகளிடம் விற்பனை செய்து அதற்கான வருவாயினைப் பெறுகிறார்கள். எனவே, தூத்துக்குடியில் சங்கு குளிப்பவர்களால் எடுக்கப்படும் பால் சங்குகளை தமிழ்நாடு காதி கிராமத் தொழில் வாரியம்மூலம் மெருகுபடுத்தி சங்குகளை விற்பனை செய்திடும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

53—

மீன் விற்பனைக்கூடம் அமைத்தல்

வினா எண் 10383—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பென்னாகரம் தொகுதி, ஒகேனக்கல் நீர்வீழ்ச்சிப் பகுதி, தகுதியான இடத்தில் நவீன மீன் விற்பனைக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பென்னாகரம் வட்டம், ஒகேனக்கல் நீர்வீழ்ச்சிப் பகுதியில் நவீன மீன் விற்பனை அங்காடி அமைப்பதற்கு போதிய இடம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் வாயிலாகப் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

2022 அக்டோபர் 18]

54—

முத்து வளர்க்க பயிற்சி அளித்தல்

வினா எண் 10384—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் நன்னீரில் முத்து வளர்க்கும் தொழில்நுட்பப் பயிற்சிப் பள்ளியை மீன்வளத் துறைமூலம் ஏற்படுத்தவும் நன்னீரில் முத்து வளர்க்கும் தொழில்நுட்பப் பயிற்சியை மீனவர்களுக்கு வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது திறன் மேம்பாட்டு பயிற்சிகளின் அடிப்படையில் பல்வேறு பயிற்சிகள் மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. எனவே, தமிழ்நாட்டில் தற்போது நன்னீரில் முத்து வளர்க்கும் தொழில்நுட்ப பயிற்சி மையம் அமைத்திட தேவை ஏற்படவில்லை. மீனவர்கள் எதிர்காலத்தில் இதுபோன்ற பயிற்சிகளை வழங்கிடுமாறு கோரும்பட்சத்தில், நன்னீரில் முத்து வளர்க்கும் தொழில்நுட்பப் பயிற்சி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

55—

மீன் வளர்ப்பை ஊக்கப்படுத்துதல்

வினா எண் 10388—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உள்நாட்டு மீன் வளர்ப்பை ஊக்கப்படுத்த சிறப்புத் திட்டம் வகுக்கவும், வேளாண்மைக்கு பயன்படாத கடலோர நிலங்களை மீன் வளர்ப்பதற்குப் பயன்படுத்திக்கொள்ளவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்— மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின்மூலம் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம், பிரதான் மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு மானிய உதவிகள் வழங்கப்பட்டு, சிறப்பு உள்நாட்டு மீன்வள மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் உவர்நீர் மீன் மற்றும் இறால் வளர்ப்பினை மேம்படுத்தும் நோக்கத்துடன் கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் தூத்துக்குடி ஆகிய 6 மாவட்டங்களில் உவர்நீர் மீன் வளர்ப்பிற்கு உகந்த இடங்களைக் கண்டறிந்து வரைபடம் தயாரிக்கும் பணிகள் (Resource mapping) மத்திய உவர்நீர் வாழ் உயிரின வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் (CIBA) மூலம் ரூ.50.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி ஆய்வு அறிக்கையின் அடிப்படையில், இறால் வளர்ப்பினை ஊக்குவிப்பதற்காக அரசு கட்டுப்பாட்டின்கீழ் உள்ள கடலோர தரிசு நிலங்களில் சுற்றுச்சூழலுக்கு உகந்த இறால் வளர்ப்பு மேற்கொள்ள அரசு பரிசீலிக்கும்.

56—

ஏற்றுமதி மண்டலம் உருவாக்குதல்

வினா எண் 10396—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மீன்வளம்– மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் அல்லது கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல் பொருள் ஏற்றுமதி மண்டலம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் மீன்களை பதப்படுத்தி ஏற்றுமதி செய்ய மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை வாயிலாக குந்துகால் மீன் இறங்குதளத்தில் மீன்களை பதப்படுத்துதல் மற்றும் குளிரூட்டும் சேமிப்பு கிடங்கு கட்டப்பட்டுள்ளது. இதேபோன்று மூக்கையூர் மீன்பிடித் துறைமுகத்தில் குளிரூட்டும் சேமிப்பு கிடங்கு கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் மீன் பதனிடும் பூங்கா அமைக்க அரசால் அறிவிப்பு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, இராமநாதபுரம் மாவட்டம், சக்கரக்கோட்டை கிராமத்தில் கடல் உணவு பதப்படுத்தி ஏற்றுமதி செய்யும் விதமாக சிறுதொழில் மேம்பாட்டுக் கழகம் வாயிலாக 100 ஏக்கர் பரப்பளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டு, முதற்கட்டமாக 50 ஏக்கர் நிலம் 29 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, அதனில் 9 பிரிவுகள் கடல் உணவு பதப்படுத்தி ஏற்றுமதி செய்வோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதர 20 பிரிவுகள் கடல் உணவு பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்க தயார் நிலையில் உள்ளன.

கன்னியாகுமரி மாவட்டத்தில், மீன் பதனிடும் பூங்கா அமைக்க அரசால் அறிவிப்பு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, அகஸ்தீஸ்வரம் தாலுகா, மயிலாடி கிராமத்தில் மீன் பதப்படுத்தும் பூங்கா அமைக்க, அரசால் தனியார் தொழில்முனைவோருக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில், நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், விரைவில் கட்டுமானப் பணிகள் துவங்கப்பட உள்ளன. எனவே, இராமநாதபுரம் அல்லது கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல்சார் பொருட்கள் ஏற்றுமதி மண்டலம் அமைக்க வேண்டிய அவசியமில்லை.

57—

கடற்பாசி வளர்ப்பு பயிற்சி அளித்தல்

வினா எண் 10397—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2022 அக்டோபர் 18

(அ) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்மூலம் மீனவர்களுக்கு கடற்பாசி வளர்ப்பு பயிற்சி அளிக்கவும், கடற்பாசி வளர்ப்பை ஊக்கப்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தை பொறுத்தமட்டில், உள்நாட்டு மீன்வளம் சார்ந்த நடவடிக்கைகளே பெரும் அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதாவது, நீர்த்தேக்க மேலாண்மை, மீன்குஞ்சு உற்பத்தி, நன்னீரில் மீன் வளர்ப்பு மற்றும் மீன் விற்பனை முதலியன. கடற்பாசி வளர்ப்பு என்பது கடல் மீன்வள நடவடிக்கை சார்ந்த ஓர் அங்கமாகும். மேலும், ஆழமற்ற கடல்நீர்ப் பகுதிகளிலும் கடலோர கடல்நீர் வடிகால் பகுதிகளிலும் மேற்கொள்ளப்படுகிறது. மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையானது மீனவர்களுக்கும்/மீனவ மகளிருக்கும் கடற்பாசி வளர்ப்பில் பயிற்சியளிப்பதுடன், தமிழகத்தில் குறிப்பிட்ட சில கடலோரப் பகுதிகளில் கடற்பாசி வளர்ப்பினை முழுவதும் மேம்படுத்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையால் அளிக்கப்பெற்ற வழிகாட்டுதல்/பயிற்சிமூலம் கடலோரப் பகுதிகளிலும் கடல் மீனவர்கள் கடற்பாசி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள காரணத்தால், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின்மூலம் கடற்பாசி வளர்ப்பில் மீனவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான தேவை எழவில்லை.

58—

ஆப்பிரிக்க கெளுத்தி மீன் பண்ணைகள் அழித்தல், தடை செய்தல்

வினா எண் 10404—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 அக்டோபர் 18]

(அ) தமிழ்நாட்டில் ஆப்பிரிக்க கெளுத்தி மீன் பண்ணைகளை கண்டறிந்து அழிக்கவும், அத்தகைய மீன் வளர்ப்பை தடை செய்யவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் தடை செய்யப்பட்ட ஆப்பிரிக்க கெளுத்தி மீன் வளர்ப்பினை அழிக்கவும், கட்டுப்படுத்தவும் தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் தீர்ப்பு எண் OA.435/2018, நாள் 22-1-2019-ன்படி அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர்மூலம் குழு அமைத்திட அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து தமிழகத்தில் தடை செய்யப்பட்ட ஆப்பிரிக்க கெளுத்தி மீன் வளர்ப்பினை கண்காணித்து அழிக்க மீன்வளத் துறை அலுவலர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவின்மூலம் தமிழகத்தில் தடை செய்யப்பட்ட ஆப்பிரிக்க கெளுத்தி இன மீன் வளர்ப்புப் பண்ணைகளை கண்காணித்து அழிக்க தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

59—

முத்துக்குளித்தல் தொழிலை மீட்டெடுத்தல், மானியம் வழங்குதல்

வினா எண் 10413—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தூத்துக்குடி முத்துக்குளித்தல் தொழிலை மீட்டெடுக்கவும், சங்கு குளிக்கும் தொழில் செய்பவர்களுக்கு எடை குறைந்த ஆக்ஸிஜன் சிலிண்டர்களை மானிய விலையில் வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி முத்துக்குளித்தல் தொழிலை மீட்டெடுக்க, சங்கு குளிக்கும் தொழில் செய்பவர்களுக்கு எடை குறைந்த ஆக்ஸிஜன் சிலிண்டர்களை மானிய விலையில் வழங்க திட்டங்கள் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

60—

ஏற்றுமதி செய்தல், பதப்படுத்துதல்

வினா எண் 14508—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கடல் பொருட்களை ஏற்றுமதி செய்யவும், பதப்படுத்தவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கடல் உணவுப் பொருட்களை பதப்படுத்தவும் மற்றும் ஏற்றுமதி செய்திடவும், 1. திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி, 2. கன்னியாகுமரி மாவட்டம், மைலாடி கிராமம் மற்றும் 3. தூத்துக்குடி மாவட்டம், சிப்காட் ஆகிய இடங்களில் "மீன் பதப்படுத்தும் பூங்கா" அமைக்க தனியார் தொழில்முனைவோருக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் அரசு நிலம் ஒதுக்கீடு செய்துள்ளது. திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் மீன் பதப்படுத்தும் பூங்கா கட்டப்பட்டு செயல்பாட்டிலுள்ளது. இராமநாதபுரம் மாவட்டம், குந்துகாலில் மீன்களை பதப்படுத்துதல் மற்றும் குளிர்பதனக் கிடங்கு கட்டப்பட்டுள்ளது. இதுபோன்று இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூர் மீன்பிடித் துறைமுகத்தில் மற்றொரு குளிரூட்டும் சேமிப்புக் கிடங்கு கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், இராமநாதபுரம் மாவட்டம், சக்கரக்கோட்டை கிராமத்தில் கடல்

2022 அக்டோபர் 18]

உணவு பதப்படுத்தி ஏற்றுமதி செய்யும் ஆலைகள் சிறுதொழில் மேம்பாட்டுக் கழகம் வாயிலாக 100 ஏக்கர் பரப்பளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டு, முதற்கட்டமாக 50 ஏக்கர் நிலம் 29 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, அதனில் 9 பிரிவுகள் கடல் உணவு பதப்படுத்தி ஏற்றுமதி செய்வோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதர 20 பிரிவுகள் கடல் உணவு பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்க தயார் நிலையில் உள்ளன.

61—

கொங்கோடு வலை பயன்படுத்துவோர்மீது நடவடிக்கை எடுத்தல்

வினா எண் 14509—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகரப் பகுதியில் மேட்டூர் மீன் கூட்டுறவு அங்காடியில் மேட்டூர் அணை மீன்கள் மட்டும் விற்கவும், மேட்டூர் நீர்த்தேக்கப் பகுதிகளில் கொங்கோடு வலையைப் பயன்படுத்தி மீன் குஞ்சுகளை பிடிப்பவர்கள் மற்றும் அவற்றை விற்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மேட்டூர் அணை மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டிலுள்ள மீன்வள ஆய்வாளர் மற்றும் மீன்வள சார் ஆய்வாளர்கள் ஆகியோர் தலைமையில் குழுக்கள் அமைக்கப்பட்டு, மேட்டூர் அணை நீர்த்தேக்கப் பகுதிகளில் ரோந்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி குழுக்களின்மூலம் தடை செய்யப்பட்ட கொங்கோடு வலைகளை பயன்படுத்துவதைத் தவிர்த்திடவும் மற்றும் சட்டவிரோதமாக மீன் பிடிப்பவர்களின் வலை, பரிசல், மீன் மற்றும் கருவாடுகள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

62—

வெடிகள் வீசி மீன் பிடிப்பதைத் தடுத்தல்

வினா எண் 14513—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

காவேரி ஆற்றில் வெடிகள் வீசி மீன் பிடிப்பதைத் தடுத்து, மீன் இனம் காக்கப்படுவதை உறுதிப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சேலம், தருமபுரி மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் பாயும் காவேரியாற்றில் வெடிகள் வீசி மீன் பிடிப்பது உள்ளிட்ட சட்டத்திற்கு புறம்பான முறையில் மீன்பிடிப்பதைத் தடுத்து, மீன் இனங்களை பாதுகாத்திட மேட்டூர் மற்றும் ஒகேனக்கல் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை ஆய்வாளர், ஜேடர்பாளையம் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை சார் ஆய்வாளர், மீன்வள மேற்பார்வையாளர்கள் மற்றும் மீன்வளப் பாதுகாவலர்கள் நியமனம் செய்யப்பட்டு, தீவிர ரோந்துப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்மூலம் காவேரியாறு மற்றும் மேட்டூர் அணை நீர்த்தேக்கப் பகுதிகளில் மீன் இனங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, திருச்சிராப்பள்ளி மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள காவேரி ஆற்றில் வெடிகள் வீசி மீன்பிடிப்பு செய்யும் நிகழ்வுகள் ஏதும் நடைபெறவில்லை. மேலும், வெடி வைத்து மீன் பிடிப்பதை தடுத்து மீன் இனங்களைக் காத்திட மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை, வருவாய்த் துறை மற்றும் பொதுப் பணித் துறை அலுவலர்கள் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டு, தீவிர ரோந்துப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

63—

நரிக்குறவர் கூட்டுறவுச் சங்கம் உருவாக்குதல்

வினா எண் 17656—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 அக்டோபர் 18]

சேலத்தில் நரிக்குறவர் கூட்டுறவுச் சங்கம் உருவாக்கி அவர்களுக்குத் தேவையான வியாபாரப் பொருட்களை விற்கவும், வாங்கவும் வழிவகை செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

நரிக்குறவர் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களில் அதிகபட்சம் 15 உறுப்பினர்களைக் கொண்டு குழுக்களாக அமைத்து, அக்குழுவிற்கு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநரிடமோ அல்லது மாவட்ட கூட்டுறவுச் சங்க இணைப் பதிவாளரிடமோ கடன் விண்ணப்பத்தைப் பெற்று, பூர்த்தி செய்து, திட்ட அறிக்கையுடன் அக்குழுக்களால் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு அக்குழுவால் அளிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டில் 50% அல்லது குழு உறுப்பினர் ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ.10,000/- அல்லது அதிகபட்ச குழு மானியம் ரூ.1.25 இலட்சம், இதில் எது குறைவோ, அத்தொகை பின் நிகழ்வு மானியமாக (Back ended subsidy) கடன் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், நரிக்குறவர் நல வாரிய உறுப்பினர்களுக்குத் தேவையான பல்வேறு நலத் திட்ட உதவிகள் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை மற்றும் தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்மூலம் செயல்படுத்தப்பட்டு வருவதால், சேலத்தில் நரிக்குறவர் கூட்டுறவுச் சங்கம் உருவாக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

64—

தேக்கு மரக்கன்றுகள் நடுதல்

வினா எண் 10128—திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஆற்றுப்படுகைகளில் தேக்கு மரக்கன்றுகளை அதிகளவில் நட்டு வளர்க்க அரசு முன்வருமா?

[*2022 அக்டோபர் 18*

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஆற்றுப்படுகை மற்றும் வாய்க்கால் கரைகளில் பல ஆண்டுகளாக தேக்கு மரங்கள் மாநிலத் திட்டங்களின்மூலம் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. தற்போதைய நிலையில் தேக்கு நாற்றுகள் வனத் துறைமூலம் நடப்பட்டு, 67,610 தேக்கு மரங்கள் ஆற்றுப்படுகைகளில் உள்ளன. மேலும், காலியாக உள்ள ஆற்றுப்படுகைகளில் வரும் ஆண்டுகளில் தமிழக அரசின் படுகை தேக்கு உற்பத்தி திட்டத்தின்கீழ் தேக்கு மரங்கள் வளர்க்கப்படும்.

65—

சந்தன மரங்கள் வளர்த்தல்

வினா எண் 10427—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் தனியார் நிலங்களில் சந்தன மரங்கள் வளர்க்கும் திட்டத்தை மேம்படுத்தும் நடைமுறைகளை எளிமைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தனியார் நிலங்களில் சந்தன மரங்களை வளர்ப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை (நிலை) எண் 140, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 27-11-2008-ல் அமல்படுத்தப்பட்டு நடைமுறையில் உள்ளன. இவ்விதிகளின்படி, எந்தவொரு பட்டாதாரரும் தனது நிலத்தில் சந்தன மரங்களை வளர்க்கலாம். மேலும், பட்டா நிலங்களில் சந்தன மரங்கள் வளர்ப்பதற்கு தடை ஏதும் விதிக்கப்படவில்லை.

2022 அக்டோபர் 18]

66—

மரக்கன்றுகள் நடுதல்

வினா எண் 14242—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், ஏலகிரி ஊராட்சி, ஆஞ்சநேயர் அரசு மற்றும் திரிகோணமலைப் பகுதியில் வனத் துறைமூலம் மரக்கன்றுகள் நட்டு வளர்க்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், ஏலகிரி ஊராட்சி, ஆஞ்சநேயர் அரசு மற்றும் திரிகோணமலைப் பகுதியில் தமிழ்நாடு பசுமை இயக்கத்தின்கீழ் மண்ணின் தன்மைக்கு ஏற்ப, மரக்கன்றுகள் நட்டு வளர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

67—

உணவுப்பொருள் விலையேற்றம் தடுத்தல்

வினா எண் 2182—திரு. இரா. அருள்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஊரடங்கு காலங்களில் உணவுப்பொருள் விலையேற்றத்தைத் தடுத்து நிறுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

ஊரடங்கு காலங்களில் மட்டுமல்லாது எல்லா காலங்களிலும் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தைக் கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும் அரசு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் விலைக் கண்காணிப்புக் குழு ஒன்றை அமைத்து அதன்மூலம்

இன்றியமையாப் பொருட்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. முக்கியமாக அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் மற்றும் காய்கறி வகைகளின் விலைகளை கண்காணித்து அதன் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

மேலும், 25-4-2022 அன்று உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விலைக் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்டவாறு முடிவு மேற்கொள்ளப்பட்டது:

1. இன்றியமையாப் பொருட்களின் விலை உயரும்போது விலை கட்டுப்படுத்தும் நிதியினைப் பயன்படுத்தி விலை உயர்வினை கட்டுக்குள் வைக்க துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.
2. இன்றியமையாப் பண்டங்கள் விற்பனை செய்யும் வர்த்தகர்கள்/மொத்த விற்பனையாளர்களின் பிரதிநிதிகளுடன் மாவட்ட/மாநில அளவில் காலமுறை கூட்டங்கள் நடத்தப்பட்டு, கட்டுப்பாட்டு ஆணைகள் அமலில் இருக்கும் காலங்களில் அனுமதிக்கப்பட்ட அளவில் இருப்பு வைத்திருத்தல் குறித்த முக்கியத்துவம் குறித்து வலியுறுத்த முடிவு செய்யப்பட்டு, அதன் மீதான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
3. விலைக் கண்காணிப்புக் குழுமூலம் இன்றியமையாப் பொருட்களின் விலை விவரங்கள் கண்காணிக்கப்பட்டு, திடீர் விலை உயர்வு ஏற்படின், அதனைக் கட்டுப்படுத்த அரசு உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

ஊரடங்கு காலத்திலும் உணவுப்பொருட்களின் விலை விவரங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டன. மேலும், பொது மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் தங்குதடையின்றி கிடைக்கவும் வழிவகை செய்யப்பட்டது.

68—

OTP அடிப்படையில் பொருட்கள் வழங்குதல்

வினா எண் 2488—திரு. இரா. அருள்: மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2022 அக்டோபர் 18]

நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் அனைத்து பொருட்களுக்கும் செல்போனில் OTP பெற்று அதனடிப்படையில் மட்டுமே பொருட்கள் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

ஒன்றிய அரசின் வழிகாட்டுதலின்படி அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் கைவிரல் படிப்பி முறையின்மூலம் ஆதார் உறுதி செய்யப்பட்டு, இன்றியமையாப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. நியாய விலைக் கடைகளுக்குச் செல்ல இயலாத மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர்களுக்கு அவர்களால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட அங்கீகாரச் சான்றுமூலம் இன்றியமையாப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. கைரேகை தெளிவாக படிக்க இயலாத அனைத்து அட்டைதாரர்களுக்கும் அவர்களது கையொப்பத்தினை உரிய பதிவேட்டில் பெற்று பொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. இதன்மூலம் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் உணவுப்பொருள் விநியோகம் தடையின்றி வழங்கப்பட்டு இன்றியமையாப் பொருட்கள் பெறப்பட்ட விவரம் குடும்ப அட்டைதாரர்களின் குடும்ப அட்டையில் பதிவு செய்யப்பட்ட கைப்பேசி எண்ணிற்கு குறுஞ்செய்தியாக அனுப்பப்படுகின்றது. இதனால் அனைத்து பொருட்களுக்கும் செல்போனில் OTP பெற்று அதனடிப்படையில் மட்டுமே இன்றியமையாப் பொருட்கள் வழங்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

69—

விலைகளைக் கட்டுப்படுத்துதல்

வினா எண் 7238—திரு. இரா. அருள்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

இன்றியமையாப் பொருட்களின் விலையேற்றத்தைக் கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும் அரசு, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் விலைக் கண்காணிப்புக் குழு ஒன்றை அமைத்து அதன்மூலம் இன்றியமையாப் பொருட்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. முக்கியமாக அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் மற்றும் காய்கறி வகைகளின் விலைகளைக் கண்காணித்து அதன் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

மேலும், 25-4-2022 அன்று உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விலைக் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்டவாறு முடிவு மேற்கொள்ளப்பட்டது:

1. இன்றியமையாப் பொருட்களின் விலை உயரும்போது விலை கட்டுப்படுத்தும் நிதியினைப் பயன்படுத்தி விலை உயர்வினை கட்டுக்குள் வைக்க துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

2. இன்றியமையாப் பண்டங்கள் விற்பனை செய்யும் வர்த்தகர்கள்/மொத்த விற்பனையாளர்களின் பிரதிநிதிகளுடன் மாவட்ட/மாநில அளவில் காலமுறை கூட்டங்கள் நடத்தப்பட்டு, கட்டுப்பாட்டு ஆணைகள் அமலில் இருக்கும் காலங்களில் அனுமதிக்கப்பட்ட அளவில் இருப்பு வைத்திருத்தல் குறித்த முக்கியத்துவம் குறித்து வலியுறுத்த முடிவு செய்யப்பட்டு, அதன் மீதான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

3. விலைக் கண்காணிப்புக் குழுமூலம் இன்றியமையாப் பொருட்களின் விலை விவரங்கள் கண்காணிக்கப்பட்டு, திடீர் உயர்வு ஏற்படின், விலையைக் கட்டுப்படுத்த அரசால் உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2022 அக்டோபர் 18]

70—

தரமான, உரிய அளவுடன் பொருட்கள் வழங்குதல்

வினா எண் 12363—திரு. இரா. அருள்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழக மக்களுக்கு நியாய விலைக் கடைகள்மூலம் வழங்கப்படும் உணவுப்பொருட்கள் தரமானதாகவும், உரிய அளவுடனும் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழக மக்களுக்கு நியாய விலைக் கடைகள்மூலம் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி, கோதுமை மற்றும் சர்க்கரையும், சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவை தரமானதாகவும், உரிய அளவுடனும் வழங்கப்பட்டு வருகின்றன.

71—

மது அருந்துபவர்களுக்கு ஸ்மார்ட் கார்டு அளித்தல்

வினா எண் 2205—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மது அருந்துபவர்களுக்கு லைசென்ஸ் முறை கொண்டுவந்து, ஸ்மார்ட் கார்டு அளித்து, மது அருந்தும் ஒருவருக்கு குறிப்பிட்ட அளவு மட்டுமே விற்பனை செய்ய ரேஷன் முறை கொண்டுவர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 14, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (6) துறை, நாள் 9-6-2017-ன்படி தனிநபர் ஒருவருக்கு கீழ்க்கண்ட அளவுகளில் மதுபானம் விற்பனை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது:

வ. எண்	மதுபான வகைகள்	அளவு (லிட்டரில்)
1.	இந்திய தயாரிப்பு மதுபானம் (IMFL)	4.5
2.	இறக்குமதி செய்யப்பட்ட அயல்நாட்டு மதுபானம் (IFL)	4.5
3.	பீர்	7.8
4.	ஒயின்	9.0

மேலும், இலட்சக்கணக்கான நுகர்வோர் மது வாங்கும் நிலையில் அவர்களுக்கு ஸ்மார்ட் கார்டு வழங்கி மதுபானம் விற்பனை செய்யும் முறையை அமல்படுத்துவது என்பது நடைமுறையில் சாத்தியம் இல்லை.

72—

வண்டிக் கூலியை ஏற்றுக்கொள்ளுதல்

வினா எண் 23022—திரு. இரா. அருள்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாஸ்மாக் சரக்குகளுக்கு வண்டியிலிருந்து இறக்கும் கூலியை நிர்வாகமே ஏற்றுக்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

டாஸ்மாக் நிறுவனத்தின் மதுபானக் கிடங்குகளிலிருந்து மதுபானங்களை சில்லறை விற்பனைக் கடைகளுக்கு எடுத்துச் செல்வதற்காக அனைத்து மாவட்டங்களிலும்

2022 அக்டோபர் 18]

ஒப்பந்தப்புள்ளிகள்மூலம் போக்குவரத்து ஒப்பந்ததாரர்கள் இறுதி செய்யப்படுகிறார்கள். மதுபானக் கிடங்குகளிலிருந்து மதுபானங்களை ஏற்றி சில்லறை விற்பனைக் கடைகளில் இறக்குவதற்கு வழங்கப்படும் கூலியானது ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி ஒப்பந்ததாரர்களால் வழங்கப்படுகிறது. மேலும், மதுபானங்களை ஏற்றி, இறக்கும் பணியாளர்களுக்கான வருங்கால வைப்பு நிதி மற்றும் தொழிலாளர் ஈட்டுறுதிக் கட்டணம் ஆகியவை போக்குவரத்து ஒப்பந்ததாரர்களால் செலுத்தப்படுகிறது. எனவே, மதுபானங்களை வண்டியிலிருந்து இறக்கும் கூலியினை டாஸ்மாக் நிறுவனம் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் எழவில்லை.

73—

விற்பனை திணிப்பை தடுத்தல்

வினா எண் 23023—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

டாஸ்மாக் கடைகளில் விற்பனையாகாத சரக்குகளை அனுப்பி, கடை ஊழியர்கள்மீது திணித்து விற்பனை செய்ய வலியுறுத்துவதைத் தடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் அனைத்து மதுபான சில்லறை விற்பனைக் கடைகளுக்கும் சம்பந்தப்பட்ட கடை மேற்பார்வையாளர்களால் கடை விற்பனைக்கு ஏற்றவாறு தேவைப் பட்டியல் தயார் செய்யப்பட்டு மாவட்ட மேலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. கடை மேற்பார்வையாளர்களால் அனுப்பப்படும் தேவைப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள மதுபான வகைகள், மதுபானக் கிடங்குகளில் உள்ள சரக்கு இருப்பு, கடையின் விற்பனை, கடையில் உள்ள சரக்கு இருப்பு ஆகியவற்றை பரிசீலனை செய்த பின்னரே மதுபான சில்லறை விற்பனைக் கடைக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

[2022 அக்டோபர் 18

74—

பேரிகேட் செலவு நிர்வாகம் ஏற்றல்

வினா எண் 23040—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெருந்தொற்றுக் காலத்தில் டாஸ்மாக் கடைகளில் தடுப்பு நடவடிக்கை மற்றும் வாடிக்கையாளர்கள் வருவதற்கு பேரிகேட் உருவாக்க ஏற்படும் செலவினை டாஸ்மாக் நிர்வாகமே ஏற்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் அனைத்து மதுபான சில்லறை விற்பனைக் கடைகளிலும் பெருந்தொற்றுக் காலத்தில் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள மற்றும் வாடிக்கையாளர்கள் வருவதற்கு பேரிகேட் உருவாக்க ஏற்பட்ட செலவினங்களை டாஸ்மாக் நிர்வாகமே மேற்கொண்டுள்ளது.

75—

டாஸ்மாக் ஊழியர்களுக்கு இடைவேளை நேரம் வழங்குதல்

வினா எண் 23066—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

டாஸ்மாக் ஊழியர்களின் நலன் கருதி இயற்கை உபாதைகளை மேற்கொள்ளவும், உணவு இடைவேளை 1 மணி நேரம் வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

2022 அக்டோபர் 18]

டாஸ்மாக் சில்லறை விற்பனைக் கடைகளின் பணி நேரம் நண்பகல் 12-00 மணி முதல் இரவு 10-00 மணி வரை ஆகும். ஒவ்வொரு கடையிலும் 4 முதல் 7 பணியாளர்கள் சுழற்சி முறையில் (Shift basis) பணிபுரிகின்றனர். மேலும், குறிப்பிட்ட மதுபான சில்லறை விற்பனைக் கடை முழுவதும் மேற்பார்வையாளர் கட்டுப்பாட்டில்தான் செயல்பட்டு வருகிறது. எனவே, உணவு இடைவேளை, இயற்கை உபாதைகளை மேற்கொள்ள கடைப் பணியாளர்கள் அவர்களின் வசதிக்கேற்றவாறு அவர்களுக்குள்ளாகவே நேரம் ஒதுக்கீடு செய்துகொள்ள வழிவகை உள்ளது. எனவே, டாஸ்மாக் ஊழியர்களின் நலன் கருதி, இயற்கை உபாதைகளை மேற்கொள்ளவும், உணவு இடைவேளை 1 மணி நேரம் வழங்கவும் அவசியம் எழவில்லை.

76—

மறுவாழ்வு மையம் அமைத்தல்

வினா எண் 28611—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுவிற்கு அடிமையானவர்களை மீட்க ஒவ்வொரு வட்டத்திலும் மறுவாழ்வு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுவிற்கு அடிமையானவர்கள் அப்பழக்கத்திலிருந்து மீள்வதால் ஏற்படக்கூடிய அறிகுறிகளின் பாதிப்புகளை முறையாக அணுக வேண்டிய தேவை உள்ளது. மது மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு ஒருங்கிணைந்த சிகிச்சை மற்றும் மறுவாழ்வு சேவைகள் வழங்கும் நோக்கத்துடன் போதை மீட்பு மையங்கள் அரசால் நிறுவப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[*2022 அக்டோபர் 18*

தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட 20 போதை மீட்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன:-

1.	கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ஆசாரிப்பள்ளம்
2.	அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தருமபுரி
3.	அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தேனி
4.	இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை
5.	கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை
6.	அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை
7.	அரசு இராஜாஜி மருத்துவமனை, மதுரை
8.	மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி
9.	அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர்
10.	அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர்
11.	அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி
12.	அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செங்கல்பட்டு
13.	அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தூத்துக்குடி
14.	அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, வேலூர்
15.	அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருவாரூர்
16.	அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, விழுப்புரம்
17.	அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சேலம்
18.	மாவட்ட தலைமை மருத்துவமனை, கடலூர்
19.	மாவட்ட தலைமை மருத்துவமனை, காஞ்சிபுரம்
20.	மாவட்ட தலைமை மருத்துவமனை, திருப்பூர்

2022 அக்டோபர் 18]

தமிழகத்தில் கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் கள்ளத்தனமாக மது விற்பனை செய்தல் ஆகிய குற்றங்களுக்கு சிறை தண்டனை பெற்று விடுதலையாகி திருந்துபவர்களின் பொருளாதார மறுவாழ்விற்காகவும், அவர்கள் சட்டத்திற்குப் புறம்பான இத்தொழிலை மீண்டும் தொடராமல் வேறு ஆக்கபூர்வமான தொழில்களை மேற்கொள்ள உதவியும், மது அருந்துவதால் ஏற்படும் தீமைகளை பொதுமக்களிடம் விளக்கும் வகையில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தியும், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறைமூலம் போதை மீட்பு மையங்களை சிறப்பாக செயல்படுத்தியும் மதுவிற்கு அடிமையானவர்களை மீட்டல் போன்ற நடவடிக்கைகள் அரசால் சீரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் 21 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு மட்டுமே மது விற்பனை செய்யப்படுவதாலும், மது அருந்துவதால் ஏற்படும் தீமைகளை பொது மக்களிடம் விளக்கும் வகையில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தியும், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறைமூலம் 20 போதை மீட்பு மையங்கள் தற்போது செயல்படுத்தப்பட்டு, மதுவினால் அடிமையானவர்களை மீட்க தொடர் நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருவதால், மதுவிற்கு அடிமையானவர்களை மீட்க மறுவாழ்வு மையம் வட்டந்தோறும் அமைத்திட இயலாது.

77—

தொழிற்சாலைகள் அமைத்தல்

வினா எண் 18696—திரு. இரா. அருள்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நம் நாட்டிலேயே ஆட்டோ லூம்கள் என்றழைக்கப்படும் அதிநவீன தறிகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

நம் நாட்டில் ஆட்டோ லூம்கள் என்றழைக்கப்படும் அதிநவீன தறிகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் அமைப்பது என்பது அரசின் கொள்கை முடிவாகும்.

78—

கூட்டுறவு நூற்பாலையை புனரமைத்தல்

வினா எண் 26055—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் கூட்டுறவு நூற்பாலையை புனரமைத்து மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் கூட்டுறவு நூற்பாலையானது 49,960 கதிர்களுடன் 30-6-1964 அன்று 31.68 ஏக்கர் பரப்பளவில் சேலம் மாவட்டம், அம்மாப்பேட்டையில் ஆரம்பிக்கப்பட்டது. பல்வேறு காரணங்களால் தொடர்ந்து நட்டத்தில் செயல்பட்டதால் நூற்பாலையானது 31-3-2004 அன்று செயலிழந்ததை தொடர்ந்து, ஆலையானது 7-11-2012 அன்று தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983, பிரிவு 37(2)(b)-ன்கீழ் கலைக்கப்பட்டுவிட்டது. இந்நூற்பாலையில் பணியாற்றிய 62 பணியாளர்கள் மற்றும் 877 தொழிலாளர்கள் தன்விருப்ப ஓய்வில் சென்றுள்ளனர்.

மேலும், ஆலையின் சொத்து மதிப்பு ரூ.9.66 கோடியாகவும், கடன் பொறுப்புகள் ரூ.138.03 கோடியாகவும் உள்ள நிலையில், ஆலையை மீண்டும் இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

மேலும், கலைக்கப்பட்ட சேலம் கூட்டுறவு நூற்பாலைக்கு அருகிலுள்ள ஊத்தங்கரையில் கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை இயங்கி வருகிறது. இவ்வாலை இப்பகுதியிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சிட்டா நூல் தேவையினை நியாயமான விலையில் தடையின்றி தொடர்ந்து பூர்த்தி செய்து

2022 அக்டோபர் 18]

வருவதால், சேலம் மாவட்டம், காமராஜர் குடியிருப்பில் செயல்படாத கூட்டுறவு நூற்பாலையை புனரமைக்கவோ அல்லது மீண்டும் இயக்கவோ சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

79—

கூட்டுறவு நூற்பாலை அமைத்தல்

வினா எண் 28527—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, ஆரணி பேரூராட்சியில் கூட்டுறவு நூற்பாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் ஏற்கெனவே இயங்கி வந்த 18 கூட்டுறவு நூற்பாலைகளில் பல்வேறு காரணங்களினால் 12 கூட்டுறவு நூற்பாலைகள் முற்றிலுமாக செயலிழந்தன. இவற்றை மீள திறந்து இயக்க வாய்ப்புகள் இல்லாத காரணத்தால், சட்டபூர்வ ஆய்வு மற்றும் அரசால் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் ஆலோசனையின்பேரில் செயலிழந்த 12 கூட்டுறவு நூற்பாலைகள் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983, பிரிவு 137(2) (b)-ன்கீழ் தற்போது கலைக்கப்பட்டுவிட்டன.

அவற்றுள் பொன்னேரி தொகுதிக்கு அருகாமை மாவட்டங்களிலிருந்த இரண்டு நூற்பாலைகளான காஞ்சிபுரம் வையாவூரில் இயங்கி வந்த கூட்டுறவு நூற்பாலையும், வேலூர் மாவட்டம், அரியூரில் இயங்கி வந்த கூட்டுறவு நூற்பாலையும் பல்வேறு காரணங்களால் தொடர்ந்து நட்டத்தில் செயல்பட்டு வந்த காரணத்தால் கலைக்கப்பட்டுவிட்டன.

தற்போது கீழ்க்காணும் ஆறு கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கி வருகின்றன:

1. அண்ணா கூட்டுறவு நூற்பாலை
2. பாரதி கூட்டுறவு நூற்பாலை
3. கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை
4. புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை
5. கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை
6. இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை

இயங்கும் 6 கூட்டுறவு நூற்பாலைகள் அரசின் முக்கியத் திட்டங்களான வேட்டி-சேலை வழங்கும் திட்டம் மற்றும் பள்ளிக் குழந்தைகளுக்கு சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் துணிகள் விநியோகம் செய்யத் தேவையான நூலை வழங்கி வருகின்றன. இந்நிலையில், பொன்னேரி தொகுதி, ஆரணி பேரூராட்சியில் கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

80—

பஞ்சாலை துவக்குதல்

வினா எண் 28539—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டியில் பஞ்சாலை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் ஏற்கெனவே இயங்கி வந்த 18 கூட்டுறவு நூற்பாலைகளில் பல்வேறு காரணங்களினால் 12 கூட்டுறவு நூற்பாலைகள் முற்றிலுமாக செயலிழந்தன. சட்டப்பூர்வ ஆய்வு மற்றும் அரசால் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் ஆலோசனையின்பேரில் செயலிழந்த 12 கூட்டுறவு நூற்பாலைகள்

2022 அக்டோபர் 18]

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983, பிரிவு 137(2) (b)-ன்கீழ் தற்போது கலைக்கப்பட்டுவிட்டன.

தற்போது கீழ்க்காணும் ஆறு கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கி வருகின்றன:-

1. *அண்ணா கூட்டுறவு நூற்பாலை*
2. *பாரதி கூட்டுறவு நூற்பாலை*
3. *கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை*
4. *புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை*
5. *கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை*
6. *இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை*

இயங்கும் 6 கூட்டுறவு நூற்பாலைகள் அரசின் முக்கியத் திட்டங்களான வேட்டி-சேலை வழங்கும் திட்டம் மற்றும் பள்ளிக் குழந்தைகளுக்கு சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் துணிகள் விநியோகம் செய்யத் தேவையான நூலை வழங்கி வருகின்றன. இந்நிலையில், திருத்துறைப்பூண்டியில் கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

81—

கடைகள் அமைத்தல்

வினா எண் 28546—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *போளூர் தொகுதி, சேத்துப்பட்டு பகுதியில் கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் சார்பில் புதிய கடைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள போளூர் பேரூராட்சிக்கு அருகில் 30 கி.மீ. தொலைவில் ஆரணி விற்பனை நிலையமும், 35 கி.மீ. தொலைவில் திருவண்ணாமலை விற்பனை நிலையமும், 60 கி.மீ. தொலைவில் வந்தவாசி விற்பனை நிலையமும் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன.

போளூர் பேரூராட்சிப் பகுதியிலுள்ள மக்கள் இம்மூன்று விற்பனை நிலையங்களின் மூலமாகப் பயன்பெற்று வருவதால், தற்போதைக்கு போளூர் தொகுதி, சேத்துப்பட்டு பகுதியில் புதிய கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் திறக்கும் அவசியம் எழவில்லை.

82—

சொந்தக் கட்டடம் அமைத்து விற்பனை செய்தல்

வினா எண் 28555—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, மார்ஷல் நேசமணி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தக் கட்டடம், துணிநூல் விற்பனைக் கூடம், வலை தயாரிக்கும் ஆலை அமைக்கவும், பள்ளியாடி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் துணி வகைகளை கன்னியாகுமரி முழுவதும் விற்பனை செய்யவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதிக்குட்பட்ட கஞ்சிக்குழி கிராமத்தில் அமைந்துள்ள கலைக்கப்பட்ட மார்ஷல் நேசமணி

2022 அக்டோபர் 18]

தொழிலியல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான 9,000 சதுர அடி பரப்பளவு (20.66 சென்ட்) கொண்ட தொழிலியல் கூட கட்டடம் பயன்பாடு இல்லாமல் உள்ளது. மேலும், மேற்படி கலைக்கப்பட்ட மார்ஷல் நேசமணி தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் கஞ்சிக்குழி என்கிற கிராமப் பகுதியில் அமைந்துள்ளதாலும், அப்பகுதியில் மக்கள்தொகை சுமார் 2,309 அளவில் மட்டுமே இருப்பதாலும், மற்ற செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களின் வெளிசந்தை உற்பத்தி குறைந்த அளவிலேயே உள்ளது. புதியதாக அந்த கிராமத்தில் துணிநூல் விற்பனைக் கூடம் அமைப்பதற்கான தேவை மற்றும் சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை. மேலும், மேற்படி சங்கக் கட்டடம் 30 ஆண்டுகளுக்குமேல் பழமையான கட்டுமானம் கொண்டும், 17 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்படுத்தப்படாமலும் உள்ளது. வலை தயாரிக்கும் ஆலை அமைக்க மேற்படி சங்கக் கட்டடம் மற்றும் இடத்தினை கோரி நாளது தேதி வரை கோரிக்கை எதுவும் வரப்பெறவில்லை.

குளச்சல் தொகுதிக்குட்பட்ட பள்ளியாடி கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 683 உறுப்பினர்கள் மற்றும் 494 தறிகளுடன் செயல்பட்டு வருகிறது. மேற்படி சங்கத்தில் நார்மல் இரக வேட்டிகள், பெட்சீட்கள், ஈரிழை துண்டுகள், டர்க்கி டவல், தரை விரிப்புகள், சீசன் டவல், மேனோ செக் டவல், தமிழக அரசின் விலையில்லா வேட்டி-சேலை திட்டத்தின் சேலை மற்றும் வேட்டிகள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. பள்ளியாடி கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஆண்டு உற்பத்தி ரூ.3.43 கோடி என்கிற அளவிலும் விற்பனை ரூ.3.85 கோடி என்கிற அளவிலும் மட்டுமே உள்ளது. மேலும், நார்மல் இரகங்களின் உற்பத்தி ரூ.1.49 கோடி மற்றும் விற்பனை ரூ.2.22 கோடி அளவிலும் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை ரூ.0.015 கோடி அளவிலும் உள்ளது. மேற்படி சங்கத்தில் உற்பத்தியாகும் துணி இரகங்கள் சங்கத்தின் தலைமையக விற்பனை நிலையம் மற்றும் மார்த்தாண்டம் விற்பனை நிலையம் ஆகியவற்றின்மூலம் விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், சிறிய அளவிலான கண்காட்சிகளை மாவட்டத்தில் நடத்துவதன்மூலம் கன்னியாகுமரி மாவட்டம் முழுமைக்கும் பண்டிகைக் காலங்களில் அப்பகுதி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் துணி இரகங்களின் விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

[*2022 அக்டோபர் 18*

83—

இலவச வேட்டி-சேலை தயாரிக்க அனுமதி

வினா எண் 28560—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சூலூர் தொகுதியில் உள்ள விசைத்தறி தொழிலாளர்களுக்கு அரசு வழங்கும் இலவச வேட்டி-சேலை தயாரிக்க அனுமதி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொங்கல் பண்டிகையின்போது கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் ஏழை, எளிய மக்களுக்கு வேட்டி-சேலைகள் வழங்கும்பொருட்டு, ஒவ்வோர் ஆண்டும் வேட்டி-சேலை வழங்கும் திட்டத்தினை 1983 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்திற்குத் தேவையான மொத்த சேலைகள் மற்றும் வேட்டிகள் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின்கீழ் வருவாய்த் துறையின் தேவைப் பட்டியலின் அடிப்படையிலும், சங்கங்களில் உள்ள தறிகளின் எண்ணிக்கை மற்றும் சரக உதவி இயக்குநர்களின் பரிந்துரையின் அடிப்படையிலும் சம்பந்தப்பட்ட நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் நெசவாளர்களுக்கு உற்பத்தித் திட்டம் வழங்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையிலேயே வேட்டி-சேலை வழங்கும் திட்டம் பொங்கல் 2022-ன்கீழ் கோயம்புத்தூர் சரகத்தின் சூலூர் தொகுதிக்குட்பட்ட சோமனூர், சுல்தான்பேட்டை, கருமத்தம்பட்டி, வாகராயம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் செயல்பட்டுவரும் 13 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆகஸ்ட் 2021 முதல் டிசம்பர் 2021 வரை 12.48

2022 அக்டோபர் 18]

இலட்சம் சேலைகள் மற்றும் 10.20 இலட்சம் வேட்டிகள் உற்பத்தி செய்ய உற்பத்தி இலக்கு வழங்கப்பட்டு, மேற்படி வேட்டி-சேலைகளின் உற்பத்தி மற்றும் கொள்முதல் பணிகள் நிறைவு செய்யப்பட்டுவிட்டன.

மேலும், தற்போது வேட்டி-சேலை வழங்கும் திட்டத்தினை பொங்கல் 2023-க்கு தொடர்ந்து செயல்படுத்த அரசாணை பெறப்பட்டவுடன், வருவாய்த் துறையின் தேவைப் பட்டியலின் அடிப்படையிலும், சங்கங்களில் உள்ள தறிகளின் எண்ணிக்கை மற்றும் கோயம்புத்தூர் சரக உதவி இயக்குநரின் பரிந்துரையின் அடிப்படையிலும் இத்திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர் சரகத்தின் சூலூர் தொகுதிக்குட்பட்ட சோமனூர், சுல்தான்பேட்டை, கருமத்தம்பட்டி, வாகராயம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் செயல்பட்டுவரும் 13 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேட்டி-சேலை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்து வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

84—

தன்விருப்பப்படி காப்பீட்டு நிறுவனத்தை தேர்வு செய்தல்

வினா எண் 21035—திரு. இரா. அருள்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் வாகனம் வாங்குவோர் காப்பீட்டு நிறுவனத்தை தேர்வு செய்ய வாடிக்கையாளர்களுக்கு தன் விருப்பப்படி தேர்வு செய்யும் உரிமை வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

வாகனம் வாங்குவோர் (வாடிக்கையாளர்கள்) காப்பீட்டு நிறுவனத்தை தன் விருப்பப்படி தேர்வு செய்யும் உரிமை ஏற்கெனவே நடைமுறையில் உள்ளது.

85—

மீட்கப்பட்ட சொத்து விவரம் விளம்பரப்படுத்துதல்

வினா எண் 9839—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தற்போதைய அரசுமூலம் இதுவரையிலும் எவ்வளவு மதிப்புள்ள கோயில் சொத்துகள் மீட்கப்பட்டுள்ளன? மீட்கப்பட்டுள்ள சொத்துகளின் விவரத்தை பொது மக்களின் பார்வைக்கு விளம்பரப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள அறநிறுவனங்களுக்குச் சொந்தமான அசையா சொத்துகளில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகள் இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம், 1959, சட்டப் பிரிவு 78-ன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அகற்றப்பட்டு, மீட்கப்பட்டு வருகின்றன. அதன்படி, தற்போதைய அரசு பொறுப்பேற்ற 7-5-2021-க்கு பின்னர், அதிகளவிலான ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் விவரங்கள் தமிழகம் முழுவதும் சார்நிலை அலுவலர்களிடமிருந்து பெறப்பட்டு தொகுக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி முடிவடைந்ததும், சொத்துகள் மீட்கப்பட்ட பரப்பு, அதன் மதிப்பு ஆகிய விவரங்களை பொது மக்களின் பார்வைக்காக விரைவில் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

86—

விற்பனை நிலையம் அமைத்தல்

வினா எண் 15244—திரு. ம. பிரபாகரன்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 அக்டோபர் 18]

(அ) பெரம்பலூர் தொகுதி, தேனூர் ஊராட்சியில் ஆவின் பால் விற்பனை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேனூர் கிராமப் பகுதி என்பதாலும், தேவையான அளவு கறவை பால் அங்கேயே கிடைப்பதாலும், ஆவின் பாக்கெட் பால் மற்றும் பால் பொருட்கள் அங்கே அமைந்துள்ள தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் கிடைக்கப் பெறுவதாலும், தேனூர் ஊராட்சியில் ஆவின் பால் விற்பனை நிலையம் (Aavin Parlour) *அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், கிராமத்திலுள்ள நபர்கள் முன்வந்து உரிய விண்ணப்பங்கள் அளிக்கும்பட்சத்தில், பார்லர் அமைத்துத் தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

87—

கல்லறைத் தோட்டம் அமைத்தல்

வினா எண் 11362—திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லாவரம் தொகுதி, பல்லாவரம், பம்மல் அனகாபுத்தூர் நகராட்சிப் பகுதியில் திருநீர்மலை பேரூராட்சி, பொழிச்சலூர், திரிசூலம் ஊராட்சிப் பகுதிகளில் கிறிஸ்தவ சிறுபான்மை மக்களுக்கு தனியாக கல்லறைத் தோட்டம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்:

[2022 அக்டோபர் 18

(அ) மற்றும் (ஆ) கிறிஸ்தவர்களுக்கு அரசு புறம்போக்கு இடங்களில் அடக்கஸ்தலங்கள் அமைக்க நிலம் மாற்றம் செய்து அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள்மூலம் வழங்கப்பட்டு வருகிறது. போதிய அரசு நிலங்கள் இன்மையால் இச்சமுதாயத்தை சார்ந்தவர்களுக்கு அடக்க ஸ்தலங்களை அமைத்து தருவதில் உள்ள இடர்பாடுகளைக் களையும்பொருட்டு, தனியார் நிலங்களை நேரடி பேச்சுவார்த்தைமூலம் கையகப்படுத்தி வழங்கிட ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்ட குழுவின்மூலம் உச்சபட்சமாக 2 ஏக்கர் வரையில் நிலத்தினை கையகப்படுத்தி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில், செங்கல்பட்டு மாவட்டத்தில் வசிக்கும் கிறிஸ்தவ சிறுபான்மை மக்களுக்கு கல்லறைத் தோட்டம் அமைப்பதற்கு போதிய இடம் வழங்குவதற்கான நடவடிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

88—

கபர்ஸ்தான் அமைத்தல்

வினா எண் 11363—திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லாவரம் தொகுதி, பம்மல், அனகாபுத்தூர் நகராட்சிகள், பொழிச்சலூர் ஊராட்சிப் பகுதிகளில் சிறுபான்மை முஸ்லிம் மக்களுக்கு இடுகாடு (கபர்ஸ்தான்) அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இஸ்லாமியர்களுக்கு அரசு புறம்போக்கு இடங்களில் கபர்ஸ்தான் அமைக்க நிலம் மாற்றம் செய்து அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள்மூலம் வழங்கப்பட்டு வருகிறது. போதிய அரசு நிலங்கள் இன்மையால் இச்சமுதாயத்தை சார்ந்தவர்களுக்கு கபர்ஸ்தான் அமைத்து தருவதில் உள்ள இடர்பாடுகளைக் களையும்பொருட்டு, தனியார் நிலங்களை

2022 அக்டோபர் 18]

நேரடி பேச்சுவார்த்தைமூலம் கையகப்படுத்தி வழங்கிட ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்ட குழுவின்மூலம் உச்சபட்சமாக 1.5 ஏக்கர் வரையில் நிலத்தினை கையகப்படுத்தி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில், செங்கல்பட்டு மாவட்டத்தில் வசிக்கும் சிறுபான்மை முஸ்லிம் மக்களுக்கு கபர்ஸ்தான் அமைப்பதற்கு போதிய இடம் வழங்குவதற்கான நடவடிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

89—

நீர்த்தேக்கத் தொட்டி, பழைய கட்டடத்தை அகற்றுதல்

வினா எண் 4448—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் (மேற்கு) தொகுதி, 5-வது கோட்டம், அழகாபுரம் புதூரில் தொடக்கப் பள்ளி, மழலையர் பள்ளி வளாகத்தில் பழுதடைந்துள்ள நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் தொடக்கப் பள்ளியில் உள்ள பழைய கட்டடம் ஆகியவற்றை அகற்ற அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

சேலம் (மேற்கு) தொகுதி, 5-வது கோட்டம், அழகாபுரம் புதூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மற்றும் அழகாபுரம் புதூர் அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் அங்கன்வாடி மையம் ஆகியவை ஒரே வளாகத்தில் இயங்கி வருகின்றன. இப்பள்ளி வளாகத்தில் மழலையர் பள்ளி ஏதும் செயல்படவில்லை. மேலும், அழகாபுரம் புதூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் பழுதடைந்த 2 வகுப்பறை கட்டடங்கள் 19-12-2021 அன்றும், அழகாபுரம் உயர்நிலைப் பள்ளி மற்றும் அங்கன்வாடி மையத்திற்குட்பட்ட பழுதடைந்த நிலையில் இருந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 17-2-2022 அன்றும் சேலம் மாநகராட்சிமூலம் இடித்து அப்புறப்படுத்தப்பட்டன.

[2022 அக்டோபர் 18

90—

கல்வித் திறன் மேம்படுத்துதல்

வினா எண் 4452—திரு. இரா. அருள்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமப்புற மாணவர்களின் கல்வித் திறனை மேம்படுத்த புதிய செயல் திட்டத்தினை வகுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

கிராமப்புற மாணவர்களின் கல்வித் திறனை மேம்படுத்துவதற்கு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் மண்டல வாரியான ஆய்வுக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இவ்வாய்வுப் பணிகளில் பள்ளிக் கல்வி அலுவலர்கள் பள்ளிகளை நேரடியாக ஆய்வு செய்து கிராமப்புற மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்த, தனிக் கவனம் செலுத்தி முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள் மற்றும் பள்ளிகளின் தலைமையாசிரியர் ஆகியோர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், தமிழக அரசு கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் ஏற்பட்ட கற்றல் அடைவு குறைபாட்டை நீக்கிட, "இல்லம் தேடிக் கல்வி" எனும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. மாநிலத்திற்கென தனித்துவமான கல்விக் கொள்கையினை வடிவமைத்திட கல்வியாளர்கள் மற்றும் வல்லுநர்களைக் கொண்ட உயர்மட்டக் குழுவினை அமைத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். அக்குழுவின் தலைவராக மாண்பமை டெல்லி உயர் நீதிமன்ற மேனாள் தலைமை நீதியரசர் திரு. த. முருகேசன் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

2022 அக்டோபர் 18]

91—

காலிப் பணியிடங்களை நிரப்புதல்

வினா எண் 18590—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, கொட்டாயூர், சீலநாயக்கனூர் மற்றும் பள்ளிப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் பள்ளிப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் பணியிடம் எதுவும் காலியாக இல்லை. கொட்டாயூர் மற்றும் சீலநாயக்கனூர் அரசு உயர்நிலைப் பள்ளிகளில் மட்டுமே ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு பட்டதாரி ஆசிரியர் பணியிடம் என இரண்டு பணியிடங்கள் காலியாக உள்ளன. இந்த இரண்டு ஆசிரியர் காலிப் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

92—

காலிப் பணியிடங்களை நிரப்புதல்

வினா எண் 18593—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பூச்சூர் அரசு உயர்நிலைப் பள்ளி, பாப்பாரப்பட்டி அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 அக்டோபர் 18

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் பாப்பாரப்பட்டி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பணியிடம் எதுவும் காலியாக இல்லை. பூச்சூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் 2 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் மற்றும் பாப்பாரப்பட்டி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஒரு பட்டதாரி ஆசிரியர் பணியிடமும் காலியாக உள்ளது. இந்த மூன்று காலிப் பணியிடங்களையும் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

93—

இ-சேவை மையங்களில் சான்றிதழ்கள் விரைவாக கிடைத்தல்

வினா எண் 11418—திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் சார்பில் இயங்கிவரும் இ-சேவை மையங்களில், மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கான சான்றிதழ்கள் உடனுக்குடன் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின்கீழ் இயங்கிவரும் அனைத்து இ-சேவை மையங்களிலும் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் சான்றிதழ்கள் பெற விண்ணப்பித்து அதற்குரிய ஒப்புகைச் சீட்டு வழங்கப்படுகிறது. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், சான்றிதழ்களுக்கு ஒப்புதல் அளிப்பது கிடையாது. அச்சான்றிதழ்களை அந்தந்த துறை சார்ந்த அலுவலர்கள் ஒப்புதல் அளித்த பின்பு, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவன இ-சேவை மையங்களில் நகல் எடுத்துத் தரப்படுகிறது.

TRUTH ALONE TRIUMPHS

2022 அக்டோபர் 18]

94—

கட்டணங்கள் முறைப்படுத்துதல்

வினா எண் 11548—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *தமிழ்நாட்டில் தனியார் டிவி* (TV) *கட்டணங்களை ஒரே சீராக முறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *தனியார் டிவி கட்டணங்களை ஒரே சீராக முறைப்படுத்த தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு அதிகாரமில்லை. ஏனெனில், தமிழ்நாடு மட்டுமன்றி இந்தியா முழுவதும் டிவி ஒளிபரப்புக் கட்டணங்களை நிர்ணயிக்கும் மற்றும் முறைப்படுத்தும் அதிகாரத்தை இந்தியத் தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம்* (Telecom Regulatory Authority of India) *மட்டுமே கொண்டுள்ளது.*

95—

செல்போன் செயலி உருவாக்குதல்

வினா எண் 12379—திரு. இரா. அருள்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பொது மக்களுக்கும், அரசுத் துறைகளுக்கும் இடையில் எளிய முறையில் தொடர்பு ஏற்படுத்த, அனைத்துத் துறைகளுக்கும் தனித்தனியாக செல்போன் செயலி ஏற்படுத்த அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[*2022 அக்டோபர் 18*

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொது மக்களுக்கு பல்வேறு அரசுத் துறைகள் சார்ந்த சேவைகளை எளிய முறையில் வழங்கிட, அடுத்த தலைமுறை ஒருங்கிணைந்த இ-சேவை 2.0 சேவை வழங்கல் தளம் மற்றும் கைபேசி செயலி ஆகியவற்றை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் அடுத்த ஆண்டு செயல்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

96—

File Tracking System உருவாக்குதல்

வினா எண் 12516—திரு. இரா. அருள்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரசிடம் பொதுமக்கள் அளித்த மனுக்கள் எந்த நிலையான பரிசீலனையில் உள்ளன என்பதை அறிய (File Tracking System) *இணையதளம் ஒன்றை உருவாக்க அரசு முன்வருமா?*

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்:

அரசிடம் பொதுமக்கள் அளிக்கும் குறைதீர்க்கும் மனுக்கள், மாவட்ட ஆட்சியர் மூலமாகவும், மாண்புமிகு சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலமாகவும் மற்றும் முதல்வரின் முகவரியில் பெறப்படும் குறைதீர்க்கும் மனுக்கள், ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் உள்ளடக்கிய மக்கள் குறைதீர்க்கும் முதல்வரின் உதவி மையம் (Integrated and Inclusive Public Grievance Chief Minister Helpline Management System) *மூலமாகவும் இணையதளத்தில் பதிவு செய்யப்படுகின்றன. அவ்வாறு மனுக்கள் பதிவு செய்யப்படும்போது பொதுமக்களுக்கு குறுஞ்செய்தி ஒன்று அனுப்பப்படுகிறது. அதில், மனு எண் வழங்கப்பட்டு, அதன்மூலம் மனுவின் நிலையினைத் தெரிந்துகொள்ளலாம்.*

2022 அக்டோபர் 18]

97—

Wi-Fi வசதி ஏற்படுத்துதல்

வினா எண் 21189—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அனைத்து கல்வி நிலையங்களிலும் Wi-Fi வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனமானது (TANFINET) தமிழ்நாட்டில் உள்ள 12,525 கிராமப் பஞ்சாயத்துகளையும் கண்ணாடி இழைவடம்மூலம் இணைத்து 1 Gbps அளவிலான அதிவேக அலைக்கற்றையினை வழங்க திட்டமிடப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. தகவல் தொழில்நுட்பவியல் துறைமூலம் அனைத்து கல்வி நிலையங்களிலும் Wi-Fi வசதி ஏற்படுத்தும் திட்டம் தற்சமயம் இல்லை.

98—

தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்

வினா எண் 11478—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் பரிசல் ஓட்டும் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி, தருமபுரியிலிருந்து 52 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. அழகிய காவேரி ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியானது அதன் வலிமையான கர்ஜனை மற்றும் தெறிப்புடன் சுமார் 2,300 அடி உயரத்தில் இருந்து விழும் அருவி, நீரின் அற்புதமான காட்சியை வழங்குகிறது. இங்கு வரும் சுற்றுலா பயணிகளை பரிசல்கள்மூலம் அருவிக்கு அழைத்துச் செல்வதும், எண்ணெய் மசாஜ் செய்த பின்னர் குளிப்பதும் பிரபலமானவைகளாகும்.

இங்கு வருகைபுரியும் சுற்றுலா பயணிகளுக்கு பல்வேறு வசதிகள் ஏற்படுத்துவதற்கு ஏதுவாக, 2021-2022 ஆம் ஆண்டில் சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கையின்போது, "ஒகேனக்கல் சுற்றுலாத் தலத்தை சர்வதேச அளவில் தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என்ற சுற்றுலாத் துறை அறிவிப்பின்படி திட்ட மதிப்பீடு மற்றும் கருத்துருமீது ஒப்புதல் பெறப்பட்டவுடன், அங்கு சுற்றுலா வளர்ச்சித் திட்டப் பணிகள் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். திட்ட மதிப்பீட்டு அறிக்கையில் ஒகேனக்கலில் பரிசல் நிறுத்துமிடம் மற்றும் நுழைவுச் சீட்டு வழங்குமிடம் புதுப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தற்போது, பரிசல் ஓட்டிகளுக்கு, வட்டார வளர்ச்சி அலுவலர், பெண்ணாகரம் அவர்கள்மூலம் அங்கீகார அடையாள அட்டை வழங்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றார்கள். இருப்பினும், மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் சார்ந்த பரிசல் ஓட்டிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

99—

ஆதி திராவிடர் பள்ளிகள், விடுதிகள் தனித்து இயங்குதல்

வினா எண் 17855—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 அக்டோபர் 18]

ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் ஆதி திராவிடர் மாணவர் விடுதிகளை பள்ளிக் கல்வித் துறையுடன் இணைக்காமல் தனித்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

மாநிலம் முழுவதும் 1,138 ஆதி திராவிடர் நலப் பள்ளிகளும், 328 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. இதேபோன்று இத்துறையின்கீழ் 1,324 ஆதி திராவிடர் நல விடுதிகள் மற்றும் 48 பழங்குடியினர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. மேற்காணும் பள்ளிகள் மற்றும் விடுதிகள் அனைத்தும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் தனித்து இயங்கி வருகின்றன.

100—

ஈமச் சடங்கு நிதி உயர்த்துதல்

வினா எண் 28896—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆதி திராவிடர் ஈமச் சடங்கு நிதியை ரூ.5,000/- ஆக உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 105, ஆதி (ம) பந (கொடு.தடு.(2)) துறை, நாள் 19-10-2020-ல் ஈமச் சடங்கிற்கு வழங்கப்படும் தொகையினை ரூ.2,500/-லிருந்து ரூ.5,000/- ஆக உயர்த்தியும், மேற்படி உயர்த்தியதால் ஏற்படும் கூடுதல் செலவினமான ரூ.4,97,50,000/-க்கு நிதி ஒப்பளிப்பும்,

இந்நிதியுதவியை பெறுவதற்கான வருமான வரம்பினை கிராமப்புறங்களில் ரூ.40,000/- எனவும், நகர்ப்புறங்களில் ரூ.60,000/- எனவும் நிர்ணயிக்கப்பட்டதை உயர்த்தி ரூ.72,000/- ஆக நிர்ணயம் செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

பட்டியல்-10

1—

வாகனங்களில் கொண்டு வரப்படும் கழிவுகளை தடுத்தல்

வினா எண் 4200—திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கேரளாவிலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வாகனங்களில் கொண்டு வரப்படும் இறைச்சி கழிவுகளை தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தக்கலை மற்றும் குளச்சல் உட்கோட்ட எல்லையோர காவல் நிலையங்களான களியக்காவிளை, பளுகல், அருமனை, கடையாலுமூடு மற்றும் கொல்லங்கோடு சரகங்களில் சோதனைச் சாவடிகள் அமைத்து காவலர்கள்மூலம் கேரளாவிலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வரும் வாகனங்கள் தணிக்கை செய்யப்பட்டு வருகின்றன. கேரளாவிலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வாகனங்களில் கொண்டு வரப்படும் இறைச்சி கழிவுகள் எல்லையிலே தடுத்து நிறுத்தப்பட்டு திருப்பி அனுப்பப்படுகின்றன. மேலும், இறைச்சி கழிவுகள் கொண்டுவரப்படுவது தெரியவந்தால், வாகனங்கள் பறிமுதல் செய்து சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து காவல் துறை சோதனைச் சாவடிகள்மூலம் கண்காணிக்கப்பட்டு வருவதால், இறைச்சி கழிவுகள் கொண்டுவரப்படுவது முற்றிலும் தடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

2022 அக்டோபர் 18]

2—

காவேரி ஆற்றை தூர்வாருதல்

வினா எண் 3373—திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை தொகுதி, காவேரி ஆறு வருகின்ற பகுதிகளில் குறிப்பாக நகரப் பகுதியில் வரும் பகுதியினை அகலப்படுத்தி, ஆழப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை தொகுதி, காவேரி ஆறு, கடந்த 2020-2021 ஆம் நிதியாண்டில் தூர்வாரும் திட்டத்தின்கீழ் ரூ.36.71 இலட்சம் மதிப்பீட்டில் முழுவதுமாக தூர்வாரப்பட்டது. மேலும், நீர்வளத் துறையின்மூலம் ஆறுகள் மற்றும் பாசன வாய்க்கால்கள் குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே தூர்வாரப்பட்டு வருகின்றன.

3—

ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

வினா எண் 4240—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, வடக்கு பச்சையாறு, நம்பியாறு, கொடுமுடியாறு ஆகிய ஆறுகளின் இருபுறமும் தனியார் ஆக்கிரமிப்புகளை அகற்றிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 அக்டோபர் 18

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, வடக்கு பச்சையாறு, நம்பியாறு, கொடுமுடியாறு ஆகிய ஆறுகளில் தண்ணீர் சீராக செல்வதால் அனைத்து குளங்களும் நிரம்பியுள்ளன. இருந்தபோதிலும், வருவாய்த் துறை உதவியுடன் மேற்கண்ட ஆறுகளின் எல்லைகளை நில அளவை செய்து, ஆக்கிரமிப்பு ஏதும் இருப்பது கண்டறியப்பட்டால், உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

4—

நதிநீர் இணைப்பு திட்டத்திற்கு கூடுதல் நிதி

வினா எண் 4242—திரு. ரூபி ஆர். மனோகரன்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, தாமிரபரணி-கருமேனியாறு-நம்பியாறு நதிநீர் இணைப்பு திட்டத்திற்கு நிதி பற்றாக்குறை உள்ளதால் கூடுதல் நிதி ஒதுக்கித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, தாமிரபரணி-கருமேனியாறு-நம்பியாறு நதிநீர் இணைப்பு திட்டத்தின் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. பணிகளின் முன்னேற்றத்திற்கேற்றவாறு ஒவ்வொரு நிதி ஆண்டும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, அதன்படி செலவினம் மேற்கொள்ளப்பட்டு வருவதால், பணிகள் தொய்வின்றி நடைபெற்று முடிவுறும் தருவாயில் உள்ளன. இத்திட்டத்திற்கு இதுவரை ரூ.877.65 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு, ரூ.784.00 கோடி செலவினம் செய்யப்பட்டுள்ளது. எனவே, நிதி பற்றாக்குறை ஏதும் இல்லை.

2022 அக்டோபர் 18]

5—

படகு சவாரி சேவை

வினா எண் 7744—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தாமிரபரணி ஆற்றை தூர்வாரி ஆக்கிரமிப்புகளை அகற்றி, அகலப்படுத்தி படகு சேவை துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாமிரபரணி ஆறு இயற்கையாகவே மழைநீர் வடிந்து செல்லும் ஆறு ஆகும். எனவே, தூர்வார வேண்டிய அவசியம் எழவில்லை. மேற்படி, ஆறு அளந்து எல்லை நிர்ணயம் செய்யப்பட்டு, ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன. படகு சவாரி சேவை நீர்வளத் துறைமூலம் செய்யப்படுவதில்லை.

6—

நீர்நிலைகளில் எச்சரிக்கை பலகை

வினா எண் 7774—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நீர்நிலைகளில் ஏற்படும் உயிரிழப்புகளை தவிர்க்க அனைத்து நீர்நிலைகளிலும் மக்கள் பார்க்கும் வகையில் எச்சரிக்கை பலகை வைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து நீர்நிலைகளிலும் மக்கள் பார்க்கும் வகையில் எச்சரிக்கை பலகை வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

7—

அணையை உயர்த்துதல்

வினா எண் 7870—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாம்பழத்துறையாறு அணையின் கொள்ளளவின் உயரத்தை மேலும் ஐந்தடி உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில் அமைந்துள்ள மாம்பழத்துறையாறு அணை, மாம்பழத்துறையாற்றின் குறுக்கே 2007-2011-ல் கட்டி முடிக்கப்பட்டு, பாசனம் மற்றும் குடிநீர் பயன்பாட்டில் இருந்து வருகிறது. தற்போது அணையின் உயரத்தை மேலும் உயர்த்த வேண்டிய அவசியம் எழவில்லை.

8—

நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துதல்

வினா எண் 7931—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேட்டூர் அணையில், வெள்ளக் காலங்களில் வரும் உபரி நீரை, தமிழ்நாடு மேக்னசைட் சுரங்கங்களில் தேக்கி, நிலத்தடி நீர்மட்டம் பெருக அரசு ஆவன செய்யுமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

மேட்டூர் அணையில், வெள்ளக் காலங்களில் வரும் உபரி நீரை, தமிழ்நாடு மேக்னசைட் சுரங்கங்களில் தேக்கி, நிலத்தடி நீர்மட்டதை உயர்த்த தொழில்நுட்ப ரீதியாக சாத்தியகூறுகள் இல்லை.

9—

ஆற்றுக் கரையோரங்களில் பூங்கா அமைத்தல்

வினா எண் 18162—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரையில் வைகை ஆற்றுக் கரைகள், சாலைகளில் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாநகராட்சி எல்லைக்குள், மாநகராட்சிமூலம், செல்லூர் இரயில்வே பாலம் முதல் குருவிக்காரன் சாலை வரை, சாலை ஓரங்களில் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

10—

ஆற்றுக் கரையோரங்களில் பூங்கா அமைத்தல்

வினா எண் 18163—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருநெல்வேலியில் தாமிரபரணி ஆற்றுக் கரைகள், சாலைகளில் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலியில் தாமிரபரணி ஆற்றின் கரையில் வெள்ளம் ஏற்படும் காலங்களில் அதிக பாதிப்பு ஏற்படக்கூடும் என்பதால், பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

11—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 21092—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அருகில் அசுவமாநதியில் தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அருகில் உள்ள அசுவமாநதி ஆற்றின் மொத்த நீளம் 21.00 கி.மீ. ஆகும். இந்த ஆற்றில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் ஊராட்சித் துறை மூலமாக 11 தடுப்பணைகள் கட்டப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன. மேலும், தடுப்பணைகள் ஒவ்வொன்றுக்கும் இடைப்பட்ட தூரம் 2 கி.மீ.-க்கும் குறைவாக உள்ளதால், புதிய தடுப்பணைகள் அமைக்க தொழில்நுட்ப ரீதியாக சாத்தியமில்லை.

12—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 23441—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 அக்டோபர் 18]

(அ) கிள்ளியூர் தொகுதி, மங்காடு பகுதி தாமிரபரணி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதி, தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ஏற்கெனவே சப்பாத்து பாலம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இரையுமன்துறை அருகே தடுப்பணை கட்டும் பணி நிறைவடையும் தருவாயில் உள்ளது. மங்காடு பகுதி மேற்குறிப்பிட்ட இரண்டு தடுப்பணைகளுக்கும் இடையில் அமைந்துள்ளது. மேலும், இப்பகுதிகளில் எப்போதும் தண்ணீர் தேங்கியே நிற்கும் என்பதால் கூடுதலாக தடுப்பணை கட்ட வேண்டிய தேவை எழவில்லை.

13—

பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 4119—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தூத்துக்குடி வட்டம், க. புதூர் நியாய விலைக் கடை அமைந்துள்ள கட்டாலங்குளம் கிராமத்திற்கு கிளை கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி சரகம், முடிவைத்தானேந்தல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின்கீழ் 4 முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும் 2 பகுதி நேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட

சங்கத்தின்கீழ் கட்டாலங்குளம் பகுதியில் ஏற்கெனவே முழு நேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. கட்டாலங்குளம் தாய்க் கடையில் 578 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில் க.புதூர் பகுதியைச் சேர்ந்த 250 குடும்ப அட்டைகளும் அடங்கும். க.புதூர் பகுதிக்கும், தாய்க்கடைக்கும் இடைப்பட்ட தூரம் 0.5 கி.மீ. மட்டுமே உள்ளது. எனவே, அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாததால் க.புதூர் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

14—

பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 4120—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தூத்துக்குடி வட்டம், தூத்துக்குடி ஒன்றியம், திம்மராஜபுரம் நியாய விலைக் கடை அமைந்துள்ள ராமசாமிபுரம் கிராமத்திற்கு கிளை கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி சரகம், இ.இ.152 மேலத்தட்டப்பாறை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின்கீழ் 5 முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும் 5 பகுதி நேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவுக் கடன் சங்கம் நடத்தும் பேரூரணி தாய்க்கடையில் 374 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே ராமசாமிபுரம் கிராமத்தில் 70 குடும்ப அட்டைகளுடன் பகுதி நேர கடை செயல்பட்டு வருவதால், ராமசாமிபுரம் கிராமத்தில் புதிய பகுதி நேரக் கடை அமைக்க வேண்டிய நிலை எழவில்லை.

2022 அக்டோபர் 18]

15—

பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 4121—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தூத்துக்குடி வட்டம், தூத்துக்குடி ஒன்றியம், செந்தியம்பலம் நியாய விலைக் கடை அமைந்துள்ள சிவலூர் கிராமத்திற்கு கிளை கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி சரகம், ஓ.855 முடிவைத்தானேந்தல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின்கீழ் 4 முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும் 2 பகுதி நேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட சங்கம் நடத்தும் செந்தியம்பலம் தாய்க் கடையில் 804 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில், சிவலூர் பகுதியைச் சேர்ந்த 40 குடும்ப அட்டைகளும் அடங்கும். சிவலூர் பகுதிக்கும், தாய்க்கடைக்கும் இடைப்பட்ட தூரம் 8 கி.மீ. உள்ளது.

சிவலூர் பகுதியில் 40 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதால், பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், சிவலூர் பகுதியில் நகரும் நியாய விலைக் கடை அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

16—

பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 4124—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தூத்துக்குடி வட்டம், தூத்துக்குடி ஒன்றியம், உமரிக்கோட்டையில் இயங்கி வரும் நியாய விலைக் கடையிலிருந்து

வரதராஜபுரம் கிராமத்திற்கு கிளை கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி சரகம், இ.இ.152, மேலத்தட்டப்பாறை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின்கீழ் 5 முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும் 5 பகுதி நேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவுக் கடன் சங்கம் நடத்தும் உமரிக்கோட்டை முழு நேர நியாய விலைக் கடையில் 399 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில் வரதராஜபுரம் பகுதியைச் சேர்ந்த 95 குடும்ப அட்டைகளும் அடங்கும். வரதராஜபுரம் பகுதிக்கும், தாய்க்கடைக்கும் இடைப்பட்ட தூரம் 2.5 கி.மீ. உள்ளது.

இந்நேர்வில், உமரிக்கோட்டை முழு நேர நியாய விலைக் கடையிலுள்ள 399 குடும்ப அட்டைகளிலிருந்து 142 குடும்ப அட்டைகளைப் பிரித்து செட்டியூரணி பகுதியில் ஏற்கெனவே பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்கப்பட்டுள்ளது. எனவே, தாய் நியாய விலைக் கடையில் 500 குடும்ப அட்டைகளுக்கும்கீழ் உள்ளதாலும், வரதராஜபுரம் பகுதியில் 95 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதாலும், அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாததால் வரதராஜபுரம் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

17—

பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 4125—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி வட்டம், தூத்துக்குடி ஒன்றியம், உமரிக்கோட்டையில் இயங்கி வரும் நியாய விலைக் கடையிலிருந்து கல்லம்பரும்பு கிராமத்திற்கு கிளை கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி சரகம், மேலத்தட்டப்பாறை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின்கீழ் 5 முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும் 5 பகுதி நேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட சங்கம் நடத்தும் உமரிக்கோட்டை முழு நேர நியாய விலைக் கடையில் 399 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில் கல்லம்பரும்பு பகுதியைச் சேர்ந்த 80 குடும்ப அட்டைகளும் அடங்கும். முழு நேரக் கடையான உமரிக்கோட்டைக்கும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் கல்லம்பரும்பு பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 1 கி.மீ. உள்ளது. எனவே, அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாததால் கல்லம்பரும்பு பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

18—

பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 4130—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தூத்துக்குடி வட்டம், இந்திரா நகர் நியாய விலைக் கடையிலிருந்து கீழ்கூட்டுடன்காடு கிராமத்திற்கு கிளை கடை அமைத்துத் தர அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி சரகம், புதுக்கோட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின்கீழ் 4 முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும் 3 பகுதி நேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட சங்கம் நடத்தும் இந்திரா நகர் பகுதி நேர நியாய விலைக் கடையில் 800 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன.

இதில் கீழ்கூட்டுடன்காடு பகுதியைச் சேர்ந்த 450 குடும்ப அட்டைகளும் அடங்கும்.

இந்திரா நகர் நியாய விலைக் கடையானது கூட்டுடன்காடு நியாய விலைக் கடைக்கு முதல் பகுதி நேரக் கடையாகும். பகுதி நேரக் கடையான இந்திரா நகர் நியாய விலைக் கடைக்கும் கீழ்கூட்டுடன்காடு பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 1 கி.மீ. மட்டுமே உள்ளது.

இந்நேர்வில், கீழ்கூட்டுடன்காடு கிராமத்தில் 450 குடும்ப அட்டைகள் இருந்தபோதிலும், குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின் தாய் நியாய விலைக் கடையில் 350 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். மேலும், தாய்க் கடைக்கும் உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 1 கி.மீ. மட்டுமே உள்ளது. எனவே, அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாததால் கீழ்கூட்டுடன்காடு கிராமத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

19—

நகைகளை விவசாயிகளுக்குத் திருப்பி அளித்தல்

வினா எண் 5576—திரு. பெரி. செந்தில்நாதன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு அறிவித்த நகைக் கடன் தள்ளுபடி திட்டத்தில் பணம் ஒதுக்கீடு செய்தும், சிவகங்கை மாவட்டத்திலுள்ள கூட்டுறவு வங்கிகளில் நகைகள் திருப்பிக் கொடுக்கப்படாமல் உள்ளது. நகைகளை விவசாயிகளுக்கு திருப்பிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 97, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிசி1)த் துறை, நாள்

2022 அக்டோபர் 18]

1-11-2021-ன்படி சிவகங்கை மாவட்டத்தில், கூட்டுறவு தணிக்கைத் துறையில், தணிக்கை முடிக்கப்பட்டு பெறப்பட்ட அறிக்கையின்படி, 166 கூட்டுறவு நிறுவனங்களில் ரூ.93.05 கோடி அளவிலான 23,553 நகைக் கடன்கள் தள்ளுபடி செய்ய பரிந்துரைக்கப்பட்டது. இதனடிப்படையில், சிவகங்கை மாவட்டத்தில் கூட்டுறவு நிறுவனங்களை நேரில் அணுகிய அனைத்து தகுதியான பயனாளிகளுக்கும் ரூ.90.66 கோடி அளவிலான 23,018 நகைக் கடன்களுக்கு நகைக் கடன் தள்ளுபடி சான்றிதழ்களும், நகைகளும் திரும்ப வழங்கப்பட்டுள்ளன. இதுவரை நகைக் கடன் தள்ளுபடி சான்றிதழ்களும், நகைகளும் வாங்காத பயனாளிகள் தொடர்புடைய கூட்டுறவு நிறுவனங்களை அணுகி பெற்றுக்கொள்ளலாம்.

20—

கடன் தள்ளுபடி சான்றிதழ் வழங்குதல்

வினா எண் 5577—திரு. பெரி. செந்தில்நாதன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டத்திலுள்ள வங்கிகளில் இருந்து கடன் தள்ளுபடி சான்றிதழ் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 15 மற்றும் 16, நாள் 8-2-2021-ல் வழங்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் பயிர்க் கடன் பெற்று, 31-1-2021 தேதியன்று நிலுவையிலிருந்த விவசாயிகளின் கடன் நிலுவைத் தொகை தள்ளுபடி செய்து ஆணையிடப்பட்டது.

இதனடிப்படையில், சிவகங்கை மாவட்டத்தில் பயிர்க் கடன் பெற்று 31-1-2021 அன்று நிலுவையிலிருந்த 28,035 விவசாயிகளுக்கு ரூ.144.64 கோடி தள்ளுபடி செய்யப்பட்டு 27,498 நபர்களுக்கு ரூ.142.17 கோடி அளவிலான தள்ளுபடி சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

[2022 அக்டோபர் 18

அரசாணை (நிலை) எண் 97, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 1-11-2021-ல் வழங்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில், 31-3-2021 தேதியன்று நிலுவையிலிருந்த பொது நகைக் கடன் தள்ளுபடி செய்து ஆணையிடப்பட்டது.

அதன்படி, பொது நகைக் கடன் தள்ளுபடி தகுதி பெறுபவர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டு, அப்பட்டியல் கூட்டுறவு தணிக்கைத் துறைக்கு அனுப்பப்பட்டு, சிவகங்கை மாவட்டத்தில், தணிக்கைத் துறையினர் சிறப்புத் தணிக்கை மேற்கொண்டு அளித்த இறுதி பட்டியலின் அடிப்படையில் 166 கூட்டுறவு நிறுவனங்களில் ரூ.93.05 கோடி அளவிலான 23,553 நகைக் கடன்கள் தள்ளுபடி செய்ய பரிந்துரைக்கப்பட்டது. இதனடிப்படையில், சிவகங்கை மாவட்டத்தில் கூட்டுறவு நிறுவனங்களை நேரில் அணுகிய அனைத்து தகுதியான பயனாளிகளுக்கும் ரூ.90.66 கோடி அளவிலான 23,018 நகைக் கடன்களுக்கு, நகை கடன் தள்ளுபடி சான்றிதழ்களும், நகைகளும் திரும்ப வழங்கப்பட்டுள்ளன. இதுவரை நகைக் கடன் தள்ளுபடி சான்றிதழ்களும், நகைகளும் வாங்காத பயனாளிகள் தொடர்புடைய கூட்டுறவு நிறுவனங்களை அணுகி பெற்றுக்கொள்ளலாம்.

21—

மத்திய கூட்டுறவு வங்கி கிளை அமைத்தல்

வினா எண் 25949—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, மன்சுராபாத் ஊராட்சியில் மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அதன் எல்லைக்குட்பட்ட செயற்பாட்டு பகுதியில் 37 கிளைகளுடன் செயல்பட்டு வருகிறது. திருவண்ணாமலை

2022 அக்டோபர் 18]

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் புதிய கிளை துவக்க கோரிக்கை வரப்பெற்றுள்ள மன்சுராபாத் ஊராட்சிப் பகுதியின் மொத்த மக்கள் தொகை 4,500 ஆகும். மன்சுராபாத் பகுதியின் அருகில் 8 கிலோ மீட்டர் தொலைவில் திருவண்ணாமலை மத்திய கூட்டுறவு வங்கியின் தேவிகாபுரம் கிளை அமைந்துள்ளது. மேலும், இப்பகுதியில் 3 வணிக வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. மன்சுராபாத் பகுதியின் செயற்பாட்டுப் பகுதியில் ஓர் இணைப்புச் சங்கம் மட்டுமே உள்ளது. இப்பகுதியில் கிளை துவக்கப்பட்டால், மிக குறைந்த அளவிலான வைப்புத் தொகை மட்டுமே திரட்ட இயலும் மற்றும் குறைந்த அளவில் மட்டுமே கடன் தொகை வழங்க இயலும். மன்சுராபாத் சிறிய கிராமமாகவும், போக்குவரத்து மற்றும் மக்கள் நடமாட்டம் குறைந்த பகுதியாகவும் உள்ளதால், இப்பகுதியில் புதிய கிளை துவக்கப்பட்டால், இக்கிளை வாழ்திறன் உள்ள வங்கிக் கிளையாக செயல்பட வாய்ப்புகள் இல்லை என்பதால், இப்பகுதியில் மத்திய கூட்டுறவு வங்கியின் புதிய கிளை துவங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

22—

தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குக் கட்டடம்

வினா எண் 25985—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேத்துபட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி (PACB)-க்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, சேத்துப்பட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு, 2018-2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, ரூ.20.00 இலட்சம்

மதிப்பில், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து நிதியுதவி பெற்று புதிய அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. எனவே, சங்கத்திற்கு புதிய கட்டடம் கட்ட வேண்டிய தேவை எழவில்லை.

23—

கூட்டுறவு பெட்ரோல் பங்க் அமைத்தல்

வினா எண் 26037—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதியில் பொன்னேரி, ஆரணி, சோழவரம் பேரூராட்சிகளில் கூட்டுறவு பெட்ரோல் பங்க் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி, ஆரணி மற்றும் சோழவரம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களில், பெட்ரோல் வழங்கு நிலையம் அமைக்க ஏதுவாக, போதிய இடவசதி இல்லாத நிலையில், இப்பகுதியில் கூட்டுறவு பெட்ரோல் வழங்கு நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

24—

மத்திய கூட்டுறவு வங்கி அமைத்தல்

வினா எண் 26044—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூரை தலைமையிடமாகக் கொண்டு மத்திய கூட்டுறவு வங்கி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கி, தஞ்சாவூர் மாவட்டத்தில், கும்பகோணம் சரகம், திருவாரூர் மாவட்டத்தில், திருவாரூர் சரகம் மற்றும் நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டம் முழுவதையும் செயற்பாட்டுப் பகுதியாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

இதே பகுதியில் தஞ்சாவூர் மத்தியக் கூட்டுறவு வங்கி, தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சாவூர், பட்டுக்கோட்டை சரகங்கள் மற்றும் திருவாரூர் மாவட்டத்தில் மன்னார்குடி சரகத்தை செயற்பாட்டுப் பகுதியாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

கூட்டுறவு கடன் நிறுவனங்களை சீரமைக்க அமைக்கப்பட்ட வைத்தியநாதன் குழு கூட்டுறவு வங்கிகளை இணைக்குமாறு மட்டுமே பரிந்துரை செய்துள்ளது. தற்போதுள்ள மத்திய கூட்டுறவு வங்கிகளைப் பிரித்தால் இது மேலும், வங்கிகளை நலிவடையச் செய்வதுடன், பெருஞ்செலவுகளை ஏற்படுத்தும். பெரிய அளவில் செயல்படும் மத்திய கூட்டுறவு வங்கிகள் மட்டுமே இலாபம் ஈட்டுவதுடன், சவால்களை எதிர்கொள்ள இயலும். வங்கிகளைப் பிரிப்பதால் இந்திய ரிசர்வ் வங்கி நிர்ணயித்த பங்கு மூலதன விகிதத்தினை (CRAR) பராமரிக்க இயலாது.

எனவே, கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கி மற்றும் தஞ்சாவூர் மத்தியக் கூட்டுறவு வங்கியை பிரித்து, திருவாரூர் மாவட்டத்திற்கு என தனியாக ஒரு மத்திய கூட்டுறவு வங்கி அமைத்தால், கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கியும், தஞ்சாவூர் மத்தியக் கூட்டுறவு வங்கியும் வாழ்திறனற்ற வங்கிகளாக செயல்படும் நிலை உருவாகும். மேலும், புதிதாக அமைக்கக் கோரப்பட்டுள்ள மத்தியக் கூட்டுறவு வங்கியும் போதுமான நிதியாதாரங்கள் இல்லாமல் செம்மையாக செயல்பட முடியாத நிலையும் உருவாகும்.

மேலும், பின்வரும் 12 மத்திய கூட்டுறவு வங்கிகளும் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களைத் தமது செயற்பாட்டுப் பகுதிகளாகக் கொண்டுள்ளன:

TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	மத்தியக் கூட்டுறவு வங்கியின் பெயர்	மத்தியக் கூட்டுறவு வங்கியின் செயற்பாட்டுப் பகுதியிலுள்ள மாவட்டங்கள்
1	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர், திருப்பூர்
2	தருமபுரி	தருமபுரி, கிருஷ்ணகிரி
3	ஈரோடு	ஈரோடு, திருப்பூர்
4	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர்
5	கும்பகோணம்	நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர்
6	மதுரை	மதுரை, தேனி
7	சேலம்	சேலம், நாமக்கல்
8	தஞ்சாவூர்	தஞ்சாவூர், திருவாரூர்
9	திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி, கரூர், அரியலூர், பெரம்பலூர்
10	திருநெல்வேலி	திருநெல்வேலி, தென்காசி
11	விழுப்புரம்	விழுப்புரம், கள்ளக்குறிச்சி
12	வேலூர்	வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர்

ஏற்கெனவே பல மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தமது செயற்பாட்டுப் பகுதியில் ஒன்றுக்கு மேற்பட்ட வருவாய் மாவட்டங்களில் செயல்படும் சூழ்நிலையில் திருவாரூர் மாவட்டத்திற்கென தனியாக மத்தியக் கூட்டுறவு வங்கி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

25—

மத்திய கூட்டுறவு வங்கி அமைத்தல்

வினா எண் 26047—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 அக்டோபர் 18]

(அ) திருவாரூர் மாவட்டத்திற்கு தனியே மத்தியக் கூட்டுறவு வங்கி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கி, தஞ்சாவூர் மாவட்டத்தில், கும்பகோணம் சரகம், திருவாரூர் மாவட்டத்தில், திருவாரூர் சரகம் மற்றும் நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டம் முழுவதையும் செயற்பாட்டுப் பகுதியாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

இதே பகுதியில் தஞ்சாவூர் மத்தியக் கூட்டுறவு வங்கி, தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சாவூர், பட்டுக்கோட்டை சரகங்கள் மற்றும் திருவாரூர் மாவட்டத்தில் மன்னார்குடி சரகத்தைச் செயற்பாட்டுப் பகுதியாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

கூட்டுறவு கடன் நிறுவனங்களை சீரமைக்க அமைக்கப்பட்ட வைத்தியநாதன் குழு கூட்டுறவு வங்கிகளை இணைக்குமாறு மட்டுமே பரிந்துரை செய்துள்ளது. தற்போதுள்ள மத்திய கூட்டுறவு வங்கிகளைப் பிரித்தால் இது மேலும், வங்கிகளை நலிவடையச் செய்வதுடன், பெருஞ்செலவுகளை ஏற்படுத்தும். பெரிய அளவில் செயல்படும் மத்திய கூட்டுறவு வங்கிகள் மட்டுமே இலாபம் ஈட்டுவதுடன், சவால்களை எதிர்கொள்ள இயலும். வங்கிகளைப் பிரிப்பதால் இந்திய ரிசர்வ் வங்கி நிர்ணயித்த பங்கு மூலதன விகிதத்தினை (CRAR) பராமரிக்க இயலாது.

எனவே, கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கி மற்றும் தஞ்சாவூர் மத்தியக் கூட்டுறவு வங்கியை பிரித்து, திருவாரூர் மாவட்டத்திற்கு என தனியாக ஒரு மத்திய கூட்டுறவு வங்கி அமைத்தால், கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கியும், தஞ்சாவூர் மத்தியக் கூட்டுறவு வங்கியும் வாழ்திறனற்ற வங்கிகளாக செயல்படும் நிலை உருவாகும்.

மேலும், பின்வரும் 12 மத்திய கூட்டுறவு வங்கிகளும் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களைத் தமது செயற்பாட்டுப் பகுதிகளாகக் கொண்டுள்ளன:

வ. எண்	மத்தியக் கூட்டுறவு வங்கியின் பெயர்	மத்தியக் கூட்டுறவு வங்கியின் செயற்பாட்டுப் பகுதியிலுள்ள மாவட்டங்கள்
1	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர், திருப்பூர்
2	தருமபுரி	தருமபுரி, கிருஷ்ணகிரி
3	ஈரோடு	ஈரோடு, திருப்பூர்
4	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர்
5	கும்பகோணம்	நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர்
6	மதுரை	மதுரை, தேனி
7	சேலம்	சேலம், நாமக்கல்
8	தஞ்சாவூர்	தஞ்சாவூர், திருவாரூர்
9	திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி, கரூர், அரியலூர், பெரம்பலூர்
10	திருநெல்வேலி	திருநெல்வேலி, தென்காசி
11	விழுப்புரம்	விழுப்புரம், கள்ளக்குறிச்சி
12	வேலூர்	வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர்

ஏற்கெனவே பல மத்தியக் கூட்டுறவு வங்கிகள் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களை தமது செயற்பாட்டுப் பகுதிகளாகக் கொண்டு செயல்படும் சூழ்நிலையில், திருவாரூர் மாவட்டத்திற்கென தனியாக மத்தியக் கூட்டுறவு வங்கி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

26—

அலோபதி மருந்து கடை அமைத்தல்

வினா எண் 26361—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 அக்டோபர் 18]

(அ) உதகமண்டலம் தொகுதிக்குட்பட்ட குந்தா வட்டம், மஞ்சூரில் கூட்டுறவுச் சங்கம்மூலம் அலோபதி மருந்து விற்பனை கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உதகமண்டலம் தொகுதிக்குட்பட்ட குந்தா வட்டம், மஞ்சூரில் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம்மூலம் அலோபதி மருந்துக் கடை துவக்கப்பட்டு 16-12-2021 முதல் செயல்பட்டு வருகிறது.

27—

தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குக் கட்டடம்

வினா எண் 26426—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, போளூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி (PACB)-க்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, போளூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து (CRDF) நிதியுதவி பெற்று, ரூ.14.50 இலட்சம் செலவில் 2009-2010 ஆம் ஆண்டில் புதிய கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. தற்போது கட்டடம் நல்ல நிலையில் உள்ளதால், சங்கத்திற்கு புதிய கட்டடம் கட்ட வேண்டிய தேவை எழவில்லை.

[2022 அக்டோபர் 18

28—

வேளாண் இயந்திரங்களுக்கு வழங்கப்படும் மானியத்தை அதிகரித்தல்

வினா எண் 17778—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, வேளாண்மைத் துறைமூலம் விவசாயிகளுக்கு வழங்கும் உழவு இயந்திரத்தின் (டிராக்டர்) மீதான மானியத்தை அதிகரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் வேளாண்மை இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின்கீழ், விவசாய நிலமுள்ள தனிப்பட்ட விவசாயிகளுக்கு உழவு இயந்திரம் (டிராக்டர்) உட்பட பல்வேறு வகையான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் குறு, சிறு, ஆதி திராவிட, பழங்குடியின மற்றும் பெண் விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியம் அல்லது அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அதிகபட்ச மானியத் தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாகவும், இதர விவசாயிகளுக்கு 40 சதவிகித மானியம் அல்லது அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அதிகபட்ச மானியத் தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாகவும் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், ஆதி திராவிட, பழங்குடியின, குறு, சிறு, விவசாயிகளுக்கு உதவிடும் வகையில் வேளாண் நிதிநிலை அறிக்கை 2022-2023-ல் அறிவித்தபடி, அரசாணை (2டி) எண் 81, வேளாண்மை-உழவர் நலத் (வேஉ5) துறை, நாள் 28-4-2022-ன்படி கூடுதலாக 20 சதவிகித மானியத்தினை டிராக்டர் உள்ளிட்ட வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2022 அக்டோபர் 18]

29—

இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி வழங்குதல்

வினா எண் 23332—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்படும் மக்களுக்கு வழங்கப்படும் பயிர்களுக்கான இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 380, வருவாய் [பேமே III (2)] துறை, நாள் 27-10-2015-ன்படி இயற்கை சீற்றங்களான மழை, வெள்ளம், புயல், வறட்சி போன்றவற்றால் 33 சதவிகிதத்திற்கு மேல் பாதிக்கப்படும் பயிர்களுக்கு வருவாய்த் துறை மற்றும் வேளாண்மைத் துறை அலுவலர்களால் இணைந்து பயிர்சேதக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு, அதன் அடிப்படையில் இடுபொருள் மானியமாக:

1) *நெற்பயிர் இல்லாத இதர மானாவாரி பயிர்களுக்கு ஹெக்டர் ஒன்றுக்கு ரூ.7,410/- இழப்பீடாகவும்,*

2) *நீர்ப்பாசன பயிர்களுக்கு ஹெக்டர் ஒன்றுக்கு ரூ.13,500/- இழப்பீடாகவும்,*

3) *பல்லாண்டு கால பயிர்களுக்கு ஹெக்டர் ஒன்றுக்கு ரூ.18,000/- இழப்பீடாகவும் வழங்கப்பட்டு வருகிறது.*

இந்நிலையில், மேற்காணும் இழப்பீட்டுத் தொகையினை உயர்த்தி வழங்குவது என்பது, மத்திய அரசின் கொள்கை முடிவுக்கு உட்பட்டது என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

30—

தகுந்த இழப்பீட்டுத் தொகையை வழங்குதல்

வினா எண் 23344—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு தகுந்த இழப்பீடு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் வெள்ளம், வறட்சி, புயல் போன்ற இயற்கை பேரிடர்கள் காரணமாக வேளாண் பயிர்கள் மிகுந்த சேதமடைந்து பயிர் உற்பத்தித் திறன் வெகுவாக பாதிக்கப்படுகிறது,

மேற்காணும் காரணங்களால் ஏற்படும் பாதிப்புகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கு மாவட்ட ஆட்சியரின் தலைமையில் வருவாய்த் துறை மற்றும் வேளாண்மைத் துறை அதிகாரிகள் ஒருங்கிணைந்து ஆய்வு செய்து 33 சதவீதம் பயிர் பாதிப்பை உறுதி செய்த பின்னர், மாநில பேரிடர் நிவாரண நிதிமூலம் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, வானிலை மற்றும் காலநிலை இடர்பாடுகளால் வேளாண்மையில் ஏற்படும் பாதிப்பினை ஈடு செய்யும் நோக்கத்துடனும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திடவும் இடுபொருள் மானியமாக மாநில பேரிடர் நிவாரண நிதியின் வழிகாட்டுதலின்படி மானாவாரி பயிர்களுக்கு ஹெக்டருக்கு ரூ.7,410/-ம், நெல் மற்றும் பாசன பயிர்களுக்கு ஹெக்டருக்கு ரூ.13,500/-ம் பல்லாண்டு பயிர்களுக்கு ஹெக்டருக்கு ரூ.18,000/-ம் வழங்கப்படுகிறது.

2022 அக்டோபர் 18]

31—

வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல்

வினா எண் 23363—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விவசாயத்திற்கு பயன்படும், நெல் அறுவடை இயந்திரம், நாற்று நடும் இயந்திரம், களை எடுக்கும் இயந்திரம், டிராக்டர், JCB போன்ற இயந்திரங்களை ஒவ்வொரு ஒன்றிய வேளாண் அலுவலகங்கள்மூலம் வாடகை அடிப்படையில் கூடுதலாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளாண்மைப் பொறியியல் துறையில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் திட்டத்தின்கீழ் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் அரசு நிர்ணயிக்கப்பட்ட குறைந்த வாடகை அடிப்படையில் விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

தற்போது வேளாண்மைப் பொறியியல் துறையில் 272 டிராக்டர்கள் அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த வாடகை அடிப்படையில் மணிக்கு ரூ.400/- என்ற வீதத்திலும், 60 சக்கர வகை மண் அள்ளும் இயந்திரம் (JCB வகை) மணிக்கு ரூ.760/- என்ற வீதத்திலும், 19 டிராக் வகை நெல் அறுவடை இயந்திரங்கள் மணிக்கு ரூ.1,630/- என்ற வீதத்திலும் 25 சக்கர வகை நெல் அறுவடை இயந்திரங்கள் மணிக்கு ரூ.1,010/- என்ற வீதத்திலும் விவசாயிகளுக்கு வருவாய் கோட்ட அளவில் வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

விவசாயிகள் உழவுப் பணிகளை தொய்வில்லாமல் மேற்கொள்வதற்கு உதவிட மேலும் 185 டிராக்டர்கள் கொள்முதல் செய்வதற்காக வேளாண்மைப் பொறியியல் துறையால் நடவடிக்கை

மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்பொழுது, வருவாய் கோட்ட அளவில் உள்ள வேளாண் இயந்திரங்களை வட்டார அளவில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் முதற்கட்டமாக டெல்டா மாவட்டங்களில் வேளாண்மைப் பொறியியல் துறையில் வேளாண் இயந்திரங்கள் விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, தேவைப்படும் விவசாயிகள் தங்களுக்குத் தேவையான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வேளாண்மைப் பொறியியல் துறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இ-வாடகை என்னும் ஆன்லைன் செயலிமூலம் தங்கள் வீட்டிலிருந்தே வாடகைத் தொகையை முன்பணமாக செலுத்தி வாடகைக்கு பெற்றுக்கொள்ளலாம்.

32—

கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்தை புதுப்பித்தல்

வினா எண் 24077—திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், எருக்காட்டூர் ஊராட்சி, பழுதடைந்த கீழஎருக்காட்டூர் கிராம நிருவாக அலுவலக கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், எருக்காட்டூர் ஊராட்சி, கீழஎருக்காட்டூர் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல் தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி, கட்டடம் புதுப்பித்தல் தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு கூடுதல் தலைமைச்

2022 அக்டோபர் 18]

செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது மேற்படி கட்டடத்தைப் புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

33—

கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்தை புதுப்பித்தல்

வினா எண் 24078—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், தியாகராஜபுரம் ஊராட்சி, பழுதடைந்த தாழைக்குடி கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் சட்டமன்றத் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், தியாகராஜபுரம் ஊராட்சி, தாழைக்குடி கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல் தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி, கட்டடம் புதுப்பித்தல் தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது மேற்படி கட்டடத்தைப் புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

34—

கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்தை புதுப்பித்தல்

வினா எண் 24079—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், கரையாப்பலையூர் ஊராட்சி, பழுதடைந்த ஆர்பார் கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், கரையாப்பலையூர் ஊராட்சி, ஆர்பார் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல் தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி, கட்டடம் புதுப்பித்தல் தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப்பணித்துறையிலிருந்து பெறப்பட்டு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது மேற்படி கட்டடத்தைப் புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

35—

கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்தை புதுப்பித்தல்

வினா எண் 24080—திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், இலவங்கார்குடி ஊராட்சி, பழுதடைந்த பவித்திரமாணிக்கம் கிராம நிர்வாக அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

2022 அக்டோபர் 18]

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், இலவங்கார்குடி ஊராட்சி, பவித்திரமாணிக்கம் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல் தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் புதுப்பித்தல் தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது மேற்படி கட்டடத்தைப் புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

36—

பயோ கேஸ் ஆலை அமைத்தல்

வினா எண் 18503—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அடுக்குமாடிக் கட்டடங்கள் கட்ட அனுமதிக்கும்போது சூரிய ஒளி மின்சாரம், மழைநீர் சேகரிப்பு மற்றும் சமையலறைக் கழிவுமூலம் பயோகேஸ் ஆலை அமைத்தல் ஆகியவற்றைக் கட்டாயமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு ஒருங்கிணைந்த கட்டட விதிகள் 2019, *விதி எண்* 44(2)-*ன்படி* Solar energy system *மற்றும் விதி எண்* 35(5) *மற்றும்* 63(1)-*ன்படி, மழைநீர் சேகரிப்பு கட்டாயமாக்கப்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது. மேலும், சமையலறைக் கழிவுமூலம் பயோகேஸ் ஆலை அமைக்க கட்டாயமாக்குவது குறித்து தீர்மானிப்பது அரசின் கொள்கை முடிவுக்கு உட்பட்டதாகும்.*

TRUTH ALONE TRIUMPHS

37—

மல்பெரி விவசாயிகளுக்கு மானியம் வழங்குதல்

வினா எண் 22905—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பெண்ணாகரம் தொகுதி, இராமதொண்ட அள்ளி ஊராட்சியில் பயிரிடும் மல்பெரி விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் சுற்று வட்டாரப் பகுதியில் பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலை மேம்படுத்துவதற்காக பட்டு வளர்ச்சித் துறையின் சார்பில் உதவி இயக்குநர் அலுவலகம் பெண்ணாகரத்தில் செயல்பட்டு வருகிறது. இதன்கீழ் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள பெண்ணாகரம், ஏரியூர், பாலக்கோடு, மாரண்டஹள்ளி, காரிமங்கலம் மற்றும் பாப்பாரப்பட்டி ஆகிய ஆறு இடங்களில் தொழில்நுட்ப சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் ஏரியூர் தொழில்நுட்ப சேவை மையத்திற்குட்பட்ட இராமதொண்டஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் மல்பெரி நடவு இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.*

மேலும், 2021-2022 *ஆம் ஆண்டில் மல்பெரி புது நடவு மேற்கொள்ளப்படாததால் மானியத் தொகை ஏதும் வழங்கப்படவில்லை.* 2022-2023 *ஆம் ஆண்டிற்கு மல்பெரி புது நடவு மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்டுள்ள* 2 *விவசாயிகளில்* 1 *விவசாயி மட்டும் மல்பெரி புது நடவு மேற்கொண்டுள்ளார். இவருக்கு மானிய உதவிகள் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் இப்பகுதியில் மல்பெரி புது நடவு செய்யும் அனைத்து விவசாயிகளுக்கும் நடவு மானியம் வழங்கப்படும்.*

2022 அக்டோபர் 18]

38—

மல்பெரி விவசாயிகளுக்கு மானியம் வழங்குதல்

வினா எண் 22908—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, மோதுகுலஅள்ளி பகுதியில் பயிரிடப்படும் மல்பெரி பயிர் விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் சுற்று வட்டாரப் பகுதியில் பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலை மேம்படுத்துவதற்காக பட்டு வளர்ச்சித் துறையின் சார்பில் உதவி இயக்குநர் அலுவலகம் பெண்ணாகரத்தில் செயல்பட்டு வருகிறது. இதன்கீழ் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள பெண்ணாகரம், ஏரியூர், பாலக்கோடு, மாரண்டஹள்ளி, காரிமங்கலம் மற்றும் பாப்பாரப்பட்டி ஆகிய ஆறு இடங்களில் தொழில்நுட்ப சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில், பாலக்கோடு தொழில்நுட்ப சேவை மையத்திற்குட்பட்ட மோதுகுலஅள்ளி ஊராட்சிப் பகுதியில் 2.00 ஏக்கரில் 1 விவசாயி மல்பெரி புது நடவு செய்துள்ளார்.

மேலும், 2021-2022 ஆம் ஆண்டில் 2.00 ஏக்கரில் மல்பெரி புது நடவு மேற்கொண்ட 1 விவசாயிக்கு மானியத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2022-2023 ஆம் ஆண்டிற்கு மல்பெரி புது நடவு மேற்கொள்ள 2 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தேர்வு செய்யப்பட்ட 2 விவசாயிகளுமே மல்பெரி புது நடவு மேற்கொண்டுள்ளனர். இவர்களுக்கு மானிய உதவிகள் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் இப்பகுதியில் மல்பெரி புது நடவு செய்யும் அனைத்து விவசாயிகளுக்கும் நடவு மானியம் வழங்கப்படும்.

[2022 அக்டோபர் 18

39—

வீடு வழங்கும் திட்டம்

வினா எண் 28063—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், மல்லியங்குப்பம் ஊராட்சி, பெருமாள் கோவில் தெருவில் வசிப்பவர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் வீடு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், மல்லியங்குப்பம் ஊராட்சி, பெருமாள் கோவில் தெருவில் வசிப்பவர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் வீடு வழங்க திட்டம் ஏதுமில்லை.

40—

பயிற்சி பட்டறை அமைத்தல்

வினா எண் 28541—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மேற்கு தொகுதி, முத்துநாயக்கன்பட்டியில் உலோக சிலை தயாரிப்புத் தொழிலை விரிவுபடுத்தவும், பயிற்சி பட்டறை அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உலோக சிலைகள், பித்தளை விளக்குகள், பித்தளை கலைப் பொருட்கள் மற்றும் தஞ்சாவூர் கலைத்தட்டுகள் தயாரிக்கும் கைவினைஞர்கள் அதிக எண்ணிக்கையில் சுவாமிமலை, தஞ்சாவூர் மற்றும் நாச்சியார்கோவில் போன்ற பகுதிகளில் அதிகமாக தொழில் புரிவதால், பூம்புகார் நிறுவனம் உலோக சிலைகள் தயாரிக்கும் உற்பத்தி நிலையங்களை மேற்கூறப்பட்ட இடங்களில் அமைத்துள்ளது. சேலம் மாவட்டத்தில் பெரும்பான்மையாக மரச்சிற்ப கைத்தறித் தொழில் புரியும் கைவினைஞர்களே அதிக எண்ணிக்கையில் உள்ளார்கள். எனவே, சேலம் மேற்குத் தொகுதியில் உலோக சிலைகள் தயாரிக்கும் கைவினைஞர்களின் எண்ணிக்கை மிக குறைவாக இருப்பதால், இத்தொழிலை விரிவுபடுத்தவும், பயிற்சி பட்டறை அமைக்க வேண்டியது குறித்த கருத்துரு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

41—

கைவினைப் பொருட்களை சந்தைப்படுத்துதல்

வினா எண் 30005—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திரு.வி.க. நகர் தொகுதி, சென்னை மாநகராட்சி, வார்டு எண் 71, அயனாவரம், வார்டு எண்கள் 70, 71 மற்றும் 73, ஓட்டேரி, வார்டு எண்கள் 71 மற்றும் 73, பட்டாளம், வார்டு எண்கள் 70, 72 மற்றும் 73 புளியந்தோப்பு, வார்டு எண் 70, மேட்டுப்பாளையம் மற்றும் ஜமாலியா, வார்டு எண் 71 ஜமாலியா ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் கைவினைப் பொருட்கள் தயாரித்து விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் நிறுவனம், திரு.வி.க. நகர் தொகுதி, சென்னை மாநகராட்சியில் உள்ள கொசப்பேட்டையில் களிமண் மற்றும் காகிதக்கூழ் பொம்மைகள் கைத்திறத் தொழில் செய்யும் கைவினைஞர்கள் அதிகளவில் இருப்பதால், ஒரு மாதகால வடிவமைப்பு மற்றும் பயிற்சி பட்டறைத் திட்டத்தின்மூலம் களிமண் மற்றும் காகிதக்கூழ் பொம்மைகள் கைத்திறத் தொழில்களில் கைவினைஞர்கள் குழுக்களுக்கு அரசின் நிதியுதவி ரூ.4.60 இலட்சம் செலவில் 30 கைவினைஞர்களுக்கு 21-2-2019 முதல் 21-3-2019 வரை பயிற்சி வழங்கப்பட்டது. மேலும், கைவினைஞர்களின் உற்பத்தித் திறனை உயர்த்தும் வகையில் ரூ.5,000/- மதிப்பிலான இலவச உபகரணங்கள் 150 கைவினைஞர்களுக்கு வழங்கப்பட்டன.

இப்பயிற்சித் திட்டத்தின்மூலம் நவீன முறையில் கலை ஆர்வலர்களை கவரும் வகையில் புதிய தொழில்நுட்பத்தை புகுத்தி கைவினைப் பொருட்களை தயாரித்து, பூம்புகார் விற்பனை நிலையங்களில் வழங்கினால், வாடிக்கையாளர்கள் இப்பொருட்களை விரும்பி வாங்கும்போது அப்பொருட்களுக்கான மதிப்பீட்டுத் தொகை விற்றபின் கைவினைஞர்களுக்கு வழங்கப்படும். மேலும், அவர்களின் தயாரிப்புகளை சந்தைப்படுத்த அண்ணா சாலையில் அமைந்துள்ள பூம்புகார் விற்பனை நிலையத்தில் நடைபெறும் கொலுக் கண்காட்சி, கணேஷ் தரிசனம் கண்காட்சி மற்றும் கிருஷ்ண ஜெயந்தி போன்ற விழாக்காலங்களில் நடைபெறும் கண்காட்சிகளில் இடம் ஒதுக்கீடு செய்து தரப்படும். இதனால், உற்பத்தியாளர்களே தங்கள் கைவினைப் பொருட்களை சந்தைப்படுத்தி பயனடையலாம்.

42—

கைவினைப் பொருட்களை சந்தைப்படுத்துதல்

வினா எண் 30026—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 அக்டோபர் 18]

(அ) திரு.வி.க. நகர் தொகுதி, சென்னை மாநகராட்சி, வார்டு எண் 71, அயனாவரம், வார்டு எண்கள் 70, 71 மற்றும் 73, ஓட்டேரி, வார்டு எண்கள் 72 மற்றும் 76, கொசப்பேட்டை, வார்டு எண்கள் 71 மற்றும் 73, பட்டாளம், வார்டு எண்கள் 70, 72 மற்றும் 73 புளியந்தோப்பு ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் கைவினைப் பொருட்களை தயாரித்து விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் நிறுவனம், கொசப்பேட்டையில் ஒரு மாதகால வடிவமைப்பு மற்றும் பயிற்சி பட்டறைத் திட்டத்தின்மூலம் களிமண் மற்றும் காகிதக்கூழ் பொம்மைகள் கைத்திறத் தொழில்களில் அரசின் நிதியுதவி தலா ரூ.4.60 இலட்சம் செலவில் 30 கைவினைஞர்களுக்கு 21-2-2019 முதல் 21-3-2019 வரை பயிற்சி வழங்கியது. மேலும், கைவினைஞர்களின் உற்பத்தி திறனை உயர்த்தும் வகையில் ரூ.5,000/- மதிப்பிலான இலவச உபகரணங்கள் 150 கைவினைஞர்களுக்கு வழங்கப்பட்டது.

இப்பயிற்சித் திட்டத்தின்மூலம் நவீன முறையில் கலை ஆர்வலர்களை கவரும் வகையில் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கைவினைப் பொருட்களை தயாரித்து, பூம்புகார் விற்பனை நிலையங்களில் வழங்கினால், வாடிக்கையாளர்கள் இப்பொருட்களை விரும்பி வாங்கும்போது அப்பொருட்களுக்கான மதிப்பீட்டுத் தொகை விற்றபின் கைவினைஞர்களுக்கு வழங்கப்படும். மேலும், அவர்களின் தயாரிப்புகளை சந்தைப்படுத்த அண்ணாசாலையில் அமைந்துள்ள பூம்புகார் விற்பனை நிலையத்தில் நடைபெறும் கொலுக் கண்காட்சி, கணேஷ் தரிசனம் கண்காட்சி மற்றும் கிருஷ்ண ஜெயந்தி போன்ற விழாக்காலங்களில் நடைபெறும் கண்காட்சிகளில் இடம் ஒதுக்கீடு செய்து தரப்படும். இதனால், உற்பத்தியாளர்களே தங்கள் கைவினைப் பொருட்களை சந்தைப்படுத்தி பயனடையலாம்.

[*2022 அக்டோபர் 18*

43—

காமராஜர் நினைவு மண்டபத்தினை மேம்படுத்துதல்

வினா எண் 4419—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

காமராஜர் நினைவிடத்தை புதுப்பொலிவுடன் உருவாக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பெருந்தலைவர் காமராஜர் நினைவு மண்டபத்தினை மேம்படுத்துவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறையால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

44—

மணிமண்டபம்

வினா எண் 21749—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாமக்கல் நகரில் சென்னை மாகாணத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற முதல் தமிழர் திரு. சுப்பராயன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

"சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களுக்கு சென்னையில் முழு திருவுருவச் சிலையும், நாமக்கல் நகரில் அரங்கமும் அமைக்கப்படும்" என்று செய்தி மக்கள் தொடர்புத் துறையின் 2021-2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் அறிவிப்பாக அறிவிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

2022 அக்டோபர் 18]

45—

மன்னர் சரபோஜிக்கு நினைவுச் சின்னம்

வினா எண் 29285—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தஞ்சாவூர் மன்னர் சரபோஜிக்கு நினைவுச் சின்னம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மன்னர் சரபோஜிக்கு நினைவுச் சின்னம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

46—

ஔவை பிராட்டிக்கு நினைவுச் சின்னம்

வினா எண் 29389—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உத்தமசோழபுரத்தில் ஔவை பிராட்டிக்கு நினைவுச் சின்னம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

உத்தமசோழபுரத்தில் ஔவை பிராட்டிக்கு நினைவுச் சின்னம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

47—

மாமன்னர் சேதுபதி மகாராஜாவிற்கு நினைவுச் சின்னம்

வினா எண் 29393—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாமன்னர் சேதுபதி மகாராஜாவிற்கு இராமநாதபுரத்தில் திருவுருவச் சிலையும், இராமேஸ்வரத்தில் நினைவுச் சின்னமும் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

மாமன்னர் சேதுபதி மகாராஜாவிற்கு இராமநாதபுரத்தில் திருவுருவச் சிலையும், இராமேஸ்வரத்தில் நினைவுச் சின்னமும் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

48—

திருவுருவச் சிலை அமைத்தல்

வினா எண் 29401—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

டி.ஆர். சுந்தரம் அவர்களுக்கு சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் அருகில் திருவுருவச் சிலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

டி.ஆர். சுந்தரம் அவர்களுக்கு சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் அருகில் திருவுருவச் சிலை அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2022 அக்டோபர் 18]

49—

கம்பருக்கு நினைவுச் சின்னம்

வினா எண் 29403—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தனுஷ்கோடி அரிச்சல் முனையில் கவிச்சக்கரவர்த்தி கம்பருக்கு நினைவுச் சின்னம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

தனுஷ்கோடி அரிச்சல் முனையில் கவிச்சக்கரவர்த்தி கம்பருக்கு நினைவுச் சின்னம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

50—

பட்டினத்தாருக்கும் அகத்தியருக்கும் நினைவு மண்டபம்

வினா எண் 29408—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பூம்புகாரில் பட்டினத்தாருக்கும், குற்றாலத்தில் அகத்தியருக்கும் நினைவு மண்டபம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

பூம்புகாரில் பட்டினத்தாருக்கும், குற்றாலத்தில் அகத்தியருக்கும் நினைவு மண்டபம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

51—

கட்டபொம்மன் வாழ்க்கை வரலாற்றை காட்சிப்படுத்துதல்

வினா எண் 29410—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2022 அக்டோபர் 18

வீரபாண்டிய கட்டபொம்மன் வாழ்க்கை வரலாற்றை டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் காணொலி காட்சி மூலமாக பாஞ்சாலங்குறிச்சி கோட்டையில் பார்வையாளர்களுக்கு காட்சிப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

2021-2022 செய்தித் துறையின் மானியக் கோரிக்கையின்போது செய்தித் துறை அமைச்சர் அவர்களால் "75-வது சுதந்திர தின விழாவையொட்டி பாஞ்சாலங்குறிச்சியில் அமைந்துள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டையில் ஒலி, ஒளிக்காட்சி அமைக்கவும், சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கும் வகையில் குறும்படங்கள் தயாரிக்கவும், மக்களுக்கு தொண்டாற்றிய தியாகிகளை நினைவுகூரும் வகையில் நினைவு மண்டபங்களைப் புதுப்பிக்கவும், பொதுமக்கள் அறிந்துகொள்ள உதவும் வகையில் புகைப்படக் கண்காட்சி மற்றும் ஒலி, ஒளிக்காட்சி போன்றவற்றை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அறிவிப்பு வெளியிடப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

52—

சிலை அமைத்தல்

வினா எண் 29413—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோயம்புத்தூரில் பசுமை புரட்சியின் தந்தை சி. சுப்பிரமணியம் அவர்களுக்கு சிலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

2021-2022 செய்தித் துறையின் மானியக் கோரிக்கையின்போது செய்தித் துறை அமைச்சர் அவர்களால் பொள்ளாச்சியில் செயல்படும் நீர்வளத் துறையின் தலைமைப் பொறியாளர்

2022 அக்டோபர் 18]

அலுவலக வளாகத்திற்கு "சி. சுப்பிரமணியம் வளாகம்" என்று பெயர் சூட்டி, அவ்வளாகத்தில் மேனாள் சட்டமன்ற உறுப்பினர் வி.கே. பழனிசாமி கவுண்டர், முன்னாள் அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம், மேனாள் சட்டமன்ற உறுப்பினர் தொழிலதிபர் திரு. பொள்ளாச்சி நா. மகாலிங்கம் ஆகியோருக்கு முழு திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

53—

மணிமண்டபம், நினைவுச் சின்னம் அமைத்தல்

வினா எண் 29414—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அதியமான்கோட்டையில் மன்னர் அதியமானுக்கு மணிமண்டபமும், மதுரையில் சங்ககால புலவர் நக்கீரருக்கு நினைவுச் சின்னமும் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

அதியமான்கோட்டையில் மன்னர் அதியமானுக்கு மணிமண்டபமும், மதுரையில் சங்ககால புலவர் நக்கீரருக்கு நினைவுச் சின்னமும் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

54—

நினைவு மண்டபம் அமைத்தல்

வினா எண் 29846—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலத்தில் சுதந்திரப் போராட்ட தியாகியும், அரசியல் சட்ட நிபுணருமான விஜயராகவாச்சாரியார் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்க அரசு முன்வருமா?

[2022 அக்டோபர் 18

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

சேலத்தில் சுதந்திரப் போராட்ட தியாகியும், அரசியல் சட்ட நிபுணருமான விஜயராகவாச்சாரியார் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

55—

நினைவு இல்லமாக அறிவித்தல்

வினா எண் 38200—திரு. க. செல்வராஜ்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்ந்த நுங்கம்பாக்கம் இல்லத்தை நினைவு இல்லமாக அறிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

சென்னை மெரினாவில் உள்ள பேரறிஞர் அண்ணா நினைவிடம் மற்றும் அருங்காட்சியகம், பேரறிஞர் அண்ணா நினைவில்லம், சின்ன காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம், பெரியார்–அண்ணா நினைவகம், ஈரோடு மாவட்டம் ஆகியவை செய்தி மக்கள் தொடர்புத் துறையால் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பேரறிஞர் அண்ணா வாழ்ந்த நுங்கம்பாக்கம் இல்லத்தை நினைவு இல்லமாக அறிவிக்கக் கோரும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

56—

பத்திரிகையாளர்கள் நல வாரியம் அமைத்தல்

வினா எண் 38201—திரு. க. செல்வராஜ்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 அக்டோபர் 18]

(அ) பத்திரிகையாளர்களுக்கு நல வாரியம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பத்திரிகையாளர் நல வாரியம் அமைத்து, அரசாணை வெளியிடப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

57—

தையல் இயந்திரம் வழங்குதல்

வினா எண் 31091—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், பெரியமுல்லைவாயல் ஊராட்சியில் பெரியமுல்லைவாயல் கிராம பெண்களுக்கு தையல் இயந்திரம் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சமூக நலத் துறையின்கீழ் 1979 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம், சமூகத்தில் பெண்களின் நிலையை உயர்த்திட, குறிப்பாக பொருளாதாரத்தில் நலிவுற்ற பெண்கள், விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக்கொள்ளும் வகையில், அவர்கள் சுயமாக தொழில்புரிந்து அவர்களின் வாழ்வாதாரத்தை பூர்த்தி செய்துகொள்ளவும் உதவுகிறது.

பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், பெரியமுல்லைவாயல் ஊராட்சி, பெரியமுல்லைவாயல் கிராமப் பகுதியிலிருந்து 2019-2020, 2020-2021 மற்றும் 2021-2022 ஆம் ஆண்டுகளில் பெண்கள் எவரும் இலவச தையல் இயந்திரம் வேண்டி விண்ணப்பிக்கவில்லை. எனினும், பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சியில் 2019-2020, 2020-2021 மற்றும் 2021-2022 ஆம் ஆண்டுகளில் 16 பயனாளிகளுக்கு இலவச தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் நிதியாண்டில், ரூ.1.35 கோடி செலவில் 2,250 பயனாளிகளுக்கு மோட்டார் இணைக்கப்பட்ட இலவச தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

58—

மருத்துவர்களை நியமித்தல்

வினா எண் 10014—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் கால்நடை மருத்துவமனைகளில் காலியாக உள்ள பணியிடங்களில் மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கால்நடை பராமரிப்புத் துறையில் காலியாக உள்ள கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் 1,089 கால்நடை பட்டதாரிகளைக் கொண்டு நிரப்பப்பட்டுவிட்டன.

2022 அக்டோபர் 18]

59—

வழிகாட்டுதல்கள் வழங்குதல்

வினா எண் 12352—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விவசாயிகள் வாழ்வாதாரம் மேம்பட ஆடு வளர்ப்பு, கோழி, காடை, முயல் வளர்ப்பு போன்ற துணைத் தொழில்களில் ஈடுபட உரிய வழிகாட்டுதல்களை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விவசாயிகள் வாழ்வாதாரம் மேம்பட ஆடு வளர்ப்பு, கோழி, காடை, முயல் வளர்ப்பு போன்ற துணைத் தொழில்களில் ஈடுபட உரிய வழிகாட்டுதல்களை வழங்கும் நோக்கில், வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, முயல் வளர்ப்பு மற்றும் ஜப்பானிய காடை வளர்ப்புத் தொடர்பான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் மற்றும் சுய வேலைவாய்ப்பு பயிற்சிகள் தமிழக அரசால் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மூலமாக ஒவ்வொரு வருடமும் ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகின்றன.

60—

நாட்டின எருமையினம் தரமுயர்த்துதல், கொழுப்பு சக்திமிக்க பால் உற்பத்தி செய்தல்

வினா எண் 14496—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாட்டின எருமையினத்தை தரமுயர்த்தவும், நாட்டின எருமையினம், அயலின மாடுகளின் கூடுதல் கொழுப்பு சக்திமிக்க பால் உற்பத்திக்கு வழிவகை செய்யவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், நடுவூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் சிறந்த மரபுத்தன்மை கொண்ட நாட்டின எருமையினமான முர்ரா வகை எருமையினங்கள் பராமரிக்கப்பட்டு, அதன்மூலம் பெறப்படும் கன்றுகளை இனவிருத்தி செய்யும் நோக்கத்திற்காக விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மேலும், தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டை உயரின கால்நடை பெருக்குப்பண்ணையில் முர்ரா இன எருமை சிறந்த மரபுத்தன்மைவாய்ந்த பொலிகாளைகள் பராமரிக்கப்பட்டு, அதன்மூலம் பெறப்படும் உறைவிந்து குச்சிகள்மூலம் செயற்கை முறை கருவூட்டல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்மூலம் நாட்டின எருமையினம் தரமுயர்த்தப்பட்டும், கொழுப்பு சக்திமிக்க பால் உற்பத்திக்கும் வழிவகை செய்யப்படுகிறது.

61—

மீன்காட்சி நிலைய பராமரிப்பினை இளைஞர், மகளிருக்கு வழங்குதல்

வினா எண் 14506—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வண்ணமீன்கள் உற்பத்தி செய்து, மீன்காட்சி நிலையங்கள் உருவாக்கி அதன் பராமரிப்பினை இளைஞர் மற்றும் மகளிருக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மத்திய மற்றும் மாநில அரசு பங்களிப்புடன் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், இளைஞர் மற்றும்

2022 அக்டோபர் 18]

மகளிருக்கு வண்ண மீன்களை உற்பத்தி செய்திடவும், வண்ண மீன்காட்சியகம் அமைத்திடவும் அரசால் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

62—

மீன் அங்காடியை சீரமைத்தல்

வினா எண் 15214—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திரு.வி.க. நகர் தொகுதி, சென்னை மாநகராட்சி, வார்டு 74, சுப்புராயன் 1-வது தெருவில் கட்டப்பட்டுள்ள மீன் அங்காடியை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திரு.வி.க. நகர் தொகுதி, சென்னை மாநகராட்சி, வார்டு 74, சுப்புராயன் 1-வது தெருவில் பழைய வணிக வளாகக் கட்டடம் இடிக்கப்பட்டு, சென்னை மாநகராட்சியால் புதிதாக மீன் அங்காடி ஒன்று கட்டப்பட்டுள்ளது. இம்மீன் அங்காடிக்கு வாடகை நிர்ணயம் செய்திட குழு அமைக்கப்பட்டு, வாடகை நிர்ணயம் செய்திடும் பணிகள் நடைபெற்றுவரும் நிலையில், குழு அறிக்கை பெறப்பட்டவுடன் வாடகை நிர்ணயம் செய்து, மீன் அங்காடி திறக்கப்படும் என சென்னை மாநகராட்சியால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, புதிதாக கட்டப்பட்ட மீன் அங்காடியினை சீரமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

63—

விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

வினா எண் 15613—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அனைத்து ஊராட்சிகளிலும் கால்நடை கண்காட்சிமூலம் கால்நடை அபிவிருத்தி பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்— மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், ஏற்கெனவே ஒன்றியத்திற்கு 20 எண்ணம் வீதம் 2021-2022 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட 7,760 "சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்களில்" கால்நடை கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு, அதன்மூலம் கால்நடை அபிவிருத்தி பற்றிய விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டிலும் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், ஒன்றியத்திற்கு 20 எண்ணம் வீதம் 7,760 "சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள்" நடத்தப்படவுள்ளன. அம்முகாம்களில் கால்நடை கண்காட்சிகள்மூலம் கால்நடை அபிவிருத்தி பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

64—

மீன்குஞ்சுகள் விற்பனை செய்தல்

வினா எண் 15638—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்– மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வீரபாண்டி தொகுதியில் பூலாவரி ஏரியில் மீன்குஞ்சுகள் உற்பத்தி மையம் அமைத்து, மீன்குஞ்சுகள் விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்— மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின்மூலம் மேட்டூர் அரசு மீன் பண்ணையில் மீன்குஞ்சு

2022 அக்டோபர் 18]

வளர்ப்பு மற்றும் உற்பத்தி மையம் செயல்பட்டு வருகிறது. இம்மீன் பண்ணையில் ஆண்டுதோறும் 17 கோடி நுண்மீன்குஞ்சுகளும், 1.32 கோடி மீன் விரலிகளும் உற்பத்தி செய்யப்பட்டு, சேலம் மாவட்டம் மற்றும் மாநிலம் முழுவதும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. எனவே, சேலம் மாவட்டம், வீரபாண்டி பகுதியில் உள்ள மீன் வளர்ப்போர் மேட்டூரில் உள்ள அரசு மீன் பண்ணையில் மீன்குஞ்சுகளை வாங்கிக்கொள்ளலாம் என்பதால், பூலாவரி பகுதியில் தனியாக மீன்குஞ்சுகள் உற்பத்தி மையம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

65—

மீன்குஞ்சு உற்பத்தி, விற்பனை மையம் அமைத்தல்

வினா எண் 15639—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம், மூக்கனேரியில் மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் விற்பனை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின்மூலம் மேட்டூர் அரசு மீன் பண்ணையில் மீன்குஞ்சு வளர்ப்பு மற்றும் உற்பத்தி மையம் செயல்பட்டு வருகிறது. இம்மீன் பண்ணையில் ஆண்டுதோறும் 17 கோடி நுண்மீன்குஞ்சுகளும், 1.32 கோடி மீன் விரலிகளும் உற்பத்தி செய்யப்பட்டு, சேலம் மாவட்டம் மற்றும் மாநிலம் முழுவதும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. எனவே, சேலம் மாவட்டம், மூக்கனேரி பகுதியில் உள்ள மீன் வளர்ப்போர் மேட்டூரில் உள்ள அரசு மீன் பண்ணையில் மீன்குஞ்சுகளை வாங்கிக்கொள்ளலாம் என்பதால், மூக்கனேரி பகுதியில் தனியாக மீன்குஞ்சுகள் உற்பத்தி மையம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

66—

கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் மீன்கள், வறுவல் மீன்களை விற்பனை செய்தல்

வினா எண் 15640—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் புதிய பேருந்து நிலையத்தில் மேட்டூர் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் மேட்டூர் அணை மீன்களையும், சுவையான வறுவல் மீன்களையும் விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவு விற்பனை சங்கத்தின்மூலம் அஸ்தம்பட்டியில் ஒரு மீன் விற்பனை அங்காடியும், சேலம் பழைய பேருந்து நிலையம் கோட்டை மாரியம்மன் கோயில் அருகில் ஒரு மீன் விற்பனை அங்காடியும் தற்பொழுது செயல்பட்டு வருகின்றன.

இந்நிலையில், சேலம் புதிய பேருந்து நிலையம் அருகில் சேலம் மாநகராட்சிமூலம் தேவைப்படும் இடம் வழங்கும்பட்சத்தில், உரிய முன்வைப்புத் தொகை மேற்படி சங்கத்தின்மூலம் செலுத்தி, மேட்டூர் அணை மீன்களையும், சுவையான வறுவல் மீன்களையும் விற்பனை செய்திட உடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

67—

முயல் வளர்ப்பை ஊக்குவித்தல்

வினா எண் 18188—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விவசாயிகள் இடையே முயல் வளர்ப்பை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின்கீழ், 27 புறநிலைய விரிவாக்க மையங்கள் தமிழகம் முழுவதும் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்கள் வாயிலாக முயல் வளர்ப்புப் பயிற்சிகள் கால்நடை விவசாயிகளுக்கு அவ்வப்போதும், தேவைக்கேற்பவும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், காட்டுப்பாக்கத்தில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்தின் கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தில் முயல் வளர்ப்புப் பிரிவு ஒன்று செயல்பட்டு வருகின்றது. இதன்மூலம் கால்நடை விவசாயிகளுக்கு அறிவியல் ரீதியிலான முயல் வளர்ப்பு குறித்து பயிற்சிகள் அளிக்கப்படுவதுடன், இடுபொருட்களும் வழங்கப்படுகின்றன. எனவே, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் முயல் வளர்ப்பை கால்நடை விவசாயிகளிடையே ஊக்குவிக்கும் பணியினைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

68—

ஆடு வளர்ப்பை ஊக்குவித்தல்

வினா எண் 18219—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விவசாயிகள் இடையே ஆடு வளர்ப்பை ஊக்கப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) கிராமப்புற பொருளாதார மேம்பாட்டினை உருவாக்குவதற்காக ஏழை மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவும், பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கும் 100

சதவிகித மானியத்தில் 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2020-2021 ஆம் ஆண்டு வரை 13,22,152 பெண் பயனாளிகளுக்கு 52,88,608 இலவச வெள்ளாடுகள்/செம்மறியாடுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், வழங்கப்பட்ட வெள்ளாடுகள்/செம்மறியாடுகளிலிருந்து 86.99 இலட்சம் ஆட்டு குட்டிகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. இவை பயனாளிகள் வாழ்வாதாரத்திற்கு பெரிதும் உதவுகிறது.

மேலும், 2021-2022 ஆம் ஆண்டிற்காக ஊரகப் பகுதிகளில் வசிக்கும் ஏழ்மை நிலையில் உள்ள கணவனை இழந்த/கணவனால் கைவிடப்பட்ட, ஆதரவற்ற பெண்கள் மற்றும் தகுதியுள்ள திருநங்கைகள் பயனாளிகளுக்கு 100 சதவிகித மானியத்தில் 38,800 பயனாளிகளுக்கு தலா 5 ஆடுகள் வீதம் மொத்தம் 1,94,000 வெள்ளாடுகள்/செம்மறியாடுகள் வழங்கி பெண்களை தொழில்முனைவோராக உருவாக்கும் திட்டம் தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை நீங்கலாக) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழாது.

69—

ஜல்லிக்கட்டு-நிபந்தனைக்குட்பட்டு அனுமதி அளித்தல்

வினா எண் 18286—திரு. இரா. அருள்: மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் புதிதாக ஜல்லிக்கட்டு நடத்த விரும்புவோருக்கு நிபந்தனைக்குட்பட்டு அனுமதி அளிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

ஜல்லிக்கட்டு நடத்த விண்ணப்பிப்பவர்களின் கருத்துரு முறையாக மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையுடன் பெறப்பட்டால், அரசு ஜல்லிக்கட்டு நடத்திட அனுமதி ஆணை வழங்கி வருகிறது.

2022 அக்டோபர் 18]

70—

விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

வினா எண் 18487—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் கால்நடைகளுக்கு வரும் கோமாரி, வெக்கை நோய்கள் வராமல் இருக்க கிராமப்புற மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் கோமாரி மற்றும் வெக்கை நோய் குறித்த ஆலோசனைகள் விவசாயிகளுக்குத் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. தொலைக்காட்சி, தினசரி நாளிதழ்கள், வானொலி மற்றும் அனைத்து செய்தி ஊடகங்கள் வாயிலாக இந்நோய்கள் குறித்த தகவல்கள் மற்றும் கோமாரி தடுப்பூசிமூலம் நோய் பாதிப்பிலிருந்து பாதுகாத்துக்கொள்வது குறித்த விழிப்புணர்வு செய்திகள் வழங்கப்பட்டு வருகின்றன. இது தவிர, அனைத்து கிராமங்களிலும் ஒவ்வொரு சுற்று தடுப்பூசி பணிக்கு முன்னரும் சிறப்பு கிராம சபை கூட்டங்கள் நடத்தப்பட்டு, கோமாரி நோய் குறித்த விழிப்புணர்வு மற்றும் தவறாது தங்கள் மாட்டினங்களுக்கு தடுப்பூசி போடப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விவசாயிகளிடத்தில் எடுத்துரைக்கப்படுகிறது. மேலும், அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்மூலம் கோமாரி தடுப்பூசி பணி குறித்த விழிப்புணர்வு செய்திகள் விவசாயிகளுக்கு செய்தித்தாள்கள் வாயிலாக தெரிவிக்கப்படுகிறது. விவசாயிகள் குறைதீர்க்கும் நாளில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பாக அலுவலர்கள் பங்கேற்று கோமாரி நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைக்கின்றனர். கோமாரி நோய் குறித்து விழிப்புணர்வு பணியில் மாவட்ட நிர்வாகம், உள்ளாட்சி அமைப்புகள், அரசு சாரா நிறுவனங்கள் (தொண்டு), மகளிர் அமைப்புகள், பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகிய அனைவரும்

கால்நடை பராமரிப்புத் துறையுடன் ஒருங்கிணைந்து கோமாரி நோய் மற்றும் தடுப்பூசியின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு தெரிவித்தும், தடுப்பூசி பணியின்போது ஒத்துழைப்பும் அளித்து வருகின்றனர். தற்போது, தேசிய கால்நடை நோய்த் தடுப்புத் திட்டத்தின்கீழ், 2-வது சுற்று தடுப்பூசிப் பணி மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் சீரிய முறையில் நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது. வெக்கை நோய் நமது மாநிலத்திலும், இந்திய நாட்டிலிருந்தும் ஒழிக்கப்பட்டாலும், அனைத்து கிராமங்களிலும் அந்நோய் குறித்து தொடர் கண்காணிப்பும், கால்நடை வளர்ப்போரிடையே கூட்டங்கள் வாயிலாக தொடர்ந்து விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

71—

நாட்டுக் கோழி வளர்ப்பை ஊக்குவித்தல்

வினா எண் 18489—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விவசாயிகளிடையே நாட்டுக் கோழி வளர்ப்பை ஊக்கப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விவசாயிகளிடையே நாட்டுக் கோழி வளர்ப்பை ஊக்கப்படுத்த 2020-2021 ஆம் ஆண்டிற்கான தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நாட்டுக் கோழி வளர்ப்பின்மூலம் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் திட்டம் தொடங்கப்பட்டு, சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், மாவட்டத்திற்கு ஒரு ஒன்றியத்திற்கு 5 பயனாளிகள் வீதம் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஒன்றியங்களில் மாவட்ட ஆட்சியர்மூலம் பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு 1,000 எண்ணம் நாட்டுக் கோழிக்குஞ்சுகள், அதற்குண்டான தீவனம்

2022 அக்டோபர் 18]

மற்றும் குஞ்சு பொரிப்பான் ஆகியவற்றை கொள்முதல் செய்ய 50 சதவிகித மானியம் வழங்கப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

72—

ஜப்பான் காடை வளர்ப்பை ஊக்குவித்தல்

வினா எண் 21137—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விவசாயிகள் இடையே ஜப்பான் காடை வளர்ப்பை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விவசாயிகள் இடையே ஜப்பான் காடை வளர்ப்பை ஊக்குவிக்க, ஜப்பானிய காடை வளர்ப்புத் தொடர்பான சுய வேலைவாய்ப்பு பயிற்சிகள் தமிழக அரசால் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மூலமாக ஒவ்வொரு வருடமும் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், ஜப்பானிய காடைகள், துறைப் பண்ணைகள் மூலமாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு, ஜப்பானிய காடை வளர்ப்பு ஊக்குவிக்கப்படுகிறது.

73—

இரத்தக் கழிச்சல் நோய் ஏற்படுவதைத் தடுத்தல்

வினா எண் 21691—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் கோழிப் பண்ணைகளில் வெப்ப காலங்களில் இரத்தக் கழிச்சல் நோய் ஏற்படுவதைத் தடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலுள்ள கோழிப் பண்ணைகள் மற்றும் புறக்கடை கோழிகளில் இரத்தக் கழிச்சல் நோய் ஏற்படுவதைத் தடுக்க ஏதுவாய், கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் இயங்கும் அனைத்து கால்நடை மருந்தகங்கள் மற்றும் கிளை நிலையங்கள் மூலமாக கிராமங்கள் மற்றும் நகர்ப்புறங்களிலுள்ள கோழிகளுக்கு இலவசமாக இரத்தக் கழிச்சல் நோய்த் தடுப்பூசி மருந்து (RDVK) ஆண்டு முழுவதும் செலுத்தப்படுவதுடன் ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி மாதத் திங்களில் சிறப்பு நிகழ்வாக கிராமங்களில் இருவார கோழி கழிச்சல் தடுப்பு முகாமும் நடைபெற்று, கோழியினங்களில் நோய் ஏற்படாமல் இத்துறைமூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. பிப்ரவரி 2022-ல் நடைபெற்ற இருவார முகாம்களில் சுமார் 71 இலட்சம் கோழியினங்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

74—

மீன் வளர்ப்புப் பணிக்கு மானியம் வழங்குதல்

வினா எண் 26832—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பிளஸ் 2 படித்த கிராமப்புற மகளிரைக் கொண்ட கூட்டுறவு அமைப்பை ஏற்படுத்தி மீன் வளர்ப்புப் பணியில் ஈடுபட மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதியில் ஏற்கெனவே எப்.எம்.ஆர்.II பெண்ணாகரம் மீனவர் கூட்டுறவுச் சங்கம் 920 மீனவ உறுப்பினர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

2022 அக்டோபர் 18]

இச்சங்கத்தில் 150-க்கும் மேற்பட்ட மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். மேலும், 18 வயது நிரம்பிய மகளிர் மேற்கண்ட மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்ந்து அவ்வப்பொழுது அரசால் வழங்கப்படும் மீன் வளர்ப்பு தொடர்பான திட்டங்களைப் பெற்று பயனடையலாம். எனவே, ஒரே சங்க விவகார எல்லைக்குள் புதியதாக மீனவர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க வழிவகை இல்லை.

75—

ஆராய்ச்சி நிலையம் அமைத்தல்

வினா எண் 28203—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விருத்தாசலம் தொகுதியில் கால்நடை பராமரிப்பு ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் தொகுதிக்கு சுமார் 61 கிலோ மீட்டர் தொலைவில் கடலூரில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவ பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் செயல்பட்டு வருகின்றது. விருத்தாசலம் தொகுதிக்கு சுமார் 55 கிலோ மீட்டர் தொலைவில் சேலம் மாவட்டத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றது. மேலும், விருத்தாசலம் தொகுதியைச் சுற்றி சுமார் 50 முதல் 65 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள விழுப்புரம் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களிலும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில் அறிவியல் ரீதியிலான கால்நடை வளர்ப்பு, பராமரிப்பு மற்றும் மேலாண்மை முறைகள், பசுந்தீவன உற்பத்தி மற்றும் மதிப்பூட்டிய இறைச்சி மற்றும் பால் பொருட்கள் உற்பத்தி குறித்து கால்நடை

[2022 அக்டோபர் 18

விவசாயிகளுக்கு செயல்விளக்க பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. விருத்தாசலம் தொகுதிவாழ் மக்கள் இம்மையங்களை அணுகி பயன்பெறலாம். எனவே, விருத்தாசலம் தொகுதியில் கால்நடை பராமரிப்பு ஆராய்ச்சி நிலையம் அமைக்க தற்பொழுது அவசியம் எழவில்லை.

76—

மருத்துவ முகாம் நடத்துதல்

வினா எண் 28220—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதம் இருமுறை கிராமங்களின் முக்கிய பகுதிகளில் கால்நடை மருத்துவ முகாம் நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒன்றியத்திற்கு 20 எண்ணம் வீதம் முக்கிய பகுதிகளில் 2021-2022 ஆம் ஆண்டில் 7,760 "சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள்" நடத்தப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டிலும் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், ஒன்றியத்திற்கு 20 எண்ணம் வீதம் 7,760 "சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள்" நடத்தப்படவுள்ளன.

77—

கால்நடை மருத்துவக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 28731—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி, நீலகிரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களிலும், விராலிமலை, நிலக்கோட்டை ஆகிய

2022 அக்டோபர் 18]

தொகுதிகளிலும் கால்நடை மருத்துவக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2020-2021 ஆம் ஆண்டில் சேலம், தேனி, உடுமலைப்பேட்டையில் மூன்று புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் துவக்கப்பட்டதுடன், சென்னை, நாமக்கல், ஒரத்தநாடு, திருநெல்வேலியை சேர்த்து தற்போது மொத்தம் தமிழ்நாட்டில் ஏழு இடங்களில் கால்நடை மருத்துவக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி ஒன்றும் இயங்கி வருகின்றது. இத்துடன் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி மற்றும் மதுரையில் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. நிலக்கோட்டைக்கு அருகில் உள்ள திண்டுக்கல்லில் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் செயல்பட்டு வருகின்றது.

எனவே, கன்னியாகுமரி, நீலகிரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களிலும், விராலிமலை, நிலக்கோட்டை ஆகிய தொகுதிகளிலும் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் துவக்க தற்பொழுது அவசியம் ஏதும் எழவில்லை.

78—

வழிகாட்டுதல்கள் வழங்குதல்

வினா எண் 29353—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம், நாமக்கல், கள்ளக்குறிச்சி பகுதிகளில் நாட்டுக் கோழி வளர்ப்புத் தொழிலை மேம்படுத்தவும், அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் உரிய வழிகாட்டுதல்கள் வழங்க அரசு முன்வருமா?

[2022 அக்டோபர் 18

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

2020-2021 ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், நாட்டுக் கோழி வளர்ப்பின்மூலம் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் திட்டம் தொடங்கப்பட்டு, சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், ஒரு ஒன்றியத்திற்கு 5 பயனாளிகள் வீதம் மாவட்ட ஆட்சியர்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு 1,000 எண்ணம் நாட்டுக் கோழிக்குஞ்சுகள், அதற்குண்டான தீவனம் மற்றும் குஞ்சு பொரிப்பான் ஆகியவற்றை கொள்முதல் செய்ய 50% மானியம் வழங்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே, மேற்காணும் திட்டம் மூலமாக சேலம், நாமக்கல், கள்ளக்குறிச்சி பகுதிகளில் நாட்டுக் கோழி வளர்ப்புத் தொழில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வழிமுறைகள், மத்திய அரசின் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையமான வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (Agricultural and Processed Food Products Export Development Authority) APEDA-*விடம் பெறலாம்.*

79—

வெக்கை, கோமாரி நோய்களுக்கு தடுப்பூசி செலுத்துதல்

வினா எண் 29359—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாட்டினங்களுக்கு ஏற்படும் வெக்கை, கோமாரி ஆகிய நோய்களுக்கு தடுப்பூசி போட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கால்நடை பராமரிப்புத் துறையில், 2011 ஆம் ஆண்டு முதல் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியுடன் கோமாரி நோய்த்

2022 அக்டோபர் 18]

தடுப்பூசி திட்டத்தின்மூலம் ஆண்டிற்கு இருமுறை ஆறு மாதகால இடைவெளியில், இம்மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலுள்ள தகுதியுள்ள பசுவினம் மற்றும் எருமையினங்களுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி போடும் பணி தொய்வில்லாமல் மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாட்டில், 2019 ஆம் ஆண்டு வரையில் கோமாரி நோய்த் தடுப்பு திட்டத்தின் (FMDCP)கீழ், 17 சுற்றுகள் கோமாரி நோய்த் தடுப்பூசி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது, தேசிய கால்நடை நோய்த் தடுப்புத் திட்டத்தின்கீழ், 2-வது சுற்றில் இம்மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் 86.33 இலட்சம் தகுதியுள்ள பசுவினம் மற்றும் எருமையினங்களுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்பட்டு, 30-6-2022 அன்று தடுப்பூசி செலுத்தும் பணி முடிவுற்றது. கால்நடைகளுக்கு வரும் வெக்கை நோயானது மே மாதம் 2002 முதல் தமிழ்நாட்டிலிருந்து அறவே ஒழிக்கப்பட்டு, வெக்கை நோய்த் தொற்றில்லா மாநிலமாகத் தமிழகம் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போது அந்நோய்க்குத் தடுப்பூசி செலுத்தும் தேவை எழாது.

80—

மரக்கன்றுகள் நடுதல்

வினா எண் 10129—திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாகப்பட்டினம் மாவட்டத்தில் கஜா புயலினால் அழிந்துவிட்ட சவுக்கு மரங்களுக்கு மாற்றாக புதிய மரக்கன்றுகள் நடுவதற்கு அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்:

15-11-2018 அன்று வீசிய கஜா புயலினால் நாகப்பட்டினம் மாவட்டத்தில் 2015 ஆம் ஆண்டு எழுப்பப்பட்ட கடலோர காற்று தடுப்பு சவுக்கு தோட்டங்கள் புயலால் பலத்த சேதமடைந்தன. அத்தோட்டங்களை மீண்டும் அமைத்திட நிதி ஒதுக்கீடு கோரி அரசுக்கும், மாநில பேரிடர் நிவாரண நிதியில் (SDRF) ஒதுக்கீடு கோரி மாவட்ட ஆட்சியருக்கும் வன உயிரினக் காப்பாளர் கடித எண் 465/2021/தி, நாள் 2-1-2021-ல்

[2022 அக்டோபர் 18

முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேற்படி நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றதும், மரக்கன்றுகள் நடப்படும்.

81—

விளை நிலங்கள், உடைமைகள் சேதம் செய்வதைத் தடுத்தல்

வினா எண் 28290—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வன விலங்குகள் விளை நிலங்களையும், மக்களின் உடைமைகளையும் சேதம் செய்வதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வனப் பகுதிகளில், கோடைக் காலங்களில் ஏற்படும் வறட்சியின் காரணமாக, வன உயிரினங்கள் குடிநீருக்காகவும், உணவுக்காகவும் வனத்தினை விட்டு வெளியே வந்து வனத்திற்கு அருகில் உள்ள கிராமங்களில் புகுந்து விவசாயப் பயிர்களுக்கும், மனிதர்களுக்கும் சேதத்தை ஏற்படுத்துகின்றன. இவ்வாறு வனத்தை விட்டு வெளியேறும் வன விலங்குகளினால் பொதுமக்களின் உயிருக்கும், உடைமைகளுக்கும் எந்தவித சேதாரமும் ஏற்படாமல் இருக்க, வனப் பணியாளர்கள், வேட்டைத் தடுப்புக் காவலர்கள் மற்றும் அதிவிரைவு வன உயிரின மீட்புக் குழுவினரைக் கொண்டு வன விலங்குகளை வனப் பகுதிக்குள் பாதுகாப்பாக திருப்பியனுப்பும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், வனத்திற்குள் தீவனத் தோட்டங்கள் மற்றும் தேவையான இடங்களில் நீர்த்தொட்டிகள், கழிவுநீர் குட்டைகள், தடுப்பணைகள் கட்டுதல், வறட்சிக் காலங்களில் லாரி மற்றும் டிராக்டர்கள்மூலம் வன உயிரினங்களுக்குத் தேவையான குடிநீரை ஏற்படுத்துதல், வன எல்லையில் யானை புகா அகழி அமைத்தல் மற்றும் பழுதடைந்த சோலார் மின்வேலி சீரமைத்தல்

2022 அக்டோபர் 18]

போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வனப் பணியாளர்களுக்கு ஆளில்லா விமானம் (DRONE PILOTS) இயக்க முறையான பயிற்சி வழங்கப்பட்டு, அதன்மூலம் யானைகளின் நடமாட்டம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டும், வனவிலங்குகளின் நடமாட்டம் தொடர்பாக பொதுமக்களுக்கு கிராம வனக் குழுமூலம் (VFC) விழிப்புணர்வு கூட்டமும் நடத்தப்பட்டு வருகிறது. இத்தகைய தடுப்பு நடவடிக்கைகளையும் மீறி வன விலங்குகளால் விளை நிலங்களுக்கும், மக்களின் உடைமைகளுக்கும் சேதம் ஏற்படும்பட்சத்தில், மனுதாரர்களிடமிருந்து தேவையான ஆவணங்கள் பெறப்பட்டு, தற்போதுள்ள அரசாணைகளின்படி உரிய நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

82—

இலவச மின்சாரம்

வினா எண் 15222—திரு. கே.ஆர். ஜெயராம்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிங்காநல்லூர் தொகுதி, சிங்காநல்லூர் பகுதியில் உள்ள சிறு, குறு தொழில் நிறுவனங்களுக்கு 750 யூனிட் வரை இலவச மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2003 ஆம் ஆண்டு மின்சார சட்டம், பிரிவு 62-ன்படி, நுகர்வோருக்கு மின் கட்டணத்தினை நிர்ணயம் செய்யும் அதிகாரம் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்குதான் உள்ளது.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மின் கட்டண விகிதங்களைத் திருத்தி 11-8-2017 முதல் அமலுக்கு வருமாறு 11-8-2017 தேதியிட்ட மின் கட்டண ஆணையினை வெளியிட்டுள்ளது.

[2022 அக்டோபர் 18

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வீதப்பட்டியல் உத்தரவு T.P.No.1/2017, நாள் 11-8-2017-ன்படி சிறு, குறு தொழில் நிறுவனங்களுக்கு மின்னளவி பொருத்தி, பன்னிரெண்டு கிலோ வாட் வரையிலான தாழ்வழுத்த வீதப்பட்டி IIIA(1)-ன்படி மின் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

83—

கூலியை உயர்த்தி வழங்குதல்

வினா எண் 18644—திரு. இ.மா. மான்ராஜ்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதிக்குட்பட்ட நெசவாளர்களின் நெசவுக்கு முந்தைய கூலியை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் கைத்தறி துறையின் கட்டுப்பாட்டில் 16 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இச்சங்கங்களில் 161 கைத்தறி நெசவாளர்களும், 2,504 பெடல்தறி நெசவாளர்களும் நெசவுப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

(2) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதிக்குட்பட்ட நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தமிழக அரசின் வேட்டி-சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் கைத்தறி மற்றும் பெடல்தறி சேலைகளும், சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் பெடல்தறி கேஸ்மெண்ட் இரகமும் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(3) தமிழக அரசின் வேட்டி-சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் உற்பத்தி செய்யப்பட்டுவரும் கைத்தறி மற்றும் பெடல்தறி சேலைகளுக்கு நெசவுக்கு முந்தைய கூலியானது 1-11-2021 முதல் உயர்வு அளிக்கப்பட்டு, அதனடிப்படையில் சேலை ஒன்றுக்கு ரூ.26.67 வழங்கப்பட்டு வருகிறது.

2022 அக்டோபர் 18]

(4) இதேபோன்று சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் உற்பத்தி மேற்கொள்ளப்படும் பெடல்தறி கேஸ்மெண்ட் இரகத்திற்கான நெசவுக்கு முந்தைய கூலியானது 9-11-2021 முதல் உயர்வு அளிக்கப்பட்டு, அதனடிப்படையில் மீட்டர் ஒன்றுக்கு ரூ.4.89 வழங்கப்பட்டு, ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

84—

மண்பாண்டத் தொழிலுக்கு கடன் மற்றும் மண் வழங்குதல்

வினா எண் 28534—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொள்ளாச்சி பகுதியில் மண்பாண்டத் தொழில் செய்ய கடன் மற்றும் மண் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பாரதப் பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டமானது (PMEGP), தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்/கதர் கிராமத் தொழில்கள் ஆணையம்/மாவட்ட தொழில்கள் மையம்மூலம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில், பயனாளிகள் 25% மற்றும் 35% வரையிலான மானியத்துடன் வங்கிக் கடனைப் பெறலாம்.

எனவே, பொள்ளாச்சி பகுதியில் வசிக்கும் மண்பாண்டத் தொழிலாளர்கள், மேற்காணும் திட்டத்தைச் செயல்படுத்தும் முகவர்கள் மற்றும் வங்கிகளை அணுகி, PMEGP திட்டத்தின்கீழ் கடன் பெற்று பயனடையலாம்.

பொள்ளாச்சி பகுதியில் உள்ள மண்பாண்டத் தொழிலாளர்கள், சம்பந்தப்பட்ட வருவாய்த் துறை மற்றும் கனிம வளத் துறையை அணுகி, மண்பாண்டத் தொழில் செய்வதற்குத் தேவையான களிமண்ணை எடுத்துக்கொள்ளலாம்.

[2022 அக்டோபர் 18

85—

புவிசார் குறியீடு பெறுதல்

வினா எண் 28543—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சின்னாளப்பட்டி சுங்குடி சேலைக்கு புவிசார் குறியீடு பெறுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் சரகத்தில் உள்ள சின்னாளப்பட்டியில் 8 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இதில், 1,410 நெசவாளர்கள் கூட்டுறவு அமைப்பின்கீழும், 510 நெசவாளர்கள் தனியார் அமைப்பிலும் உள்ளனர். அதில், நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின்கீழ் 750 தறிகள் இயங்கி வருகின்றன.

(2) சின்னாளப்பட்டி பகுதியில் 5 ஆண்டுகளுக்கு முன்புவரை ஒருசில சங்கங்கள் மட்டும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கான உற்பத்தி திட்டத்தின்கீழ் சுங்குடி சேலைகள் குறைந்த அளவில் உற்பத்தி செய்துவந்த நிலையில் தற்போது சின்னாளப்பட்டி பகுதிகளில் சுங்குடி சேலை இரகங்கள் உற்பத்தி செய்யப்படவில்லை. மேலும், சின்னாளப்பட்டியில் உள்ள நெசவாளர்களால் கோரா காட்டன் சேலைகள், மென்பட்டு சேலைகள் மற்றும் காட்டன் சேலைகள் ஆகிய இரகங்கள் மட்டுமே தற்போது உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

(3) மேலும், பாரம்பரியமான சுங்குடி சேலைகளுக்கு புவிசார் குறியீடு மதுரை சரகத்தினால் 2005 ஆம் ஆண்டில் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளது.

(4) எனவே, சின்னாளப்பட்டி பகுதியில் சுங்குடி சேலை இரகங்கள் தற்போது உற்பத்தி மேற்கொள்ளப்படாத நிலையில், புவிசார் குறியீடு பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

2022 அக்டோபர் 18]

86—

கைத்தறிக் கூடத்தை மீண்டும் துவக்குதல்

வினா எண் 29382—திரு. இரா. அருள்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாமக்கல் தொகுதி, ஏளூர் ஊராட்சியில் உள்ள கைத்தறிக் கூடத்தை மீண்டும் துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், திருச்செங்கோடு சரக கட்டுப்பாட்டின்கீழ் ஏளூர் என்ற ஊரில் செயல்பட்டுவந்த ட்டி.எச்.86, ஏளூர் ஆதி திராவிடர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 22-10-1986-ல் பதிவு செய்யப்பட்டு, 18-11-1986-ல் செயல்பட துவங்கப்பட்டது. சங்கத்தில் உற்பத்தி, விற்பனை வெகுவாகக் குறைந்து செயலிழந்த நிலைக்கு சென்ற காரணத்தினாலும், சங்கத்தில் உள்ள உறுப்பினர்கள் வேறு தொழிலுக்கு வெளியே சென்றுவிட்ட காரணத்தினாலும், சங்கத்தை புத்துயிரூட்டி செயல்படுத்த போதிய நிதி வசதி இல்லாத காரணத்தினாலும், 1983 ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 137(2)(பி)-ன்கீழ் சங்கம் 21-4-2008-ல் கலைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, சங்கத்தின் பதிவு எண் இரத்து செய்யப்பட்டு, முறையாக அரசிதழ் எண் TN/CCN/117/2006-08, நாள் 9-7-2008-ல் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. எனவே, சங்கத்தை மீண்டும் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

87—

மலைமாதேஸ்வரன் கோயில் கட்டுதல், படிகள் அமைத்தல்

வினா எண் 4455—திரு. இரா. அருள்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2022 அக்டோபர் 18

சேலம் மேற்கு தொகுதி, தளவாய்ப்பட்டி ஊராட்சி, இரட்டைகரட்டில் (பால் பண்ணை அருகில் உள்ள) மலைமாதேஸ்வரன் கோயிலைக் கட்டவும், திருக்கோயிலுக்குச் செல்ல, குத்தகை பெற்ற ஆவின் நிறுவனம் மூலமாகப் படிகள் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம் மற்றும் நகர், தளவாய்ப்பட்டி, அருள்மிகு மலைமாதேஸ்வரன் திருக்கோயில் தளவாய்ப்பட்டி கிராம சர்வே எண் 45/2-ல் அரசு தரிசு நிலத்தில் குன்று என்ற வகைப்பாட்டில் அமைந்துள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் ஊர் பொதுமக்கள் உதவியுடன் தினசரி பூஜை நடைபெற்று வருகிறது. மேலும், இத்திருக்கோயிலில் வருடாந்திர திருவிழா ஏதும் நடைபெறுவதில்லை.

மேற்படி திருக்கோயில் இத்துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயில் என்பதால், இத்துறைமூலம் இத்திருக்கோயிலைக் கட்டவும், படிகள் அமைக்கவும் சாத்தியக்கூறுகள் இல்லையெனவும், இத்திருக்கோயிலை துறையின் ஆளுகையின்கீழ் கொண்டுவர அப்பகுதி மக்களிடம் எதிர்ப்புகள் ஏதுமில்லாதபட்சத்தில், ஆளுகையின்கீழ் கொண்டுவந்து திருப்பணிகள் மேற்கொள்வது குறித்து பரிசீலிக்கப்படும்.

88—

நிழல்தரும் கூடாரம் அமைத்தல்

வினா எண் 4458—திரு. இரா. அருள்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சி, வெண்ணங்கொடி முனியப்பன் கோயில் முன்புறமுள்ள இடத்தில் நிழல்தரும் கூடாரம் அமைக்க அரசு முன்வருமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் மேற்கு வட்டம், ஜாகீர் அம்மாபாளையம், அருள்மிகு வெண்ணங்கொடி முனியப்ப சுவாமி திருக்கோயில் சட்டப் பிரிவு 46(iii)-ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயில் நிலை-2 செயல் அலுவலராலும், சேலம் மண்டல உதவி ஆணையரால் தக்கார் நிலையிலும் நிருவகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலின் உதவித்தொகை நிர்ணய வருவாய் பசலி 1426-க்கு ரூ.1,69,97,487/- ஆகும்.

இத்திருக்கோயிலின் மூலவரான அருள்மிகு முனியப்ப சுவாமி வெட்டவெளியில் வெண்ணங்கொடிகீழ் அமர்ந்த நிலையில் அருள்பாலித்து வருகிறார். இத்திருக்கோயில் சேலம்-பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் அரசு புறம்போக்கில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் ஏதுமில்லை. இத்திருக்கோயிலுக்கு உண்டியல் மற்றும் கட்டணச் சீட்டு விற்பனை மூலமே பிரதான வருவாய் வரப்பெறுகிறது.

இத்திருக்கோயிலில் கடந்த 2010-ம் ஆண்டில் திருக்கோயிலுக்கு முன்புறம் நெடுஞ்சாலைத்துறைக்குச் சொந்தமான சர்வீஸ் ரோட்டில் ஷெட் (shed) அமைக்கும் பணியினை ரூ.34,00,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்து சமய அறநிலையத் துறை ஆணையரின் செ.மு.நட.ந.க.எண் 56502/2010/ஒய்2, நாள் 18-10-2010 மற்றும் 28-10-2010-ன்படி நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அங்கீகாரமும், இவ்வலுவலக ந.க.எண் 6526/2011/ஒய்6, நாள் 15-2-2011-ன்படி ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரமும் வழங்கப்பட்டது. ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்ட நிலையில், இத்திருக்கோயிலுக்கு எதிரே அமைந்துள்ள தமிழ்நாடு அரசு மேக்னசைட் நிறுவனம் சர்வீஸ் ரோட்டில் ஷெட் (shed) அமைக்கும் பணியைத் தொடங்கினால், மேக்னசைட் நிறுவனமானது முழுவதுமாக மறைக்கப்பட்டுவிடும் என அப்போது நேரில் ஆட்சேபணை தெரிவித்ததால் அப்பணி அப்போதே நிறுத்தப்பட்டுவிட்டது.

இந்நிலையில், மேற்படி கான்கிரீட் கட்டடம் அமைப்பதால் வாகன பூசைக்கு வரும் கனரக வாகனங்கள் திருக்கோயிலுக்கு முன்பாக வந்து பூசை செய்ய இயலாத நிலை ஏற்படும். இதனால், திருக்கோயிலின் பிரதான வருவாயும் குறைய வாய்ப்புள்ளது. மேலும், இப்பணியை மேற்கொள்ள திருக்கோயிலுக்குச் சொந்தமாக இடம் இல்லாத காரணத்தால், தற்போது நிழல்தரும் கான்கிரீட் கட்டடம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

89—

ஆகமப் பயிற்சி அளித்தல்

வினா எண் 4459—திரு. இரா. அருள்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிராமப்புற கோயில் பூசாரிகளுக்கு ஆகமப் பயிற்சி அளிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

அர்ச்சகர் பயிற்சி பள்ளிகளில் நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்புகளின்படி, கிராமப்புற மற்றும் நகர்ப்புற மாணாக்கர் அனைவருக்கும் பயிற்சி வழங்கப்படும்.

90—

குடமுழுக்கு, நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டல்

வினா எண் 6972—திரு. இரா. அருள்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தாரமங்கலத்தில் உள்ள அருள்மிகு இளமீஸ்வரர் திருக்கோயிலை புனரமைத்து குடமுழுக்கு நடத்தவும், கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கவும் அரசு முன்வருமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் கிராமத்தில் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் துறையின் சட்டப் பிரிவு 46(iii)-ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் நிலை-3 செயல்அலுவலராலும், மேச்சேரி அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயில் செயல் அலுவலரால் தக்கார் நிலையிலும் நிருவகிக்கப்பட்டு வருகிறது.

இத்திருக்கோயிலைப் புனரமைத்து குடமுழுக்கு மேற்கொள்ள, தொல்லியல் துறை வல்லுநர் கருத்துரை பெறப்பட்டுள்ளது. இந்து சமய அறநிலையத் துறையின் தற்போதைய நடைமுறையின்படி, மண்டல மற்றும் மாநில அளவிலான வல்லுநர் குழுக் கூட்டத்தில் திருப்பணி வேலைகளுக்கு ஒப்புதல் பெற்று, மதிப்பீடுகள் தயார் செய்யப்படவுள்ளன. இத்திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லாததால் துறை நிதி மற்றும் உபயதாரர் நிதிமூலம் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் தொடர்பான வழக்கு மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் நடைபெற்று வருவதால், வழக்கு முடிவடைந்தவுடன் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

91—

கோயில் கட்டித் தருதல்

வினா எண் 7527—திரு. சீ. கதிரவன்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மண்ணச்சநல்லூர் அய்யம்பாளையம் ஊராட்சி, தீராம்பாளையம், வெள்ளக்குளம் பகுதியில் கோயில் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இந்து சமயம் மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959 மற்றும் அதன்கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளின்படி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறைமூலம் புதிய திருக்கோயில் கட்டுவதற்கு வழிவகை இல்லை.

92—

திருமண மண்டபம் கட்டுதல்

வினா எண் 10106—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், பாலஜங்கமனஅள்ளி ஊராட்சி, தேவர் ஊத்துப்பள்ளம் கிராமத்தில் உள்ள அருள்மிகு தேவூத்து மாரியம்மன் திருக்கோயிலுக்கு திருமண மண்டபம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், தேவர் ஊத்துப்பள்ளம், அருள்மிகு தேவூத்து மாரியம்மன் திருக்கோயில் இத்துறையின் சீரிய ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். எனவே, இத்திருக்கோயிலுக்கு இத்துறைமூலம் திருமண மண்டபம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், இத்திருக்கோயிலை துறையின் சீரிய ஆளுகைக்குக் கொண்டுவர அப்பகுதி மக்களிடையே எதிர்ப்புகள் இல்லாதபட்சத்தில், துறை ஆளுகையின்கீழ் வந்த பின்னர், இதுகுறித்து பரிசீலிக்கப்படும்.

2022 அக்டோபர் 18]

93—

குளம் தூர்வாருதல்

வினா எண் 10121—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், தொப்பூர் ஊராட்சி, செட்டிக்கொம்பை-விநாயகர் கோயில் வளாகத்தில் உள்ள குளத்தைத் தூர்வாரி சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், தொப்பூர் ஊராட்சி, செட்டிக்கொம்பை, அருள்மிகு விநாயகர் திருக்கோயில் இத்துறையின் சீரிய ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். எனவே, இத்திருக்கோயில் வளாகத்தில் உள்ள குளத்தை இத்துறைமூலம் தூர்வாரி சீரமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், இத்திருக்கோயிலை துறையின் சீரிய ஆளுகைக்குக் கொண்டுவர அப்பகுதி மக்களிடம் எதிர்ப்புகள் இல்லாதபட்சத்தில், துறை ஆளுகையின்கீழ் வந்த பின்னர், இத்திருக்குளத்தை தூர்வாருவது குறித்து பரிசீலிக்கப்படும்.

94—

கான்கிரீட் கட்டடம் கட்டுதல்

வினா எண் 28023—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மேற்கு தொகுதி, ஜாகீர் அம்மாபாளையத்தில் உள்ள அருள்மிகு வெண்ணாங்கொடி முனியப்பன் திருக்கோயில் முன்புறம் கான்கிரீட் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

[2022 அக்டோபர் 18

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் மேற்கு வட்டம், ஜாகீர் அம்மாபாளையம், அருள்மிகு வெண்ணாங்கொடி முனியப்ப சுவாமி திருக்கோயில் சட்டப் பிரிவு 46(iii)-ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயில் நிலை-II செயல் அலுவலராலும், சேலம் மண்டல உதவி ஆணையரால் தக்கார் நிலையிலும் நிருவகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலின் உதவித்தொகை நிர்ணய வருவாய் பசலி 1426-க்கு ரூ.1,69,97,487/- ஆகும்.

இத்திருக்கோயிலின் மூலவரான அருள்மிகு முனியப்ப சுவாமி வெட்டவெளியில் வெண்ணாங்கொடியின்கீழ் அமர்ந்த நிலையில் அருள்பாலித்து வருகிறார். இத்திருக்கோயில் சேலம்-பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் அரசு புறம்போக்கில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் ஏதுமில்லை. இத்திருக்கோயிலுக்கு உண்டியல் மற்றும் கட்டணச் சீட்டு விற்பனை மூலமே பிரதான வருவாய் வரப்பெறுகிறது.

இத்திருக்கோயிலில் கடந்த 2010-ம் ஆண்டில் திருக்கோயிலுக்கு முன்புறம் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சர்வீஸ் ரோட்டில் ஷெட் (shed) அமைக்கும் பணியினை ரூ.34,00,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள இவ்வலுவலக செ.மு.நட.ந.க.எண் 56502/2010/ஓய்2, நாள் 18-10-2010 மற்றும் 28-10-2010-ன்படி நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அங்கீகாரமும், இவ்வலுவலக ந.க.எண் 6526/2011/ஓய்6, நாள் 15-2-2011-ன்படி ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரமும் வழங்கப்பட்டது. ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்ட நிலையில், இத்திருக்கோயிலுக்கு எதிரே அமைந்துள்ள தமிழ்நாடு அரசு மேக்னசைட் நிறுவனம் சர்வீஸ் ரோட்டில் ஷெட் (shed) அமைக்கும் பணியைத் தொடங்கினால், மேக்னசைட் நிறுவனமானது முழுவதுமாக மறைக்கப்பட்டுவிடும் என அப்போது நேரில் ஆட்சேபணை தெரிவித்ததால் அப்பணி அப்போதே நிறுத்தப்பட்டுவிட்டது.

இந்நிலையில், மேற்படி கான்கிரீட் கட்டடம் அமைப்பதால் வாகன பூசைக்கு வரும் கனரக வாகனங்கள் திருக்கோயிலுக்கு

2022 அக்டோபர் 18]

முன்பாக வந்து பூசை செய்ய இயலாத நிலை ஏற்படும். இதனால், திருக்கோயிலுக்குச் சொந்தமாக இடம் இல்லாத காரணத்தால், தற்போது நிழல்தரும் கான்கிரீட் கட்டடம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

95—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 28116—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோளிங்கர் தொகுதி, செங்கள்நத்தம் ஊராட்சி, குப்பக்கல்மேடு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை சோளிங்கர் தொகுதி, செங்கள்நத்தம் ஊராட்சி, குப்பக்கல்மேடு நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வழிவகை இல்லை.

96—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 28118—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உசிலம்பட்டி தொகுதி, உத்தப்பநாயக்கனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை உசிலம்பட்டி தொகுதி, உத்தப்பநாயக்கனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வழிவகை இல்லை.

97—

பள்ளிகளைத் தரமுயர்த்துதல்

வினா எண் 28143—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம், சாமிசெட்டிப்பட்டி மற்றும் கம்பம்பட்டி ஊராட்சி, மலையூர்காடு பகுதியிலுள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம், சாமிசெட்டிப்பட்டி மற்றும் கம்பம்பட்டி ஊராட்சி, மலையூர்காடு பகுதியிலுள்ள நடுநிலைப் பள்ளிகள் பூர்த்தி செய்யாததால், இப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த வழிவகை இல்லை.

2022 அக்டோபர் 18]

98—

பள்ளியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 28173—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிள்ளியூர் தொகுதி, மடாலக்காடு (இருப்புகட மான்குழி) அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை கிள்ளியூர் தொகுதி, மடாலக்காடு (இருப்புகட மான்குழி) அரசு நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வழிவகை இல்லை.

99—

அலுவலகம் அமைத்தல்

வினா எண் 31002—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் புதிய தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன் காத்திட, தற்போது போளூரில் தொழிலாளர் நலத் துறையின்கீழ் தொழிலாளர் உதவி ஆய்வர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலையில் தொழிலாளர் நலச் சட்டங்களை அமலாக்கம் செய்வதற்கு ஒரு தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அலுவலகம், ஒரு தொழிலாளர் துணை ஆய்வர் அலுவலகம், 2 தொழிலாளர் உதவி ஆய்வர் அலுவலகங்கள், எடையளவுகளை சரிபார்த்து முத்திரையிட 2 முத்திரை ஆய்வர் அலுவலகங்கள் ஆகிய அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு நல வாரியங்கள் மூலமாக பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்கும்பொருட்டு, ஒரு தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) அலுவலகமும் செயல்பட்டு வருகிறது. தேவையின் அடிப்படையில் முகாம் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், ஆரணி, திருவத்திபுரம் ஆகிய இடங்களில் தொழிலாளர் உதவி ஆய்வர் அலுவலகமும், ஆரணியில் முத்திரை ஆய்வர் அலுவலகமும் ஆக மொத்தம் தொழிலாளர் துறையின் 11 அலுவலகங்கள் திருவண்ணாமலை மாவட்டத்தில் தற்போது செயல்பட்டு வருகின்றன.

எனவே, போளூர் தொகுதி, போளூரில் ஏற்கெனவே தொழிலாளர் உதவி ஆய்வர் அலுவலகம் செயல்பட்டு வருவதால், அங்கு புதிய தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அலுவலகம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

100—

இ-சேவை மையங்கள் தொடங்குதல்

வினா எண் 26178—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 அக்டோபர் 18]

(அ) சேலம் மேற்கு தொகுதிக்குட்பட்ட குரங்குசாவடி 3-வது கோட்டம், எஸ்.கொல்லப்பட்டி, கருக்கல்வாடி, முத்துநாயக்கன்பட்டி, கோட்டகவுண்டம்பட்டி, கந்தம்பட்டி ஆகிய இடங்களில் இ-சேவை மையங்கள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மின் ஆளுமை முகமையானது சேவை முகவர்கள் வழியாக இ-சேவை மையம் அமைப்பதற்காக பயனாளர் குறியீடுகளை மட்டும் வழங்கி வருகிறது.

தற்போது, சேலம் மேற்கு தொகுதிக்குட்பட்ட குரங்குசாவடி 3-வது கோட்டத்தில் 1 இ-சேவை மையமும், எஸ். கொல்லப்பட்டியில் 2 இ-சேவை மையங்களும், கருக்கல்வாடியில் 2 இ-சேவை மையங்களும், முத்துநாயக்கன்பட்டியில் 1 இ-சேவை மையமும், கோட்டகவுண்டம்பட்டியில் 2 இ-சேவை மையங்களும், கந்தம்பட்டியில் 2 இ-சேவை மையங்களும் சேவை முகவர்கள் வாயிலாக செயல்பட்டு வருகின்றன. மேலும், கடந்த ஒரு வருடமாக, அதாவது 1-5-2021 முதல் 12-5-2022 வரை மொத்தம் 11,561 பரிவர்த்தனைகள் நடந்துள்ளன.

இந்நேர்வில், கூடுதலாக புதிய இ-சேவை மையம் தொடங்க அவசியம் எழுமாயின், சேவை முகவர்கள் வாயிலாக உட்கட்டமைப்பு அமைத்து தமிழ்நாடு மின் ஆளுமை முகமைக்கு விண்ணப்பம் வரும் தருவாயில், இ-சேவை மையம் அமைக்க பயனர் குறியீடுகள் வழங்கப்படும்.

———

இணைப்பு-II

(72 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க,)

(இ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள்

(பட்டியல்-11 முதல் 16 வரை)@

பட்டியல்-11

1—

கதவணை கட்டுதல்

வினா எண் 311—திரு. ம. சிந்தனை செல்வன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, கொள்ளிடம் ஆற்றில் கருப்பூர்-மாதிரவேளூர் இடையே கதவணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் வட்டம், மாதிரவேளூர் கிராமம் மற்றும் கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், நல்லாம்புத்தூர் கிராமங்களுக்கு இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே புதியதாக கதவணை அமைக்கும் பணிக்கு ஆய்வு நடத்த நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டது. தற்போது மண் ஆய்வுப் பணிகள் முடிவுற்று, மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது.

2—

பாசன வாய்க்கால் அமைத்தல்

வினா எண் 567—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

2022 அக்டோபர் 18]

(அ) திருவையாறு தொகுதி, உய்யக்கொண்டான் நீட்டிப்பு வாய்க்கால்மூலம் பாசனம் பெறும் காமத்து ஏரிக்கு புதிய பாசன வாய்க்கால் வெட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காமத்து ஏரிக்கு மாற்று வழியில் புதிய பாசன வாய்க்கால் அமைத்து தண்ணீர் கொண்டு செல்ல சாத்தியக்கூறு இருப்பின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 633—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, இராமாபுரம் கிராமம் அருகே முதலை முத்துவாரியில் தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, இராமாபுரம் கிராமம் அருகில் முதலை முத்துவாரி குறுக்கே தடுப்பணை கட்ட தொழில்நுட்ப சாத்தியக்கூறு இருப்பின், நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 643—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, கண்டமங்கலம் கிராமம் அருகே குடமுருட்டி ஆற்றில் தடுப்பணை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, கண்டமங்கலம் கிராம எல்லையில் மன்னார் சமுத்திரம் குடமுருட்டி ஆற்றின் குறுக்கே தளமட்ட சுவர் கட்டும் பணியானது காவிரி ஆற்றுப்படுகையில் பாசன அமைப்புகளை விரிவுபடுத்துதல், புனரமைத்தல் மற்றும் நவீனப்படுத்துதல் (ERM project) திட்டத்தின்கீழ் விரைவில் தொடங்கப்பட உள்ளது.

5—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 644—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, கண்டியூர் கிராமம் அருகே குடமுருட்டி ஆற்றில் தடுப்பணை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, கண்டியூர் கிராமம், குடமுருட்டி ஆற்றின் மைல் 36/1-ல் தடுப்பணை கட்டும் பணி ரூ.11.88 கோடி மதிப்பீட்டில் காவேரி ஆற்றுப்படுகையில் பாசன அமைப்புகளை விரிவுபடுத்துதல், புனரமைத்தல் மற்றும் நவீனப்படுத்துதல் (ERM) திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. பாசனக் காலம் முடிவுற்றவுடன் தடுப்பணை கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

6—

நீர்த் தாவரங்களை அகற்றுதல்

வினா எண் 1880—திரு. இரா. அருள்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2022 அக்டோபர் 18]

காவேரியாற்றில் பரந்த அளவில் வளர்ந்துள்ள நீர்த் தாவரங்களை அகற்றிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

ஆம்.

7—

தடுப்பணைகள் கட்டுதல்

வினா எண் 1884—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மேற்கு தொகுதி, செம்மண்கூடல் ஊராட்சியில் சரபங்கா நதியின் குறுக்கே தடுப்பணைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

ஆம்.

8—

கோதாவரி-காவேரி இணைப்புத் திட்டத்தை விரைவுபடுத்துதல்

வினா எண் 1885—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வரலாற்றுச் சிறப்புமிக்க கோதாவரி-காவேரி இணைப்புத் திட்டத்தை விரைவுபடுத்த ஒன்றிய அரசை வலியுறுத்த மாநில அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

ஆம். தமிழ்நாடு அரசு தீபகற்ப நதிகள் இணைப்புத் திட்டத்தில், மகாநதி-கோதாவரி-கிருஷ்ணா-பெண்ணாறு-பாலாறு-காவேரி-வைகை-குண்டாறு நதிகளை இணைக்கும் திட்டங்களைச்

செயல்படுத்த ஒன்றிய அரசையும் மற்றும் ஒன்றிய அரசு அமைத்துள்ள சிறப்புக் குழுவையும் அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

9—

நீரொழுங்கி கட்டுதல்

வினா எண் 2464—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, குருவாடிப்பட்டி கிராமம், கல்லணை கால்வாயில் புதிய நீரொழுங்கி கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கல்லணைக் கால்வாய் நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனப்படுத்துதல் திட்டத்தின்கீழ் சிப்பம் எண் 2-ல் ரூ.192.00 கோடி மதிப்பில் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதில் திருவையாறு தொகுதி, குருவாடிப்பட்டி கிராமம், கல்லணைக் கால்வாயின் குறுக்கே தொலைதூரம் 29.90 கி.மீ-ல் புதிய நீரொழுங்கி கட்டும் பணிக்கு ரூ.4.00 கோடி மதிப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புதிய நீரொழுங்கி கட்டும் பணிகள் 80% முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் பாசன காலம் முடிவுற்றபின் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும்.

10—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 3870—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கப்பியறை பேரூராட்சி, பெருவள்ளி குளத்தின் இருபுறமும் சாலையை அகலப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், கப்பியறை 'அ' கிராமம், புல எண் 472/3-ல் அமைந்துள்ள பெருவள்ளி குளத்தின்மூலம் 4.47.5 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. மேற்படி குளத்தின் இருபுறமும் உள்ள சாலையை அகலப்படுத்தும் பணிகள் மேற்கொண்டால், குளத்தின் நீர்ப்பிடிப்புப் பகுதி குறைந்து பாசன நிலங்கள் பாதிப்படையும். எனவே, பெருவள்ளி குளத்தின் இருபுறமும் சாலையை அகலப்படுத்துவது சாத்தியமில்லை.

11—

கோதாவரி-காவேரி இணைப்புத் திட்டம்

வினா எண் 4215—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோதாவரி-காவேரி இணைப்புத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். கோதாவரி-காவேரி இணைப்புத் திட்டத்தை நிறைவேற்ற அரசு சாத்தியப்படக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

12—

எண்ணேகொல்புதூர்-தும்பலஅள்ளி பாசனக் கால்வாய்த் திட்டம்

வினா எண் 4216—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(அ) தருமபுரி மாவட்டம், எண்ணேகொல்புதூர்-தும்பலஅள்ளி பாசனக் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், எண்ணேகொல் அணைக்கட்டின் வலது மற்றும் இடது புற கால்வாயிலிருந்து புதிய வழங்கு கால்வாய் அமைத்து, தென்பெண்ணை ஆற்றிலிருந்து வெள்ளக் காலங்களில் வரும் உபரி நீரை கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் உள்ள வறட்சியான பகுதிகளுக்கு வழங்குவதற்கான திட்டத்திற்கு ரூ.233.3470 கோடிக்கு அரசாணை (நிலை) எண் 30, பொதுப் பணித் (எஸ்2) துறை, நாள் 28-1-2021-ல் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது.

13—

கால்வாய் இணைப்புப் பணிகளை விரைவுபடுத்துதல்

வினா எண் 4220—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பாலக்கோடு அடுத்துள்ள பேலாரஅள்ளி ஊராட்சி, தாமரை ஏரியிலிருந்து புலிகரை ஏரியை இணைக்கும் கால்வாய் இணைப்புப் பணிகளை விரைவாக தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், ஜெர்த்தலாவ் கால்வாய் நெடுகை தூரம் 5.00 கிலோ மீட்டரிலிருந்து புதிய வழங்கு கால்வாய் அமைத்து எர்ரன அள்ளி ஏரி, புலிகரை

2022 அக்டோபர் 18]

ஏரி ஆகிய ஏரிகள் உட்பட 14 *ஏரிகளுக்கு சின்னாற்றின் மழைக்கால வெள்ள உபரி நீரை வழங்கும் திட்டத்திற்கு ரூ.*30.3784 *கோடிக்கு அரசாணை (நிலை) எண்* 29, *பொதுப் பணித் (எஸ்*2) *துறை, நாள்* 27-1-2021-*ல் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, பரிசீலனையில் இருந்து வருகிறது.*

14—

கால்வாய்த் திட்டப் பணிகளை விரைவுபடுத்துதல்

வினா எண் 4221—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பாப்பாரப்பட்டியை சுற்றிலும் உள்ள* 18 *ஏரிகளை இணைக்கும் பஞ்சப்பள்ளி கால்வாய்த் திட்டப் பணிகளை விரைவாக தொடங்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், ஜெர்த்தலாவ் ஏரியின் கால்வாய் நேர்பாடு* 5,690 *மீட்டரிலிருந்து, பாலக்கோடு மற்றும் பெண்ணாகரம் வட்டங்களிலுள்ள* 17 *ஏரிகளுக்கு நீர் வழங்க, புதிய பஞ்சப்பள்ளிக் கால்வாய் அமைக்கும் திட்டத்திற்கு ரூ.*629.00 *இலட்சங்களுக்கு அரசாணை (நிலை) எண்* 167, *பொதுப் பணித் (டபிள்யூ*1) *துறை, நாள்* 15-9-2006 *மற்றும் அரசாணை (நிலை) எண்* 90, *பொதுப் பணித் (எஸ்*2) *துறை, நாள்* 5-4-2009-*ன்மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டு, இத்திட்டம்* 31-3-2013 *அன்று முடிக்கப்பட்டது. இப்புதிய கால்வாயின்மூலம் கடந்த* 2015 *மற்றும்* 2017-*ல் பெய்த மழையினால் சின்னாறு அணையிலிருந்து வெளியேற்றிய உபரிநீர்மூலம் தொட்லாம்பட்டி ஏரி, பாப்பாரப்பட்டி பெரிய மற்றும் சிறிய ஏரி, அம்மன் ஏரி, கஞ்சன் ஏரி ஆகிய* 5 *ஏரிகளுக்கு நீர் வழங்கப்பட்டுள்ளது.*

[2022 அக்டோபர் 18

15—

சுற்றுச் சுவர் கட்டுதல்

வினா எண் 4223—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல், சிங்காரவேலன் காலனி கடற்கரைப் பகுதியின் ஓரம் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதிக்குட்பட்ட கல்குளம் வட்டம், குளச்சல் கிராமத்தின் கிழக்குப் புறமான சிங்காரவேலன் காலனி கடற்கரைப் பகுதியில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்ட அரசு பரிசீலித்து வருகிறது.

16—

தூர்வாருதல்

வினா எண் 4384—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, மணவாளக்குறிச்சி முதல் கடியப்பட்டணம் வரை உள்ள வள்ளியாற்றினை தூர்வாரி, அணைக்கட்டில் மதகு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், தலக்குளம் அணைக்கட்டு மற்றும் மணவாளக்குறிச்சி பெரியகுளம்

2022 அக்டோபர் 18]

ஆகியவற்றை மேம்படுத்தும் பணிக்கு ரூ.75.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. வள்ளியாறு என்பது இயற்கையாக அமைந்ததாகும். மேலும், ஆற்றில் தண்ணீர் எவ்விதத் தடையும் இன்றி செல்வதால், தூர்வாரப்பட வேண்டிய தேவை இல்லை.

17—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 5490—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், குறிப்பன்குளம் கிராமத்தில் சிற்றாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், குறிப்பன்குளம் கிராமத்தில் சிற்றாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்க தொழில்நுட்பரீதியாக சாத்தியமில்லை.

18—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 6844—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், கடங்கனேரி கிராமத்தில் சிற்றாற்றின் குறுக்கே தடுப்பணை மற்றும் கல்படித்துறை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், ஆலங்குளம் ஒன்றியம், கடங்கனேரி கிராமத்தில் சிற்றாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்க தொழில்நுட்பரீதியாக சாத்தியமில்லை. மேலும், கல்படித்துறை கட்டுவதற்கான பணி நீர்வளத் துறையை சார்ந்ததில்லை.

19—

ஏரிகளுக்கு நீர் நிரப்புதல்

வினா எண் 7376—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்பெண்ணை ஆற்றின் உபரிநீரை கால்வாய்கள் வெட்டி கருக்கொண்டபள்ளி ஏரி, பைரமங்கலம் ஏரி, கெலமங்கலம் ஏரி மற்றும் நாகமங்கலம் ஏரி உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட ஏரிகளில் நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், கருக்கொண்டபள்ளி பகுதி, அதன் அருகே இருக்கும் தென்பெண்ணையாற்றின் மட்டத்தைவிட 50 மீ. மேடான பகுதியில் உள்ளதால் புவியியல் ரீதியாக கால்வாய் அமைக்க சாத்தியமில்லை. மேலும், தென்பெண்ணையாற்றில் இருந்து தற்போது பல்வேறு திட்டப் பணிகளுக்கான ஆய்வுகள் மற்றும் மதிப்பீடுகள் தயார் செய்யும் பணிகள் நடைபெற்று வருவதால், புதிய இத்திட்டத்தினை செயல்படுத்த நீரியல்ரீதியாக சாத்தியமற்றதாக உள்ளது.

2022 அக்டோபர் 18]

20—

தூர்வாருதல்

வினா எண் 7645—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணைகளை தூர்வாரி சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

பேச்சிப்பாறை அணை வன பல்லுயிர் சரணாலய பகுதியாகும். இப்பகுதியை தூர்வார தமிழ்நாடு மற்றும் சுற்றுச்சூழல், காலநிலை மற்றும் வனத் துறையின் ஒப்புதல் மற்றும் உச்ச நீதிமன்ற அனுமதி அவசியமாகிறது. மேலும், பேச்சிப்பாறை அணையை தூர்வார மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பெருஞ்சாணி அணை 1948-1953 காலகட்டத்தில் கட்டப்பட்ட அணையாகும். மேலும், இவ்வணையில் பயனுறா கொள்ளளவு இல்லை. எனவே, மண் படிவுகள் ஆற்று மதகின் வழியாக வெளியேற்றப்பட்டுவிடும். பெருஞ்சாணி அணையில் குறிப்பிடும்படியான மண்படிவுகள் இல்லை. எனவே, இவ்வணையை தூர்வார வேண்டிய அவசியம் எழவில்லை.

21—

தூர்வாருதல்

வினா எண் 7850—திரு. சீ. கதிரவன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *மண்ணச்சநல்லூர் தொகுதி, பெரமங்கலம் ஊராட்சி, உப்பாற்றிலிருந்து ஏரிக்கு செல்லும் வாய்க்காலை தூர்வார அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

[2022 அக்டோபர் 18

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரமங்கலம் ஏரியின் உபரிநீர் வாய்க்கால் தூர்வாரி செப்பனிடப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டன.

22—

தடுப்புச்சுவர் அமைத்தல்

வினா எண் 7907—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதிக்குட்பட்ட சிங்காரவேலன் காலனி பகுதியில் கடல் அலை தடுப்புச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதிக்குட்பட்ட கல்குளம் வட்டம், குளச்சல் கிராமத்தின் கிழக்குப் புறமான சிங்காரவேலன் காலனி கடற்கரைப் பகுதியில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்ட அரசு பரிசீலித்து வருகிறது.

23—

இட ஒதுக்கீட்டை அமல்படுத்துதல்

வினா எண் 10465—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டமன்றப்பேரவை, நாடாளுமன்றம் ஆகியவற்றில் மகளிருக்கென 33 சதவீத இட ஒதுக்கீட்டை அமல்படுத்த ஒன்றிய அரசை வலியுறுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாடாளுமன்றத்திலும், மாநில சட்டமன்றப் பேரவைகளிலும் மகளிருக்கு 33% ஒதுக்கீடு செய்ய வகைசெய்யும் அரசியலமைப்பு (108-வது திருத்தம்) மசோதா 2008, மாநிலங்களவையில் 9-3-2010 அன்று நிறைவேற்றப்பட்டு, மக்களவையின் ஒப்புதல் நோக்கி நிலுவையில் உள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு இந்திய பிரதமரைச் சந்தித்து 17-6-2021 அன்று அளித்த கோரிக்கை மனுவில் மேற்காண் பொருளும் ஓர் அம்சமாக இடம் பெற்றுள்ளது. இம்மசோதாவினை மக்களவையில் விரைந்து நிறைவேற்றிட வலியுறுத்தப்பட்டுள்ளது.

24—

தடுப்பணை அமைத்தல்

வினா எண் 11623—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், சாமிசெட்டிபட்டி ஊராட்சி, பங்குநத்தம் கொட்டாய் கிராமம் அருகில் கன்னிமார் ஓடையில் புதிய பெரிய தடுப்பணை அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், சாமிசெட்டிபட்டி ஊராட்சி, பங்குநத்தம் கொட்டாய் கிராமம் அருகில் கன்னிமார் ஓடையில் புதிய தடுப்பணை அமைக்க தொழில்நுட்பரீதியாக சாத்தியமில்லை.

[*2022 அக்டோபர் 18*

25—

தூர்வாருதல்

வினா எண் 11641—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, ரத்னகிரி ஊராட்சி, தடிக்கல் ஏரியை தூர்வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 224, பொதுப் பணி (டபிள்யூ-1)த் துறை, நாள் 9-6-2017-ன்படி, ரத்னகிரி ஊராட்சியிலுள்ள தடிக்கல் ஏரியை குடிமராமத்து திட்டத்தின்கீழ் ரூ.24.02 இலட்சத்தில் தூர்வாரி, அதன் வரத்து கால்வாய்களும் சீரமைக்கப்பட்டன. இதனால், கடந்த நவம்பர் 2021-ல் பெய்த வடகிழக்கு பருவ மழையால் தடிக்கல் ஏரிக்கு நீர்வரத்து ஏற்பட்டு அதன் முழுகொள்ளளவை எட்டியது. தற்போது இந்த ஏரியில் 95 சதவீதம் நீர் இருப்பு உள்ளது. எனவே, இந்த ஏரியை தற்போது தூர்வார வேண்டிய அவசியம் இல்லை.

26—

உபகோட்ட அலுவலகம் அமைத்தல்

வினா எண் 12741—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டையில் பொதுப் பணித் துறையின்மூலம் உபகோட்ட அலுவலகம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தெற்கு வெள்ளாறு வடிநிலக்கோட்டக் கட்டுப்பாட்டின்கீழ் புதுக்கோட்டை தெற்கு வெள்ளாறு வடிநில உபகோட்டம் புதுக்கோட்டையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. மேலும், இந்த உபகோட்ட கட்டுப்பாட்டின்கீழ் நான்கு பாசனப் பிரிவு அலுவலகங்கள் முறையே புதுக்கோட்டை, ஆலங்குடி, கறம்பக்குடி மற்றும் கந்தர்வக்கோட்டை ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. கந்தர்வக்கோட்டையில் ஏற்கெனவே பிரிவு அலுவலகம் செயல்பட்டு வருகிறது.

27—

தடுப்பணைகள் கட்டுதல்

வினா எண் 11765—திருமதி கு. மரகதம் குமரவேல்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுராந்தகம் தொகுதி, பாலாற்றில் தடுப்பணைகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் தொகுதிக்குட்பட்ட பாலாற்றின் குறுக்கே ஈசூர் மற்றும் வள்ளிபுரம் கிராமங்களுக்கு இடையே ஏற்கெனவே ஒரு தடுப்பணை கட்டப்பட்டுள்ளது. மதுராந்தகம் தொகுதிக்குட்பட்ட பாலாற்றில் மேலும் தடுப்பணைகள் அமைக்க நீரியல், நிலவியல் அடிப்படையில் தொழில்நுட்பரீதியாக அவசியம் எழவில்லை.

[2022 அக்டோபர் 18

28—

குளத்தை தூய்மைப்படுத்துதல்

வினா எண் 11891—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *குளச்சல் தொகுதிக்குட்பட்ட வெள்ளியாகுளத்தை தூய்மைப்படுத்தி, மேம்படுத்த அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *குளச்சல் தொகுதி, கல்குளம் வட்டம், வெள்ளியாகுளமானது குடிமராமத்து திட்டத்தின்கீழ் தூர் வாரப்பட்டுள்ளது. எனவே, தற்போது தூர்வாரப்பட வேண்டிய அவசியம் எழவில்லை.*

29—

கதவணை அமைத்தல்

வினா எண் 12790—திரு. பெ. ராமலிங்கம்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், மோகனூர் கிராமம் மற்றும் கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், நெரூர் கிராமம் அருகே காவேரி ஆற்றின் குறுக்கே கதவணை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், மோகனூர் கிராமம் மற்றும் கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், நெரூர் கிராமம் அருகே காவேரி ஆற்றின் குறுக்கே கதவணை அமைக்க

2022 அக்டோபர் 18]

778.00 கோடி ரூபாயில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசால் ஆய்வு செய்யப்பட்டு, அரசு கடித எண் 19533/எஸ்2/2021-3, நாள் 2-3-2022-ல் கைவிடப்பட்டது.

30—

தூர்வாருதல்

வினா எண் 13026—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, தொப்பூர் ஊராட்சி, தொப்பையாறு நீர்த்தேக்கத்திலிருந்து தொப்பூர், கம்மம்பட்டி ஊராட்சி வழியாக செல்லும் நீர்வரத்துக் கால்வாயை முழுமையாக தூர்வாரி செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நீர்வள, நிலவள திட்டத்தின்கீழ் 15-7-2020-ல் ரூ.999.17 இலட்சத்திற்கு தொப்பையாறு அணையின் கால்வாய்களில் தூர்வாரி சீரமைக்கும் பணிகள் துவங்கப்பட்டு 24-9-2021-ல் முடிக்கப்பட்டன. மேலும், 19-1-2022 முதல் பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டது. தற்போது கடைமடை வரை தண்ணீர் சென்று பாசனப் பயன் பெற்றுள்ளது.

31—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 13027—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, தொப்பூர் ஊராட்சி, தொப்பூர் ஊராட்சி வழியாக செல்லும் தொப்பையாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய நீர்வள ஆணையத்தின் நெறிமுறைகளின்படி, தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், தொப்பூர் கிராமம், தொப்பையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கக் கோரும் இடத்தில் புதிதாக கட்டுமானப் பணிகள் ஏதும் மேற்கொள்ளக்கூடாது. ஆகையால், அப்பகுதியில் புதிய தடுப்பணை அமைக்க சாத்தியமில்லை.

32—

பூங்காவை புத்தாக்கம் செய்தல்

வினா எண் 14438—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேட்டூர் அணை பூங்காவை புத்தாக்கம் செய்து மக்கள் பயன்பாட்டிற்கு திறந்துவிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

மேட்டூர் அணை சார்ந்த பூங்கா தற்போது நல்ல நிலையில் உள்ளது. ஆண்டு பராமரிப்பு நிதியில் பூங்காவை சீரமைக்கும் பணிகள் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பூங்காவை பார்வையிட தற்போது பொதுமக்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

33—

தடுப்பணை அமைத்தல்

வினா எண் 15139—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், எர்ரபையனள்ளி ஊராட்சி, முத்தப்பநகர் பகுதியில் இரண்டு குண்டு சந்து ஓடையில் பெரிய தடுப்பணை அமைக்க அரசு முன்வருமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், எர்ரபையனள்ளி ஊராட்சி முத்தப்பநகர் பகுதியில் ஓடும் இரண்டு குண்டு சந்து ஓடையின் குறுக்கே ஆய்வு செய்யப்பட்டபோது ஏற்கெனவே உள்ள தடுப்பணைகளின் செறிவூட்டு மண்டலத்தில், கோரப்பட்டுள்ள தடுப்பணைத் தளம் வருவதால், எர்ரபையனள்ளி ஊராட்சி முத்தப்பநகர் பகுதியில் ஓடும் இரண்டு குண்டு சந்து ஓடையின் குறுக்கே பெரிய தடுப்பணை அமைக்க தொழில்நுட்பரீதியாக சாத்தியம் இல்லை.

34—

தடுப்பணை அமைத்தல்

வினா எண் 15141—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், எர்ரபையனள்ளி ஊராட்சி, கெட்டுஅள்ளி, சந்தாரப்பட்டி விவசாயிகள் நலன் கருதி சுண்டப்பள்ளம், ஜெருகம்பாறை இணைப்பு ஓடையில் பெரிய தடுப்பணை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், எர்ரபையனள்ளி ஊராட்சி, கெட்டுஅள்ளி கிராமம், சுண்டப்பள்ளம், ஜெருகம்பாறை இணைப்பு ஓடையில் பெரிய தடுப்பணை அமைக்க ஆய்வு செய்யப்பட்டது. ஏற்கெனவே 3 தடுப்பணைகள் உள்ளன. தடுப்பணை அமைக்கக் கோரும் திட்டத்தளத்திற்கு கீழ்ப்புறம் பஞ்சாயத்து வன நிலங்களாகவும், குன்றுகளாகவும் உள்ளதால் இத்தடுப்பணையின்மூலம் புதிய பாசனப் பரப்பு மற்றும் பாசன வசதிகள் ஏதும் ஏற்படுத்த இயலாது. எனவே, இத்திட்டத்தளத்தில் பெரிய தடுப்பணை அமைக்க தொழில்நுட்பரீதியாகவும் பொருளாதாரரீதியாகவும் சாத்தியமில்லை.

[2022 அக்டோபர் 18

35—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 45050—திரு. R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் தொகுதிக்குட்பட்ட பெரிய நெசலூர் கிராமத்தில் அமைந்துள்ள பெரிய ஏரியில் தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

விருத்தாசலம் தொகுதிக்குட்பட்ட பெரிய நெசலூர் கிராமத்தில் அமைந்துள்ள பெரிய ஏரியானது ஊராட்சி ஒன்றியம் கட்டுப்பாட்டில் உள்ளது. மேலும், ஏரியே நீர் தேங்கும் பகுதியாக அமைவதால், ஏரியில் தடுப்பணை கட்ட தொழில்நுட்பரீதியாக சாத்தியம் இல்லை.

36—

தரம் உயர்த்துதல்

வினா எண் 1452—திரு. S. ஜெயக்குமார்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொகுதி, கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சிகளை இணைத்து நகராட்சியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 4-ன் வழிகாட்டுதல்படி, 30,000-க்கும் மேற்பட்ட மக்கள்

2022 அக்டோபர் 18]

தொகையும், ஆண்டு வருமானம் ரூ.6.00 கோடிக்கு மிகாமலும் உள்ள உள்ளாட்சி அமைப்புகளை நகராட்சியாகத் தரம் உயர்த்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன்படி பரிசீலித்ததில் ஈரோடு மாவட்டம் கருமாண்டி செல்லிபாளையம் தேர்வுநிலை பேரூராட்சியின் மக்கள் தொகை 2011-ன்படி 23,868 ஆகவும் மற்றும் மேற்கண்ட பேரூராட்சியின் ஆண்டு வருமானம் ரூ.5.00 கோடிக்கு குறைவாகவும் உள்ளதால் தற்போது இப்பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்த வாய்ப்பில்லை.

37—

கழிவுநீர் கால்வாய் வசதி

வினா எண் 2041—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மேற்கு தொகுதி, சேலம் மாநகராட்சி, 3-வது கோட்டம், சூரமங்கலம், ரெட்டியூர் பகுதியில் கழிவுநீர் கால்வாய் வசதி அமைத்துத்தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மேற்கு தொகுதி, சேலம் மாநகராட்சி, 3-வது கோட்டம், சூரமங்கலம், ரெட்டியூர் பகுதியில் கழிவுநீர் கால்வாய் வசதி அமைக்கும் பணிகள் நிதிநிலைமைக்கேற்ப வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

38—

மழைநீர் வடிகால் அமைத்தல்

வினா எண் 2043—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மேற்கு தொகுதி, சேலம் மாநகராட்சி, 24-வது கோட்டம், கந்தம்பட்டி நடுநிலைப் பள்ளி முதல் இட்டேரி வரை மழைநீர் வடிகால் அமைக்க அரசு முன்வருமா?

[*2022 அக்டோபர் 18*

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகம், கோட்டம் எண் 24-க்குட்பட்ட கந்தம்பட்டி மாநகராட்சி பள்ளி முதல் இட்டேரி ரோடு வரை சுமார் 1,000 மீ. நீளத்திற்கு உத்தேச மதிப்பீடு ரூ.60 இலட்சம் செலவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி நிதிநிலைமைக்கேற்ப மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

39—

நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 2078—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகராட்சி, ரெட்டியூர், கோட்டம் எண் 3, அவ்வை நகரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, ரெட்டியூர், கோட்டம் எண் 3, அவ்வை நகரில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்க உத்தேச மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ரூ.75.00 இலட்சம் செலவில், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க வரும் நிதியாண்டில் நிதிநிலைமைக்கேற்ப பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

40—

மழைநீர் வடிகால் அமைத்தல்

வினா எண் 2128—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 அக்டோபர் 18]

சேலம், கந்தம்பட்டி பகுதி, 24-வது கோட்டம், எம்.ஜி.ஆர். நகர் முழுவதும் மழைநீர் வடிகால் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகம், கோட்டம் எண் 24-க்குட்பட்ட எம்.ஜி.ஆர். நகர் முழுவதும் மழைநீர் வடிகால் அமைக்க வரும் நிதி ஆண்டில் நிதிநிலைமைக்கேற்ப பணி மேற்கொள்ள ஆவன செய்யப்படும்.

41—

பேருந்து நிலையம் அமைத்தல்

வினா எண் 2281—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, ஆரணி பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, ஆரணி பேரூராட்சியில் போதிய இடவசதி இல்லாமை காரணமாக, தற்போதைய நிலையில் பேருந்து நிலையம் அமைத்திட வழிவகை இல்லை.

42—

கூட்டுக் குடிநீர் வழங்குதல்

வினா எண் 2754—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2022 அக்டோபர் 18

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், ஆலந்தா ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) *கிடைக்க அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கருங்குளம் ஒன்றியம், ஆலந்தா ஊராட்சிக்குட்பட்ட குடியிருப்புகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின்மூலம் 1.00 இலட்சம் லிட்டர் குடிநீரும், மேலும் ஊராட்சியால் பராமரிக்கப்படும் உள்ளூர் நீராதாரத்தையும் கணக்கில்கொண்டு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஆலந்தா ஊராட்சிக்கு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றுவதற்கான கருத்துருக்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

43—

கூட்டுக் குடிநீர் வழங்குதல்

வினா எண் 2851—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, தூத்துக்குடி ஒன்றியம், சேர்வைக்காரன்மடம் ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) *கிடைக்க அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, தூத்துக்குடி ஒன்றியம், சேர்வைக்காரன்மடம் ஊராட்சியில் உள்ள 6 குடியிருப்புகளில் 2 குடியிருப்புகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் பராமரிக்கப்படும் 27 கிராமங்களுக்கான கூட்டுக்

2022 அக்டோபர் 18]

குடிநீர்த் திட்டம் மற்றும் சாயர்புரம், பெருங்குளம் மற்றும் 115 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் வடிவமைக்கப்பட்ட அளவான 1.90 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 4 குடியிருப்புகளுக்கு சோதனை ஓட்டத்தில் உள்ள 90 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் 1.60 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், உள்ளூர் நீராதாரம் மூலமும் மேற்காணும் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஜல்ஜீவன் மிஷன் 2020-2021 மூலம் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டம் ஊராட்சி நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

44—

கூட்டுக் குடிநீர் வழங்குதல்

வினா எண் 2855—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கோரம்பள்ளம் ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, கோரம்பள்ளம் ஊராட்சிக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் என மொத்த குடிநீர்த் தேவை 2.70 இலட்சம் லிட்டர் ஆகும். தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் 27 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் சாயர்புரம், பெருங்குளம் மற்றும் 115 வழியோர கிராமங்களுக்கான குடிநீர்த் திட்டத்தின்மூலம் 1.96 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இக்குடியிருப்புகளுக்கு உள்ளூர் நீராதாரம்மூலம் 0.74 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

45—

கூட்டுக் குடிநீர் வழங்குதல்

வினா எண் 2856—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, குலையன்கரிசல் ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, தூத்துக்குடி ஒன்றியம், குமாரகிரி ஊராட்சிக்கு தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் 27 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் சாயர்புரம், பெருங்குளம் மற்றும் 115 வழியோர கிராமங்களுக்கான குடிநீர்த் திட்டத்தின்மூலம் 1.05 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது மற்றும் சோதனை ஓட்டத்தில் உள்ள 90 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் 5.72 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், இக்குடியிருப்புகளுக்கு உள்ளூர் நீராதாரம் மூலம் 1.17 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஜல்ஜீவன் மிஷன் 2020-2021 மூலம் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டம் ஊராட்சி நிருவாகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

46—

கூட்டுக் குடிநீர் வழங்குதல்

வினா எண் 2859—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 அக்டோபர் 18]

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, குலையன்கரிசல் ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் தொகுதி, குலையன்கரிசல் ஊராட்சிக்குட்பட்ட தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம், கருங்குளம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 90 ஊரகக் குடியிருப்புகளுக்கான குடிநீர் திட்டத்தின்கீழ் வடிவமைக்கப்பட்ட குடிநீர் அளவு 2.28 இலட்சம் லிட்டர் ஆகும். தற்பொழுது சோதனை ஓட்டத்தில் உள்ள இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் 1,80,000 லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும், 48,800 லிட்டர் குடிநீர் ஊராட்சி நிர்வாகத்தின்மூலம் வழங்கப்படுகிறது.

47—

கூட்டுக் குடிநீர் வழங்குதல்

வினா எண் 2860—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஒன்றியம், K.P. தளவாய்புரம் ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, தூத்துக்குடி ஒன்றியம், தளவாய்புரம் ஊராட்சிக்கு, நாளொன்றிற்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் என மொத்த குடிநீர்த் தேவை 90,750 லிட்டர் ஆகும். தளவாய்புரம் ஊராட்சியில் உள்ள

தளவாய்புரம் குடியிருப்புக்கு தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் மேலதட்டப்பாறை மற்றும் 17 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் வடிவமைக்கப்பட்ட அளவான 7,800 லிட்டர் மற்றும் மகிழம்புரம் பஞ்சாயத்திற்கு வடிவமைக்கப்பட்ட அளவான 21,500 லிட்டர் குடிநீர், கருங்குளம் ஒன்றியத்திலுள்ள 76 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இக்குடியிருப்புகளுக்கு உள்ளூர் நீராதாரம்மூலம் 61,450 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

48—

கூட்டுக் குடிநீர் வழங்குதல்

வினா எண் 2862—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், சங்கம்பட்டி கிராமத்திற்கு கூட்டுக் குடிநீர் (TWAD) கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சங்கம்பட்டி ஊராட்சிக்கு, நாளொன்றிற்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் என மொத்த குடிநீர்த் தேவை 21,615 லிட்டர் ஆகும். சங்கம்பட்டி ஊராட்சிக்கு தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் 239 கடலோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் நாளொன்றுக்கு வடிவமைக்கப்பட்ட அளவான 14,010 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இக்குடியிருப்புகளுக்கு உள்ளூர் நீராதாரம்மூலம் 11,605 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

2022 அக்டோபர் 18]

49—

கூட்டுக் குடிநீர் வழங்குதல்

வினா எண் 2869—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், எஸ்.கைலாசபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, எஸ்.கைலாசபுரம் ஊராட்சிக்கு தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் பராமரிக்கப்படும் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள 239 கடலோர மற்றும் வழியோர கிராமங்களுக்கான வல்லநாடு கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் கடம்பூர், விளாத்திகுளம், புதூர் பேரூராட்சிகள் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள 180 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் அனைத்து குடியிருப்புகளுக்கும் வடிவமைக்கப்பட்ட குடிநீர் அளவான 0.78 இலட்சம் லிட்டரில் 0.77 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

50—

கூட்டுக் குடிநீர் வழங்குதல்

வினா எண் 2870—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், இராஜாவின் கோவில் ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் தொகுதிக்குட்பட்ட இராஜாவின் கோவில் ஊராட்சியில் உள்ள குடியிருப்புகளுக்கு தற்போது குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் பராமரிக்கப்படும் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள 239 கடலோர மற்றும் வழியோர கிராமங்களுக்கான வல்லநாடு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் வடிவமைக்கப்பட்ட குடிநீர் அளவான 0.92 இலட்சம் லிட்டரில் 0.82 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ராஜம்மாள்நகர் குடியிருப்பிற்கு 0.15 இலட்சம் லிட்டர் குடிநீர் உள்ளூர் நீராதாரத்தின்மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

51—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 2871—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், தெற்கு வீரபாண்டியபுரம் ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், தெற்கு வீரபாண்டியபுரம் ஊராட்சியில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் குடிநீர் தேவை நாளொன்றுக்கு 0.96 இலட்சம் லிட்டர் ஆகும். தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் பராமரிக்கப்படும் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள 239 கடலோர மற்றும் வழியோர கிராமங்களுக்கான வல்லநாடு கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும்

2022 அக்டோபர் 18]

தூத்துக்குடி சிப்காட் தொழிற்பேட்டையை சுற்றியுள்ள 8 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகியவற்றின்மூலம் 1.07 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

52—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 2873—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், சில்லாநத்தம் ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சில்லாநத்தம் ஊராட்சியில் உள்ள இரண்டு குடியிருப்புகளுக்கு தேவையான 0.98 இலட்சம் லிட்டர் குடிநீரில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் கடம்பூர், புதூர், விளாத்திகுளம் பேரூராட்சிகள் மற்றும் 180 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் 8 கிராம குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகியவற்றின்மூலம் வடிவமைக்கப்பட்ட குடிநீரின் அளவான 0.83 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மேற்காணும் அனைத்து குடியிருப்புகளுக்கும் உள்ளூர் நீராதாரம்மூலம் 0.15 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

53—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 2874—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2022 அக்டோபர் 18

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், அகிலாண்டபுரம் ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அகிலாண்டபுரம் ஊராட்சிக்கு தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் கடம்பூர், புதூர், விளாத்திகுளம் பேரூராட்சிகள் மற்றும் 180 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், 239 கடலோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகியவற்றின்மூலம் வடிவமைக்கப்பட்ட குடிநீரின் அளவான 0.17 இலட்சம் லிட்டர் குடிநீரும் மற்றும் உள்ளூர் நீராதாரம்மூலம் 0.12 இலட்சம் லிட்டர் குடிநீரும் தினசரி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஜல்ஜீவன் மிஷன் 2020-2021மூலம் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டம் ஊராட்சி நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்டு, பணி முடிவடைந்துள்ளது.

54—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 2875—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், ஒட்டப்பிடாரம் ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

2022 அக்டோபர் 18]

(அ) மற்றும் (ஆ) தற்போது ஒட்டப்பிடாரம் ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களுக்கு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் கடம்பூர், புதூர், விளாத்திகுளம் பேரூராட்சிகள் மற்றும் 180 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் 239 கடலோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் ஆகியவற்றின்மூலம் தினசரி 2.50 இலட்சம் லிட்டர் குடிநீரும் மற்றும் உள்ளூர் நீராதாரம்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இவ்வூராட்சிக்குட்பட்ட குடியிருப்புகளுக்கு ஜல்ஜீவன் திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் நிதியாண்டில் 5.20 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கும் வகையிலான திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

55—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 2876—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், குறுக்குச் சாலை ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், குறுக்குச் சாலை ஊராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் கடம்பூர், புதூர், விளாத்திகுளம் பேரூராட்சிகள் மற்றும் 180 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் 239 கடலோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம்மூலம் வடிவமைக்கப்பட்ட குடிநீர் அளவு 1.28 இலட்சம் லிட்டர் ஆகும். தற்போது இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் தினசரி 1.00 இலட்சம் லிட்டர் குடிநீரும் மற்றும் மீதமுள்ள தேவையான

குடிநீர் உள்ளூர் நீராதாரம் மூலமும் தினசரி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இந்நகராட்சிக்கு ஜல்ஜீவன் திட்டத்தின்மூலம் 3.00 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

56—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 2877—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஒன்றியம், வர்த்தக ரெட்டிபட்டி ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி ஒன்றியம், வர்த்தக ரெட்டிபட்டி ஊராட்சிக்கு வடிவமைக்கப்பட்ட குடிநீர் அளவான 25,600 லிட்டர் குடிநீர், தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் 76 குடியிருப்புகளுக்கான கருங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் மேலத்தட்டப்பாறை 17 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகியவற்றின்மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இக்குடியிருப்புகளுக்கு மீதமுள்ள தேவைக்கான குடிநீர் உள்ளூர் நீராதாரம் மூலமும் வழங்கப்பட்டு வருகிறது.

57—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 2878—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 அக்டோபர் 18]

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஒன்றியம், திம்மராஜபுரம் ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி ஒன்றியம், திம்மராஜபுரம் ஊராட்சிக்கு வடிவமைக்கப்பட்ட குடிநீர் அளவு 23,400 லிட்டர் ஆகும். தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் மேலத்தட்டப்பாறை மற்றும் 17 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம்மூலம் 23,400 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இக்குடியிருப்புகளுக்கு உள்ளூர் நீராதாரம் மூலமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

58—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 2880—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஒன்றியம், கீழத்தட்டப்பாறை ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கீழத்தட்டப்பாறை ஊராட்சிக்கு தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் சாயர்புரம், பெருங்குளம் பேரூராட்சிகள் மற்றும் 115 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம்

வரையறுக்கப்பட்ட குடிநீர் அளவான 54,300 லிட்டர் குடிநீரும் மற்றும் உள்ளூர் நீராதாரம் மூலமும் குடிநீர் தினசரி வழங்கப்பட்டு வருகிறது.

59—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 2882—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், வடவல்லநாடு ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், வடவல்லநாடு ஊராட்சிக்கு தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் கருங்குளம் ஒன்றியத்திலுள்ள 76 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் வரையறுக்கப்பட்ட குடிநீர் அளவான 77,000 லிட்டர் குடிநீரும் மற்றும் உள்ளூர் நீராதாரம் மூலமும் குடிநீர் தினசரி வழங்கப்பட்டு வருகிறது.

60—

கூட்டுக் குடிநீர் திட்டம்

வினா எண் 2883—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், சிங்கத்தாகுறிச்சி ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிங்கத்தாகுறிச்சி ஊராட்சியில் உள்ள 7 குடியிருப்புகளுக்கு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் கருங்குளம் ஒன்றியத்திலுள்ள 76 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் தற்போது நாளொன்றுக்கு தேவையான 1.17 இலட்சம் லிட்டர் குடிநீரும் மற்றும் உள்ளூர் நீராதாரம் மூலமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஜல்ஜீவன் மிஷன் 2020-2021மூலம் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டமும் ஊராட்சி நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

61—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 2884—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், பூவானி ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கருங்குளம் ஒன்றியம், பூவானி ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் கருங்குளம் ஒன்றியத்திலுள்ள 76 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் கடம்பூர், புதூர், விளாத்திகுளம் மற்றும் 180 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின்மூலம் வரையறுக்கப்பட்ட குடிநீர் அளவான 1.14 இலட்சம் லிட்டர்

குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இக்குடியிருப்புகளுக்கு உள்ளூர் நீராதாரம் மூலமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஜல்ஜீவன் மிஷன் 2020-2021மூலம் பூவாணி ஊராட்சியில் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டம் ஊராட்சி நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

62—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 2885—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், செக்காரக்குடி ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கருங்குளம் ஒன்றியம், செக்காரக்குடி ஊராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் கருங்குளம் ஒன்றியத்திலுள்ள 76 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் வடிவமைக்கப்பட்ட அளவான 1.40 இலட்சம் லிட்டர் குடிநீரும் மற்றும் உள்ளூர் நீராதாரம் மூலமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஜல்ஜீவன் மிஷன் 2020-2021 மூலம் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டம் ஊராட்சி நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

63—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 2886—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 அக்டோபர் 18]

(அ) ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், வடக்கு காரசேரி ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வடக்கு காரசேரி ஊராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, கருங்குளம் ஒன்றியத்திலுள்ள 76 குடிபகயிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் 66,240 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இக்குடியிருப்புகளுக்கு உள்ளூர் நீராதாரம் மூலமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஜல்ஜீவன் மிஷன் 2020-2021 மூலம் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டம் ஊராட்சி நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

64—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 2887—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஓட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஒன்றியம், உமரிக்கோட்டை ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, தூத்துக்குடி ஒன்றியம், உமரிக்கோட்டை ஊராட்சியைச் சார்ந்த குடியிருப்புகளுக்கு தற்போது தமிழ்நாடு

குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் மேலத்தட்டப்பாறை மற்றும் 17 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் வடிவமைக்கப்பட்ட குடிநீரின் அளவான 19,600 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இக்குடியிருப்புகளுக்கு உள்ளூர் நீராதாரம் மூலமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

65—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 2931—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஒன்றியம், மேலத்தட்டப்பாறை ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) கிடைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேலத்தட்டப்பாறை ஊராட்சிக்குட்பட்ட குடியிருப்புகளுக்கு தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் மேலத்தட்டப்பாறை மற்றும் 17 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் 15,600 லிட்டர் குடிநீரும் மற்றும் உள்ளூர் நீராதாரம் மூலமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் ஜல்ஜீவன் மிஷன் 2021-2022 மூலம் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டம் ஊராட்சி நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

66—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 6579—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 அக்டோபர் 18]

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், தென்னம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட V.P. *தாழையூத்து, கோபாலபுரம் ஆகிய கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்* (TWAD) *கிடைக்க அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், தென்னம்பட்டி ஊராட்சியில் உள்ள மக்களுக்கு நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 55 *லிட்டர் என மொத்த குடிநீர் தேவை* 0.96 *இலட்சம் லிட்டர் ஆகும். தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் கடம்பூர், புதூர், விளாத்திகுளம் பேரூராட்சிகள் மற்றும்* 180 *வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் வடிவமைக்கப்பட்ட குடிநீரின் அளவான* 0.56 *இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மேற்காணும் அனைத்து குடியிருப்புகளுக்கும் உள்ளூர் நீராதாரம்மூலம்* 0.40 *இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.*

67—

நீர் வழித்தடத்தை சரி செய்தல்

வினா எண் 13256—திரு. பெ. ராமலிங்கம்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாமக்கல் தொகுதிக்குட்பட்ட நாமக்கல் நகரம், நல்லிபாளையம், அய்யம்பாளையம், கருப்பட்டிபாளையம் பகுதிகளின் நீண்ட நாள் கோரிக்கையான காசான்குளம், நாவிதன் குளம் உட்பட ஆக்கிரமிப்பில் உள்ள குளங்களை மீட்டெடுத்து 4 *கிராம மக்களின் நீர் வழித்தடத்தை சரி செய்து, குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?*

[2022 அக்டோபர் 18

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட நல்லிபாளையம் கிராமம், புல எண் 100/1-ல் உள்ள காசான்குளம் மற்றும் சர்வே எண் 90/1-ல் உள்ள நாவிதன் குளம் ஆகிய குளங்கள் மற்றும் அவற்றின் நீர் வழித்தடங்களின் புல எண்களை அளவீடு செய்யும் பணி துவங்கி நடைபெற்று வருகிறது. மேற்படி பணிகள் முடிவடைந்ததும் ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

68—

சாலை அமைத்தல்

வினா எண் 13260—திரு. பெ. ராமலிங்கம்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாமக்கல் தொகுதிக்குட்பட்ட நாமக்கல் நகரம், வார்டு எண் 6, நல்லிபாளையம் திருச்செங்கோடு பிரதான சாலையிலிருந்து மாரியம்மன் கோவில் செல்லும் சாலையை புதிதாக அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்ட பகுதியில் Tamil Nadu Sustainable Urban Development Project (TNSUDP) 2020-2021 *திட்டத்தின்கீழ் ரூ.35.00 இலட்சத்தில் தார்ச் சாலை அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, மேற்கண்ட பணிக்கு 7-7-2021 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு, பணி துவங்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் புதிய குடிநீர் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக குடிநீர் குழாய்கள் மற்றும் வீட்டு இணைப்புகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. அப்பணி முடிவுற்றவுடன், மேல்நடவடிக்கை தொடரப்படும்.*

2022 அக்டோபர் 18]

69—

குடிநீர்க் குழாய்களை சீரமைத்தல்

வினா எண் 16214—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திரு.வி.க. நகர் தொகுதி, சென்னை மாநகராட்சி, வார்டு 71-ல் பாஷ்யம் முதல் தெருவில் குடிநீர்க் குழாய்களை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 6, வார்டு 71-ல் அமைந்துள்ள பாஷ்யம் 1-வது தெரு, திரு.வி.க. நகர் தொகுதிக்குட்பட்டது. இந்தத் தெருவில் 120 குடும்பங்கள் உள்ளன. இந்தத் தெருவிற்கு கீழ்ப்பாக்கம் குடிநீர் பகிர்மான நிலையத்திலிருந்து குழாய்மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இத்தெருவிலுள்ள குடிநீர்க் குழாய்கள் ஆய்வு செய்யப்பட்டு, ஏற்கெனவே உள்ள குடிநீர்க் குழாய்கள் நல்ல நிலையில் இருப்பது கண்டறியப்பட்டது. அத்தெருவிலுள்ள வீடுகளுக்கு தினந்தோறும் குடிநீர்க் குழாய்களின்மூலம் குடிநீர் சீராக விநியோகிக்கப்படுகிறது. குடிநீரின் தரமும் நன்றாக உள்ளது.

70—

குடிநீர்க் குழாய்களை சீரமைத்தல்

வினா எண் 16215—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திரு.வி.க. நகர் தொகுதி, சென்னை மாநகராட்சி, வார்டு 71-ல் பாஷ்யம் இரண்டாவது தெருவில் குடிநீர்க் குழாய்களை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 6, வார்டு 71-ல் அமைந்துள்ள பாஷ்யம் இரண்டாவது தெரு, திரு.வி.க. நகர் தொகுதிக்குட்பட்டது. இந்தத் தெருவில் 120 குடும்பங்கள் உள்ளன. இந்தத் தெருவிற்கு கீழ்ப்பாக்கம் குடிநீர் பகிர்மான நிலையத்திலிருந்து குழாய்மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இத்தெருவிலுள்ள குடிநீர்க் குழாய்கள் ஆய்வு செய்யப்பட்டதில், ஏற்கெனவே உள்ள குடிநீர்க் குழாய்கள் நல்ல நிலையில் இருப்பது கண்டறியப்பட்டது. அத்தெருவிலுள்ள வீடுகளுக்கு தினந்தோறும் குடிநீர்க் குழாய்களின்மூலம் குடிநீர் சீராக விநியோகிக்கப்படுகிறது. குடிநீரின் தரமும் நன்றாக உள்ளது.

71—

குடிநீர்க் குழாய்களை சீரமைத்தல்

வினா எண் 16216—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரு.வி.க. நகர் தொகுதி, சென்னை மாநகராட்சி, வார்டு 71-ல் பாஷ்யம் மூன்றாவது தெருவில் குடிநீர்க் குழாய்களை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 6, வார்டு 71-ல் அமைந்துள்ள பாஷ்யம் 3-வது தெரு, திரு.வி.க. நகர் தொகுதிக்குட்பட்டது. இந்தத் தெருவில் 120 குடும்பங்கள் உள்ளன. இந்தத் தெருவிற்கு கீழ்ப்பாக்கம் குடிநீர் பகிர்மான நிலையத்திலிருந்து குழாய்மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

2022 அக்டோபர் 18]

இத்தெருவிலுள்ள குடிநீர்க் குழாய்கள் ஆய்வு செய்யப்பட்டு, ஏற்கெனவே உள்ள குடிநீர்க் குழாய்கள் நல்ல நிலையில் இருப்பது கண்டறியப்பட்டது. அத்தெருவிலுள்ள வீடுகளுக்கு தினந்தோறும் குடிநீர்க் குழாய்களின்மூலம் குடிநீர் சீராக விநியோகிக்கப்படுகிறது. குடிநீரின் தரமும் நன்றாக உள்ளது.

72—

கழிவுநீர் குழாய்களை சீரமைத்தல்

வினா எண் 16219—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திரு.வி.க. நகர் தொகுதி, சென்னை மாநகராட்சி, வார்டு 71-ல் கிருஷ்ணதாஸ் சாலையில் கழிவுநீர் குழாய்களை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகராட்சி, மண்டலம் 6, வார்டு 71-ல் அமைந்துள்ள கிருஷ்ணதாஸ் சாலை, திரு.வி.க. நகர் தொகுதிக்குட்பட்டது. இந்தத் தெருவில் 200 குடும்பங்கள் உள்ளன. இத்தெருவிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் ஏகாங்கிபுரம் கழிவுநீரகற்று நிலையத்தில் சேகரிக்கப்பட்டு, வெளியேற்றப்படுகிறது. கிருஷ்ணதாஸ் சாலையிலுள்ள கழிவுநீர் பிரதான குழாய்கள் தேவைக்கு ஏற்ப தரமான நிலையில் உள்ளன. மேலும், அத்தெருக்களிலுள்ள இயந்திர நுழைவாயில்கள் அனைத்தும் கழிவுநீர் இயந்திரங்கள்மூலம் சுழற்சி முறையில் கசடுகள் அகற்றப்பட்டு, கழிவுநீர் அடைப்புகள் நீக்கப்பட்டு, சீராக பராமரிக்கப்படுகின்றன. பொது மக்களிடமிருந்து புகார்கள் பெறப்படும்போது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தற்போது இத்தெருக்களில் கழிவுநீர் தேக்கமோ அல்லது வழிந்தோடுவதோ இல்லை.

73—

குடிநீர் இணைப்பு

வினா எண் 16243—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திரு.வி.க. நகர் தொகுதி, சென்னை மாநகராட்சி வார்டு 71-ல் குளக்கரை சாலை, காவாங்கரை பகுதியில் குடிநீர் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6, வார்டு 71-ல் அமைந்துள்ள காவாங்கரை பகுதி திரு.வி.க. நகர், சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டது. குளக்கரை சாலை, காவாங்கரை பகுதி, கால்வாயில் அமைந்துள்ள ஆக்கிரமிப்புப் பகுதி என்பதால், பிரதான குடிநீர் குழாய்கள் பதிக்க இயலாத நிலையில் உள்ளது. இருப்பினும், அப்பகுதியில் குடியிருப்போர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக 2 பொது குழாய் பம்புகள் அமைக்கப்பட்டு, குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

74—

குடிநீர்க் குழாய்களை சீரமைத்தல்

வினா எண் 16244—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திரு.வி.க. நகர் தொகுதி, சென்னை மாநகராட்சி வார்டு 71-ல் நேரு ஜோதி நகர் குடிநீர்க் குழாய்களை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6, வார்டு 71-ல் அமைந்துள்ள நேரு ஜோதி நகர், திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டது. இத்தெருவில் 120 குடும்பங்கள் உள்ளன. இந்தத் தெருவிற்கு கீழ்ப்பாக்கம் நீரேற்று நிலையத்திலிருந்து குழாய்மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இத்தெருவிலுள்ள பிரதான குடிநீர்க் குழாய்களை ஆய்வு செய்ததில், ஏற்கெனவே உள்ள குழாய்கள் நல்ல நிலையில் இருப்பது கண்டறியப்பட்டது. அத்தெருவிலுள்ள குடியிருப்புகளுக்கு நாள்தோறும் குடிநீர்க் குழாய்களின்மூலம் குடிநீர் சீராக விநியோகிக்கப்படுகிறது. குடிநீரின் தரமும் நன்றாக உள்ளது.

75—

குடிநீர்க் குழாய்களை சீரமைத்தல்

வினா எண் 16254—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திரு.வி.க. நகர் தொகுதி, சென்னை மாநகராட்சி வார்டு 72-ல் வெங்கடேசபுரத்தில் குடிநீர்க் குழாய்களை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6, வார்டு 72-ல் வெங்கடேசபுரம் அமைந்துள்ளது. இந்தத் தெருவில் 370 குடும்பங்கள் உள்ளன. இப்பகுதிக்கு வியாசர்பாடி நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இத்தெருவிலுள்ள குழாய்களை ஆய்வு செய்ததில் ஏற்கெனவே உள்ள குடிநீர்க் குழாய்கள் தரமாக உள்ளன என்று கண்டறியப்பட்டது. குடிநீர்

[2022 அக்டோபர் 18

விநியோகம் மேம்படுத்திய பிறகு இங்குள்ள குடியிருப்புகளுக்கு தினந்தோறும் குடிநீர்க் குழாய்மூலம் சீராக விநியோகிக்கப்படுகிறது. மேலும், பிரதான குடிநீர்க் குழாயின் கடைசி பகுதியில் உள்ள தெருக்களுக்கு 16 குடிநீர் தொட்டிகள் நிறுவப்பட்டு, லாரிகளின் மூலமாக குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

76—

கழிவுநீர் குழாய் அமைத்தல்

வினா எண் 16256—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரு.வி.க. நகர் தொகுதி, சென்னை மாநகராட்சி வார்டு 73-ல் ஸ்ட்ரான்ஸ் சாலை மூன்று முதல் ஐந்தாவது தெரு வரை கழிவுநீர் குழாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை பெருநகர மாநகராட்சி, மண்டலம் 6, வார்டு 73-ல் உள்ள ஸ்ட்ரான்ஸ் சாலை மூன்று முதல் ஐந்தாவது தெரு வரை திரு.வி.க. நகர் தொகுதிக்குட்பட்டது. இந்தத் தெருவில் 400 குடும்பங்கள் உள்ளன. இத்தெருவிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் புரசைவாக்கம் கழிவுநீரகற்றும் நிலையம் மூலமாக வெளியேற்றப்படுகிறது. இந்தத் தெருவில் உள்ள கழிவுநீர் பிரதான குழாய்கள், நல்ல முறையில் இயங்குகின்றன. கழிவுநீர் அடைப்புகள் ஏற்படும் காலங்களில் கழிவுநீர் இயந்திரங்களின் மூலமாக உடனடியாக அடைப்பு நீக்கப்படுகிறது. மேலும், அத்தெருக்களிலுள்ள இயந்திர நுழைவாயில்கள் அனைத்தும் சுழற்சி முறையில் கழிவுநீர் கசடுகள் அகற்றப்பட்டு, நல்ல முறையில் பராமரிக்கப்படுகின்றன. பொது மக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள்மீது அவ்வப்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உடனடியாக சரிசெய்யப்படுகிறது. தற்போது இந்தத் தெருக்களில் கழிவுநீர் வழிந்தோடுதலோ அல்லது பாதாள சாக்கடை அடைப்போ இல்லை.

2022 அக்டோபர் 18]

77—

கழிவுநீர் குழாய் அமைத்தல்

வினா எண் 16257—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திரு.வி.க. நகர் தொகுதி, சென்னை மாநகராட்சி வார்டு 73-ல் உள்ள வாழை மாநகரில் கழிவுநீர் குழாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6, வார்டு 73-ல் அமைந்துள்ள வாழை மாநகர் திரு.வி.க. நகர் தொகுதிக்குட்பட்டது. இந்தத் தெருவில் 250 குடும்பங்கள் உள்ளன. இத்தெருவிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் புரசைவாக்கம் கழிவுநீரகற்றும் நிலையம் மூலமாக வெளியேற்றப்படுகிறது. இந்தத் தெருவில் உள்ள கழிவுநீர் பிரதான குழாய்கள் நல்ல முறையில் இயங்குகின்றன. கழிவுநீர் அடைப்புகள் ஏற்படும் காலங்களில் கழிவுநீர் இயந்திரங்களின் மூலமாக உடனடியாக அடைப்பு நீக்கப்படுகிறது. மேலும், அத்தெருக்களிலுள்ள இயந்திர நுழைவாயில்கள் அனைத்தும் சுழற்சி முறையில் கழிவுநீர் கசடுகள் அகற்றப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்படுகின்றன. பொது மக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள்மீது அவ்வப்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, உடனடியாக சரிசெய்யப்படுகிறது. தற்போது இந்தத் தெருக்களில் கழிவுநீர் வழிந்தோடுதலோ அல்லது பாதாள சாக்கடை அடைப்போ இல்லை.

[2022 அக்டோபர் 18

78—

குடிநீர்க் குழாய் அமைத்தல்

வினா எண் 16258—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திரு.வி.க. நகர் தொகுதி, சென்னை மாநகராட்சி வார்டு 73-ல் பென்ஷனர் லேன், 11-வது பிளாக் புதிய குடிநீர்க் குழாய்களை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6, வார்டு 73-ல் அமைந்துள்ள பென்ஷனர் லேன், திரு.வி.க. நகர் தொகுதிக்குட்பட்டது. இந்தத் தெருவில் 12 பிளாக்குகளில் 300 குடும்பங்கள் உள்ளன. இப்பகுதிக்கு கீழ்ப்பாக்கம் குடிநீர் பகிர்மான நிலையத்தில் இருந்து குழாய்மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. பென்ஷனர் லேன் 3 அடி அகலம் மட்டுமே உள்ள குறுகிய தெரு. அந்தத் தெருக்களில் ஏற்கெனவே பிரதான கழிவுநீர் குழாய்கள் பதிக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளதால் குடிநீர்க் குழாய் அமைக்க இடவசதி இல்லை. மேலும், பென்ஷனர் மெயின் தெருவிலுள்ள பிரதான குடிநீர்க் குழாய்களில் பொதுக் குழாய்கள் அமைக்கப்பட்டு, குடிநீர் சீராக விநியோகிக்கப்படுகிறது.

79—

குடிநீர்க் குழாய்களை சீரமைத்தல்

வினா எண் 16261—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 அக்டோபர் 18]

(அ) திரு.வி.க. நகர் தொகுதி, சென்னை மாநகராட்சி வார்டு 76, சச்சிதானந்தம் 2-வது தெருவில் குடிநீர்க் குழாய்களை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6, வார்டு 76-ல் அமைந்துள்ள சச்சிதானந்தம் 2-வது தெரு, திரு.வி.க. நகர் தொகுதிக்குட்பட்டது. இந்தத் தெருவில் 400 குடும்பங்கள் உள்ளன. இந்தத் தெருவிற்கு கீழ்ப்பாக்கம் குடிநீர் பகிர்மான நிலையத்தில் இருந்து குழாய்மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இத்தெருவிலுள்ள குழாய்களை ஆய்வு செய்ததில் ஏற்கெனவே உள்ள குடிநீர்க் குழாய்கள் நல்ல நிலையில் உள்ளது கண்டறியப்பட்டது. அத்தெருவிலுள்ள வீடுகளுக்கு நாள்தோறும் குடிநீர்க் குழாய்களின்மூலம் குடிநீர் சீராக விநியோகிக்கப்படுகிறது. குடிநீரின் தரமும் நன்றாக உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

80—

பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 225—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, தண்டாங்கோரை நியாய விலைக் கடையிலிருந்து வெளியாத்தூர் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், ட்டி.1689 மானாங்கோரை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன்

சங்கத்தில் 2 முழு நேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. தண்டாங்கோரை (19AP051PN) முழு நேர நியாய விலைக் கடையில் 369 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் வெளியாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த 66 குடும்ப அட்டைகளும் அடங்கும்.

புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் வெளியாத்தூர் பகுதியில் 66 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. மேலும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் வெளியாத்தூர் பகுதிக்கும், தண்டாங்கோரை முழு நேர நியாய விலைக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 1 கி.மீ. மட்டுமே உள்ளது. மேலும், குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின், தாய்க் கடையில் 303 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். எனவே, கிராமப் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடைக் கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும், பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் அங்காடிக்கும் பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதிக்கும் குறைந்தது 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும் எனும் அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், வெளியாத்தூர் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

81—

பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 236—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, திருமலைசமுத்திரம் நியாய விலைக் கடையிலிருந்து கீழஎல்லைக்கால் தெரு கிராமத்துக்கு பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருமலைசமுத்திரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 2 முழு நேர நியாய விலைக்

2022 அக்டோபர் 18]

கடைகளும், 1 பகுதி நேர நியாய விலைக் கடையும் செயல்பட்டு வருகின்றன. திருமலைசமுத்திரம் (19AP032PN) முழு நேர நியாய விலைக் கடையில் 611 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் கீழஎல்லைக்கால் பகுதியைச் சேர்ந்த 75 குடும்ப அட்டைகளும் அடங்கும்.

குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின், தாய்க் கடையில் 536 குடும்ப அட்டைகள் இருந்தபோதிலும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் கீழஎல்லைக்கால் பகுதியில் 75 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. மேலும், திருமலைசமுத்திரம் முழு நேர நியாய விலைக் கடைக்கும், கீழஎல்லைக்கால் பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 100 அடி மட்டுமே உள்ளது. எனவே, புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் கிராமப் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் அங்காடிக்கும், பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதிக்கும் குறைந்தது 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும் எனும் அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், கீழஎல்லைக்கால் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

82—

பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 245—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, கூத்தூர் நியாய விலைக் கடையிலிருந்து அம்பேத்கர்புரம் கிராமத்துக்கு பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், வானரங்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 3 முழு நேர நியாய விலைக் கடைகளும், 1 பகுதி நேர நியாய விலைக் கடையும் செயல்பட்டு வருகின்றன. கூத்தூர் முழு நேர நியாய

விலைக் கடையில் 462 குடும்ப அட்டைகள் உள்ளன. புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் அம்பேத்கர்புரம் பகுதியைச் சேர்ந்த 170 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும்.

இந்நேர்வில், அம்பேத்கர்புரம் பகுதியைச் சேர்ந்த 170 குடும்ப அட்டைகள், பிரிக்கப்பட்டபின் தாய்க் கடையில் 292 குடும்ப அட்டைகள் மற்றும் தாய் நியாய விலைக் கடைக்கும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் அம்பேத்கர்புரம் பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 1.5 கி.மீ. இருந்தபோதிலும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் அம்பேத்கர்புரம் கிராமப் பகுதியில், அரசுக் கட்டடம் எதுவும் இல்லை. எனவே, அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், நாச்சியார்பட்டி கிராமப் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

எனினும், அப்பகுதியில் அம்மா நகரும் நியாய விலைக் கடைகள் செயல்படுத்திட மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி வழங்கப்பட்டு, அம்பேத்கர்புரம் பகுதிக்கு பிரதி மாதம் 1-வது மற்றும் 2-வது புதன்கிழமைதோறும் அத்தியாவசியப் பொருட்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

83—

பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 249—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, புதுக்குடி தெற்கு நியாய விலைக் கடையிலிருந்து சிதம்பரபட்டி கிராமத்துக்கு பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், புதுக்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 3 முழு நேர நியாய விலைக் கடைகளும், 3 பகுதி நேர கடைகளும் செயல்பட்டு வருகின்றன. புதுக்குடி தெற்கு முழு நேர நியாய விலைக் கடையில்

2022 அக்டோபர் 18]

249 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடைக் கோரும் சிதம்பரபட்டி பகுதியைச் சேர்ந்த 30 குடும்ப அட்டைகளும் அடங்கும்.

புதிய பகுதி நேர நியாய விலைக் கடைக் கோரும் சிதம்பரபட்டி பகுதிக்கும், புதுக்குடி தெற்கு முழு நேர நியாய விலைக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 1 கி.மீ. மட்டுமே உள்ளது. மேலும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடைக் கோரும் சிதம்பரபட்டி பகுதியில் 30 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. குடும்ப அட்டைகள், பிரிக்கப்பட்டபின், தாய்க் கடையில் 219 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். மேலும், சிதம்பரபட்டி பகுதியில் அரசு கட்டடம் எதுவும் இல்லை. எனவே, கிராமப் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும், பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் அங்காடிக்கும், பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதிக்கும் குறைந்தது 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும் எனும் அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், சிதம்பரபட்டி கிராமத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

எனினும், அப்பகுதியில் அம்மா நகரும் நியாய விலைக் கடை செயல்படுத்திட மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி வழங்கப்பட்டு, பிரதி மாதம் 1-வது புதன்கிழமைதோறும் செயல்பட்டு வருகின்றது.

84—

பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 254—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, இந்தளூர் நியாய விலைக் கடையிலிருந்து பூசாரி தெரு கிராமத்திலும் மற்றும் கடம்பங்குடி நியாய விலைக் கடையிலிருந்து தொண்டாராம்பட்டி கிராமத்திலும் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2022 அக்டோபர் 18

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1. திருவையாறு தொகுதி, இந்தளூர் நியாய விலைக் கடையிலிருந்து பூசாரி தெரு கிராமத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோருதல்.

தஞ்சாவூர் மாவட்டம் கடம்பங்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 4 முழு நேர நியாய விலைக் கடைகளும், 2 பகுதி நேர நியாய விலை கடைகளும் செயல்பட்டு வருகின்றன. இந்தளூர் முழு நேர நியாய விலை கடையில் 312 குடும்ப அட்டைகள் உள்ளன. புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பூசாரி தெரு கிராமப் பகுதியைச் சேர்ந்த 78 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும்.

பூசாரி தெரு கிராமப் பகுதியைச் சேர்ந்த 78 குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்ட பின், தாய்க் கடையில் 234 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. மேலும், தாய் நியாய விலைக் கடைக்கும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பூசாரி தெரு கிராமப் பகுதிக்கும், இடைப்பட்ட தூரம் 1/2 கி.மீ மட்டுமே உள்ளது. புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பூசாரி தெரு கிராமப் பகுதியில் அரசுக் கட்டடம் எதுவும் இல்லை. எனவே, கிராமப் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். தாய் அங்காடிக்கும், பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதிக்கும் குறைந்தது 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும் எனும் அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், பூசாரி தெரு கிராமப் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

எனினும், அப்பகுதியில் அம்மா நகரும் நியாய விலைக் கடைகள் செயல்படுத்திட மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி வழங்கப்பட்டு, பூசாரி தெரு கிராமத்தில் பிரதிமாதம் 3-வது செவ்வாய்கிழமைதோறும் செயல்பட்டு வருகிறது.

2. திருவையாறு தொகுதி, கடம்பங்குடி நியாய விலைக் கடையிலிருந்து தொண்டாரம்பட்டி கிராமத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோருதல்.

2022 அக்டோபர் 18]

தஞ்சாவூர் மாவட்டம் கடம்பங்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 4 முழு நேர நியாய விலைக் கடைகளும், 2 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன. கடம்பங்குடி முழு நேர நியாய விலைக் கடையில் 331 குடும்ப அட்டைகளும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் தொண்டராம்பட்டி கிராமப் பகுதியைச் சேர்ந்த 50 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும்.

தொண்டராம்பட்டி கிராமப் பகுதியைச் சேர்ந்த 50 குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்ட பின், தாய்க் கடையில் 281 குடும்ப அட்டைகள் மற்றும் தாய் நியாய விலைக் கடைக்கும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் தொண்டராம்பட்டி கிராமப் பகுதிக்கும், இடைப்பட்ட தூரம் 1/2 கி.மீ மட்டுமே உள்ளது. புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பூசாரி தெரு தொண்டராம்பட்டி கிராமப் பகுதியில், அரசுக் கட்டடம் எதுவும் இல்லை. எனவே, அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், தொண்டராம்பட்டி கிராமப் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

எனினும், அப்பகுதியில் அம்மா நகரும் நியாய விலைக் கடைகள் செயல்படுத்திட மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி வழங்கப்பட்டு, தொண்டராம்பட்டி கிராமத்தில் பிரதிமாதம் 3-வது சனிக்கிழமைதோறும் செயல்பட்டு வருகிறது.

85—

கூட்டுறவு அங்காடி அமைத்தல்

வினா எண் 2173—திரு. இரா. அருள்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர் ஒன்றியம், முத்துநாயக்கன்பட்டி ஊராட்சியை மையப்படுத்தி கூட்டுறவு அங்காடி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் மேற்குத் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், முத்துநாயக்கன்பட்டி ஊராட்சியில்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

எஸ்.285 வெங்கடாஜலபதி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில், முத்துநாயக்கன்பட்டி, வெங்கடாஜலபதி, புதூர்காடம்பட்டி, சிக்கம்பட்டி ஆகிய 4 முழு நேர நியாய விலைக் கடைகளும், பாலகுட்டபட்டி, கதிர்செட்டிபட்டி, மிளகாய்காரனூர் ஆகிய 3 பகுதி நேர நியாய விலைக்கடைகளும் செயல்பட்டு வருகின்றன.

இந்நேர்வில், முத்துநாயக்கன்பட்டி ஊராட்சிப் பகுதியில் வசிக்கும் குடும்ப அட்டைதாரர்கள் அனைவரும் முத்துநாயக்கன்பட்டி (07FP066PY), வெங்கடாஜலபதி (07FP068PY) மற்றும் புதூர்காடம்பட்டி (07FP076PN) ஆகிய 3 முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும் பாலகுட்டப்பட்டி (07FP068P1) கதிர்செட்டிபட்டி (07FP066P1) என்ற 2 பகுதி நேர நியாய விலைக் கடைகள் ஆகிய 5 நியாய விலைக் கடைகளில் அத்தியாவசிய மற்றும் சிறப்புப் பொது விநியோகத் திட்டப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். மேற்காண் நியாய விலைக் கடைகளுடன் இணைக்கப்பட்ட குடும்ப அட்டைதாரர்கள் அனைவரும் 1.5 கிலோ மீட்டருக்குள் வசித்து வருவதால், முத்துநாயக்கன்பட்டி ஊராட்சியை மையப்படுத்தி புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

86—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 2175—திரு. இரா. அருள்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் ஒன்றியம், பாரதி நகர், மஞ்சுள்ளாம்பள்ளத்திற்கு நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், எஸ்.451 கருப்பூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 7 முழு நேர நியாய விலைக் கடைகளும், 5 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன. இதில், வெள்ளகல்பட்டி (07FP022PY)

2022 அக்டோபர் 18]

முழு நேர நியாய விலைக் கடையில் 772 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பாரதி நகர் மற்றும் மஞ்சுள்ளாம்பள்ளம் பகுதியைச் சேர்ந்த முறையே 222 மற்றும்115 என மொத்தம் 337 குடும்ப அட்டைகளும் அடங்கும்.

புதிய நியாய விலைக் கடை கோரும் பாரதி நகர், மஞ்சுள்ளாம்பள்ளம் பகுதிகளுக்கும், வெள்ளகல்பட்டி முழு நேர நியாய விலைக் கடைக்கும் இடையே 1.25 கி.மீ. தூரம் மட்டுமே உள்ளது. மேலும், குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்ட பின், தாய்க் கடையில் 435 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். மேலும், புதிய நியாய விலைக் கடை கோரும் பாரதி நகர், மஞ்சுள்ளாம்பள்ளம் பகுதிகளில் அரசு கட்டடம் ஏதும் இல்லை. எனவே, கிராமப் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும், பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் அங்காடிக்கும் பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதிக்கும் குறைந்தது 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும் எனும் அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், பாரதி நகர், மஞ்சுள்ளாம்பள்ளம் பகுதிகளில் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

87—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 2176—திரு. இரா. அருள்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர் ஒன்றியம், வெள்ளக்கல்பட்டி ஊராட்சி, தாழம்பூ நகர் பகுதிவாழ் மக்களுக்கு நியாய விலைக் கடை துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், எஸ்.451 கருப்பூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் வெள்ளகல்பட்டி (07FP200PY), *முழு நேர நியாய விலைக் கடை 772 குடும்ப*

[2022 அக்டோபர் 18

அட்டைகளில், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் தாழம்பூ நகர் பகுதியைச் சேர்ந்த 110 குடும்ப அட்டைகளும் அடங்கும். பிரிக்கப்பட்ட பின், தாய்க் கடையில் 662 குடும்ப அட்டைகள் இருக்கும். மேலும், தாய் நியாய விலைக் கடைக்கும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதிக்கும் இடையே 1.9 கி.மீ தூரம் உள்ளது மற்றும் அப்பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைப்பதற்கு ஏதுவாக அரசு, ஊராட்சிக்குச் சொந்தமான கட்டடம் ஏதும் இல்லை.

புதிய நியாய விலைக் கடை கோரும் தாழம்பூ நகர் பகுதியில் 110 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. மேலும், அப்பகுதியில், புதிய நியாய விலைக் கடை அமைப்பதற்கு ஏதுவாக, அரசு/ஊராட்சிக்குச் சொந்தமான கட்டடம் இல்லை. எனவே, புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் கிராமப் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் எனும் அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாததால், தாழம்பூ நகர் பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

88—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 2179—திரு. இரா. அருள்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் ஒன்றியம், தளவாய்ப்பட்டி ஊராட்சி, பெத்தானூர்களர்காடு, மீனவாயன்தெரு, கோல்காரன் வட்டத்திற்குட்பட்ட மக்களுக்கு தனியாக நியாய விலைக் கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், எஸ்.411 சூரமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் பெத்தானூர்(07JC082PN), முழு நேர நியாய விலைக் கடை 1,046 குடும்ப அட்டைகளில், புதிய நியாய விலைக் கடைகள் கோரும் பெத்தானூர்களர்காடு, மீனவாயன்தெரு மற்றும் கோல்காரன்

2022 அக்டோபர் 18]

வட்டம் பகுதியைச் சேர்ந்த 316 (146+170) குடும்ப அட்டைகளும் அடங்கும். பிரிக்கப்பட்ட பின் தாய்க் கடையில் 730 குடும்ப அட்டைகள் இருக்கும்.

மேலும், தாய் நியாய விலைக் கடைக்கும், புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதிக்கும் இடையே 1.5 கி.மீ. தூரம் உள்ளது மற்றும் அப்பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைப்பதற்கு ஏதுவாக, அரசு/ஊராட்சிக்குச் சொந்தமான கட்டடம் ஏதும் இல்லை.

புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைப்பதற்கு ஏதுவாக, அரசு/ஊராட்சிக்குச் சொந்தமான கட்டடம் இருக்க வேண்டும் எனும் அரசின் நிபந்தனை பூர்த்தியாகாததால், பெத்தானூர், களர்காடு, மீனவாயன்தெரு மற்றும் கோல்காரன் வட்டம் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

89—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 2180—திரு. இரா. அருள்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மேற்கு தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், செம்மண்கூடல் ஊராட்சி, கந்தம்பிச்சானூரில் புதியதாக நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், செம்மன்கூடல் ஊராட்சியில் எஸ்.511 கருக்கல்வாடி தேவியம்மன் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 5 முழு நேர நியாய விலைக் கடைகளும், 2 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன. கந்தம்பிச்சானூர் பகுதி நேர நியாய விலைக் கடையில் 442 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. கந்தம்பிச்சானூர் பகுதியைச் சேர்ந்த 80 குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும்.

கந்தம்பிச்சானூர் பகுதி நேர நியாய விலைக் கடையானது, கந்தம்பிச்சானூர் பகுதியிலேயே 442 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருவதால், கந்தம்பிச்சானூர் பகுதிக்கு புதிய நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய நேர்வு எழவில்லை.

90—

கட்டடம் கட்டுதல்

வினா எண் 2470—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, ராயந்தூர் நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், ராயந்தூர் (191P046PN) முழு நேர நியாய விலைக் கடை 223 குடும்ப அட்டைகளுடன் டி.1710 சித்திரக்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது.

மேற்படி, ராயந்தூர் முழு நேர நியாய விலைக் கடை ஏற்கெனவே நல்ல நிலையில் உள்ள அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், ராயந்தூர் முழு நேர நியாய விலைக் கடைக்கு புதியக் கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை.

91—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 3357—திரு. இரா. அருள்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 அக்டோபர் 18]

சேலம் மேற்கு தொகுதி, பள்ளிப்பட்டி நியாய விலைக் கடை எண் JB026PN-ல் 1,373 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். எனவே, இந்த கடையை இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மேற்கு தொகுதி, சேலம் மாநகராட்சி, எஸ்.439 சேலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின்கீழ் பள்ளப்பட்டி பகுதியில் பள்ளப்பட்டி-1 முழு நேர நியாய விலைக் கடை 1,418 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடையில் 1.50 கி.மீட்டருக்கு மேல் கடந்து வந்து பொருட்கள் பெற்றுச் செல்லும் பகுதி ஏதும் இணைக்கப்படவில்லை.

மேற்படி நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் புதிய நியாய விலைக் கடை அமைப்பதற்காக அரசு கட்டடம் ஏதும் கட்டப்படவில்லை.

மேலும், பள்ளப்பட்டி-1 நியாய விலைக் கடையில் மொத்தம் 1,418 குடும்ப அட்டைகள் உள்ளன. இதனை இரண்டாகப் பிரித்தால், ஒரு நியாய விலைக் கடைக்கு சராசரியாக 709 குடும்ப அட்டைகள் மட்டுமே இணைக்கப்பட்டிருக்கும். அரசின் நிபந்தனைகளின்படி, நகரப்பகுதியில் செயல்படும் ஒரு முழு நேர நியாய விலைக் கடையுடன் குறைந்தபட்சம் 800 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டிருக்க வேண்டும் மற்றும் புதியதாக நியாய விலைக் கடை தோற்றுவிக்கக் கோரும் பகுதிக்கும், தாய் நியாய விலைக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் குறைந்தபட்சம் 1.50 கி.மீ. இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகள் பூர்த்தியாகவில்லை.

எனவே, அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், சேலம் மேற்கு தொகுதி, பள்ளப்பட்டி-1 நியாய விலைக் கடையில் உள்ள குடும்ப அட்டைகளைப் பிரித்து புதிய நியாய விலைக் கடை அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

92—

சூப்பர் மார்கெட்டை செயல்படுத்துதல்

வினா எண் 3896—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகர்கோவிலில் கலைக்கப்பட்ட பகவதி சூப்பர் மார்கெட்டை மீண்டும் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கே.என். 180, கன்னியாகுமரி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை புதிதாக ஆரம்பிக்கப்பட்டு, 22-11-2019 அன்று பதிவு செய்யப்பட்டு 14-2-2020 முதல் செயல்பட்டு வருகிறது. எனவே, ஏற்கெனவே கலைக்கப்பட்ட பகவதி சூப்பர் மார்கெட்டினை மீண்டும் செயல்படுத்த இயலாது.

93—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 5587—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, கீழ்மாம்பட்டு ஊராட்சி, வடக்குத் தெரு பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதியில் சிலம்பிநாதன்பேட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின்கீழ் 3 முழு நேர, 2 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் என ஆக மொத்தம் 5 நியாய விலைக் கடைகள் இயங்கி வருகின்றன.

2022 அக்டோபர் 18]

கீழ்மாம்பட்டு முழு நேர நியாய விலைக் கடை 886 குடும்ப அட்டைகளுடன் கீழ்மாம்பட்டு கிராமத்தில் செயல்பட்டு வருகிறது. இதில், கீழ்மாம்பட்டு வடக்குத் தெரு பகுதியைச் சேர்ந்த 142 குடும்ப அட்டைகளும் அடங்கும்.

மேலும், கீழ்மாம்பட்டு வடக்குத் தெரு பகுதியிலிருந்து கீழ்மாம்பட்டு முழு நேர நியாய விலைக் கடைக்கு 0.75 கி.மீ தொலைவு மட்டுமே உள்ளது. எனவே, அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், கீழ்மாம்பட்டு ஊராட்சி, வடக்குத் தெரு பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

94—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 7117—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, திருவாமூர் ஊராட்சி, காமாட்சிபேட்டையில் புதிய நியாய விலைக் கடை துவங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதியில், திருவாமூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின்கீழ் 3 முழு நேர நியாய விலைக் கடைகளும், 3 பகுதி நேரக் கடைகளும் என ஆக மொத்தம் 6 நியாய விலைக் கடைகள் இயங்கி வருகின்றன. திருவாமூர் ஊராட்சிக்குட்பட்ட காமாட்சிபேட்டை கிராமத்தில் ஏற்கெனவே 321 குடும்ப அட்டைகளுடன் பகுதி நேர நியாய விலைக் கடை அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், புதிய நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

95—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 7118—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, சின்னபுறங்கனி கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை துவங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதியில், காடாம்புலியூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 5 முழு நேர நியாய விலைக் கடைகளும், 4 பகுதி நேர கடைகளும் என ஆக மொத்தம் 9 நியாய விலைக் கடைகளும், 2 நகரும் நியாய விலைக் கடைகளும் இயங்கி வருகின்றன. அவற்றில் சின்னபுறங்கனி கிராமத்தில், ஏற்கெனவே, 278 குடும்ப அட்டைகளுடன் முழு நேர நியாய விலைக் கடை வாடகையில்லா கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், சின்னபுறங்கனி கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

96—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 7119—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, காடாம்புலியூர் காட்டாண்டிக்குப்பத்தில் புதிய நியாய விலைக் கடை துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதியில் காடாம்புலியூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின்கீழ் 5

2022 அக்டோபர் 18]

முழு நேர நியாய விலைக் கடைகளும், 4 பகுதி நேர கடைகளும் மற்றும் 2 நகரும் நியாய விலைக் கடைகளும் இயங்கி வருகின்றன. அவற்றில், காட்டாண்டிக்குப்பம் கிராமத்தில் ஏற்கெனவே 470 குடும்ப அட்டைகளுடன் பகுதி நேர நியாய விலைக் கடை வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், புதிய நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

97—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 7120—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, காடாம்புலியூர் ஊராட்சி, காந்திநகரில் புதிய நியாய விலைக் கடை துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதியில் காடாம்புலியூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கச் செயல்பாட்டின்கீழ் 5 முழு நேர நியாய விலைக் கடைகளும், 4 பகுதி நேர கடைகளும் என ஆக மொத்தம் 9 நியாய விலைக் கடைகளும், 2 நகரும் நியாய விலைக் கடைகளும் இயங்கி வருகின்றன.

காடாம்புலியூர் கடை எண் 1 முழு நேர நியாய விலைக் கடை 1,103 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. காந்திநகர் பகுதியைச் சேர்ந்த 375 குடும்ப அட்டைதாரர்கள் காடாம்புலியூர் கடை எண் 1 முழு நேர நியாய விலைக் கடையிலிருந்து அத்தியாவசியப் பொருட்கள் பெற்று வருகின்றனர். காடாம்புலியூர் கடை எண் 1 முழு நேர நியாய விலைக் கடைக்கும், காந்திநகர் பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 0.75 கி.மீ. மட்டுமே உள்ளதால், காந்திநகர் பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், தற்போது காந்திநகர் பகுதியில் நகரும் நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது.

[2022 அக்டோபர் 18

98—

பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 11449—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, ஓ.ஜி.அள்ளி ஊராட்சிக்குட்பட்ட சிட்லாகாரம்பட்டி அண்ணாநகர் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், ஓ.ஜி.அள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 7 முழு நேர நியாய விலைக் கடைகளும், 13 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன.

ஓ.ஜி.அள்ளி ஊராட்சியில் சிட்லாகாரம்பட்டி முழு நேர நியாய விலைக் கடை 612 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகின்றது. இதில் அண்ணா நகர் பகுதியைச் சேர்ந்த 75 குடும்ப அட்டைகளும் அடங்கும். அண்ணாநகர் பகுதியில் 75 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதாலும், அண்ணாநகர் பகுதியிலிருந்து சிட்லாகாரம்பட்டி முழு நேர நியாய விலைக் கடைக்கு 1 கி.மீ. தொலைவு மட்டுமே உள்ளதாலும், கிராமப் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய் அங்காடிக்கும், பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதிக்கும் குறைந்தது 1.5 கி.மீ தூரம் இருக்க வேண்டும் எனும் அரசின் நிபந்தனைகள் முழுமையாகப் பூர்த்தியாகவில்லை. எனவே, அண்ணாநகர் பகுதியில் புதியதாக பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க தற்போது வழிவகையில்லை.

99—

பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 11451—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 அக்டோபர் 18]

(அ) பெண்ணாகரம் தொகுதி, வேப்பிலஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட சுரக்காப்பட்டி கிராமத்தில் இயங்கிவரும் பகுதி நேர நியாய விலைக் கடையை முழு நேர கடையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 7 முழு நேர நியாய விலைக் கடைகளும், 4 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன.

வேப்பிலஅள்ளி ஊராட்சியில், சுரக்காப்பட்டி கிராமத்தில் இயங்கி வரும் சஜ்ஜலஅள்ளி பகுதிநேர நியாய விலைக் கடையில் 471 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதால், கிராமப் பகுதியில் புதிய முழு நேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும், அதிகபட்சம் 800 குடும்ப அட்டைகளுக்கு மேல் இருக்கக் கூடாது எனும் அரசின் நிபந்தனை பூர்த்தியாகவில்லை. எனவே, சஜ்ஜலஅள்ளி பகுதி நேர நியாய விலைக் கடையினை முழு நேர நியாய விலைக் கடையாக மாற்ற சாத்தியக்கூறுகள் இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

100—

பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 11497—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, அரசகுப்பம் ஊராட்சியில் D.கொத்தனூர் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி வட்டாரத்தில், எஸ். 664 அரசகுப்பம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின்கீழ் 2 முழு நேர நியாய விலைக் கடைகளும், 5 பகுதி நேர கடைகளும் ஆக மொத்தம் 7 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன.

இவற்றில் காலகோபசந்திரம் முழு நேர நியாய விலைக் கடை 650 குடும்ப அட்டைகளுடன், சங்க கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இதில், முதல் பகுதி நேர நியாய விலைக் கடையான அரசகுப்பம் கடை 251 குடும்ப அட்டைகளுடனும், இரண்டாவது பகுதி நேர நியாய விலைக் கடையான திம்மசந்திரம் நியாய விலைக் கடை 203 குடும்ப அட்டைகளுடனும், மூன்றாவது பகுதி நேர நியாய விலைக் கடையான மேககவுண்டனூர் நியாய விலைக் கடை 161 குடும்ப அட்டைகளுடனும் செயல்பட்டு வருகின்றன.

மேலும், காலகோபசந்திரம், D.கொத்தனூர், பென்ஸ்பள்ளி, மாரிகானப்பள்ளி மற்றும் சிக்கன்ரப்பள்ளி பகுதிகளில் 650 குடும்ப அட்டைகள் உள்ளன. இருப்பினும், காலகோபசந்திரம் (30EP0267PY) முழு நேர நியாய விலைக் கடையிலிருந்து ஏற்கெனவே மூன்று பகுதி நேர நியாய விலைக் கடைகள் பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருவதால், தளி தொகுதி, அரசகுப்பம் ஊராட்சியில் D.கொத்தனூர் கிராமத்தில் மேலும் ஒரு புதிய பகுதி நேர நியாய விலைக் கடையினை துவங்க வழிவகையில்லை.

பட்டியல்-12

1—

பகுதி நேர நியாய விலைக் கடை துவக்குதல்

வினா எண் 11500—திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, காரண்டப்பள்ளி ஊராட்சி, காடுசெப்பள்ளி கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி வட்டாரத்தில் எஸ்.5557 அந்தேவனப்பள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தில் 3 முழுநேர நியாய விலைக் கடைகளும், 5 பகுதி நேர நியாய விலைக் கடைகளும், ஆக மொத்தம் 8 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன.

காரண்டப்பள்ளி முழுநேர நியாய விலைக் கடை 425 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. அதில், முதல் பகுதி நேர நியாய விலைக் கடையான கச்சுவாடி 265 குடும்ப அட்டைகளுடனும், இரண்டாவது பகுதி நேர நியாய விலைக் கடையான தொட்டபிலிமுத்திரை 350 குடும்ப அட்டைகளுடனும் செயல்பட்டு வருகின்றன. இதில், காடுசெப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த 85 குடும்ப அட்டைகளும் அடங்கும். காடுசெப்பள்ளி கிராமம் மேற்படி தொட்டபிலிமுத்திரை பகுதி நேர நியாய விலைக் கடையிலிருந்து 1.00 கி.மீ. தொலைவில் உள்ளது. மேலும், காரண்டப்பள்ளி ஊராட்சி, தொட்டபிலிமுத்திரை கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை வாடகையில்லா இலவச கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

எனவே, எஸ்.5557 அந்தேவனப்பள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின்கீழ் காரண்டப்பள்ளி ஊராட்சியில், காரண்டப்பள்ளி (30EP021PY) முழுநேர நியாய விலைக் கடையிலிருந்து ஏற்கெனவே இரண்டு பகுதி நேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருவதாலும், அரசின் வழிகாட்டு நிபந்தனைகள் பூர்த்தியாகாததாலும், புதியதாக மூன்றாவது பகுதி நேர நியாய விலைக் கடையினை துவங்க வழிவகையில்லை.

2—

பகுதி நேர நியாய விலைக் கடை துவக்குதல்

வினா எண் 11501—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, காரண்டப்பள்ளி ஊராட்சி, முளுவனப்பள்ளி கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி வட்டாரத்தில் எஸ்.5557 அந்தேவனப்பள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 3 முழுநேர நியாய விலைக் கடைகளும், 5 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன.

இவற்றில், காரண்டப்பள்ளி முழுநேர நியாய விலைக் கடை, காரண்டப்பள்ளி கிராமத்தில் 425 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. காரண்டப்பள்ளி முழுநேர நியாய விலைக் கடையைச் சார்ந்த முதல் பகுதி நேர நியாய விலைக் கடையான கச்சுவாடி நியாய விலைக் கடையில் 265 குடும்ப அட்டைகளும், இரண்டாவது பகுதி நேர நியாய விலைக் கடையான தொட்டபிலிமுத்திரை நியாய விலைக் கடையில் 364 குடும்ப அட்டைகளும் உள்ளன.

அதில், முளுவனப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த 85 குடும்ப அட்டைகளும் அடங்கும். அங்கு ஏற்கெனவே இரண்டு பகுதி நேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருவதால், அரசு நெறிமுறைகளின்படி முழுநேர நியாய விலைக் கடை மட்டுமே அமைக்க இயலும். மூன்றாவது பகுதி நேர நியாய விலைக் கடையினை துவங்க இயலாது.

3—

பகுதி நேர நியாய விலைக் கடை துவக்குதல்

வினா எண் 11506—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 அக்டோபர் 18]

(அ) தளி தொகுதி, அந்தேவனப்பள்ளி ஊராட்சி, கொங்குசெட்டிப்பள்ளி கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி வட்டாரத்தில் எஸ்.5557 அந்தேவனப்பள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தில் 3 முழுநேர நியாய விலைக் கடைகளும், 5 பகுதி நேர நியாய விலைக் கடைகளும், ஆக மொத்தம் 8 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன.

இவற்றில், மல்லிகார்ஜுனதுர்க்கம் முழுநேர நியாய விலைக் கடையில் 631 குடும்ப அட்டைகள் உள்ளன. அதில், முதல் பகுதி நேர நியாய விலைக் கடையான ராமச்சந்திரம் நியாய விலைக் கடை 307 குடும்ப அட்டைகளுடன் வாடகையில்லா இலவச கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடையில் ராமச்சந்திரம், வெங்கடபுரம், அனுமந்தபுரம் மற்றும் கொங்குசெட்டிப்பள்ளி பகுதிகளைச் சார்ந்த 307 குடும்ப அட்டைகளும் உள்ளன. இரண்டாவது பகுதி நேர நியாய விலைக் கடையான குருபரப்பள்ளி 263 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது.

எனவே, மல்லிகார்ஜுனதுர்க்கம் (30EP022PY) முழுநேர நியாய விலைக் கடையிலிருந்து ஏற்கெனவே இரண்டு பகுதி நேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வரும் நிலையில், அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, புதியதாக மூன்றாவது பகுதி நேர நியாய விலைக் கடையினை துவங்க வழிவகையில்லை.

4—

பகுதி நேர நியாய விலைக் கடை துவக்குதல்

வினா எண் 11509—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2022 அக்டோபர் 18

(அ) தளி தொகுதி, பெட்டமுகிலாளம் ஊராட்சி, குல்லட்டி மலை கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி வட்டாரத்தில் கே.கே.217 கெத்தஹள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின்கீழ் 3 முழுநேர நியாய விலைக் கடைகளும், 3 பகுதி நேர நியாய விலைக் கடைகளும், ஆக மொத்தம் 6 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன.

இவற்றில், பெட்டமுகிலாளம் முழுநேர நியாய விலைக் கடையிலிருந்து குல்லட்டி மற்றும் தொலுவபெட்டா ஆகிய இரண்டு பகுதி நேர நியாய விலைக் கடைகள் பிரிக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. குல்லட்டி (30EP064P1) பகுதி நேர நியாய விலைக் கடை 2007-ல் பிரிக்கப்பட்டு, தற்போது 129 குடும்ப அட்டைகளுடன் வாடகையில்லா இலவச கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது. மேற்படி, குல்லட்டி கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை ஏற்கெனவே செயல்பட்டு வரும் நிலையில், அதே கிராமத்திற்கு புதியதாக பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வழிவகையில்லை.

5—

பகுதி நேர நியாய விலைக் கடை துவக்குதல்

வினா எண் 11510—திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, சாலிவாரம் ஊராட்சி, கோனமாக்கனப்பள்ளி கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், அஞ்செட்டி வட்டாரத்தில் எஸ்.5554 சாலிவாரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 1 முழுநேர நியாய விலைக் கடையும், 1 பகுதி நேர நியாய விலைக் கடையும் செயல்பட்டு வருகின்றன.

இவற்றில், சாலிவாரம் ஊராட்சியில் அருளாலம் முழுநேர நியாய விலைக் கடையானது 527 குடும்ப அட்டைகளுடன் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இதில் கோனமாக்கனப்பள்ளி பகுதியைச் சேர்ந்த 81 குடும்ப அட்டைகளும் அடங்கும். கோனமாக்கனப்பள்ளி கிராமத்திற்கும், அருளாலம் முழு நேர நியாய விலைக் கடைக்கும் இடையே 1.0 கி.மீ. தூரம் உள்ளது.

அரசு நெறிமுறைகளின்படி, மலைப் பிரதேசங்களில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடைகள் திறக்க புதியதாக தோற்றுவிக்கப்படும் பகுதி நேர நியாய விலைக் கடையில் குறைந்தபட்சம் 100 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிலையில், கோனமாக்கனப்பள்ளி கிராமத்தில் 81 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. எனவே, கோனமாக்கனப்பள்ளி கிராமத்திற்கு புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

6—

பகுதி நேர நியாய விலைக் கடை துவக்குதல்

வினா எண் 11511—திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, சந்தனப்பள்ளி ஊராட்சி, சிக்கேபுரம் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், அஞ்செட்டி வட்டாரத்தில் எஸ்.7557 நொகனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின்கீழ் 2 முழுநேர நியாய விலைக் கடைகளும், 6 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன.

இவற்றில், சந்தனப்பள்ளி முழுநேர நியாய விலைக் கடை 475 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. அதில், முதல் பகுதி நேர நியாய விலைக் கடையான எஸ்.குருப்பட்டி 232 குடும்ப அட்டைகளுடனும், இரண்டாவது பகுதி நேர நியாய விலைக் கடையான சாப்பரனப்பள்ளி 348 குடும்ப அட்டைகளுடனும், மூன்றாவது பகுதி நேர நியாய விலைக் கடையான ஏணிமுச்சந்திரம் 345 குடும்ப அட்டைகளுடனும், நான்காவது பகுதி நேர நியாய விலைக் கடையான ஜார்கலட்டி 245 குடும்ப அட்டைகளுடனும் செயல்பட்டு வருகின்றன.

சந்தனப்பள்ளி ஊராட்சி, ஏணிமுச்சந்திரம் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை 345 குடும்ப அட்டைகளுடன் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அதில், சிக்கேபுரம் கிராமத்தைச் சேர்ந்த 75 குடும்ப அட்டைகளும் அடங்கும். சந்தனப்பள்ளி முழுநேர நியாய விலைக் கடையிலிருந்து ஏற்கெனவே 4 பகுதி நேர நியாய விலைக் கடைகள் பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருவதால், அரசு நெறிமுறைகளின்படி, சிக்கேபுரம் கிராமத்திற்கு புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

7—

பகுதி நேர நியாய விலைக் கடை துவக்குதல்

வினா எண் 11512—திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, இருதுகோட்டை ஊராட்சி, சம்மந்தகோட்டை கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், எஸ்.527 கெலமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 61 முழுநேர நியாய விலைக் கடைகளும், 37 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன.

இருதுகோட்டை ஊராட்சி, சம்மந்தகோட்டை கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை ஊர் பொதுமக்களால் வழங்கப்பட்ட வாடகையில்லா இலவச கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அதில், சம்மந்தகோட்டை கிராமத்தின் 228 குடும்ப அட்டைகளும், சேகோட்டா கிராமத்தின் 17 குடும்ப அட்டைகளும், என மொத்தம் 245 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன.

மேற்படி, சம்மந்தகோட்டை கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை ஏற்கெனவே செயல்பட்டு வரும் நிலையில், அதே கிராமத்திற்கு புதியதாக பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

8—

முழுநேர நியாய விலைக் கடை இயக்குதல்

வினா எண் 11620—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், சாமிசெட்டிப்பட்டி கிராமத்திலுள்ள நியாய விலைக் கடையை முழுநேரக் கடையாக இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், சாமிசெட்டிப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 2 முழுநேர நியாய விலைக் கடைகளும், 6 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன.

[2022 அக்டோபர் 18

போலனஅள்ளி தாய் நியாய விலைக் கடை 946 குடும்ப அட்டைகளுடன் புதன் மற்றும் வெள்ளி ஆகிய இரண்டு நாட்களில் தற்போது செயல்பட்டு வருகிறது. இந்த தாய் நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ள முதல் பகுதி நேர நியாய விலைக் கடையான பங்குநத்தம் கொட்டாய் 496 குடும்ப அட்டைகளுடன் திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளிலும், இரண்டாவது பகுதி நேர நியாய விலைக் கடையான கமல்நத்தம் 235 குடும்ப அட்டைகளுடன் செவ்வாய்க்கிழமையிலும், மூன்றாவது பகுதி நேர நியாய விலைக் கடையான சொரங்கப்பன்புதூர் 274 குடும்ப அட்டைகளுடன் சனிக்கிழமைகளிலும் செயல்பட்டு வருகின்றன.

இந்நிலையில், மூன்று பகுதி நேர நியாய விலைக் கடைகளில் எந்தவொரு பகுதி நேர நியாய விலைக் கடையையும் முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றுவதற்கு கிராமப் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பிரிக்கப்பட்டபின், தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். புதிய முழுநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும்; அதிகபட்சம் 800 குடும்ப அட்டைகளுக்குமேல் இருக்கக்கூடாது மற்றும் தாய் அங்காடிக்கும், பகுதி நேர நியாய விலைக் கடை கோரும் பகுதிக்கும் குறைந்தது 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும் எனும் அரசின் நிபந்தனைகள் முழுமையாகப் பூர்த்தியாகாத காரணத்தினால், மேற்படி சாமிசெட்டிப்பட்டி கிராமத்திலுள்ள தாய் நியாய விலைக் கடையான போலனஅள்ளி நியாய விலைக் கடையை வாரம் முழுவதும் செயல்படும் முழுநேரக் கடையாக மாற்றிட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

9—

கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம்

வினா எண் 11687—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, மாளிகம்பட்டு ஊராட்சியிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிய அலுவலகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, மாளிகம்பட்டு ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் ஏதும் செயல்படவில்லை. மேலும், மாளிகம்பட்டு ஊராட்சியானது வடகைலாசம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்க விவகார எல்லையில் உள்ளது. தற்போது வடகைலாசம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது. சங்கக் கட்டடம் நல்ல நிலையில் உள்ளதால், சங்கத்திற்கு புதியதாக கட்டடம் கட்ட வேண்டிய தேவை ஏதும் எழவில்லை.

10—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 11835—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் ஒன்றியம், ஏந்தல் ஊராட்சி, ஆதி திராவிடர் பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், ஏந்தல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் ஏந்தல் முழுநேர நியாய விலைக் கடையானது 523 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதில், புதிய நியாய விலைக் கடை அமைக்கக் கோரும் ஆதி திராவிடர் பகுதியைச் சேர்ந்த 300 குடும்ப அட்டைகளும் அடங்கும்.

ஏந்தல் தாய்க் கடையில் மொத்தமுள்ள 523 குடும்ப அட்டைகளில் ஆதி திராவிடர் காலனி பகுதிக்கான 300 குடும்ப அட்டைகள் போக, மீதம் 223 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். மேலும், தாய்க் கடைக்கும், ஆதி திராவிடர் காலனி பகுதிக்கும் இடைப்பட்ட தொலைவு 1 கி.மீ. மட்டுமே

உள்ளதாலும், கிராமப் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை பிரிக்கப்பட்ட பின், தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய்க் கடைக்கும், புதிய பகுதி நேர கடை கோரும் பகுதிக்கும் இடையே 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும் எனும் அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையிலும், ஏந்தல் ஊராட்சி, ஆதி திராவிடர் பகுதிக்கு புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

11—

கூட்டுறவு வங்கிக்குக் கட்டடம்

வினா எண் 15357—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, சேத்துப்பட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதி, சேத்துப்பட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு 2018-2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, ரூ.20.00 இலட்சம் மதிப்பில், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து நிதியுதவி பெற்று புதிய அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது. எனவே, சங்கத்திற்கு புதிய கட்டடம் கட்ட வேண்டிய தேவை எழவில்லை.

12—

கூட்டுறவு வங்கிக்குக் கட்டடம்

வினா எண் 15358—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 அக்டோபர் 18]

(அ) போளூர் தொகுதி, போளூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதி, போளூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து (CRDF) நிதியுதவி பெற்று, ரூ.14.50 இலட்சம் செலவில் 2009-2010 ஆம் ஆண்டில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டு, தற்போது கட்டடம் நல்ல நிலையில் உள்ளது. எனவே, சங்கத்திற்கு புதிய கட்டடம் கட்ட வேண்டிய தேவை எழவில்லை.

13—

விவசாயிகளுக்கு கடன் வழங்குதல்

வினா எண் 17584—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டிலுள்ள 180 தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளை (கூட்டுறவு பிரதம நிலவள வங்கிகள்) தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் கிளைகளாக மாற்றம் செய்து, குறைந்த வட்டியில் தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு நீண்டகால கடன்கள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் வட்டம் மற்றும் வட்டார அளவில் செயல்பட்டு வரும் நிறுவனங்களாகும்.

தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியானது, தலைமை வங்கியாகவும், தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு நிதியுதவி வழங்கி வரும் வங்கியாகவும் செயல்பட்டு வருகிறது. இவை ஒவ்வொன்றும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின்படி உருவாக்கப்பட்ட தனிப்பட்ட நிறுவனங்களாகும் என்பதால், தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளை தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் கிளைகளாக மாற்ற வழிவகை இல்லை.

மேலும், நபார்டு வங்கியின் தகுதி விதிமுறைகளுக்குட்பட்டு, தமிழக அரசின் உத்தரவாதத்துடன் நபார்டு வங்கியின் நிதியுதவி பெற்று, தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்மூலம் நீண்டகால கடன்கள் வழங்கிட தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியால் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

14—

வங்கிக் கிளைகளாக மாற்றுதல்

வினா எண் 54713—திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள 180 தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளை (கூட்டுறவு பிரதம நிலவள வங்கிகள்) தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் கிளைகளாக மாற்றம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உள்ள தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் வட்டார மற்றும் வட்ட அளவில் செயல்பட்டு வரும் நிறுவனங்களாகும். தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியானது, தலைமை வங்கியாகவும், தொடக்கக் கூட்டுறவு

2022 அக்டோபர் 18]

வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு நிதியுதவி வழங்கி வரும் வங்கியாகவும் செயல்பட்டு வருகிறது. இவை ஒவ்வொன்றும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளின்படி பதிவு செய்யப்பட்ட தனிப்பட்ட நிறுவனங்களாகும். அதனால், தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளை தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் கிளைகளாக மாற்றம் செய்ய வழிவகை இல்லை.

15—

மகளிர் கலைக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 1153—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதியில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி அமைந்துள்ள கடலூர் மாவட்டத்தில் தற்பொழுது 5 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 1 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், 18 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதிக்குட்பட்ட பகுதியில் புதியதாக ஒரு மகளிர் கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

16—

மகளிர் கலைக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 1795—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2022 அக்டோபர் 18

(அ) பொன்னேரி தொகுதியில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி அமைந்துள்ள திருவள்ளூர் மாவட்டத்தில் தற்பொழுது 2 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 1 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், 33 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதியில் புதியதாக ஒரு மகளிர் கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

17—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்குதல்

வினா எண் 3194—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, ஏரியூர் பகுதியில் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி அமைந்துள்ள தருமபுரி மாவட்டத்தில் தற்பொழுது 6 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 21 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், இதைத் தவிர, 6 பொறியியல் கல்லூரிகளும் மற்றும்

20 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், பெண்ணாகரம் தொகுதி, ஏரியூர் பகுதியில் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

18—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்குதல்

வினா எண் 4069—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி அமைந்துள்ள கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்பொழுது 4 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 11 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், இதைத் தவிர, 6 பொறியியல் கல்லூரிகளும் மற்றும் 11 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதியில் தேன்கனிக்கோட்டையை மையமாகக் கொண்டு புதியதாக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

19—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 10048—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, தளியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி அமைந்திருக்கும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 3 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 8 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், தளி தொகுதி, தளியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

20—

மகளிர் கலைக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 14204—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, தடங்கம் ஊராட்சி, தருமபுரி கலைக் கல்லூரி வளாகத்தில் புதியதாக மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி அமைந்துள்ள தருமபுரி மாவட்டத்தில் தற்பொழுது 6 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் 21 சுயநிதி கலை மற்றும் அறிவியல்

2022 அக்டோபர் 18]

கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. மேலும், தருமபுரி மாவட்டம், ஏரியூர் பகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க அனுமதி வழங்கப்பட்டு, 2022-2023 ஆம் கல்வியாண்டிலிருந்து செயல்படவுள்ளது. இதைத் தவிர, ஓர் அரசு பொறியியல் கல்லூரியும், ஐந்து சுயநிதி பொறியியல் கல்லூரிகளும் மற்றும் மூன்று அரசு தொழில்நுட்பக் கல்லூரிகளும், பதினேழு சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், தருமபுரி மாவட்டம், தடங்கம் ஊராட்சி, தருமபுரி கலைக் கல்லூரி வளாகத்தில் புதியதாக ஒரு மகளிர் கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

21—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 14250—திரு. செ. ஸ்டாலின் குமார்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) துறையூர் தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) துறையூர் தொகுதி அமைந்திருக்கும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 2 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், 2 அரசு உதவிபெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 29 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், துறையூர் தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[*2022 அக்டோபர் 18*

22—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்குதல்

வினா எண் 15487—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, களம்பூர் பேரூராட்சியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதி அமைந்துள்ள திருவண்ணாமலை மாவட்டத்தில் தற்பொழுது 3 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 26 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர, 7 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், 1 பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியும், 2 அரசு தொழில்நுட்பக் கல்லூரிகளும், 18 சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, களம்பூர் பேரூராட்சியில் புதியதாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

23—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்குதல்

வினா எண் 15488—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, போளூரில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதி அமைந்துள்ள திருவண்ணாமலை மாவட்டத்தில் தற்பொழுது 3 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 26 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர, 7 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், 1 பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியும், 2 அரசு தொழில்நுட்பக் கல்லூரிகளும், 18 சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, போளூரில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

24—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்குதல்

வினா எண் 15489—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, சேத்துப்பட்டு பகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதி அமைந்துள்ள திருவண்ணாமலை மாவட்டத்தில் தற்பொழுது 3 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 26 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர, 7 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், 1 பல்கலைக்கழக

பொறியியல் கல்லூரியும், 2 அரசு தொழில்நுட்பக் கல்லூரிகளும், 18 சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, சேத்துப்பட்டு பகுதியில் புதியதாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

25—

மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்குதல்

வினா எண் 15490—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரணமல்லூர், பெரிய கொழப்பலூரில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரணமல்லூர், பெரிய கொழப்பலூர் அமைந்துள்ள திருவண்ணாமலை மாவட்டத்தில் தற்பொழுது 3 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 26 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர, 7 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், 1 பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியும், 2 அரசு தொழில்நுட்பக் கல்லூரிகளும், 18 சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர், பெரிய கொழப்பலூரில் புதியதாக மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

2022 அக்டோபர் 18]

26—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 21220—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, திருவாரூரில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி அமைந்திருக்கும் திருவாரூர் மாவட்டத்தில் 2 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 7 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், திருவாரூரில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

27—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 21968—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி அமைந்திருக்கும் கன்னியாகுமரி மாவட்டத்தில் 1 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, 1 அரசு உதவிபெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் 19 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், குளச்சல் தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் இல்லை.

28—

வேளாண்மைக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 590—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

2022 அக்டோபர் 18]

29—

வேளாண்மைக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 1849—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

30—

டிராக்டர் வழங்குதல்

வினா எண் 2442—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விவசாயிகள் இலவசமாக பயன்படுத்திக்கொள்ள தமிழகம் முழுவதுமுள்ள ஒவ்வோர் ஊராட்சிக்கும் ஒரு டிராக்டர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

விவசாயிகள் இலவசமாக பயன்படுத்திக்கொள்ள ஒவ்வோர் ஊராட்சிக்கும் ஒரு டிராக்டர் வழங்கும் திட்டம் ஏதும் செயல்பாட்டில் தற்சமயம் இல்லை. இருப்பினும், வேளாண்மைப் பொறியியல் துறையில் 275 டிராக்டர்கள் அரசால் நிர்ணயம் செய்யப்படுகின்ற குறைந்த வாடகையான மணிக்கு ரூ.340/- என்ற அடிப்படையில் விவசாயிகளுக்கு வாடகைக்கு விடப்படுகிறது.

[2022 அக்டோபர் 18

வெளிச்சந்தையில் இணைப்புக் கருவிகளுடன் டிராக்டர்களுக்கு ரூ.800/- முதல் ரூ.1,000/- வரை விவசாயிகளிடமிருந்து வாடகையாக வசூலிக்கப்படுகிறது. ஆனால், தமிழக அரசு விவசாயிகள் பயன்பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் இணைப்புக் கருவிகளுடன் டிராக்டர்களை ஒரு மணி நேரத்திற்கு ரூ.340/- என்ற மிகக் குறைந்த வாடகையில் விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. தேவைப்படும் விவசாயிகள் அருகில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறையில் வருவாய் கோட்ட அளவில் உள்ள உதவி செயற்பொறியாளர் (வே.பொ.) அலுவலகங்களை அணுகி பெற்றுக்கொள்ளலாம்.

31—

மானியம் வழங்குதல்

வினா எண் 3005—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, நாற்றாங்கால் நர்சரி விவசாயிகளுக்கு மண்புழு உரக்குடில் அமைக்க மானியம் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின்கீழ், 25 மெட்ரிக் டன் (1,000 சதுர அடி) கொள்ளளவு கொண்ட நிரந்தர மண்புழு உரக்கூடம் அமைக்க 50 சதவிகித மானியத்தில் ரூ.50,000 மானியமாக வழங்கப்படுகிறது. நெய்வேலி வட்டத்தில் மண்புழு உரக்கூடம் அமைக்க முன்வரும் விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இவ்வினத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் சம்பந்தப்பட்ட தோட்டக்கலை உதவி இயக்குநர் மற்றும் தோட்டக்கலை துணை இயக்குநரை அணுகி மானியம் பெற்றுக்கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2022 அக்டோபர் 18]

32—

வேளாண்மைக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 3898—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி துவங்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

33—

மஞ்சள் ஆராய்ச்சி நிலையம் அமைத்தல்

வினா எண் 4270—டாக்டர் சி. சரஸ்வதி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மொடக்குறிச்சி தொகுதியின் வடுகபட்டி பகுதியில் மஞ்சள் ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மொடக்குறிச்சி தொகுதியின் வடுகபட்டி பகுதியில் மஞ்சள் ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2022 அக்டோபர் 18

34—

கரும்புக்கான ஆதார விலை உயர்த்துதல்

வினா எண் 11587—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்புக்கான குறைந்தபட்ச ஆதார விலையை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரும்புக்கான விலையை உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையின் 2021-2022 வரவு-செலவுத் திட்டத்தில், 2020-2021 அரவைப் பருவத்திற்கு மத்திய அரசின் நியாயமான மற்றும் ஆதாய விலையான டன் ஒன்றுக்கு ரூ.2,707.50-க்கு மேல் கரும்பு உற்பத்திக்கான ஊக்கத் தொகையாக டன் ஒன்றுக்கு ரூ.42.50 எனவும், சிறப்பு ஊக்கத் தொகையாக டன் ஒன்றுக்கு ரூ.150/- எனவும், ஆக மொத்தம் டன் ஒன்றுக்கு ரூ.2,900/- கரும்புக்கு ஆதார விலையாக கிடைக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

35—

இஸ்ரேல் உதவியுடன் விவசாயம் செய்தல்

வினா எண் 11588—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் தரிசாகக் கிடக்கும் நிலங்களில் இஸ்ரேல் நாட்டு உதவியுடன் விவசாயம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தரிசாகக் கிடக்கும் நிலங்களில் இஸ்ரேல் நாட்டு உதவியுடன் விவசாயம் செய்ய திட்டம் எதுவும் தற்போது தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைமூலம் செயல்படுத்தப்படவில்லை.

36—

கொள்முதல் நிலையம் அமைத்தல்

வினா எண் 11625—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், தருமபுரியை மையமாகக்கொண்டு சிறுதானியம் மற்றும் பயறு வகை கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தருமபுரி விற்பனைக் குழுவிற்குட்பட்ட பெண்ணாகரம் மற்றும் பாலக்கோடு ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு விவசாயிகளால் சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகள் கொண்டுவரப்படும்பட்சத்தில், சம்பந்தப்பட்ட ஒழுங்குமுறை விற்பனைக்கூட பொறுப்பாளர்கள்மூலம் வியாபாரிகளை தொடர்புகொண்டு, மறைமுக ஏல முறையில் வர்த்தகம் நடைபெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதன்மூலம், விவசாயிகள் நல்ல விலைக்கு தங்களது விளைபொருட்களை விற்பனை செய்ய இயலும். மேலும், தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம், 1987 மற்றும் அதன் விதிகள் 1991-ன்படி, தற்போது செயல்படும் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் கொள்முதல் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

37—

ஆராய்ச்சி நிலையம் அமைத்தல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

வினா எண் 11632—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதியில் சிறுதானிய ஆராய்ச்சி நிலையம் அமைக்கவும், உயர் விளைச்சல் ரக சோளம் மற்றும் சிறுதானியங்களை விவசாயிகள் விளைவிக்கும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதியில் சிறுதானிய ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

38—

வேளாண் அலுவலகக் கட்டடத்தை செயல்பாட்டிற்குக் கொண்டுவருதல்

வினா எண் 11633—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், நல்லம்பள்ளியில் புதியதாக கட்டப்பட்ட வேளாண் அலுவலகக் கட்டடத்தை விரைவாகத் திறந்து, செயல்பாட்டிற்குக் கொண்டுவர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

2022 அக்டோபர் 18]

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், நல்லம்பள்ளியில் புதியதாக ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களால் 30-9-2021 அன்று திறந்து வைக்கப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

39—

வேளாண்மைத் துறை அலுவலகம் அமைத்தல்

வினா எண் 11866—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருக்கோவிலூர் மேற்கு ஒன்றியம், தகடி ஊராட்சியில் வேளாண்மைத் துறை அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டாரத்திலுள்ள தகடி ஊராட்சிக்கு அருகில் 1 வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் 2 துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள் செயல்பட்டு வருவதால், தகடி ஊராட்சியில் வேளாண்மைத் துறை அலுவலகம் அமைப்பதற்கான தேவை எழவில்லை.

40—

மானியம் வழங்குதல்

வினா எண் 11884—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இயற்கை வேளாண்மையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு இடுபொருள் மானியம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இயற்கை வேளாண்மையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறையின்மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களான தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) மற்றும் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (NADP) இடுபொருள் மானியம் வழங்கப்பட்டு வருகிறது என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

41—

ஆய்வுக்கூடங்கள் அமைத்தல்

வினா எண் 11885—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் உள்ள வட்டார வேளாண்மை அலுவலகங்களில் மண் பரிசோதனை ஆய்வுக்கூடங்கள் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் தற்போது 32 மண் பரிசோதனை நிலையங்கள் மற்றும் 16 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்த 32 மண் ஆய்வுக்கூடங்கள் அந்தந்த மாவட்டத்திற்கென மண் மாதிரிகளை ஆய்வு செய்து வருகின்றன. இதேபோன்று, 16 நடமாடும் மண் ஆய்வு நிலையங்கள், ஒரு நடமாடும் மண் ஆய்வுக்கூடத்திற்கு இரண்டு மாவட்டங்கள் என்ற அடிப்படையில், அனைத்து மாவட்டங்களுக்கும் நேரடியாகச் சென்று, மண் மாதிரிகளை சேகரித்து, ஆய்வு செய்து, விவசாயிகளுக்கு பரிந்துரை வழங்கி வருகின்றன. மேலும், கிராமத்திற்கே சென்று விவசாயிகளை நேரில்

சந்தித்து மண்மாதிரியை எடுத்து, பரிசோதனை செய்து, ஆய்வு முடிவுகளையும், பரிந்துரைகளையும் வழங்கும் வகையில், 7 புதிய நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் கடலூர், வேலூர், தேனி, மயிலாடுதுறை, கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் அமைக்க திருத்திய கருத்துரு மத்திய அரசின் தேசிய நீடித்த நிலையான வேளாண்மைக்கான இயக்கத்தின்கீழ் ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டு, ஒப்புதல் எதிர்நோக்கப்படுகிறது. எனவே, ஊராட்சி ஒன்றிய அளவில் மண் பரிசோதனை ஆய்வுக்கூடங்கள் அமைப்பது அரசின் பரிசீலனையில் இல்லை.

42—

வேளாண்மைக் கல்லூரி அமைத்தல்

வினா எண் 12618—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

43—

பூச்சிகளை ஒழித்தல்

வினா எண் 37718—திரு. எம்.ஆர். காந்தி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2022 அக்டோபர் 18

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னை மரங்களைத் தாக்கும் ரூக்கோஸ் வெள்ளை ஈக்களை (வெள்ளை சுருள் பூச்சி) ஒழிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துடன் இணைந்து வேளாண் துறையின் வாயிலாக தொடர்ந்து விழிப்புணர்வுக் கூட்டங்கள் மற்றும் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2021-2022 ஆம் ஆண்டில், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்தி, தென்னையில் சுருள் வெள்ளை ஈ தாக்குதலைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, எக்டருக்கு 20 எண்கள் மஞ்சள் வண்ண ஒட்டுப்பொறி அமைத்தல் மற்றும் சுருள் வெள்ளை ஈ பூச்சிளை தாக்கி அழிக்கும் எதிர் உயிரி பூச்சியான கிரைசோபெர்லா என்னும் கண்ணாடி இறக்கை பூச்சிகளை எக்டருக்கு 1,000 எண்கள்வீதம் வெளியிடுதல் போன்ற இனங்கள் 20,000 எக்டர் பரப்பில் ரூ.2 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் 200 எக்டர் பரப்பில் ரூ.2 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது.

44—

கிராம நிர்வாக அலுவலகம் ஏற்படுத்துதல்

வினா எண் 1437—திரு. மா. செந்தில்குமார்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி நகராட்சி கிராம நிர்வாக அலுவலகத்தைப் பிரித்து இன்னும் ஒரு புதிய கிராம நிர்வாக அலுவலகம் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கள்ளக்குறிச்சி நகராட்சியில் கள்ளக்குறிச்சி மற்றும் ஏமப்பேர் என இரண்டு வருவாய் கிராம நிர்வாக அலுவலகங்கள் உள்ளதால், மேற்படி நகராட்சியைப் பிரித்து புதிய தனி வருவாய் கிராம நிர்வாக அலுவலகம் உருவாக்க அவசியம் எழவில்லை.

45—

கிராம நிர்வாக அலுவலரை நியமித்தல்

வினா எண் 1546—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நெய்வேலி தொகுதி, இந்திரா நகர் ஊராட்சிக்கு தனியாக கிராம நிர்வாக அலுவலரை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நெய்வேலி தொகுதிக்குட்பட்ட இந்திரா நகர் ஊராட்சியில் 2,626 குடும்பங்கள் உள்ளன. அவற்றில், சுமார் 8,200 நபர்கள் வசித்து வருகின்றனர். இந்த ஊராட்சியில் 107 ஏக்கர் குடியிருப்பு நிலப்பரப்பு உள்ளது. இந்திரா நகர் மற்றும் பெருமாத்தூருக்குட்பட்ட பி1, பி2 பிளாக் மற்றும் எம்.ஆர்.கே. சாலை ஆகிய பகுதிகளுக்கான வருவாய்த் துறை பணிகள் வடக்கு மேலூர் கிராம நிர்வாக அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகின்றன. இந்திரா நகர் ஊராட்சியில் நஞ்சை மற்றும் புஞ்சை விவசாய நிலங்கள் இல்லை. இந்திரா நகர் ஊராட்சிக்கென புதிய கிராம

[*2022 அக்டோபர் 18*

நிர்வாக அலுவலர் பணியிடம் தோற்றுவிக்க அவசியம் எழவில்லை. மேலும், கூடுதலாக கிராம நிர்வாக அலுவலர் பணியிடம் ஏற்படுத்தத் தேவையான அளவுகோல்களும் பூர்த்தியாகவில்லை. எனவே, புதிய கிராம நிர்வாக அலுவலர் பணியிடம் தோற்றுவிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

46—

அனைத்துத் துறை அதிகாரம், மாவட்ட ஆட்சியரிடம் ஒப்படைத்தல்

வினா எண் 2586—திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதியதாக பிரிக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்டத்தின் அனைத்துத் துறைகளின் நிர்வாகத்தையும் மாவட்ட ஆட்சியரிடம் ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டத்தினை இரண்டாகப் பிரித்து மயிலாடுதுறை மாவட்டத்தை, அரசாணை (நிலை) எண் 796, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [வ.நி.1 (1)] துறை, நாள் 28-12-2020-ன்படி, புதியதாக உருவாக்கியதன் அடிப்படையில், மயிலாடுதுறை மாவட்டத்தின் அனைத்துத் துறைகளும் நிருவாகரீதியாக மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியரின் முழுக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது.

2022 அக்டோபர் 18]

47—

அரசு அலுவலகங்களுக்குக் கட்டடம்

வினா எண் 2832—திரு. இரா. மாணிக்கம்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளித்தலை தொகுதி, குளித்தலை வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள காலியிடத்தில் அரசு அலுவலகங்களுக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், குளித்தலை வட்டாட்சியர் அலுவலகம் அமைந்துள்ள வளாகத்தில் மீதமுள்ள இடத்தில் பிற அரசு அலுவலங்கள் இயங்கி வருகின்றன. எனவே, குளித்தலை வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் வேறு அலுவலகங்கள் கட்ட போதிய காலியிடமில்லை.

48—

கிராம நிர்வாக அலுவலகம் கட்டுதல்

வினா எண் 4800—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், வெங்கடேஷ்வரபுரம் கிராமத்தில் கிராம நிருவாக அதிகாரி அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், வெங்கடேஷ்வரபுரம் கிராமத்தில் உள்ள கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்குவதற்கு மாவட்ட ஆட்சியரிடம் மதிப்பீட்டறிக்கை பெறப்பட்டு, உரிய முன்மொழிவுகள் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு பெறப்படும்போது, தேவையான நிதி ஒதுக்கீடு செய்து, பழுதுகள் நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, புதிய அலுவலகக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

49—

கிராம நிர்வாக அலுவலகத்தைப் புதுப்பித்தல்

வினா எண் 24074—திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், மணக்கால் ஊராட்சி, பழுதடைந்த கிராம நிர்வாக அலுவலகக் கட்டடத்தை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், மணக்கால் ஊராட்சி, புலவநல்லூர் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் புதுப்பித்தல் தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் புதுப்பித்தல் தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது, திருவாரூர்

2022 அக்டோபர் 18]

தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், மணக்கால் ஊராட்சி கிராம நிர்வாக அலுவலகக் கட்டடத்தை புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

50—

என்.எல்.சி.-ல் நிரந்தர வேலை வழங்குதல்

வினா எண் 1787—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் (NLC) *பணியின்போது இறந்தவர்களின் வாரிசுகளுக்கு நிரந்தர வேலை வழங்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

ஆம். என்.எல்.சி. இந்தியா நிறுவனம் தனது ஒப்புக் கொள்ளப்பட்ட கொள்கையின்படி, தொழிற்சாலை விபத்துகளின் மூலமாக இறக்கும் பணியாளர்களின் வாரிசுகளுக்கும், COVID-*ல் இறக்கும் பணியாளர்களின் வாரிசுகளுக்கும் உரிய சட்டப்படியான இழப்பீடு வழங்குவதோடு, கருணை அடிப்படையில் என்.எல்.சி. இந்தியா நிறுவனத்தின் இறந்த பணியாளர்களின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தின்மூலம் பணியும் வழங்கப்படுவதாகத் தெரிவித்துள்ளது.*

51—

தொழிற்பூங்கா அமைத்தல்

வினா எண் 1905—திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியத்தில் சிப்காட் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 அக்டோபர் 18

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிப்காட் நிறுவனம் தமிழ்நாட்டில் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்கள் தொடங்க ஏதுவாக, தொழில் வாய்ப்புள்ள பகுதிகளில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய தொழிற்பூங்காக்களை ஏற்படுத்தி பராமரித்து வருகிறது. இந்நிறுவனம் இதுவரை, சிவகங்கை மாவட்டம் உட்பட 15 மாவட்டங்களில், ஆறு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உட்பட 24 தொழிற்பூங்காக்களை, சுமார் 34,900 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்தி பராமரித்து வருகின்றது. சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் சிப்காட் தொழிற்பூங்கா ஒன்று 492.07 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டு, செயல்பாட்டில் உள்ளது. இங்கு, ஒதுக்கீட்டிற்குரிய நிலப்பரப்பில், 358.10 ஏக்கர் நிலம் 75 தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், சிவகங்கை மாவட்டம் மற்றும் வட்டத்தில் சிப்காட் நிறுவனம்மூலம் ஒரு புதிய தொழிற்பூங்காவை 793.57 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சிப்காட் நிறுவனம், புதிய தொழிற்பூங்காக்களை உருவாக்குகையில், ஒரு தொழிற்பூங்காவினை ஏற்படுத்தும் அளவிற்கு குறிப்பிட்ட அப்பகுதியில் ஒருங்கிணைந்த போதிய நிலம் இருப்பு, சாலை, இரயில் மற்றும் விமானப் போக்குவரத்து வசதி, தண்ணீர், மின்சாரம் போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கான வாய்ப்பு மற்றும் அப்பகுதியில் காணப்படும் தொழில்மனை தேவை போன்ற அனைத்து சாத்தியக்கூறுகளையும் ஆராய்ந்த பின்னரே, புதிய தொழிற்பூங்கா அமைக்க முடிவு செய்யப்படுகிறது.

தற்போது சிவகங்கை மாவட்டம் மற்றும் வட்டத்தில் அமைக்கப்பட்டு வரும் தொழிற்பூங்கா மானாமதுரை தொகுதி உட்பட இம்மாவட்டத்தில் உள்ள அனைத்து தொழில்முனைவோர்களின் தொழில்மனைத் தேவையை பூர்த்தி செய்யும். இந்நிலையில், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியத்தில் தனியாக சிப்காட் தொழிற்பூங்கா அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

2022 அக்டோபர் 18]

52—

தொழிற்பூங்கா அமைத்தல்

வினா எண் 1944—திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை தொகுதியில் சிப்காட் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிப்காட் நிறுவனம் தமிழ்நாட்டில் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்கள் தொடங்க ஏதுவாக, தொழில் வாய்ப்புள்ள பகுதிகளில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய தொழிற்பூங்காக்களை ஏற்படுத்தி பராமரித்து வருகிறது. இந்நிறுவனம் இதுவரை 15 மாவட்டங்களில், ஆறு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உட்பட 24 தொழிற்பூங்காக்களை, சுமார் 34,900 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்தி பராமரித்து வருகின்றது.

சிப்காட் நிறுவனம், புதிய தொழிற்பூங்காக்களை உருவாக்குகையில், ஒரு தொழிற்பூங்காவினை ஏற்படுத்தும் அளவிற்கு குறிப்பிட்ட அப்பகுதியில் ஒருங்கிணைந்த போதிய நிலம் இருப்பு, சாலை, இரயில் மற்றும் விமானப் போக்குவரத்து வசதி, தண்ணீர், மின்சாரம் போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கான வாய்ப்பு மற்றும் அப்பகுதியில் காணப்படும் தொழில்மனை தேவை போன்ற அனைத்து சாத்தியக்கூறுகளையும் ஆராய்ந்த பின்னரே, புதிய தொழிற்பூங்கா அமைக்க முடிவு செய்யப்படுகிறது.

மயிலாடுதுறை பகுதியில் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்கும் உத்தேசம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

53—

உதவித் தொகை வழங்குதல்

வினா எண் 2494—திரு. இரா. அருள்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொரோனா தொற்றின் காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த மெல்லிசை கலைஞர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

கலை பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்துள்ள நாட்டுப்புறக் கலைஞர்களில் தகுதி வாய்ந்த கலைஞர்களுக்கு கொரோனா-19, அரசின் சிறப்பு நிவாரணத் தொகை, ரூ.1,000/- வீதம் முதல் மற்றும் இரண்டாம் தவணைத் தொகை மாவட்ட நிருவாகம் வாயிலாக சென்ற நிதியாண்டு மட்டும், தொடர்புடைய கலைஞர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டது. கலை பண்பாட்டுத் துறையின்கீழ் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம் செயல்படுவதால், தற்போது உதவித் தொகை வழங்குவதற்கு தகுதியுள்ள பயனாளிகள் பட்டியலில் மெல்லிசை கலைஞர்கள் சேர்க்கப்படவில்லை.

54—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைத்தல்

வினா எண் 7053—டாக்டர் வை. முத்துராஜா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, சிப்காட் பகுதியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா (TIDEL Park) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், சிப்காட் பகுதியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை. இருப்பினும், டைடல் பார்க் நிறுவனம் நிலை-II மற்றும் நிலை-III நகரங்களில் சிறிய தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை நிறுவிட அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் ஏற்ற நிலம் கண்டறிந்து தகவல் அனுப்பும்படி கேட்டுக்கொண்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரால் நிலம் தேர்வு செய்யப்பட்ட பின்பு சிறு டைடல் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, மேற்படி திட்டத்தினை புதுக்கோட்டையில் அமைப்பது குறித்து முடிவு செய்யப்படும்.

55—

தொழிற்சாலை அமைத்தல்

வினா எண் 12105—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதியில் உள்ள சேத்துப்பட்டு பகுதியில் சிப்காட் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் அதனையொட்டியுள்ள மாவட்டங்களில் பெருகி வரும் தொழில்மனைத் தேவையினை கருத்தில்கொண்டு, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டத்தில் கூடுதலாக சுமார் 3,174 ஏக்கர் நிலம் தெரிவு செய்யப்பட்டு, நிலம் கையகப்படுத்த அரசின் நிருவாக அனுமதி கோரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இதன்மூலம் போளூர் தொகுதி, சேத்துப்பட்டு பகுதி உட்பட, திருவண்ணாமலை மாவட்டம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

முழுமையிலும் உள்ள தொழில்முனைவோர்களின் தொழில்மனைத் தேவை பூர்த்தி செய்யப்படும்.

56—

தொழிற்சாலை அமைத்தல்

வினா எண் 14240—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், இண்டூர் பகுதியில் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், இண்டூர் பகுதியில் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

57—

பள்ளிக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 189—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பாபநாசம் தொகுதி, கோவிந்தநாட்டுச்சேரி ஊராட்சி, பட்டுக்குடியில் உள்ள ஊராட்சி ஒன்றிய பள்ளியில் இடிந்துவிழும் நிலையில் உள்ள கட்டடங்களுக்குப் பதிலாக புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் ஊராட்சி ஒன்றியத்தில், உள்ள கோவிந்தநாட்டுச்சேரி ஊராட்சி, பட்டுக்குடியில் உள்ள

2022 அக்டோபர் 18]

ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடம் மிகவும் சிதிலமடைந்ததால், 11-1-2021 அன்று இடித்து அகற்றப்பட்டுள்ளது. தற்போது, இப்பள்ளி, அருகில் உள்ள சமுதாயக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேலும், இப்பள்ளியில் சுமார் 20 மாணவர்கள் மற்றும் 24 மாணவிகள், ஆக மொத்தம் 44 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். இப்பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில், மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (RCSIDS) முன்னுரிமை அடிப்படையில், நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

58—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 275—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், கீழாந்தூர் ஊராட்சி, பள்ளியாங்குப்பம் கிராமத்தில் புதிதாக 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், கீழாந்தூர் ஊராட்சி, பள்ளியாங்குப்பம் கிராமத்தில் புதிதாக 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணியினை செயல்படுத்த வரும் நிதியாண்டில் 15-வது மாநில நிதிக் குழு மானியத் திட்டத்தின்மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

[2022 அக்டோபர் 18

59—

சுற்றுச்சுவர் அமைத்தல்

வினா எண் 350—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, மேல்கவரப்பட்டு ஊராட்சியில் விளையாட்டு மைதானத்திற்கு சுற்றுச்சுவர் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம், மேல்கவரப்பட்டு ஊராட்சியில் விளையாட்டு மைதானத்திற்கு சுற்றுச்சுவர் அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் நிலுவையில் ஏதும் இல்லை.

60—

திறந்தவெளி கிணறு அமைத்தல்

வினா எண் 741—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, அன்னை சத்யா நகர் பகுதியில் திறந்தவெளி கிணறு அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

2022 அக்டோபர் 18]

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சி, அன்னை சத்யா நகர் பகுதியில் திறந்தவெளி கிணறு அமைக்க ரூ.23.00 இலட்சம் மதிப்பீடு ஆகிறது. இதற்கான தேவை உள்ளதால், தகுந்த நிதி ஆதாரம் கண்டறிந்து, இப்பணி மேற்கொள்ளப்படும்.

61—

தரைப்பாலம் அமைத்தல்

வினா எண் 742—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, அன்னை சத்யா நகர் பகுதியில் தரைப்பாலம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சியைச் சார்ந்த அன்னை சத்யா நகர் பகுதியில் தரைப்பாலம் அமைக்க ரூ.3.42 கோடி மதிப்பீடு ஆகிறது. தகுந்த நிதி ஆதாரம் கண்டறிந்தவுடன், பணி துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

62—

சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அமைத்தல்

வினா எண் 753—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, கஸ்பாபுரம், சாய்பாலாஜி நகரில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சி, கஸ்பாபுரம், சாய்பாலாஜி நகரில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அமைக்க ரூ.10.00 இலட்சம் மதிப்பீடு ஆகிறது. எதிர்வரும் காலங்களில் தகுந்த நிதி ஆதாரம் கண்டறிந்து, இப்பணியினை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

63—

சுற்றுச்சுவர் கட்டுதல்

வினா எண் 786—திரு. S.R. இராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சியைச் சேர்ந்த அல்லி குளத்தை சீர் செய்து சுற்றுச்சுவர் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென்

2022 அக்டோபர் 18]

ஊராட்சியைச் சேர்ந்த அல்லி குளத்தை சீர் செய்து, சுற்றுச்சுவர் அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

64—

குடிநீர் இணைப்புகள் வழங்குதல்

வினா எண் 799—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, மதுரப்பாக்கம் ஊராட்சியில் புதியதாக அமைந்துள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம், மதுரப்பாக்கம் ஊராட்சியில், புதியதாக அமைந்துள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்புகள் வரும் 2021-2022 ஆம் நிதியாண்டில் ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

65—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 826—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், துகிலி ஊராட்சி, நெசவாளர் குடியிருப்புப் பகுதியில் சிறிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், துகிலி ஊராட்சி, நெசவாளர் குடியிருப்பில் ஜல் ஜீவன் திட்டத்தில் 2021-2022 ஆம் நிதியாண்டில் சிறிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி (10,000 லிட்டர்) கட்டித் தரப்படும்.

66—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 839—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், கீழ்மந்தூர் ஊராட்சி, கயலூர் கிராமத்தில் புதிய சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கீழ்மந்தூர் ஊராட்சி, கயலூர் கிராமத்தில் 96 குடும்பங்கள் பயனடையும் வகையில், 1,200 மீட்டருக்கு தமிழக ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் நிதியாண்டில் ஓரடுக்கு தார்ச் சாலை ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் செய்து தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

67—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 849—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 அக்டோபர் 18]

(அ) திருவிடைமருதூர் தொகுதி, கீழசூரியமூலை ஊராட்சி, கீழசூரியமூலை 2-வது வார்டில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஒன்றியத்திற்குட்பட்ட கீழசூரியமூலை ஊராட்சி, கீழசூரியமூலை 2-வது வார்டில் உள்ள 150 குடும்பங்கள் பயன்பெறும்வகையில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் 15-வது நிதிக் குழு மானிய நிதி திட்டத்தில் (நிபந்தனை நிதி) 2021-2022 ஆம் நிதியாண்டில் பழுது நீக்கம் செய்யப்படும். எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர தேவை எழவில்லை.

68—

ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 857—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டத்தின்கீழ்

[2022 அக்டோபர் 18

ரூ.3.10 கோடி மதிப்பீட்டில் 2021-2022 ஆம் ஆண்டில் கட்டித் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

69—

ஏரியை தூர்வாருதல்

வினா எண் 861—திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில் உள்ள கொத்தந்தவாடி ஏரியை தூர்வார அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கொத்தந்தவாடி ஏரியினை ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் தூர்வார உத்தேசிக்கப்பட்டுள்ளது.

70—

திறந்தவெளி கிணறு அமைத்தல்

வினா எண் 881—திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், மதுராம்பட்டு ஊராட்சியில் குடிநீர் பற்றாக்குறையினை போக்குவதற்கு கரியந்தாங்கல் ஏரி மற்றும் குளத்தாங்கரை பகுதியில் திறந்தவெளி கிணறு அமைக்க அரசு முன்வருமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், மதுராம்பட்டு ஊராட்சியில் குடிநீர் பற்றாக்குறையினை போக்க திறந்தவெளிக் கிணறு அமைக்கப்படும்.

71—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 967—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், கர்ணாவூர் ஊராட்சி, அரவத்தூர் உளூர் வட்டத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், கர்ணாவூர் ஊராட்சி, அரவந்தூர் உளூரில் ஏற்கெனவே 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி நல்ல நிலையில் இயங்கி வருகிறது. மேலும், இக்குடியிருப்பு 2021-2022 ஆம் ஆண்டு ஜல் ஜீவன் திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ளதால், தேவையான குடிநீர் கிடைக்கும். எனவே, புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட வேண்டிய அவசியம் எழவில்லை.

72—

மழைநீர் வடிகால் வசதி செய்தல்

வினா எண் 971—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், நெடுவாக்கோட்டை ஊராட்சி, நெடுவாக்கோட்டையில் மழைநீர் வடிகால் வசதி செய்து தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், நெடுவாக்கோட்டை ஊராட்சியில் கீழத்தெருவில் மழைநீர் வடிகால் வசதி ஏற்படுத்திட சாதகமான இடவசதி அமைந்துள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு கீழத்தெருவில் மட்டுமே இப்பணியினை மேற்கொள்ள மதிப்பீடு செய்யப்பட்டதில், ரூ.26 இலட்சம் தேவைப்படும் எனவும், 500 மீ. நீளத்திற்கு வடிகால் வசதி வேண்டும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பணியினை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS) மூலம் 2021-2022 ஆம் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்றித் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

73—

சுகாதார வளாகம் கட்டுதல்

வினா எண் 974—முனைவர் T.R.B. ராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், மகாதேவப்பட்டினம் ஊராட்சி, செபஸ்தியார் கோவில் தெருவில் சுகாதார வளாகம் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், மகாதேவப்பட்டினம் ஊராட்சி, செபஸ்தியார் கோவில் தெருவில்

2022 அக்டோபர் 18]

60 குடும்பங்கள் வசிக்கின்றன. அனைத்து குடும்பங்களுக்கும் கழிவறை வசதி உள்ளது. எனவே, சுகாதார வளாகம் புதிதாக கட்ட அவசியம் இல்லை.

74—

பொது சுகாதார வளாகம் கட்டுதல்

வினா எண் 984—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியம், இராதாநரசிம்மபுரம் ஊராட்சி, இந்திரா நகரில் பொது சுகாதார வளாகம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராதாநரசிம்மபுரம் ஊராட்சி, இந்திரா நகரில் 25 குடும்பங்கள் வசித்து வருகின்றன. அனைத்து வீடுகளுக்கும் தனிநபர் கழிவறை கட்டப்பட்டுள்ளது. இப்பகுதியில் பொது சுகாதார வளாகம் கட்ட அவசியம் எழவில்லை. மேலும், பொது சுகாதார வளாகம் கட்ட போதிய இடவசதி இல்லை.

75—

குளத்தில் படித்துறை கட்டுதல்

வினா எண் 1008—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, கர்ணாவூர் ஊராட்சி, உளூர் வட்டம், அம்பட்டன் குளத்தில் படித்துறை கட்ட அரசு முன்வருமா?

[2022 அக்டோபர் 18

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், கர்ணாவூர் ஊராட்சி, உளூர் வட்டம், அம்பட்டன் குளத்தில் படித்துறை கட்ட தற்பொழுது குளத்தில் நீர் நிரம்பி உள்ளதால், வரும் நிதியாண்டில் பணி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

76—

பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டுதல்

வினா எண் 1060—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், செருமங்கலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், செருமங்கலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு 150 மீ. சுற்றுச்சுவர் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் 2021-2022 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

77—

குட்டையில் படித்துறை கட்டுதல்

வினா எண் 1067—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 அக்டோபர் 18]

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், மேலாளவந்தசேரி ஊராட்சி, அந்தோணியார் கோவில் தெரு, பூசாரி குட்டையில் படித்துறை கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் வட்டாரம், மேலாளவந்தசேரி ஊராட்சி, அந்தோணியார் கோவில் தெரு, பூசாரி குட்டையில் படித்துறை கட்ட 2021-2022 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

78—

பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுதல்

வினா எண் 1068—முனைவர் T.R.B. ராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், காரக்கோட்டையில் தரம் உயர்த்தப்பட்ட நடுநிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் வட்டாரம், காரக்கோட்டையில் தரம் உயர்த்தப்பட்ட நடுநிலைப் பள்ளிக்கு ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்ட 2021-2022 ஆம் ஆண்டு மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

79—

ஆற்றில் படித்துறை கட்டுதல்

வினா எண் 1071—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், பெரம்பூர் மடத்துரையில் கோரையாற்றில் படித்துறை கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் வட்டாரம், பெரம்பூர் மடத்துரையில் கோரையாற்றில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் படித்துறை கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

80—

தனி ஊராட்சியாக பிரித்தல்

வினா எண் 1404—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதி, சின்னசேலம் ஒன்றியம், எலவடி ஊராட்சியில் உள்ள பூசப்பாடி கிராமத்தை தனி ஊராட்சியாக பிரித்துத்தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

2022 அக்டோபர் 18]

கள்ளக்குறிச்சி தொகுதி, சின்னசேலம் ஒன்றியம், எலவடி ஊராட்சியில் உள்ள பூசப்பாடி கிராமத்தை தனி ஊராட்சியாக பிரிப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

81—

தொகுப்பு வீடுகளை சீரமைத்தல்

வினா எண் 1447—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஒன்றியம், நீலமங்கலம் ஊராட்சி, நரிக்குறவர் காலனியில் உள்ள தொகுப்பு வீடுகளை சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஒன்றியம், நீலமங்கலம் ஊராட்சியிலுள்ள 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு, மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள தொகுப்பு வீடுகளை பழுது நீக்கம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

82—

மழைநீர் கால்வாய் அமைத்தல்

வினா எண் 1484—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், வடமாம்பாக்கம் ஊராட்சி, நாகாலம்மன் கோயில் முதல் பொன்னியம்மன் கோயில் வரை மழைநீர் கால்வாய் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 அக்டோபர் 18

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், வடமாம்பாக்கம் ஊராட்சி, நாகாலம்மன் கோயில் முதல் பொன்னியம்மன் கோயில் வரை மழைநீர் கால்வாய் அமைக்கும் பணியினை செயல்படுத்த, வரும் 2021-2022 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் (MGNREGS) மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

83—

பள்ளிக்கு கட்டடம் கட்டுதல்

வினா எண் 1489—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், மேல்பாக்கம் ஊராட்சி, கும்மினிப்பேட்டை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், மேல்பாக்கம் ஊராட்சி, கும்மினிப்பேட்டை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 57 மாணவர்கள் மற்றும் 54 மாணவியர்கள் என மொத்தம் 101 மாணாக்கர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் ஏற்கெனவே இரண்டு கட்டடங்கள் உள்ளன. மேலும், வருங்காலங்களில் மாணவர்கள் எண்ணிக்கையின் அடிப்படையில், புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2022 அக்டோபர் 18]

84—

சிமெண்ட் சாலை அமைத்தல்

வினா எண் 1506—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், தண்டலம் ஊராட்சி, தண்டலம் பள்ளக் காலனி புதிய தெருவில் சிமெண்ட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், தண்டலம் ஊராட்சி, தண்டலம் பள்ளக் காலனி புதிய தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினை செயல்படுத்த வரும் 2021-2022 ஆம் ஆண்டு* MGNREGS *திட்டத்தின்மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.*

85—

ஆழ்துளை கிணறு அமைத்தல்

வினா எண் 1527—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பண்ருட்டி தொகுதி, மணப்பாக்கம் ஊராட்சி, ஆதி திராவிடர் காலனியில் ஆழ்துளை கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், மணப்பாக்கம் ஊராட்சி, ஆதி திராவிடர் காலனியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்க ரூ.6.00 இலட்சம் மதிப்பில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. தகுந்த நிதி ஆதாரம் கண்டறியப்பட்டு 2021-2022 ஆம் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் ஆழ்குழாய் கிணறு அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

86—

பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைத்தல்

வினா எண் 1569—திரு. இரா. அருள்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சேலம் ஒன்றியம், அய்யம்பெருமாம்பட்டி ஊராட்சி நடுநிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். சேலம் மாவட்டம், அய்யம்பெருமாம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS), பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (MPLADS), சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (MLACDS) மற்றும் ஊராட்சி ஒன்றிய பொது நிதி ஆகிய ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் சுமார் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைப்பதற்கு பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

87—

புதிய அலுவலகக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 1581—திரு. இரா. அருள்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2022 அக்டோபர் 18]

சேலம் மாவட்டம், சேலம் ஒன்றியம், தளவாய்பட்டி ஊராட்சிக்கு புதிய அலுவலகக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் மேற்கு தொகுதி, தளவாய்பட்டி ஊராட்சியில் ஏற்கெனவே உள்ள பழைய ஊராட்சி மன்ற கட்டடத்தை இடித்து அப்புறப்படுத்தி, புதிய கட்டடம் கட்ட சுமார் ரூ.22.50 இலட்சம் மதிப்பீட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ள பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

88—

உயர் கோபுர மின் விளக்கு ஏற்படுத்துதல்

வினா எண் 1996—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மேற்கு தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பாரதிநகர் மஞ்சுளாம்பள்ளம், டால்மியா போர்டில் உயர் கோபுர மின் விளக்கு ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், வெள்ளக்கல்பட்டி ஊராட்சி, பாரதிநகர், மஞ்சுளாம்பள்ளம், டால்மியா போர்டு ஆகிய பகுதிகளில் உயர் கோபுர மின்விளக்கு ரூ.26.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க சாத்தியக்கூறு உள்ளது. இப்பணியினை எதிர்வரும் ஆண்டுகளில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

89—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 2016—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் (மேற்கு) தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், கருக்கல்வாடி ஊராட்சி, காந்தி நகர் காலனியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் பைப்லைன் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் (மேற்கு) சட்டமன்றத் தொகுதி, கருக்கல்வாடி ஊராட்சி, காந்தி நகர் காலனியில் ஏற்கெனவே உள்ள 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மிகவும் பழுதடைந்து, பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இதனை அப்புறப்படுத்தி 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, பைப்லைன் அமைக்க மதிப்பீடு ரூ.10.00 இலட்சம் செலவாகும். இதனால் 200 குடும்பங்கள் பயன்பெறுவர். இப்பணியை 2021-2022 ஆம் ஆண்டு 15-வது நிதிக் குழு மானியத்தில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

90—

சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 2244—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, துருசுபட்டி முதல் கல்லணைக் கால்வாய் கரை வரை உள்ள சாலையை மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, பூதலூர் ஒன்றியம், பாளையப்பட்டி, வடக்கு ஊராட்சியில் துருசுப்பட்டி முதல் கல்லணைக் கால்வாய் கரை வரை உள்ள தார்ச் சாலை பழுதடைந்துள்ளது. இதன் மொத்த நீளம் 790 மீட்டர். இச்சாலையை 960 நபர்கள் பயன்படுத்தி வருகின்றனர். எதிர்வரும் நிதியாண்டில் ஊரக சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.18.40 இலட்சம் மதிப்பீட்டில் முன்னுரிமை அடிப்படையில் இச்சாலைப் பணி மேற்கொள்ளப்படும்.

91—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 2273—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், சோழன் மாளிகை ஊராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், சோழன் மாளிகை ஊராட்சியில் சுமார் 2,989 பேர் வசித்து வருகின்றனர். 2021-2022 ஆம் நிதியாண்டில் ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தரப்படும்.

[2022 அக்டோபர் 18

92—

தனித்தனி சுகாதார வளாகம் அமைத்தல்

வினா எண் 2296—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஓமலூர் ஒன்றியம், செம்மண்கூடல் ஊராட்சி, ஆதி திராவிடர் காலனி பகுதிக்கு புதிதாக ஆண் மற்றும் பெண்களுக்கு தனித் தனி சுகாதார வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சேலம் (மேற்கு) தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், செம்மண்கூடல் ஊராட்சி, ஆதி திராவிடர் காலனி பகுதிக்கு புதிதாக ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித் தனி சுகாதார வளாகம் அமைக்க போதிய இடவசதி இல்லாத காரணத்தால், இப்பணியை மேற்கொள்ள சாத்தியக்கூறு இல்லை.

93—

மண் சாலையை புதுப்பித்துத் தருதல்

வினா எண் 2349—டாக்டர் வை. முத்துராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, கறம்பக்குடி ஒன்றியம், கணக்கன்காடு ஊராட்சி, வெட்டன் விடுதியில் உள்ள அய்யனார் கோயிலுக்கு செல்லும் மண் சாலையை புதுப்பித்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், கணக்கன்காடு ஊராட்சி, வெட்டன் விடுதியில் உள்ள அய்யனார் கோயிலுக்கு செல்லும் சாலை சுமார் 500 மீட்டர் உள்ளதாகும். இம்மண் சாலை 2021-2022 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் ரூ.11.08 இலட்சம் மதிப்பீட்டில் WBM சாலையாக மாற்றித் தரப்படும்.

94—

சிறு பாலம் அமைத்தல்

வினா எண் 2621—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, கோரனப்பட்டு ஊராட்சி, போக்கியாநத்தம் வடக்கு காலனி தெருமுனையில் சிறு பாலம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, கோரனப்பட்டு ஊராட்சி, போக்கியாநத்தம் வடக்கு காலனி தெருமுனையில் சிறு பாலம் அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

95—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 2650—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2022 அக்டோபர் 18

நெய்வேலி தொகுதி, வடக்குத்து ஊராட்சி, கீழ்வடக்குத்து கிழக்குத் தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், நெய்வேலி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வடக்குத்து ஊராட்சி, கீழ்வடக்குத்து கிழக்குத் தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணியினை வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் 15-வது நிதிக் குழு மானியத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

96—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 2671—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மேற்கு தொகுதி, சாமிநாயக்கன்பட்டி ஊராட்சி, நாயக்கர் தெருவில் பெருமாள் கோயில் வட்டத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், சாமிநாயக்கன்பட்டி ஊராட்சி, நாயக்கர் தெருவில் பெருமாள் கோயில் வட்டம் பகுதியில் சுமார் 246 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இப்பகுதியில் ஏற்கெனவே 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன. இப்பகுதியில் சுமார் 976 நபர்கள்

2022 அக்டோபர் 18]

வசிக்கின்றனர். குடிநீர் பற்றாக்குறையாக உள்ளது. எனவே, இப்பகுதிக்கு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க சாத்தியக்கூறு உள்ளது. இதற்கு ரூ.13.00 இலட்சம் மதிப்பீடு ஆகும். 2021-2022 ஆம் ஆண்டு ஜல் ஜீவன் திட்டத்தின்மூலம் இப்பணி மேற்கொள்ளப்படும்.

97—

பள்ளிக்கு அடிப்படை வசதி ஏற்படுத்துதல்

வினா எண் 2733—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, குருவராஜப்பேட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு கழிப்பறை மற்றும் குடிநீர் வசதி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, குருவராஜப்பேட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு கழிப்பறை மற்றும் குடிநீர் வசதி ஆகியவற்றை ஊராட்சி ஒன்றிய பொது நிதி திட்டத்தின்மூலம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

98—

பேருந்து நிழற்குடை அமைத்தல்

வினா எண் 2735—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், இச்சிபுத்தூர் ஊராட்சி, இரட்டைக்குளம் சோதனை சாவடி அருகில் பேருந்து நிழற்குடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், இச்சிபுத்தூர் ஊராட்சி, இரட்டைக்குளம் சோதனை சாவடி அருகில் பேருந்து நிழற்குடை அமைக்கும் பணியினை செயல்படுத்த வரும் 2021-2022 ஆம் ஆண்டில் ஊராட்சி பொது நிதி திட்டத்தின்மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

99—

பேருந்து நிழற்குடை மற்றும் கருமகாரிய கூடம் அமைத்தல்

வினா எண் 2762—திரு. R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விருத்தாசலம் தொகுதி, மணக்கொல்லை கிராமத்தில் கீழ காலனி பகுதியில் பேருந்து நிழற்கூடமும், கருமகாரிய கூடமும் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மணக்கொல்லை ஊராட்சி, கீழ காலனியில் பேருந்து நிழற்கூட பணியை மத்திய நிதிக் குழு மானிய திட்டத்தின்கீழ் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது மற்றும் கருமகாரிய கூடம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2022 அக்டோபர் 18]

100—

பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டுதல்

வினா எண் 2809—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதியில் உள்ள தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் சுற்றுச்சுவர் இல்லாத பள்ளி கட்டடங்களுக்கு ஏதேனும் ஓர் அரசு நலத் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் முன்னுரிமை அடிப்படையில் சுற்றுச்சுவர் கட்டித்தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பட்டியல்-13

1—

சமுதாயக் கூடம் அமைத்தல்

வினா எண் 2895—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், காசிலிங்கபுரம் கிராமத்திற்கு சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், காசிலிங்கபுரம் கிராமத்திற்கு சமுதாயக் கூடம் கட்டுவதற்கு ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் கட்டித் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 2923—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், அக்காநாயக்கன்பட்டி ஊராட்சியில் ஆழ்துளைக் கிணறு மின் மோட்டார் 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் ஒன்றியம், அக்காநாயக்கன்பட்டி ஊராட்சியில் ஏற்கெனவே இரண்டு 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன. இதில் ஒரு 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்துவிட்டது. எனவே, ஒரு 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தந்தால் போதுமானது. புதிய 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டில் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் கட்டித்தர உத்தேசிக்கப்படுகிறது.

3—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 2934—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், தென்னம்பட்டி ஊராட்சி, V.P. தாழையூத்து கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு மின் மோட்டார் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் ஒன்றியம், தென்னம்பட்டி V.P. தாழையூத்து ஊராட்சியின் மொத்த மக்கள்தொகை 477. இங்கு ஏற்கெனவே உள்ள 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி தண்ணீர் வழங்க பற்றாத நிலை உள்ளது. எனவே, புதிய 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டில் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் கட்டித்தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4—

சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 2943—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, வலங்கைமான் வட்டம், கருப்பூர்-நத்தம்-விச்சூர் சாலையை மேம்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், கீழவிடையல் ஊராட்சி, கருப்பூர்-நத்தம்-விச்சூர் 1,825 *மீட்டர் நீளம் உள்ள சாலையை தமிழ்நாடு ஊரக சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்* 2020-2021 *ஆம் ஆண்டில் ரூ.*45.37 *இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

5—

ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

வினா எண் 3503—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், பாடியநல்லூர் ஊராட்சி, 4-*வது வார்டு, சோத்துப்பாக்கம் காலனியில் ஆழ்துளைக் கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?*

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், பாடியநல்லூர் ஊராட்சி, 4-*வது வார்டு, சோத்துப்பாக்கம் காலனியில் ஆழ்துளைக் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஊராட்சி ஒன்றிய பொது நிதியில்* 2020-2021 *ஆம் நிதியாண்டில் ரூ.*5.00 *இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு, பொது மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்துத் தர தேவை எழவில்லை.*

2022 அக்டோபர் 18]

6—

சுகாதார வளாகம் கட்டுதல்

வினா எண் 3534—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, திட்டை ஊராட்சி, திட்டை குரு கோயில் அருகே சுகாதார வளாகம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, தஞ்சாவூர் வட்டாரம், திட்டை ஊராட்சியில் திட்டை குரு கோயில் அருகில் தூய்மை இந்தியா இயக்க திட்டத்தின்கீழ் சமுதாய சுகாதார வளாகம் ரூ.5.25 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணி முடிவுறும் நிலையில் உள்ளது.

7—

சுகாதார வளாகம் கட்டுதல்

வினா எண் 3536—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, ராஜேந்திரம் ஊராட்சி, ஆற்காடு பொன்னியம்மன் கோயில் தெரு அருகே சுகாதார வளாகம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, ராஜேந்திரம் ஊராட்சி, ஆற்காடு பொன்னியம்மன் கோயில் தெருவில் அனைத்து வீடுகளிலும் தனி நபர் கழிப்பறைகள் அமைக்கப்பட்டு, பயன்பாட்டில் இருந்து வருகின்றன. எனவே, தனியாக ஒரு சுகாதார வளாகம் அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.

8—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 3560—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, மகாராஜபுரம் ஊராட்சியில் சமுதாயக் கூடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, மகாராஜபுரம் ஊராட்சியில் சமுதாயக் கூடம் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் அரசினால் செயல்படுத்தப்படும் ஏதேனும் ஒரு திட்டத்தில் இப்பணியினை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

9—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 3937—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2022 அக்டோபர் 18]

(அ) மாதவரம் தொகுதி, புழல் ஒன்றியம், தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சியில் புதிய சமுதாயக் கூடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புழல் ஊராட்சி, தீர்த்தக்கிரியம்பட்டு கிராமத்தின் தற்போதைய மக்கள்தொகை 8,461. இப்பகுதியில் உள்ள சமுதாயக் கூடம் நல்ல நிலையில் மக்கள் பயன்பாட்டில் உள்ளது. எனவே, இங்கு புதிய சமுதாயக் கூடம் கட்டித் தரும் தேவை எழவில்லை.

10—

தெருவிளக்கு வசதி செய்தல்

வினா எண் 4036—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், புதுநகர், கள்ளப்புலியூர் கிராமத்தில் தெரு விளக்கு வசதி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மயிலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வல்லம் ஊராட்சி ஒன்றியம், கள்ளப்புலியூர் ஊராட்சியினை சேர்ந்த பொதுமக்கள் உடையாந்தாங்கல் ஊராட்சி எல்லையான புதுநகரில் விளைநிலங்களில் வீடு கட்டி

வசித்து வருகின்றனர். இங்கு 14 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இக்குடியிருப்பிற்கு சென்று வர முறையான சாலை வசதி இல்லை. சாலையினை அமைத்திடவும் உரிய வழிவகை இல்லை. இடையிடையே பட்டா நிலங்கள் உள்ளன. அங்கு வசிப்பவர்களின் இடைவிடாத கோரிக்கையினால் முக்கியமான மூன்று இடங்களில் 3 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. வீடுகள் அவர்களின் நிலங்களை ஒட்டி தனித்தனியே கட்டப்பட்டுள்ளன. எனவே, இப்போதைய நிலையில் 3 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. உடையாந்தாங்கல் ஊராட்சிக்கு எதிர்வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் கூடுதலாக தெரு விளக்குகள் அமைக்க தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11—

குடிநீர் வசதி செய்தல்

வினா எண் 4038—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், புதுநகர், கள்ளப்புலியூர் கிராமத்தில் குடிநீர் வசதி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மயிலம் தொகுதி, வல்லம் ஊராட்சி ஒன்றியம், கள்ளப்புலியூர் ஊராட்சியினைச் சேர்ந்த பொதுமக்கள் உடையாந்தாங்கல் ஊராட்சி எல்லையான புதுநகரில் விளைநிலங்களில் வீடு கட்டி வசித்து வருகின்றனர். இங்கு 14 குடும்பங்களைச் சேர்ந்த 60 நபர்கள் வசித்து வருகின்றனர். இங்கு 1 சிறு மின்விசை இறைப்பான்மூலம் மட்டுமே குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. இங்கு 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2022 அக்டோபர் 18]

இதற்குப் புதியதாக ஒரு போர்வெல், மின்மோட்டார் மற்றும் குடிநீர்க் குழாய் அமைத்து நீரேற்றினால் இப்பகுதி மக்களுக்கு போதுமானதாக இருக்கும்.

எனவே, 2021-2022 ஆம் ஆண்டு மாவட்ட ஊராட்சி பொது நிதியிலிருந்து ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய போர்வெல் மின் மோட்டார் மற்றும் குடிநீர்க் குழாய் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

12—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 4051—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், உடையாந்தாங்கல் கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மயிலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வல்லம் ஊராட்சி ஒன்றியம், உடையாந்தாங்கல் ஊராட்சியில் சமுதாயக் கூடம் கட்டுவதற்கு தோராய மதிப்பீடு ரூ.50.00 இலட்சம் ஆகும். இவ்வூராட்சிக்கு அருகில் வளத்தி என்ற ஊர் அமைந்துள்ளது. உடையாந்தாங்கல் ஊராட்சியை சார்ந்த பொதுமக்கள் பெரும்பாலும் வளத்தியில் அமைந்துள்ள திருமண மண்டபங்களை தங்களது இல்லத் திருவிழாவிற்கு பயன்படுத்தி வருகிறார்கள். வளத்தி நன்கு வளர்ச்சி அடைந்த ஊர் என்பதாலும், எளிதில் அடைய நல்ல போக்குவரத்து வசதியுள்ள ஊர் என்பதாலும், அருகிலுள்ள கிராம மக்கள் அதனை பயன்படுத்தி வருவதால் உடனடியாக உடையாந்தாங்கலில் சமுதாயக் கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

13—

பயணிகள் நிழற்குடை அமைத்தல்

வினா எண் 4052—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கீழ்பாப்பாம்பாடி கிராமத்தில் பயணிகள் நிழற்குடை அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *விழுப்புரம் மாவட்டம், மயிலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வல்லம் ஊராட்சி ஒன்றியம், கீழ்பாப்பாம்பாடி ஊராட்சியில் கீழ்பாப்பாம்பாடி கிராமத்திற்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பயணிகள் நிழற்குடை 2021-2022 ஆம் ஆண்டிலேயே ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.*

14—

சிறு பாலம் அமைத்தல்

வினா எண் 4053—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கண்டமநல்லூர் கிராமத்தில் சிறு பாலம் அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

2022 அக்டோபர் 18]

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மயிலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வல்லம் ஊராட்சி ஒன்றியம், கண்டமநல்லூர் ஊராட்சியில் 1,037 பொதுமக்கள் வசித்து வருகின்றனர். கண்டமநல்லூர்-பூங்குணம் சாலையில் சிறு பாலம் அமைத்தால், அந்த ஊரில் உள்ள பொதுமக்கள் அருகாமையில் உள்ள கிராமத்திற்குச் சென்று வர பயனுள்ளதாக அமையும்.

எனவே, 2021-2022 ஆம் நிதியாண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் மேற்காணும் சாலையின் குறுக்கே 15 மீட்டர் அளவுள்ள சிறு பாலம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

15—

குடிநீர் வசதி செய்தல்

வினா எண் 4054—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், பேராம்பட்டு கிராமத்தில் குடிநீர் வசதி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மயிலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வல்லம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சேர்ந்த தென்புத்தூர் ஊராட்சிக்குட்பட்ட பேராம்பட்டு குக்கிராமத்தில் 500 பொதுமக்கள் வசித்து வருகின்றனர். இந்த கிராமத்தில் திறந்தவெளிக் கிணறு மற்றும் ஆழ்துளைக் குழாய் கிணற்றிலிருந்து 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீர் ஏற்றப்பட்டு, தினசரி 60 LPCD என்ற வீதத்தில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பேராம்பட்டு கிராமத்தினைச் சேர்ந்த பொதுமக்களுக்கு போதுமான அளவில் தினசரி குடிநீர் தடையின்றி விநியோகம்

செய்யப்பட்டு வருவதால், தற்போதைய நிலையில் பேராம்பட்டு கிராமத்திற்கு கூடுதலாக குடிநீர் வசதி செய்து தர வேண்டிய அவசியம் எழவில்லை.

16—

சிறு மின்விசை பம்பு அமைத்தல்

வினா எண் 4056—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், களையூர் கிராமம், இருளர் காலனி பகுதியில் குடிநீருக்காக சிறு மின்விசை பம்பு அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மயிலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வல்லம் ஊராட்சி ஒன்றியம், களையூர் இருளர் காலனியில் 40 குடும்பங்களில் 150 மக்கள் வசித்து வருகின்றனர். இங்கு 2 ஆழ்துளைக் குழாய் கிணறுகளிலிருந்து 3 சிறு மின் விசை இறைப்பான்கள்மூலம் தினசரி 3 முறை நீர் நிரப்பப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தினசரி 60 LPCD என்ற விகிதத்தில் மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இங்கு சிறு மின்விசை இறைப்பான் அமைப்பதைக் காட்டிலும், 1 புதிய ஆழ்துளைக் குழாய் கிணறு அமைத்து ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் நீரேற்றி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டால், அங்கு வசிக்கும் மக்கள் 150 பேர் பயன்பெறுவர். எனவே, வல்லம் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் ஆழ்துளைக் கிணறு, மின் மோட்டார், குடிநீர் குழாய் அமைக்க நடப்பு நிதியாண்டிலேயே (2021-2022) நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2022 அக்டோபர் 18]

17—

ஓடையைச் சீரமைத்தல்

வினா எண் 4735—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், கரும்பனூர் கிராமம், மாரியம்மன் கோயில் அருகில் உள்ள ஓடையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், ஆண்டிப்பட்டி ஊராட்சி, கரும்பனூர் கிராமம், மாரியம்மன் கோயில் அருகில் உள்ள ஓடையை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் (MGNREGS) கீழ் 2021-2022 ஆம் ஆண்டு ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

18—

சுற்றுச்சுவர் அமைத்தல்

வினா எண் 4743—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், ஆண்டிப்பட்டி ஊராட்சி, ஆண்டிப்பட்டியில் விளையாட்டு மைதானத்தைச் சுற்றி சுற்றுச்சுவர் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், ஆண்டிப்பட்டி ஊராட்சி, ஆண்டிப்பட்டியில் விளையாட்டு மைதானத்திற்குச் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி 2021-2022 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் (MGNREGS) ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

19—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 4749—திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், முத்து கிருஷ்ணபேரி கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், மேல கிருஷ்ணபேரி ஊராட்சி, முத்துகிருஷ்ணபேரி கிராமத்தில் இரண்டு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், நான்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், ஒரு GLR தொட்டி மற்றும் 14 சிறிய GLR தொட்டிகள் உள்ளன. இந்தக் குடிநீர்த் தொட்டிகள்மூலம் தினந்தோறும் 2,30,000 லிட்டர் குடிநீர் சீராக வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திடும் தேவை எழவில்லை.

20—

சமுதாயக் கூடத்தில் சமையலறை அமைத்தல்

வினா எண் 4836—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், சிவலார்குளம் கிராமத்தில் சமுதாயக் கூடத்தில் சமையலறை அமைத்துத் தர அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *தென்காசி மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், சிவலார்குளம் கிராமத்தில்* 135 *வீடுகள் மற்றும்* 375 *பேர் மக்கள் தொகை உள்ளனர். சிவலார்குளம் கிராமத்தில் உள்ள சமுதாயக் கூடத்தில் சமையலறைக் கட்டடம் நல்ல நிலையில் உள்ளது. எனவே, புதிதாக சமையலறைக் கட்டடம் அமைத்துத் தர அவசியம் எழவில்லை.*

21—

தடுப்புச் சுவர் அமைத்தல்

வினா எண் 5699—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பெண்ணாகரம் தொகுதி, வட்டுவனஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட கோடுப்பட்டி கிராமத்தில் அர்ச்சுனன் வீடு முதல் தனபால் வீடு வரை செல்லும் தார்ச் சாலையின் இடது புறமாக பாடிவால் அமைத்துத் தர அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வட்டுவனஅள்ளி ஊராட்சி, கோடுப்பட்டி கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் 2020-2021 ஆம் நிதியாண்டில் அர்ச்சுனன் வீடு முதல் அபிமன்னன் வீடு வரை தார்ச் சாலை அமைக்கும் பணி நடைபெற்று முடிக்கப்பட்டுள்ளது. இப்பணி செயல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அர்ச்சுனன் வீடு முதல் தனபால் வீடு வரை உள்ள பகுதியில் சாலையின் இடபுறம் உள்ள பகுதி பட்டா நிலத்தில் வருவதால், தடுப்புச் சுவர் அமைக்க இயலாது.

22—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 5701—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, வட்டுவனஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட நாகனம்பட்டி கொடிகம்பம் முதல் பாசிபள்ளம் உப்பலாபுரம் வரை உள்ள மண் சாலையை தார்ச் சாலையாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வட்டுவனஅள்ளி ஊராட்சி, நாகனம்பட்டி கொடிகம்பம் முதல் பாசிபள்ளம் உப்பலாபுரம் வரை உள்ள மண் சாலையை, தார்ச் சாலையாக அமைக்கும் பணி எதிர்வரும் நிதியாண்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2022 அக்டோபர் 18]

23—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 5702—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, வட்டுவனஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட சக்கிலிநத்தம் ரோடு முதல் கீழ்சக்கிலிநத்தம் வரையுள்ள மண் சாலையை தார்ச் சாலையாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், வட்டுவனஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட சக்கிலிநத்தம் ரோடு முதல் கீழ்சக்கிலிநத்தம் வரை தார்ச் சாலை அமைக்க எதிர்வரும் நிதியாண்டில் பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

24—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 5705—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, வட்டுவனஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட எலுமல்மந்தை முதல் நாராயணன் கொட்டாய் வரையுள்ள மண் சாலையை தார்ச் சாலையாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வட்டுவனஅள்ளி ஊராட்சியில் எலுமல்மந்தை முதல் நாராயணன் கொட்டாய்வரை தார்ச் சாலை அமைக்க எதிர்வரும் நிதியாண்டில் 15-வது நிதிக் குழு மானிய திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

25—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 5710—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பருவதனஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட எட்டிக்குட்டை முதல் தாசம்பட்டி கூட்டு ரோடு வரையுள்ள மண் சாலையை தார்ச் சாலையாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பருவதனஅள்ளி ஊராட்சி, எட்டிக்குட்டை முதல் தாசம்பட்டி கூட்டுரோடு வரையுள்ள பகுதியில் தார்ச் சாலை அமைக்கும் பணி 700 மீ. 14-வது மத்திய நிதிக் குழு மானிய திட்டத்தின்கீழ் (2019-2020) ரூ.13,35,000/- மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2022 அக்டோபர் 18]

26—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 5713—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பருவதனஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட காமராஜ் நகர் கிராமத்தில் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பருவதனஅள்ளி ஊராட்சி, காமராஜ் நகர் கிராமத்தின் மக்கள்தொகை 1,200. *இங்கு போதுமான அளவு குடிநீர் மினி டேங்குகள்மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க தேவை எழவில்லை.*

27—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 5741—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சிக்குட்பட்ட மடம் கிராமத்தில் மேல்தெரு மாரியம்மன் கோயில் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், கூத்தப்பாடி ஊராட்சிக்குட்பட்ட மடம் கிராமத்தில், மேல்தெரு மாரியம்மன் கோயில் பகுதியில் ஏற்கெனவே 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது. 3 மினி டேங்குகள் உள்ளன. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 450 குடும்பங்களுக்கு போதுமான அளவு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

28—

சிமென்ட் சாலை அமைத்தல்

வினா எண் 5744—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, கே.குள்ளாத்திரம்பட்டி மேல்தெருவில் சிமென்ட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சியில் கே.குள்ளாத்திரம்பட்டி மேல்தெருவில் 25 குடும்பங்கள் உள்ளன. இப்பகுதிக்கு சிமென்ட் சாலை அமைக்க எதிர்வரும் நிதியாண்டில் (2022-2023) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்படுகிறது.

2022 அக்டோபர் 18]

29—

உயர் மின் கோபுர விளக்கு அமைத்தல்

வினா எண் 5764—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, அஞ்சேஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட ஆதனூர் பஸ் நிறுத்தத்தில் ஒரு உயர் மின் கோபுர விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், அஞ்சேஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட ஆதனூர் பேருந்து நிலையத்தில் ஏற்கெனவே ஒன்றிய பொது நிதி திட்டத்தின் (2019-2020)கீழ் உயர் மின் கோபுர விளக்கு அமைக்கப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது.

30—

குடிநீர் வசதி ஏற்படுத்துதல்

வினா எண் 5781—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, கலப்பம்பாடி ஊராட்சிக்குட்பட்ட புதுக்காடு கிராமத்தில் குடிநீர் வசதி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2022 அக்டோபர் 18*

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கலப்பம்பாடி ஊராட்சி, புதுக்காடு கிராமத்தில் ஏற்கெனவே உள்ள 10,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் போதுமான அளவு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

31—

கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

வினா எண் 5782—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, கலப்பம்பாடி ஊராட்சிக்குட்பட்ட கொப்பளூர் கிராமம், மேச்சேரி மெயின் ரோட்டில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கலப்பம்பாடி ஊராட்சி, கொப்பளூர் கிராமம், மேச்சேரி மெயின் ரோட்டில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்கும் பணியினை ரூ.6 இலட்சம் மதிப்பீட்டில் 15-வது நிதிக் குழு மானிய திட்டத்தில் 2022-2023-ல் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2022 அக்டோபர் 18]

32—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 5784—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, செங்கனூர் ஊராட்சி, நாகனூர் மாரியம்மன் கோயில் பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, செங்கனூர் ஊராட்சிக்குட்பட்ட நாகனூர் மாரியம்மன் கோயில் பகுதியில் சுமார் 60 குடும்பங்கள் உள்ளன. ஏற்கெனவே உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலமும் அப்பகுதி மக்களுக்கு சீராக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அதோடு இரண்டு ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் மினி டேங்குமூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, போதிய அளவு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதால், இப்பகுதியில் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க தற்போது தேவை எழவில்லை.

33—

மழைநீர் வடிகால்வாய் அமைத்தல்

வினா எண் 5913—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, மானடிக்குப்பம் முதல் வல்லம் ஏரிக்கு மழைநீர் வடிகால்வாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, வல்லம் ஊராட்சியில் மானடிக்குப்பம் கிராமத்திலிருந்து வல்லம் ஏரிக்கு 200 மீ. நீளமுள்ள மண் வடிகால் வாய்க்கால் உள்ளது. 200 மீ. நீளமுள்ள மண் வடிகால் வாய்க்காலில் சில இடங்களில் அங்குள்ள குடியிருப்புகளுக்கு எதிரே மணல் தடுப்பு உள்ளதை அகற்றிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2021-2022 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் வாய்க்கால் சீரமைக்கப்படும்.

34—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 5916—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, வாணதிராயபுரம் ஊராட்சி, தென்குத்து அய்யனார் கோயில் அருகில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வாணதிராயபுரம் ஊராட்சி, தென்குத்து அய்யனார்கோயில் அருகில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ரூ.13.00 இலட்சம் மதிப்பீட்டில் 15-வது நிதிக் குழு மானியத் திட்டத்தின்கீழ் வரும் நிதியாண்டில் பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2022 அக்டோபர் 18]

35—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 8159—திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி வட்டம், இடையாத்தூர் பஞ்சாயத்து, நீர்விளங்குளம் செல்லும் கிராம இணைப்புச் சாலையை தார்ச் சாலையாக மேம்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி ஊராட்சி ஒன்றியம், இடையாத்தூர் ஊராட்சி, நீர்விளங்குளம் செல்லும் கிராம இணைப்புச் சாலையின் மொத்த நீளம் 1.050 கி.மீ. ஆகும். அதில் 0/0-0/420 கி.மீ. ஓரடுக்கு மெட்டல் தளம் மற்றும் மீதமுள்ள 0.630 கி.மீ. நீளம் மண் தளமாகும்.

எனவே, இச்சாலையினை முழுவதும் தார்ச் சாலையாக அமைப்பதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.25.00 இலட்சம் ஆகும். இப்பணியினை தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2022-2023-ன்கீழ் முன்னுரிமை அடிப்படையில் எடுத்து செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

36—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 8160—திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி வட்டம், காரக்கோட்டை ஊராட்சி, வினைதீர்த்த கோபாலபுரம் (கண்டப்பிள்ளைவயல்) கிராமத்திற்கு செல்லும் சாலையை தார்ச் சாலையாக மேம்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி ஊராட்சி ஒன்றியம், காரக்கோட்டை ஊராட்சி, வினைதீர்த்த கோபாலபுரம் (கண்டப்பிள்ளைவயல்) கிராமத்திற்குச் செல்லும் சாலையானது, 1.650 கி.மீ. நீளம் உடையது. மேலும், அதில் 1.00 கி.மீ. சாலையானது ஒரடுக்கு மெட்டல் சாலை மற்றும் மீதமுள்ள 0.650 கி.மீ. சாலையானது, மண் சாலையாகும். இச்சாலையினை முழுவதும் தார்ச் சாலையாக மேம்படுத்த உத்தேச மதிப்பீடு ரூ.48 இலட்சம் ஆகும். இச்சாலையை தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2022-2023-ன்கீழ் முன்னுரிமை அடிப்படையில் எடுத்து செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

37—

ஏரி தூர்வாருதல்

வினா எண் 8167—திரு. தி. ராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் வட்டம், நாட்டாணிபுரசக்குடி பஞ்சாயத்து, பாதிரக்குடி ஏரியை தூர்வாரி ஆழப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

2022 அக்டோபர் 18]

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், நாட்டாணிபுரசக்குடி ஊராட்சி, பாதிரக்குடி ஏரியானது, ஊராட்சி ஒன்றிய சிறுபாசன குளங்கள் பதிவேட்டில் இடம்பெறவில்லை. ஊராட்சிமூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, பாதிரக்குடி ஏந்தல் கண்மாய் மேம்பாடு செய்தல், தடுப்புச் சுவர் மடை சீரமைப்புப் பணி ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் 2018-2019 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் நடைபெற்று வருகிறது. மேலும், தூர்வாருதல் மற்றும் ஆழப்படுத்தும் பணி ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டு ரூ.2 இலட்சம் மதிப்பீட்டில் முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

38—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 8244—திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, கப்பாங்கோட்டூர் ஊராட்சியில் ஆழ்துளைக் கிணறு நீர்குழாய், 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, கப்பாங்கோட்டூர் ஊராட்சியின் மொத்த மக்கள் தொகை 894. குக்கிராமங்களின் எண்ணிக்கை 4. மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 288. மொத்த தெருக்களின் எண்ணிக்கை 9. கப்பாங்கோட்டூர் ஊராட்சியில் ஏற்கெனவே 5 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் [(காலனி மற்றும் புதிய காலனி-30,000 லிட்டர் கொள்ளளவு) (கப்பாங்கோட்டூர் கிராமம்,

அருந்ததியர்பாளையம் மற்றும் தர்காஸ் பகுதி-10,000 லிட்டர் கொள்ளளவு)] உள்ளன. இந்த நீர்த்தேக்கத் தொட்டிகள்மூலம் தற்போது (தனிநபர் ஒருவருக்கு 55 லிட்டர் என்ற கணக்கில்) ஊராட்சி மக்களுக்கு போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இப்பகுதியில் தற்போது மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட வேண்டிய தேவை எழவில்லை.

39—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 8249—திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, ஓ.எம்.மங்கலம் ஊராட்சி பகுதியில் ஆழ்துளைக் கிணறு நீர்க்குழாய், 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, ஓ.எம்.மங்கலம் ஊராட்சியின் மொத்த மக்கள் தொகை 1,162. குக்கிராமங்களின் எண்ணிக்கை 2. மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 465. மொத்த தெருக்களின் எண்ணிக்கை 7. ஓ.எம். மங்கலம் ஊராட்சியில் ஏற்கெனவே 3 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் (ஓ.எம்.மங்கலம் கிராமம் மற்றும் காலனி-30,000 லிட்டர் கொள்ளளவு) (ஓ.எம்.மங்கலம் கிராமத்தின் மெயின் ரோடு-60,000 லிட்டர் கொள்ளளவு) உள்ளன. இந்த நீர்த்தேக்கத் தொட்டிகள்மூலம் தற்போது (தனிநபர் ஒருவருக்கு 55 லிட்டர் என்ற கணக்கில்) ஊராட்சி மக்களுக்கு போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இப்பகுதியில் தற்போது மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட வேண்டிய தேவை எழவில்லை.

2022 அக்டோபர் 18]

40—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 8399—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், தெற்கு கரும்பனூர் கிராமத்தில் சமுதாயக் கூடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், ஆண்டிப்பட்டி கிராம ஊராட்சி, தெற்கு கரும்பனூர் கிராமத்தில் சுமார் 450 குடும்பங்கள் உள்ளபோதும், இக்கிராம ஊராட்சியில் சமுதாயக் கூடம் கட்ட போதுமான அரசு நிலம் இல்லாத நிலையில் சமுதாயக் கூடம் கட்ட வழிவகை இல்லை.

41—

சமுதாயக் கூடம் அமைத்தல்

வினா எண் 8401—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், இராமநாதபுரம் கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 அக்டோபர் 18

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், இராமநாதபுரம் கிராமத்தில் சுமார் 75 குடியிருப்புகள் உள்ளன. எனினும், அக்கிராமத்தில் அரசுக்குச் சொந்தமான இடம் இல்லாத காரணத்தினால், சமுதாயக் கூடம் அமைக்க வழிவகை இல்லை.

42—

குடிநீர் வசதிகள் செய்தல்

வினா எண் 8545—திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, குணகரம்பாக்கம், எட்டிகுட்டிமேடு கிராமத்திற்கு குடிநீர் வசதிகள் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, குணகரம்பாக்கம் ஊராட்சியின் மொத்த மக்கள் தொகை 1,952. குக்கிராமங்களின் எண்ணிக்கை 5. மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 488. மொத்த தெருக்களின் எண்ணிக்கை 11. குணகரம்பாக்கம் ஊராட்சியில் எட்டிகுட்டிமேடு கிராமத்தில் ஜல் ஜீவன் மிஷன் மத்திய அரசு திட்டத்தின்கீழ் 2020-2021 ஆம் நிதியாண்டில் மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் அவர்களின் செயல்முறைகள் கடித ந.க.எண் 1826/2020/அ9, நாள் 13-7-2020-ன்படி, புதிய ஆழ்துளைக் கிணறு, மேல்நிலை

2022 அக்டோபர் 18]

நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் தனிநபர் குடிநீர்க் குழாய் இணைப்பு பணிகள் செய்திட ரூ.5,60,000/- மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், அப்பகுதியிலுள்ள பழுதான குடிநீர் குழாய் இணைப்புகள் பழுதுநீக்கம் செய்யப்பட்டு, ஊராட்சிக்கு நல்ல முறையில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

43—

சிமெண்ட் சாலை அமைத்தல்

வினா எண் 8549—திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, குணகரம்பாக்கம் ஊராட்சி, எட்டிகுட்டிமேடு கிராமத்தில் பெருமாள், விநாயகர் கோயில் தெருக்களில் சிமெண்ட் சாலை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, குணகரம்பாக்கம் ஊராட்சியின் மொத்த மக்கள் தொகை 1,952. குக்கிராமங்களின் எண்ணிக்கை 5. மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 488. மொத்த தெருக்களின் எண்ணிக்கை 11. குணகரம்பாக்கம் ஊராட்சியில் எட்டிகுட்டிமேடு பகுதியில் 75 வீடுகள் உள்ளன. எட்டிகுட்டிமேடு கிராமத்தில் பெருமாள் கோயில் சாலை (90 மீ.), விநாயகர் கோயில் சாலை (110 மீ.) உதவிப் பொறியாளர்மூலம் அளவீடு செய்யப்பட்டு, ரூ.10.00 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 2022-2023 ஆம் நிதியாண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2022 அக்டோபர் 18

44—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 8558—திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, குணகரம்பாக்கம் ஊராட்சியில் ஆதி திராவிட குடியிருப்புப் பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, குணகரம்பாக்கம் ஊராட்சியின் மொத்த மக்கள் தொகை 1,952. குக்கிராமங்களின் எண்ணிக்கை 5. மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 488. மொத்த தெருக்களின் எண்ணிக்கை 11. இதில் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியின் மொத்த மக்கள் தொகை 340. இப்பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மக்கள் பயன்பாட்டில் உள்ளது. இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் (தனிநபர் ஒருவருக்கு 55 லிட்டர் என்ற கணக்கில்) அங்கு வசிக்கும் மக்களுக்கு தற்போது போதுமான அளவில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மேற்குறிப்பிட்டுள்ள பகுதியில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட வேண்டிய தேவை எழவில்லை.

45—

சிமெண்ட் சாலை அமைத்தல்

வினா எண் 8560—திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 அக்டோபர் 18]

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, செல்லம்பட்டிடை ஊராட்சியிலுள்ள அனைத்து தெருக்களிலும் சிமெண்ட் சாலை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, செல்லம்பட்டிடை ஊராட்சியின் மொத்த மக்கள் தொகை 1,977. குக்கிராமங்களின் எண்ணிக்கை 5. மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 442. மொத்த தெருக்களின் எண்ணிக்கை 17. செல்லம்பட்டிடை ஊராட்சியிலுள்ள சகாயமாதா கோயில் தெரு (150 மீ) மற்றும் காலனி, பெருமாள் கோயில் தெரு 420 மீ. நீளத்தில் சிமெண்ட் சாலையினை ரூ.28.50 இலட்சம் மதிப்பீட்டிலும், மேலும், எலுமியான்கோட்டூர் பெருமாள் கோயில் தெரு மற்றும் மேட்டுத் தெருவில் 170 மீ. நீளத்தில் ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டிலும் சிமெண்ட் சாலை அமைத்திட நேரடி கள ஆய்வு செய்யப்பட்டு, மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு 2022-2023 ஆம் நிதியாண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழும், மீதமுள்ள சாலைகள் எதிர்வரும் நிதியாண்டுகளிலும் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

46—

சிமெண்ட் சாலை அமைத்தல்

வினா எண் 8569—திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, கோட்டூர் ஊராட்சியில் பழுதடைந்துள்ள அனைத்து சாலைகளையும் சிமெண்ட் சாலையாக மாற்றித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம், கோட்டூர் ஊராட்சியில் கலைஞர் நகர் குறுக்கு தெரு (170 மீ.) ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டிலும், கோட்டூர் காலனி குளக்கரை சாலை (270 மீ.) ரூ.13.50 இலட்சம் மதிப்பீட்டிலும், காலனி சுடுகாடு சாலை (150 மீ.) ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டிலும் 2022-2023 ஆம் நிதியாண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் (Labour Budget) திட்டத்திலும், செவிட்டுபாளையம் சாலை (330 மீ.) ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டிலும், வன்னியர் தெரு, யாதவர் தெரு மற்றும் பெருமாள் கோயில் தெரு (320 மீ.) சாலைகள் ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டிலும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலும் 2022-2023 ஆம் நிதியாண்டில் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

47—

சிமெண்ட் சாலை அமைத்தல்

வினா எண் 8580—திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, சிங்கிலிபாடி ஊராட்சியிலுள்ள அனைத்து தெருக்களையும் புதிய சிமெண்ட் சாலையாக மாற்றித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, சிங்கிலிபாடி ஊராட்சியின் மொத்த மக்கள் தொகை 921. குக்கிராமங்களின் எண்ணிக்கை 4. மொத்த குடும்பங்களின்

2022 அக்டோபர் 18]

எண்ணிக்கை 200. மொத்த தெருக்களின் எண்ணிக்கை 15. இதில் 6 தெருக்களுக்கு சாலை மறுசீரமைக்கப்பட வேண்டியுள்ளது. இச்சாலைகள் 2022-2023 ஆம் நிதியாண்டில் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் பணிகள் துவங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

48—

பள்ளிக் கட்டடத்தைப் புதுப்பித்தல்

வினா எண் 8605—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், லைட்ஹவுஸ் குப்பம் ஊராட்சி, திருமலைநகர் கிராம ஆரம்பப் பள்ளி கட்டடத்தைப் புதுப்பித்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், லைட்ஹவுஸ் குப்பம் ஊராட்சி, திருமலைநகர் பகுதியில் உள்ள பழுதடைந்த ஆரம்பப் பள்ளி கட்டடம் தற்போது இடிக்கப்பட்டு, கார்ப்பரேட் சமூக பொறுப்பு நிதியின்மூலம் ரூ.18.90 இலட்சம் மதிப்பீட்டில் வரும் நிதியாண்டுகளில் புதிய கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

49—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 8619—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், லைட்வுஹஸ் குப்பம் ஊராட்சி, எல்.எச். குப்பத்தில் கலங்கரை விளக்கத்திற்கு தார்ச் சாலைகள் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், லைட்ஹவுஸ் குப்பம் ஊராட்சி, எல்.எச். குப்பத்தில் கலங்கரை விளக்கத்திற்குச் செல்லும் சாலையானது, முழுவதும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், 200 மீட்டர் நீள சாலையினை ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மாநில நிதிக் குழு மானியத்தில் முன்னுரிமை அடிப்படையில் வரும் நிதியாண்டுகளில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

50—

பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்டுதல்

வினா எண் 8646—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, பொன்னேரி வடக்கு ஊராட்சி ஒன்றியம், நடுநிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, பொன்னேரி பேரூராட்சியில் உள்ள பொன்னேரி வடக்கு மீஞ்சூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மூன்று வகுப்பறைகள் கொண்ட கட்டடங்களில் 138 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். பயிலும் மாணவர்களுக்கு இட நெருக்கடி காரணமாக ரூ.18.90 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம் அமைக்க நிதி ஒதுக்கீடு மற்றும் இலக்கீட்டின்படி, முன்னுரிமை அடிப்படையில் உரிய திட்டத்தின்கீழ் இப்பணியினை தொடர்ந்து வரும் நிதியாண்டுகளில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

51—

பள்ளிக்குக் கட்டடம்

வினா எண் 8656—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்ட சமூகப் பொறுப்பு உட்கட்டமைப்பு நிதியின்கீழ் ரூ.17.50 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

52—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 8718—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, ஒ.ஜி.அள்ளி பஞ்சாயத்திலுள்ள சிட்லகாரம்பட்டி பகுதியில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒகேனக்கல் குடிநீருடன் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஒ.ஜி.அள்ளி ஊராட்சி, சிட்லகாரம்பட்டி கிராமத்தில் 450 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இப்பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் தேவைக்காக ஏற்கெனவே 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, 8 ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் 1 மினி டேங்க்மூலம் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் மற்றும் ஊராட்சியின் நீர் ஆதாரங்களிலிருந்து பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனினும், தற்போது, கூடுதலாக புதிய 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினை ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் 15-வது நிதிக் குழு மானியத் திட்டத்தில் அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

53—

ஆழ்துளைக் கிணறு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 8727—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை ஊராட்சி, சாமத்தான் கிராமத்தில் மாரியம்மன் கோயில் அருகில் புதிய ஆழ்துளைக் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சாமத்தான் கிராமத்தில் சுமார் 10 வீடுகள் உள்ளன.

2022 அக்டோபர் 18]

இங்கு 1 மினி டேங்க்மூலம் முறையாக குடிநீர் போதுமான அளவு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் ஆழ்துளைக் கிணறு கட்டித் தரும் தேவை எழவில்லை.

54—

ஆழ்துளைக் கிணறு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 8730—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை ஊராட்சி, தென்றல் நகர் பகுதியில் புதிய ஆழ்துளைக் கிணற்றுடன்கூடிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை ஊராட்சி, தென்றல் நகர் பகுதியில் சுமார் 100 வீடுகள் உள்ளன. இங்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் போதுமான அளவு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய ஆழ்துளைக் கிணறு கட்டித் தரும் தேவை எழவில்லை.

55—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 8749—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, மஞ்சாரஅள்ளி ஊராட்சி, சிக்கனூர்காடு, கரடிகுண்டுபுதூர், கருங்கல்லூர், கோட்டம்பள்ளம் ஆகிய கிராமங்களுக்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி,

1. ஏரியூர் ஊராட்சி ஒன்றியத்தில் மஞ்சாரஅள்ளி ஊராட்சி, சிக்கனூர்காடு பகுதியில் சுமார் 40 வீடுகள் உள்ளன. இங்கு 2 கைப்பம்புகள், 1 மினி டேங்க் உள்ளன. போதிய அளவு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

2. கரடிகுண்டுபுதூர் பகுதியில் சுமார் 15 வீடுகள் உள்ளன. இங்கு 1 கைப்பம்பு உள்ளது. போதிய அளவு குடிநீர் தினமும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

3. கருங்கல்லூர் பகுதியில் சுமார் 15 வீடுகள் உள்ளன. இங்கு 1 கைப்பம்பு உள்ளது. போதிய அளவு குடிநீர் தினமும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

4. கோட்டம்பள்ளம் கிராமத்தில் 50 வீடுகள் உள்ளன. இங்கு 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் முறையாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.

56—

இணைப்புச் சாலை அமைத்தல்

வினா எண் 8756—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 அக்டோபர் 18]

(அ) பெண்ணாகரம் தொகுதி, பருவதனஅள்ளி ஊராட்சி, எரங்காடு காட்டுக்கொட்டாய் அரசு தொடக்கப் பள்ளி முதல் தாசம்பட்டி மெயின் ரோடு வரை புதிய இணைப்புச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பருவதனஅள்ளி ஊராட்சி, எரங்காடு காட்டுக்கொட்டாய் அரசு தொடக்கப் பள்ளி முதல் தாசம்பட்டி மெயின் ரோடு வரை சுமார் 3 கிலோ மீட்டர் தூரம் புதிய இணைப்புச் சாலை வரும் நிதியாண்டில் பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின்கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

57—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 8760—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பருவதனஅள்ளி ஊராட்சி, தருமபுரி மெயின் ரோடு, முல்லை நகர் பகுதியில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒகேனக்கல் குடிநீருடன் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பருவதனஅள்ளி

ஊராட்சி, முல்லை நகர் பகுதியில் 25 குடும்பங்களுக்கு போதுமான அளவு குடிநீர் சிறு மின்விசை பம்புமூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

58—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 8761—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பருவதனஅள்ளி ஊராட்சி, புதூர் கிராமத்தில் போலீஸ்காரன் கொட்டாய் பகுதியில் ஒகேனக்கல் குடிநீருடன் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பருவதனஅள்ளி ஊராட்சி, புதூர் கிராமத்தில் போலீஸ்காரன் கொட்டாய் பகுதியில் குறைந்த அளவு குடும்பங்கள் மட்டும் ஆங்காங்கே வசித்து வருகின்றன. அதனால், அப்பகுதியில் போதுமான அளவு குடிநீர் மினி டேங்க் மற்றும் பைப்லைன்மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ் தனிநபர் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் தேவை எழவில்லை.

59—

கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

வினா எண் 8764—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 அக்டோபர் 18]

(அ) பெண்ணாகரம் தொகுதி, பருவதனஅள்ளி ஊராட்சி, நூலஅள்ளி கிராமத்தில் மெயின் வீதியில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பருவதனஅள்ளி ஊராட்சி, நூலஅள்ளி கிராமத்தில் மெயின் வீதியில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்கும் பணி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (2019-2020) பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

60—

நிழற்கூடம் அமைத்தல்

வினா எண் 8765—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பருவதனஅள்ளி ஊராட்சி, அரசு மருத்துவமனை பஸ் ஸ்டாப் பகுதியில் பயணியர் நிழற்கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பருவதனஅள்ளி ஊராட்சி, அரசு மருத்துவமனை அருகில் ஏற்கெனவே இருந்த பஸ் நிறுத்த நிழற்கூடம் நெடுஞ்சாலைத் துறையினரால் அகற்றப்பட்டுவிட்டது. இந்த இடம் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமானது என்பதால் நிழற்கூடம் அமைக்க இயலாது.

[2022 அக்டோபர் 18

61—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 8773—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பத்ரள்ளி ஊராட்சி, காட்டு மோட்டூர் கிராமத்தில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், ஏரியூர் ஊராட்சி ஒன்றியத்தில் பத்ரள்ளி ஊராட்சி, காட்டு மோட்டூர் கிராமத்தில் சுமார் 140 வீடுகள் உள்ளன. இங்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் தேவை எழவில்லை.

62—

உயர் கோபுர மின் விளக்கு அமைத்தல்

வினா எண் 8781—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, மஞ்சநாயக்கனஅள்ளி ஊராட்சி, தின்னூர் கிராமம், மஞ்சநாயக்கனஅள்ளி பிரிவு ரோட்டில் உயர் கோபுர மின் விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மஞ்சநாயக்கனஅள்ளி ஊராட்சி, தின்னூர் கிராமத்தில் 2018-2019 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் ஓர் உயர் கோபுர மின் விளக்கும், ஊராட்சி நிதியின்கீழ் 2019-2020 ஆம் ஆண்டில் மற்றோர் உயர் கோபுர மின் விளக்கும் அமைக்கப்பட்டுள்ளன. எனவே, தற்போது இந்தப் பகுதிக்கு உயர் கோபுர மின் விளக்கு தேவையில்லை.

63—

குடிநீர் பைப்லைன் அமைத்தல்

வினா எண் 8793—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, மாதேஅள்ளி ஊராட்சி, ஆண்டாரஅள்ளி கிராமத்தில் சின்னதம்பி கொட்டாய் பகுதிக்கு குடிநீர் பைப்லைன் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மாதேஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட ஆண்டாரஅள்ளி கிராமத்தில் சின்னதம்பி கொட்டாய் பகுதியில் ஒரே ஒரு குடும்பம் மட்டும் உள்ளது. இந்தக் குடும்பத்திற்கு குடிநீர் பைப்லைன் 150 மீட்டர் தொலைவிற்கு அமைக்கக் கோரும் இடம் தனியார் பட்டா நிலமாக உள்ளது. எனவே, சின்னதம்பி கொட்டாய் பகுதிக்கு தற்போது பைப்லைன் அமைக்க இயலாத நிலை உள்ளது.

64—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 8804—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, புதூர் கிராமத்தில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், ஏரியூர் ஊராட்சி ஒன்றியம், நாகமரை ஊராட்சி, புதூர் கிராமத்தில் சுமார் 30 வீடுகளும், 120 மக்கள்தொகையும் உள்ளது. இங்கு 2 கைப்பம்புகள் மற்றும் 1,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மினி டேங்க்மூலம் குடிநீர் தேவையான அளவுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் எழவில்லை.

65—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 8807—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, கோடிஅள்ளி ஊராட்சி, காந்தி நகர் முதல் மாரியம்மன் கொட்டாய் வரை உள்ள மண் சாலையை தார்ச் சாலையாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கோடிஅள்ளி ஊராட்சி, காந்தி நகர் முதல் மாரியம்மன் கொட்டாய் வரை உள்ள மண் சாலையை, வரும் நிதியாண்டில் ஏதாவது ஒரு திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் தார்ச் சாலையாகத் தரமுயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

66—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 8811—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, கோடிஅள்ளி ஊராட்சி, மந்தைமேடு கிராமத்தில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், மந்தைமேடு கிராமத்தில் 70 குடும்பங்கள் உள்ளன. 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பயன்பாட்டில் உள்ளது. 1 மினி டேங்க் உள்ளது. போதிய நீர் ஆதாரம் உள்ளது. எனவே, மந்தைமேடு கிராமத்தில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[*2022 அக்டோபர் 18*

67—

சிமென்ட் சாலை, கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

வினா எண் 8815—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, கோடிஅள்ளி ஊராட்சி, ஐக்கம்பட்டி காலனி மெயின் வீதியில் சிமென்ட் சாலை மற்றும் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கோடிஅள்ளி ஊராட்சி, ஐக்கம்பட்டி காலனியில் ரூ.3 இலட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர்க் கால்வாய் மற்றும் ரூ.2 இலட்சம் மதிப்பீட்டில் சிமென்ட் கான்கிரீட் சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

68—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 8836—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, வட்டுவனஅள்ளி ஊராட்சி, பி.கோடுப்பட்டி ஊராட்சி மன்ற அலுவலகம் முதல் சின்னாறு வரை உள்ள மண் சாலையை தார்ச் சாலையாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, வட்டுவனஅள்ளி ஊராட்சி, பி.கோடுப்பட்டி ஊராட்சி மன்ற அலுவலகம் முதல் சின்னாறு வரை 5 குடும்பங்கள் உள்ளன. இங்கு 600 மீட்டர் சாலையாக பயன்பாட்டில் உள்ள பகுதி, தனியர் பட்டாதாரர்கள் நிலத்தில் உள்ளது. எனவே, இச்சாலையைத் தரமுயர்த்த இயலாத நிலை உள்ளது.

69—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைப் புதுப்பித்தல்

வினா எண் 8851—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, கெண்டயனஅள்ளி ஊராட்சி, கே.புதூர் கிராமம், ஊஞ்சமரத்து கொட்டாய் பகுதியில் அமைந்துள்ள பழுதடைந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், ஏரியூர் ஊராட்சி ஒன்றியம், கெண்டயனஅள்ளி ஊராட்சி, கே.புதூர் கிராமம், ஊஞ்சமரத்து கொட்டாய் பகுதியில் 80 மக்கள் 16 குடும்பங்களில் ஆங்காங்கே வசித்து வருகின்றனர். இங்கு 3 கைப்பம்புகள் நல்ல நிலையில் உள்ளன. இங்குள்ள பழுதடைந்த 10,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினை அகற்றி, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏதேனும் ஒரு திட்டத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

70—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 8868—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, ஒட்டனூர் கிராமத்தில் பொதியன் கொட்டாய் பகுதியில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், ஏரியூர் ஊராட்சி ஒன்றியம், நாகமரை ஊராட்சி, பொதியன் கொட்டாய் பகுதியில் சுமார் 10 வீடுகள் (36 மக்கள்தொகை) ஆங்காங்கே உள்ளன. 1 மினி டேங்க் மற்றும் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் ஊராட்சி மற்றும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் முறையாக, தேவையான அளவுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

71—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 8870—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, மணியகாரன் கொட்டாய், பெரியார் நகர் பகுதியில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், ஏரியூர் ஊராட்சி ஒன்றியம், நாகமரை ஊராட்சி, மணியகாரன் கொட்டாய் மற்றும் பெரியார் நகர் பகுதிகளில் சுமார் 75 வீடுகளில் 375 மக்கள் வசிக்கின்றனர். இங்கு 1,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 2 மினி டேங்குகள் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின்மூலம் குடிநீர் தேவையான அளவு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் இல்லை.

72—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 8874—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, புதூர் கிராமத்தில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், ஏரியூர் ஊராட்சி ஒன்றியம், நாகமரை ஊராட்சி, புதூர் கிராமத்தில் சுமார் 30 வீடுகளில் 120 மக்கள் வசித்து வருகின்றனர். இங்கு இரண்டு கைப்பம்புகள் மற்றும் 1,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மினி டேங்க்மூலம் குடிநீர் தேவையான அளவுக்கு நாள்தோறும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் எழவில்லை.

73—

நிழற்கூடம் அமைத்தல்

வினா எண் 8894—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, பெண்ணாகரம்—ஒகேனக்கல் பிரிவு சாலையில் (பைபாஸ்) பயணியர் நிழற்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கூத்தப்பாடி ஊராட்சி, ஒகேனக்கல் பிரிவு சாலையையொட்டி ஏரியூர் செல்லும் சாலையில் பயணியர் நிழற்கூடம் உள்ளது. எனவே, தற்போது இந்தப் பகுதிக்கு பயணியர் நிழற்கூடம் கட்ட வேண்டிய அவசியம் இல்லை.

74—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 8918—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, காமராஜ்பேட்டை கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி, ஒகேனக்கல் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சுஞ்சல்நத்தம் ஊராட்சியைச் சேர்ந்த காமராஜ்பேட்டை கிராமத்தில் 300 வீடுகள் உள்ளன. இங்கு 4 கைப்பம்புகள், 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஆகியன உள்ளன. இக்கிராமத்தில் மேற்கண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்மூலம் போதுமான அளவு ஒகேனக்கல் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

75—

குடிநீர் வசதி செய்தல்

வினா எண் 8924—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, தொண்ணகுட்டஅள்ளி ஊராட்சி, செட்டியப்பன் கொட்டாய் கிராமத்தில் மணிக்கொட்டாய் பகுதிக்கு குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, தொண்ணகுட்டஅள்ளி ஊராட்சி, செட்டியப்பன் கொட்டாய் கிராமத்தில் மணிக்கொட்டாய் பகுதியில் 2 வீடுகள் மட்டுமே உள்ளன. மேலும், 200 மீட்டர் தூரத்தில் ஆழ்துளைக் கிணறு உள்ளது. இங்கு போதுமான அளவு குடிநீர் வசதி உள்ளது.

[2022 அக்டோபர் 18

76—

பள்ளிக் கட்டடம்

வினா எண் 9149—திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், பனப்பாக்கம் ஊராட்சி, பனப்பாக்கம் கிராமத்தில் நடுநிலைப் பள்ளிக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், பனப்பாக்கம் ஊராட்சி, பனப்பாக்கம் கிராமத்தில் உள்ள மீஞ்சூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 61 மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். ஒரு தலைமையாசிரியர் மற்றும் 3 உதவி ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள். 1959 ஆம் ஆண்டு கட்டப்பட்ட 2 ஓட்டுக் கட்டடங்கள் பழுதடைந்ததால், அக்கட்டடங்கள் இடிக்கப்பட்டுவிட்டன. இப்பள்ளிக்கு புதியதாக 2 வகுப்பறையுடன்கூடிய கட்டடம் ரூ.18.90 இலட்சம் மதிப்பீட்டில் உரிய திட்டத்தின்கீழ் வரும் நிதியாண்டுகளில் கட்டித்தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

77—

குப்பை எரியூட்டும் மையம் அமைத்தல்

வினா எண் 9511—திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், நாவலூர், படூர், தையூர் மற்றும் மாம்பாக்கம் உள்ளிட்ட ஊராட்சிகளில் குப்பை எரியூட்டும் மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூய்மை பாரத இயக்கம், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் நாவலூர், படூர், தையூர் மற்றும் மாம்பாக்கம் உள்ளிட்ட கிராம ஊராட்சிகளில் தூய்மைக் காவலர்கள் மற்றும் துப்புரவுப் பணியாளர்கள்மூலம் அனைத்து வீடுகளிலும் சேகரமாகும் குப்பைகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளாக தரம் பிரித்து, உரமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. குப்பை எரியூட்டு மையம் ஊராட்சியில் நடைமுறையில் இல்லை.

78—

சமுதாயக்கூடம் கட்டுதல்

வினா எண் 10611—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், சீமாபுரம் ஊராட்சியில் சமுதாயக்கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சீமாபுரம் ஊராட்சியில் சுமார் 273 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இப்பகுதிக்கு 3 கி.மீ. தொலைவில் 400 அடி சாலையின் அருகில் பெரியமுல்லை ஊராட்சியில் ஏற்கெனவே சமுதாயக்கூடம் அமைந்துள்ள நிலையில், சீமாவரம் ஊராட்சிக்கு புதிய சமுதாயக்கூடம் அமைக்க அவசியம் எழவில்லை.

79—

சமுதாயக்கூடம் கட்டுதல்

வினா எண் 10628—திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், ஜெகநாதபுரம் ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், ஜெகநாதபுரம் ஊராட்சியில் சுமார் 247 குடும்பங்கள் வசித்து வருகின்றன. ஜெகநாதபுரம் ஊராட்சியிலிருந்து 4 கி.மீ. தொலைவில் அழிஞ்சிவாக்கம் ஊராட்சியில் இருளிப்பட்டு கிராமத்தில் சமுதாயக்கூடம் பயன்பாட்டில் உள்ள காரணத்தினால், ஜெகநாதபுரம் ஊராட்சிக்கு புதிய சமுதாயக்கூடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

80—

சமுதாயக்கூடம் கட்டுதல்

வினா எண் 10654—திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், மாபுஸ்கான்பேட்டை ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், மாபுஸ்கான்பேட்டை 630 மக்கள்தொகை கொண்ட ஊராட்சிப் பகுதியாகும். இப்பகுதி மக்கள் 4 கி.மீ. தூரத்தில் உள்ள ஞாயிறு ஊராட்சியின் சமுதாயக்கூடத்தை பயன்படுத்தி வருகின்றனர். எனவே, சோழவரம் ஒன்றியம், மாபுஸ்கான்பேட்டையில் சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

81—

பாதாள சாக்கடை அமைத்தல்

வினா எண் 10851—திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லாவரம் தொகுதி, பொழிச்சலூர் ஊராட்சி பகுதிக்கு பல்லாவரம் பாதாள சாக்கடைத் திட்டத்துடன் இணைத்து கொண்டு வரும் திட்டத்தை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி, புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பொழிச்சலூர் ஊராட்சியில் பாதாள சாக்கடை (UGSS) அமைக்கும் திட்டம் ஏதும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பரிசீலனையில் தற்போது இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[2022 அக்டோபர் 18

82—

சமுதாயக்கூடம் கட்டுதல்

வினா எண் 10880—திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, ஜவளகிரி ஊராட்சி, ஜவளகிரி கிராமத்தில் சமுதாயக்கூடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதிக்குட்பட்ட ஜவளகிரி ஊராட்சி, ஜவளகிரி கிராமத்தில் 2012-2013 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாயக்கூடம் கட்டப்பட்டு, நல்ல முறையில் பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது. எனவே, தற்போதைய நிலையில் புதியதாக சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

83—

பாலம் கட்டுதல்

வினா எண் 10928—திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், வடபாதிமங்கலம் ஊராட்சி, உச்சிவாடி வடபாதிமங்கலம் பள்ளிக்குச் செல்லும் பாலத்தை பெரிய பாலமாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருவாரூர் தொகுதி, வடபாதிமங்கலம் ஊராட்சி, உச்சிவாடி நடைபாதை பாலம் தற்போது புனரமைப்பு செய்யப்பட்டு, பராமரிப்பில் உள்ளது. 300 மீட்டர் தொலைவில் 6.50 மீட்டர் அகலம் கொண்ட பெரிய பாலம் அமைக்கப்பட்டுள்ளது. அந்தப் பாலத்தின் வழியாக பள்ளிக்கு மாணவ, மாணவிகள் செல்லலாம். ஆகையால், பெரிய பாலம் அமைக்க தேவை எழவில்லை.

84—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 10937—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், வடபாதிமங்கலம் ஊராட்சி, கிளியனூரில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருவாரூர் தொகுதி, வடபாதிமங்கலம் ஊராட்சி, கிளியனூர் கிராமத்தில் 1,059 நபர்கள் வசித்து வருகின்றனர். இக்குக்கிராமத்தில் ஏற்கெனவே அமைக்கப்பட்ட 3 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் கூடுதல் கொள்ளளவு 1,00,000 லிட்டராக உள்ளது. இந்நிலையில், 1,059 நபர்களுக்கு தலா 55 லிட்டர் வீதம், ஒரு நாளைக்கு 58,245 லிட்டர் தண்ணீர் தேவையுள்ளது. போதுமான அளவில் பொதுமக்களுக்கு

TRUTH ALONE TRIUMPHS

குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, கிளியனூர் கிராமத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.

85—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 10938—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், வடபாதிமங்கலம் ஊராட்சி, பூசங்குடியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருவாரூர் சட்டமன்றத் தொகுதி, வடபாதிமங்கலம் ஊராட்சி, பூசங்குடி கிராமத்தில் 410 நபர்கள் வசித்து வருகின்றனர். ஒரு நபருக்கு நாளொன்றுக்கு 55 லிட்டர் வீதம் 22,550 லிட்டர் தண்ணீர் வழங்கப்பட வேண்டும். இக்குக்கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் பொதுமக்களுக்கு போதுமான அளவில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, பூசங்குடி கிராமத்தில் புதியதாக 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.

86—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 10941—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 அக்டோபர் 18]

(அ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், வடபாதிமங்கலம் ஊராட்சி, உச்சிவாடியில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருவாரூர் சட்டமன்றத் தொகுதி, வடபாதிமங்கலம் ஊராட்சி, உச்சிவாடி கிராமத்தில் 1,125 நபர்கள் வசிக்கின்றனர். இக்குக்கிராமத்தில் ஏற்கெனவே அமைக்கப்பட்ட 4 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் கூடுதல் கொள்ளளவு 60,000 லிட்டராக உள்ளது. இந்நிலையில், 1,125 நபர்களுக்கு தலா 55 லிட்டர் வீதம், ஒரு நாளைக்கு 61,875 லிட்டர் குடிநீர் தேவையுள்ளது. இருமுறை தண்ணீர் நிரப்பப்பட்டு, போதுமான அளவில் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, உச்சிவாடி கிராமத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய தேவை இல்லை.

87—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 10947—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், வேளுக்குடி ஊராட்சி, கோம்பூரில் 50,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருவாரூர் சட்டமன்றத் தொகுதி, வேளுக்குடி ஊராட்சி, கோம்பூரில் சுமார் 600 பேர் உள்ளனர். அவர்களுக்கு நாளொன்றுக்கு 600x55=33,000 லிட்டர் மட்டுமே குடிநீர் தேவைப்படும். அக்கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் இருமுறை நீர் ஏற்றி, பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் பற்றாக்குறை இல்லாமல் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, 20,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட வேண்டிய அவசியம் இல்லை.

88—

பாலம் அமைத்தல்

வினா எண் 10967—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், அரிச்சந்திரபுரம் ஊராட்சி, பெரியகொத்தூர் நடைபாலத்தை வண்டிப் பாலமாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், அரிச்சந்திரபுரம் ஊராட்சி, பெரியகொத்தூர் நடைபாலம் அருகில் 400 மீட்டர் தொலைவில் பாலம் உள்ளது. ஆகையால், பெரியகொத்தூர் நடைபாலத்தை வண்டிப் பாலமாக மாற்றுவதற்கு அவசியம் எழவில்லை.

2022 அக்டோபர் 18]

89—

பள்ளிக்குக் கட்டடம்

வினா எண் 10989—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், புள்ளமங்கலம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருவாரூர் தொகுதி, புள்ளமங்கலம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியின் மொத்த மாணவர்கள் எண்ணிக்கை 70 ஆகும். தற்போதுள்ள பள்ளிக் கட்டடத்தில் பெரிய அளவில் பழுது ஏதும் இல்லை. சிறிய பழுதுகள் ஏதேனும் ஓர் அரசுத் திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் வரும் நிதியாண்டில் (2022-2023) மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

90—

பள்ளிக்குக் கட்டடம்

வினா எண் 10992—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், ஓவர்சேரி ஊராட்சி, வேற்குடி தொடக்கப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 அக்டோபர் 18

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், ஓவர்சேரி ஊராட்சி, வேற்குடி தொடக்கப் பள்ளியில் 32 மாணவ, மாணவிகள் கல்வி பயில்கிறார்கள். மாணவர்களின் வருகைக்கேற்ப போதுமான கட்டட வசதி உள்ளதால், புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

91—

பள்ளிக் கட்டடம்

வினா எண் 11006—திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், திருராமேஸ்வரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், திருராமேஸ்வரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மொத்தம் 106 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் இரண்டு வகுப்பறை கட்டடம் ஒன்றும், ஒரு வகுப்பறை கட்டடம் நான்கும் உள்ளன. மாணவர்களின் வருகைக்கேற்ப போதுமான கட்டட வசதி உள்ளது. எனவே, மேற்படி பள்ளிக்கு புதியதாக கூடுதல் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

92—

பள்ளிக் கட்டடம்

வினா எண் 11019—திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், கீழமணலி ஊராட்சி, கீழமணலி தொடக்கப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், கீழமணலி ஊராட்சியில் அமைந்துள்ள தொடக்கப் பள்ளியில் 47 மாணவ, மாணவியர் பயின்று வருகிறார்கள். மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப, 1 கான்கிரீட் கட்டடம் மற்றும் 1 ஓட்டுக் கட்டடம் என மொத்தம் 2 வகுப்பறை கட்டடங்கள் நல்ல நிலையில் உள்ளன. எனவே, தற்போது புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை. இருப்பினும், வரும் காலங்களில் மாணவர்களின் எண்ணிக்கை உயரும்பட்சத்தில், பள்ளிக் கல்வித் துறையின் இசைவுடன் மேற்படி பள்ளிக்கு புதிய கட்டடம் உரிய அரசுத் திட்டத்தின்கீழ் கட்டித் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

93—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 11021—திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், சித்தனக்குடி ஊராட்சி, வடபாதி கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருவாரூர் சட்டமன்றத் தொகுதி, சித்தனகுடி ஊராட்சி, வடபாதி கிராமத்தில் 356 பேர் வசித்து வருகின்றனர். ஒரு நபருக்கு 55 லிட்டர் வீதம் நாளொன்றுக்கு 19,580 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. தற்போது 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மிகவும் பழுதான நிலையில் உள்ளதால், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் பாதி கொள்ளளவு கொண்டு தண்ணீர் நிரப்பப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியானது மிகவும் பழுதான நிலையில் உள்ளதால், இதனை இடித்து அப்புறப்படுத்தி தமிழ்நாடு கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

94—

பாலம் அமைத்தல்

வினா எண் 11027—திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்வேளூர் தொகுதி, நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம், ஆலங்குடி ஊராட்சியில் 'மங்களமடையான்' ஆற்றில் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தொகுதி, ஆலங்குடி ஊராட்சியில் மங்களமடையான் ஆற்றில் பாலம் அமைக்கும் பணிக்கு ரூ.36.50 இலட்சம் மதிப்பீட்டில் 2021-2022 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் துவங்கப்பட்டுள்ளது.

2022 அக்டோபர் 18]

95—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 11033—திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்வேளூர் தொகுதி, தெற்குபனையூர் ஊராட்சியில் முப்பத்திக்கோட்டகம் கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றியம், தெற்குபனையூர் ஊராட்சி முப்பத்திக் கோட்டகம் குக்கிராமத்தில் 129 குடும்பங்களைச் சேர்ந்த 471 மக்கள் வசித்து வருகின்றனர். தற்போது இக்குக்கிராமத்திற்கு கீழவல்ல விநாயக கோட்ட கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் நேரடியாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், முப்பத்திக்கோட்டகம் குக்கிராமத்தில் 'ஜல் ஜீவன்' திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு பரிசீலனையில் உள்ளது.

96—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 11036—திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்வேளூர் தொகுதி, வெண்மணி ஊராட்சி, கீழவெண்மணி கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றியம், வெண்மணி ஊராட்சியின் மொத்த மக்கள்தொகை 2,296 ஆகும். இவ்வூராட்சியில் மைலாங்குடி, நாணக்குடி மற்றும் கீழவெண்மணி, கீழக்காவலக்குடி ஆகிய குக்கிராமங்களில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்மூலம் கீழவல்ல விநாயக கோட்ட குடிநீர்த் திட்டத்தின்கீழ், குடிநீர் நேரிடையாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 'ஜல் ஜீவன்' திட்டத்தின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் அமைக்க பரிசீலனையில் உள்ளது.

97—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 11037—திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்வேளூர் தொகுதி, கொத்தங்குடி ஊராட்சி, அய்யூர் கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தொகுதி, தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம், கொத்தங்குடி ஊராட்சி, அய்யூர் கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் மோட்டார் அறை ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் 15-வது நிதிக் குழு மானியத்தில் 2020-2021 ஆம் ஆண்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, பணி முடியும் தருவாயில் உள்ளது.

98—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 11041—திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்வேளூர் தொகுதி, ஆதமங்கலம் ஊராட்சியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றியம், ஆதமங்கலம் ஊராட்சியின் மொத்த மக்கள்தொகை 3,273 ஆகும். இவ்வூராட்சியில் உள்ள அனைத்து குக்கிராமங்களுக்கும் கீழவல்ல விநாயக கோட்ட குடிநீர்த் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் நேரிடையாக குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்கண்ட 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணி 2022-2023 ஆம் ஆண்டு 'ஜல் ஜீவன்' திட்டத்தின்கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

99—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 11049—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், பாலவாடி ஊராட்சி, பட்டாளம்மன் கோயில் அருகில் புதிய ஆழ்துளை குழாய் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2022 அக்டோபர் 18

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், பாலவாடி ஊராட்சி, பட்டாளம்மன் கோயில் பகுதியில் 3 முதல் 5 வீடுகள் மட்டுமே உள்ளன. 1,000 லிட்டர் மினி டேங்க்மூலம் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் தட்டுப்பாடின்றி வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அவசியம் எழவில்லை.

100—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 11050—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், பாலவாடி ஊராட்சி, வெங்கடாசலம் வெற்றிலைக்காரன் கொட்டாயில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், பாலவாடி ஊராட்சி, வெங்கடாசலம் வெற்றிலைக்காரன் கொட்டாயில் சுமார் 45 குடும்பங்களில் 180 மக்கள் வசித்து வருகின்றனர். இம்மக்களுக்கு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

2022 அக்டோபர் 18]

பட்டியல்-14

1—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 11071—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, மருதஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட சின்னூர் கிராமத்தில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கூக்குட்ட மருதஅள்ளி ஊராட்சி, சின்னூர் கிராமத்தில் ஏற்கெனவே 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் பைப்லைன் மூலமாக ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம்மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 85 வீடுகள் உள்ளன. சின்னூர் கிராமத்திற்கு போதுமான குடிநீர் வசதி உள்ளது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்க அவசியம் இல்லை.

2—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 11085—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, சுஞ்சல் நத்தம் ஊராட்சிக்குட்பட்ட தின்ன பெல்லூர் கிராமத்தில் குடிநீர் பற்றாக்குறையைப் போக்க கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சுஞ்சல் நத்தம் ஊராட்சி, தின்னபெல்லூர் கிராமத்தில் 380 வீடுகள் உள்ளன. இங்கு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் 3 மினி டேங்க்குகள் உள்ளன. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் குடிநீர் முறையாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், 2020-2021 ஆம் ஆண்டு 15-வது நிதிக் குழு மானியத் திட்டத்தின்மூலம் ரூ.2.65 இலட்சம் மதிப்பீட்டில் ஆழ்துளைக் கிணறு முதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வரை புதிய GI பைப்லைன் அமைக்கப்பட்டு, குடிநீர் போதுமான அளவு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அவசியமில்லை.

3—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 11100—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, கெண்டயனஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட அத்திமரத்தூர் கிராமத்தில் அமரக்கோனியர் கொட்டாய் பகுதியில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டயனஅள்ளி ஊராட்சி, அத்திமரத்தூர் கிராமம், அமரக்கோனியர் கொட்டாய் பகுதியில் 10 வீடுகள் மட்டும்

2022 அக்டோபர் 18]

உள்ளன. இங்கு 1 கைப்பம்பு மற்றும் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் குடிநீர் முறையாக, தேவையான அளவு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க தேவை இல்லை.

4—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 11125—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, மருதஅள்ளி ஊராட்சி, முதுகம்பட்டி கிராமத்தில் தாதப்பன் கொட்டாய் பகுதியில் புதிய ஆழ்துளைக் குழாய் கிணற்றுடன் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் சட்டமன்றத் தொகுதி, பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மருதஅள்ளி ஊராட்சி, தாதப்பன் கொட்டாய் பகுதியில் 10 குடும்பங்கள் வசித்து வருகின்றன. ஏற்கெனவே ஆழ்துளைக் கிணறு மற்றும் மினி டேங்க்மூலம் தேவையான குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

5—

சமுதாயக்கூடம் அமைத்தல்

வினா எண் 11169—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, ஆச்சாரஅள்ளி ஊராட்சி, தொட்லாம்பட்டி கிராமத்தில் உள்ள பெருமாள் கோயில் அருகில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஆச்சாரஅள்ளி ஊராட்சி, தொட்லாம்பட்டி கிராமத்தில் உள்ள பெருமாள் கோயில் அருகில் அரசுக்குச் சொந்தமான இடமில்லாததால், சமுதாயக் கூடம் அமைக்க இயலாது.

6—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 11200—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, வட்டுவனஅள்ளி ஊராட்சி, ஜெல்மாரம்பட்டி கிராமம், காந்தி நகர் பகுதியில் புதிய ஆழ்துளைக் குழாய் கிணற்றுடன் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வட்டுவனஅள்ளி ஊராட்சி, ஜெல்மாரம்பட்டி கிராமம், காந்திநகர் பகுதியில் ஏற்கெனவே ஆழ்துளைக் கிணற்றுடன்கூடிய மினி டேங்க்மூலம் அங்கு வசிக்கும் 40 குடும்பங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 2020-2021 ஆம் ஆண்டின் 15-வது நிதிக் குழு மானியத் திட்டத்தில் GI பைப்லைன் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, புதிய ஆழ்துளைக் குழாய் கிணறு அமைக்கத் தேவையில்லை.

2022 அக்டோபர் 18]

7—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 11203—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பிளியனூர் ஊராட்சி, கருங்கனூர் கிராமத்தில் புதிய ஆழ்துளைக் குழாய் கிணற்றுடன் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பிளியனூர் ஊராட்சியைச் சேர்ந்த கருங்கனூர் கிராமத்தில் 75 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இக்கிராமத்தில் ஏற்கெனவே ஆழ்துளைக் கிணறு மற்றும் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. போதுமான அளவு குடிநீர் வசதி உள்ளது. எனவே, புதிய ஆழ்துளைக் குழாய் கிணற்றுடன் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

8—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 11222—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் ஊட்டமலைப் பகுதியிலுள்ள மலைவாழ் மக்களுக்கு ஒகேனக்கல் காவிரிக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கூத்தப்பாடி ஊராட்சி, ஒகேனக்கல் ஊட்டமலைப் பகுதியில் உள்ள மலைவாழ் மக்கள் ஆங்காங்கே வசிக்கின்றனர். இப்பகுதி மக்களின் அடிப்படை தேவைக்கு ஒர் ஆழ்துளைக் கிணறு உள்ளது. 40 குடும்பங்கள் ஆங்காங்கே நீண்ட இடைவெளியில் வசித்து வருகின்றன. தற்போது ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் பைப்லைன் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

9—

விளையாட்டு மைதானம் அமைத்தல்

வினா எண் 11268—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், டொக்குபோதனஅள்ளி ஊராட்சி, வெள்ளக்கல் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், டொக்குபோதனஅள்ளி ஊராட்சி, வெள்ளக்கல் கிராமம், ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் விளையாட்டு மைதானம் அமைக்க தற்போது போதுமான இடவசதி இல்லை.

2022 அக்டோபர் 18]

10—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 11274—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், பாகலஅள்ளி ஊராட்சி, பட்டகப்பட்டி கிராமத்தில் நிலவும் குடிநீர்ப் பற்றாக்குறையை போக்கிட கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், பாகலஅள்ளி ஊராட்சி, பட்டகப்பட்டி கிராமத்தில் சுமார் 850 பேர் வசித்து வருகின்றனர். அங்குள்ள 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்துள்ளது. வரும் நிதியாண்டில் ரூ.22.50 இலட்சம் மதிப்பீட்டில் ஏதேனும் ஒரு திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

11—

சாலையைப் புதுப்பித்தல்

வினா எண் 13275—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், திருக்கண்ணமங்கை ஊராட்சி, கொத்தத் தெரு, நகரீஸ்வரம் சாலையைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், திருக்கண்ணமங்கை ஊராட்சி, கொத்தத் தெரு 280 மீட்டர் நீளமுள்ள சாலையை ரூ.7.28 இலட்சம் மதிப்பீட்டிலும், நகரீஸ்வரம் 660 மீ. நீளமுள்ள சாலையை ரூ.17.16 இலட்சம் மதிப்பீட்டிலும் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் தார்ச் சாலையாக 2022-2023 ஆம் ஆண்டில் மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

12—

சாலையைப் புதுப்பித்தல்

வினா எண் 13276—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், பத்தூர் ஊராட்சி, குளத்து மேட்டுத் தெரு சாலையைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், பத்தூர் ஊராட்சி, குளத்து மேட்டுத் தெரு 30 மீ. நீளமுள்ள சாலையினை, ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் 2022-2023 ஆம் நிதியாண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் சிமென்ட் சாலையாக அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2022 அக்டோபர் 18]

13—

சாலையைப் புதுப்பித்தல்

வினா எண் 13283—திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், வடகண்டம் ஊராட்சி, எட்டியலூர் குடியான தெரு சாலையைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், வடகண்டம் ஊராட்சி, எட்டியலூர் குடியான தெரு செல்லும் 650 மீட்டர் நீளமுள்ள சாலையினை ரூ.16.90 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலையாக அமைத்திட 2022-2023 ஆம் நிதியாண்டில் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

14—

சாலையைப் புதுப்பித்தல்

வினா எண் 13284—திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், இலையூர் ஊராட்சி, இலையூர் குடியான தெரு சாலையைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், இலையூர் ஊராட்சி, இலையூர் குடியான தெரு 800 மீட்டர் நீளமுள்ள சாலையினை, ரூ,48,000/- மதிப்பீட்டில் மாநில பேரிடர் நிவாரண நிதியின்கீழ் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, பணி முடியும் நிலையில் உள்ளது.

15—

கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

வினா எண் 13417—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், பாலஜங்கமனஅள்ளி ஊராட்சி, ஈச்சம்பட்டி விநாயகர் கோயில் தெருவில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், பாலஜங்கமனஅள்ளி ஊராட்சி, ஈச்சம்பட்டி விநாயகர் கோயில் தெருவில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க போதிய இடவசதி உள்ளது. 15-வது நிதிக் குழு மானியத் திட்டத்தில் 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

16—

ஆழ்துளைக் கிணறு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 13422—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 அக்டோபர் 18]

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், மானியதஅள்ளி ஊராட்சி, கடுக்காப்பட்டியான் கொட்டாய் கிராமத்தில் புதிய ஆழ்துளைக் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், மானியதஅள்ளி ஊராட்சி, கடுக்காப்பட்டியான் கொட்டாய் பகுதியில் 25 குடும்பங்களில் சுமார் 150 நபர்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் ஏற்கெனவே ஒரு மினி டேங்க் அமைக்கப்பட்டு, குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் ஒகேனக்கல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

17—

ஆழ்துளைக் கிணறு, குடிநீர்த் தொட்டி அமைத்தல்

வினா எண் 13428—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், பாளையம்புதூர் ஊராட்சி, சனிச்சந்தை பேருந்து நிறுத்தம் அருகில் புதிய ஆழ்துளைக் கிணறு மற்றும் கூடுதல் சிறிய குடிநீர்த் தொட்டி அமைத்து, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், பாளையம்புதூர் ஊராட்சி, சனிச்சந்தை பகுதியில் 30 குடும்பங்களில் 225 நபர்கள் குடியிருந்து வருகின்றனர். இப்பகுதியின்

அருகாமையிலிருக்கும் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, புதிய ஆழ்துளைக் கிணறு மற்றும் கூடுதல் சிறிய குடிநீர் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

18—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 13573—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, மாளிகம்பட்டு ஊராட்சி, மாளிகம்பட்டு கிழக்கு தெருவில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் அருகில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, மாளிகம்பட்டு ஊராட்சி, மாளிகம்பட்டு கிழக்கு தெருவில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் அருகில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க கோரப்பட்டுள்ளது. மாளிகம்பட்டு ஊராட்சி, மாளிகம்பட்டு கிழக்கு தெருவில் 110 குடும்பங்களில் மக்கள் 420 பேர் வசித்து வருகின்றனர். மாளிகம்பட்டு கிழக்கு தெருவில் உள்ள மக்களுக்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின்மூலம் 55 LPCD-க்கு குறையாமல் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.

2022 அக்டோபர் 18]

19—

ஆழ்துளைக் கிணறு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 13593—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, மேல்மாம்பட்டு ஊராட்சி, மேல்மாம்பட்டு வடக்குத் தெருவில் புதிய ஆழ்துளைக் குழாய் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, மேல்மாம்பட்டு ஊராட்சி, மேல்மாம்பட்டு வடக்கு தெருவில் 599 குடும்பங்களில் மக்கள் 2,990 பேர் வசித்து வருகின்றனர். அப்பகுதியில் ஏற்கெனவே இரண்டு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் இரண்டு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின்மூலம் 55 LPCD-க்கு குறையாமல் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, அப்பகுதியில் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

20—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 13595—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, மேல்மாம்பட்டு ஊராட்சி, மேல்மாம்பட்டு மாரியம்மன் கோயில் அருகில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, மேல்மாம்பட்டு ஊராட்சி, மேல்மாம்பட்டு மாரியம்மன் கோயில் அருகில் 599 குடும்பங்களில் மக்கள் 2,990 பேர் வசித்து வருகின்றனர். அப்பகுதியில் ஏற்கெனவே இரண்டு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் இரண்டு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின்மூலம் 55 LPCD-க்கு குறையாமல் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, அப்பகுதியில் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

21—

கட்டடம் கட்டுதல்

வினா எண் 13761—திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தேவசமுத்திரம் ஊராட்சிக்கு புதிய ஊராட்சி மன்றக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த தேவசமுத்திரம் ஊராட்சியில் ஊராட்சி மன்றக் கட்டடம் கட்ட 2,400 சதுர அடி இடம் தேவைப்படுகிறது. ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடம் கட்ட தகுதியான இடம் இல்லை என்பதால், தற்போது கட்ட இயலாது.

2022 அக்டோபர் 18]

22—

சாலை அமைத்தல்

வினா எண் 13776—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விராலிமலை தொகுதி, கல்குடி ஊராட்சி, கல்குடி மேலத் தெரு, கீழத் தெரு, நடுத் தெரு மற்றும் தெற்குத் தெரு ஆகிய தெருக்களுக்கு சிமெண்ட் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை தொகுதிக்குட்பட்ட கல்குடி ஊராட்சி, கல்குடி மேலத் தெரு, கீழத் தெரு, நடுத் தெரு மற்றும் தெற்குத் தெரு ஆகிய தெருக்களுக்கு ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் படிப்படியாக வரும் நிதியாண்டுகளில் சிமெண்ட் சாலை அமைத்துத் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

23—

சாலை அமைத்தல்

வினா எண் 13971—திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஒன்றியம், பேராம்பட்டு ஊராட்சி, சின்னபேராம்பட்டு முதல் ஆரம்பப் பள்ளி வரை தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி, கந்திலி ஒன்றியம், பேராம்பட்டு ஊராட்சியில் சின்னபேராம்பட்டு முதல் ஆரம்பப் பள்ளி வரை தார்ச் சாலை அமைக்கும் பணி 2022-2023 ஆம் நிதியாண்டில் 15-வது மத்திய நிதிக் குழு மானியத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

24—

ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

வினா எண் 13974—திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஒன்றியம், சு. பள்ளிப்பட்டு ஊராட்சி, G.T. காலனி பகுதிக்கு புதிய ஆழ்துளைக் கிணறு மற்றும் மின்மோட்டார், பைப்லைன் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி, கந்திலி ஒன்றியம், சு. பள்ளிப்பட்டு ஊராட்சி, ஜி.டி. காலனி பகுதிக்கு புதிய ஆழ்துளைக் கிணறு மற்றும் மின்மோட்டார், பைப்லைன் அமைக்கும் பணி 2022-2023 ஆம் நிதியாண்டில் 15-வது மத்திய நிதிக் குழு மானிய நிதி ஒதுக்கீடு திட்ட நிதியில் அல்லது மாநில நிதிக் குழு மானிய (மாவட்ட ஊராட்சி) ஒதுக்கீட்டு நிதியில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2022 அக்டோபர் 18]

25—

சாலை அமைத்தல்

வினா எண் 13975—திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஒன்றியம், எலவம்பட்டி ஊராட்சி, முருகன் கோயில் முதல் ஜீவனந்தபுரம் வரை தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி, கந்திலி ஒன்றியம், எலவம்பட்டி ஊராட்சி, முருகன் கோயில் முதல் ஜீவனந்தபுரம் வரை தார்ச் சாலை அமைக்கும் பணி 2022-2023 ஆம் நிதியாண்டில் 15-வது மத்திய நிதிக் குழு மானியத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

26—

சாலை அமைத்தல்

வினா எண் 13980—திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஒன்றியம், சு. பள்ளிப்பட்டு ஊராட்சி, கீழ்குரும்பர் தெருவிற்கு தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி, கந்திலி ஒன்றியம், சு. பள்ளிப்பட்டு ஊராட்சி, கீழ்குரும்பர் தெருவிற்கு தார்ச் சாலை அமைக்கும் பணி 2022-2023 ஆம் நிதியாண்டில் 15-வது மத்திய நிதிக் குழு மானியத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

27—

சாலை அமைத்தல்

வினா எண் 13981—திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஒன்றியம், வெங்களாபுரம் ஊராட்சி, வெங்களாபுரம், திருமால் நகர் முதல் குப்பன் வீடு வரை தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஒன்றியம், வெங்களாபுரம் ஊராட்சி, வெங்களாபுரம், திருமால் நகர் முதல் குப்பன் வீடு வரை தார்ச் சாலை அமைக்கும் பணி 2022-2023 ஆம் நிதியாண்டில் 15-வது மத்திய நிதிக் குழு மானியத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

28—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 14039—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 அக்டோபர் 18]

நெய்வேலி தொகுதி, மருங்கூர் ஊராட்சி, கொஞ்சிக்குப்பம் மயானம் அருகில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, மருங்கூர் ஊராட்சி, கொஞ்சிக்குப்பம் மயானம் அருகில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க கோரப்பட்டுள்ளது. மருங்கூர் ஊராட்சி, கொஞ்சிக்குப்பம் கிராமத்தில் 62 *குடும்பங்களில் மக்கள் 310 பேர் வசித்து வருகின்றனர். அப்பகுதியில் ஏற்கெனவே உள்ள* 30,000 *லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின்மூலம், நபர் ஒருவருக்கு* 55 LPCD *குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, அப்பகுதியில் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

29—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 14044—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, கருக்கை ஊராட்சி, கருக்கை நடுத் தெரு மற்றும் மேற்குத் தெருவில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதி, கருக்கை ஊராட்சி, கருக்கை நடுத் தெரு மற்றும் மேற்குத் தெருவில் 250 *குடும்பங்களில் மக்கள் 920 பேர் வசித்து வருகின்றனர். கருக்கை*

ஊராட்சி, நடுத் தெருவில் உள்ள மக்களுக்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலிருந்தும், மேற்குத் தெருவில் உள்ள மக்களுக்கு நேரடி இணைப்பின்மூலமும் 55 LPCD-க்குக் குறையாமல் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.

30—

சமுதாயக்கூடம் கட்டுதல்

வினா எண் 14068—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் தொகுதி, மையனூர் ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, மையனூர் ஊராட்சியின் மக்கள்தொகை 4,279 ஆகும். மையனூர் ஊராட்சியிலிருந்து பழைய சிறுவங்கூர் ஊராட்சி 7 கி.மீ. தொலைவில் உள்ளது. பழைய சிறுவங்கூர் ஊராட்சியில் உள்ள சமுதாயக்கூடத்தை மையனூர் ஊராட்சி மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, மையனூர் ஊராட்சிக்கு என தனி சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

31—

சமுதாயக்கூடம் கட்டுதல்

வினா எண் 14079—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் தொகுதி, லா.கூடலூர் ஊராட்சியில் சமுதாய நலக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, லா.கூடலூர் ஊராட்சியின் மக்கள்தொகை 7,370. லா.கூடலூர் ஊராட்சியிலிருந்து ரிஷிவந்தியம் ஊராட்சி 8 கி.மீ. தொலைவில் உள்ளது. ரிஷிவந்தியம் ஊராட்சியில் உள்ள சமுதாயக்கூடத்தை லா.கூடலூர் ஊராட்சி மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, லா.கூடலூர் ஊராட்சிக்கு என தனி சமுதாய நலக் கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

32—

சமுதாயக்கூடம் கட்டுதல்

வினா எண் 14101—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஒன்றியம், பேரால் ஊராட்சியில் சமுதாய நலக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, பேரால் ஊராட்சியின் மக்கள்தொகை 1,898 ஆகும். பேரால் ஊராட்சியிலிருந்து பழைய சிறுவங்கூர் ஊராட்சி 7 கி.மீ. தொலைவில் உள்ளது. பழைய சிறுவங்கூர் ஊராட்சியில் உள்ள சமுதாயக்கூடத்தை பேரால் ஊராட்சி மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, பேரால் ஊராட்சிக்கென தனி சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

33—

சமுதாயக்கூடம் கட்டுதல்

வினா எண் 14104—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஒன்றியம், ஆற்கவாடி ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, ஆற்கவாடி ஊராட்சியின் மக்கள் தொகை 2,130 ஆகும். ஆற்கவாடி ஊராட்சிக்கு 8 கி.மீ. தொலைவில் மூங்கில்துறைபட்டு ஊராட்சியில் சர்க்கரை ஆலைக்குச் சொந்தமான திருமண மண்டபம் உள்ளது. ஆற்கவாடி கிராம மக்கள் சர்க்கரை ஆலைக்குச் சொந்தமான திருமண மண்டபத்தை பயன்படுத்தி வருகின்றனர். எனவே, ஆற்கவாடி ஊராட்சிக்கு என தனி சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

34—

சமுதாயக்கூடம் கட்டுதல்

வினா எண் 14118—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஒன்றியம், அரும்பராம்பட்டு ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, அரும்பராம்பட்டு ஊராட்சியின் மொத்த மக்கள் தொகை 1,860 ஆகும். அரும்பராம்பட்டு ஊராட்சிக்கு 4 கி.மீ. தொலைவில் மூங்கில்துறைப்பட்டு ஊராட்சியில் சர்க்கரை ஆலைக்குச் சொந்தமான திருமண மண்டபம் உள்ளது. அரும்பராம்பட்டு கிராம மக்கள் சர்க்கரை ஆலைக்குச் சொந்தமான திருமண மண்டபத்தை பயன்படுத்தி வருகின்றனர். எனவே, அரும்பராம்பட்டு ஊராட்சிக்கு என தனி சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

35—

சமுதாயக்கூடம் கட்டுதல்

வினா எண் 14129—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஒன்றியம், மேலப்பழங்கூர் ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, மேலப்பழங்கூர் ஊராட்சியின் மக்கள் தொகை 2,720 ஆகும். மேலப்பழங்கூர் ஊராட்சியிலிருந்து பழைய சிறுவங்கூர் ஊராட்சி 4 கி.மீ. தொலைவில் உள்ளது. பழைய சிறுவங்கூர் ஊராட்சியில் உள்ள சமுதாயக்கூடத்தை மேலப்பழங்கூர் ஊராட்சி மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, மேலப்பழங்கூர் ஊராட்சிக்கு என தனி சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

[2022 அக்டோபர் 18

36—

சமுதாயக்கூடம் கட்டுதல்

வினா எண் 14134—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஒன்றியம், ஏந்தல் ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, ஏந்தல் ஊராட்சியின் மக்கள் தொகை 1,890 ஆகும். ஏந்தல் ஊராட்சியிலிருந்து அத்தியூர் ஊராட்சி 7 கி.மீ. தொலைவில் உள்ளது. அத்தியூர் ஊராட்சியில் உள்ள சமுதாயக்கூடத்தை ஏந்தல் ஊராட்சி மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, ஏந்தல் ஊராட்சிக்கு என தனி சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

37—

சமுதாயக்கூடம் கட்டுதல்

வினா எண் 14137—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஒன்றியம், மண்டகப்பாடி ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, மண்டகப்பாடி ஊராட்சியின் மக்கள் தொகை 2,730 ஆகும்.

2022 அக்டோபர் 18]

மண்டகப்பாடி ஊராட்சியிலிருந்து ரிஷிவந்தியம் ஊராட்சி 5 கி.மீ. தொலைவில் உள்ளது. பழைய சிறுவங்கூர் ஊராட்சியில் உள்ள சமுதாயக்கூடத்தை மண்டகப்பாடி ஊராட்சி மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, மண்டகப்பாடி ஊராட்சிக்கு என தனி சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

38—

சமுதாயக்கூடம் கட்டுதல்

வினா எண் 14140—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஒன்றியம், கடுவனூர் ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, கடுவனூர் ஊராட்சியின் மக்கள் தொகை 6,370 ஆகும். கடுவனூர் ஊராட்சியிலிருந்து அத்தியூர் ஊராட்சி 5 கி.மீ. தொலைவில் உள்ளது. அத்தியூர் ஊராட்சியில் உள்ள சமுதாயக்கூடத்தை கடுவனூர் ஊராட்சி மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, கடுவனூர் ஊராட்சிக்கு என தனி சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

39—

சமுதாயக்கூடம் கட்டுதல்

வினா எண் 14146—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஒன்றியம், தேவரடியார் குப்பம் ஊராட்சி, செல்லங்குப்பம் கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, தேவரடியார் குப்பம் ஊராட்சியின் மக்கள் தொகை 4,103 ஆகும். தேவரடியார் குப்பம் ஊராட்சியிலிருந்து ஜம்பை ஊராட்சி 7 கி.மீ. தொலைவில் உள்ளது. ஜம்பை ஊராட்சியில் உள்ள சமுதாயக்கூடத்தை தேவரடியார் குப்பம் ஊராட்சி மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, தேவரடியார் குப்பம் ஊராட்சிக்கு என தனி சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

40—

சமுதாயக்கூடம் கட்டுதல்

வினா எண் 14168—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஒன்றியம், ஜம்படை ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, ஜம்படை ஊராட்சியின் மக்கள் தொகை 3,630 ஆகும். ஜம்படை ஊராட்சியிலிருந்து திருவரங்கம் ஊராட்சி 7 கி.மீ. தொலைவில் உள்ளது. திருவரங்கம் ஊராட்சியில் உள்ள சமுதாயக்கூடத்தை ஜம்படை ஊராட்சி மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, ஜம்படை ஊராட்சிக்கு என தனி சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

2022 அக்டோபர் 18]

41—

சமுதாயக்கூடம் கட்டுதல்

வினா எண் 14174—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஒன்றியம், மணியந்தல் ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, மணியந்தல் ஊராட்சியின் மக்கள் தொகை 1,475 ஆகும். மணியந்தல் ஊராட்சியிலிருந்து திருவரங்கம் ஊராட்சி 4 கி.மீ. தொலைவில் உள்ளது. திருவரங்கம் ஊராட்சியில் உள்ள சமுதாயக்கூடத்தை மணியந்தல் ஊராட்சி மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, மணியந்தல் ஊராட்சிக்கு என தனி சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

42—

சமுதாயக்கூடம் கட்டுதல்

வினா எண் 14176—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஒன்றியம், எடுத்தனூர் ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, எடுத்தனூர் ஊராட்சியின் மக்கள் தொகை 1,929 ஆகும். எடுத்தனூர்

[2022 அக்டோபர் 18

ஊராட்சியிலிருந்து கரையான்பாளையம் ஊராட்சி 3 கி.மீ. தொலைவில் உள்ளது. கரையான்பாளையம் ஊராட்சியில் உள்ள சமுதாயக்கூடத்தை எடுத்தனூர் ஊராட்சி மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, எடுத்தனூர் ஊராட்சிக்கு என தனி சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

43—

சமுதாயக்கூடம் கட்டுதல்

வினா எண் 14192—திரு. க. கார்த்திகேயன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஒன்றியம், சூளாங்குறிச்சி ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, சூளாங்குறிச்சி ஊராட்சியின் மக்கள் தொகை 6,690 ஆகும். சூளாங்குறிச்சி ஊராட்சியிலிருந்து பழைய சிறுவங்கூர் ஊராட்சி 5 கி.மீ. தொலைவில் உள்ளது. பழைய சிறுவங்கூர் ஊராட்சியில் உள்ள சமுதாயக்கூடத்தை சூளாங்குறிச்சி ஊராட்சி மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, சூளாங்குறிச்சி ஊராட்சிக்கு என தனி சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

44—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 14193—திரு. க. கார்த்திகேயன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஒன்றியம், ஏந்தல் ஊராட்சி, ஆதி திராவிடர் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி, ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஏந்தல் ஊராட்சியில் ஆதி திராவிடர் பகுதியின் மொத்த மக்கள் தொகை 1,310 ஆகும். இவ்வூராட்சியிலுள்ள கிராமங்களில் பின்வரும் விவரப்படி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன:

1. *ஏந்தல் காலனி 30,000 லி. (மெயின் ரோடு)*

2. *ஆதி திராவிடர் பகுதி 30,000 லி. (நடுநிலைப் பள்ளி அருகில்)*

மொத்தம் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இரண்டு உள்ளன. இதன்மூலம் காலை மற்றும் மாலை என இருவேளைகளிலும் நீரேற்றம் செய்து தனிநபர், தினசரி தேவையான 55 LPCD வீதம் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, ஏந்தல் ஊராட்சியில் ஆதி திராவிடர் பகுதியில் கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

45—

சமுதாயக்கூடம் கட்டுதல்

வினா எண் 14194—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஒன்றியம், நூரோலை ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, நூரோலை ஊராட்சியின் மக்கள் தொகை 1,970 ஆகும். நூரோலை

ஊராட்சியிலிருந்து பழைய சிறுவங்கூர் ஊராட்சி 5 கி.மீ. தொலைவில் உள்ளது. பழைய சிறுவங்கூர் ஊராட்சியில் உள்ள சமுதாயக்கூடத்தை நூரோலை ஊராட்சி மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, நூரோலை ஊராட்சிக்கு என தனி சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

46—

சமுதாயக்கூடம் கட்டுதல்

வினா எண் 14201—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஒன்றியம், பாசார் ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, பாசார் ஊராட்சியின் மக்கள் தொகை 6,190 ஆகும். பாசார் ஊராட்சிக்கு அருகாமையில் 3 கி.மீ. தொலைவில் ரிஷிவந்தியம் ஊராட்சியில் சமுதாயக்கூடம் உள்ளது. எனவே, பாசார் ஊராட்சிக்கு புதிய சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

47—

பேருந்து நிலையம் அமைத்தல்

வினா எண் 14585—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஒன்றியம், மையனூர் ஊராட்சியில் ஆதி திராவிடர் பகுதிக்கு பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, மையனூர் ஊராட்சியின் மொத்த மக்கள் தொகை 4,279 ஆகும். அரசு பேருந்து கள்ளக்குறிச்சி முதல் பகண்டை கூட்டுரோடு மார்க்கமாக மையனூர் ஊராட்சி ஆதி திராவிடர் காலனி வழியாக ஒரு நாளைக்கு மூன்று பேருந்துகள் ஒருமுறை மட்டுமே வந்து செல்கின்றன. எனவே, பேருந்து நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

48—

பள்ளிக் கட்டடம்

வினா எண் 14642—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி தாலுகா, அம்புக்கோவிலில் இயங்கிவரும் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக் கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், புதிய பள்ளிக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், அம்புக்கோவில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் சுமார் 200 மாணவர்கள் அரசு உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் உள்ள கூடுதல் கட்டடத்தில் தற்போது பயின்று வருகின்றனர். 2020-2021 ஆம் நிதியாண்டில் மாவட்ட ஊராட்சி நிதியிலிருந்து ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு வகுப்பறை கட்டடம் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தற்போது பணி நடைபெற்று வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[*2022 அக்டோபர் 18*

49—

மின்விசை இறைப்பான் அமைத்தல்

வினா எண் 14675—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *மயிலம் தொகுதி, மயிலம் ஒன்றியம், மோழியனூர் கிராமத்தில் இரண்டு சிறு மின்விசை இறைப்பான்கள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மயிலம் தொகுதி, மயிலம் ஊராட்சி ஒன்றியம், மோழியனூர் குக்கிராமத்தின் மக்கள் தொகை 3,210 ஆகும். கிராமப் பகுதியில் 604 குடும்பங்களும், காலனிப் பகுதியில் 356 குடும்பங்களும் வசித்து வருகின்றன. கிராமப் பகுதியில் 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், காலனிப் பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், 11 சிறு மின்விசை பம்புகளும் உள்ளன. 15-வது நிதிக் குழு மானியத் திட்டத்தின்கீழ், காலனிப் பகுதியில் உள்ள 356 குடும்பங்களுக்கும் தனிநபர் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. 2021-2022 ஆம் ஆண்டு ஊராட்சி முழுமையாகவும், ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தில் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, புதியதாக சிறு மின்விசை இறைப்பான் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

50—

மின்விசை இறைப்பான் அமைத்தல்

வினா எண் 14676—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 அக்டோபர் 18]

(அ) *மயிலம் தொகுதி, மயிலம் ஒன்றியம், இளமங்கலம் கிராமம், பிரதான சாலையில் சிறு மின்விசை இறைப்பான் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *விழுப்புரம் மாவட்டம், மயிலம் தொகுதி, மயிலம் ஊராட்சி ஒன்றியம், இளமங்கலம் ஊராட்சியின் மக்கள் தொகை* 1,603 *ஆகும். இவ்வூராட்சியில்* 289 *குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவ்வூராட்சியில்* 30,000 *லிட்டர் கொள்ளளவு கொண்ட நான்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும், நான்கு சிறு மின்விசை பம்புகளும் உள்ளன. மேலும், இவ்வூராட்சியில்* 2020-2021 *ஆம் ஆண்டு ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின்கீழ் அனைத்து வீடுகளுக்கும் தனிநபர் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இவற்றின்மூலம் இங்குள்ள மக்களுக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், புதியதாக சிறு மின்விசை இறைப்பான் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

51—

குடிநீர் வசதி

வினா எண் 14683—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கல்லடிக்குப்பம் கிராமத்தில் சிறு மின்விசை இறைப்பான் அமைத்து குடிநீர் வசதி ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மயிலம் தொகுதி, வல்லம் ஊராட்சி ஒன்றியம், 1,850 மக்கள் தொகை கொண்ட கல்லடிக்குப்பம் கிராமத்தில் 5 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன. இதில் 1,100 மக்கள் தொகை கொண்ட ஊர் பகுதியில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மூன்று மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் நல்ல நிலையில் செயல்பட்டு வருகின்றன. மேலும், 450 மக்கள் தொகை கொண்ட பழைய காலனி பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் 300 மக்கள் தொகை கொண்ட புதிய காலனி பகுதியில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஆகிய இரண்டும் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. தற்போது ஊர் பகுதியான கள்ளியாழியம்மன் தெருவில் இயங்கி வந்த மின்னிறைப்பான் பழுதடைந்துவிட்டதால், அந்த சிறிய குடிநீர்த் தொட்டியினை ஊராட்சி நிதியிலிருந்து சரி செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி விரைந்து முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும். எனவே, கல்லடிக்குப்பம் கிராமத்தில் போதிய அளவில் குடிநீர் விநியோகம் செய்யப்படுவதால், சிறு மின்விசை இறைப்பான் அமைக்கும் அவசியம் எழவில்லை.

52—

பள்ளிக் கட்டடம்

வினா எண் 14698—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், வெளவால்குன்றம் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்குக் கட்டடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மயிலம் தொகுதி, வெளவால்குன்றம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் தற்போது 12 மாணவர்கள் மற்றும் 8 மாணவிகள் என ஆக மொத்தம் 20 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இப்பள்ளிக் கட்டடம் தற்போது நல்ல நிலையில் இருப்பதால், புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

53—

சமுதாயக்கூடம் அமைத்தல்

வினா எண் 14731—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், ஞாயிறு ஊராட்சி, கன்னியம்பாளையம் கிராமத்தில் சமுதாயக்கூடம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், ஞாயிறு ஊராட்சி சுமார் 2,572 மக்கள் தொகை உள்ள ஊராட்சி ஆகும். கன்னியம்பாளையம் கிராமத்திலிருந்து 2 கி.மீ. தொலைவிலிருக்கும் ஞாயிறு கிராமத்தில் உள்ள சமுதாயக்கூடத்தினை கன்னியம்பாளையம் கிராம மக்கள் பயன்படுத்துவதனால், இக்கிராமத்திற்கு தனியாக சமுதாயக்கூடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

54—

பள்ளிக் கட்டடங்களை சீரமைத்தல்

வினா எண் 14788—திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, புத்தூர்செக்கடி தொடக்கப் பள்ளியில் பழுதடைந்த நிலையில் உள்ள 4 கட்டடங்களை சீரமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தொகுதி, தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம், புத்தூர்செக்கடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் சுமார் 158 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் 8 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் மட்டுமே உள்ளது. அவற்றில், பழுதடைந்த நிலையில் 4 வகுப்பறைகள் உள்ளன. எனவே, 2022-2023 ஆம் நிதியாண்டில் ரூ.7.60 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கண்ட 4 வகுப்பறைகளை தகுந்த திட்டத்தின்மூலம் பழுது நீக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

55—

வகுப்பறை கட்டுதல்

வினா எண் 14797—திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, கொட்டையூர் நடுநிலைப் பள்ளிக்கு வகுப்பறை கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தொகுதி, தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம், கொட்டையூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 303 மாணவர்கள் பயின்று வருகின்றனர். ஏற்கெனவே, இப்பள்ளி வளாகத்தில் 6 வகுப்பறைகள் கொண்ட இரண்டு அடுக்கு பள்ளிக் கட்டடமும் மற்றும் 4 வகுப்பறைகள் கொண்ட ஒரு பள்ளிக் கட்டடமும் உள்ளன. இப்பள்ளிக்கு பள்ளிக் கல்வித் துறையின் இசைவுடன் உரிய திட்டத்தின்கீழ் புதிய பள்ளிக் கட்டடம் கட்டித் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

56—

ஆழ்துளைக் குழாய் கிணறு அமைத்தல்

வினா எண் 14816—திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *செங்கம் தொகுதி, இராயண்டபுரம் தொடக்கப் பள்ளிக்கு புதிய ஆழ்துளைக் குழாய் கிணறு அமைத்து, குடிநீர் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தொகுதி, தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம், இராயண்டபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 185 மாணவர்கள் பயில்கின்றனர். தற்போது, இப்பள்ளிக்குப் போதுமான தண்ணீர் வசதி இல்லை என்பதால், கூடுதலாக புதிய ஆழ்துளைக் கிணறு மற்றும் குழாய் விஸ்தரிப்புமூலம் குடிநீர் விநியோகம் செய்ய ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் 2022-2023 ஆம் நிதியாண்டில் தகுந்த திட்டத்தின்கீழ் மேற்கொள்ள பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

[2022 அக்டோபர் 18

57—

ஆழ்துளைக் குழாய் கிணறு அமைத்தல்

வினா எண் 14819—திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, பெருங்குளத்தூர் தொடக்கப் பள்ளிக்கு புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்து, குடிநீர் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம், பெருங்குளத்தூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 312 மாணவர்கள் பயில்கின்றனர். தற்போது இப்பள்ளிக்குப் போதுமான தண்ணீர் வசதி இல்லை என்பதால், கூடுதலாக புதிய ஆழ்துளைக் கிணறு மற்றும் குழாய் விஸ்தரிப்புமூலம் குடிநீர் விநியோகம் செய்ய ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் 2022-2023 ஆம் நிதியாண்டில் தகுந்த திட்டத்தின்கீழ் மேற்கொள்ள பரிசிலிக்கப்படுகிறது.

58—

ஆழ்துளைக் குழாய் கிணறு அமைத்தல்

வினா எண் 14824—திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, P.குயிலம் தொடக்கப் பள்ளிக்கு புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்து, குடிநீர் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், P.குயிலம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 80 மாணவர்கள் பயில்கின்றனர். தற்போது இப்பள்ளிக்குப் போதுமான தண்ணீர் வசதி இல்லை என்பதால், கூடுதலாக புதிய ஆழ்துளைக் கிணறு மற்றும் குழாய் விஸ்தரிப்புமூலம் குடிநீர் விநியோகம் செய்ய ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் 2022-2023 ஆம் நிதியாண்டில் தகுந்த திட்டத்தின்கீழ் மேற்கொள்ள பரிசீலிக்கப்படுகிறது.

59—

வகுப்பறை கட்டுதல்

வினா எண் 14855—திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கம் தொகுதி, பெருங்குளத்தூர் தொடக்கப் பள்ளிக்கு ஒரு வகுப்பறை கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தொகுதி, தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம், பெருங்குளத்தூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 312 மாணவர்கள் பயில்கின்றனர். ஏற்கெனவே, இப்பள்ளி வளாகத்தில் 5 வகுப்பறைகள் கொண்ட பள்ளிக் கட்டடம் உள்ளது. எனவே, தற்போது கூடுதலாக இரண்டு வகுப்பறைகளுடன்கூடிய பள்ளிக் கட்டடம் ரூ.17.32 இலட்சம் மதிப்பீட்டில் 2022-2023 ஆம் நிதியாண்டில் தகுந்த திட்டத்தின்மூலம் முன்னுரிமை அடிப்படையில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[*2022 அக்டோபர் 18*

60—

குடிநீர் வசதி

வினா எண் 15030—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி தாலுகா, சோமேனஅள்ளி ஊராட்சி, கோரப்பள்ளி பேருந்து நிலையத்தில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், தருமபுரி சட்டமன்றத் தொகுதி, நல்லம்பள்ளி தாலுகா, சோமேனஅள்ளி ஊராட்சியில் 350 குடும்பங்களில் 1,400 மக்கள் வசித்து வருகின்றனர். கோரப்பள்ளி பேருந்து நிலையம் பகுதியில், ஏற்கெனவே 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் குடிநீர் விநியோகம் சீரான முறையில் செய்யப்பட்டு வருகிறது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட வேண்டிய அவசியம் இல்லை.

61—

சமுதாயக்கூடம் அமைத்தல்

வினா எண் 15799—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, சேத்துப்பட்டு ஒன்றியம், கொரால்பாக்கம் ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, சேத்துப்பட்டு ஒன்றியத்திற்குட்பட்ட கொரால்பாக்கம் ஊராட்சி 1,124 மக்கள் தொகை கொண்ட சிறிய ஊராட்சி ஆகும். இவ்வூராட்சிக்கு அருகில் 2 கி.மீ. தொலைவில் உள்ள கரைப்பூண்டி ஊராட்சியில் அமைந்துள்ள அரசு சமுதாயக்கூடத்தை கொரால்பாக்கம் மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். எனவே, கொரால்பாக்கம் ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

62—

சமுதாயக்கூடம் அமைத்தல்

வினா எண் 15801—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, சேத்துப்பட்டு ஒன்றியம், ஒதலவாடி ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, சேத்துப்பட்டு ஒன்றியத்திற்குட்பட்ட ஒதலவாடி ஊராட்சி 4,571 மக்கள் தொகை கொண்ட சிறிய ஊராட்சி ஆகும். இவ்வூராட்சிக்கு அருகில் 5 கி.மீ. தொலைவில் தேவிகாபுரம் ஊராட்சியில் அமைந்துள்ள அரசு சமுதாயக்கூடத்தை ஒதலவாடி மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். எனவே, ஒதலவாடி ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

63—

சமுதாயக்கூடம் அமைத்தல்

வினா எண் 15802—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, சேத்துப்பட்டு ஒன்றியம், இந்திரவனம் ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, சேத்துப்பட்டு ஒன்றியத்திற்குட்பட்ட இந்திரவனம் ஊராட்சி 2,590 மக்கள் தொகை கொண்ட சிறிய ஊராட்சி ஆகும். 2014-2015 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்திரவனம் ஊராட்சியில் கட்டப்பட்ட சமுதாயக்கூடம் மக்கள் பயன்பாட்டிற்குப் போதுமானதாக உள்ளதால், இந்திரவனம் ஊராட்சியில் கூடுதலாக புதிய சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

64—

சமுதாயக்கூடம் அமைத்தல்

வினா எண் 15803—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, சேத்துப்பட்டு ஒன்றியம், ஆத்துறை ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியம், ஆத்துறை ஊராட்சியின் மொத்த மக்கள் தொகை 2,266 (ஆண் 1,118 மற்றும் பெண் 1,148) ஆகும். இந்த ஊராட்சிக்கு 2 கி.மீ. அருகாமையில் உள்ள தேவிகாபுரத்தில் அமைந்துள்ள அரசு சமுதாயக்கூடத்தினை ஆத்துறை ஊராட்சியை சேர்ந்த பெருவாரியான பொது மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, ஆத்துறை ஊராட்சியில் புதிய சமுதாயக்கூடம் அமைத்திட அவசியம் எழவில்லை.

65—

சமுதாயக்கூடம் அமைத்தல்

வினா எண் 15804—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, சேத்துப்பட்டு ஒன்றியம், மட்டப்பிறையூர் ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மட்டப்பிறையூர் ஊராட்சி 1,448 மக்கள் தொகை கொண்ட சிறிய ஊராட்சி ஆகும். இவ்வூராட்சிக்கு அருகில் 2 கி.மீ. தொலைவில் மண்டகொளத்தூர் ஊராட்சியில் அமைந்துள்ள அரசு சமுதாயக்கூடத்தை மட்டப்பிறையூர் மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். எனவே, மட்டப்பிறையூர் ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2022 அக்டோபர் 18

66—

சமுதாயக்கூடம் அமைத்தல்

வினா எண் 15807—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, சேத்துப்பட்டு ஒன்றியம், அத்திமூர் திண்டிவனம் ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், அத்திமூர் திண்டிவனம் ஊராட்சி 8,481 மக்கள் தொகை கொண்ட ஊராட்சி ஆகும். இவ்வூராட்சிக்கு அருகில் 1 கி.மீ. தொலைவில் உள்ள களியம் கிராமத்தில் உள்ள சமுதாயக்கூடத்தினை மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். எனவே, அத்திமூர் திண்டிவனம் ஊராட்சிக்கு புதிய சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

67—

சமுதாயக்கூடம் அமைத்தல்

வினா எண் 15808—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, போளூர் ஒன்றியம், வெண்மணி ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, வெண்மணி ஊராட்சி 2,208 மக்கள் தொகை கொண்ட ஊராட்சி ஆகும். இவ்வூராட்சிக்கு அருகில் 3 கி.மீ. தொலைவில் உள்ள போளூர் பேரூராட்சிக்குச் சொந்தமான கலைஞர் சமுதாயக்கூடத்தை மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். எனவே, வெண்மணி ஊராட்சிக்கு புதிய சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

68—

சமுதாயக்கூடம் அமைத்தல்

வினா எண் 15809—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, போளூர் ஒன்றியம், திருசூர் (பேட்டை) ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, திருசூர் ஊராட்சி 4,199 மக்கள் தொகை கொண்ட ஊராட்சி ஆகும். இவ்வூராட்சிக்கு 7 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள போளூர் பேரூராட்சிக்குச் சொந்தமான கலைஞர் சமுதாயக்கூடத்தை மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். எனவே, திருசூர் ஊராட்சிக்கு புதிய சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

69—

நிழற்குடை அமைத்தல்

வினா எண் 15811—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, போளூர் ஒன்றியம், கஸ்தம்பாடி ஊராட்சியில் பயணியர் நிழற்குடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, போளூர் ஒன்றியம், கஸ்தம்பாடி ஊராட்சியில் ஏற்கெனவே பயணியர் நிழற்குடை நல்ல நிலையில் உள்ளது. எனவே, போளூர் ஒன்றியம், கஸ்தம்பாடி ஊராட்சிக்கு கூடுதலாக பயணியர் நிழற்குடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

70—

சமுதாயக்கூடம் அமைத்தல்

வினா எண் 15812—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, போளூர் ஒன்றியம், சந்தவாசல் ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, சந்தவாசல் ஊராட்சி 8,305 மக்கள் தொகை கொண்ட ஊராட்சி ஆகும். இவ்வூராட்சிக்கு 7 கிலோ மீட்டர் தொலைவில் கேளூர் ஊராட்சியில் உள்ள அரசு சமுதாயக்கூடத்தை மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். எனவே, சந்தவாசல் ஊராட்சிக்கு புதிய சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

71—

சமுதாயக்கூடம் அமைத்தல்

வினா எண் 15812—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, போளூர் ஒன்றியம், ஆத்துவாம்பாடி ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, ஆத்துவாம்பாடி ஊராட்சி 3,605 மக்கள் தொகை கொண்ட ஊராட்சி ஆகும். இவ்வூராட்சிக்கு 6 கிலோ மீட்டர் தொலைவில் கேளூர் ஊராட்சியில் உள்ள அரசு சமுதாயக்கூடத்தை மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். எனவே, ஆத்துவாம்பாடி ஊராட்சிக்கு புதிய சமுதாயக்கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

72—

வகுப்பறை கட்டுதல்

வினா எண் 15846—திரு. ம. பிரபாகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரம்பலூர் தொகுதி, வெள்ளுவாடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு கூடுதலாக இரண்டு வகுப்பறைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் தொகுதி, வெள்ளுவாடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ஒரு பழுதடைந்த கட்டடம் இடிக்கப்பட்டுவிட்டது. இப்பள்ளியில் மொத்தம் 241 மாணவ, மாணவியர் மீதமுள்ள மூன்று கட்டடங்களில் பயின்று வருகின்றனர். மேற்படி பள்ளிக்கு 2 வகுப்பறையுடன்கூடிய புதிய கட்டடம் வரும் நிதியாண்டில் ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் ஏதேனும் ஓர் அரசு திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் கட்டித் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

73—

வகுப்பறை கட்டுதல்

வினா எண் 15847—திரு. ம. பிரபாகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெரம்பலூர் தொகுதி, வி.களத்தூர் ஊராட்சி ஒன்றிய ஆண்கள் தொடக்கப் பள்ளிக்கு அலுவலகத்துடன்கூடிய கூடுதலாக மூன்று வகுப்பறைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

பெரம்பலூர் தொகுதி, வி.களத்தூர் ஊராட்சி ஒன்றிய ஆண்கள் துவக்கப் பள்ளியில் மொத்தம் 71 மாணவர்கள் மட்டும் 1 முதல் 4 வரையிலான வகுப்பில் பயின்று வருகின்றனர். இப்பள்ளிக்கு ஏற்கெனவே 2 வகுப்பறைகளுக்கான கட்டடம் ஒன்றும் மற்றும் 3 வகுப்பறைகளுக்கான கட்டடம் ஒன்றும் நல்ல நிலையில் உள்ளன. எனவே, இப்பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டும் அவசியம் எழவில்லை.

74—

வகுப்பறை கட்டுதல்

வினா எண் 15848—திரு. ம. பிரபாகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெரம்பலூர் தொகுதி, பெரம்பலூர், தைக்கால் மற்றும் திருவாளந்துறை ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிகளில் கூடுதலாக இரு வகுப்பறைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

பெரம்பலூர் தொகுதி, திருவாளந்துறை ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் பழுதடைந்த கட்டடம் இடிக்கப்பட்டுவிட்டது. இந்நிலையில் ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு வகுப்பறையுடன்கூடிய புதிய கட்டடம் வரும் நிதியாண்டில் ஏதேனும் ஓர் அரசு திட்டத்தின்கீழ் கட்டித்தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பெரம்பலூர் தொகுதி, தைக்கால் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை மொத்தம் 14 மாணவ, மாணவியர் மூன்று வகுப்பறை கட்டடங்களில் பயின்று வருகின்றனர். எனவே, இப்பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டும் தேவை எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

75—

சாலை, பாதாள சாக்கடை அமைத்தல்

வினா எண் 15853—திரு. ம. பிரபாகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரம்பலூர் தொகுதி, வேப்பந்தட்டை ஒன்றியம், தேவையூர் ஊராட்சி, பிற்பட்டோர் மக்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள தெருக்களில் சிமென்ட் சாலை மற்றும் பாதாளச் சாக்கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் தொகுதி, 2019-2020 முதல் 2021-2022 வரை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், தேவையூர் ஊராட்சியில் அனைத்து தெருக்களிலும் 21 சிமென்ட் சாலைப் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, பணிகள் துவங்கப்பட உள்ளன. ஊராட்சிகளில் பாதாள சாக்கடை வசதி திட்டம் நடைமுறையில் இல்லை.

76—

வகுப்பறை கட்டுதல்

வினா எண் 15856—திரு. ம. பிரபாகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரம்பலூர் தொகுதி, அயன்பேரையூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு கூடுதலாக இரு வகுப்பறைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் தொகுதி, அயன்பேரையூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ஏற்கெனவே உள்ள இரண்டு கட்டடங்களில் முதலாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை மொத்தம் 117 மாணவ, மாணவிகள் தற்போது பயின்று வருகின்றனர். இருப்பினும், கூடுதலாக இரண்டு வகுப்பறைக் கட்டடம் ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் ஏதேனும் ஓர் அரசு திட்டத்தின்கீழ், 2022-2023 ஆம் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் கட்டித்தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

77—

குடிநீர் வசதி

வினா எண் 15871—திரு. ம. பிரபாகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெரம்பலூர் தொகுதி, அய்யலார் ஊராட்சி மன்ற 2-வது வார்டு, கல்பாடி செல்லும் சாலை அருகிலுள்ள குடியிருப்புகளுக்கு பைப்லைன்மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் தொகுதி, அய்யலார் ஊராட்சியில் கல்பாடி செல்லும் சாலையில் உள்ள குடியிருப்புகளுக்கு புதிய பைப்லைன் அமைத்திடும் பணி 15-வது நிதிக் குழு மானியத் திட்டத்தின்கீழ் முடிக்கப்பட்டுள்ளது.

78—

சாலை, கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

வினா எண் 16332—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், நார்த்தம்பட்டி ஊராட்சி, தம்மணம்பட்டி கிராமத்தில் சிமென்ட் சாலை மற்றும் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், நார்த்தம்பட்டி ஊராட்சி, தம்மணம்பட்டி கிராமத்தில் ஏற்கெனவே மூன்று தெருக்களுக்கு சிமென்ட் சாலை மற்றும் கழிவுநீர்க் கால்வாய்கள் அமைக்கப்பட்டு, பயன்பாட்டில் இருந்து வருகின்றன. மீதமுள்ள ஒரு தெருவிற்கு சிமென்ட் சாலை மற்றும் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க ஊராட்சியில் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. எதிர்வரும் நிதியாண்டில் பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

79—

சாலை அமைத்தல்

வினா எண் 16333—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், நார்த்தம்பட்டி ஊராட்சி, முளையான் குளம் கிராமத்தில் உள்ள தெருக்களுக்கு சிமென்ட் சாலை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

2022 அக்டோபர் 18]

தருமபுரி மாவட்டம், தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், நார்த்தம்பட்டி ஊராட்சி, முளையான் குளம் கிராமத்தில் உள்ள தெருக்களுக்கு சிமென்ட் சாலை அமைக்க 2021-2022 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ், ரூ.3,50,000/- மதிப்பீட்டில் 450 மீட்டருக்கு பணி மேற்கொள்ளப்படும்.

80—

கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

வினா எண் 16357—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், ஏ.நெட்டிஅள்ளி ஊராட்சி, கோடியூர் கிராமத்தில் உள்ள அனைத்து தெருக்களுக்கும் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், ஏ.நெட்டிஅள்ளி ஊராட்சி, கோடியூர் கிராமத்தில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

81—

சமுதாயக்கூடம் அமைத்தல்

வினா எண் 16381—திரு. செ. கிருஷ்ணமுரளி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடையநல்லூர் தொகுதி, தேன்பொத்தை ஊரில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், கடையநல்லூர் தொகுதி, தென்காசி ஊராட்சி ஒன்றியம், தேன்பொத்தை ஊராட்சி, தேன்பொத்தை கிராமத்தில் சமுதாயக்கூடம் நல்ல நிலையில் உள்ளது. எனவே, புதிய சமுதாயக்கூடம் அமைக்க தேவை எழவில்லை.

82—

கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

வினா எண் 19540—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, மஞ்சநாயக்கன்அள்ளி ஊராட்சி, பெரிய கடமடை பேருந்து நிலையம் முதல் பிரதான சாலை வரை கழிவுநீர்க் கால்வாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சநாயக்கன்அள்ளி ஊராட்சி, பெரிய கடமடை பகுதியில் ஏற்கெனவே பேருந்து நிறுத்தத்தில் இருந்து 100 மீட்டர் கழிவுநீர்க் கால்வாய் உள்ளது. மேலும், 100 மீட்டர் தேவைப்படுகிறது. இதனை அமைக்க 2022-2023 ஆம் ஆண்டிற்கான 15-வது நிதிக் குழு மானிய நிதியில் (வரையறுக்கப்பட்டது) மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

83—

நூலகம் கட்டுதல்

வினா எண் 52461—திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், பையனப்பள்ளி ஊராட்சி, ஜக்காரப்பள்ளி கிராமத்தில் அரசுமூலம் கட்டப்பட்ட இடிந்துவிழும் நிலையில் உள்ள தொலைக்காட்சி அறை கட்டடத்தை அகற்றி, அந்த இடத்தில் நூலகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், பையனப்பள்ளி ஊராட்சி, ஜக்காரப்பள்ளி கிராமத்தில் ஏற்கெனவே உள்ள தொலைக்காட்சி அறையினை இடித்து அப்புறப்படுத்தி, புதிய நூலகக் கட்டடம் கட்ட போதிய இடவசதி இல்லை. மேலும், ஜக்காரப்பள்ளி குடியிருப்பிலிருந்து 500 மீட்டர் தூரத்தில் பையனப்பள்ளி காலனியில் 2010-2011 ஆம் ஆண்டிற்கான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ், ரூ.3.75 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நூலகக் கட்டடம் கட்டப்பட்டு, ரூ.0.50 இலட்சம் மதிப்பிற்கு தளவாடங்கள் மற்றும் ரூ.0.50 இலட்சம் மதிப்பிற்கு புத்தகங்களும் கொள்முதல் செய்யப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளதால், ஜக்காரப்பள்ளி குடியிருப்புக்கான தனியே நூலகக் கட்டடம் கட்ட தற்போது அவசியமில்லை.

84—

தொழில் பூங்கா அமைத்தல்

வினா எண் 1225—திரு. இரா. அருள்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டத்தில் வெள்ளி கொலுசுக்கான தொழில் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில், ஆர்வமுள்ள, கொலுசு உற்பத்தி சார்ந்த 20 குறுந்தொழில் முனைவோர் அல்லது குறுந்தொழில் முனைவோரின் சங்கம், குறைந்தபட்சம் 50 ஏக்கர் நிலத்தில் தொழிற்பூங்கா அமைக்க முன்வரும்பட்சத்தில் அம்மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசித்து, ரூ.15 கோடி வரையிலான அரசு மானியத்துடன் வெள்ளி கொலுசு தயாரிக்கும் தொழில்முனைவோருக்கு தொழிற்பேட்டை அமைப்பதற்கு தமிழ்நாடு சிட்கோ நிறுவனம்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

85—

பட்டு வளர்ச்சி மையத்தை மேம்படுத்துதல்

வினா எண் 1767—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, இந்திரா நகர் ஊராட்சியில் உள்ள பட்டு வளர்ச்சி மையத்தை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, இந்திரா நகர் ஊராட்சியில் உள்ள அரசு பட்டுப் பண்ணை (விவசாயிகள் பயிற்சி மையம்) 2019-2020 ஆம் ஆண்டு இந்தப் பண்ணையின் உட்கட்டமைப்பினை மேம்படுத்தும்வகையில் பண்ணையில் உள்ள அலுவலகக் கட்டடம் ரூ.3.00 இலட்சம் செலவில் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

மல்பெரி நாற்று உற்பத்தி மற்றும் மல்பெரி தோட்ட பராமரிப்பிற்கு தேவைப்படும் பாசன நீர் தேவையினைப் பூர்த்தி செய்திட இப்பண்ணையில் அமைக்கப்பட்ட ஆழ்துளைக்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2022 அக்டோபர் 18]

கிணறு வறண்டுவிட்ட காரணத்தினால், பண்ணையின் பணிகள் சுணக்கமின்றி தொடர்ந்து நடைபெற்றிட, புதிதாக ஆழ்துளைக் கிணறு அமைத்திட சம்பந்தப்பட்ட உதவி இயக்குநருக்கு ரூ.15,61,700/- நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. இப்பண்ணையைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள கம்பி வேலிகள் சேதம் அடைந்துள்ளதால், வட்டார வளர்ச்சி அலுவலகம்மூலம் கம்பி வேலி புதிதாக அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இப்பண்ணையின் பணிகள் மற்றும் தேவைக்கேற்ப அவ்வப்போது மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

86—

தொழிற்பேட்டை அமைத்தல்

வினா எண் 3192—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பருவதனஹள்ளியில் தொழிற்பேட்டை உருவாக்கப்பட்டு, முதற்கட்டமாக 26 தொழில்மனைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. தேவைக்கேற்ப, இரண்டாம் கட்டமாக, 89 தொழில்மனைகள் மேம்படுத்தப்பட உள்ளன. மேலும், பெண்ணாகரத்தில் தொழிற்பேட்டை அமைக்க போதிய தகுதியான அரசு நிலங்கள் கிடைத்தால், புதிய தொழிற்பேட்டை அமைக்கப்படும். இருப்பினும், தொழில் தொடங்க ஆர்வமுள்ள குறைந்தபட்சம் 20 தொழில்முனைவோரை உள்ளடக்கிய தொழில்முனைவோர் கூட்டமைப்புகள் சுமார் 50 ஏக்கர் நிலத்துடன் தொழிற்பேட்டை அமைக்க முன்வரும்பட்சத்தில், ரூ.15 கோடி வரையிலான மாநில அரசின் மானியத்துடன் தொழிற்பேட்டை அமைப்பதற்கு தமிழ்நாடு சிட்கோமூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

87—

ஜவ்வரசி தொழிற்சாலை அமைத்தல்

வினா எண் 4477—திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்மிடிப்பூண்டியில் ஜவ்வரசி (சேகோ) தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டாரத்தில் கிடைக்கப்பெறும் மரவள்ளிக் கிழங்கு திருவள்ளூர் மாவட்ட உள்ளூர் சந்தைகளுக்கும் மற்றும் சென்னை மாவட்டத்திற்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. ஆகையால், திருவள்ளூர் மாவட்டத்தில் ஜவ்வரிசி தொழிற்சாலை அமைய சாத்தியக்கூறுகள் இல்லை.

இருப்பினும், கும்மிடிப்பூண்டி வட்டாரத்தில் ஜவ்வரசி (சேகோ) தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்திட தனியார் தொழில்முனைவோர் யாரேனும் முன்வந்தால், அரசு அறிவித்துள்ள திட்டங்களின்கீழ், தகுதியின் அடிப்படையில் வங்கி கடனுக்கு ஆவன செய்யப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

88—

சிட்கோ தொழிற்பேட்டையை செயல்படுத்துதல்

வினா எண் 10353—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பருவதனஹள்ளி பகுதியில் சிட்கோ தொழிற்பேட்டையை செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பருவதனஹள்ளியில் 29.89 ஏக்கர் நிலப்பரப்பில் மொத்தமுள்ள 115 தொழில்மனைகளில் 26 தொழில்மனைகள் முதற்கட்டமாக மேம்படுத்தப்பட்டு, தொழிற்பேட்டை உருவாக்கப்பட்டு, இதில் 5 தொழில்மனைகள் தொழில்முனைவோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 21 தொழில்மனைகள் ஒதுக்கீடு செய்ய தயாராக உள்ளன. மேலும், இரண்டாம் கட்டமாக 89 தொழில்மனைகள் மேம்படுத்தப்படவுள்ளன.

89—

தொழிற்பேட்டை அமைத்தல்

வினா எண் 14239—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், தருமபுரி மற்றும் கடகத்தூர் ஆகிய இரண்டு இடங்களில் ஏற்கெனவே சிட்கோ தொழிற்பேட்டைகள் இயங்கி வருகின்றன. இருப்பினும், புதிய சிட்கோ தொழிற்பேட்டைகளை உருவாக்க தேவையான/தகுந்த இடங்களை தேர்வு செய்து தருமாறு தருமபுரி வட்டாட்சியரிடம் கோரப்பட்டுள்ளது. தகுதியான இடம் கண்டறியப்பட்டதும், புதிய தொழிற்பேட்டை அமைக்க சிட்கோ நடவடிக்கை எடுக்கும்.

மேலும், தொழில் துவங்க ஆர்வமுள்ள குறைந்தபட்சம் 20 தொழில்முனைவோரை உள்ளடக்கிய தொழில்முனைவோர் கூட்டமைப்புகள் சுமார் 50 ஏக்கர் நிலத்துடன் புதிய தொழிற்பேட்டை அமைக்க முன்வரும்பட்சத்தில், ரூ.15 கோடி வரையிலான மாநில அரசின் மானியத்துடன் தொழிற்பேட்டை அமைப்பதற்கு தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவருடன் ஆலோசித்து தமிழ்நாடு சிட்கோமூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

90—

மல்பெரி, பட்டுக்கூடு உற்பத்தியைப் பெருக்குதல்

வினா எண் 21836—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதியில் மல்பெரி மற்றும் பட்டுக்கூடு உற்பத்தியைப் பெருக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் 717 பட்டு விவசாயிகளால் 1,048 ஏக்கரில் மல்பெரி சாகுபடி மேற்கொள்ளப்பட்டு, பட்டுக்கூடு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. மேலும், நடப்பாண்டில் 108 விவசாயிகளால் 143.50 ஏக்கர் பரப்பில் மல்பெரி புது நடவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புது நடவு செய்யப்பட்டுள்ள 143.50 ஏக்கருக்கு மல்பெரி நடவு மானியமும், தனி புழுவளர்ப்பு மனை அமைத்துள்ள 11 விவசாயிகளுக்கு தனி புழு வளர்ப்பு மனைக்கான மானியமும் 17 விவசாயிகளுக்கு நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்களும் கொள்முதல் செய்து வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2022 அக்டோபர் 18]

91—

மீன்பிடி துறைமுகம் அமைத்தல்

வினா எண் 3211—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *குளச்சல் தொகுதி, வாணியக்குடி மீனவ கிராமத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *ஆம். கன்னியாகுமரி மாவட்டம், வாணியக்குடி மீனவ கிராமத்தில் புதிய மீன்பிடித் துறைமுகம் அமைப்பது தொடர்பான பல்வேறு ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு, அதற்கான விரிவான தொழில்நுட்பப் பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆலோசனை பணிகளுக்கு, மாநில அரசின் நிதியின்கீழ் மொத்தம் ரூபாய் ஒரு கோடி 2021-2022 ஆம் நிதியாண்டில் நிருவாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிட்டுள்ளது.*

92—

கால்நடை மருந்தகம் அமைத்தல்

வினா எண் 4075—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *தளி தொகுதி, மாடக்கல் ஊராட்சி, சூளகுண்டா கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

[2022 அக்டோபர் 18

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி, மாடக்கல் ஊராட்சி, சூளகுண்டா கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. தளி தொகுதி, மாடக்கல் ஊராட்சி, சூளகுண்டா கிராமத்தில் 534 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளதால், அங்கு கால்நடை கிளை நிலையம் துவக்கிடவும் சாத்தியக்கூறுகள் இல்லை.

93—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 4277—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், கடங்கனேரி ஊராட்சி, வெங்கடேஸ்வரபுரம் கிராமத்திற்கு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி, வெங்கடேஸ்வரபுரம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. ஆலங்குளம் தொகுதி, வெங்கடேஸ்வரபுரம் கிராமத்தில் 910 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளதால், அங்கு கால்நடை கிளை நிலையம் துவக்கிடவும் சாத்தியக்கூறுகள் இல்லை.

2022 அக்டோபர் 18]

94—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 4402—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகரம், செட்டிச்சாவடி ஊராட்சிப் பகுதியில் கால்நடை மருத்துவமனை கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி, சேலம் மேற்கு தொகுதி, சேலம் ஊராட்சி ஒன்றியம், செட்டிச்சாவடி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. செட்டிச்சாவடி கிராமத்தில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000-க்கும் குறைவாக, அதாவது 2,582 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளன. எனவே, அங்கு கால்நடை கிளை நிலையம் துவக்கிடவும் சாத்தியக்கூறுகள் இல்லை.

95—

கால்நடை கிளை நிலையம் அமைத்தல்

வினா எண் 9714—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, கம்மாலப்பட்டி ஊராட்சி, கம்மாலப்பட்டி கிராமத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) பெண்ணாகரம் தொகுதி, பாலக்கோடு ஊராட்சி ஒன்றியம், கம்மாலப்பட்டி கிராமம் என்ற இடத்தில் கால்நடை மருந்தகம் கோரி, கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

(ஆ) அரசு கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

96—

கால்நடை கிளை நிலையம் அமைத்தல்

வினா எண் 9716—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, காளப்பனஅள்ளி ஊராட்சி, காளப்பனஅள்ளி கிராமத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) பெண்ணாகரம் தொகுதி, காளப்பனஅள்ளி ஊராட்சி, காளப்பனஅள்ளி கிராமத்தில் நேரிடையாக கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

(ஆ) அரசு கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

97—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 14224—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 அக்டோபர் 18]

(அ) தருமபுரி தொகுதி, டொக்குபோதனஅள்ளி ஊராட்சி, தாதநாயக்கன்பட்டி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி, தாதநாயக்கன்பட்டி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. தருமபுரி தொகுதி, டொக்குபோதனஅள்ளி ஊராட்சி, தாதநாயக்கன்பட்டி கிராமத்தில் 4,820 கால்நடை அலகுகள் உள்ளன. இருப்பினும், 3 கி.மீ. தூரத்தில் பாளையம்புதூர் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருவதால், அதன் சேவையை பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதால் புதிய கால்நடை கிளை நிலையம் துவக்கிட அவசியம் இல்லை.

98—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 14226—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பேடரஅள்ளி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி, பேடரஅள்ளி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், பேடரஅள்ளி ஊராட்சியில் 3,221 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளதால், அங்கு முதற்கட்டமாக கால்நடை கிளை நிலையம் துவக்கிட சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, இது அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

99—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 14227—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், ஏலகிரி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி, நல்லம்பள்ளி கிராம ஊராட்சி, ஏலகிரி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், ஏலகிரி ஊராட்சியில் 3,006 கால்நடை அலகுகள் உள்ளதால், அங்கு முதற்கட்டமாக கால்நடை கிளை நிலையம் மட்டுமே துவக்கிட சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, இது அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

100—

கால்நடைப் பண்ணை அமைத்தல்

வினா எண் 14494—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 அக்டோபர் 18]

சேலம் மேற்கு தொகுதியில் கால்நடைப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், தலைவாசல் கூட்டுரோட்டில் 1,102.25 ஏக்கர் பரப்பளவில் ஒருங்கிணைந்த கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான உயர் ஆராய்ச்சி நிலையம் (Advanced Institute for Integrated Research on Livestock and Animal Sciences (AIIRLIVAS)) *நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இது விவசாயிகளின் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் அமையவிருப்பதால், சேலம் மேற்கு தொகுதியில் கால்நடை பண்ணை அமைக்கும் அவசியம் எழவில்லை.*

பட்டியல்-15

1—

கால்நடை மருந்தகம் அமைத்தல்

வினா எண் 15610—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டணம் பேரூராட்சிப் பகுதியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டணம் பேரூராட்சிப் பகுதியில் கடந்த பத்து ஆண்டுகளாக கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது.

2—

படகுகளை பழுதுபார்க்கும் பணிமனை அமைத்தல்

வினா எண் 15659—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சலில் மீன்வளத் துறைமூலம் படகுகளை பழுதுபார்க்கும் பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதி, குளச்சலில் ரூ.9,672.43 இலட்சம் மதிப்பீட்டில், ஒன்றிய மற்றும் மாநில அரசின் பங்களிப்பு திட்டத்தின்கீழ் படகுகளை பழுதுபார்க்கும் பணிமனை வசதிகளுடன்கூடிய மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்பட்டு 21-9-2016 அன்று முதல் மீனவர்களின் பயன்பாட்டில் உள்ளது.

3—

கால்நடை மருத்துவமனையைத் தரமுயர்த்துதல்

வினா எண் 17816—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, அலியாளமங்கலம் கிராமத்தில் உள்ள பகுதி நேர கால்நடை மருத்துவமனையை முழு நேர மருத்துவமனையாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி, போளூர் ஊராட்சி ஒன்றியம், அலியாளமங்கலம் கிராமப் பகுதியில் கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. மேற்படி கிராமத்தில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 5,000-க்கும் குறைவாக 3,022 கால்நடை அலகுகள் உள்ளதால் கால்நடை மருந்தகம் துவக்கிடவும் சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, போளூர் தொகுதி, அலியாளமங்கலம் கிராமத்தில் ஏற்கெனவே செயல்பட்டுவரும் கால்நடை கிளை நிலையத்தின் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

4—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 17901—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், தேங்காமரத்துப்பட்டி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி, தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், தேங்காமரத்துப்பட்டி கிராமப் பகுதியில் கால்நடை

மருத்துவமனை துவக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. மேற்படி கிராமத்தில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000–க்கும் குறைவாக 2,040 மட்டுமே உள்ளதால், அங்கு கால்நடை கிளை நிலையம் அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

5—

கால்நடை கிளை நிலையம் அமைத்தல்

வினா எண் 17945—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, P.கொல்லஅள்ளி ஊராட்சி, சோமனஅள்ளி கிராமத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) பெண்ணாகரம் தொகுதி, P.கொல்லஅள்ளி ஊராட்சி, சோமனஅள்ளி கிராமத்தில் 1–1–2005 முதல் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழாது.

6—

கால்நடை கிளை நிலையம் அமைத்தல்

வினா எண் 17947—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பூகாணஅள்ளி ஊராட்சி, பூகாணஅள்ளி கிராமத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) பெண்ணாகரம் தொகுதி, பூகாணஅள்ளி ஊராட்சி, பூகாணஅள்ளி கிராமத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

7—

கால்நடை கிளை நிலையம் அமைத்தல்

வினா எண் 17950—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, நெருப்பூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, நெருப்பூர் கிராமத்தில் 3–12–2007 முதல் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழாது.

8—

கால்நடை கிளை நிலையம் அமைத்தல்

வினா எண் 18486—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2022 அக்டோபர் 18

(அ) பெண்ணாகரம் தொகுதி, வட்டுவனஅள்ளி ஊராட்சி, தாசம்பட்டி கிராமத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) பெண்ணாகரம் தொகுதி, வட்டுவனஅள்ளி ஊராட்சி, தாசம்பட்டி கிராமத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

(ஆ) அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

9—

குளிர்பதன கிடங்கு அமைத்தல்

வினா எண் 28639—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, நாகமரை, ஒட்டனூர் பகுதிகளில் மீன்களை பதப்படுத்தும் குளிர்பதன கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நாகமரை, ஒட்டனூர் பகுதிகளில் மீன்பிடி உரிமம் பெற்ற மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்கள் அனைத்தும் மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவு விற்பனைச் சங்கம்மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, அன்றையதினமே உள்ளூர் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கும்

2022 அக்டோபர் 18]

விநியோகம் செய்யப்பட்டு வருவதால், மீன்கள் ஏதும் இருப்பு இல்லாத நிலையில், மீன்களை பதப்படுத்தும் குளிர்பதன கிடங்கு அமைக்க வேண்டிய அவசியம் ஏதும் எழவில்லை.

10—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 524—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, 70 பெரமூர் ஊராட்சியில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, பெரமூர் பகுதியில் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான நிலம் கண்டறியப்பட்டு வருகிறது.

11—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 1780—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, விசூர் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி, விசூர் ஊராட்சியின் மின் தேவையை தாழம்பட்டு கிராமத்தில் அமையவிருக்கும் துணை மின் நிலையமே பூர்த்தி செய்ய போதுமானது என்பதால், விசூர் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

12—

மின் இணைப்பு வழங்குதல்

வினா எண் 1781—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, நெய்வேலி நகரம், வட்டம்–21 பகுதியில் மின் இணைப்பு இல்லாத வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி, நெய்வேலி வட்டம்–21, என்.எல்.சி. இந்தியா கார்ப்பரேஷன் லிமிடெட் கட்டுப்பாட்டின்கீழ் வருவதால், அப்பகுதிக்கு மின் இணைப்பு வழங்குவது தொடர்பாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தினால் நடவடிக்கை எடுக்க இயலாது. இது தொடர்பாக என்.எல்.சி. இந்தியா கார்ப்பரேஷன் லிமிடெட் மட்டுமே மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

13—

கூடுதல் மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 1938—திரு. A.J. மணிக்கண்ணன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உளுந்தூர்பேட்டை துணை மின் நிலையத்திலிருந்து பயன்பெறும் பகுதியில் கூடுதலாக மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, 110/33–11 கே.வி. உளுந்தூர்பேட்டை துணை மின் நிலையத்தில் 110/33 கே.வி. 1x16 + 1x10 MVA திறன் கொண்ட இரு மின்மாற்றிகளும், 110/11 கே.வி. பகுதியில் 1x16 MVA திறன் கொண்ட ஒரு மின்மாற்றியும் உள்ளன. துணை மின் நிலையத்திலிருந்து பயன்பெறும் பகுதிகளான 34 கிராமப் பகுதிகளுக்கு கீழ்க்கண்ட 373 எண்ணிக்கை விநியோக மின்மாற்றிகள் வாயிலாக சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது:—

1. 16 கே.வி.ஏ.	–	01
2. 25 கே.வி.ஏ.	–	36
3. 63 கே.வி.ஏ.	–	23
4. 100 கே.வி.ஏ.	–	271
5. 250 கே.வி.ஏ.	–	34
6. 500 கே.வி.ஏ.	–	08
மொத்த எண்ணிக்கை	–	373

14—

கூடுதல் மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 1939—திரு. A.J. மணிக்கண்ணன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநாவலூர் கிராமப் பகுதியில் கூடுதலாக மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, திருநாவலூர் கிராமப் பகுதியில் தற்போது கீழ்க்கண்ட 100 எண்ணிக்கை மின்மாற்றிகள் வாயிலாக சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது:—

1. 16 கே.வி.ஏ.	–	01
2. 25 கே.வி.ஏ.	–	02
3. 63 கே.வி.ஏ.	–	02
4. 100 கே.வி.ஏ.	–	75
5. 200 கே.வி.ஏ .	–	20
மொத்த எண்ணிக்கை	–	100

இதுதவிர, அதிக மின்பளு கொண்ட மின்மாற்றிகள் மற்றும் குறைந்த மின்னழுத்தம் உள்ள மின்மாற்றிகள் அவ்வப்போது கண்டறியப்பட்டு அவற்றை நிவர்த்தி செய்ய உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

15—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 3740—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, வல்லம்புதூர் கிராமத்தில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, வல்லம்புதூர் கிராமத்தில் புதிய துணை மின் நிலையம் அமைக்க அவசியம் தற்போது எழவில்லை.

16—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 3745—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, கீழத்திருப்பூந்துருத்தி ஊராட்சி, கீழத்திருப்பூந்துருத்தி மந்தை அருகில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கீழத்திருப்பூந்துருத்தி மந்தை பகுதிக்கு கீழத்திருப்பூந்துருத்தி-II (100+100) கே.வி.ஏ. (முதன்மை) மின்மாற்றிமூலம் 162 மின் இணைப்புகளுக்கு (வீடுகள்–160, விவசாயம்–1 மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி–1) சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருவதால், புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

17—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 4073—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, ஆனேகொள்ளு ஊராட்சி, தொட்டபேளூர் கிராமத்தில் 110/33 KV திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, ஆனேகொள்ளு ஊராட்சி, தொட்டபேளூர் கிராமத்தில் ஒரு புதிய 110/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு தொட்டபேளூர் கிராமத்தில் 4.0 ஏக்கர் பரப்பளவுள்ள அரசு புறம்போக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் விரைவில் துவங்கப்படும்.

18—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 4074—திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, அக்கொண்டபள்ளி ஊராட்சி, அக்கொண்டபள்ளி கிராமத்தில் 110/33 கே.வி. திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, அக்கொண்டபள்ளி கிராமத்தில், அக்கொண்டபள்ளி 110/33 கே.வி. திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டு, இதற்குத் தேவையான நிலம் கண்டறியப்பட்டு, கையகப்படுத்த தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் துணை மின் நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2022 அக்டோபர் 18]

19—

துணை மின் நிலையத்தை தரமுயர்த்துதல்

வினா எண் 5372—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, கோரணப்பட்டிலுள்ள துணை மின் நிலையத்தை 110/11 KV கூடுதல் திறன் கொண்ட துணை மின் நிலையமாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி, கோரணப்பட்டிலுள்ள துணை மின் நிலையத்தை 110/11 KV கூடுதல் திறன் கொண்ட துணை மின் நிலையமாக மாற்றியமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

20—

மின் வாரிய அலுவலகத்திற்குக் கட்டடம்

வினா எண் 5373—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, வெங்கடாம்பேட்டை மின் வாரிய அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி, வெங்கடாம்பேட்டை இளநிலை பொறியாளர்/இப/மின் வாரிய பிரிவு அலுவலகம் தற்போது தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இளநிலை பொறியாளர்/இப/வெங்கடாம்பேட்டை மின் வாரிய பிரிவு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் கருத்துரு தற்போது ஏதுமில்லை.

[2022 அக்டோபர் 18

21—

மின் வாரிய அலுவலகத்திற்குக் கட்டடம்

வினா எண் 5374—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, காடாம்புலியூரில் உள்ள மின் வாரிய இளநிலை பொறியாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி, இளநிலை பொறியாளர்/இப/ காடாம்புலியூர் மின் வாரிய பிரிவு அலுவலகம் தற்போது தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. சொந்த நிலம் கிடைக்கப் பெறாத காரணத்தால், இளநிலை பொறியாளர்/இப/காடாம்புலியூர் மின் வாரிய பிரிவு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் கருத்துரு தற்போது ஏதுமில்லை.

22—

மின்மாற்றியைத் தரமுயர்த்துதல்

வினா எண் 6953—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவையாறு தொகுதி, விஷ்ணம்பேட்டை கிராமத்தில் உள்ள பழைய 60 கிலோ வாட் திறன் கொண்ட மின்மாற்றியைத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

திருவையாறு தொகுதி, விஷ்ணம்பேட்டை கிராமத்தில் ஏற்கெனவே இயக்கத்தில் உள்ள விஷ்ணம்பேட்டை SS–I 100+100 கே.வி.ஏ./22 KV மின்மாற்றியில் உள்ள மின் பளுவை குறைப்பதற்கு கூடுதலாக ஒரு புதிய விஷ்ணம்பேட்டை SS–VIII 100 கே.வி.ஏ. மின்மாற்றி நிறுவப்பட்டு தற்போது சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

23—

துணை மின் நிலையம் அமைத்தல்

வினா எண் 9821—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, ஆரூர் பேரூராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி, ஆரூரில் தற்சமயம் புதிய துணை மின் நிலையம் அமைக்க அவசியம் எழவில்லை.

24—

காற்றாலை தொழில்நுட்பக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 9822—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2022 அக்டோபர் 18

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் காற்றாலை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் காற்றாலை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கப்படுவதற்கான எந்தவொரு செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.

25—

காற்றாலை மின் உற்பத்தி மையம் தொடங்குதல்

வினா எண் 21815—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் புதிய காற்றாலை மின் உற்பத்தி மையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் காற்றாலை மின் உற்பத்தி மையம் அமைப்பதற்குப் போதுமான காற்று வளம் இல்லை என்பதால், பெண்ணாகரம் தொகுதியில் மின் உற்பத்தி மையம் தொடங்கிட வழிவகை இல்லை.

26—

வர்த்தகக் கண்காட்சி நடத்துதல்

வினா எண் 1724—திரு. இரா. அருள்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 அக்டோபர் 18]

ஜவுளித் தொழிலை மேம்படுத்த கோயம்புத்தூர் அல்லது திருப்பூரில் இந்திய அளவிலான வர்த்தகக் கண்காட்சி நடத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

கொரோனா பெருந்தொற்று ஊரடங்கு கட்டுப்பாடுகள் முடிவுக்கு வந்த பிறகு கோயம்புத்தூர் அல்லது திருப்பூரில் பன்னாட்டு ஜவுளி கண்காட்சியை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

27—

கைத்தறி பூங்கா அமைத்தல்

வினா எண் 5393—திரு. A.K. செல்வராஜ்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, சிறுமுகைப் பகுதியில் கைத்தறி பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, சிறுமுகைப் பகுதியில் கைத்தறி பூங்கா அமைத்திட இதுவரை தொழில் முதலீட்டாளர்களிடமிருந்து கோரிக்கை ஏதும் பெறப்படாததால், இப்பொருள் தொடர்பான முன்மொழிவு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

கைத்தறி பூங்கா அமைக்க அப்பகுதியிலுள்ள தொழில்முனைவோர்கள் முன்வருவார்களேயானால், அவர்களிடமிருந்து பிரேரணை பெறப்பட்டு, உரிய பரிசீலனைக்குப்

பின், ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்ட வழிகாட்டுதலின்படி பரிசீலித்து, ஜவுளிப் பூங்கா அல்லது சிறிய அளவிலான ஜவுளிப் பூங்கா அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

28—

தேன் ஆராய்ச்சி நிலையம் அமைத்தல்

வினா எண் 7813—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *கன்னியாகுமரி மாவட்டத்தில் தேன் ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியமானது, தனக்குத் தேவையான அளவு தேனை கொள்முதல் செய்து தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்படும் அம்சி தேன் பதப்படுத்தும் நிலையத்தில் பதப்படுத்தி, அங்குள்ள தேன் பகுப்பாய்வு கூடத்தின்மூலம் தரம் பரிசோதித்து விற்பனை மேற்கொண்டு வருவதால், தனியாக ஒரு தேன் ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்கான அவசியம் எழவில்லை.*

29—

ஜவுளிப் பூங்கா அமைத்தல்

வினா எண் 21814—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பெண்ணாகரம் தொகுதியில் புதிய ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதியில் புதிய ஜவுளிப் பூங்கா அமைக்க தொழில்முனைவோர்கள் முன்வருவார்களேயானால், அவர்களிடமிருந்து பிரேரணை பெறப்பட்டு அதனை பரிசீலித்து, ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அல்லது சிறிய அளவிலான ஜவுளிப் பூங்கா மற்றும் புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை 2019-ன் வகைகளுக்குட்பட்டு சலுகைகளை வழங்கி, ஜவுளிப் பூங்கா அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

30—

மருத்துவமனையை இடம் மாற்றி, கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 315—திரு. ம. சிந்தனை செல்வன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவிலில் செயல்படும் அரசு பொது மருத்துவமனையை புதிய இடத்திற்கு மாற்றி, புதிய கட்டடங்கள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் அரசு மருத்துவமனை 80 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 947 வெளி நோயாளிகளும், 68 உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இம்மருத்துவமனையானது தற்சமயம் 3 கட்டட

[2022 அக்டோபர் 18

வசதிகளுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. ஒரு கட்டடத்தில் பிரசவம் மற்றும் குழந்தைகள் பிரிவு இயங்கி வருகிறது. மேலும், தரை தளத்துடன்கூடிய மூன்று அடுக்கு (G+3) கட்டடத்தில் வெளி நோயாளிகள் பிரிவு, பின் கவனிப்பு பிரிவு, பச்சிளங் குழந்தை பராமரிப்புப் (NBSU) பிரிவு, அறுவை சிகிச்சைப் பிரிவு மற்றும் ஆண்கள் பிரிவு ஆகியவை செயல்பட்டு வருகின்றன. மற்றொரு தரை தளத்துடன்கூடிய ஓரடுக்கு (G+1) கட்டடமானது தனிப் பிரிவாக (isolation ward) செயல்பட்டு வருகிறது. தற்சமயம் காட்டுமன்னார்கோவில் அரசு பொது மருத்துவமனை, நீண்ட ஆண்டுகளாகவே தேசிய நெடுஞ்சாலையில், மக்களின் எளிய அணுகுமுறையுடன்கூடிய போக்குவரத்து வசதி மற்றும் போதுமான கட்டட வசதிகளுடன் இயங்கி வருகிறது.

31—

ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்தி, விரிவாக்கம் செய்தல்

வினா எண் 1825—திரு. இரா. அருள்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சி, ரெட்டியூர் கோட்டம் எண் 3, ஒட்டியூர் பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்தி விரிவாக்கம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் மாநகராட்சியில் ரெட்டியூர் கோட்டம் எண் 3, ஒட்டியூர் பகுதி, ரெட்டியூர் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்தது. மத்திய அரசின் இலக்கின்படி, 2.5 இலட்சம் நகர்ப்புற மக்கள் தொகைக்கு சராசரியாக ஒரு நகர்ப்புற சமுதாய நல நிலையம் என்ற அடிப்படையில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதிகள் கொண்ட நகர்ப்புற சமுதாய நல நிலையமாக மேம்படுத்தப்படுகின்றது. சேலம்

2022 அக்டோபர் 18]

மாநகராட்சியில் குமாரசாமிப்பட்டி, அண்ணா மருத்துவமனை மற்றும் அன்னதானபட்டி ஆகிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதிகள் கொண்ட நகர்ப்புற சமுதாய நல நிலையங்களாக மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், ரெட்டியூர் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் சுப்ரமணியன் நகர் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. எனவே, சேலம் மாநகராட்சி, ரெட்டியூர் கோட்டம் எண் 3, ஒட்டியூர் பகுதியில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்த தற்போது தேவை எழவில்லை.

32—

மருத்துவக் கழிவுகளை அப்புறப்படுத்துதல்

வினா எண் 1839—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழக மருத்துவமனைகளில் சேரும் மருத்துவக் கழிவுகளை 24 மணி நேரத்தில் அப்புறப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளில் உருவாகும் மருத்துவக் கழிவுகள் உரிய முறையில் பிரிக்கப்பட்டு அவை முறையே அதற்குரிய மஞ்சள், சிகப்பு, வெள்ளை மற்றும் நீல நிறப் பைகள்/தொட்டிகளில் சேகரிக்கப்படுகின்றன. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின்மூலம் ஒப்பளிக்கப்பட்டுள்ள CTF Operator (Common Treatment Facility)*–களால் நாளொன்றுக்கு (24 மணி நேரத்தில்) ஒரு முறை அம்மருத்துவக் கழிவுகள் ஒப்படைக்கப்பட்டு, அவை உரிய முறையில் அகற்றப்பட்டு வருகின்றன.*

[2022 அக்டோபர் 18

33—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 1877—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகராட்சி, கோட்டம் எண் 22, சிவதாபுரம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி, 50,000 மக்கள் தொகைக்கு ஒரு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் தோற்றுவிக்கப்படுகின்றது. சேலம் மாவட்டம், சிவதாபுரம் பகுதி, செவ்வாய்பேட்டை நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்தது. செவ்வாய்பேட்டை நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய மக்கள் தொகை 55,402 ஆகும். மேலும், சிவதாபுரம் பகுதியில் இருந்து 1 கிலோ மீட்டர் தொலைவில் அரிசிபாளையம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது. எனவே, சேலம் மாநகராட்சி, கோட்டம் எண் 22, சிவதாபுரம் பகுதியில் புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

34—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 2250—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, கல்லணையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியிலும், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. கல்லணை கிராமம், பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், கல்லணை கிராமத்திலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் கோவிலடி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. எனவே, தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கல்லணை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை இல்லை.

35—

மருந்தகத்தை பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல்

வினா எண் 2251—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, செங்கிப்பட்டியில் மூடப்பட்ட ஊராட்சி மருந்தகத்தை மீண்டும் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊரகப் பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் மூலமாக

தேவையான மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. முன்னர் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை கட்டுப்பாட்டின்கீழ் மருந்தகங்கள் இயங்கி வந்தன. அடிப்படை கட்டமைப்பு உள்ள மருந்தகங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன. மற்ற மருந்தகங்களிலிருந்த பணியாளர்கள் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதனடிப்படையில், அரசாணை (நிலை) எண் 60, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 3–3–2015–ன்படி, தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டி ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தில் பணியாற்றிய பணியாளர்களை பொது சுகாதாரத் துறையில் ஈர்த்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டு, செங்கிப்பட்டி ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தில் பணியாற்றிய பணியாளர்கள் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககத்தின் கட்டுப்பாட்டின்கீழ் ஈர்த்துக்கொள்ளப்பட்டனர். செங்கிப்பட்டி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருவதால், செங்கிப்பட்டியில் மூடப்பட்ட மருந்தகத்தை மீண்டும் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கான தேவை எழவில்லை.

36—

கூடுதல் கட்டடம் கட்டுதல்

வினா எண் 2399—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதியில் உள்ள அரசு மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவத்திற்கு கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதியில் 150 படுக்கை வசதிகள் கொண்ட பொன்னேரி அரசு வட்ட மருத்துவமனை

2022 அக்டோபர் 18]

மற்றும் 32 படுக்கை வசதிகள் கொண்ட பழவேற்காடு அரசு வட்டம் சாரா மருத்துவமனை மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்கக நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றன. பொன்னேரி அரசு வட்ட மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 681 வெளி நோயாளிகளும், 50 உள் நோயாளிகளும், மாதமொன்றுக்கு சராசரியாக 49 பிரசவங்கள் மற்றும் 22 அறுவை சிகிச்சை பிரசவங்களும் நடைபெறுகின்றன.

பொன்னேரி அரசு மருத்துவமனையில் 32 படுக்கை வசதிகள் கொண்ட மகப்பேறு பிரிவு தனிக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேலும், இம்மருத்துவமனையில் உள்ள 4 மகப்பேறு சிகிச்சை மருத்துவர்களைக் கொண்டு மகப்பேறு சிகிச்சைக்காக வரும் தாய்மார்களுக்கு சிறப்பான சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

பழவேற்காடு அரசு வட்டம் சாரா மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 382 வெளி நோயாளிகளும், 26 உள் நோயாளிகளும், மாதமொன்றுக்கு சராசரியாக 2 பிரசவங்களும் நடைபெறுகின்றன. மேலும், பழவேற்காடு அரசு மருத்துவமனையில் மகப்பேறு சிகிச்சைக்காக வரும் தாய்மார்களின் எண்ணிக்கை மிக மிக குறைவு என்பதால் இம்மருத்துவமனைக்கு தனியாக மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவு கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை.

37—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 2461—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவையாறு தொகுதி, செங்கிப்பட்டி ஊராட்சி ஒன்றிய மருத்துவமனை இயங்காமல் உள்ளதால், செங்கிப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

[2022 அக்டோபர் 18

ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை கட்டுப்பாட்டின்கீழ் ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் இயங்கி வந்தன. அடிப்படை கட்டமைப்பு உள்ள மருந்தகங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன. மற்ற மருந்தகங்களிலிருந்த பணியாளர்கள் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அரசு ஆணை (நிலை) எண் 60, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 3–3–2015–ன்படி, தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டி ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தில் பணியாளர்களை பொது சுகாதாரத் துறையில் ஈர்த்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டு, செங்கிப்பட்டி ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தில் பணியாற்றிய பணியாளர்கள் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககத்தின்கீழ் ஈர்த்துக்கொள்ளப்பட்டனர்.

மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும் இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியிலும், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. செங்கிப்பட்டி கிராமத்திலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் பாளையப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையமும், 8 கிலோ மீட்டர் தொலைவில் பூதலூர் அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதால், தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஊராட்சி ஒன்றியம், செங்கிப்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை இல்லை.

38—

மருத்துவக் கல்லூரி அமைத்தல்

வினா எண் 3011—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதியில் சித்தா, ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோபதி, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் 6 அரசினர் இந்தியமுறை மருத்துவக் கல்லூரிகளும், தனியார் பங்களிப்பில் 40 இந்திய மருத்துவமுறை கல்லூரிகளும் சேர்த்து மொத்தம் 46 கல்லூரிகள் செயல்படுகின்றன. இதில் சித்த மருத்துவமுறைக்கு 2 அரசு மற்றும் 9 தனியார் சுயநிதி கல்லூரிகளும், ஆயுர்வேத மருத்துவமுறைக்கு 1 அரசு மற்றும் 5 சுயநிதி கல்லூரிகளும், யுனானி மருத்துவமுறைக்கு 1 அரசு கல்லூரியும், ஹோமியோபதி மருத்துவமுறைக்கு 1 அரசு மற்றும் 9 சுயநிதி கல்லூரிகளும், யோகா மற்றும் இயற்கை மருத்துவமுறைக்கு 1 அரசு மற்றும் 17 தனியார் சுயநிதி கல்லூரிகளும் தற்போது செயல்பட்டு வருகின்றன. மேற்காணும் சூழ்நிலையில், நெய்வேலி தொகுதியில் சித்தா, ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோபதி, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து மருத்துவக் கல்லூரி அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

39—

மருத்துவமனையைத் தரமுயர்த்துதல்

வினா எண் 3862—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, குளச்சல் மருத்துவமனையை முழுநேர மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி உள் நோயாளி மற்றும் வார்டுகளுடன் செயல்படுத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி, குளச்சல் அரசு மருத்துவமனை 50 படுக்கை வசதிகள் கொண்ட வட்டம்

சாரா அரசு மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 353 வெளி நோயாளிகளும், 41 உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இம்மருத்துவமனை ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவு, மகப்பேறுப் பிரிவு, தொற்றா நோய் சிகிச்சைப் பிரிவு, வெளி நோயாளிகள் பிரிவு, அறுவை சிகிச்சைப் பிரிவு மற்றும் குழந்தை நல பிரிவு X-Ray, ECG, USG Scan மற்றும் முழுமையான ஆய்வகம் ஆகிய வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு சுகாதார திட்டத்தின்கீழ் ரூ.110.40 இலட்சம் செலவில் வெளி நோயாளிகள் பிரிவு, அறுவை அரங்கம், மகப்பேறுப் பிரிவு மற்றும் 30 படுக்கை வசதிகள் கொண்ட உள் நோயாளிகள் பிரிவு, மருத்துவக் கழிவுகள் சேகரிப்பு, அவசர ஊர்தி அறை, பிணவறை ஆகியவை கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. தற்சமயம் குளச்சல் அரசு மருத்துவமனை உள் நோயாளி பிரிவு போதுமான வார்டுகளுடன் முழுநேர மருத்துவமனையாகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

40—

மருத்துவமனையைத் தரமுயர்த்துதல்

வினா எண் 4211—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, ஏரியூர் அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, ஏரியூர் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 20 கி.மீ.-ல் பெண்ணாகரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை 152 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு

2022 அக்டோபர் 18]

சராசரியாக 955 வெளி நோயாளிகளும், 96 உள் நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். பெண்ணாகரம் தொகுதியில் ஏரியூர் பகுதியிலிருந்து அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய பெண்ணாகரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை 20 கி.மீ.-ல் செயல்பட்டு வருவதால், ஏரியூர் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

41—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 5513—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியம், காவூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் (Norms) ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

காவூர் கிராமத்திலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் கடையம் ஆரம்ப சுகாதார நிலையமும், 7 கிலோ மீட்டர் தொலைவில் வடக்கு பாப்பான்குளம் ஆரம்ப சுகாதார நிலையமும், 8 கிலோ மீட்டர் தொலைவில் கோயிலூத்து ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், தென்காசி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள காவூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[2022 அக்டோபர் 18

42—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 5514—திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், கடங்கனேரி ஊராட்சி, வெங்கடேஷ்வரபுரம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

வெங்கடேஷ்வரபுரம் கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் உக்கிரன்கோட்டை (திருநெல்வேலி மாவட்டம்) ஆரம்ப சுகாதார நிலையமும், 8 கிலோ மீட்டர் தொலைவில் நெட்டூர் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், தென்காசி மாவட்டம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வெங்கடேஷ்வரபுரம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

43—

மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 5515—திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், காளத்திமடம் கிராமத்திற்கு மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், காளத்திமடம் கிராமத்திலிருந்து 3 கி.மீ. தூரத்தில் 60 படுக்கைகள் மற்றும் அனைத்து வசதிகளுடன்கூடிய ஆலங்குளம் அரசு வட்ட மருத்துவமனை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 470 வெளி நோயாளிகளும், 8 உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். ஆலங்குளம் ஒன்றியத்திலேயே நெட்டூர் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமும், ஊத்துமலை, வீராணம், மாறாந்தை மற்றும் மருதாம்புத்தூர் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் இயங்கி வருகின்றன. எனவே, ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், காளத்திமடம் கிராமத்திற்கு தற்சமயம் மருத்துவமனை அமைக்க அவசியம் எழவில்லை.

44—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 5516—திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் பேரூராட்சி, ஆலங்குளம் கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. அரசாணை (நிலை) எண் 233, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 23-9-2016-ன்படி, தென்காசி மாவட்டம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் ஆலங்குளம் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. இந்தத் தாலுகா மருத்துவமனை ஆலங்குளம் கிராமத்திலிருந்து ½ கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. எனவே, தென்காசி மாவட்டம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில், ஆலங்குளம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

45—

ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்துதல்

வினா எண் 5522—திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியத்திற்குட்பட்ட கருமனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தில் கரும்பனூர் கூடுதல் ஆரம்ப சுகாதார

நிலையம் செயல்பட்டு வருகிறது. அரசாணை (நிலை) எண் 320, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 29-9-2003-ன்படி, கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தில் பாவூர்சத்திரம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையமும், அரசாணை (நிலை) எண் 142, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 30-4-2007-ன்படி அரியப்பபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும் 30 படுக்கை வசதிகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக தரம் உயர்த்தப்பட்டு, அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றன. எனவே, இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கரும்பனூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

46—

சுற்றுச்சுவர் கட்டுதல்

வினா எண் 5591—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, புலியூர் ஊராட்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் புலியூர் காட்டுசாகை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. புலியூர் காட்டுசாகை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுற்றுச்சுவர் கட்ட பொதுப் பணித் துறையிடமிருந்து மதிப்பீடு பட்டியல் கோரப்பட்டுள்ளது. மதிப்பீடு பட்டியல் பெறப்பட்டவுடன், முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கப்பட்டு புலியூர் காட்டுசாகை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுற்றுச்சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

47—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 6832—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், வழுதிசைமேடு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. வழுதிசைமேடு ஊராட்சியிலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் மீஞ்சூர் ஆரம்ப சுகாதார நிலையமும், 8 கிலோ மீட்டர் தொலைவில் பூதூர் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வழுதிசைமேடு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

48—

108 அவசரகால ஊர்தி வழங்குதல்

வினா எண் 6833—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், சீமாபுரம் ஊராட்சிக்கு 108 அவசரகால வாகனம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், சீமாபுரம் ஊராட்சி பகுதியைப் பொறுத்தவரை, மொத்தம் நான்கு 108 அவசர கால ஊர்திகள் தற்போது சேவை வழங்கி வருகின்றன. அழைப்பு பெறப்பட்டவுடன் 10 முதல் 15 நிமிடங்களுக்குள் 108 அவசரகால ஊர்தியானது அழைப்பு பெறப்பட்ட இடத்திற்கு தற்போது சென்றடைகின்றன.

49—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 6834—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், நெடுவரம்பாக்கம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. நெடுவரம்பாக்கம் ஊராட்சியிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் பஞ்செட்டி ஆரம்ப சுகாதார நிலையமும், 8 கிலோ மீட்டர் தொலைவில்

பொன்னேரி அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதால், திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள நெடுவரம்பாக்கம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

50—

ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சீரமைத்தல்

வினா எண் 6836—திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், ஆமூர் ஊராட்சி, ஆமூர் துணை சுகாதார நிலையத்தைச் சீரமைத்து, பயன்பாட்டிற்குக் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஊராட்சி ஒன்றியத்தில் பஞ்செட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் ஆமூர் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

ஆமூர் துணை சுகாதார நிலையக் கட்டடம் முற்றிலும் பழுதடைந்துள்ளதால், தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. பழுதடைந்துள்ள கட்டடத்திற்கு பொதுப் பணித் துறையிடமிருந்து தகுதி நீக்க சான்றிதழ் கோரப்பட்டுள்ளது. தகுதி நீக்க சான்றிதழ் பெறப்பட்ட பின், முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கப்பட்டு, ஆமூர் துணை சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

2022 அக்டோபர் 18]

51—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 6837—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், ஆண்டாள்குப்பம் ஊராட்சி, ஆண்டாள்குப்பம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில்* 30,000 *மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில்* 20,000 *மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியிலும், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.*

ஆண்டாள்குப்பம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. ஆண்டாள்குப்பம் கிராமத்திலிருந்து 3 *கிலோ மீட்டர் தொலைவில் பஞ்செட்டி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆண்டாள்குப்பம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

52—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 6838—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2022 அக்டோபர் 18

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், வீச்சூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

வீச்சூர் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. வீச்சூர் ஊராட்சியிலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் பூதூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வீச்சூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

53—

மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 6848—திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் பேரூராட்சி, அடைக்கலப்பட்டணம் கிராமத்தில் மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

2022 அக்டோபர் 18]

(அ) மற்றும் (ஆ) ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் பேரூராட்சி, அடைக்கலப்பட்டணம் கிராமத்திலிருந்து 7.5 கி.மீ. தூரத்தில் 60 படுக்கைகள் மற்றும் அனைத்து வசதிகளுடன்கூடிய ஆலங்குளம் அரசு வட்ட மருத்துவமனை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 470 வெளி நோயாளிகளும், 8 உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். கீழப்பாவூர் பேரூராட்சியிலேயே அரியப்பபுரம் மற்றும் பாவூர்சத்திரம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும், சுரண்டை, மடியனூர் மற்றும் கரும்பனூர் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், அடைக்கலப்பட்டணம் கிராமத்திலிருந்து அரியப்பபுரம் மற்றும் பாவூர்சத்திரம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் முறையே 10 மற்றும் 7.4 கி.மீ. தூரத்தில் செயல்பட்டு வருகின்றன. எனவே, ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் பேரூராட்சி, அடைக்கலப்பட்டணம் கிராமத்தில் மருத்துவமனை அமைக்க தற்சமயம் அவசியம் எழவில்லை.

54—

ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்துதல்

வினா எண் 7127—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, காடாம்புலியூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

30 படுக்கை வசதிகள் இல்லாத ஊராட்சி ஒன்றியத்தில், ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினைத் தரமுயர்த்துதல் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அரசாணை (நிலை) எண் 378, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 3-2-2008-ன்படி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியத்தில் மருங்கூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு

வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள காடாம்புலியூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

55—

ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்துதல்

வினா எண் 7128—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, வெங்கடாம்பேட்டையிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் வெங்கடாம்பேட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. 30 படுக்கை வசதிகள் இல்லாத ஊராட்சி ஒன்றியத்தில், ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினைத் தரமுயர்த்துதல் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அரசாணை (நிலை) எண் 378, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 12-11-2008-ன்படி, தீர்த்தனகரை மற்றும் திருச்சோபுரம் ஆகிய கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வெங்கடாம்பேட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

2022 அக்டோபர் 18]

56—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 7284—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகரம், செட்டிசாவடி ஊராட்சி பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

செட்டிசாவடி ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகின்றது. செட்டிசாவடி ஊராட்சியிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் கன்னங்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், சேலம் மாவட்டம், சேலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள செட்டிசாவடி ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

57—

ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்துதல்

வினா எண் 7286—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், வீரபாண்டி ஒன்றியம், இளம்பிள்ளை பேரூராட்சியில் அமைந்துள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

[2022 அக்டோபர் 18

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், வீரபாண்டி ஒன்றியம், இளம்பிள்ளை பகுதியில் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. வீரபாண்டி ஒன்றியத்தில் பூலாவாரி, வீரபாண்டி மற்றும் முருங்கப்பட்டி கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் இயங்கி வருகின்றன. மேலும், இளம்பிள்ளை மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 20 கி.மீ. தூரத்தில் எடப்பாடி அரசு மருத்துவமனையும், 22 கி.மீ. தூரத்தில் ஓமலூர் அரசு மருத்துவமனையும் சிறப்பான வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றன. உயர் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் அருகிலுள்ள வட்ட மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைக்கும் பரிந்துரைக்கப்படுவதால், வீரபாண்டி ஒன்றியம், இளம்பிள்ளை பேரூராட்சியில் அமைந்துள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

58—

மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 7287—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திண்டுக்கல் மாவட்டம், சின்னாளப்பட்டியில் அரசு மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், சின்னாளப்பட்டியில் 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும், இங்கிருந்து 10 கி.மீ.-ல், 60 படுக்கைகள் கொண்ட ஆத்தூர் அரசு வட்ட மருத்துவமனை

2022 அக்டோபர் 18]

சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மேலும், சின்னாளப்பட்டி மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 12 கி.மீ.-ல் அனைத்து வசதிகளுடன்கூடிய திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. எனவே, திண்டுக்கல் மாவட்டம், சின்னாளப்பட்டியில் அரசு மருத்துவமனை அமைக்க தற்சமயம் அவசியம் எழவில்லை.

59—

குடிநீர் சுத்திகரிப்பு அமைப்பை சீரமைத்தல்

வினா எண் 7612—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், பழவேற்காடு அரசு மருத்துவமனையில் குடிநீர் சுத்திகரிப்பு (R.O.) அமைப்பை சீரமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், பழவேற்காடு அரசு மருத்துவமனையில் 2 நீர் சுத்திகரிப்பு அமைப்பு ஏற்படுத்தப்பட்டு, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் (R.O. Plant) வசதி அனைத்துப் பிரிவுகளிலும் உள்ள நோயாளிகள் பயன்பெறும் வகையில் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

60—

இன்வெர்டர்-UPS அமைத்தல்

வினா எண் 7613—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், பழவேற்காடு அரசு மருத்துவமனை இரத்த பரிசோதனைக் கூடத்தில் ஒரு இன்வெர்டர்–UPS அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், பழவேற்காடு அரசு மருத்துவமனையில் 15 கே.வி.ஏ. ஜெனரேட்டர் வசதி உள்ளது. இதனைப் பயன்படுத்தி மின்தடையால் ஆய்வக பரிசோதனைக்கு எவ்வித இடையூறும் ஏற்படாதவாறு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, பிரத்யேகமாக, இரத்த பரிசோதனைக் கூடத்திற்கு இன்வெர்டர்–UPS வழங்க அவசியம் எழவில்லை.

61—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 7616—திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், காட்டாவூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே

2022 அக்டோபர் 18]

குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. காட்டாவூர் ஊராட்சியிலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் மெதூர் ஆரம்ப சுகாதார நிலையமும், 6 கிலோ மீட்டர் தொலைவில் பொன்னேரி அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதால், திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள காட்டாவூர் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை இல்லை.

62—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 7647—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, திங்கள் நகர் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. திங்கள் நகர் பேரூராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. திங்கள் நகர் பேரூராட்சியிலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் நடுவூர்க்கரை ஆரம்ப சுகாதார நிலையமும், 3 கிலோ மீட்டர் தொலைவில் குளச்சல் அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருகின்றன. எனவே, தூரத்தின் அடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் சுகாதார மாவட்டம், குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்திலுள்ள திங்கள் நகர் பேரூராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

63—

மருத்துவமனையைத் தரமுயர்த்துதல்

வினா எண் 7649—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, குளச்சல் மருத்துவமனையை நவீன உயர்தர மருத்துவமனையாகத் தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி, குளச்சல் அரசு மருத்துவமனை 50 படுக்கைகள் கொண்ட வட்டம் சாரா அரசு மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 353 வெளி நோயாளிகளும், 41 உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இம்மருத்துவமனை ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவு, மகப்பேறுப் பிரிவு, தொற்றா நோய் சிகிச்சைப் பிரிவு, வெளி நோயாளிகள் பிரிவு, அறுவை சிகிச்சைப் பிரிவு மற்றும் குழந்தை நலப் பிரிவு, X-Ray, ECG, USG Scan மற்றும் முழுமையான ஆய்வகம் ஆகிய வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு சுகாதார திட்டத்தின்கீழ் ரூ.110.40 இலட்சம் செலவில் வெளி நோயாளிகள் பிரிவு, அறுவை அரங்கம், மகப்பேறு பிரிவு மற்றும் 30 படுக்கைகள் கொண்ட உள் நோயாளிகள் பிரிவு, மருத்துவக் கழிவுகள் சேகரிப்பு, அவசர ஊர்தி அறை, பிணவறை ஆகியவை கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

குளச்சல் அரசு மருத்துவமனையில் மாதமொன்றுக்கு சராசரியாக 4,089 ஆய்வகப் பரிசோதனைகளும், 42 எக்ஸ்ரேக்களும், 32 ECG, 67 USG எடுக்கப்பட்டு வருகின்றன. இங்கு மாதமொன்றுக்கு சராசரியாக 15 பெரிய அறுவை சிகிச்சைகளும், 199 சிறிய அறுவை சிகிச்சைகளும், 9 பிரசவங்களும், 5 அறுவை சிகிச்சை பிரசவங்களும் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட, குறைவான

2022 அக்டோபர் 18]

எண்ணிக்கையிலேயே உள் நோயாளிகள் மற்றும் வெளி நோயாளிகள் சிகிச்சைக்கு வருகின்றனர். இம்மருத்துவமனையின் செயல்பாட்டிற்கேற்ப மருத்துவம், மருத்துவம் சாரா மற்றும் இதர பணியாளர்களைக் கொண்டு நவீன வசதிகளுடன் இப்பகுதி மக்களுக்கு சிறப்பாக சேவை வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இம்மருத்துவமனையை தற்போது மேலும் தரமுயர்த்த அவசியம் எழவில்லை.

64—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 7836—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், அ.ரெட்டிபாளையம் ஊராட்சி, அ.ரெட்டிபாளையம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. அ.ரெட்டிபாளையம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. அ.ரெட்டிபாளையம் கிராமத்திலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் காட்டூர் ஆரம்ப சுகாதார நிலையமும், பொன்னேரி அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருகின்றன. எனவே, தூரத்தின் அடிப்படையில் திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அ.ரெட்டிபாளையம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[2022 அக்டோபர் 18

65—

சுற்றுச்சுவர் கட்டுதல்

வினா எண் 11376—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, மதகொண்டப்பள்ளி ஊராட்சி, மதகொண்டப்பள்ளி துணை சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஊராட்சி ஒன்றியம், மதகொண்டப்பள்ளி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் மதகொண்டப்பள்ளி துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மட்டுமே சுற்றுச்சுவர் கட்ட முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. துணை சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

66—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 11383—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம், இருதுக்கோட்டை ஊராட்சி, இருதுக்கோட்டை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. இருதுக்கோட்டை கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. இருதுக்கோட்டை கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் உனிசெட்டி ஆரம்ப சுகாதார நிலையமும், 3 கிலோ மீட்டர் தொலைவில் தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதால், கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள இருதுக்கோட்டை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

67—

சுற்றுச்சுவர் அமைத்தல்

வினா எண் 11454—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, ஆச்சாரஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட தொட்டலாம்பட்டி கிராமத்திலுள்ள துணை சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், பாப்பாரப்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் தொட்டலாம்பட்டி துணை சுகாதார நிலையம்

செயல்பட்டு வருகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மட்டுமே சுற்றுச்சுவர் கட்ட முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. துணை சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

68—

ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்துதல்

வினா எண் 11597—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், இண்டூர் ஊராட்சி, இண்டூரில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்தி 30 படுக்கை வசதிகளுடன் 24 மணி நேரமும் இயங்கும் மருத்துவமனையாக மாற்ற அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் இண்டூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது. 30 படுக்கை வசதிகள் இல்லாத ஊராட்சி ஒன்றியத்தில், ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினைத் தரமுயர்த்துதல் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அரசாணை (நிலை) எண் 320, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 29-9-2003-ன்படி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் தொப்பூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள இண்டூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

அரசாணை (நிலை) எண் 33, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 24-2-2006-ன்படி, இண்டூர் கூடுதல் ஆரம்ப

2022 அக்டோபர் 18]

சுகாதார நிலையத்தில், 3 செவிலியர்கள் நியமிக்கப்பட்டு சுழற்சி முறையில் 24 மணி நேர பிரசவ கவனிப்பு சேவை வழங்கப்பட்டு வருகிறது.

69—

துணை சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்துதல்

வினா எண் 11599—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், அதியமான்கோட்டை ஊராட்சி, அதியமான்கோட்டையிலுள்ள துணை சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்தி, அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. அதியமான்கோட்டை கிராமத்திலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் நல்லம்பள்ளி ஆரம்ப சுகாதார நிலையமும், 7 கிலோ மீட்டர் தொலைவில் பாளையம்புதூர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் செயல்பட்டு வருவதால், தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அதியமான்கோட்டை கிராமத்திலுள்ள துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

70—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 11648—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2022 அக்டோபர் 18

(அ) தளி தொகுதி, அந்தேவனப்பள்ளி ஊராட்சி, அந்தேவனப்பள்ளி கிராமத்தில் சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் (Norms), ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

அந்தேவனப்பள்ளி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. அந்தேவனப்பள்ளி கிராமம், தளி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள்தொகை 1,99,073 ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் 7 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருவதால், கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அந்தேவனப்பள்ளி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

71—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 11685—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, மாளிகம்பட்டு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. மாளிகம்பட்டு ஊராட்சியிலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் காடாம்புலியூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மாளிகம்பட்டு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

72—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 11856—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் ஒன்றியம், கடுவனூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

கடுவனூர் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. கடுவனூர் ஊராட்சியிலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் வடபொன்பரப்பி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கடுவனூர் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

73—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 11856—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் ஒன்றியம், கடம்பூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

30,000 *மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில்* (Norms), *ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.*

கடம்பூர் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. கடம்பூர் ஊராட்சியிலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் வாணாபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கடம்பூர் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

74—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 11858—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் ஒன்றியம், ஈருடையாம்பட்டு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. ஈருடையாம்பட்டு ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. ஈருடையாம்பட்டு ஊராட்சி ரிஷிவந்தியம் ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள்தொகை 1,63,033 ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருவதால், கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஈருடையாம்பட்டு ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

75—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 11860—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் ஒன்றியம், லா.கூடலூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

[2022 அக்டோபர் 18

லா.கூடலூர் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. லா.கூடலூர் ஊராட்சி, ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,63,033 ஆகும். ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்தில் 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருவதால், கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள லா.கூடலூர் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

76—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 11861—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் ஒன்றியம், ஏந்தல் ஊராட்சியில் ஆதி திராவிடர் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

ஏந்தல் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. ஏந்தல் ஊராட்சியிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் வாணாபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஏந்தல் ஊராட்சியில் ஆதி திராவிடர் பகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

77—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 11862—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் ஒன்றியம், சூளாங்குறிச்சி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

சூளாங்குறிச்சி ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. சூளாங்குறிச்சி ஊராட்சியிலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் மணிமுத்தாநதி ஆரம்ப சுகாதார நிலையமும், 8 கிலோ மீட்டர் தொலைவில் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் செயல்பட்டு வருவதால், கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சூளாங்குறிச்சி ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

78—

துணை சுகாதார நிலையத்தை இயக்குதல்

வினா எண் 12765—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், வடக்கநல்லூர் ஊராட்சிக்குட்பட்ட கொள்ளுமேடு ஆரம்ப சுகாதார நிலையத்தை மீண்டும் பயன்பாட்டிற்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கொள்ளுமேடு கிராமத்தில் வடக்கநல்லூர் துணை சுகாதார நிலையம் மட்டுமே செயல்பட்டு வருகிறது. வடக்கநல்லூர் துணை சுகாதார நிலையக் கட்டடம் முற்றிலும் பழுதடைந்துள்ளது. தற்போது, வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

வடக்கநல்லூர் துணை சுகாதார நிலையக் கட்டடத்திற்குப் பொதுப் பணித் துறையிடமிருந்து தகுதி நீக்க சான்றிதழ் கோரப்பட்டுள்ளது. இனி வருங்காலத்தில் நிதியொதுக்கீடு பெற்று, முன்னுரிமை அடிப்படையில் வடக்கநல்லூர் துணை சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

79—

சுற்றுச்சுவர் கட்டுதல்

வினா எண் 13023—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், நாகர்கூடல் ஊராட்சி, நாகர்கூடல் துணை சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச்சுவர் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் இண்டூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் நாகர்கூடல் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மட்டுமே சுற்றுச்சுவர் கட்ட முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. துணை சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

2022 அக்டோபர் 18]

80—

பேருந்து இயக்குதல்

வினா எண் 460—திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவொற்றியூர் தொகுதி, திருவொற்றியூர் பேருந்து நிலையத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் வாயிலாக, தடம் எண் 324T–ல் திருவொற்றியூர்–வேளாங்கண்ணிக்கும் மற்றும் தடம் எண் 198T–ல் திருவொற்றியூர்–நாகர்கோவிலுக்கும் பேருந்துகள் இருமுனைகளிலிருந்தும் தினசரி இயக்கப்படுகின்றன. மேற்கூறிய பேருந்துகளில் திருவொற்றியூரிலிருந்து முன்பதிவு செய்து பயணிக்க இணையதளத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கூறிய பேருந்து வசதிகளே போதுமானதாகக் கருதப்படுகிறது.

81—

கட்டண சலுகை வழங்குதல்

வினா எண் 1734—திரு. இரா. அருள்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வெளியூர்களில் தங்கிப் பயிலும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு தங்களின் சொந்த ஊர்களுக்குச் சென்று வர பேருந்து கட்டணத்தில் 50 சதவிகித சலுகை வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரசு மற்றும் தனியார் பள்ளி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அரசு தொழில்நுட்பக் கல்லூரி, அரசு தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் அரசு உதவிபெறும் தொழிற்பயிற்சி நிலையம் ஆகியவற்றில் தற்போது வீட்டிலிருந்து பள்ளி/கல்லூரிக்குச் செல்லும் மாணவ/மாணவியருக்கு பேருந்தில் 100 சதவிகித இலவச பயண அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அனைத்து தனியார் கல்லூரி மாணவ/மாணவியருக்கு 50 சதவிகித கட்டண சலுகை வழங்கப்படுகிறது. இச்சூழ்நிலையில், வெளியூர்களில் தங்கிப் பயிலும் பள்ளி/கல்லூரி, மாணவ/மாணவியருக்கு சொந்த ஊர்களுக்குச் சென்று வர பேருந்து கட்டணத்தில் தனியே 50 சதவிகித சலுகை வழங்குவதற்கான சாத்தியக்கூறு இல்லை.

82—

ஷேர் ஆட்டோக்களுக்கு உரிமம் வழங்குதல்

வினா எண் 2453—திரு. இரா. அருள்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் சிறிய கிராமங்களுக்குச் செல்லும் மாதிரியான ஷேர் ஆட்டோக்கள் இயக்க புதியதாக உரிமம் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில் சிறிய கிராமங்களுக்குச் செல்லும் மாதிரியான ஷேர் ஆட்டோக்கள் இயக்க புதியதாக உரிமம் வழங்குவது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2022 அக்டோபர் 18]

83—

பேருந்து வசதி

வினா எண் 2458—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, காட்டுப்பள்ளியிலிருந்து பழவேற்காடு வரை பேருந்து இயக்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தடம் எண் 556–ல் 2 பேருந்துகள் காட்டுப்பள்ளியிலிருந்து பழவேற்காடு வரை மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் தற்போது இயக்கப்படுகின்றன.

84—

பேருந்து வசதி

வினா எண் 3074—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, பொன்னேரி வட்டம், புதுச்சேரிமேடு முதல் அண்ணாமலைச்சேரி வரை பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தடம் எண் 558C–ல் ஒரு பேருந்து செங்குன்றத்திலிருந்து பொன்னேரி வழியாக புதுச்சேரிமேடு

வரை அப்பகுதி பொது மக்களின் போக்குவரத்து தேவைக்கேற்ப மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகிறது. மேலும், புதுச்சேரிமேட்டிலிருந்து அண்ணாமலைச்சேரி சுமார் 2.8 கி.மீ. தூரத்தில் உள்ளது. அப்பகுதியில் உள்ள சாலை, பேருந்து போக்குவரத்திற்கு ஏற்றதாக இல்லை. எனவே, தடம் எண் 558C-ல் இயக்கப்படும் பேருந்தினை அண்ணாமலைசேரி வரை தற்போது நீட்டித்து இயக்க இயலாத நிலை உள்ளது.

85—

அம்மா குடிநீர் விற்பனை

வினா எண் 3335—திரு. இரா. அருள்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்து பேருந்து நிலையங்களிலும் மீண்டும் அம்மா குடிநீர் விற்பனை செய்யும் திட்டத்தை தொடங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் உள்ள அனைத்து பேருந்து நிலையங்களிலும் அம்மா குடிநீர் ரூ.10/-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. இந்நிலையில் அம்மா குடிநீர் உற்பத்தி செய்யும் கும்மிடிப்பூண்டியில் உள்ள தொழிற்சாலையில் அம்மா குடிநீர் தயாரிக்கும் இயந்திரம் பழுதடைந்த காரணத்தால், அதனை மாற்றம் செய்து புதிய இயந்திரம் பொருத்த வேண்டிய சூழ்நிலை தற்போது உருவாகியுள்ளது.

86—

போக்குவரத்துப் பணிமனையைப் புதுப்பித்தல்

வினா எண் 4206—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் போக்குவரத்துக் கழக பணிமனை வளாகம் பழுதடைந்துள்ளதால் உடனடியாகப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

2022 அக்டோபர் 18]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் போக்குவரத்துப் பணிமனையில் நகரப் பேருந்துகள் 21 மற்றும் புறநகர் பேருந்துகள் 33 ஆக மொத்தம் 54 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பணிமனையில் பராமரிப்பு கூடம், அலுவலகம், காசாளர் பிரிவு, கிடங்கு, ஓய்வகம், உணவகம், இருசக்கர வாகனக் கூடம், ஜெனரேட்டர் அறை, பாதுகாவலர் அறை மற்றும் கழிவறை ஆகிய அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளும் தேவையான அளவிற்கு உள்ளன. மேலும், பணிமனை வளாகத்தில் கான்கிரீட் தரைத்தளம் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, பெண்ணாகரம் போக்குவரத்துக் கழக பணிமனை வளாகத்தைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

87—

பேருந்து வசதி

வினா எண் 4207—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்திலிருந்து ஏரியூர், நெருப்பூர் வழியாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக பெண்ணாகரத்திலிருந்து ஏரியூர், நெருப்பூர் வழியாக 6 புறநகர் பேருந்துகளின்மூலம் 12 நடைகளும் மற்றும் 2 நகரப் பேருந்துகளின்மூலம் 16 நடைகளும்

ஆக மொத்தம், நாளொன்றுக்கு 28 நடைகள் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொது மக்களின் வசதிக்காகவும் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, இப்பேருந்து வசதிகளே போதுமானதாகக் கருதப்படுகிறது.

88—

வட்டாரப் போக்குவரத்து தலைமை அலுவலகம் அமைத்தல்

வினா எண் 5547—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *தென்காசி மாவட்டத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தின் தலைமை அலுவலகம் அமைத்துத் தர அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *போக்குவரத்துத் துறை கட்டுப்பாட்டில் 12 சரக அலுவலகங்களும், 2 செயலாக்க இணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகங்களும், 91 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களும், 54 மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி அலுவலகம்) அலுவலகங்களும், 22 சோதனைச் சாவடிகளும் என மொத்தம் 181 அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.*

தென்காசி மாவட்டத்தில் தென்காசியை தலைமையிடமாகக் கொண்டு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் ஏற்கெனவே இயங்கி வருகிறது.

89—

பேருந்து வசதி

வினா எண் 7082—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 அக்டோபர் 18]

(அ) பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி முதல் சக்கிநத்தம் வழியாக பாலக்கோடு வரை பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேருந்து வசதி கோரியுள்ள, பிக்கிலி முதல் சக்கிலிநத்தம் வழியாக பாலக்கோடு வழித்தடத்தின் நீளம் 21 கிலோ மீட்டர் ஆகும். இவ்வழித்தடத்தில், பூதிநத்தத்திலிருந்து சீரியம்பட்டி வரையுள்ள 7 கிலோ மீட்டர் பகுதியில் 2 கொண்டை ஊசி வளைவுகள் உள்ளன. இந்த கொண்டை ஊசி வளைவுகளில் சாலை குறுகலாகவும், வளைவுகளில் சரியான சரிவு இல்லாமலும், அபாயகரமாகவும் எதிரே வரும் வாகனங்கள் ஒன்றையொன்று கடந்து செல்ல இயலாத நிலையும் உள்ளதால், கோரப்பட்ட வழித்தடத்தில் பேருந்து இயக்க இயலாத நிலையுள்ளது.

90—

மின்சார பேருந்துகள் இயக்குதல்

வினா எண் 7231—திரு. இரா. அருள்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சுற்றுச்சூழல் பாதிப்பை கட்டுப்படுத்த மின்சார வாகனங்கள் பயன்பாட்டிற்கு வழிவகை மேற்கொள்ள அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சுற்றுச்சூழல் மற்றும் காற்று மாசுப்படுவதை தவிர்க்கும்பொருட்டு, தமிழ்நாடு அரசு ஜெர்மனி வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் (KfW) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களை நவீனப்படுத்துதல் மற்றும் மறுசீரமைப்பு திட்டத்திற்கு

கையெழுத்திட்டுள்ளது. இத்திட்டத்தின் முதற்கட்டமாக தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களான சென்னை, கோவை மற்றும் மதுரை ஆகிய நகரங்களில் 500 மின்சார பேருந்துகளை கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

91—

போக்குவரத்துப் பணிமனை அமைத்தல்

வினா எண் 7233—திரு. இரா. அருள்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், இளம்பிள்ளையில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், இளம்பிள்ளை, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட்டின் பணிமனைகள் அமைந்துள்ள சேலத்திலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவிலும், ராசிபுரத்திலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவிலும், எடப்பாடியிலிருந்து 27 கிலோ மீட்டர் தொலைவிலும், தாரமங்கலத்திலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவிலும் மற்றும் சங்ககிரியிலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது. அரசாணை (ப) எண் 61, போக்குவரத்துத் துறை, நாள் 9–9–1992–ன்படி இரண்டு பணிமனைகளுக்கு இடைப்பட்ட தூரம் குறைந்தபட்சம் 40 கிலோ மீட்டர் இருக்க வேண்டும். இளம்பிள்ளையை சுற்றிலும் 40 கிலோ மீட்டர் தூரத்திற்குள் மேற்கண்ட ஐந்து பணிமனைகள் உள்ளன. எனவே, கோரிக்கையின்படி சேலம் மாவட்டம், இளம்பிள்ளையில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

2022 அக்டோபர் 18]

92—

உள்கட்டமைப்புகளை மேம்படுத்துதல்

வினா எண் 7288—திரு. இரா. அருள்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிமனைகளின் உள்கட்டமைப்புகளை மேம்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் வணிக வளாகங்களுடன் பணிமனைகளை நவீனமயமாக்கி வருவாய் ஈட்டுதல் திட்டத்தின்கீழ் 16 பணிமனை/பேருந்து நிலையங்கள் நவீனப்படுத்த தேர்வு செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு உள்கட்டமைப்பு வளர்ச்சி குழும (TNIDB) நிதியுதவியுடன் தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனத்தின் (TNIFMC) ஒருங்கிணைப்புடன் விரிவான சாத்தியக்கூறு அறிக்கை (DFR) தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும், இதர அரசு போக்குவரத்துக் கழகங்களில் அனைத்துப் பணிமனைகளும் பராமரிப்பு கூடம், ஓய்வறை, உணவகம் மற்றும் கழிவறை என தேவையான உள்கட்டமைப்பு வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றன. மேலும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியினைப் பெற்று, அந்தந்த கிளைகளுக்குத் தேவையான கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

93—

பேருந்து வசதி

வினா எண் 7299—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குளம் தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியம், பேருந்து 34M-ஐ மீண்டும் முக்கூடல் முதல் கடையம் வரை இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முக்கூடல் முதல் கடையம் வரை பாபநாசம் கிளையைச் சார்ந்த நகரப் பேருந்து தடம் எண் 21Cமூலம் நாளொன்றுக்கு 3 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், 9 புறநகரப் பேருந்துகள்மூலம் நாளொன்றுக்கு 33 சுற்றுகள் பயணிகளின் பயன்பாட்டிற்கு ஏற்ப, இயக்கப்பட்டு வருகின்றன. தற்போதைய பயன்பாட்டு விகிதாச்சாரப்படி, இப்பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.

94—

பேருந்து வசதி

வினா எண் 7368—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையிலிருந்து சிக்கேபுரம் மற்றும் ஏணிமுச்சந்திரம் வழியாக பெட்டமுகிலாளம் மலைக் கிராமத்திற்கு நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக தேன்கனிக்கோட்டையிலிருந்து சிக்கேபுரம் மற்றும் ஏணிமுச்சந்திரம் வழியாக பெட்டமுகிலாளம் மலைக் கிராமத்திற்கு தேன்கனிக்கோட்டை கிளை நகரப் பேருந்து தடம் எண் E36 பேருந்தின்மூலம் நாளொன்றுக்கு 3 நடைகள் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொது மக்களின் வசதிக்காக தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, கோரியுள்ள வழித்தடத்தில் தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாக கருதப்படுகிறது.

2022 அக்டோபர் 18]

95—

பேருந்து வசதி

வினா எண் 7370—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையிலிருந்து கொடகரை மலைக் கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேருந்து வசதி கோரியுள்ள தேன்கனிக்கோட்டை முதல் கொடகரை வழித்தடத்தின் மொத்த நீளம் 24 கிலோ மீட்டர் ஆகும். இதில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக, தேன்கனிக்கோட்டையிலிருந்து கொடகரை பிரிவு சாலை வரை 19 கிலோ மீட்டருக்கு தேன்கனிக்கோட்டை கிளை தடம் எண் E36 பேருந்தின்மூலம் 8 நடைகள் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன.

96—

செல்போன் சார்ஜ் வசதி

வினா எண் 7635—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெடுந்தூரப் பேருந்துகளில் செல்போன் சார்ஜ் செய்யும் வசதி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக நெடுந்தூரப் பேருந்துகளில் Bus Body Code AIS 052-ன்படி, புதிதாக கூண்டு கட்டிய நெடுந்தூரப் பேருந்துகள் அனைத்திலும் செல்போன் சார்ஜ் செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

97—

பேருந்து வசதி

வினா எண் 7636—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேயிலைத் தோட்ட தொழிலாளிகள் பயனடையும் விதமாக நாகர்கோவிலில் இருந்து கேரள மாநிலம் மூணாறுக்கு சங்கரன்கோவில் வழியாக பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

நாகர்கோவிலிருந்து கேரள மாநிலம் மூணாறுக்கு சங்கரன்கோவில் வழியாக பேருந்து இயக்க சாத்தியமில்லை. தற்போது, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) வரையறுக்கப்பட்டது வாயிலாக, திருநெல்வேலியிலிருந்து மூணாறுக்கு காலையில் ஒரு பேருந்தும் மாலையில் ஒரு பேருந்தும் (2 பேருந்துகள் 4 நடைகள்) தினசரி இயக்கப்படுகின்றன. மேலும், கன்னியாகுமரி, நாகர்கோவில் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களிலிருந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மதுரை மற்றும் திருநெல்வேலி கழகங்கள் மூலமாக தேனி, போடி ஆகிய இடங்களுக்கு தினசரி 15 பேருந்துகள் குறுகிய இடை வெளியில் இயக்கப்படுகின்றன. எனவே, நாகர்கோவில் பயணிகள் மேற்கூறிய பேருந்து வசதியினை பயன்படுத்தி நாகர்கோவிலிலிருந்து தேனி, கம்பம், போடி ஆகிய இடங்களுக்கு வந்தடைந்து, அங்கிருந்து இயக்கப்படும் பேருந்துகள் மூலமாக மூணாறு சென்றடையலாம்.

2022 அக்டோபர் 18]

98—

பேருந்து வசதி

வினா எண் 7773—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் முதல் திருவனந்தபுரம் விமான நிலையம் வரை நவீன பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகர்கோவில்-திருவனந்தபுரம் தடம் இரு மாநிலங்களுக்கு இடையேயான வழித்தடமாக அமைந்துள்ளது. இத்தடத்தில் பல்வேறு காலகட்டங்களில் தமிழ்நாடு மற்றும் கேரளா மாநிலங்களுக்கு இடையே நடைபெற்ற இருமாநில ஒப்பந்த நடவடிக்கைகளின் அடிப்படையில் தற்போது 40 பேருந்துகள் வாயிலாக 240 சுற்றுக்கள் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன. இதற்கிணையாக கேரளா அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகள் குறுகிய இடைவெளியில் தேவைக்கேற்ப இயக்கப்படுகின்றன. இந்நிலையில், இத்தடத்தில் 2019 ஆம் ஆண்டு குளிர் சாதன வசதி கொண்ட இரு பேருந்துகள் இயக்கப்பட்டன. இப்பேருந்தின் பயணிகள் அடர்வு மிகக் குறைந்த நிலையில் இயக்கப்பட்டதால், தற்சமயம் அவை மாற்றப்பட்டு, அதற்குப் பதிலாக சாதாரண வகை பேருந்துகள் இயக்கப்படுகின்றன. திருவனந்தபுரத்திலிருந்து சுமார் 6 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள திருவனந்தபுரம் விமான நிலையத்திற்குச் செல்ல கேரள அரசு பேருந்துகள் தேவைக்கேற்ப உள்ளன.

99—

பேருந்து வசதி

வினா எண் 7901—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

46A மார்த்தாண்டம்-திங்கள் நகர் பேருந்தை தொடர்ந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தடம் எண் 46A/A மூலமாக மார்த்தாண்டத்திலிருந்து திங்கள் நகருக்கு கருங்கல், திக்கணங்கோடு, சேனம்விளை, ஊத்துக்குழி வழியாக 14 சுற்றுகள், கருங்கல், திக்கணங்கோடு, சேனம்விளை, கோமான்விளை வழியாக 2 சுற்றுகள் மற்றும் தடம் எண் 46A/B மூலமாக கருங்கல், திக்கணங்கோடு, ஊத்துக்குழி வழியாக 16 சுற்றுகள் என இரு பேருந்துகளும் சீராக இயக்கப்பட்டு வருகின்றன.

100—

பேருந்து வசதி

வினா எண் 11323—திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, சூடசந்திரம் ஊராட்சி, சத்திரம் தொட்டி கிராமத்திற்கு நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேருந்து வசதி கோரியுள்ள வழித்தடமான சத்திரம் தொட்டி கிராமமானது தளியிலிருந்து 11 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்

2022 அக்டோபர் 18]

கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக தளியிலிருந்து சத்திரம் தொட்டி பிரிவு சாலை வரை 6 கிலோ மீட்டருக்கு தடம் எண் E40 பேருந்தின்மூலம் நாளொன்றுக்கு 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. சத்திரம் தொட்டி பிரிவு சாலையிலிருந்து சத்திரம் தொட்டி வரை 5 கிலோ மீட்டருக்கு சாலை மண்சாலையாகவும், குறுகலாகவும் கனரக பேருந்து இயக்கிட இயலாத நிலையில் உள்ளது. எனவே, கோரியுள்ள வழித்தடத்தில் பேருந்து இயக்கிட இயலாது.

பட்டியல்-16

1—

பேருந்து இயக்குதல்

வினா எண் 11324—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, ஜவளகிரி ஊராட்சி, ஜவளகிரிக்கு ஒசூரிலிருந்து பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக ஒசூரிலிருந்து ஜவளகிரிக்கு தடம் எண் 927B பேருந்தின்மூலம் நாளொன்றுக்கு 6 நடைகள் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன.

2—

பேருந்து இயக்குதல்

வினா எண் 11325—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, ஜவளகிரி ஊராட்சி, ஜவளகிரியிலிருந்து தேன்கனிக்கோட்டைக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக ஜவளகிரியிலிருந்து தேன்கனிக்கோட்டைக்கு தடம் எண்கள் E28, E39, E44, 485C மற்றும் 927B ஆகிய 5 பேருந்துகளின்வாயிலாக, நாளொன்றுக்கு 34 நடைகள் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன.

3—

பேருந்து இயக்குதல்

வினா எண் 11326—திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, அகலக்கோட்டை ஊராட்சி, அகலக்கோட்டையிலிருந்து தேன்கனிக்கோட்டைக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக, அகலக்கோட்டையிலிருந்து தேன்கனிக்கோட்டைக்கு தடம் எண் E39 பேருந்தின்மூலம் 10

2022 அக்டோபர் 18]

நடைகளும், தடம் எண் E43 பேருந்தின்மூலம் 6 நடைகளும் மற்றும் தடம் எண் E44 பேருந்தின்மூலம் 8 நடைகளும், ஆகமொத்தம் நாளொன்றுக்கு 3 நகர பேருந்துகளின்மூலம் 24 நடைகள் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாகக் கருதப்படுகிறது.

4—

பேருந்து இயக்குதல்

வினா எண் 11327—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, பாளையங்கோட்டை ஊராட்சி, பாலதோட்டனப்பள்ளியிலிருந்து ஐவளகிரி வழியாக ஓசூருக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக, கோரியுள்ள வழித்தடத்தில் ஓசூர் நகர் கிளை தடம் எண் 927B பேருந்துமூலம் ஓசூரிலிருந்து தளி வழியாக ஐவளகிரிக்கு 5 நடைகளும் மற்றும் மாலை தேன்கனிக்கோட்டையிலிருந்து பாலதோட்டனப்பள்ளி, ஐவளகிரி மற்றும் தளி வழியாக ஓசூருக்கு ஒரு நடையும் மற்றும் ஐவளகிரியிலிருந்து பாலதோட்டனப்பள்ளி வழியாக தேன்கனிக்கோட்டைக்கு 5 பேருந்துகளின்மூலம் நாளொன்றுக்கு 31 நடைகளும் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன. கோரியுள்ள வழித்தடத்தில் தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாகும்.

5—

பேருந்து இயக்குதல்

வினா எண் 11328—திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, பாளையங்கோட்டை ஊராட்சி, பாலத்தோட்டனப்பள்ளியிலிருந்து பெங்களூருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக பேருந்து வசதி கோரியுள்ள வழித்தடத்தில் பாலதோட்டனப்பள்ளியிலிருந்து தேன்கனிக்கோட்டைக்கு தேன்கனிக்கோட்டை கிளை தடம் எண் E26 பேருந்தின்மூலம் 5 நடைகளும், தடம் எண் E28 பேருந்தின்மூலம் 6 நடைகளும், தடம் எண் E39 பேருந்தின்மூலம் 4 நடைகளும் மற்றும் தடம் எண் E44 பேருந்தின்மூலம் 4 நடைகளும், ஆகமொத்தம் 4 நகர் பேருந்துகளின்மூலம் 19 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. தேன்கனிக்கோட்டையிலிருந்து ஓசூருக்கு 33 நகர் பேருந்துகளின்மூலம் 187 நடைகளும், 29 புறநகர் பேருந்துகளின்மூலம் 65 நடைகளும் மற்றும் 16 தனியார் பேருந்துகளின்மூலம் 51 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. பாலதோட்டனப்பள்ளியிலிருந்து தேன்கனிக்கோட்டைக்கும், தேன்கனிக்கோட்டையிலிருநது ஓசூருக்கும் மேற்கூறியவாறு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஓசூரிலிருந்து பெங்களூருக்கு குறுகிய கால இடைவெளியில் அதிகளவு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. பேருந்து வசதி கோரியுள்ள வழித்தடத்தில் உள்ள அனைத்து ஊர்களுக்கும் பகுதிவாரியாக பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

2022 அக்டோபர் 18]

6—

பேருந்து இயக்குதல்

வினா எண் 11329—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, அகலக்கோட்டை ஊராட்சி, கல்லுபாளம் கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக, தேன்கனிக்கோட்டையிலிருந்து கல்லுபாளம் கிராமத்திற்கு தேன்கனிக்கோட்டை கிளை நகர பேருந்து தடம் எண் E43மூலம் நாளொன்றுக்கு 2 நடைகளும் மற்றும் தேன்கனிக்கோட்டையிலிருந்து கல்லுபாளம் வழியாக கும்பளத்தானூருக்கு 4 நடைகளும் ஆக மொத்தம் நாளொன்றுக்கு 6 நடைகள் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன. கோரியுள்ள வழித்தடத்தில் தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாகும்.

7—

பேருந்து இயக்குதல்

வினா எண் 11330—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, அகலக்கோட்டை ஊராட்சி, அகலக்கோட்டையிலிருந்து ஒசூருக்கு நேரலட்டி, கக்கதாசம் வழியாக பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS LEGISLATIVE ASSEMBLY

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக, அகலக்கோட்டையிலிருந்து நேரலட்டி, கக்கதாசம் வழியாக தேன்கனிக்கோட்டைக்கு தடம் எண் E43 பேருந்தின்மூலம் நாளொன்றுக்கு 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. தேன்கனிக்கோட்டையிலிருந்து ஓசூருக்கு 33 நகர பேருந்துகளின்மூலம் 187 நடைகளும் 29 புறநகர் பேருந்துகளின்மூலம் 65 நடைகளும் மற்றும் 15 தனியார் பேருந்துகளின்மூலம் 46 நடைகளும் இயக்கப்பட்டு வருவதால், பேருந்து வசதி கோரியுள்ள அனைத்து ஊர்களுக்கும் பகுதிவாரியாக பேருந்து வசதியுள்ளது.

8—

பேருந்து இயக்குதல்

வினா எண் 11332—திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, பள்ளப்பள்ளி ஊராட்சி, கெம்பத்பள்ளி கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக தேன்கனிக்கோட்டையிலிருந்து அன்னியாளம், பள்ளப்பள்ளி வழியாக கெம்பத்பள்ளி கிராமத்திற்கு தேன்கனிக்கோட்டை கிளை நகரப் பேருந்து தடம் எண் E42மூலம் நாளொன்றுக்கு 10 நடைகள் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன.

9—

பேருந்து இயக்குதல்

வினா எண் 11333—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, பள்ளப்பள்ளி ஊராட்சி, பள்ளப்பள்ளியிலிருந்து தேன்கனிக்கோட்டைக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக தேன்கனிக்கோட்டையிலிருந்து பள்ளப்பள்ளி வழியாக கெம்பத்பள்ளி கிராமத்திற்கு தடம் எண் E42 பேருந்தின்மூலம் நாளொன்றுக்கு 10 நடைகள் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன. கோரியுள்ள வழித்தடத்தில் தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாகக் கருதப்படுகிறது.

10—

பேருந்து இயக்குதல்

வினா எண் 11334—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, பள்ளப்பள்ளி ஊராட்சி, உப்புதானப்பள்ளி கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேருந்து வசதி கோரியுள்ள உப்புதானப்பள்ளி கிராமமானது கெம்பத்பள்ளி கிராமத்திலிருந்து 1 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக தேன்கனிக்கோட்டையிலிருந்து கெம்பத்பள்ளி கிராமத்திற்கு தேன்கனிக்கோட்டை கிளை தடம் எண் E42 பேருந்தின்மூலம் 10 நடைகள் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக இயக்கப்பட்டு வருகின்றன. அரசு விதிகளின்படி ஏற்கெனவே பேருந்து வசதி பெற்ற கிராமத்திலிருந்து 1 கி.மீ. தூரம் உள்ள கிராமம் பேருந்து வசதி பெற்ற கிராமமாகவே கருதப்படுவதால், உப்புதானப்பள்ளி கிராமம் பேருந்து வசதி பெற்ற கிராமமாகவே கருதப்படுகிறது.

11—

பேருந்து இயக்குதல்

வினா எண் 11335—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, பள்ளப்பள்ளி ஊராட்சி, குருபரப்பள்ளி கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக தேன்கனிக்கோட்டையிலிருந்து கெம்பத்பள்ளி கிராமத்திற்கு தடம் எண் E42 பேருந்தின்மூலம்

2022 அக்டோபர் 18]

நாளொன்றுக்கு 10 நடைகள் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன. பேருந்து வசதி கோரியுள்ள குருபரப்பள்ளி கிராமமானது, கெம்பத்பள்ளி கிராமத்திலிருந்து 0.5 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. அரசு விதிகளின்படி ஏற்கெனவே பேருந்து வசதி பெற்ற கிராமத்திலிருந்து 1 கி.மீ. தூரம் உள்ள கிராமம் பேருந்து வசதி பெற்ற கிராமமாகவே கருதப்படும். எனவே, குருபரப்பள்ளி கிராமம் பேருந்து வசதி பெற்ற கிராமமாகவே கருதப்படுகிறது.

12—

பேருந்து இயக்குதல்

வினா எண் 11336—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, தளியிலிருந்து ஒசூருக்கு மகளிர் சிறப்புப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக தளியிலிருந்து ஒசூருக்கு இயக்கப்படும் 36 பேருந்துகளிலும் 8-5-2021 அன்று முதல் மகளிர் கட்டணமில்லாமல் இலவசப் பயணம் செய்து வருகின்றனர். எனவே, கோரியுள்ள வழித்தடத்தில் மகளிர் சிறப்புப் பேருந்து இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

13—

பேருந்து இயக்குதல்

வினா எண் 11337—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2022 அக்டோபர் 18

(அ) தேன்கனிக்கோட்டையிலிருந்து ஓசூருக்கு மகளிர் சிறப்புப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக, தேன்கனிக்கோட்டையிலிருந்து ஓசூருக்கு 33 நகர் பேருந்துகளின்மூலம் நாளொன்றுக்கு 187 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகளில் 8-5-2021 அன்று முதல் மகளிர் கட்டணமில்லாமல் இலவசப் பயணம் செய்து வருகின்றனர். எனவே, கோரியுள்ள வழித்தடத்தில் மகளிர் சிறப்புப் பேருந்து இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

14—

பேருந்து இயக்குதல்

வினா எண் 11339—திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, மாடக்கல் ஊராட்சியில் அருள்நத்தம் மலை கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக, தேன்கனிக் கோட்டையிலிருந்து அருள்நத்தம் மலை கிராமத்திற்கு தடம் எண் E44 பேருந்தின்மூலம் நாளொன்றுக்கு 4 நடைகள் பள்ளி,

2022 அக்டோபர் 18]

கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன. கோரியுள்ள வழித்தடத்தில் தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாகும்.

15—

பேருந்து இயக்குதல்

வினா எண் 11340—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *தளி தொகுதி, மாடக்கல் ஊராட்சி, உலிபெண்டா மலை கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *பேருந்து வசதி கோரியுள்ள தேன்கனிக்கோட்டை முதல் உலிபெண்டா மலை கிராமம் வழித்தடத்தின் நீளம் 42 கிலோ மீட்டர் ஆகும். தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக, தேன்கனிக்கோட்டையிலிருந்து அருள்நத்தம் கிராமம் வரை 39 கிலோ மீட்டருக்கு தடம் எண் E44 பேருந்தின்மூலம் 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. அருள்நத்தத்திலிருந்து உலிபெண்டா மலை கிராமம், 3 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. மேற்கண்ட 3 கிலோ மீட்டர் தொலைவிற்குச் செல்லும் சாலை குறுகலாகவும், மண் சாலையாகவும் மற்றும் கனரகப் பேருந்து இயக்கிட இயலாத நிலையிலும் உள்ளது. எனவே, கோரியுள்ள வழித்தடத்தில் பேருந்து இயக்கிட இயலாது.*

16—

பேருந்து இயக்குதல்

வினா எண் 11341—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2022 அக்டோபர் 18

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையிலிருந்து காடு கெம்பத்தப்பள்ளி கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக, தேன்கனிக்கோட்டையிலிருந்து காடு கெம்பத்தப்பள்ளி கிராமத்திற்கு தடம் எண் E42 பேருந்தின்மூலம் நாளொன்றுக்கு 10 நடைகள் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன. கோரியுள்ள வழித்தடத்தில் தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாகக் கருதப்படுகிறது.

17—

பேருந்து இயக்குதல்

வினா எண் 11342—திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, மாடக்கல் ஊராட்சி, வரகையின் தாக்கல் கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேருந்து வசதி கோரியுள்ள வரகையின் தாக்கல் கிராமமானது தேன்கனிக்கோட்டையிலிருந்து 38 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இவ்வழித்தடத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது

2022 அக்டோபர் 18]

வாயிலாக, தேன்கனிக்கோட்டையிலிருந்து கரடிக்கல் வரை 35 கிலோ மீட்டருக்கு தேன்கனிக்கோட்டை கிளை தடம் எண் E44 பேருந்தின்மூலம் 6 நடைகளும், E39 பேருந்தின்மூலம் 5 நடைகளும் மற்றும் H40 பேருந்தின்மூலம் 2 நடைகளும் ஆக மொத்தம் 3 நகர பேருந்துகளின்மூலம் நாளொன்றுக்கு 13 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. வரகையின் தாக்கல் கிராமமானது, கரடிக்கல்லின் இடப்புறத்தில் 3 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. வரகையின் தாக்கல் கிராமத்தில் மக்கள்தொகை சுமார் 300 பேர் மட்டுமே உள்ளனர். அரசு வழிகாட்டுதலின்படி, மக்கள்தொகை 1000-க்குமேல் உள்ள கிராமங்களுக்கு மட்டுமே பேருந்து வசதி அளித்திட இயலும். எனவே, தளி தொகுதி, மாடக்கல் ஊராட்சி, வரகையின் தாக்கல் கிராமத்திற்கு பேருந்து வசதி அளித்திட வழிவகை இல்லை.

18—

பேருந்து இயக்குதல்

வினா எண் 11343—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, ஓசூரிலிருந்து மாடக்கல் வழியாக அஞ்செட்டிக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக கோரியுள்ள மாடக்கல்லிலிருந்து அஞ்செட்டி வழியாக தேன்கனிக்கோட்டைக்கு 4 பேருந்துகளின்மூலம் 10 நடைகளும் மற்றும் வழித்தடம் எண் 927B பேருந்தின்மூலம் ஜவளகிரியிலிருந்து ஓசூருக்கு 5 நடைகளும் மற்றும் அஞ்செட்டியிலிருந்து மாடக்கல் கரடிக்கல், ஜவளகிரி, தளி வழியாக ஓசூருக்கு 1 நடையும் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காகவும் தொடர்ந்து இயக்கப்பட்டு

வருகின்றன. கோரியுள்ள வழித்தடத்தில் நேரடியாகவும் மற்றும் பகுதிவாரியாகவும் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

19—

பேருந்து இயக்குதல்

வினா எண் 11344—திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, மாடக்கல் ஊராட்சி, சூலக்குண்டா கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக, தேன்கனிக்கோட்டையிலிருந்து சூலக்குண்டா கிராமத்திற்கு தடம் எண்கள் E39, E44 மற்றும் 927B பேருந்துகளின்மூலம் நாளொன்றுக்கு 13 நடைகள் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன. கோரியுள்ள வழித்தடத்தில் தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாகக் கருதப்படுகிறது.

20—

பேருந்து இயக்குதல்

வினா எண் 11491—திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, ஜவளகிரி ஊராட்சி, சென்னமாளம் கிராமத்திற்கு ஓசூரிலிருந்து நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேருந்து வசதி கோரியுள்ள, ஓசூர் முதல் சென்னமாளம் வரையிலான வழித்தடத்தின் நீளம் 55.6 கிலோ மீட்டர் ஆகும். அரசு விதிகளின்படி, நகரப் பேருந்தை 35.0 கிலோ மீட்டர் வரை மட்டுமே இயக்கிட வழிவகையுள்ளது. மேலும், ஓசூரிலிருந்து தேன்கனிக்கோட்டைக்கு 10 பேருந்துகளின்மூலம் 33 நடைகளும், தேன்கனிக்கோட்டையிலிருந்து சென்னமாளம் கிராமத்திற்கு தேன்கனிக்கோட்டை கிளை நகர தடம் எண் E39 பேருந்தின்மூலம் 4 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, பேருந்து வசதி கோரியுள்ள வழித்தடத்தில் ஓசூரிலிருந்து தேன்கனிக்கோட்டைக்கும், தேன்கனிக்கோட்டையிலிருந்து சென்னமாளம் கிராமத்திற்கும் பகுதி வாரியாக பேருந்து வதியுள்ளது.

21—

பேருந்து இயக்குதல்

வினா எண் 11492—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, ஓசூரிலிருந்து கும்மளாபுரம் கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக ஓசூரிலிருந்து கும்மளாபுரம் கிராமத்திற்கு 4 பேருந்துகளின்மூலம் நாளொன்றுக்கு 12 நடைகள் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக இயக்கப்பட்டு வருகின்றன. கோரியுள்ள வழித்தடத்தில் தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாகும்.

[2022 அக்டோபர் 18

22—

பேருந்து இயக்குதல்

வினா எண் 11493—திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையிலிருந்து போளாலம் கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக, தேன்கனிக்கோட்டையிலிருந்து போளாலம் கிராமத்திற்கு, தேன்கனிக்கோட்டை கிளை பேருந்து தடம் எண் E40 பேருந்தின்மூலம் நாளொன்றுக்கு 6 நடைகள் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன. கோரியுள்ள வழித்தடத்தில் தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாகக் கருதப்படுகிறது.

23—

பேருந்து இயக்குதல்

வினா எண் 11591—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், நாகர்கூடல் ஊராட்சி, கூலிக்கொட்டாய் கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பேருந்து வசதி கோரியுள்ள கூலிக்கொட்டாய் கிராமமானது, பண்டஅள்ளி கிராமத்திலிருந்து 0.200 மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. பண்டஅள்ளி கிராமத்திற்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக பேருந்து தடம் எண் D34 & D40 பேருந்துகளின்மூலம் நாளொன்றுக்கு 10 நடைகள் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக இயக்கப்பட்டு வருகின்றன. அரசு விதிகளின்படி, ஏற்கெனவே பேருந்து வசதி பெற்ற கிராமத்திலிருந்து 1.0 கி.மீ. தூரம் உள்ள கிராமம் பேருந்து வசதி உள்ள கிராமமாகவே கருதப்படும். எனவே, கூலிக்கொட்டாய் கிராமம், பேருந்து வசதி பெற்ற கிராமமாகவே கருதப்படுகிறது.

24—

பேருந்து நிறுத்தம்

வினா எண் 11639—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், டொக்கு போதன அள்ளி ஊராட்சி, தொம்பரகாம்பட்டி பேருந்து நிறுத்தத்தில் சேலம்-தருமபுரி வழித்தட புறநகர் பேருந்துகள் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக தருமபுரி-சேலம் மற்றும் சேலம்-தருமபுரி வழித்தடத்தில் இயக்கப்படும் சாதாரண கட்டணப் பேருந்துகள் அனைத்தும் பேருந்து வசதி கோரியுள்ள தொம்பரகாம்பட்டி பேருந்து நிறுத்தத்தில் நின்று பயணிகளை ஏற்றியும், இறக்கியும் செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது.

25—

பேருந்து இயக்குதல்

வினா எண் 11640—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், சாமிசெட்டிபட்டி ஊராட்சி, கமலநத்தம் கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக தருமபுரியிலிருந்து கமலநத்தம் கிராமத்திற்கு தடம் எண் D46 பேருந்தின்மூலம் நாளொன்றுக்கு 2 நடைகள் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் வசதிக்காக இயக்கப்பட்டு வருகின்றன.

26—

சிற்றுந்து இயக்குதல்

வினா எண் 12766—திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், வெள்ளிவாயல் ஊராட்சிக்கு சிற்றுந்து இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

2022 அக்டோபர் 18]

(அ) மற்றும் (ஆ) செங்குன்றத்திலிருந்து வெள்ளிவாயல் 20 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளதால், இந்த நீண்ட தூர கிராமத்திற்கு சிற்றுந்துகள் இயக்கிட சாத்தியமில்லை. சிற்றுந்துகளை குறுகிய தூர பகுதியில் மட்டுமே இயக்க இயலும்.

27—

குளிர்சாதன பேருந்து இயக்குதல்

வினா எண் 15425—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சலில் இருந்து சென்னைக்கு குளிர்சாதன பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு வரையறுக்கப்பட்டது வாயிலாக குளச்சலில் இருந்து சென்னைக்கு குளிர்சாதன பேருந்து இயக்க சாத்தியமில்லை. தற்போது, கருங்கலில் இருந்து சென்னைக்கு குளச்சல் வழியாக தடம் எண் 296 Ultra Deluxe-ல் இருமுனைகளிலிருந்தும் தலா ஒரு பேருந்து வீதம் தினசரி இயக்கப்பட்டு வருகிறது. இப்பேருந்தில் பயணிகளின் அடர்வு மிகக் குறைவாகவும், அதன்மூலம் பெறப்படும் வருவாய் அன்றாட பேருந்து இயக்க செலவிற்கு போதுமானதாகவும் இல்லை. இருப்பினும், பயணிகளின் நலன் கருதி தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது. மேலும், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் வாயிலாக கருங்கலிற்கு அருகில் உள்ள மார்த்தாண்டத்திலிருந்து சென்னைக்கு நாகர்கோவில் வழியாக தடம் எண் 284 A/C-ல் இருமுனைகளிலிருந்தும் தலா 4 குளிர்சாதன பேருந்துகள் வீதம் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன.

[2022 அக்டோபர் 18

28—

குளத்திற்கு தடுப்புச் சுவர்

வினா எண் 499—முனைவர் T.R.B. ராஜா: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், மூன்றாம்சேத்தி ஊராட்சியில் உள்ள அருள்மிகு காமாட்சி அம்மன் திருக்கோயில் குளத்திற்கு தடுப்புச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், மூன்றாம்சேத்தி, அருள்மிகு காமாட்சி அம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் நேரடி ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். எனவே, இத்திருக்கோயிலின் திருக்குளத்திற்கு தடுப்புச் சுவர் கட்டும் பணியினை இந்து சமய அறநிலையத் துறை மூலமாக மேற்கொள்ள வழிவகை இல்லை.

29—

குடமுழுக்கு நடத்துதல்

வினா எண் 1208—திரு. இரா. அருள்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம், அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயிலின் புனரமைப்புப் பணிகளை விரைந்து முடித்து குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

2022 அக்டோபர் 18]

சேலம் நகர், அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்று வரும் மூன்று கட்ட திருப்பணிகளும் சுமார் மூன்று மாத காலத்திற்குள் முடிக்கப்பட்டு திருக்குடமுழுக்கு விழா நடத்தப்படும்.

30—

பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்

வினா எண் 1212—திரு. இரா. அருள்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகராட்சி, கோட்டம் எண் 25-ல் பள்ளப்பட்டி அருள்மிகு சுப்பிரமணிசுவாமி கோயில் பராமரிப்புப் பணிகளைச் செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், பள்ளப்பட்டி அருள்மிகு சுப்பிரமணிசுவாமி கோயிலுக்கு வருமானம் வரக்கூடிய இனங்கள் ஏதும் இல்லாத காரணத்தினாலும், உபயதாரர்கள் இல்லாததாலும், அரசு நிதியுதவிமூலம் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள இயலும்.

31—

கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்தல்

வினா எண் 1213—திரு. இரா. அருள்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் கோட்டை மாரியம்மன் திருக்கோயில் கட்டுமானப் பணிகளை விரைந்து முடிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

[*2022 அக்டோபர் 18*

சேலம் மாவட்டம் மற்றும் நகர், அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில் கட்டுமானப் பணிகளுக்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

32—

குத்தகை நிலுவைத் தொகையை வசூலித்தல்

வினா எண் 1215—திரு. இரா. அருள்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோயில் நில குத்தகைதாரர்களிடமிருந்து நிலுவைத் தொகையினை வசூலிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள இந்து சமய அறநிறுவனங்களுக்குச் சொந்தமான அசையா சொத்துகளின் குத்தகை நிலுவையினை முழுமையாக வசூலித்திட, தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

33—

ஸ்தபதிகளை நியமித்தல்

வினா எண் 1218—திரு. இரா. அருள்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அனைத்து மாவட்டங்களில் உள்ள திருக்கோயில்களில் ஸ்தபதிகளை நியமிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

தகுதியுள்ள ஸ்தபதிகள் உரிய வழிமுறையின்படி விண்ணப்பிக்கும்போது, ஸ்தபதி தேர்வுக் குழுவால் தேர்வு செய்யப்பட்டு, தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்படுவர்.

34—

தனித் தீர்ப்பாயம் ஏற்படுத்துதல்

வினா எண் 1221—திரு. இரா. அருள்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள், கட்டடங்கள் போன்ற விவரங்களை விசாரிக்க தனித் தீர்ப்பாயம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் கட்டடங்களை நிர்வகிப்பது தொடர்பான பல்வேறு கூறுகளை அரசு ஆராய்ந்து வருகிறது. இதுதொடர்பான அனைத்து பொருண்மைகளையும் அரசு பரிசீலனை செய்து, உரிய முடிவினை மேற்கொள்ளும்.

35—

தணிக்கைக் குழு ஆய்விற்கு உட்படுத்துதல்

வினா எண் 1222—திரு. இரா. அருள்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருக்கோயில்களின் வரவு-செலவுகளை மத்திய தணிக்கைக் குழுவின் ஆய்விற்கு உட்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் பேணப்படும் கணக்குகளின் மீதான தணிக்கை

மாநில அரசுத் துறைமூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், இக்கணக்குகள் மீதான தணிக்கையினை மத்திய தணிக்கைக் குழுவின் ஆய்விற்கு உட்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.

36—

கோயிலை புதுப்பித்தல்

வினா எண் 1769—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, வேகாக்கொல்லை ஊராட்சியில் உள்ள ஈஸ்வரன் கோயிலை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், வேகாக்கொல்லை, அருள்மிகு வீரட்டீஸ்வரர் திருக்கோயிலின் (ஈஸ்வரன் கோயில்) திருப்பணிக்கு 13-வது நிதி ஆணையத்தின்மூலம் வழங்கப்பட்ட ரூ.18,35,000/-ல் அருள்மிகு சுவாமி, அம்பாள் சன்னதிகள் பழுதுபார்த்து புதுப்பித்தல், உட்பிரகாரம் தரைதளம் அமைத்தல் மற்றும் மதிற்சுவர் கட்டுதல் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட திருக்கோயிலுக்கு வர்ணம் பூசும் பணி முடிக்கப்பட்டவுடன், குடமுழுக்கு மேற்கொள்ளப்படும்.

37—

தங்கும் விடுதி அமைத்தல்

வினா எண் 4481—திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்மிடிபூண்டி தொகுதி, பெரியபாளையம் அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயிலுக்கு தங்கும் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிபூண்டி தொகுதி, பெரியபாளையம் அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயிலுக்கு, திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், பெரியபாளையம், பஜார் தெருவில் உள்ள, திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் தங்கும் விடுதி கட்டுவதற்காக, ரூ.10.94 கோடியில் அரசாணை (நிலை) எண் 111, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி3-1) துறை, நாள் 5-7-2018-ன்படி, திருக்கோயில் நிதியில் மேற்கொள்ள அரசாணை பெறப்பட்டுள்ளது. இதற்கான மதிப்பீடு சரிபார்த்தலுக்காக பொதுப் பணித் துறையில் சமர்ப்பிக்கப்பட்டு ரூ.14.23 இலட்சம் கூர்ந்தாய்வு கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், பொதுப் பணித் துறை தெரிவித்தபடி இம்மதிப்பீட்டிற்கான வடிவமைப்பு கணக்கீடுகளை சரிபார்த்து மேலொப்பம் செய்வதற்காக அண்ணா பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டு ரூ.1.18 இலட்சம் ஆய்வுக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டினை திருக்கோயில் கட்டட வடிவமைப்பாளர்மூலம் 2021-2022 விலை விகிதத்திற்கு திருத்தியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2021-2022 விலை விகிதங்கள் பொதுப் பணித் துறையில் வரப்பெற்றதும், திருத்திய மதிப்பீடு அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு, அங்கீகாரம் பெறப்பட்டதும், தங்கும் விடுதி கட்டும் பணி துவங்கப்படும்.

38—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 10126—திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூரிலுள்ள இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின்கீழ் செயல்பட்டு வரும் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூரிலுள்ள அருள்மிகு அஞ்சுவட்டத்தம்மன் பெண்கள் உயர்நிலைப் பள்ளி இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வரும் பள்ளியாகும். கடந்த 2008-*ம் ஆண்டு இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த முன்மொழிவு அனுப்பியபொழுது, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குனரின் செயல்முறைகள், சென்னை, ஓ.மு.எண்.*45705/*டபிள்யூ*4/*இ*1, *நாள்* 29-5-2008-*ன்படி,* 1991-1992 *ஆம் ஆண்டிற்குப் பிறகு புதிதாக தொடங்கப்படும் மற்றும் தரம் உயர்த்தப்படும் அனைத்து தனியார் பள்ளிகளுக்கும் அரசு நிதியுதவி இன்றி சுயநிதி அடிப்படையிலேயே அனுமதி வழங்கப்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டது. எனவே, இப்பள்ளியை தற்போது மேல்நிலைப்பள்ளியாகத் தரம் உயர்த்திட விதிகளின்படி வழிவகை இல்லை.*

39—

திருக்கோயில்களை அறநிலையத் துறையின்கீழ் கொண்டுவருதல்

வினா எண் 12084—திரு. செ. கிருஷ்ணமுரளி: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *தென்காசி மாவட்ட எல்லைக்குள் கன்னியாகுமரி மாவட்ட இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை நிருவாகத்தின் கீழுள்ள திருக்கோயில்களை விடுவித்து, தென்காசி மாவட்ட இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை நிருவாகத்தின்கீழ் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

2022 அக்டோபர் 18]

(அ) மற்றும் (ஆ) கடந்த 1956 ஆம் ஆண்டு கேரளாவில் இருந்த கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை தாலுகாவும் தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்டன. அச்சமயம் கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் செங்கோட்டை தாலுகாவில் கேரளாவின் திருவாங்கூர் சமஸ்தானத்தின்கிழ் இருந்த 490 திருக்கோயில்களை மட்டும் உள்ளடக்கி கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரத்தை தலைமையிடமாகக் கொண்டு கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்கள் நிருவாகம் தனியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து 1959 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்திலும் சிறப்பு சட்டப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு, கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்கள் நிருவாகம் செயல்பட்டு வருகிறது. எனவே, இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம் 1959-ன்படி, கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்களின் நிருவாகத்தின் கீழுள்ள திருக்கோயில்களை இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் தென்காசி மாவட்ட உதவி ஆணையர் பிரிவின்கீழ் இணைக்க அவசியம் ஏற்படவில்லை.

40—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 39053—திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதி, திருவெண்காட்டில் உள்ள அருள்மிகு சுவேதாரண்யேசுவர சுவாமி திருக்கோயிலின் இந்து சமயம் மற்றும்அறநிலையத் துறைக்குச் சொந்தமான பெண்கள் உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சீர்காழி தொகுதி, திருவெண்காடு, அருள்மிகு சுவேதாரண்யேசுவர சுவாமி பெண்கள் உயர்நிலைப் பள்ளி இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டுவரும் பள்ளியாகும். கடந்த 2018 ஆம் ஆண்டு

இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு கருத்துரு அனுப்பப்பட்டது. புதிதாக தொடங்கப்படும் மற்றும் தரம் உயர்த்தப்படும் அனைத்து தனியார் பள்ளிகளுக்கும் அரசு நிதியுதவியின்றி சுயநிதி அடிப்படையிலேயே அனுமதி வழங்கப்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பள்ளியை தற்போது மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட இயலாது.

41—

கழிவுநீரை சுத்திகரித்தல்

வினா எண் 1168—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், சேலம் ஒன்றியம், ஆவின் பால் பண்ணையிலிருந்து வெளிவரும் கழிவுநீரை சுத்திகரித்து திருமணிமுத்தாற்றில் கொண்டுவிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் ஒன்றியம், ஆவின் பால் பண்ணையிலிருந்து வெளிவரும் கழிவுநீரை சுத்திகரித்து திருமணிமுத்தாற்றில் கொண்டுவிட முன்மொழிவு ஏதும் இல்லை.

42—

பால் கூட்டுறவுச் சங்கம் துவக்குதல்

வினா எண் 1930—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டியில் பால் கூட்டுறவுச் சங்கம் துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டியில் பால் கூட்டுறவுச் சங்கம் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2022 அக்டோபர் 18]

43—

ஆவின் பாலகம் அமைத்தல்

வினா எண் 6743—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணி தொகுதி, திருத்தணி நகரம், பள்ளிப்பட்டு பேரூராட்சி, பொதட்டூர் பேரூராட்சி, இரா.கி.பேட்டை, K.G.கண்டிகை ஆகிய பகுதிகளில் புதிய ஆவின் பாலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, திருத்தணி நகரம், பள்ளிப்பட்டு பேரூராட்சி, பொதட்டூர் பேரூராட்சி, இரா.கி.பேட்டை ஆகிய பகுதிகளில் முகவர்கள் நியமனம் செய்யப்பட்டு, பால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கே.ஜி. கண்டிகையில் திருத்தணி பகுதி பால் முகவர்கள்மூலம் பால் விநியோக விற்பனை செய்யப்படுகிறது.

44—

பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்

வினா எண் 21796—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் பேரூராட்சிப் பகுதியில் புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் பேரூராட்சிப் பகுதியில் புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் ஏதும் இல்லை.

45—

தொடக்கப்பள்ளி துவக்குதல்

வினா எண் 3263—திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி தொகுதி, காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், சாப்பரத்தி ஊராட்சி, பந்தேரி கிராமத்தில் புதியதாக தொடக்கப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி தொகுதி, காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், பந்தேரி கிராமத்தில் உள்ள பள்ளி செல்லும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கு அருகிலுள்ள சாப்பரத்தி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்குச் சென்று வர சமக்ரா சிக்ஷ (SS) மூலம் போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் (Escort) வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதால், பந்தேரி கிராமத்தில் புதிய தொடக்கப் பள்ளி தொடங்குவதற்கு அவசியம் எழவில்லை.

46—

கூடுதல் வகுப்பறை, தரம் உயர்த்துதல்

வினா எண் 8162—திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 அக்டோபர் 18]

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி, தீயத்தூரில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டித்தரவும், நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திடவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி, தீயத்தூரில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப போதுமான வகுப்பறை கட்டடங்கள் உள்ளதால், இப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்ட வேண்டிய சூழல் எழவில்லை மற்றும் தமிழ்நாடு இலவச கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011-ன்படி, மேற்குறிப்பிடப்பட்டுள்ள பகுதியானது உயர் தொடக்கக் கல்வி வசதியுள்ள குடியிருப்பாக உள்ளதால் இத்தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டிய நிலை எழவில்லை.

47—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 10133—திரு. ஆ. கோவிந்தசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி ஒன்றியம், நூலஅள்ளி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள்

வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை, தருமபுரி ஒன்றியம், நூலஅள்ளி உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாத நிலை உள்ளது.

48—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 11956—திரு. க.சொ.க. கண்ணன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஆண்டிமடம் ஒன்றியம், ஜெமீன் கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை ஜெயங்கொண்டம் தொகுதி, ஆண்டிமடம் ஒன்றியம், ஜெமீன் கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

49—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 12010—திரு. T.M. தமிழ்செல்வம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2022 அக்டோபர் 18]

(அ) ஊத்தங்கரை தொகுதி, நடுப்பட்டி ஊராட்சியில் உள்ள நடுநிலைப் பள்ளி, குப்பநத்தம் கிராமத்தில் உள்ள தொடக்கப் பள்ளி, கோபால வலசை கிராமத்தில் உள்ள நடுநிலைப் பள்ளி, காந்தி நகர் கிராமத்தில் உள்ள தொடக்கப் பள்ளி ஆகியவற்றை ஒன்றிணைத்து அரசு உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளை ஒருங்கிணைத்து அரசு உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த விதிகளில் வழிவகை இல்லை.

50—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 12017—திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், கீரப்பாளையத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை, கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், கீரப்பாளையத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாத நிலை உள்ளது.

[2022 அக்டோபர் 18

51—

தொடக்கப் பள்ளி துவக்குதல்

வினா எண் 12043—திரு. T.K. அமுல் கந்தசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வால்பாறை தொகுதியில் மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளில் தொடக்கப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

தற்பொழுது, கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில் மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு 1 கி.மீ. சுற்றளவிற்குள் 14 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள், 3 அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளிகள் மற்றும் 2 ஆதி திராவிட நல தொடக்கப் பள்ளிகளும் செயல்பட்டு வருவதால், இப்பகுதிகளில் புதியதாக தொடக்கப் பள்ளி துவங்க அவசியம் எழவில்லை.

52—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 12112—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், பஞ்செட்டி ஊராட்சி, பஞ்செட்டி கிராமத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

2022 அக்டோபர் 18]

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், பஞ்செட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

53—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 12185—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியம், துரிஞ்சிப்பட்டு ஊராட்சியில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியம், துரிஞ்சிப்பட்டு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

54—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 12311—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கந்தர்வகோட்டை தொகுதி, நொடியூர் மு. சோழகம்பட்டியில் உள்ள மு. சோழகம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை கந்தர்வகோட்டை தொகுதி, நொடியூர் மு. சோழகம்பட்டியில் உள்ள மு. சோழகம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

55—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 12312—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கந்தர்வகோட்டை தொகுதி, மஞ்சப்பேட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை கந்தர்வகோட்டை தொகுதி, மஞ்சப்பேட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

56—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 13184—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 அக்டோபர் 18]

பழனி தொகுதி, கொடைக்கானல் வட்டம், கூக்கால் ஊராட்சி, பழம்புத்தூர் கிராமத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பழனி தொகுதி, கொடைக்கானல் வட்டம், கூக்கால் ஊராட்சி, பழம்புத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

57—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 13185—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பழனி தொகுதி, கொடைக்கானல் வட்டம், கூக்கால் ஊராட்சி, குண்டுபட்டியில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பழனி தொகுதி, கொடைக்கானல் வட்டம், கூக்கால் ஊராட்சி, குண்டுபட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

58—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 14206—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், தளவாய்ஹள்ளி ஊராட்சி, பள்ளப்பட்டி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், தளவாய்ஹள்ளி ஊராட்சி, பள்ளப்பட்டி நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

59—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 14207—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, கம்மம்பட்டி ஊராட்சி, மூலக்காடு பகுதியில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

2022 அக்டோபர் 18]

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தருமபுரி தொகுதி, கம்மம்பட்டி ஊராட்சி, மூலக்காடு பகுதியில் உள்ள நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

60—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 14209—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், ஓமல்நத்தம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், ஓமல்நத்தம் நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

61—

தொடக்கப் பள்ளி துவக்குதல்

வினா எண் 14252—திரு. செ. ஸ்டாலின் குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) துறையூரில் ஆண்கள் தொடக்கப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி கல்வி மாவட்டம், துறையூர் கிராமத்தில் 1 கி.மீ. சுற்றளவிற்குள் ஏற்கெனவே 5 தொடக்கப் பள்ளிகள் செயல்பட்டு வருவதால், புதியதாக ஆண்கள் தொடக்கப் பள்ளி துவங்க அவசியம் எழவில்லை.

62—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 14260—திரு. எஸ். தங்கப்பாண்டியன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ராஜபாளையம் தொகுதி, தொட்டியப்பட்டி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை ராஜபாளையம் தொகுதி, தொட்டியப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

63—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 14264—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2022 அக்டோபர் 18]

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், ஆலிவலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், ஆலிவலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

64—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 14471—திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் பெண்கள் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் பெண்கள் நடுநிலைப் பள்ளி ஏதும் செயல்படவில்லை. எனவே, பெண்கள் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் நிலை எழவில்லை.

[2022 அக்டோபர் 18

65—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 14481—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மேற்கு தொகுதி, 21-வது டிவிஷன், அரியாகவுண்டம்பட்டியில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

சேலம் மேற்கு தொகுதி, 21-வது டிவிஷன், அரியாகவுண்டம்பட்டியில் நடுநிலைப் பள்ளி ஏதும் செயல்படவில்லை என்பதால், தரம் உயர்த்த வேண்டிய நிலை எழவில்லை.

66—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 15220—திரு. கே.ஆர். ஜெயராம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிங்காநல்லூர் தொகுதி, பீளமேடு அரசு தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது கோயம்புத்தூர் மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதி, பீளமேடு அரசு தொடக்கப் பள்ளிக்கு அருகாமையில் 1 கி.மீ. சுற்றளவிற்குள் மாநகராட்சி மேல்நிலைப்

2022 அக்டோபர் 18]

பள்ளி, பீளமேடு மற்றும் கோபால் நாயுடு மேல்நிலைப் பள்ளி, பீளமேடு ஆகிய 2 பள்ளிகள் செயல்படுகின்றன. எனவே, கோயம்புத்தூர் மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதி, பீளமேடு அரசு தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அவசியம் எழவில்லை.

67—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 15573—திருமதி கு. மரகதம் குமரவேல்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம், சிதண்டி ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை, மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம், சிதண்டி ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாத நிலை உள்ளது.

68—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 17786—திரு. செ. கிருஷ்ணமுரளி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2022 அக்டோபர் 18

(அ) கடையநல்லூர் தொகுதி, கரிசல்குடியிருப்பு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை கடையநல்லூர் தொகுதி, கரிசல்குடியிருப்பு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

69—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 17838—திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், இச்சிபட்டி ஊராட்சி, பெத்தாம்பூச்சிபாளையம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், இச்சிபட்டி ஊராட்சி, பெத்தாம்பூச்சிபாளையம் நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

2022 அக்டோபர் 18]

70—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 17904—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், ஏ. கெட்டிஅள்ளி ஊராட்சி, தேங்காமரத்துப்பட்டியில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், ஏ. கெட்டிஅள்ளி ஊராட்சி, தேங்காமரத்துப்பட்டியில் உள்ள நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

71—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 17924—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கந்தர்வகோட்டை தொகுதி, கறம்பக்குடி ஒன்றியம், சொக்கம்பேட்டையில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கந்தர்வகோட்டை தொகுதி, கறம்பக்குடி ஒன்றியம், சொக்கம்பேட்டை பகுதியில் 3 கி.மீ. சுற்றளவிற்குள் அரசு மேல்நிலைப் பள்ளி, கல்லாக்கோட்டை, அரசு உயர்நிலைப் பள்ளி, வெள்ளாளவிடுதி மற்றும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, சங்கம்விடுதி ஆகிய பள்ளிகள் செயல்படுகின்றன. எனவே, இத்தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கான அவசியம் எழவில்லை.

72—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 17983—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சி, புதுக்கரம்பு கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சி, புதுக்கரம்பு கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2022 அக்டோபர் 18]

73—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 17984—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன அள்ளி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன அள்ளி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

74—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 18635—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் வடக்கு வட்டம், அனுப்பர்பாளையம் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது, திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், அனுப்பர்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு அருகாமையில் 3 கி.மீ. சுற்றளவிற்குள் இரண்டு மேல்நிலைப் பள்ளிகள், இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மூன்று நடுநிலைப் பள்ளிகள் செயல்படுகின்றன. எனவே, மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டிய அவசியம் எழவில்லை.

75—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 21580—திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் வடக்கு தொகுதி, சங்கனூர், நல்லாம்பாளையத்தில் உள்ள மாநகராட்சி தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது கோயம்புத்தூர் வடக்கு தொகுதி, சங்கனூர், நல்லாம்பாளையத்தில் உள்ள மாநகராட்சி தொடக்கப் பள்ளிக்கு அருகில் 3 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி, மணியகாரன்பாளையம், மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி, இராமசாமி நகர், மாநகராட்சி நடுநிலைப் பள்ளி, சங்கனூர் ஆகிய பள்ளிகள் செயல்படுகின்றன. எனவே, தற்பொழுது கோயம்புத்தூர் வடக்கு தொகுதி, சங்கனூர் நல்லாம்பாளையத்தில் உள்ள மாநகராட்சி தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அவசியம் எழவில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2022 அக்டோபர் 18]

76—

இருபாலர் பள்ளியாக மாற்றுதல்

வினா எண் 28161—திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிணத்துக்கடவு தொகுதியில் உள்ள அரசு உதவி பெறும் TELC பெண்கள் மேல்நிலைப் பள்ளியை இருபாலர் பயிலும் பள்ளியாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் கல்வி மாவட்டம், கிணத்துக்கடவு TELC பெண்கள் மேல்நிலைப் பள்ளி நிர்வாகப் பிரச்சினை காரணமாக 13-7-2017 முதல் நேரடி மானியத்தில் இயங்கி வரும் சூழ்நிலையில், இப்பள்ளியை இருபாலர் பள்ளியாக மாற்றம் செய்திட தற்சமயம் வழிவகை இல்லை.

77—

ஆசிரியர் பயிற்சி பள்ளி துவக்குதல்

வினா எண் 28354—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் பகுதியில் புதியதாக ஆசிரியர் பயிற்சி பள்ளியைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் தருமபுரி ஆகிய மூன்று மாவட்டங்களைச் சார்ந்த 100 மாணவர்கள் பயில்வதற்கு அரசாணை (நிலை) எண் 92, பள்ளிக் கல்வித் (கஆப) துறை, நாள் 9-5-2018-ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 2021-2022 ஆம் கல்வியாண்டில், 24 மாணவர்கள் மட்டுமே முதலாம் ஆண்டில் தொடக்கக் கல்வி பட்டயப் பயிற்சி பயின்று வருகின்றனர். இரண்டாம் ஆண்டில் மாணவர்கள் இல்லை. எனவே, மூன்று மாவட்டங்களையும் சேர்த்து மாணவர் சேர்க்கை குறைவாக உள்ள காரணத்தினால், தருமபுரி மாவட்டத்தில் உள்ள பெண்ணாகரம் தொகுதியில் புதியதாக ஆசிரியர் பயிற்சி நிறுவனம் துவங்க வேண்டிய நிலை எழவில்லை.

78—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 38295—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாதவரம் தொகுதி, சென்னை மாநகராட்சி மண்டலம்-3, வார்டு எண் 27, பால்பண்ணை அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

மாநகராட்சி/நகராட்சி/ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை மாதவரம் தொகுதி, சென்னை மாநகராட்சி மண்டலம்-3, வார்டு எண் 27,

2022 அக்டோபர் 18]

பால்பண்ணை அரசு நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

79—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 38296—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாதவரம் தொகுதி, சென்னை மாநகராட்சி மண்டலம்-2, வார்டு எண் 17, கொசப்பூர் அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

மாநகராட்சி/நகராட்சி/ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை மாதவரம் தொகுதி, சென்னை மாநகராட்சி மண்டலம்-2, வார்டு எண் 17, கொசப்பூர் அரசு நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

80—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 38759—திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், கம்மம்பள்ளி ஊராட்சி, கொல்லப்பட்டி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், கம்மம்பள்ளி ஊராட்சியில் கொல்லப்பட்டி எனும் பெயரில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி ஏதும் செயல்படவில்லை. கொல்லஹள்ளி எனும் பெயரில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியானது அரசு நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வாய்ப்பு எழவில்லை.

81—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 38882—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, மயிலம் ஒன்றியம், சித்தனி கிராமத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை மயிலம் தொகுதி, மயிலம் ஒன்றியம், சித்தனி கிராமத்தில் உள்ள நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

2022 அக்டோபர் 18]

82—

தொடக்கப் பள்ளி துவக்குதல்

வினா எண் 49765—திரு. ஒய். பிரகாஷ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒசூர் தொகுதி, ஒசூர் ஊராட்சி ஒன்றியம், நல்லூர் ஊராட்சி, பெரிய எலசகிரி கிராமத்தில் தொடக்கப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒசூர் தொகுதி, ஒசூர் ஊராட்சி ஒன்றியம், நல்லூர் ஊராட்சி, பெரிய எலசகிரி கிராமத்தில் ஏற்கெனவே ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி செயல்படுவதால், புதிய தொடக்கப் பள்ளி துவங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

83—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 49952—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை தொகுதி, வளவம்பட்டி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை தொகுதி, வளவம்பட்டி நடுநிலைப்பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

84—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 51629—திரு. வி.ஜி. இராஜேந்திரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியம், அரிச்சந்திராபுரம் ஊராட்சியில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியம், அரிச்சந்திராபுரம் நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

85—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 52497—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2022 அக்டோபர் 18]

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், பாகலஅள்ளி ஊராட்சி, பாகலஅள்ளி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், பாகலஅள்ளி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

86—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 53000—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பழனி தொகுதி, கொடைக்கானல், வடகவுஞ்சி கிராமத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பழனி தொகுதி, கொடைக்கானல், வடகவுஞ்சி கிராமத்தில் உள்ள நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

[2022 அக்டோபர் 18

87—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 53001—திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி தொகுதி, பழனி வட்டம், ஆயக்குடி பேரூராட்சியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை, பழனி தொகுதி, பழனி வட்டம், ஆயக்குடி பேரூராட்சியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாத நிலை உள்ளது.

88—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 53057—திரு. S. சந்திரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, இரா.கி.பேட்டை வட்டம், இராகவநாயுடுகுப்பம் அரசு நடுநிலைப் பள்ளியை அரசு உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை திருத்தணி தொகுதி, இரா.கி.பேட்டை வட்டம், இராகவநாயுடுகுப்பம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

89—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 53058—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணி தொகுதி, இரா.கி.பேட்டை வட்டம், நீலோத்பாலாபுரத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை திருத்தணி தொகுதி, இரா.கி.பேட்டை வட்டம், நீலோத்பாலாபுரத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

[2022 அக்டோபர் 18

90—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 53059—திரு. S. சந்திரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, திருத்தணி வட்டம், கிருஷ்ணசமுத்திரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை திருத்தணி தொகுதி, திருத்தணி வட்டம், கிருஷ்ணசமுத்திரத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

91—

தனித்தனி பள்ளிகளாக மாற்றியமைத்தல்

வினா எண் 53150—திரு. ச. அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியம், மேடவாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியை ஆண்கள் மற்றும் பெண்கள் என தனித்தனி பள்ளிகளாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

2022 அக்டோபர் 18]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

தற்போது உள்ள நெறிமுறைகளின்படி, இருபாலர் மேல்நிலைப் பள்ளியிலிருந்து முதலில் மகளிர் உயர்நிலைப் பள்ளியாக மட்டுமே பிரிப்பதற்கு வழிவகை உள்ளது. அரசினர் இருபாலர் மேல்நிலைப் பள்ளியைப் பிரித்து நேரடியாக தனியாக பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி என அமைக்க வழிவகை இல்லை. எனவே, சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியம், மேடவாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியை ஆண்கள் மற்றும் பெண்கள் என தனித்தனி பள்ளிகளாக மாற்றியமைக்க இயலாத நிலை உள்ளது,

92—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 53168—திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவொற்றியூர் தொகுதி, 10-வது வார்டில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை திருவொற்றியூர் தொகுதி, 10-வது வார்டில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

93—

புதிய தொடக்கப் பள்ளி தொடங்குதல்

வினா எண் 54994—திரு. கோ. செந்தில்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வாணியம்பாடி தொகுதி, நாட்றம்பள்ளி ஒன்றியம், ஆவாரங்குப்பம் பகுதியில் புதியதாக தொடக்கப் பள்ளி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வாணியம்பாடி தொகுதி, நாட்றம்பள்ளி ஒன்றியம், ஆவாரங்குப்பம் பகுதியில் ஏற்கெனவே ஆவாரங்குப்பம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி செயல்பட்டு வருவதால், புதிய தொடக்கப் பள்ளி துவங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

94—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 57860—திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதி, பழையாறு மீனவர் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை

2022 அக்டோபர் 18]

சீர்காழி தொகுதி, பழையாறு மீனவர் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால், இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

95—

விளையாட்டு மைதானம் அமைத்தல்

வினா எண் 11953—திரு. கே. பொன்னுசாமி: *மாண்புமிகு சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 14 கிராம ஊராட்சிகளில் கபாடி, வாலிபால், பூப்பந்து அல்லது கிரிக்கெட் மற்றும் திறந்தவெளி உடற்பயிற்சி மையம் ஆகிய விளையாட்டு வசதிகள் அமைக்கப்பட்டு அதற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டில் உள்ளன.

96—

விளையாட்டு மைதானம் அமைத்தல்

வினா எண் 12167—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், சித்தப்பட்டினம் ஊராட்சி, ஆதி திராவிடர் பகுதியில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

[*2022 அக்டோபர் 18*

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், சித்தப்பட்டினம் ஊராட்சி, ஆதி திராவிடர் பகுதியில் விளையாட்டு மைதானம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், ஆதி திராவிடர் பகுதிக்கு அருகிலுள்ள சித்தப்பட்டினம் ஊராட்சியில் வாலிபால், கபாடி, பூப்பந்து ஆகிய விளையாட்டுகளுக்கான மைதானங்கள் மற்றும் திறந்தவெளி உடற்பயிற்சி மையம் தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டு, அதற்கான விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டில் உள்ளன.

97—

விளையாட்டு மைதானம் அமைத்தல்

வினா எண் 12169—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், பொற்பாலம்பட்டு ஊராட்சியில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

ரிஷிவந்தியம் தொகுதி, பொற்பாலம்பட்டு ஊராட்சியில் வாலிபால், கபாடி, பூப்பந்து ஆகிய விளையாட்டுகளுக்கான மைதானங்கள் மற்றும் திறந்தவெளி உடற்பயிற்சி மையம் தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டு, அதற்கான விளையாட்டு, உபகரணங்களும் வழங்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளன.

2022 அக்டோபர் 18]

98—

விளையாட்டு மைதானம் அமைத்தல்

வினா எண் 12170—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியம், வடகீரனூர் ஊராட்சியில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியம், வடகீரனூர் ஊராட்சியில் வாலிபால், கபாடி, பூப்பந்து மற்றும் திறந்தவெளி உடற்பயிற்சி மையம் ஆகிய விளையாட்டு வசதிகள் தமிழக அரசால் எற்படுத்தப்பட்டு, அதற்கான விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டில் உள்ளன.

99—

விளையாட்டு மைதானம் அமைத்தல்

வினா எண் 14231—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், தளவாய்அள்ளி ஊராட்சி, பள்ளப்பட்டி கிராமத்திற்கு விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பள்ளப்பட்டி கிராமத்தில் விளையாட்டு மைதானம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், பள்ளப்பட்டி கிராமத்திற்கு அருகிலுள்ள தளவாய்அள்ளி கிராம ஊராட்சியில் உள்ள கபாடி, வாலிபால் மற்றும் கிரிக்கெட் விளையாட்டுகளுக்கான மைதானம் மற்றும் திறந்தவெளி உடற்பயிற்சி மையம் ஆகிய விளையாட்டு வசதிகளை பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

100—

விளையாட்டு மைதானம் அமைத்தல்

வினா எண் 21588—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கப்பை கிராமத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கப்பை கிராமத்தில் கபாடி, வாலிபால், பூப்பந்து ஆகிய விளையாட்டுகளுக்கான விளையாட்டு மைதானம் மற்றும் திறந்தவெளி உடற்பயிற்சி மையம் அமைக்கப்பட்டு அதற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டில் உள்ளன.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.